19

# இதழியல் கலை

அன்றும் இன்றும்

JOURNALIST GUIDE



புலவர். என். வி. கலைமணி. எம். ஏ.,

# இதழியல் கலை
# அன்றும் - இன்றும்

## [JOURNALIST GUIDE]

[இதழியல் துறைப்
பயிற்சி பெறுவோர்க்கு வழிகாட்டி நூல்]

**புலவர். என்.வி. கலைமணி**, எம்.ஏ.,
(55, ஆண்டு காலம் அனுபவமுடைய பத்திரிக்கையாளர்)



**வள்ளலார் நூலகம்**
34, பார்த்தசாரதி நகர், 2-வது தெரு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | 'இதழியல் கலை அன்றும் - இன்றும்' |
| ஆசிரியர் | : | புலவர் என்.வி. கலைமணி, எம்.ஏ., |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாளர் | : | புலவர் என்.வி. கலைமணி |
| பொருள் | : | 'இதழியல் - கலை' |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2004 |
| நூலின் அளவு | : | 1/8 கிரவுன் |
| நூல் வெளியீடு | : | வள்ளலார் நூலகம்,<br>34, பார்த்தசாரதி நகர்,<br>2-வது தெரு, சென்னை - 88.<br>செல் : 9841171459 |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கங்கள் | : | 408 |
| பைண்டிங் | : | கார்டு போர்டு |
| விலை | : | ரூ.150.00 |
| ஒளி அச்சு | : | லேசர் இம்ப்ரெஷன்<br>செனாய் நகர், சென்னை - 30. |
| அச்சிட்டோர் | : | மல்டிமீடியா கிராஃபிக்ஸ்<br>சென்னை - 24. |

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| | நூல்முகம் | 6 |
| 1. | பத்திரிகை ஓர் அறிமுகம் | 9 |
| 2. | பத்திரிகைகள் தோன்றும் முன்பு செய்திகள் எப்படிப் பரவின! | 21 |
| 3. | உலக நாடுகளில் உருவான பத்திரிகை வளர்ச்சிகள் | 45 |
| 4. | இந்தியாவில் - இதழியல் கலை! தோற்றம்! வளர்ச்சி! தொண்டு! | 79 |
| 5. | விடுதலைப் போரில் தமிழ்ப் பத்திரிகைகள் | 103 |
| 6. | சுதந்திர இயக்கத்தில் இருபதாம் நூற்றாண்டு இதழ்கள் | 127 |
| 7. | சமுதாய விடுதலைப் போரில் திராவிடர் இயக்க இதழ்கள் | 133 |
| 8. | தற்கால - கட்சி சார்பற்ற தமிழ்ப் பத்திரிகைகள் | 191 |
| 9. | ஆறு நாடுகளின் உருவாக்கமே நமது குடியரசு சட்ட அமைப்பு | 209 |
| 10. | பத்திரிகை வளர்ச்சிகளை அழிக்கும் அடக்குமுறைச் சட்டங்கள் | 229 |
| 11. | பத்திரிகை நடத்துவோர்க்குரிய பொதுவான அடிப்படைச் சட்டங்கள் | 233 |
| 12. | நாடாளுமன்ற நடவடிக்கைகளில் : பத்திரிகைகளைப் பாதுகாக்கும் ஃபெரோஸ் காந்தி சட்டம்! | 237 |
| 13. | பத்திரிகை மன்றம் ஏன்? எதற்காக? எப்படி? | 255 |
| 14. | பத்திரிகை நடத்துவது எப்படி? | 261 |

| | | |
|---|---|---|
| 15. | அரசு ஒதுக்கும் செய்தி அச்சுத்தாள் பெறும் திட்டம் | 271 |
| 16. | ஒவ்வொரு பத்திரிகையும் - அரசுக்கு ஆண்டறிக்கை அனுப்ப வேண்டும் | 275 |
| 17. | செய்தியாளரும் ஒரு - தசாவதானக் கலைஞரே! | 279 |
| 18. | செய்தி என்றால் என்ன? தேர்வு செய்வது எப்படி? | 287 |
| 19. | பத்திரிகைச் செய்திகளை வழங்கும் உலக, இந்திய அமைப்புகள் | 292 |
| 20. | கிரைம் செய்திகள் எவையெவை? அவை அறமா? சேவையா? ஆபத்தா? | 299 |
| 21. | மத்திய - மாநில அரசுகளிடம் எவ்வாறு செய்திகளைத் திரட்டலாம்? | 303 |
| 22. | நீதிமன்றச் செய்தியாளர்கள் கவனிக்க வேண்டியவை! | 307 |
| 23. | செய்தியாளர் தவறு செய்தால் சட்டமன்றமே - நீதிமன்றமாகும்! | 309 |
| 24. | பொதுக்கூட்டச் செய்தியாளர்; உரை சுவையில் மயங்கிவிடக் கூடாது | 315 |
| 25. | பதினாறு தகுதிகள் உள்ளவரே; விளையாட்டுப் போட்டிச் செய்தியாளர் | 323 |
| 26. | பத்திரிகை ஆசிரியராகத் தகுதிகள்; திறமைகள்! | 329 |
| 27. | எழுத்துரிமை, பேச்சுரிமைகளைக் காக்க கட்சிப் பத்திரிகைகள் நடத்துவது எப்படி? | 337 |
| 28. | நேருக்கு நேர் சந்திக்கும் கலை! | 349 |
| 29. | சொற்பொருள் உச்சரிப்பைத் தவறின்றி எழுதலாமே? | 357 |
| 30. | அச்சுப்படி திருத்துதலும் - அவற்றுக்கான குறியீடுகளும் | 365 |
| 31. | Feature Articles | 371 |

| | | |
|---|---|---|
| 32. | கட்டுரைகள் எழுதும்போது கவனிக்கப்பட வேண்டியவை | 372 |
| 33. | பத்திரிகையாளர்களுக்கு வழிகாட்டி கார்ல் மார்க்ஸ் (அஞ்சா நெஞ்சக் கட்டுரை) | 373 |
| 34. | பாரதியார் தமிழ்ப்பற்று பத்திரிகையாளரிடம் மணக்க வேண்டும் (தமிழ் மொழி பற்றுக் கட்டுரை) | 379 |
| 35. | பத்திரிகையாளர்களுக்கு திரு.வி.க. தமிழ்நடை அனுபவங்கள் | 383 |
| 36. | இராஜாராம் மோகன்ராய் பத்திரிகைச் சுதந்தரப் போராட்டம் (கொள்கைப் போராட்டக் கட்டுரை) | 389 |
| 37. | வடசொல் நீக்கி, தனித் தமிழ் எழுதிட : மறைமலையடிகளாரின் மொழி ஆய்வுக் கட்டுரை | 393 |
| 38. | வள்ளலார் இலக்கண நுட்பம் ஆசிரியர் குழுவுக்கும் தேவை! (தமிழ் எண் இலக்கணப் பயிற்சிக் கட்டுரை) | 399 |

# நூல் முகம்

நிமிடத் துளிகள் தோறும் உலகில் எண்ணற்ற நிகழ்வுகள் நிகழ்கின்றன. இவற்றில் சிக்கிய மனிதர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு, இவை நல்லன, தீயன என்று குறிப்பிடப் பெறுகின்றன.

சிலர் இவற்றைக் 'காலத்தின் கோலம்' என்ற திறனாய்வுப் பெயரைச் சூட்டுகிறார்கள்.

சிந்தனையாளர்கள், கவிஞர்கள் - இதனைக் 'காலச் சக்கரம்' என்பர்! இந்தக் கால வெள்ளத்தில் நான் தோன்றிய பத்திரிகைத் துறையில் ஏறக்குறைய 55 ஆண்டு காலமாகச் சுழன்று வருகின்றேன். அந்தச் சுழற்சியில் ஒரு சுற்றுதான் "இதழியல் கலை, அன்றும் - இன்றும்" என்ற இந்த நூல்.

இந்த நூலில் எனது முழு அனுபவங்களையும் எழுதவில்லை. எழுதினால் அது வாழ்க்கை வரலாறு என்ற பெயரைப் பெற்றுவிடும்.

ஆங்காங்கே வருகின்ற சம்பவங்களுக்கேற்ப சில குறிப்புக்களை மட்டுமே வழங்கியுள்ளேன். அனுபவம் தேவை என்போர் பயன்படுத்திக் கொள்ளலாம் - இல்லையா?

இளம் தலைமுறைப் பத்திரிகையாளர்களுக்கு வழிகாட்டி நூலாக - இந்த நூல் பயன்பட வேண்டும் என்பது எனது ஆசை!

ஒரு பத்திரிகையாளருக்கு என்னென்ன அநுபவங்கள் தேவையோ, அவற்றை ஓரளவுக்கு நான் வழங்கியுள்ளேன். பக்கங்களைப் புரட்டி, தலைப்புகளை மட்டுமே மேலோட்டமாகப் பார்ப்போருக்கு நான் கூறுவதன் உண்மை புரியும்.

என்னதான் எழுதினாலும், உண்மையை ஒப்பிப் பாராட்டுவோர் அத்திப் பூ போன்றவர்களே! இல்லையானால், ''ஆனந்த விகடன்'' பத்திரிகையில் ''பாரதி உலகக் கவியல்ல; அவர் பாடலில் வெறுக்கத் தக்கவை உள்ளன'' என்று ''கல்கி'' எழுதுவாரா?

இவ்வாறு எழுதிய அந்த நேரத்து மூத்தப் பத்திரிகையாளரான கல்கிதான், எட்டயபுரம் பாரதி மண்டபத்தை எழுப்பி விழா எடுத்திடக் காரணராகவும் இருந்தார். காலச் சக்கரம் எப்படி மாறி மாறிச் சுழல்கிறது பார்த்தீர்களா?

'கல்கி' எழுதியதைக் கண்ட பாரதிக்குத் தாசன் சும்மா இருப்பாரா? ஏந்தினார் எழுது கோலை! பாரதியைத் தாழ்வாக மதித்தவரைப் பார்த்து, ''பாரதி உலக கவி, அவர் ஒட்டைச் சாண் நினைப்புடையாரல்லர், ஐயர் கவிதைக்கு இழுக்கும் கற்பிக்கின்றார். அழகாக முடிச்சவிழ்த்தால் விடுவார் உண்டா? பாரதி சிந்துக்குத் தந்தை; குவிக்கும் கவிதைக் குயில்; செந்தமிழ்த் தேனீ; இந்நாட்டினைக் கவிக்கும் பகையைக் கவிழ்க்கும் முரசு; நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா; காடு கமழும் கற்பூரச் சொற்கோ; திறம்பாட வந்த மறவன்; புதிய அறம்பாட வந்த அறிஞன்; தமிழால் பாரதி தகுதி பெற்றார்; தமிழ், பாரதியால் தகுதிபெற்றது'' என்றார்!

ஒருவன் எழுத்தைப் பாராட்டவும் ''வல்வில் ஓரி அறிவு வேண்டும்''. கவிஞன் இனம் தானே கவிஞன் அருமையைப் பெருமையாகப் பேச முடியும்? இல்லையா?

அதனைப் போல, இந்த நூலையும் நாளை ஒருவர் குறை கூற முன்வரலாம். அவர் யார் தெரியுமா? 'இதழியல் கலையை அன்றும் - இன்றும் முழுமையாக அறிய முயற்சி செய்யாதவரே!

எந்தத் துறையில் ஒரு பத்திரிகையாளன் திறமை பெற்று சகலகலா வல்லவனாக வேண்டுமோ, அந்தத் துறைக்கான

கட்டுரைகளைத் தேடிக் கொடுத்துள்ளேன். ஆழ்ந்துப் படித்தால் ஓரளவாவது பயன் கிடைக்கும்.

பத்திரிகை நடத்துவது எப்படி? என்பதற்கான வரலாற்றையும் வழிகாட்டியாக வழங்கி இருக்கிறேன். அதற்கேற்ப அனுபவம், பெற்றால், நிச்சயமாக ஒவ்வொரு தமிழன்பரும் பத்திரிகை ஆசிரியராகலாம்; புகழ் பெறலாம்; ஏன் நாளை இந்த நாட்டைக் கூட ஆட்சி செய்யலாம் அல்லவா? அதற்கு சான்றுகளா இல்லை? நூலைப் படியுங்கள் பலர் இருப்பார்கள்!

இவ்வளவு ஏன்? தமிழ்நாட்டு வரலாற்றில் அறிஞர் அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும் பத்திரிகை ஆசிரியர்கள் தானே!

நாட்டை ஆளாவிட்டாலும் பரவாயில்லை; உலக அறிஞர்கள் ஒவ்வொருவரும் பத்திரிகை வரலாற்றில் எவ்வாறு புகழ்பெற்றச் சாதனையாளர்களாக இன்றும் வரலாற்றில் காட்சி தருகின்றார்கள் என்பதற்காகவாவது, 'இதழியல் கலை, அன்றும் - இன்றும்'' என்ற இந்த நூலைப் படித்துப் பாருங்கள்!

வாசகர் பெருமக்கள் தங்களது நிறைவுக் கருத்துக்களை எனக்கு எழுதியனுப்பினால், நான் எனது குறைவை நீக்கி, அடுத்த பதிப்பில் திருத்தி, சேர்த்துக் கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

அன்பன்

**என்.வி. கலைமணி**

# 1

# பத்திரிகை ஓர் அறிமுகம்

மன்னன் கோல் எடுத்தால் - அது செங்கோல்!

கன்னன் கோல் எடுத்தால் - அது கொடைக்கோல்! கொடை மடம்கோல்; அறக்கோல்!

சிற்பி உளி ஏந்தினால் - அது - சிற்பக்கோல்! கல்லோவியக் கலைக்கோல்!

இடையர் கோல் எடுத்தால் - அது, குத்துக்கோல்! மேய்ப்பர் கோல்!

சித்திர வித்தகன் கோல் எடுத்தால் - அது, தூரிகைக் கோல்! ஓவியக் கோல்!

குருடன் கோல் எடுத்தால் - அது விழிக்கோல் - வழிக்கோல்!

கதவைத் தாழிட இல்லாள் கோல் எடுத்தால் - அது பூட்டுக்கோல்! திறவுக் கோல்!

காவி உடைக்காகத் தீட்சைப் பெற்றவன் கோல் எடுத்தால் - அது துறவுக்கோல்! சந்நியாசக் கோல்!

அறிதோறும் அறியாமை கண்டுண்ர அறிஞர்கள் கோல் எடுத்தால் - அது அறிவுக்கோல்! ஞானக்கோல்!

மனக்கோலை மங்கையர் அகமும் - புறமும் வளைத்து - நெளித்து, நெருஞ்சி முள் ஆசையால் குத்தினால் - அது, நாணக்கோல்!

நீதியின் முன் எல்லாரும் சமம் என்றிட; நீதிதேவன் கோல் எடுத்தால் - அது, நியாயக்கோல் - துலாக்கோல்!

எண்ணங்களை ஆட்சி செய்திட எழுத்தாளர்கள் கோல் எடுத்தால் - அது, எழுதுகோல்!

இவ்வாறு எண்ணற்றக் கோல்கள் - சிந்தனைக் கோல்களாய் கணிதக் கோல்களாய் இந்த வியனுலகில் தோன்றினாலும், அவற்றை விளக்கி வியந்திட இந்த நூல் இடம் தராது என்பதால் அவற்றை இங்கே சுட்டிக் காட்டிட முடியவில்லை - நூல் விரியும் என்பதால்!

அரசு அலுவலகங்களில் அல்லது தனியார் நிறுவனங் களில் எழுத்துத் துறையிலே பணியாற்றுபவரை நாம் எழுத்தர் அல்லது எழுத்தாயர் (Clerk) என்று கூறுகின்றோம். அலுவலகக் கடிதப் போக்குவரவு வரையாளர் அவ்வாறு பணிபுரிவதால்; அவரை எழுத்தாளரென அழைக்கின்றோம்.

ஆணாக அவர் இருந்தால் அந்தப் பதிவக அலுவலரை கிளர்க் என்கிறோம். அதே பணிகளைச் செய்பவர் ஒரு பெண்ணாக இருந்தால், அவரை Clerkess என்று ஆங்கிலத்திலும், தமிழில் எழுத்தி என்றும் குறிப்பிடலாம்.

எழுத்தரின் இயல்புக்குரிய போதிய கல்வி அறிவற்ற வராக ஓர் எழுத்தர் பணிபுரிவாரானால், அவரை "Clerk' Less என்றும், அதே எழுத்தர் பணியில் ஒருவர் புலமை சான்றவராகப் பணிபுரிந்தால் அவரை Clerk - Like புலமை எழுத்தர் என்றும் இங்லீஷ் மொழியில் சுட்டுகின்றோம்.

எது எவ்வாறு இருந்தாலும் - எழுத்துக்களை பதிவக அலுவலகத்தில் பதிவு செய்பவரை 'எழுத்தர்' என்றுதான் பொதுவாகக் குறிப்பிடுகின்றோமே ஒழிய, அவரை எழுத்தை ஆட்சி செய்யும் ஓர் எழுத்தாளர் என்று எவரும் அழைப்ப தில்லை. என்ன காரணம் இதற்கு?

ஆங்கிலத்தில் writer என்ற ஒரு சொல் உண்டு. ஏறக்குறைய அது எழுத்தர் என்ற சொற்பொருளையே உணர்த்துவதாக இருந்தாலும், எழுத்தை உருவாக்கி, இலக்கியம் வடிவங் கொடுத்து; எழுத்துக்கள் மூலமாக ஒரு செய்தியை

விளக்கி விரித்துரைக்கும் தகுதிகளோடு - அந்த எழுத்துக்கள் எழுதுபவரால் ஆளப்படுவதால், எழுத்துக்கள் ஒரு கருத்து வடிவமாக ஆட்சி செய்யப்படுவதால்; அந்த 'ரைட்டர்' (writer) என்ற பெயர்ச் சொல்; எழுத்தாளர் - நூலாசிரியர் - எழுத்து முறைகளைக் கற்பிக்கும் கையேட்டாளர் என்ற தகுதிகளைப் பெற்றதால் - அந்தச் சொல்; எழுத்துக்களை ஆட்சி செய்கின்ற எழுத்தாளர் என்ற பெருமையோடும் புகழோடும் அறிவு உலகத்திலே வலம் வருகிறது.

அந்த எழுத்துகள்; எழுத்தாளர் என்ற தொழிலில் வளத்தோடும், நலத்தோடும், பலத்தோடும் அறிவாட்சி செய்வதால், அவை 'ரைட்டர்ஷிப்' (writership) என்ற எழுத்தாண்மைப் பெருமையைப் பெற்று, உலகத்தை உலுக்கி, உற்சாகப்படுத்தி, புரட்சியை உருவாக்கி, இறுதியில் அறிவு மணம் கமழும் தென்றலாகவும் வீசுகின்றன.

இத்தகைய எழுத்தாளர்கள் செயல், எழுத்துத் திறன், எழுத்துக் கலை, இலக்கியப் படைப்பு, ஏடாக்கம், இலக்கியப் பத்திரிகை, இலக்கிய, பொருளாதார, அரசியல், அறிவியல் சார்ந்த நூற்கள், கட்டுரைகள், கவிதைகள், எழுதப்பட்ட வரலாறுகள், ஆவணங்கள், ஓர் இனத்தின், சாம்ராச்சியத்தின், பண்பாடு, நாகரிகங்களின் வீழ்ச்சிகளையும், எழுச்சிகளையும், உணர்ச்சிகளையும், புரட்சிகளையும், முன் கூட்டியே அறிவிக்கும் நிகழ்ச்சிகளாக உலகத்தில் இன்றும் நடமாடி வருகின்றன.

இதைத்தான் கி.பி. 1694 முதல் 1778 வரை வாழ்ந்த பிரெஞ்சு நாட்டுப் பேனா முனை புரட்சிவாதியான வால்டேர் (Voltaire), "வாளின் வலிமையை விட எனது பேனா முனை கூர்மையான பலம் வாய்ந்தது. எனது எழுதுகோல் ஒரு கொடுங்கோல சாம்ராச்சியத்தையும் அழிக்கும். ஒரு செங்கோல் ஆட்சியையும் உருவாக்கும்" என்றான்.

அவனது பேனா முனை தான்; உலகிலே சமையப் பற்றின்மை, சமைய நிலை, ஐயப்பாட்டு வாதக் கோட்பாட்டை உருவாக்கி; பிரெஞ்சு நாட்டின் புரட்சிக்கு விதை போன்று விளங்கியது.

வால்டேர், ரூசோ, மான்டெஸ்கியூ போன்ற எழுத்துலக அரிமாக்கள் ஏந்திய எழுதுகோல்களின் அற்புதங்கள், அந்தந்த

நேரங்களில் உலகையே உலுக்கின என்றால், அவை வரலாறு படித்தோருக்கு நன்கு புரியும்.

வியக்கத்தக்க வகையில் இன்று பத்திரிகை எழுத்துக்கள் உலகில் பரபரப்பூட்டி வருவதற்கு; அவர்களைப் போன்ற பலர் காரண கர்த்தாக்களாக விளங்கி வருகிறார்கள்.

## பத்திரிகை என்று பெயர் வந்ததது ஏன்?

'பாஸ்வெல்' என்ற இங்கிலாந்து எழுத்தாளர், 1785-ஆம் ஆண்டில், "The Journal of a Tour to the Hebrides" என்ற நூலை எழுதினார். பாஸ்வெலும், டாக்டர் ஜான்சன் என்ற இருவரும் ஸ்காட்லாந்து நாட்டைச் சுற்றிப் பார்த்திட கி.பி. 1773-ஆம் ஆண்டில் பயணம் செய்தபோது எழுதப்பட்ட நூல் அது.

பாஸ்வெல் எழுதிய அந்தப் பயணக் கையேட்டுக் குறிப்பை; டாக்டர் ஜான்சனும் மற்றவர்களும், படித்து முடித்திட காலதாமதமானது என்பதால், அந்தப் பயணக் குறிப்புக்களைச் 'சுற்றுப்பயணம்' (Tour) என்ற பெயரில் அவர்கள் அதைப் புத்தகமாக வெளியிட்டார்கள். அந்த நூலைத்தான் இங்கிலாந்து நாடு முதன் முதலாக "Journal" என்று குறிப்பிட்டது.

இங்கிலாந்து நாட்டில் அடிக்கடிக் கொள்ளை என்ற நோய் உண்டாகி; மக்கள் ஒழுக்க முறை அழிவுக்கேடுகளுக்கு மூலகாரணமாகப் பல செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. அவற்றைப் பெரிய அளவில் தொகுக்கப்பட்ட சம்பவங்களடங்கிய தொகுதிக்கு "Journal of the Plague Year" ''கொள்ளை நோய் ஆண்டின் நாட்குறிப்புச் சுவடி'' என்று பெயரிடப்பட்டது. இந்த நூல் பெயரும் ஜெர்னல் என்ற வகையில் சேர்க்கப்பட்டது.

பொதுவாகவே, ஜெர்னலிசம் Journalism என்ற இங்லீஷ் மொழிச் சொல்; டயர்னல் Diurnal என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது என்று மொழியியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்த இங்லீஷ் வார்த்தையை நம்மவர் இதழியல் என்று மொழி பெயர்த்துள்ளார்கள்.

"Brewer's Dictionary, Phrase Fabule" என்று இலண்டனில் வெளியிட்டுள்ள அகராதியில் "Journal Applied to News Papers,

the word strictly means a daily paper. But, the extension of the term to weekly and other periodicals is sanctioned by custom."

'டையர்னல்' என்ற பண்டைய இலத்தீன் மொழிச் சொல், "செய்தித்தாள் என்ற பெயரின் செயல்முறைச் சார்பு கட்டும், ஜர்னல் என்ற அந்தச் சொல், நாளேடுகளைக் குறிக்கும் சொல் என்றும், ஆனால்; தன் பருவப்பொழுதைச் சற்று விரிவுப்படுத்தும்போது வாரப் பத்திரிகைகளுக்கும் மற்றும் பருவ வகை பத்திரிக்கைளுக்குமுரிய மரபு ஆகவும் அனுமதிக்கப் பட்டிருக்கிறது" என்பதைப் ப்ரெவர்ஸ் என்ற ஆங்கில அகராதி; ஜெர்னல் என்றால் பத்திரிகை வகை மரபுக்குரிய ஒரு பெயர் என்பதைத் திட்டவட்டமாக விளக்கிக் கூறியுள்ளது.

"Journal a daily record, as of occurences, experiences, or observations.

A Register of the daily transactions or observations or a public; or legislative body".

"The serials devoted to learned socialies and professions, A News paper, Magazine, or the like, Book keeping, a day book in double entry journalism. One engaged in Journalism, used more widdly in England, than united states.

- [The Modern Library Dictionary of English Language.]

ஒரு Journal, அதாவது ஒரு பத்திரிகையின் இலக்கணத்தை, அதன் கடமையைக் கூற வந்த இங்கிலாந்து நாட்டுப் பல்கலைக் கழகத்தின் "மார்டன் டிக்ஷனரி":

"ஜர்னல்" என்றால் ஒரு நாட்குறிப்பு, ஆவணம், தினந் தோறும் உலகில் நடைபெறும் சம்பவங்களின் குறிப்பு, தொழில் கணக்கு முறையில் நடைபெறும் அன்றாட அனுபவங் கள், அந்தந்த நிகழ்ச்சிகளின் அல்லது சம்பவக் காட்சிகளின் கூர்நோக்கு அறிவு, தினசரி தொழில் நடைமுறைகள், உலக நாடுகளில் நடைபெறும் வணிக நடவடிக்கைகள், சமுதாயத்தில் பாதிக்கப்படும் சட்ட உரிமை பாதிப்புகள், பொது மக்களிடம் நாள்தோறும் நடைபெறும் காட்சிகளின் நுட்பங்களை உற்று நோக்கும் அறிவுத் திறன் அல்லது சட்டமன்றச் சம்பவங்களின்

நிகழ்ச்சிகள், நாடாளுமன்றம் - நீதிமன்றம், மருத்துவமனைச் சம்பவங்கள், ஊராட்சி, பேரூராட்சி, மாநகராட்சிகளில் நடைபெறும் அன்றாட மக்கள் நலன் பணிகளின் நிறை-குறைகள் போன்றவற்றை வெளியிடும் ஒரு குறிப்பேட்டின் தொகுப்புக்கு ஜெர்னல் என்ற பெயர் என்று கூறுகின்றது அந்த டிக்ஷனரி.

"கற்றறிந்த, அறிவு வளம் நிரம்பிய, சமுதாயத்தில் ஒன்றிணைந்து கூடி வாழ்கின்ற மக்களது அன்றாட வளர்ச்சிக்காக; வாழ்க்கையையே தொழிலாகக் கொண்டவர்களுக்குரிய செய்தித் தாளாக, போர்க் காலத்தில் செருமுனைக்குரிய ஆயத்த ஆயுதங்களைச் சேர்த்து வைக்கும் பாசறைகள் போல, பல எழுத்தாளர்களின் கட்டுரைகள் அடங்கிய ஒரு பருவ இதழ்ச் சுவடியாக அல்லது தினப் பத்திரிகை போன்ற, ஒரு நாட்குறிப்பு ஏடாக, இரட்டை எண்ணிக்கை முறையில் வெளி வருவதுதான் ஜர்னல் என்பதின் இலக்கணம்.

அந்தப் பத்திரிகையில் அன்றாடம் வெளிவரும் ஒவ்வொரு கணக்கும், படிப்பவர் நெஞ்சில் இருமடியாகப் பதிய வைக்கும் கணக்காண்மை முறையில் அமைந்திருக்குமாம் 'ஜர்னல்!'.

அந்த இருமுறை - அதாவது Double Entry முறை என்பவை - என்னென்ன தெரியுமா?

அவற்றுள்ள ஒன்று ஜெர்னலிசம் என்ற பத்திரிகை அமைப்புக் கொள்கையோடு கிரேட் பிரிட்டன் நாட்டை வலம் வரும் ஏடாம். மற்றொன்று அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பரவி வளர்ந்த கணக்காண்மை முறை இதழாம்.

எனவே, டையர்னல் என்ற இலத்தீன் மொழிச் சொல்லுக்கு "அன்றன்று" என்று பொருள். அதனால் ஜர்னல் என்பதற்குச் சரியான உட்பொருள் - தினந்தோறும் நாட்டில் நடப்பதை எழுதி வைக்கும் பத்திரிகை, ஓர் ஆவணம் என்றே ஆங்கில அகராதிகள் நமக்கு அறிவிக்கின்றன.

ஆனால், "தமிழ் இதழ்கள் தோற்றம், வளர்ச்சி" என்ற நூலில், அ.மா. சாமி எனும் பத்திரிகையாளர், ஜர்னல் என்றால் 'இதழ்' என்று கூறுகின்றார். தமிழ் அறிஞர்கள் அந்தச் சொல்லையே நாளடைவில் 'பத்திரிகை, செய்தித் தாள்'

'தாளிகை' என்று குறிப்பிட்டார்கள். மேற்கண்ட சொற்களில் 'தாளிகை' என்ற சொல்லைவிட 'பத்திரிகை', செய்தித் தாள் என்ற பெயர்களே மக்கள் மன வானில் விண்மீன்களாக ஒளிர்ந்தாடிக் கொண்டிருக்கின்றன.

## "மேகசின்" என்ற பெயர்க் காரணம்

பத்திரிகையை ஜெர்னல் என்றும், ஜெர்னலைப் பத்திரிகை என்றும் அகராதிகள் ஏன் குறிப்பிட்டன என்ற காரணத்தை, விளக்கத்தை இது வரைப் பார்த்தோம்.

அதே பத்திரிக்கைக்கு 'மேகசின்' (Magazine) என்ற பெயர் உருவானது ஏன்? மேகசின் என்ற இங்லீஷ் சொல்லுக்குப் படைக்கலப் பாசறை, போர்க் காலத்தில் படைக்குரிய ஆயுத தளவாடங்களையும், கருவிகளையும் சேர்த்துப் பாதுகாப்பாக வைத்திருக்கும் இடமாகும். துப்பாக்கிகள், அதற்குரிய வெடி மருந்துகளைக் குவித்து வைத்திருக்கும் இடம் என்பவை பொருள்.

அதனைப் போலவே, பத்திரிகை வகைகளில் ஒன்றான, பருவ இதழ்ச் சுவடிகளில் பல அறிஞர்களின், எழுத்தாளர்களின் அரிய பல கட்டுரைகள், அடங்கி - அடக்கி அல்லது குவிக்கப் பட்டிருக்கும்.

அத்தகைய எழுத்துப் புதையல்களை, அந்தப் பருவ இதழ்கள் போர்ப் பாசறை ஆயுத தளவாடங்களைப் போல பெற்றிருப்பதால், அந்த வெளியீடுகள் மக்களது அறியாமைப் பகைகளை, விரோதிகளை விரட்டியடிக்கும் பண்பு பெற்ற பத்திரிகைகள் பருவ வெளியீடுகள் என்பதால்; அவற்றை இங்லீஷ் மொழியில் Magazine என்று குறிப்பிட்டார்கள்" என்று தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களுள் ஒன்றான சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள "ஆங்கிலம் - தமிழ் சொற் களஞ்சியம்" கூறுகின்றது.

Magazine என்ற சொல்லுள் உள்ள முதல் நான்கு எழுத்தான Mega 'மெக',என்பதிலே உள்ள Aவுக்குப் பதிலாக E, என்ற எழுத்துச் சேர்வதால்; அதே ஓசையுள்ள Mage என்ற

சொல்லுக்கு அறிஞர்கள், அறிவர்கள், புலவர்கள், மேதைகள், மாயாவிகள் என்ற பல பொருட்கள் உள்ளன.

மேற்கண்ட பொருட்களுக்குரிய மேன்மக்களது அறிவைப் போற்றுவதும், ஏற்பதும், புகழ்வதும், பாராட்டு வதும், மாயாவி போல மக்கள் இடையே காட்சிப் பொருளாய் மாறிமாறி அற்புதங்களை ஆற்றுவதும், பரப்புவதும் போல, மேகசின்கள் ஒவ்வொன்றும் - அதனதன் பருவக் கூறுகளுக்கு ஏற்ப அந்தப் பத்திரிகைகளும் அரும்பாடுபட்டு உழைப்பவை என்பதால் - அவற்றுக்கு 'மேகசின்' என்று மேல் நாட்டார் பெயரிட்டார்கள்.

எப்போதும் வடதிசையினையே காட்டும் மேக்நெட்டிக் காந்த ஊசி முனை போல, மேகசின் என்கின்ற பருவ கால பத்திரிகைகளும், எப்பொழுதும் மக்கள் நலன் மீதும் அவர்களிடம் அறிவொளியை இயக்குவதிலுமே அவை நாட்டமாக நடமாடும் ஏடுகளாகும்.

அந்த ஏடுகள் அவ்வாறு தங்களது பருவ கால எழிலோடு இயங்கும்போதுதான் - அவற்றின் அழகுகள், கவர்ச்சிகள், செய்திகளின் வசிய வித்தைகள், மனித அறிவைப் பற்றும் காந்தக் கல் அற்புதங்களாக இயங்குகின்றன. இன்றும் பல பருவ ஏடுகள் அந்த அழகு மேனிக் கவர்ச்சிக் கலை நயங் களோடு இயங்கிக் கொண்டிருப்பதையும் நாம் பார்க்கின்றோம் - இல்லையா?

எடுத்துக்காட்டாக பொள்ளாச்சித் தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் நிறுவனத்திலிருந்து வெளிவரும் ஓம் சக்தி, கோவை கலைக்கதிர், கலைமகள், அமுத சுரபி, உண்மை, தாமரை, முத்தாரம் போன்ற சில பருவ இதழ்களைக் கூறலாம்.

## பத்திரிகைத் துறை பணிகள்

மனித சமுதாயத்தின் இடைக் காலந்தொட்டு இன்று வரையிலும், மக்களது உணர்ச்சிப் பெருக்காக, கொந்தளித் தோடும் எண்ணப் பிரவாகமே பத்திரிகை!

மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளை, அரசியல் கலையை, பண்பாட்டை, நாகரிகத்தை, கல்வியியலை,

பொருளாதாரப் பெருக்க வழிகளை, காலத்திற்கும், கருத்திற்கும், உணர்ச்சிகளுக்கும், எழுச்சிகளுக்கும், முயற்சிகளுக்கும், புரட்சிகளுக்கும் ஏற்றவாறு இன்பச் சுவைகளையும், துன்பச் சுவைகளையும் ஏற்றி அறிவுறுத்தும் வாழ்க்கைக் கலையே பத்திரிகையின் செயல்முறைகளாகும்.

இலக்கியம் ஒன்றை உணர மக்களது இதய உணர்வுகளான குணங்களை, சுபாவ-பாவங்களைப் படிப்பவன் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அவசியம் போல, பத்திரிகைப் படிப்போருக்கும், அதை நடத்துவோருக்கும் அவற்றுக்குரிய பயிற்சித் தடங்களை, சுவடுகளை அறிந்திருக்க வேண்டிய அவசியமும் தேவை.

இத்தகையப் பத்திரிகைகளைப் படிக்கும் மக்கள், அவரவர் எண்ணங்கள், தேவைகள், விருப்பங்கள், அன்றாட இதழ்களிலே வெளிவந்துள்ளனவா என்று பார்த்து, ஏக்க உணர்வுகளோடு ஊஞ்சலாடிக் கொண்டிருப்பார்கள்.

பத்திரிகைகளிலே வரும் துன்பச் சம்பவங்களைக் கண்டால் துவள்வர்; இன்ப நிகழ்ச்சிகளைப் பார்த்தால் மகிழ்வில் உழல்வர்; வெறுப்பூட்டும் உணர்வுகளை அறிந்தால் வெதும்புவர்; கட்சிக் கருத்துகள் வெளியானால் களிகொள்வர்; இந்தப் பண்புகளைப் பத்திரிகைகள் தினந்தோறும் மக்கள் இடையே உருவாக்கிக் கொண்டிருப்பதை நம்மால் காண முடிகின்றது.

மக்களது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து வரும் காதல், திருமணம், கூத்து, குறை கூறல், நிறை பாராட்டல், போர்த் தொடுத்தல், மக்கள் விப்த்துக்களால் மாளல், சீமான்களது ஆடல் பாடல், பணக்காரர்களது படாடோபப் பகட்டுகள்; விவசாயம் புரிவோர் குறை நிறை சம்பவங்கள், தண்ணீர்க் குடங்களை ஏந்தி அலையும் தளிர்மேனியர், பள்ளி மாணவ மாணவியர்களது பாட்டு, ஆட்டங்கள், கிராம மக்கள் இடையே நடைபெறும் தெம்மாங்கு, பறையறை சம்பவங்கள்; கல்விமான்களது உரையாடல், கவியரங்கம், பட்டிமன்றம்; திருவிழாச் சம்பவங்கள், ஆன்மீக நிகழ்ச்சிகள், வானொலி-தொலைக் காட்சிச் செய்திகள்; வம்படி வழக்குகள், நீதிமன்றம், காவல் துறையினர், ஊராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி கடமைகள், மருத்துவ மனைத் துன்பங்கள், இன்பங்கள்,

முடிதிருத்துவோர், சலவையாளர், கொல்லன், கொத்தன் ஆகியோரின் வருவாய் அவலங்கள் ஆகிய பிற சம்பவங்களை எல்லாம் பத்திரிகைகள் அன்றாடம் சுமந்து வந்து மக்கள் இடையே காட்சிப் பொருள்களாக்குவதே அவற்றின் கடமைகளாக இருக்கின்றன.

எனவே, பத்திரிகைகள், செய்தித் தாள்கள், நாளேடுகள் தினந்தோறும் அவற்றை மக்களிடையே கொண்டு வந்து குவிக்கும் வாழ்க்கைக் கலையின் சுரங்கங்களாகப் பணியாற்று கின்றன எனலாம்.

அதனால், பத்திரிகைகளை வெறும் கற்பனைத் தாள்கள் என்று மட்டும் கூற முடியாது. ஏதோ வாய்மொழிகளாக வந்து குவிந்த ஏடுகளல்ல. பத்திரிகைகள் உண்மைச் செய்திகளை, அந்தந்த ஊர் மக்கள் செயல்களிலே முளைவிட்டு வெளியேறி தலைக்காட்டும் எண்ணங்கள் வழியாகக் கண்ட, கேட்ட உணர்ச்சிகளை, நிகழ்ச்சிகளை மக்கள் அறிய வேண்டும் என்ற ஆர்வப் பெருக்கோடு, ஊரறிய, உலகறிய எடுத்துக் கூறும் ஒரு விஞ்ஞானச் செய்திக் கருவிதான் பத்திரிகை!

மக்கள்கவி பாரதியார் பாடியது போல; 'கலைமகளின் கொள்ளிடம் மட்டுமன்று பத்திரிகை; மக்கள் சக்திதான் அதன் பிறப்பிடமும் என்ற எண்ண வடிவுக்கேற்றவாறு, பத்திரிகை மக்களுக்காக, மக்களைச் சுற்றி வட்டமிடும் கழுகுப் பார்வையோடு பறக்கும் பண்புமுடையதாகும்' என்றார். அந்த கழுகு நோக்கு பத்திரிகைகளுக்கு இன்றும் அமைந்துள்ளது.

பத்திரிகையாளர்களது இந்த நோக்குகள், அறிவியல் தொடர்பானதாகவும், கலையியல் சார்பானதாகவும் அமைந்திருக்க வேண்டும். ஏனென்றால், கண்களால் காண முடியாத காரியங்களை அறிவியல் நம்பாது. காண இயலாதவற்றைப் பற்றிய ஆய்வையும், தேடுதலையும் செய்வதுதான் விஞ்ஞானத்தின் வித்தகம்.

ஒரு துளி இரத்தத்தைச் சோதிக்கின்ற அறிவியல் ஆய்வாளன்; அதிலுள்ள நீர் எவ்வளவு? உப்பு எவ்வளவு? அழுக்கு எவ்வளவு? என்ற கணக்கிலே ஈடுபடுவான்.

அந்த இரத்தம் கெட்டுப் போனது ஏன்? என்ற வினாவை எழுப்பி அதற்கு விடை காண்பான் உடற்கூறு மேதை.

இரத்தம் கெட்டு விட்டது என்றால், அதில் சுத்த இரத்தம் எவ்வளவு? அசுத்த அளவு எவ்வளவு? என்று ஆய்வான் மருத்துவன்.

எப்போது ரத்தம் கெடுகின்றது என்றே சிந்திப்பான் மனோ தத்துவஞானி. ஆனால், தத்துவஞானி என்ன செய்வான் தெரியுமா? அந்த இரத்தம் அசுத்தமானதற்கு என்ன காரணம் என்றே எண்ணுவான், ஆராய்வான்.

எனவே, காரண காரியங்களை ஒன்றுக்கொன்று தொடர்புப்படுத்தி, அவற்றை ஒழுங்குமுறையிலே ஆய்ந்து விஞ்ஞானம் விடை விளக்கம் அளிப்பதைப் போல, பத்திரிகை யாளனும் நாட்டுப் நடப்புகளை, சமுதாய நிறைவு-குறைவுகளைச் சீர்ப்படுத்தும் உண்மைகளைத் திரட்டி மக்கள் முன்பு வைப்பதோடு நில்லாமல், அவற்றை ஆய்ந்து, தொகுத்து, முறைப்படுத்தி, நல்லது-கெட்டதுகளை வகைப்படுத்திக் கூறுவதும், செய்தியாக வெளியிடுவதும் பத்திரிகையாளர்களின் பணிகளாகும். இவ்வாறு செய்யும் பத்திரிகைகளால்தான் நாடும் நலமுறும். மக்களும் வளம் பெற்று வாழ்வர்!

இங்கிலாந்து ஆட்சியை இந்தியாவிலே வளமாக வேரூன்றச் செய்ய வேண்டும் என்ற வேட்கையால், இங்லீஷ் மொழியை மக்கள் கல்வியில் திணித்து, அதை ஆங்கிலேயருக்கு குமாஸ்தா வேலையைச் செய்ய வைக்கும் கருவியாக்கிய லார்டு மெக்காலே பிரபு, *1828*-ஆம் ஆண்டில் ஓர் அரசியல் நிர்ணய வரலாற்றை எழுதினார்.

அந்த மெக்காலே பிரபுதான் பத்திரிகையாளர்களுக்கு புது மரியாதையை, மதிப்பை அந்த ஆட்சியிலே உருவாக்கினார். அதாவது, பத்திரிகையாளர்களை அரசாங்கத்தின் நான்காவது தூண் (Fourth Pillar) அதாவது **Estate** என்று கூறிக் கௌரவப்படுத்தினார்.

மெக்காலே பிரபுவுக்குப் பிறகு வந்த எட்மண்ட் பர்க் என்ற இங்கிலாந்து பிரதமர், மெக்காலே குறிப்பிட்ட அந்த 'நான்காம் தூண்' என்ற தகுதிக்கு விளக்கமளித்தபோது, 'பிரிட்டன் நாடாளுமன்றத்தில் **Royalty** என்ற அதிகாரம் வகிக்கும்

அரச குடும்பம், ஒரு எஸ்டேட் என்றும், சமயத் தலைவர்கள், செல்வந்தர்கள் எனப்படுவோர் **House of Lords** பிரபுக்கள் சபையினர் என்றும், பொது மக்களால் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர், **House of Common** அதாவது நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றும், நான்காவதாக பத்திரிகை நிருபர்கள் அமர்ந்திருந்த **Reporters**கள் பகுதியைச் சுட்டிக்காட்டி, அதோ, அந்த நிருபர்கள் செய்யும் அரசியல் பணிதான் நான்காவது எஸ்டேட் என்று கூறிப் பெருமைப்படுத்திப் புகழ்ந்தார். அத்தகைய ஓர் அரசியல் வித்தகச் சிந்தனையாளர்களை நம்மால் இன்றும் மறப்பதற்கில்லை.

இந்தியா சுதந்திர உரிமை நாடாக உருப் பெற்றதற்குப் பிறகு, இங்கிலாந்து நாட்டு அரசியல் நிர்ணய வரலாற்றையே பெரும்பாலும் பின்பற்றி வருவதால், நமது மக்களாட்சியின் நாடாளுமன்ற நடவடிக்கைகளையே முதல் எஸ்டேட்டாகவும், அதன் நிர்வாகத் துறைகளை Executive இரண்டாவதாகவும், நீதித் துறையான Judicial-லை - இறைவன் தீர்ப்புக்குரிய முறை மன்றம் சார்புடையதை மூன்றாம் எஸ்டேட்டாகவும், பத்திரிகைத் துறையை நான்காம் எஸ்டேட்டாகவும் கருதி நாம் ஆட்சி நடத்தி வருகிறோம். இந்தியா உலகிலே மிகப் பெரிய ஜனநாயக நாடல்லவா? அதனால்-!

# 2

# பத்திரிகைகள் தோன்றும் முன்பு செய்திகள் எப்படிப் பரவின!

உலக மக்கள் ஆங்காங்கே பல் குழுக்களாகக் கூடி வாழ்ந்த காலத்தில் இருந்தே, ஓரிடத்திலுள்ள வாழ்வியல் சிறப்புச் செய்திகளை மற்றோரிடத்திற்குப் பரவிட, பரப்பிட, பரிமாறிக் கொண்டாடிடும் திட்டங்கள் பல இயற்கையாகவே நடந்திருக்கின்றன.

ஒரு நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதை, வேறோர் நாட்டிலே உள்ள மக்கள் அறிந்து கொள்ள வேண்டாமா? அதற்கான ஓர் ஆர்வம் இருக்காதா என்ன?

அவரவர் பேச்சு மொழிகள், அதாவது இலக்கிய, இலக்கணமுடையத் தாய் மொழிகள் உருவாவதற்கு முன்பே; மேற்கண்ட ஆர்வம் எழத்தானே செய்யும்? ஏன்? எழுந்துள்ளதே!

அந்த விருப்பத்தை ஊமைச் செய்திகள் மூலமாக, ஒலிகளின் வாயிலாக. மக்கள் குழுக்கள் வாழும் இடங்களில் கொட்டும் பறையோசை சார்பாக அவர்கள் அடையாளம் காட்டிக் கொண்டு பழக்கப்பட்டிருந்தார்கள்.

வேறு சில நாடுகளில் - கல்வெட்டுகள், கற்றூண்கள், கற்பாறை எழுத்துச் செதுக்கல்கள், கற்கோயில் சிற்ப

ஓவியங்களில் - தங்களது மொழியில் கருத்துக்களை எழுதிச் சுற்றுச் சூழல்களில் வாழும் பாமர மக்களைக் கண் காட்சிகள் மூலமாகக் காணச் செய்து; தங்களது எண்ணங்களை அரியதோர் செய்திகளாக ஆங்காங்கே பரப்பி வந்தார்கள்.

சீனா போன்ற நாடுகளில் அங்குள்ள மக்கள் மரப் பலகைகளிலே தங்களது எண்ணங்களை எழுத்தாக்கினார்கள். பட்டுத் துணிகளில் பாதரச சல்பேட் Mercury Sulphate என்ற கலவை மையால் சீன மொழி எழுத்துக்களை எழுதி மக்களிடம் அவரவர் எண்ணங்களைச் செய்திகளாக நடமாட விட்டதாகக் கூறுகிறது சீன வரலாறு.

மேலே கூறப்பட்ட அனைத்தையும் அறிவின் மிக்க சான்றோர்களால், அறிஞர்களால், ஓவியர்களால், சிற்பிகளால், புலவர்களால்; அரசு சார்பாகவும், தனிப்பட்டோர் தலைமையிலும் எழுதப்பட்ட எண்ணங்கள் ஒவ்வொரு நாட்டு மக்களிடமும் வலம் வந்திருக்கின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரையில், கி.மு. ஆறாம் நூற்றாண்டு மத எழுச்சி உருவான காலம்: சீனாவின் கன்ஃபூசியம், ஈரானில் ஜொராஸ்டிரம், கிரீசில் பெர்மைசும், கிரேக்க அயோனிய தீவில் ஹொரிக்ளிடசும், ஏதென்சில் சாக்ரட்டீசும் புதிய புதிய தத்துவக் கருத்துக்களை அவரவர் தொண்டர்களோடு ஊரூராகத் தெருதெருவாகப் பரப்பட்ட நேரத்தில், அந்த சமயத் தொண்டர்கள் இந்தியாவிற்குள்ளும் வந்து, இங்குள்ள அறிஞர்களிடம் அவரவர் மதச் செய்திகளைப் பரப்பினார்கள்.

இந்து மதம் என்று ஒன்று அப்போது கிடையாது என்றாலும், அதற்குச் சநாதனிகள், வைதீக மதம் என்று பெயரிட்டிருந்தார்கள். ஆனால்; 1799-ல் சர் வில்லியம் ஜோன்ஸ் இங்குள்ள நீதி நெறிகளைத் திரட்டி, அதற்கு 'இந்து லா' Hindu Law என்று ஆங்கிலத்தில் பெயரிட்டார். அதற்குப் பிறகுதான் இந்து மதம் விளம்பர மானது. (இந்தியாவில் - உலகியல் உணர்ச்சிகளில் போதிய அக்கறை காட்டாமல், ஆன்மீக சாதனைகளில் மட்டுமே வெற்றியை நிலை நாட்ட

அரும்பாடுபட்டது. இமயம் முதல் குமரியின் முக்கடல் எல்லை வரை வைதீக மதம் பரவி வாழ்ந்து ஆன்மீகச் செல்வாக்கு மேம் பெற்றிருந்தது.

இந்து மதத்தில் உள்ள சமய, மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டித்ததோடு இராமல், அவற்றை அகற்றிடப் புத்த சமயமும், சமண சமயமும் போராடும் சீர்திருத்த இயக்கங்களாகவே தோன்றி, பிறகு மதங்களாகவும் அவை மாறி விட்டன.

இவ்வளவையும் ஏன் இங்கே குறிப்பிடுகிறோம் என்றால், எந்த ஒரு பத்திரிகையும் தோன்றாத அந்தக் காலத்தில் - அதாவது ஆதி காலத்தில், இதழியல் என்ற கருவே எந்த அறிஞர் குழுக்களின் மூளைகளிலும் சூலாகாத மலட்டு அறிவு படர்ந்திருந்த நேரத்தில், இந்த மத எழுச்சிக் கருத்துக்கள், இந்தியாவில் அவரவர் அடியவர்களால் மதநெறி பரப்பல் என்ற செய்திகளாக பரவிக் கொண்டிருந்ததை எவராலும் மறுக்க முடியாது; மறக்க முடியாது.

வெளிநாடுகளிலே உருவாகி வளர்ந்து வந்த சமையங்களும், அவரவர் மத ஊழியர்களை இந்தியா மண்ணுக்கு அனுப்பி தத்தம் நெறிகளை அச்சமின்றிப் பிரச்சாரம் செய்து வந்த செய்திகளையும், உலக வரலாறு நமக்கு உரைத்துக் கொண்டுதான் உலா வருகின்றது.

அந்த உலகச் சமய உருவாக்கப் பண்பாடுகளின் வளர்ச்சிகளில் அவ்வப்போதைய காலச் சூழல்களுக்கேற்ப பல மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. குறிப்பாக : தனி மனிதனுடைய உணர்வுகளும், செயல்களும், பழக்க வழக்கங் களும், பண்பாட்டு வளர்நிலைகளாவது ஒருமுறை!

தனி மனிதர்கள் ஒன்றாகக் கூடி வாழ்வதால் உருவாகும் சமூகங்களின் பண்பட்ட முன்னேற்றம் அடுத்த நிலை.

சமூகங்கள் பல சேர்ந்து ஒரு சமுதாயமாகப் பின்னிப் பிணைந்து இயங்கும் பொழுது உருவாகும் வாழ்க்கை நெறி, பழக்க வழக்கங்கள், கலை உணர்வு, சிந்தனை முதிர்ச்சி,

ஆன்மீகம், எல்லாமே இணைந்து, ஒருவகைச் சமுதாயச் சிந்தனையாக வெளிப்படுத்துதலே 'பண்பாடு' எனும் மூன்றாம் நிலை ஆகும்.

எனவே, முரசு கொட்டியும், ஆராய்ச்சி மணி அடித்தும், கொம்பூதியும், கல்வெட்டு, கற்சிற்பங்கள், கற்கோயில்கள், ஃபேபரஸ் நாணற் இலைகளில் எழுதப்பட்ட எழுத்துக்கள், மரப் பலகை எழுத்துக்கள், பட்டுத் துணிகளில் வரையப்பட்ட செய்திகள், அறிஞர்களது கூட்டத்துப் பேச்சுகள், திருக்கோவில் கதை உரையாடல்கள், திருவிழாக்கள் மூலமாகச் செய்திகளைப் பரப்புதல், அரண்மனை மடல் செய்திகள் போன்றவைகளால் செய்திகளைப் பரப்பும் முறைகளும் பழங்காலத்தில் இருந்தன.

ஓரிடத்தில் நடக்கும் நன்மை-தீமைச் செய்திகளைச் சுற்று வட்டாரத்து மக்களுக்கு அல்லது நாடு விட்டு நாடு தாண்டி அறிவிக்கும் பழக்கம் இன்று நேற்றல்ல வரலாறு தோன்றும் போதே உடன்பிறந்த ஒரு நிகழ்ச்சியாக இருந்துள்ளது.

இதற்குரிய எடுத்துக்காட்டுகளாக; கற்காலச் செய்திகளை ஆராய்ந்த இங்கிலாந்து அறிவியல் அறிஞர் சர் ஜான் லூ பெக் Sir **John Lub Back,** *1839*ல் ஜேக்கன் பவுச் சர் டி பெர்த்ஸ் **Jaques Boucher de Perths,** *சிக்கிமுக்கிக் கல்லில் நெருப்பைக் கண்ட அபிவில்லிப்* **Abbeville,** *என்ற ஃபிரான்ஸ் மேதை, 1929-ம் ஆண்டில் சீன நாட்டில் சௌ-னோவ்-டீன்;* **Chow Knowtien** *1911ல்* இங்கிலாந்து நாட்டு சுசக்ஸ், ஃபிரான்சில் செல்லஸ், செயிண்ட் அச்சுல் Susses, St. Acheul, என்ற இடங்களின் தொல் பொருட் சின்னங்களை ஆய்வு செய்தோரின் செய்திகளைக் கூறலாம்.

எரிமலை கக்கிய தீப்பிழம்புகளிலிருந்து தீ பற்றியதைப் பழங் கற்கால மனிதன் அறிந்து கொண்டான் என்று அறிவியல் மேதை டார்வின் Darwin கூறிய புதுமை கருத்து; அப்போதைய மக்களுக்குரிய அறிவியல் செய்தியாகப் பரவியது.

புதிய கற்கால மனிதன் இந்தியாவில் கோதாவரி ஆற்றுக்குத் தெற்கே, அதாவது வட கர்நாடகப் பகுதியிலும், தமிழ்நாட்டில் சேலம், தர்மபுரி, வட ஆற்காடு மாவட்டங்களில் வாழ்ந்ததற்கான கற்கருவிகள் கிடைத்துள்ளன. அவற்றுள்

கோடாரி முக்கிய ஆய்வுப் பொருளான செய்தி வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய கற்காலத்திற்குப் பிறகு, கி.மு. 40-ம் ஆண்டில் உலோக காலம் தொடங்கி, செம்புக் காலம், வெண்கலக் காலம், இரும்புக் காலம் வரை வாழ்ந்த மனித வாழ்க்கையில்; மாறுதல்கள் பல மாறிமாறி ஏற்பட்டதால், மக்கள் எழுதும் கலையிலும், ஓரளவு வளர்ச்சி அடைந்தார்கள். இக்கால மக்கள் எழுதும் எழுத்துக்குப் பட எழுத்து Hieroglyphics என்று சுமேரிய நாகரிகச் செய்தி கூறுகின்றது.

அகர முதலி வரிசைப்படி எழுதும் முறை; உலகத்தில் முதன்முதலாக கி.மு. 3000 ஆண்டில் எகிப்து நாட்டில் வளர்ச்சிப் பெற்றதாகவும், பழங்கால எழுத்து முறை ஆரம்பமான காலமே வரலாற்றின் துவக்கக் காலம் என்றும் எகிப்து நாகரிகச் செய்தி உலகுக்கு உணர்த்துகின்றது.

## எகிப்து : வரலாற்றுத் தந்தை ஹெரடோட்டஸ் :

பூமியில் தோன்றிய பழம் பெரும் நாகரிகங்களில் ஒன்று எகிப்திய நாகரிகம். இதைவிட மூத்த நாகரிகம் சுமேரிய நாகரிகம். மற்ற நாகரிகங்கள் எல்லாமே எகிப்து நாகரிகத்திற்குப் பிற்பட்ட நாகரிகமாகும். இதை நாம் கூறவில்லை. வரலாற்றின் தந்தை என்று உலகம் இன்றும் போற்றும் கிரேக்க வரலாற்றாசிரியரான ஹெரடோட்டஸ்; தனது ‘வரலாறு’ என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அவர்தான் முதன் முதலாக உலகம் சுற்றிச் சுற்றி வரலாறு எழுதிய முதல் சரித்திர ஆசிரியர். அவர் எகிப்தின் நைல் நதி வளத்தைக் கண்டப் பிறகு, ‘எகிப்து நைல் நதியின் நன்கொடை’ என்று கூறியவர் அவரே! இவை எல்லாம் உலகச் செய்திகளா? இல்லையா? சிந்திக்க வேண்டுகிறோம்.

## நெப்போலியன் கல்வெட்டு

மாவீரன் நெப்போலியன் 1798-ஆம் ஆண்டில் எகிப்து மீது படையெடுத்தபோது, அவனுடன் பொறியாளர்கள்,

உலகப் படம் எழுதுவோர், தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர்கள், செய்திகளைச் சேகரிப்போர் ஆகியோரை அழைத்துச் சென்றான்.

நைல் நதி கடலில் கலக்கும் இடத்தில் 'ரோசெட்டா' (Rossetta) என்ற ஒரு கல்வெட்டை மாவீரன் நெப்போலியன் கண்டுபிடித்தான். அவன் அன்று அக்கல்வெட்டில் பொறிக்கப் பட்டிருந்த செய்தியை உலகுக்கு அறிவித்ததால்தான், எகிப்திய நாகரிகம் உலகத்தில் பெருமை பெறக் காரணமாக இருந்தது.

இந்த அரிய பணியை நெப்போலியனுடன் சென்ற வரலாற்றுச் செய்திச் சேகரிப்போரால் உலகுக்குக் கிடைத்த தில்லையா?

போர்க்கலை ஞானியான நெப்போலியனுடன் சென்ற வரலாற்றுச் செய்தியாளர்கள் லக்சார், Luxor, கர்நாக் Karnak என்ற இடங்களில் உள்ள பழம் பெரு கோவில்களின் செய்திகளைச் சேகரித்து Description De L Egypte என்ற நூலைத் தயாரித்து ஃபிரெஞ்சு அக்கடமிக்குக் கொடுத்தான்.

அந்த அரிய நூலிலிருந்து எடுத்த செய்திகளால்தான் எகிப்தில் மறைந்து போயிருந்த நாகரிகச் சின்னங்களை உலகம் அறியும் வாய்ப்பே உருவானது.

அஞ்சாநெஞ்சன் நெப்போலியனுடன் சென்ற வரலாற்றுச் செய்தி திரட்டுவோர், ரோசெட்டா கல்வெட்டில் இருந்த கிரீக், Greek, டிமோடிக் Demotic ஆகிய மொழிகளின் எழுத்துக்களை அப்படியே எழுதிப் படித்தறிந்தார்கள்.

ஃபேப்பரஸ் (Papyrus) என்ற காகித இலை வடிவங்களில் எழுதப்பட்ட கதை, கவிதை, நாடகச் செய்திகளையும் அந்தச் செய்தி சேகரிப்போர் திரட்டி, நூல் எழுதுவோருக்குக் கொடையாக வழங்கினார்கள் என்பது இதழியல் துறைக்குரிய ஒரு முன்னோடியான சம்பவம் அல்லவா?

### பாரோக்கள் காலத்து பிரமிடுகளின் செய்தி

பிரமிடுகளைக் கட்டிய பாரோக்கள் என்ற மன்னர்கள் ஆட்சியில் எழுத்தர்கள், எழுத்துக்களை நகல் எடுப்போர்,

மக்கட்தொகை கணக்கெடுப்போர், வருமான வரி கணக்கர்கள், வரலாறு திரட்டுவோர் என்ற பல வகையினர் இருந்திருக்கிறார்கள் என்றால், அந்தக் காலத்திலேயே எகிப்திய மொழியில் எழுத்தாளர்களும் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் வேண்டுமா?

எகிப்து நாட்டில் பெண் எழுத்தாளர்கள் அதிகமாக இருந்தார்கள். அவர்கள்தான் ஆண்களுக்கு காதல் கடிதங்கள் எழுதுவார்கள். ‘ஓ, எனது அருமைக் காதலரே! நான் உனது மனைவியாவதற்கு ஆசைப்படுகிறேன்’ என்று எழுதுவார்களாம். இந்த பெண்கள் ஃபேப்பிரஸ் என்ற தாளில், புகைக் கரி, தாவரக் கோந்து கொண்டு எழுதுவார்கள் என்பதும் செய்திதாளே?

சிறுகதை எழுத்தாளர்கள், கவிதை எழுதுவோர், வீர சாகசக் கதை எழுதுவோர், பேய் கதைகள் எழுதுவோர், அற்புதச் செயல்களை எழுதுவோர், துப்பறியும் கதை எழுதுவோர், காதல் லீலை கதைகள் எழுதுவோர், நீதிநெறிகளை விளக்கும் உவமைக் கதைகள் எழுதுவோர் எகிப்து நாட்டில் இன்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்கிறார்கள் என்றால். எழுத்தாளர்கள் பெருமை சொல்லப் போமோ!

## ஹீப்ரு : தாவீது மன்னன் சிறந்த எழுத்தாளர்!

பாலஸ்தீனத்தில் எகிப்தியர் ஆதிக்கம் வீழ்ச்சியுற்ற பின்பு, யூத இனத்தவர் கானான் தேசத்தில் குடியேறி, அவர்கள் பேசிய மொழிதான் ஹீப்ரு. அந்த ஹீப்ருக்கள் உருவாக்கியதே ஹீப்ரு நாகரிகம்.

இஸ்ரவேல் மன்னர்களில் ஒருவரான தாவீது அரசன் கி.மு. 1004-லிருந்து 965 வரை அரசராக இருந்தார். இவர் ஒரு சிறந்த எழுத்தாளர்.

கிறித்துவர்களின் பைபிள் என்ற நூலில் ‘சங்கீதம்’ Psalms என்ற பகுதியை எழுதியவர். இதில் துன்பத்தையும், மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தும் பாடல்கள் ஏராளமாக

இருப்பதால்; தாவீது மிகச் சிறந்த எழுத்தாளர் என்று இன்றும் கிறித்தவக் கல்விமான்களால் போற்றப்படுகின்றார்.

## நாகரிகத்தின் தாய்
## சிந்து சமவெளி

உலகத்தில் எகிப்திய நாகரிகம், சுமேரிய நாகரிகம், பாபிலோனிய, அசிரிய நாகரிகங்கள் தோன்றியன போல, இந்தியாவிலும் சிந்து நதிக் கரையில் மொகஞ்சதாரோ, ஹரப்பா என்னுமிடங்களில் கி.மு. 3000 ஆண்டுகட்கு முன்பு திராவிட நாகரிகம் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

அங்கே கண்டெடுக்கப்பட்ட எழுத்துகளில் ஒரு வரி இடப்புறம் இருந்து வலப்புறமாகப் போவதும், அடுத்த வரி வலப்புறம் இருந்து இடப்புறம் போவதுமாக இருந்தன. இந்த ஒலிக்குறிகள் மீண்டும் மீண்டும் தோன்றுவதால்; இந்த எழுத்துக்கள் சித்திர முறையும் ஒலி முறையும் இணைந்ததாக இருந்தன.

சிந்துவெளிப் பண்பாடுகள், எகிப்திய, சுமேரிய மெசபட்டோமிய பண்பாடுகளுக்கு ஒத்திருந்தாலும், மேற்கண்ட ஒவ்வொரு நாகரிகமும் தனித்தனி எழுத்து முறைகளோடு சிறந்திருந்தன. என்றாலும், வேதகால நாகரிகத்திற்கு மாறுபட்டது; முற்பட்டது; மேம்பட்டதுமாகும். ஹீப்ரு நாகரிகத்தில் தோன்றிய எழுத்தாளர்களைப் போல சிந்து நாகரிகத்தில் எவரும் இருந்ததாக எந்தவிதக் குறிப்புகளும் இல்லை.

## கிரேக்கம் - ரோமானியம்
## செய்தி நிலைகள் வளர்ச்சி

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் நாகரிகத் தொட்டில் களாக விளங்கிய எகிப்து, மெசபடோமிய, ஹரப்பா - மொகஞ்சதாரோ, சீன நாகரிகங்கள் கி.மு. 4000 ஆண்டுகட்கு முன்பு தோன்றி வளர்ந்தவை என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இத்தகைய அரும்பெரும் நாகரிகங்களிலிருந்து கி.மு. 60ம் ஆண்டுக்குப் பிறகு, மேல் நாட்டு நாகரிகங்கள் கிழக்கு நாடுகளில் இருந்து விலகி, ஐரோப்பாவின் கிரீஸ், இத்தாலி நாடுகளில் உருவாகித் தனிமையாக் வளர்ந்தன.

இந்தத் தனிமை வளர்ச்சி, தனிமனித நலம், மனித உரிமை போன்ற சிந்தனைகள்: வல்லாட்சி முறை, குழு ஆட்சி முறைகளை ஒடுக்கின. அதனால் கிரேக்க, ரோமானிய நாகரிகங்களின் செல்வாக்குகள் நிலைநின்றன.

தற்கால நாகரிகத்தை உருவாக்கிய முன்னோடிகளாக - கிரேக்க நாகரிகமும் ரோமானிய நாகரிகமும் உள்ளன. இத்தகைய நாகரிக வளர்ச்சியில் ஒன்றான கிரேக்க நாகரிகத்தில் புதிய மேலை நாட்டு இலக்கியங்களான பெருங்காப்பியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், நாடகம், முல்லைப் பாடல், இலக்கியத் தகுதியுடைய வரலாறுகள், பேச்சுத் திறன் படைத்த சொற்பொழிவுகள், புலப்பாட்டியல் (Rhetoric) ஆகியன உலகத்திலேயே முதன் முறையாக, முதல் தரமாகக் கிரேக்க நாட்டில் வளர்ந்தன.

எழுத்தாளர்
ஹோமர் :

உலகப் புகழ் பெற்ற காவியங்களான இலியட், ஒடிசி என்ற நூல்களை ஹோமர் என்ற எழுத்தாளர் எழுதினார். இதைப் பற்றிய ஆய்வுச் சர்ச்சைகள் பல இருந்தாலும், இசைப் பாடல்களாக எழுதப்பட்ட இந்தக் காவியங்களில்; வருணனைச் சிறப்புகள் சிறப்புப் பெற்றுள்ளன. அதனால் அந்தக் காலத்தில் ஹோமர் காவியங்கள் மக்கள் இடையே வாய்மொழிச் செய்திகளாக இடத்துக்கு இடம் மாறிப் பரவின.

கிரேக்க தத்துவஞானி பிளேட்டோ, மேல் நாட்டின் அரசியலில் முதல் சிந்தனையாளர் என்று புகழ் பெற்றார். கி.மு. 427ல் பிறந்து 347ல் மறைந்தவர். இடைக் காலத்தில் அவர் 36 தத்துவ, அறிவியல், மெய் விளக்க நூற்களை எழுதினார். அவரது கருத்துக்கள், அக்காலத்திலுள்ள நாட்டு மக்கள்

இடையே முற்போக்குச் சிந்தனைச் செய்திகளாகப் பரவி மக்களைச் சிந்திக்க வைத்தன.

கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டில் பிளேட்டோவின் மாணவராக விளங்கியவர். தலைசிறந்த தத்துவஞானி, விஞ்ஞானி, அரசியல் சிந்தனையாளர், ஆய்வு மேதை, அவரது எண்ணங்கள் நூல்களானதால், அந்தக் கருத்துக்கள் மக்கள் இடையே செய்திகளாகப் பரவின. புது உணர்ச்சியை உருவாக்கின.

பேரறிஞர் ஹீசியாத் (Hesiod) என்பவர் எழுதிய நீதி நெறிகள் மக்கள் ஒழுக்கத்துக்கு வழிகாட்டும் செய்திகளாயின. கடவுள்கள் வரலாறுகளை தியாகனி(Theogony) என்புவர் எழுதியதால் அவருடைய ஆன்மீகக் கருத்துக்கள் மக்களின் பக்திச் செய்திகளாக உருவெடுத்து தெய்வ வழிபாடுகளாயின.

அசைலஸ் (Aesehylus) என்பவர் கி.மு. 525 முதல் 456 வரை எழுதிய நாடக நூற்கள், கடவுளுக்கும் மனிதனுக்குமுரிய தொடர்புகளை உருவாக்கும் செய்திகளாகப் பல இடங்களில் மக்கள் இடையே நாடகங்களாக நடத்தப்பட்டன.

தனி மனித போராட்டங்களை முதன் முதலாக எழுதியவர் சோபக்லீஸ் (Sophoclies) என்பவர். இவர் கி.மு. 496 முதல் 406 வரை வாழ்ந்த காலத்தில் அரசு அதிகாரத்துக்கும் குடிமக்களுக்கும் இடையே உண்டான போராட்டங்களைச் செய்திகளாக்கினார். அதனால், மக்கள் புதுவித அரசியல் எழுச்சிகளைப் பெற்றுப் போராளிகளாக மாறினார்கள்.

அரிஸ்டோபான்ஸ் Aristophanes, யூரிபிடீஸ் Euripides என்ற நாடகாசிரியர்கள் எழுதிய நாடகங்களை மக்களே பொழுதுபோக்கு நாடகங்களாக நகர்தோறும் நடத்தி மனித உரிமைகளைச் சிந்திக்க வைக்கும் 'செய்தியாளர்களாக விளங்கினார்கள்.

வரலாற்றின் தந்தை என்று இன்று உலகத்தால் போற்றப்படும் கிரேக்க வரலாற்றாசிரியரான ஹெரடோட்டஸ், Herodotus கி.மு. 484 முதல் 420 வரை வாழ்ந்த; காலத்தில் அவர்

Histories என்ற 'வரலாறுகள்' நூலை உலகத்தைச் சுற்றி வந்து எழுதினார். அந்த வரலாறு அந்தந்த நாட்டு மக்கள் வாழ்ந்த நாகரிகம், பண்பாடுகள், பழக்க வழக்க ஒழுக்கங்களைக் கூறியதால், அக்கால மக்களுக்கு அவை அங்கங்கே உள்ள செய்திகளை அறிவிக்கும் வரலாற்று முரசாக அமைந்தது.

அறிவியல் வரலாற்றின் தந்தை என்று போற்றப்படும் துசிடைடஸ் (Thucydides) கி.மு. 471 முதல் 420-வது ஆண்டு வரை வாழ்ந்தார். இவர்தான் பிலப்பனேசியப் போர்கள் என்ற போர் முறை வரலாற்று நூலை முதன் முதலாக எழுதி உலகுக்கு வழங்கினார். இந்த நூல் அக்காலப் போர் முறைச் சம்பவங்களைச் செய்திகளாக அறிவித்ததால், மன்னர்களுக்குப் பெரும் உதவி புரியும் நூலாகவும், மக்கள் போர்க் காலத்தில் எவ்வாறு எச்சரிக்கையோடு இயங்க வேண்டும் என்ற அறிவுரைகளைக் கூறும் செய்திகளாகவும் இருந்தன.

நச்சுக் கோப்பை

*சாக்ரட்டீஸ்*

சாக்ரட்டீஸ் என்ற அறிவுலக மேதை எந்த ஒரு நூலையும் எழுதவில்லை. என்றாலும், அவருடைய ஒவ்வொரு பேச்சுக் களும், காரணம் காட்டி அவர் வாதிக்கும் முறைகளும் மக்கள் இடையே அறிவுரை ஆற்றும் செய்திகளாக விளங்கின. அவரது கேள்வி-பதில் பேச்சு முறை பாணிக்கு 'சாக்ரட்டீஸ் முறை' Socratic என்ற பெயரும் - புகழும் ஏற்பட்டு, அவருக்கென மாணவர்கள் அந்தந்த சிறுசிறு நகர நாடுகளிலே தோன்றினார்கள். சாக்ரட்டீஸ் கருத்துக்களை மக்களிடம் வாத, விவாதங்களாக்கிய அச்செய்திகள் அக்காலத்து மக்களைச் சீர்திருத்தின எனலாம்.

டெமஸ்தனிஸ் என்ற சொற்பொழிவு மேதையின சொல்லாற்றல் உணர்ச்சிகள், சாக்ரட்டீசுக்குப் பிறகு ஒரு பேச்சு அணியையே உருவாக்கி மக்களை அறிவுக் கடலிலே மிதக்க வைக்கும் பல்சுவைச் செய்திகளைக் கூறுவதாக விளங்கின.

தேலிஸ் Thales என்ற கிரேக்க வானியல் அறிஞர், தனது சூரிய கிரகணக் கண்டுபிடிப்புச் செய்திகளை எகிப்து, பாபிலோன் நாடுகளிலுள்ள நகரங்களுக்கு அவரே நேரில் சென்று, வானியல்

புதுமைச் செய்திகளை மக்களுக்கு அறிவிக்கும் பயணச் செய்தியாளராக அவர் நடமாடினார். எகிப்து நாட்டில் அவர் தங்கியிருந்தபோது உலகப் புகழ்பெற்ற பிரமிடுகளின் நிழலை அளந்து அதன் மூலம் அதன் உயரத்தை கணக்கிட்டு, முதன் முதலாக உலகுக்குக் கூறிய செய்தியாளராகவும் இருந்தார்.

அண்டத்தின் Universal இயக்கத்தை ஆராய்ந்து, பூமி நீள்வட்ட வடிவானது என்று கூறி, உலகப் படத்தை முதன் முதலாக வரைந்தவர் அனாக்சிமாண்டர் Anaximander என்பவர். இவர் கி.மு. 611 முதல் 547 வரை வாழ்ந்த வானியல் மேதை. சூரியக் கடிகாரம் என்ற ஒன்றைக் கண்டுபிடித்து நேரத்தைக் கணக்கிட்டுக் கூறியதால் உலக நாடுகளுக்குகெல்லாம் அவர் அதிசய செய்தியாளராக அப்போது திகழ்ந்தார்.

கிரேக்க கணித மேதை பித்தகோரஸ் Pythagorus என்பவர் கி.மு. 582 முதல் 500 வரை வாழ்ந்தவர். 'பித்தகோரஸ் கல்வி மையம் என்ற ஒன்றை அவர் ஊருருக்கு மன்றங்களாக அமைத்து, மாணவர்களைச் சேர்த்து அந்தந்த ஊர்களில், தான் கண்டுபிடித்த கணித வரலாறான ஒற்றை எண், இரட்டை எண், பகா எண் Odd numbers, Even numbers, Composite Numbers, Prime numbers பகு எண் ஆகியவற்றைக் கணித முறைச் செய்திகளாக்கிப் பிரச்சாரம் செய்த முதல் வித்தகர் ஆவார். இவரது கணித முறைதான் வடிவ கணிதத்தில் (Geometry) பித்தகோரஸ் தேற்றம், (Theorem) துணைத்தேற்றம் (Rider) ஆகியவற்றைத் தன் மாணவர் மன்றங்கள் மூலமாகச் செய்தியாக வெளியிட்டு நாடோடியாகப் பேசி கொண்டே ஊரூர் சுற்றி வாழ்ந்தார்.

சூரியன் உலகத்தின் நடுநிலையாக உள்ளது. கோள்கள் சூரியனைச் சுற்றி ஓடி வரும் பாதைகள் வட்ட வடிவமாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறியதற்காக, அப்போது கிரீஸ் மன்னனாக இருந்த பாலிக்கிரட்டீஸ் என்பவன் கடவுள் வகுத்த சூத்திரத்தை எதிர்த்து வாதிடும் இந்த பித்தாகரஸ் யார்? இவ்வாறு கூற இவனுக்கு என்ன உரிமை? என்று ஆணவமாடி அவரைக் கைது செய்து நாடு கடத்தினான். நாடோடியாய், ஊருராய் அலைந்து தனது கருத்தை மக்கள் இடையே செய்திகளாக அறிவித்தார் பித்தகோரஸ்.

இந்த பித்த.கோரஸ் கூறிய வானியல் கருத்தைத்தான் அவருக்குப் பின் 1540 - ஆண்டுகள் கழித்து வந்த நின்னலேயஸ் கோப்பர்னிக்கஸ் என்பவர் பித்தகோரஸ் கூறியதை உண்மை என்று உலகுக்கு மெய்ப்பித்தச் செய்திகள் உலகையே வியக்க வைத்தன.

ஈக்லிட் என்ற வேறொரு கணித வித்தகர், வடிவ கணிதத்தின் மூலங்கள் Elementary, Geometry அட்சர கணிதம் Algebra; கணக்கீடு கணிதம் Arithmatic போன்ற கணித நூற்களை எழுதி கணித உலகுக்குரிய செய்திகளாக்கினார். அந்தச் செய்திகள் மாணவ, ஆசிரியர் கல்விப் பணிகளாக இன்றும் வாழ்கின்றன.

கி.மு. 287 முதல் 212 வரை வாழ்ந்த ஆர்க்கிமிடிஸ் Archimedes என்ற கிரேக்க அறிவியல் வித்தகர். ஆர்க்கிமிடிஸ் கோட்பாட்டையும், தண்ணீரில் மிதத்தல் விதியையும் கண்டுபிடித்து அப்போதைய உலக நாடுகளில் எல்லாம் புகழ் பெற்றிருந்தார்.

ஆர்க்கிமிடீஸ் நெம்புகோலின் தத்துவத்தைக் கண்டு பிடித்தார். 'எனக்கு நிற்க ஓர் இடம் கொடுங்கள், நான் பூமியை நகர்த்திக் காட்டுகிறேன்' என்று நெம்புகோல் தத்துவத்தைக் கேலி பேசியவர்கள் இடையே ஆவேசமாகப் பேசினார். அதைச் சோதனைகள் மூலம் நிரூபித்துக் காட்டினார் ஆர்க்கிமிடீஸ்.

ஜியோமதி கணிதத்தில் விந்தைகள் பல செய்து காட்டிய அவர், கோளங்கள், கூம்புகள் ஆகியவற்றின் வெட்டு முகங் களின் தன்மைகளை விளக்கிச் செய்துகாட்டியும் கால்குலசை (Calculus) கண்டுபிடித்து, நுண்கணித இயலுக்குப் பெருமை தேடிய அவரது அறிவுத் திறன்கள் கணித உலகுக்குரிய அன்றைய - இன்றைய செய்திகளாக உலகெங்கும் பரவின.

'ஆர்க்கிமிடீஸ் சுருள்' என்ற சுருள் வடிவத்தையும் நெம்புகோல் தத்துவத்தைப் பயன்படுத்தி வெடிகுண்டுகளை வீசும் கருவிகளையும் கண்டுபிடித்த ஆர்க்கிமிடீஸை; ஒரு போர் வெறியன் தனது கைவாளால் அவரது கழுத்தை ஒரே வெட்டாக வெட்டித் துடிதுடிக்கச் சாகடித்த விவரம்; அன்றைய

அறிவுலகப் பரபரப்புச் செய்தியாக மாறிப் பரவியது. இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட பிற கணித மேதைகளும், மக்களும் ஆற்றொணா வேதனைப்பட்டார்கள்! அந்தச் செய்தி உலகையே உலுக்கி விட்டது.

ஆர்க்கிமிடீஸ் தலை வெட்டப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்ட அப்பலோனியஸ் Appollonius என்ற கணித மேதை; அந்த உயிர் கொலையைச் சவாலாக ஏற்று கி.மு. 240ல் 'நீள் வளைவு, பர வளைவு, மிகு பரவளைவு (Elipse, Perebola, Hyperbola) என்ற கணிதப் புதுமைகளைக் கண்டுபிடித்து ஆர்க்கிமிடீஸ் வெட்டுண்ட செயலுக்குப் புகழேற்றி நடமாடினார்.

இந்தக் கண்டுபிடிப்புக்களை அறிந்த ஊர் மக்கள், 'சைரக்ஸ், மன்னன் அப்பலோனியஸ் இப்போது அறிஞர்கள் தலைகளை வெட்டுவானா?' என்று சவால் விட்டு அந் நகரையே ஊர்வலமாகச் சுற்றி வந்த செய்தி கலவரமாக மாறி; நகரையும், அடுத்தடுத்துள்ள ஊர்களையும் அன்று திணறடித்த செய்தியாக நிலவியது.

பண்டைய கிரேக்க மக்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு இறந்தவர்கள் ஆவியே காரணம் என்று நம்பி வந்த மூட நம்பிக்கைச் செய்திகளை முறியடித்தவர் ஹிப்பாகிரடஸ் Hyppocratus என்ற மருத்துவ மேதை.

அவர் மனித உடலில் உள்ள ரத்தம், கபம், கரும் பித்தநீர், மஞ்சள் பித்த நீர் Blood, Phlegm, Black bile, Yellow bile ஆகியவை இருக்க வேண்டிய அளவுக்கு இருந்தால், நோய்கள் மக்களை அண்டாது என்ற புரட்சிக் கருத்தைக் கூறினார்.

இந்தச் செய்தி மருத்துவத்தில் ஒரு புதிய திருப்பு முனையை உண்டாக்கியதால், மக்கள் அதைப் பெரிதும் வரவேற்று, ஊர் ஊராக இந்தச் செய்தியை அக்கால மக்கள் பரப்பி; மூட நம்பிக்கையை வீழ்த்திப் புகழ் பெற்றனர். மருத்துவத் துறையில் அறிவியல் பூர்வமான இந்தச் செய்தி, அந்த நேரத்தில் மருத்துவ உலகுக்கும் மக்களுக்கும் ஒரு புது சிந்தனை வித்தை ஊன்றியது.

இரத்தம் உடலின் பல பாகங்களுக்குச் செல்லும்போது ஏற்படும் மாற்றங்களைக் கண்டுபிடித்தவர் கேலன் Galen என்ற கிரேக்க மேதை. இவர் கி.பி. 130 முதல் 199 வரை வாழ்ந்தவர்.

சிரை ரத்த நாளங்கள் உணவை ரத்தத்துடன் கலக்கச் செய்கின்றன. இரத்தம் கல்லீரலை அடையும்போது இயற்கை குணத்தையும், இதயத்தில் செல்லும்போது ஜீவாதார குணத்தையும், மூளைக்குள் போகும்போது மிருக குணத்தையும் பெற்று உடல் இயக்கத்திற்கு வழி செய்கிறது என்று கேலன் கூறிய அற்புத ஆராய்ச்சிச் செய்தி; மருத்துவ உலகுக்கு பெரும் உதவியாக; திருப்புமுனையாக அமைந்தது. தசைகள் சுருங்கி நீள்வதால் உடல் அசைவு உண்டாகிறது. அதற்கு நரம்புகளே காரணம் என்ற செய்தியைக் கூறி மருத்துவ உலகில் பெரும் புகழ் பெற்றவர். இவையெல்லாம் அன்றைய மக்கள் தெரிந்து கொண்ட செய்திகள் அல்லவா?

கிரேக்க நாகரிகம், கிரேக்க மேதைகள் பலரை உலகுக்குக் கொடைகளாக வழங்கியச் செய்திகளை இன்றும் - உலக வரலாறும் - கிரேக்க வரலாறும் வாழ்த்திக் கொண்டிருப்பதை நாம் படித்து கொண்டே வாழ்கிறோம்.

## ரோமானிய நாகரிகம்

கிரேக்க நாட்டில் உலகம் வியக்கத்தக்க சிந்தனையாளர்கள் ஒவ்வொரு துறையிலும் தோன்றி சாதனைகள் பல படைத்துள்ளதைப் போல, ரோமாபுரி நாட்டிலும் சில அரிய சாதனையாளர்கள் குறைவாகவே தோன்றினார்கள். அதனால், ரோமானியப் பேரரசு பழமை மிக்க உலகப் பேரரசுகளுள் ஒன்றாகவே இருந்தது.

ரோமானியர்கள் இத்தாலி நாட்டின் வளத்தைப் பெருக்கியவர்கள். பண்டைய எகிப்தியர், கிரேக்கர் நாகரிகங்களின் பயனை அவர்கள் அனுபவித்தவர்களாவர்.

ரோமானிய தத்துவம், சிசிரோ, உலுக்கிரிட்டியஸ், மார்க்ஸ் அரேலியஸ், செனக்கா போன்றவர்களது கருத்துகளால் உருவாயிற்று.

ரோமாபுரி மக்கள் எப்படிச் சிந்திக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுத்தவர்; நாவன்மை படைத்த பேச்சாளரான சிசிரோ என்பவர்தான் என்ற செய்தி மற்ற நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பிடிவாதக் கொள்கை என்ற **Dogmatism** தத்துவம்; உலகப் புகழ் பெற்ற ஒரு செய்தியாகவே மதிக்கப்பட்டது. இன்பம் - துன்பம் என்ற இரண்டையும் சமநோக்கில் காண வேண்டும் என்பதையும்; தனி மனிதன் ஒழுக்கம், திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட கருத்து, Notion அறிவுணர்வு, முடிவின்மை Infinity போன்ற செய்திகளை அவரால் உலகுக்கு வழங்கப்பட்டன.

சிசிரோவின் சொல்லாற்றல் மிக்கப் பேச்சுக்கள் இன்றும் உலகப் பள்ளிகளில் போதிக்கப்படுகின்றன. இவரது கடித இலக்கியங்கள் வரலாற்று உண்மைகள் கொண்டவை ஆகும்.

புளூடார்க் Plutarch என்ற வரலாற்றுப் பேராசிரியர் எழுதிய நூல்களில் கிரேக்க, ரோமானிய அரசியல் மேதைகளின் செய்திகள் ஏராளமாகக் குவிந்துக் கிடக்கின்றன.

ரோமானியப் பேரரசிற்குட்பட்ட நாடுகளில் அமைதி நிலை நாட்டப்பட்ட செய்தியை உணர்ந்த பிரிட்டிஷ் பேரரசு 19-ம் நூற்றாண்டில் ரோமானிய அமைதியைப் பின்பற்றி தங்களது குடியேற்ற நாடுகளிலும் அமைதியை நிலை நாட்டியது.

இன்றும் கூட பத்திரிகைகளில் குறிப்பிடப்படும் 'எல்லா சாலைகளும் ரோமுக்குச் செல்கின்றன (All Roads Lead to Rome) என்பதற்கேற்ப, ரோம் நாட்டின் ஒவ்வொரு மாநில எல்லா நகரங்களும் ரோம் நகரத்துடன் சாலைகளால் இணைக்கப் பட்டன என்ற ஆட்சிச் சீரமைப்புச் செய்திகள் அன்றும் இன்றும் உலகப் பிரசித்தப் பெற்றதாகும்.

கி.மு. 6-ம் நூற்றாண்டில் ரோமாபுரியை ஆட்சி செய்த எட்ருசியன் Etrusean என்பவன் கட்டட கலைக்கு ஆதரவு அளித்ததால், ஜுபிடர் கடவுளின் கோவிலான கேபிட்டல் திருக்கோவிலை (Capital) பிற்காலத்தில் கட்டி முடித்தார்கள் - ரோமானிய அரசர்கள். ரோமர்களின் இந்தக் கட்டிடக் கலை

அற்புதமான செயலென்று மற்ற நாட்டவரால் மதித்துப் போற்றப்படும் கட்டிடக் கலைச் செய்திகளானது.

## புராணக் கருத்துக்களை சீனா எதிர்த்தது?

சீன நாட்டு மக்கள் உண்மையான வரலாற்றுச் சம்பவங்களுக்குத்தான் முதன்மையான இடம் வழங்கினார்கள். புராணக் கருத்துக்களுக்கு சிறப்பிடம் அளிக்கவில்லை.

சீனர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு 1500 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பு உலோகத்தின் பயனைக் கண்டறிந்து பயன்படுத்தி வாழ்ந்தார்கள். பட்டுத் துணி, கண்ணாடி, வெடி மருந்து, பீரங்கிகள், திசை காட்டும் கருவிகள், துருவத்தின் காந்த சக்தி, காகிதம் செய்யும் முறைகள் போன்ற புதுமைச் சக்திகளை உலகத்தில் முதன் முதலாக கண்டுபிடித்த நாடே சீனாதான்.

சீன மொழி எழுத்துக்கள் கி.மு. 16ம் நூற்றாண்டிலேயே எழுத்து வடிவம் பெற்றது. கி.மு. 3ம் நூற்றாண்டிலே உலக அதிசயங்களுள் ஒன்றாக இன்றும் குறிப்பிடப்படும் சீனப் பெருஞ்சுவர் கட்டப்பட்டது. இது உலகத்திலேயே மிக நீளமான சுவர். இது 8 மீட்டர் உயரம் உடையது; ஒவ்வொரு 200 மீட்டர் இடைவெளியில் 1 முதல் 11 மீட்டர் உயரமுடைய சிறு கோபுரங்கள் அந்தப் பெருஞ்சுவர் மீது கட்டப்பட்டிருக் கின்றன. சுவர் அடிப் பகுதி 8 மீட்டர் அகலமும், மேற்பகுதி 5 மீட்டர் அகலமும் உடைய இந்தச் சுவர்மீது இருப்புப் பாதை போடப்பட்டு குதிரை வீரர்கள் சவாரி செல்லும் அமைப்பில் உருவாக்கப்பட்டதாகும்.

கி.மு. 460 - முதல் 377 வரை, அந்தக் காலக் கட்டத்தில், மக்கள் காட்சிகளை நேரில் கண்டு அனுபவித்த இந்தகையச் செய்திகளைப் பரப்பினார்கள். கிரேக்க மருத்துவர் ஹிப்பாகிரட்டஸ் காலத்துக்கு முன்பேயே, ஹூவோடா Huato என்பவர் அறுவை சிகிச்சை மருத்துவம் செய்த மேதை என்று சீன மருத்துவம் கூறுகின்றது. அப்போதே அக்குபஞ்சர் என்ற மருத்துவம் இருந்தது.

உடலில் அதிகமாக இருக்கும் திரவங்களின் வெளியேற்ற மும், அந்தத் திரவங்களினால் உண்டாகும் நோய்களைக் குணப் படுத்த; தோலில் துளையிடும் முறைக்கு சீனர்கள் அக்குபஞ்சர் மருத்துவம் என்று பெயரிட்டு, அதை மனித உடலில் 22 இடங்களில் அக்குபஞ்சர் முறையைப் பயன்படுத்தி நோய் களைக் குணப்படுத்துவதுதான் அக்குபஞ்சர் - என்ற விளக்கச் செய்தியை சீன மக்களிடம் வாங்ஷிடோ என்ற நாடித் துடிப்பு மருத்துவர் விளம்பரப்படுத்தினார்.

சீனர்களின் பேரரசு செங்வாங் Cheng Wang என்பவர் கி.மு. 1115 ஆம் ஆண்டு முதல் 1075 வரை வாழ்ந்தவர். இவர் காலத்தில் வாழ்ந்த செள Chow என்பவர்தான் காந்த சக்தி கொண்ட திசை காட்டும் கருவியை முதன் முதல் கண்டுபிடித்த செய்தியை உலகுக்கு கூறினார் என்ற சங்ஷு Sung - Shu என்ற நூல் அறிவித்துள்ளது.

கி.மு. 752ம் ஆண்டில் சங்-சாங் என்ற கணித வல்லுநர், அல்ஜீப்ரா, ஜாமெட்ரி என்ற நூல்களை எழுதி, அதே நூற்களில் நெகட்டிவ் குவாண்டிட்டியை பற்றி போதித்த செய்தி, சீன மக்களிடையே கணக்கியல் புதுமைகளைப் பரவ வழி வகுத்தது.

அதே காலத்தில் சூசங்வி Chung Chih என்ற கணித நிபுணர்; 'பை'யின்'ரி' என்ற சரியான மதிப்பீட்டை ஆறு தசம பின்னத்தில் வரையறை செய்து காட்டிய செய்தி; சீனக் கல்வி மையங்களிடையே பெரிதும் பாராட்டுப் பெற்றது..

சீன நாட்டில் கி.மு. 551 - முதல் 479 - வரை வாழ்ந்த கன்ஃபியூசியஸ், Confucius, கன்ஃபியூசியனிசம் Six Decimals என்ற தனது தத்துவத்தை மக்களிடையே ஊரூராகச் சென்று போதித்து, அன்பு என்றால் என்ன என்பதை விளக்கி உரைத்தச் செய்தி உலகம் முழுவதும் பரவியது. காலந்தவறாமை என்ற அவரது கொள்கையை மக்களிடையே அவர் செய்தியாக உபதேசித்தார். அவரது மாணவர்கள் கன்ஃபியூசியஸ் தத்துவத்தைச் செய்திகளாக்கி அதை நாடு முழுவதும் சென்று பிரச்சாரம் செய்தார்கள்.

மக்களிடம் நாள்தோறும் உபதேசிப்பதையே வழக்கமாகக் கொண்ட கன்ஃபியூசியஸ்; 'மற்றவர்கள் உனக்கு எதைச் செய்யக் கூடாது என்ற நினைக்கிறாயோ; அதனை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே "What you do like, When done to yourself do not do other" என்ற அவரது செய்தி மக்களிடம் பெரும் செல்வாக்கைப் பெற்றதாம். இந்தக் கருத்தை அவரது **The Book of History** என்ற நூலிலிருந்து எடுத்து மற்ற நாடுகளும் செய்தியாகப் பிரச்சாரம் செய்தன.

கி.மு. 372 முதல் 289 வரை வாழ்ந்த தத்துவஞானி Laotza லா ஓட்சா என்பவர், 'டாவோயிசம்' Tao என்ற தத்துவத்தை மக்களிடம் நேரிடையாக விளக்கிப் பேசும்போது, 'இயற்கைக் கொள்கை வல்லமை வாய்ந்தது. அந்தக் கொள்கை இயற்கை அழகு வாய்ந்தது. மக்களுக்கு அது நன்மை தரக்கூடியது ஆகையால், இயற்கை வாழ்வை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற செய்தியை லா ஓட்சா பரப்பினார். எனவே சீன தத்துவம் ஒழுக்கத்திற்கு முதலிடம் கொடுத்தது.

பழங்காலத்தில் இருந்தே இந்தியரின் சநாதன சமயம் இமயம் முதல் குமரி வரை இயங்கி வந்ததை, இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த தத்துவஞானி டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் 'இந்து சமயம் தொடர்ந்து நீடிக்கும் ஓர் இயக்கம். தேங்கிவிட்ட நிலை அன்று, என்றும் இயங்கும் ஒரு முயற்சி. முடிந்து விட்ட முறை அன்று, வளர்ந்து வரும் ஒரு பண்பு. நின்றுவிட்ட தேற்றம் அன்று, என்பதை வலியுறுத்தும் செய்தியாக அவர் உலகுக்கு வெளியிட்டார்.

'ஆரியர்கள் பேசிய முதல் வார்த்தை ரிக் வேதமாகும்' என்ற செய்தியை ஜெர்மானிய அறிஞர் மாக்ஸ் முல்லர் கூறுகிறார்.

மன்னர்களுக்கு ஆலோசனை கூறும் சபாக்கள் இரண்டு இருந்தன. ஒன்று சபா, மற்றொன்று சமிதி. சபா பிற்காலத்தில் நீதிமன்றமாகச் செயல்பட்டது என்றும், சபாவை விட சமிதி முக்கியமானதென்றும், அது மக்கள் சார்பாளர்களையும், அல்லது மக்கள் அனைவரையும் கொண்ட ஓர் அமைப்பு என்ற

செய்தியை டாக்டர் ஜெயஸ்வாஸ் என்ற மொழி அறிஞர் அறிவித்துள்ளார்.

'ரிக் வேத காலத்தில் அரசியல், சமுதாய வாழ்க்கையின் அடிப்படையாகக் குடும்பம் விளங்கியது. ஆரியர்கள் கூட்டுக் குடும்ப முறையை அமைத்துக் கொண்டார்கள் என்று வரலாற்று அறிஞர் வின்செண்ட் ஸ்மித் ஆராய்ந்து கூறுகிறார்.

கௌதம சித்தார்த்தர் போதி மரத்தடியில் மெய்யறிவு பெற்ற பிறகு, காசி நகர் அருகே உள்ள சாரநாத் என்ற இடத்தில் உள்ள மான் வனம் Deer Parkல் அவர் முதன் முதலாகத் தனது சமய உரையை நிகழ்த்தினார். அப்போது அவர் நான்கு சிறந்த ஞானநெறிகளை மக்களுக்குக்கு எடுத்துக் கூறினார்.

1. துன்பம், வருத்தம், நோய், மூப்பு, சாவு ஆகியவை நிறைந்த மக்கள் வாழ்க்கை எளிதில் விவரிக்க முடியாத துன்பம் நிறைந்தது என்ற செய்தியை அறிவித்தார். 2. இந்த துன்பங் களுக்குக் காரணம் சிற்றின்பம். 3. இந்த துன்பங்களை ஒழிக்க ஆசையை ஒழிக்க வேண்டும். 4. ஆசை ஒழிக்கப்பட வேண்டும் என்றால் அட்ட சீலம் என்ற எட்டு நன்னெறிகளை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற' செய்திகளை உபதேசித்தார்.

அட்ட சீலம் என்பதற்குப் புத்தர் விளக்கம் அளித்த போது, மேற்கண்ட நான்கு உண்மைகளில் மக்கள் முழு நன்னம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்ற செய்தியை அவர் பரப்பினார்.

சிற்றின்பத்தை அகற்றிடவும், கோபத்தைத் தடுக்கவும், மற்றவர்களுக்குத் தீமை செய்யாதிருக்கவும் வேண்டும்.

பயனற்றதும், கடுமையானதும்; பொய்யானதுமான கடுமை நிறைந்த சொற்களைப் பேசாதிருக்க வேண்டும். எப்போதும் இன்சொற்களையே பேச வேண்டும்.

மற்றவர்களைத் துன்புறுத்தாமலும், திருட்டுக் குற்றத்தைச் செய்யாமலும், நல்ல நெறிகளுடன் நடக்க வேண்டும்.

சிறந்த இலக்குக்குத் தக்கவாறு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

தீமைகளை அகற்றி, நல்ல குணங்களை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சிற்றின்ப ஆசையும், துன்பமும் வந்து தன்னைத் தாக்கா வண்ணம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

தன்னுடைய நோக்கங்களை, அடைந்திட மனத்தை ஒருவழிப்படுத்தும் தியானத்தைச் செய்ய வேண்டும் என்ற எட்டு நன்னெறிகளை ஒழுக வேண்டும் என்ற ஞான அறிவுரைக் கருத்துக்களை மக்களுக்கு ஊரூராகச் சென்று விளக்கிக் கூறினார். இது செய்தி அல்லவா?

மக்கள் ஆசையை வென்று மகிழ்ச்சியான நிலையை அடைவதற்குரிய பத்துக் கட்டளைகளைச் செய்தியாக புத்தர் உபதேசம் செய்தார்.

கொல்லாமை, களவு செய்யாமை, பிறன்மனை நோக்காமை, பொய் கூறாமை, புறம் பேசாமை, குற்றம் கூறாமை, மது அருந்தாமை, முதியோரைப் போற்றல், பெற்றோர்க்குக் கீழ்படிதல், அறம் செய்தல் போன்ற நெறிகளைப் பின்பற்றல் வேண்டும் என்று அவர் தனது சமயச் செய்திகளாகக் கட்டளையிட்டார்.

கௌதமர், தமது நெறிகளைப் பரப்பவும், பிறரைத் தனது மதத்திற்கு மாற்றவும்; தனது மாணவர்களைக் கொண்ட ஒரு சங்கத்தை உருவாக்கினார். ஆண்-பெண் துறவிகள் அந்த சங்கத்தில் சேர்ந்தார்கள். பிக்குகள், பிக்குணிகள் அனைவரும் எளிய வாழ்க்கையை மேற்கொள்ளச் செய்தார். இவர்கள் தலையை முழுமையாக மழுக்கிக் கொண்டு, மஞ்சள் ஆடைகளை அணிந்து, புத்தம், சங்கம், தர்மம் என்ற மூன்று நிறுவனங் களுக்கு உண்மையாக நடக்க வேண்டும் என்றார். இவை போதி ஞானியின் அறநெறிகளாகத் திகழ்ந்தன. இந்தச் செய்திகளை சர் எட்வின் ஆர்னால்டும், நிஸ்டேவிட்சும்

செய்திகளாகக் கூறுகிறார்கள். புத்தர் கி.மு. 487ம் ஆண்டில் மறைந்தார்.

புத்தருக்குப் பிறகு கி.மு. 539-ம் ஆண்டில் தோன்றிய மகா வீரர் நன்னம்பிக்கை, நல்லறிவு, நன்னடத்தை என்ற மூன்று கொள்கைகளை 'மும்மணிகள்' என்ற செய்திகளாக மக்களுக்குப் போதித்தார். மகா வீரர் கொள்கைகளை அவருடைய பதினோரு சீடர்களும் சமண சமய கோட்பாடுகள் என்ற பெயரில் பதினான்கு இயல்களாகப் பிரித்துச் செய்திகளாக வெளியிட்டார்கள்.

சமணர்கள் இந்தியாவின் பல்வேறு மொழிகளைக் கசடறக் கற்று, எந்தப் பகுதிக்குச் சென்றாலும், மக்களிடையே அவரவர் மொழிகளிலே சமண கொள்கைச் செய்திகளை பரப்பினார்கள். இவர்களது சமயத் தொண்டுகளால் தமிழ் மொழியில், சிலப்பதிகாரம், நன்னூல், சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி போன்ற நூல்களில் சமணத்தைச் செய்திகளாக எழுதித் தொண்டாற்றினார்கள்.

எந்தெந்த மொழிகளைக் கற்றுச் சமணர்கள் வல்லுநர் ஆனார்களோ, அந்தந்த மொழிகளில் சமணக் கொள்கைகளைச் செய்திகளாக்கி, இலக்கணம், உரை நடை, காப்பியம், அகராதி, தத்துவக் கருத்துக்கள், குறியீட்டு முறைகள், கணிதம் போன்ற நூற்களை எழுதும் பெரும் புலவர்களாகி சமண சமயத் தொண்டாற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கச் செய்திகள் ஆகும்.

கற்றூண்கள், கல்லால் செதுக்கப்பட்ட குடை போன்ற அமைப்புகள், வளைவுகள் நிறைந்த கோவில்கள், பாறைக் குகைக் கோயில்கள், சரவண பெலகோலா கோமதீஸ்வரர் கோவில், மைசூர் கார்கால்பதி ஆலயம், மத்தியப்பிரதேச காஜுராகோ திருக்கோவில், பாவபுரி கோயில், இராஜஸ்தான் அபுகுன்று சலவைக் கோயில், சிற்பங்கள், கிழக்கு வங்க ரிஷபநாதர் சிலை, மராட்டிய எல்லோர குகைக் கோவில், ஒரிசா ஹதிகும்பா குகைக்கோயில், மத்தியப் பிரதேச உதயபுரி மலைக் குகைக் கோயில், அங்குள்ள சிற்பங்கள், ஜுனார்,

ஆஸ்மானாபாத் குகைகளைக் குடைந்து அமைந்துள்ள சிற்பங்கள், பிரார்த்தனைக் கூடங்கள், தர்மசாலைகள் அமைத்திருத்தல், சித்தூர் சமணக் கோபுரம் போன்ற மேலும் எண்ணற்ற இடங்களில் கட்டப்பட்டுள்ள புனிதத் தலங்கள் போன்ற கொடைச் செயல்கள் எல்லாம் சமணர்களின் கலைத் திறன்களுக்கான செய்திகளாக இன்றும் காட்சி தருகின்றன.

இந்திய வரலாற்றில் சமண தத்துவங்கள் இன்றும் அழியாமல் : அதன் ஒவ்வொரு வேலைப்பாடுகளும் சமணர்களின் சிறப்பான, அற்புதமான செய்திகளாகத் திகழ்ந்து புகழ் பரப்பிக் கொண்டிருக்கின்றன. பத்திரிகைகள் இல்லாத காலத்தில் தோன்றிய அற்புதச் செய்திகள் அல்லவா இவை? வரலாறு மறக்க முடியாத, மறுக்க முடியாத அழியாச் செய்திகள் தானே இவை! எப்படி மறக்க முடியும்?

புத்த சமயத்தில் சங்கங்கள் இருந்தன - சித்தார்த்தர் சித்துக்களை உலகெங்கும் பரப்பிட! ஆனால், சமணத்தில் அத்தகைய சங்கங்கள் ஏதும் இல்லை என்றாலும், கல்மேல் எழுதப்பட்ட எழுத்துக்களைப் போல கற்கோயில்கள், கற்சிற்பங்கள், கல் ஓவியங்கள், கற்றூண்கள், கற்குகைக் கல்வெட்டுகள் இருக்கின்றன. சமணத்தின் செய்திகளை உலகெங்கும் பரப்பிட, உணர்த்திட, உரைத்திட இவை அல்லவா பத்திரிகைச் செய்திகளைவிட அழியா செய்திகள்?

எனவே, உலகத்தில் பத்திரிகைகள் தோன்றுவதற்கு முன்பு ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த மக்கள் வாழ்க்கையில் ஏராளமான செய்திகள் தோன்றிக் கொண்டுதான் இருந்தன.

அவற்றை வெளியிடப் பத்திரிகைகள் இல்லையே தவிர, மக்கள் போக்குவரத்துகள் மூலமாக; அந்தச் செய்திகள் வாய்மொழி வழிகளாலும், கல்வெட்டு, கற்சிற்பங்கள், கற்பாறைச் செதுக்கல்களைக் காட்சிகளாக மக்கள் பார்த்தவை களாலும்; அறிஞர்கள் தொகுத்து எழுதிய சிந்தனைகளை நூல்களில் படித்துணர்ந்தவர்களாலும், நூல்களை எழுதிய அறிஞர்களே நடைப் பயணமாக ஊரூருக்குச் சென்று மக்களுக்கு எடுத்துக் கூறிய முறைகளாலும் அந்தச் செய்திகள்

அக்காலத்தில் உலகப் பகுதிகள். சிலவற்றுக்குப் பரவிக் கொண்டுதான் இருந்தன.

அத்தகையச் செய்தி பரப்பும் தொண்டுகளை யார் யார் செய்தார்கள்? எப்படியெப்படி பிரச்சாரம் புரிந்தார்கள், அதனால் மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் என்ன? என்பதையும் இதுவரை மேற்கண்ட சம்பவங்களால் படித்தீர்கள் அல்லவா?

உலகத்தின் மேல் நாடுகளில் பத்திரிகைகள் எங்கெங்கே தோன்றின, அவை எப்படியெல்லாம் செய்தித் தொண்டாற்றின என்ற விவரங்களை அடுத்து வரும் பகுதிகளில் சுருக்கமாகக் காண்போம்.

# 3

# உலக நாடுகளில் உருவான பத்திரிகை வளர்ச்சிகள்

அறிவுக்கு வடிவம் மொழி! மொழிக்கு வடிவம் எழுத்து. எண்ணங்களின் வடிவமும் எழுத்துதான். எண்ணங்கள் எண்ணற்ற செயல்பாடுகளை வடிவமாக்குகின்றன.

இவற்றுக்கு மூலம் எது? மனம்! மனம்தான் மேற்கண்டவற்றுக்கு ஊற்றுக் கண்களாகின்றது. அந்த ஊற்றுச் சுரப்பிகள் பெருக்கும் நீர்த் துளிகளே சுவை பயக்கும் இனிய முடிவுகள்! அந்தந்த முடிவுகளின சிகரம்தான் நாம் வெற்றி கொள்ளும் வாழ்வியல் கூறுகள்!

உலக நாடுகள் ஒவ்வொன்றிலும் அந்தந்த நாடுகளில் வாகை சூடிய மக்கள் வாழ்வியல் கூறுகளில் ஒன்றுதான் நாம் தினந்தோறும் படிக்கும் பத்திரிகைகள், இதழ்கள், பருவ கால்ச் சுவடிகளான அறிவுப் படைப்புகளாகும்.

## இங்கிலாந்தில் தோன்றிய பத்திரிகை உலகம்

பத்திரிகைகளுக்கான முன்னோடி இதழ்கள் முதன் முதலாக இங்கிலாந்து நாட்டில் 17-வது நூற்றாண்டுக்கு முன்பே தோன்றியதாக The Concise Oxford Dictionary of English Literature 1939-ம் ஆண்டு பதிப்புக் கூறுகின்றது.

அந்த இங்லீஷ் அகராதி News Paper என்ற சொல்லுக்கு தருகின்ற விளக்கத்தில், "செய்தித்தாள் என்று கூறுவதற்கான முன்மாதிரி இதழ்கள் 17-வது நூற்றாண்டுக்கு முன்புதான் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு முன்பு இங்கிலாந்து நாட்டில் ஆட்கள் மூலமாக நேரடியாக வழங்கப்படும் News Letters, News Pamphlets என்ற பழக்க வழக்க முறைகள்தான் இருந்தன என்று குறிப்பிட்டுள்ளது.

ஆட்கள் மூலமாக மக்களுக்குச் செய்திகள் வழங்கப்படும் இவை போன்ற முறையை; பர்டன் என்பவர் 1614-ம் ஆண்டிலேயே தனது **Anatomy of Melancholy** எனும் பாம்ப்லேட் மூலமாகக் கண்டித்து எழுதினார். ஸ்பெயின் நாட்டில் தான் அந்த 'நியூஸ் லெட்டர்', 'நியூஸ் பாம்ப்லேட்'டு களுக்குச் செய்திகள் தயாரிக்கப்பட்டு வந்தனவாம்.

ஆனால், 1622-ம் ஆண்டின் மே மாதம் வரை; அந்தச் செய்தித் தயாரிப்பு முறைகள் முதன் முதலாக வெளி வர வில்லை. அதற்குப் பிறகு, நத்தானியல் பட்டர், Nathaniel Butter நிகோலஸ் பௌர்னே, Nicholas Bourne, தாமஸ் அர்ச்சர் Thomas Archer என்பவர்கள் ஓரணியாக ஒன்றுகூடி 'கொரண்டே' "Corante" என்ற ஒரு பத்திரிகைக்காக செய்திகளைத் தயாரித்தார்கள்.

அந்த அணியினர் தயாரித்த 'Corante' என்ற பருவ காலச் சுவடி, அந்த நூற்றாண்டு முழுவதும் மக்கள் இடையே பரவி கருத்து வளர்ச்சியையும், படிக்கும் உணர்ச்சியையும் தூண்டி விடும் ஒரு சக்தியாக அமைந்தது.

இங்கிலாந்து நாட்டில் அப்போது உருவான அரசியல் நெருக்கடித் தொல்லைகளால், புதுப்புது Periodicals பருவ இதழ்கள், புற்றீசல்கள் போல தொடர்ந்து புறப்பட்டு வெளி வந்தன. இந்தப் பருவச் சுவடிகளில் பெரும்பான்மையான இதழ்கள் வாரம் மும்முறையாக வெளி வந்து மக்களிடையே பரபரப்பை யூட்டி படிக்கும் உணர்ச்சியை உருவாக்கின.

## உலகத்தின் முதல் நாளேடு

வாரம் மும்முறை வெளிவரும் இந்த பருவச் சுவடிகள் குழுவிலிருந்து; 1703ம் ஆண்டில் 'டெய்லி கொரண்ட்' "Daily courant" என்ற முதல் தினசரி செய்தித்தாள் முதன் முதலாக வெளிவந்தது. இந்த நாளேடுதான் உலகத்தின், குறிப்பாக கிரேட் பிரிட்டனின் முதல் செய்தித்தாள் என்ற பெயரையும் புகழையும் பெற்று, மக்கள் இடையே தொண்டு செய்தது என்பது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

'குயின் அன்னிஸ்' என்பவர் காலத்தில் குறிப்பிடத்தக்க ஒரு திறமையாளர் குழுவினர், தங்களது அறிவுக் கொடைகளாகச் செய்திகளைச் சேகரித்து, மக்கள் அவர்களைக் குறிப்பிட்டுப் பாராட்டும் வகையில் பருவ காலச் சுவடிகளுக்காக அறிவுத் தொண்டு புரிந்து வந்தார்கள். அவர்களால் பருவ கால இலக்கியத் துறை வேகமாக வளர்ந்தது; முன்னேறியது.

அவர்களுள் குறிப்பாக டிஃபோ Defoe என்பவர்தான்; இங்லீஷ் மொழியிலேயே மிகப் பெரிய முதல் பத்திரிகையாளர் என்று இங்கிலாந்து மக்களால் போற்றப்பட்டவராவார். அவர் மட்டுமன்று, சற்றேறக்குறைய அதே ஆண்டுகள் இடையில் ஸ்டீலி, Steele ஸ்விப்ட், Swift அடிசன் Adoison என்பவர்களும் புகழ் பெற்ற பத்திரிகையாளர்களாக வளர்ந்திருந்தார்கள்.

அப்போது வெளிவந்துக் கொண்டிருந்த பத்திரிகைகளுக்கு உருவான அரசியல் முக்கியத்துவங்களால் அந்த இதழ்களின் விற்பனைகள் பெருகின. பிரதிகளும், அதிக அளவு அச்சடிக்கும் நிலை ஏற்பட்டது. ஆனால், அப்போதைய பிரிட்டிஷ் அரசு பத்திரிகைகளுக்காக வழங்கிய அஞ்சல் போக்கு-வரத்து வரியைக் குறைத்துக் கொள்ளாமல், அதிக வரிகளையே பத்திரிகைகள் மேல் வசூலித்தது.

அரசு உதவிப் பொருட்களை வழங்கும் அனுமதியைப் பெற்ற பத்திரிகையை நடத்தி வந்த பலருள் ஒருவரான வால்போல் Walpole என்பவர், ஆண்டுக்கு ஐயாயிரம்

பியூரோக்களை அஞ்சல் செலவுகளுக்காகச் செலவிடும் பரிதாப நிலை ஏற்பட்டது.

வால்போல் என்பவரைப் போலவே, எதிர்கட்சியைச் சேர்ந்த ஹென்றி ஃபீலீடிங் Henry Fielding என்ற பத்திரிகையாளரும் பெரிதும் பாதிக்கப்பட்டார்.

## நாடாளுமன்றத்தில் ஸ்டாம்பு புகார்!

'ஜெண்டில்மேன்' "Gentleman" என்ற பத்திரிகையை நடத்தி வந்த ஜான்சன் என்பவர், இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் அரசியல் வாதங்களை எழுப்பும் உறுப்பினர்களுக்கு இந்த அஞ்சல் குறைபாடுகளைப் பற்றிப் புகார் செய்தார்.

எனவே, 18ம் நூற்றாண்டு முழுவதுமாக, எந்த ஒரு பத்திரிகையும், அபூர்வமாகவே விற்பனையாகி வந்தது - காரணம், 5000 பிரதிகளுக்கு மேல் அவர்களால், விற்பனை செய்ய முடியாத அஞ்சலக வரித் தொல்லைகள் நீடித்ததுதான்.

இந்த நேரத்தில் பத்திரிகைகளை மிக மலிவாக வேகமாக அச்சடிக்கக் கூடிய அச்சு இயந்திர வகைகள் புதுப் புது முறையில் வெளி வந்துக் கொண்டிருந்தன. இந்த இயந்திரம் மூலம் பத்திரிகைகளை அச்சடித்து வழங்கும் வசதிகளை, ஜான் வால்டர் John Walter என்பவர் 1775ம் ஆண்டில், அவர் ஆரம்பித்த The Times என்ற பத்திரிகை மூலமாக மற்றவர் களுக்கும் அந்த வசதிகளைச் செய்து கொடுத்தார்.

கி.பி. 1772ம் ஆண்டில் டேனியல் ஸ்டூவர்ட் Danial Stuart என்பவர் 'காலை தபால்' (The Morning Post) என்றொரு பத்திரிகையைத் துவக்கி நடத்தினார். அவரது ஏடு பருவ இதழானதால், தனக்கு முன்பு வாழ்ந்த பேரறிவாளர்கள் எழுதி வைத்த இலக்கிய வடிவங்களின் பழைய சிந்தனைகளைத் தனது பத்திரிகையிலே மீண்டும் நினைவுபடுத்தி எழுதி வந்தார்.

பிளேட்டோ
தத்துவம்:

'Platonic Doctrine of Reminiscence' என்ற கொள்கை விலை மதிக்க முடியாத, மிக உயர்ந்த, பெருமை வாய்ந்த, அருமையான கிரேக்கப் பேரறிஞர் பிளேட்டோ என்ற தத்துவஞானி உருவாக்கிய சித்தாந்தம் ஆகும். இந்த பிளேட்டோவின் கோட்பாட்டைச் சிந்தாமல், சிதறாமல் அப்படியே பின்பற்றித் தனது 'மார்னிங் போஸ்ட்' என்ற பருவ இதழில் டேனியல் ஸ்டுவர்ட் எழுதினார்.

இதே பத்திரிகையில்தான் உலகப் புகழ்பெற்ற எழுத்தாளரான கோல்ரிட்ஜ், Coleridge தனது கட்டுரைகளை அப்போது எழுதி வந்தார். அதனால் சிறிது சிறிதாக 1834ம் ஆண்டில் அந்த 'தி டைம்ஸ்' என்ற பத்திரிகை 10,000 பிரதிகள் வரை விற்றன. 1834ம் ஆண்டில் 23,000 பிரதிகள் விற்றன. 1854ம் ஆண்டில் அதன் விற்பனை 51,000 ஆயிற்று.

ஜான் ஸ்டார்ட் டார்ட், 'தி டைம்ஸ்' பத்திரிகையைப் பல ஆண்டுகளாக நடத்தி வந்தார். 1816ம் ஆண்டில் தாமஸ் பார்னெஸ் அதன் ஆசிரியராக இருந்தார். அந்த பத்திரிகைத்தான் உலகத்தில் முதன் முதலாக அயல்நாட்டு நிருபர்களை ஆங்காங்கே பணிபுரிய நியமித்த முதல் பத்திரிகை ஆகும். அவ்வாறு நியமிக்கப்பட்ட முதல் வெளிநாட்டு நிருபர் பெயர் கிராப் ராபின்சன் என்பவர் ஆவார்.

அதற்குப் பிறகு இங்லீஷ் பத்திரிகை உலகம் 19ம் நூற்றாண்டினை நோக்கி இறுதிவரைப் புதிய மறுமலர்ச்சிப் பாதையில் அறிவு உலா வந்து கொண்டிருந்தது. சில நேரங்களில் முற்போக்கு எண்ணமுடைய இங்கிலாந்து பத்திரிகைகள், அவற்றின் அறிவுக் கூர்மையாலும், புதுப் புது கருத்துக்களை வெளியிடுவதாலும், நாட்டு நடப்புகளை மக்கள் விரும்பும் வகையில் பிரசுரித்ததாலும்; ஏறக்குறைய 20 லட்சம் பிரதிகள் வரை விற்பனையாகி மக்களை அறிவுக் கடலில் ஆட வைத்தன. 1938ம் ஆண்டு வரை இங்கிலாந்து இதழியல் உலகம் கொடிக் கட்டிப் பறந்து கொண்டிருந்தது.

இன்று இங்கிலாந்து பத்திரிகை உலகத்தை மாடர்ன் ஜார்ன்லிசம் ஆக்ரமித்துக் கொண்டு உலக முன்னேற்றத்துக்காக உழைத்து வருவதைப் பார்க்கின்றோம்.

## நார்வே நாட்டுப் பத்திரிகை சேவை

உலகப் புகழ் பெற்ற நாடகப் பேராசிரியர் இப்சன் என்பவரின் நண்பர் பிஜோர்ன்ஸ்ட், ஜெர்ன் பிஜோர்ன்சன் (Bjornst Jern Bjornson) என்பவர் 'மார்கன் பிளாடட்', Margan Platat" என்ற நாளேட்டை, 1854ம் ஆண்டில் அவர் நடத்தினார். அந்தப் பத்திரிகையில் இலக்கியம், அரசியல், கவிதைகளை வெளியிட்டார். இப்சன் அந்த பத்திரிகையில் புகழ் பெற்ற நாடக விமர்சனங்களை எழுதிப் புகழ் பெற்று உலகுக்கு அறிமுகமானார். இல்லஸ்ட்ரேட்டட் ஃபோக் பிளாட் என்ற தினசரி பத்திரிகையை பியார்ன்ஸ்சன் என்பவர் துவக்கி, அந்தக் காலத்திலேயே கலைத் துறையில் பெரும் புரட்சி செய்தார். மக்கள் அந்த நாளேட்டை விரும்பி வாங்கிக் கலைத்துறை மறுமலர்ச்சிக்கு ஆதரவளித்தார்கள்.

நமது இந்திய நாட்டில் நாம் இன்று பாடி வரும் 'ஜனகணமன அதி நாயக ஜெயகே' என்ற பாடலைப் போல 'நார்வே பூமியை நாம் நேசிக்கிறோம் என்ற பொருளில் ஒரு தேசிய கீதம் பாடலைப் பியார்ன்சன் எழுதினார். அந்தப் பாடல் பிற்காலத்தில் நார்வே நாட்டிற்கு 1859ம் ஆண்டில் தேசிய கீதப் பாடலாகிப் புகழ் பெற்றது.

அந்த ஆசிரியர் நார்வே தேசிய கீதம் போன்ற பல பாடல்களை எழுதியதோடு நில்லாமல் - கலைத் துறையிலும், மதத் துறையிலும், தனது சீர்த்திருத்தக் கருத்துக்களை எழுதியதால், அந்த நாட்டு ஆட்சியின் எதிர்ப்புகளை அவர் ஏராளமாகப் பெற்றவரானார்.

பியார்ன்சன், அந்தக் காலத்திலேயே நார்வே அரசு செய்து வந்து பல அரசு தில்லுமுல்லு ஊழல்களைச் சாடினார். சமுதாயச் சீர்கேடுகளை மிக வன்மையாகக் கண்டித்துப் புகழ் பெற்ற அந்த ஆசிரியர், நாடகமேதை இப்சன் எழுதிய

நாடகங்களின் புகழையும் மீறிக் கட்டுரைகள் மூலமாக எழுதிப் புகழ் பெற்றார்.

1903-ம் ஆண்டில் அவர் தனது வன்மையான கட்டுரை, கவிதை எழுத்துக்களால், நார்வே நாட்டு மக்கள் இடையே பெற்ற அரும் செல்வாக்குக்காக நோபல் பரிசு பெற்ற பத்திரிகையாளராக ஆனார். 26.4.1910ஆம் ஆண்டில் அந்த எழுத்துலக மேதை மரணமடைந்தார்.

அமெரிக்கா
'சிகாகோ சன்'

அமெரிக்க நாட்டிலுள்ள சிகாகோ என்ற நகரிலிருந்து எரிக் பியர்சன் என்பவர் 'சிகாகோ சன்' என்ற வாரப் பத்திரிகையைத் துவக்கினார்.

அந்தப் பத்திரிகை, அமெரிக்க அரசின் மீது மக்கள் சாட்டிய வதந்திகளை எதிர்த்து, 'புரட்சி' என்ற பெயரில் தொடர் கட்டுரைகளை 22.10.1906ம் ஆண்டு முதல் எழுதி வந்தார்.

எரிக்பியர்சன் கட்டுரைகள் சிகாகோ மக்களையே திணறடித்தது. மக்களிடையே பரவும் வதந்திகளைக் கண்டிக்கும் சீர்த்திருத்தவாதி என்ற பெயரை அவர் பெற்றார்.

நியூயார்க்
"டிராமடிக் மிரர்"

அமெரிக்காவிலே இருந்து நியூயார்க் 'டிராமடிக் மிரர்' என்ற ஏடு ஒருவரால் நடத்தப்பட்டது. அந்த வாரப் பத்திரிகைக்கு அதிக செல்வாக்கு ஏற்பட்டதால், மாட்ரீட் நகரத்தில் மட்டும் 17 ஆயிரம் பேர் சந்தாதாரர்களாக இருந்தார்கள். நோபல் பரிசு பெற்ற ஜோஸ் எச்சகார் அந்தப் பத்திரிகையில் தொடர் விமர்சனம் எழுதிப் புகழ் பெற்றார்.

'பிராவங்கல்
களஞ்சியம்'

பிரான்ஸ் நாட்டில் 1854ம் ஆண்டில் புகழ் பெற்ற கவிஞராக இருந்த பிரடெரிக் மிஸ்ட்ரால் என்பவர் 'பிராவங்கல்

களஞ்சியம்' என்ற ஆண்டுக்கு ஒரு முறை வெளி வரும் ஆண்டு இதழைத் துவக்கினார்.

அந்தக் காலத்திலேயே அந்தக் களஞ்சியம் என்ற ஆண்டு இதழ் 10 ஆயிரம் பிரதிகளுக்கு மேல் விற்று மக்களிடையே சாதனை புரிந்தது.

கவிதைத் துறை வளர்ச்சிக்காக தொண்டு செய்த ஓர் ஒப்பற்ற பத்திரிகை என்ற பெயரை நிலை நாட்டியதால், அது 1904-ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசைப் பெற்றது.

ஆண்டுக்கு ஒருமுறை வெளிவந்த வருடப் பத்திரிகையில் அதுதான் முதல் பத்திரிகை. 1904ம் ஆண்டுக்காக அந்த இதழாசிரியர் பிரடெரிக் மில்ட்ரால் நோபல் பரிசைப் பெற்றார்.

## இத்தாலி நாட்டின் முதல் சிறுவர் பத்திரிகை

இத்தாலி நாட்டுப் பெருங் கவிஞர்களுள் ஒருவராக வாழ்ந்த கியாசு கார்டுக்கி என்பவர், 'அப் பண்டிக்ஸ்', Appendix என்ற பத்திரிகையில் இலக்கியப் பகுதி ஆசிரியராகப் பொறுப்பேற்றுப் பணி புரிந்தார். அவர் 'ரைம்ஸ்' என்ற மிகப் பெரிய கவிதைத் தொகுப்பை அந்தப் பத்திரிகையில் எழுதினார்.

அந்தக் கவிதைகளை எல்லாம் தொகுத்து ஒரு கவிதைப் புத்தகமாக 1857ம் ஆண்டில் கார்டுக்கி வெளியிட்டார். அந்தக் கவிதைகளின் அருமைக்காக 1906ம் ஆண்டில் அவர் நோபல் பரிசு பெற்றார். உலகில் முதன் முதல் நோபல் பரிசு பெற்ற சிறுவர் பத்திரிகை இதுதான்!

## இந்தியாவில் பிறந்தவரால் இங்கிலாந்துக்குப் பெருமை

ஆங்கில இலக்கிய உலகில் அணையா விளக்காக ஒளிவிட்ட ருட்யார்டு கிப்ளிங், இந்தியாவில் இன்று மும்பை என்று அழைக்கப்படும் பம்பாய் மாநகரில் 30.12.1865ம் ஆண்டில் பிறந்தவர்.

உலகப் புகழ் பெற்ற அந்த சிறுவர் இலக்கிய சிறுகதை மேதை; இந்தியாவிலுள்ள லாகூர் நகரிலிருந்து வெளிவரும் 'சிறுவர் மிலிடரி கெசட்' என்ற பத்திரிகையில் தொடர் கதைப் பகுதி ஆசிரியராகச் சேர்ந்தார்.

இதற்குக் காரணம், ஆங்கிலேயர் ஆட்சியில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்து தங்கிவிட்ட ஓர் ஆங்கிலேயச் சிற்பியின் மகன் அவர் என்பதால், கிப்ளிங் 'சிவில் மிலிடரி கெசட்' பத்திரிகை ஆசிரியரானார். அவரது எழுத்துக்களைப் படித்த 19ம் நூற்றாண்டின் வாசகர்கள் இதோ ஒரு புதிய எழுத்தாளர் தோன்றியுள்ளார் என்று அவரை பாராட்டலானார்கள்.

இந்தியாவில் எழுதிப் பெயர் எடுப்பதைவிட, இங்கிலாந்தில் பெயரெடுத்தால், அது உலகப் புகழாக மாறும் என்று கருதிய கிப்ளிங்; 1889ம் ஆண்டில் இலண்டன் மாநகர் சென்றார்.

தனது கப்பல் பயணத்தைக் கிப்ளிங் கட்டுரைகளாக எழுதி, இந்தியாவிலே இருந்து வெளிவந்து கொண்டிருந்த 'பயணீர்' என்ற பத்திரிகையில் வெளியிடச் செய்தார்.

'இலண்டன் டைம்ஸ்' என்ற நாளேடு அவருடைய இந்திய நூற்களை எல்லாம் சிறப்பாக விமர்சனம் செய்து எழுதியதால், அவரது எழுத்துக்கள் உலகில் வானளாவும் புகழைப் பெற்றன.

கிப்ளிங், சிறுவர்களுக்கான சிறுகதைகளை 'இலண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் எழுதினார். அந்தக் கதைகள் Just so Stories என்ற தலைப்பில் நூலாக வெளியானாது. பிரிட்டனுடைய பழைய வரலாற்றுப் பெருமைகளைச் சிறுவர்கள் சிந்தனைக்காக Pack of Pook's Hill என்ற பெயரில் அவர் வெளியிட்டதும், மாணவ, மாணவிகள் இடையே அந்த நூல் பெரும் புகழ் பெற்றது.

அவர் எழுதிய கருத்துக்களை எல்லாம் - பத்திரிகை களிலும் நூல்களிலும் படித்த உலக எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும், ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ்,

எடின்பரோ, டர்ஹாம் பல்கலைக் கழகங்களும் பாராட்டுதல்களை வழங்கி, பல பட்டமளிப்புக்களை ஈந்தன. பாரீஸ், ஏதென்ஸ், டொராண்டோ போன்ற வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களும் கிப்ளிங் எழுத்துப் புரட்சியை வரவேற்றுப் பாராட்டிப் பட்டமளித்தன.

உலகப் புகழின் சிகரத்தின் மேல் வீற்றிருந்த ருட் யார்டு கிப்ளிங் என்ற பத்திரிகை எழுத்தாளருக்கு, சிறுவர் சிறுகதை ஆசிரியருக்கு 1907ம் ஆண்டில் நோபல் பரிசு கிடைத்தது.

பத்திரிகையாளர் உலகில் நீண்ட நெடுங்காலம் புகழுடன் வாழ்ந்த கிப்ளிங், 1936ம் ஆண்டில் மரணமடைந்தார்.

## ஸ்வீடிஷ் பெண்
## *பத்திரிகை எழுத்தாளர்*

செல்மா லாகர் லஃப் என்ற பெண் எழுத்தாளி ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஒரு பள்ளி ஆசிரியை. இவர் 1858ம் ஆண்டு வார்ம்லாந்து என்ற மாநிலத்தில் பிறந்த ஓர் இராணுவ அதிகாரியின் மகள்.

செல்மா பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே, ஸ்வீடன் நாட்டிலே இருந்து வெளிவந்த 'ஐ தூன்' என்ற பத்திரிகையில் ஓராண்டு விடுப்பு எடுத்துக் கொண்டு தொடர் கதைப் பகுதி ஆசிரியராக இருந்தார். கோஸ்ட்டா பெர்லிங் சாகா என்ற அந்த தொடர் கதை புத்தகமாக வெளி வந்தது. அதைப் படித்த டேனிஷ் பத்திரிகை ஒன்றின் விமர்சகராக இருந்த ஜார்ஜ் பிராண்டிஸ் என்பவர் காதல் இயக்கத்தின் அற்புதப் படைப்பு அதாவது Romantic Movement என்று பாராட்டி மதிப்புரை எழுதினார். அந்த முதல் நாவல் உலகப் புகழ் பெற்று விட்டது.

செல்மாவின் எண்ணற்ற அற்புதப் படைப்பு இலக்கியங்களுக்காக, 1909ம் ஆண்டில் அவர் நோபல் பரிசு பெற்றார்.

## பெல்ஜியம்
## *பத்திரிகையாளர் :*

பெல்ஜியம் என்ற நாட்டின் புகழ் பெற்ற இலக்கிய வித்தகராக விளங்கியவர் மாரிஸ் மேட்டர் லினிஸ் Maurice Maeter

Linis என்பவர். சிறந்த கவிஞராகவும், கட்டுரையாளராகவும், கதாசிரியராகவும் புகழ் பெற்றவர். இவர் 1862ம் ஆண்டில் பிறந்தவர்.

ஆக்டேவ் மிர்பியூ என்ற பத்திரிகையில் மேட்டர் லிங்க் எழுதிய பிரின்சஸ் மாலினி என்ற கதையைப் பாராட்டி, இதோ ஒரு பெல்ஜியம் சேக்ஸ்பியர் என்று மற்ற பருவ இதழ்கள் எழுதியதால், மேட்டர் லிங்க் புகழ் உலகெலாம் பரவியது. அந்த பத்திரிகையில் வெளி வந்த அவரது நாடகம், மக்கள் செல்வாக்கைப் பெற்றதால் பத்திரிகையின் விற்பனை அதிகமானது. அவர் எழுத்து மீது வேட்கை கொண்ட அந்த பத்திரிகை அவரை நாடகப் பகுதியின் விமர்சன ஆசிரியராக நியமித்துக் கொண்டது.

மேட்டர் லிங்க் நாடகங்கள் எல்லாம் மனித நேயத்தின் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் கண்ட நோபல் பரிசு நிறுவனம்; அவருக்கு 1911ம் ஆண்டில் பரிசை வழங்கிப் பாராட்டியது.

## தாகூர் 'கீதாஞ்சலி'யை இலண்டன் வெளியிட்டது

கவிஞர் இரவீந்திர நாத் தாகூர் 1912ம் ஆண்டில் இலண்டன் மாநகரம் சென்று, புகழ் பெற்ற நாடக ஆசிரியர் வில்லியம் பட்லர் ஈட்சையும், பெருங்கவிஞர் எஸ்ரா பவுண்டையும் சந்தித்தார்.

'கீதாஞ்சலி' என்ற பெயரில் தான் எழுதிய கவிதைகளை தாகூர் லண்டன் கவிஞர்களுக்குப் படித்துக் காட்டினார். தாகூரின் கற்பனைகளையும், கவிதைப் புலமைத் திறனையும் கண்ட அக்கவிஞர்கள், தாகூரிடம் இருந்த 'கீதாஞ்சலி' என்ற கவிதை நூலைப் பெற்று லண்டனில் ஹாரியத் மன்றோ என்ற பத்திரிகையாளர் நடத்தி வந்த 'கவிதை' என்ற பத்திரிகைக்கு அனுப்பி வெளியிட வைத்தார்கள்.

'கீதாஞ்சலி' கவிதையை, 'கவிதை' Poetry என்ற பத்திரிகையில் வெளியானதைக் கண்ட இங்கிலாந்தில் புகழ்

பெற்றுக் கவிஞர்கள், கல்விமான்கள் அனைவரும் அவரைப் பாராட்டிப் போற்றினார்கள். தாகூரின் புகழ் உலகெலாம் பரவியதால் அவர் உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராக மதிக்கப்பட்டார்.

'கீதாஞ்சலி'யின் கவிதைப் புலமை எங்களைப் பெரிதும் ஈர்த்து விட்டது என்று கூறி, நோபல் நிறுவனம் 1913ம் ஆண்டில் தாகூருக்கு நோபல் பரிசை வழங்கிப் பாராட்டியது.

இலண்டனிலுள்ள 'கவிதை' என்ற பத்திரிகை தாகூர் கவிதையை வெளியிட்டுப் பெருமைப்படுத்தியதால், பத்திரிகைத் தொண்டு ஒருவரை எந்த அளவு வானுயரத்திற்கு உயர்த்தி விட்டது பார்த்தீர்களா? இதுதான் பத்திரிகையின் அறிவறம் - இல்லையா?

### 'டைம்ஸ் பத்திரிகையாளர் அனதோல் ஃபிரான்ஸ்:

பிரெஞ்சு நாட்டின் புகழ் வாய்ந்த எழுத்தாளர்களில் ஒருவரான அனதோல் ஃபிரான்ஸ் ஒரு புத்தக வியாபாரியின் மகன். அவர் The Times என்ற செய்தித்தாளில் 1886ம் ஆண்டு முதல் 1893ம் ஆண்டுவரை இலக்கிய விமர்சகராகப் பணியாற்றியவர்.

ஃபிரான்ஸ்; 1881ம் ஆண்டில் 'லா கிரைம் டி இல்வஸ்டர் போனார்டு' (The crime of Sylvester Bonnard) என்ற நாவலை எழுதினார். அந்த நாவல் 'டைம்ஸ்' பத்திரிகையில் வெளிவந்த போது, பிரெஞ்சு மக்கள் அவரை பலப்பட பாராட்டினார்கள். அதனால் பத்திரிகை பரப்பரப்பாக விற்பனையானது.

அனதோல் ஃபிரான்ஸ் எண்ணற்ற நாடகங்கள், கவிதைகள், கதைகள், கட்டுரைகள் எழுதியிருந்தாலும், அவற்றுள் 1900ம் ஆண்டில் எழுதப்பட்ட "Monsieur Bergert of Paris' என்ற வரலாற்று நாவல் உலகப் புகழ் பெற்றதாகும்.

ஒரு யூத இன தளபதியான ஆல்பிரட் டிரைபஸ் மீது தொடரப்பட்ட பொய் வழக்கைக் கருவாக வைத்து, ஒரு

வரலாற்று நூலை ஃபிரான்ஸ் எழுதினார். அந்த பொய் வழக்கை உடைத்தெறிந்து யூத தளபதி நிரபராதி என்று வாதாடும் வரலாற்று அடிப்படை நூல் அது. மக்கள் இடையே அந்த நாவல் மிகவும் பரப்பரப்பாக விற்பனையானதால், பத்திரிகையும் செல்வாக்கு பெற்றுவிட்டது.

'எமிலிஜோலா' என்ற எழுத்துலக அரிமா, 'நான் குற்றம் சாட்டுகிறேன்' என்ற தலைப்பில் ஒரு மனுவை தயாரித்து, அந்தப் பொய் வழக்கிற்காக நீதிமன்றத்தில் வழக்காடிய வரலாறும் உள்ளது.

உலகப் புகழ் பெற்ற இத்தகைய ஒரு பொய் வழக்கை உடைத்தெறிந்த வரலாற்று நாவலை எழுதிய ஜாக்குவஸ் அனதோல் ஃபிரான்சிஸ் தைபால்ட்டுக்கு 1921ம் ஆண்டின் நோபல் பரிசு கிடைத்தது.

## அயர்லாந்து பத்திரிகையாளர் ஜார்ஜ் பெர்னாட்ஷா!

உலகப் புகழ் பெற்ற நகைச்சுவை நாடக ஆசிரியரான ஜார்ஜ் பெர்னாட்ஷா, 26.07.1856-ஆம் ஆண்டு அயர்லாந்தின் தலைநகர் டப்ளின் என்ற ஊரில் பிறந்தார்.

தனது 27வது வயதில் அவருக்கு இலக்கியத் துறையிலும், எழுத்துத் துறையிலும் இருந்த ஆர்வத்தால் 5 நாவல்களை எழுதி முடித்தாரே ஒழிய, ஒன்றுகூட புத்தகமாக வெளிவர முடியவில்லை. ஆனாலும், 'ஷா' தொடர்ந்து எழுதுவதிலேயே அக்கறை காட்டினார். 'தி பால்மால் கெசட்' "The Pall mall Gazette" என்ற பத்திரிகைக்கு அவர் தொடர் கட்டுரைகள் எழுதி வந்தார்.

கி.பி. 1885 முதல் 1888 வரை 'தி வோர்ல்டு' "The World" என்று அயர்லாந்தில் புகழ்பெற்றிருந்த பத்திரிகையில் ஷா எழுதினார். இசை, நாடகம் ஆகியவற்றை விமர்சனம் செய்யும் பகுதியில் பணியாற்றிட 'தி ஸ்டார்' "The Star" என்ற பருவ இதழின் ஆசிரியர் வேண்டுகோளை ஏற்று விமர்சக ஆசிரியராக எழுதி வந்தார்.

'தி சாட்டர் டே ரெவ்யூ' "Saturday Review" என்ற பத்திரிகையில் 'ஷா' மூன்றாண்டு காலம் நாடக விமர்சனக் கட்டுரைகளை எழுதினார். அந்த இடை நேரத்தில் தான் உலகப் புகழ்பெற்ற நாடக ஆசிரியரான இப்சனுடைய நாடகக் கோட்பாட்டை ஏற்று The Quintesence of Ibsenism என்ற நூலை எழுதியதால், அந்த புத்தகத்தைப் படித்து அறிஞருலகமே வியந்தது.

தமிழ் நாட்டு தேசிய கவிஞரான பாரதியார், பாஞ்சாலி சபதம் என்ற நூலை ஒரு புதிய நோக்கில் எழுதியதைப் போல 'ஷா'வும் சேக்ஷ்பியரின் 'ஜூலியஸ் சீசர், ஆண்டனியும் கிளியோபாத்ராவும்' என்ற நாடகங்களை, மாறுபட்ட கோணத்தில் படைத்திருப்பதைக் கண்டு இங்கிலாந்துக் கல்விமான்கள், ஏழ்மை நேய ஏற்றத் தாழ்வுகளை அவர் தனது நாடக உறுப்பினர்கள் மூலம் முற்போக்குச் சிந்தனைகளிலே பேச வைத்துள்ளதைப் படித்து, சேக்ஷ்பியரின் சிந்தனையைவிட, 'ஷா' வின் சுவை மாறுப்பட்டிருப்பதைக் கண்டு உலகமே திகைத்து வியந்தது.

கி.மு. 48-ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாக எழுதப்பட்ட நாடகப் போக்கை, உணர்வை; கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் வாழும் மக்கள் வாழ்க்கையோடு பாத்திரப் படைப்புகளை ஒப்புநோக்கி சித்தரித்தார் ஷா.

'மை ஃபேர் லேடி' என்ற ஷாவின் நாடகம் அமெரிக்காவில் 2281 தடவையும், இலண்டனில் 2281 முறையும் நாடகமாக மேடையேறி நடந்த சம்பவம் - ஷாவுக்கு உலக நாடக அரங்கில் அழியாப் புகழை நிலை நாட்டியது.

சுருங்கக் கூறுவதானால், நான்கு பத்திரிகைகளில் பணியாற்றிய ஷாவின் திறமை, கால சூழ்நிலை, சிந்தனை மறுமலர்ச்சிகளால் அவர் வரைந்த நாடகங்கள் எல்லாமே உலகுக்கு நகைச்சுவை நயம் வழங்கியதோடு நில்லாமல், பெரும் நாடக வித்தகர் என்ற பெயரையும் அவருக்குத் தேடித் தந்தன எனலாம்.

பத்திரிகைப் பணிகளின் ஈடுபாட்டால், ஷா தனது நாடக ஓவியங்களை எல்லாம் மேதை சேக்ஸ்பியரைப் போல கவிதை

வடிவிலே எழுத முடியாமல் உரைநடை வாயிலாகவே எழுதினார்.

ஜார்ஜ் பெர்னாட்ஷா தனது அரிய இலக்கிய சேவைகளுக்காக 1925ம் ஆண்டில் நோபல் பரிசு பெற்ற நாடக மேதையாக மக்கள் நெஞ்சில் நடமாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமையனும் - தம்பியும்; ஜெர்மன் பத்திரிகையாளர்கள்!

ஜெர்மன் இலக்கிய சிற்பிகள் தாமஸ் மாண் "Thomas Mann, அவரது உடன் பிறந்த சகோதரரான் ஹென்றி மான் என்ற இருவரும் பத்திரிகைத் துறையிலே முறையாகப் பயிற்சி பெற்ற மேதைகளாவர்..

பத்திரிகைத் துறையில் தமையன் பெற்ற பெரும் புகழைத் தானும் பெற விரும்பிய தாமஸ் மாண் ‘சிம்ப்ளி சிசிம்ஸ்’ என்ற நகைச்சுவை வாரப் பத்திரிகையைத் துவக்கினார். அந்த ஏட்டில் அவர் சிறுகதைகளை எழுதி புகழ் பெற்றார். அதே நேரத்தில் இட்லர், முசோலினி போன்ற பாசிஸ்ட்டுகள் ஊழலை மிக வன்மையாகத் தனது பத்திரிகையில் கண்டித்து எழுதினார்.

1901-ஆம் ஆண்டில் தனது இதழில் தொடர்கதையாக எழுதி வந்த நாவலை நூலாக்கி, அதற்கு பட்டன்புருக்ஸ் என்று பெயரிட்டார். இந்த நூலை எழுதியதால் அவரை ஜெர்மானிய இலக்கிய உலகின் விடிவெள்ளி என்று உலக அறிஞர்கள் பாராட்டினார்கள். 1929-ஆம் ஆண்டு தாமஸ் மாண் நோபல் பரிசைப் பெற்றார்.

## அமெரிக்க பத்திரிகையின் துணை ஆசிரியர் சிங்க்ளேர்

அமெரிக்காவிலே உள்ள மினிசோடா மாநிலத்தில் சாக் மையத்தில் 7.2.1885-ஆம் ஆண்டில் பிறந்தவர் சிங்க்ளேர் லெவிஸ். Sinclair Lweis. அவர் டென்னிசன், ஸ்வின்பர்ன் போன்றோர் கவிதைகளைப் பின்பற்றி எழுதுவதிலே வல்லவராக விளங்கினார்.

பள்ளியிலும், கல்லூரியிலும் சிங்க்ளேர் படித்தபோது பத்திரிகைகளுக்கு கவிதைகளை கட்டுரைகளை எழுதி அனுப்புவார். அவை தொடர்ந்து வெளிவந்து அவரை உற்சாகப்படுத்தின.

'ட்ரான்ஸ் அட்லாண்டிக் டேல்ஸ்', "Trabs Atlantic Tales" என்ற பத்திரிகையில் சிங்க்ளேர் துணையாசிரியராகப் பணியாற்றினார். அந்த இதழில் அவர் எழுதிய 'நமது திருவாளர் ரென்' (Our Mr. Wrenn) என்ற தொடர் புத்தகமாக வெளி வந்து புகழ் பெற்றது.

அமெரிக்க இலக்கிய விமர்சகர்களும், குறிப்பாக பழங்கால இலக்கிய எழுத்தாளர்களான ஜேன் ஆஸ்டின், ஜார்ஜ் எலியட் ஆகியவர்களது திறமைகளை சிங்க்ளேர் வென்று விட்டார் என்று மக்கள் பாராட்டினார்கள். அமெரிக்க இலக்கிய வித்தகரான பெர்லி மில்லர், சிங்க்ளேர் இலக்கியத் திறமைகளை வெகுவாகப் பாராட்டி மகிழ்ந்தார்.

பொது வாழ்க்கையில் புகுந்து கொண்டு மக்களைப் பண மோசடி செய்கின்ற ஊழல்வாதிகளையும், பதவி வெறியர் களையும் சிங்க்ளேர் கடுமையாகக் கண்டித்த அவரது எழுத்துப் பாணி எப்படி இருந்தது தெரியுமா?

சிங்க்ளேர் பேனா மனதிலே குத்தும் கருவேலம் முள்ளைப் போல - கடுகடுப்பான எரிச்சலையும், துள்ளி வரும் வேலாகவும், வீச்சரிவாளின் வேகத்தால் ரத்தம் கொட்டும் அழிவாகவும், அரசியலிலும், சமுதாயச் சீர்கேடுகளிலும் புகுந்து ஊழல்வாதிகளை அச்சுறுத்தியது எனலாம்.

சிங்க்ளேர் லெவிசின் இத்தகைய அற்புத எழுத்துத் திறமைகளால் அரசியலும், சமுதாயமும் சீரடைந்து வந்ததைக் கண்ட நோபல் நிறுவனம், அவரது சீர்திருத்தச் சேவைக்காகவும், இலக்கியத் திறன்களுக்காகவும், 1930-ஆம் ஆண்டில் நோபல் பரிசை வழங்கிப் பாராட்டியது.

## ருஷ்ய பத்திரிகையாளர் இவான் பூனின்:

இவான்பூனின் என்ற ருஷ்ய எழுத்தாளர் 22.10.1870-ஆம் ஆண்டில் மத்திய ருஷ்யாவின் ஆரல் மாநிலத்தில்

தோன்றினார். புஷ்கின், கோகால், லெர்மண்டோவ் போன்ற ரஷ்ய மேதைகளின் படைப்பு இலக்கியங்களைப் படித்த பூனின்; அவர்களைப் போலவே தானும் ஓர் இலக்கிய வாதியாகத் திகழ வேண்டும் என்று விரும்பினார்.

கலை உள்ளத்தோடும், முன்னேற்றச் சிந்தனையோடும் மக்கள் வாழ வேண்டும் என்ற வேட்கைகளின் உந்துதலோடும் கவிதைகளை, கட்டுரைகளை பூனின் எழுதிப் புகழடைந்து வந்தார்.

பல பத்திரிகைகளில் பூனின் எழுத்துக்கள் வெளி வந்து புகழடைந்ததைக் கண்ட 'ஹாரல் ஹெரால்டு', "Haral Herald" என்ற பத்திரிகை நிறுவனத்தார் அவரைத் துணை ஆசிரியராக நியமித்துக் கொண்டார்கள்.

சில மாதங்கள் சென்ற பின்பு அதே நிறுவனத்தில் பணியாற்றிய பெண்ணோடு அவர் காதலாடினார்! அதனால் வேலையை விட்டே ஓடினார். அந்த விரக்தி மேலீட்டால் கவிதை இலக்கியப் படைப்புகளில் தனது மனத்தைத் தீவிரமாக ஈடுபடுத்தி ரஷ்ய இலக்கிய வித்தகர்களைத் திணறடித்தார்.

கவிதை புனைவதோடு நில்லாமல், புகழ்பெற்ற எழுத்தாளர்களான ஆண்டன் செக்காவுடனும், லியோ டால்ஸ்டாயுடனும் அவர் நெருங்கிப் பழகியதால், பூனின் சிறுகதைகளை, நாவல்களை எழுதிப் புகழடைந்தார். அதனால், மேற்கண்ட இரு எழுத்துலக வேந்தர்களிடம் பூனினுக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் வளர்ந்தது.

1897-ஆம் ஆண்டில் வெளிவந்த பூனின் 'உலக விளிம்பில்' என்ற சிறுகதை தொகுப்பும், 1898ல் வெளிவந்த 'விரிந்த வானத்திற்கு அடியில்' (Under the Open Sky) என்ற கவிதைத் தொகுப்பும், ஆண்டொனாவ் ஆப்பிள்கள், சாசினி என்ற இலக்கியப் படைப்பு நூற்களும் இவான் பூனினை உலக இலக்கிய மேதைகளுள் ஒருவராக நிறுத்தியதால் நோபல் நிறுவனம் அவருக்கு 1933-ஆம் ஆண்டில் பரிசை வழங்கி கௌரவித்தது.

## சீன பெண் பத்திரிகையாளர் பெரல் எஸ். பக்!

அமெரிக்கா மண்ணில் பிறந்த பெரல் எஸ். பக் என்ற உலகப் புகழ் பெற்ற பெண் எழுத்தாளி, சீன நாட்டில் உள்ள நான்கிங் நகர் கல்லூரியில் பேராசிரியையாய் பணியாற்றினார்.

அப்போது விவசாயத் துறை பேராசிரியராய் இருந்த ஜான் லாசிங் பக் என்பவரைத் திருமணம் செய்து கொண்டு பெற்றோரிட்ட பெயரான பெரல் சைடன்ஸ்ட்ரிக்கர் என்ற தனது பெயருடன் கணவர் பெயரான 'பக்' என்ற சொல்லையும் இணைத்துக் கொண்டு இறுதி வரை பெரல் எஸ்.பக் எனும் பெயருடனேயே உலகம் போற்ற வாழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

பெரல் எஸ். பக், சீனாவிலே உள்ள 'ஷாங்காய் மெர்குரி' என்ற இங்லீஷ் செய்திப் பத்திரிகையில் தொடர் கட்டுரை எழுதும் பத்திரிகையாளராகப் பணி புரிந்தார். தனது தாயாரின் சீன வாழ்க்கையைச் சுவைப்பட அதில் எழுதியதால் சீனர்கள் இடையே அவரது பெயர் புகழ் பெற்று விட்டது.

'அட்லாண்டிக் மன்த்லி' என்ற மாதப் பத்திரிகையில் கதைகள், நாவல்கள் எழுதியதாலும், அத்துடன் சில அமெரிக்கப் பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வந்ததாலும், பர்க் எழுத்துக்கள் உலகெங்கும் அவரது புகழைப் பரப்பியது.

அவருடைய கப்பல் பயணங்களை ஒரு நாவலாக எழுதி அதற்கு 'ஈஸ்டு விண்டு', East Wind 'வெஸ்ட் விண்டு', West Wind, என்று பர்க் பெயரிட்டார். 1931ல் 'நல்ல பூமி', Good Earth என்ற நாவலை எழுதினார். அதற்கு அமெரிக்க புலிட்சர் பரிசு கிடைத்தது. இந்த நூல் உலகெங்கும் நல்ல விற்பனையை வழங்கியது.

1938-ஆம் ஆண்டில் நோபல் பரிசு நிறுவனம் பர்க் எழுதிய 80 இலக்கியப் படைப்புகளையும் பாராட்டி பரிசு கொடுத்தது. பெரல் எஸ். பர்க் என்ற அமெரிக்கப் பெண்தான் முதன் முதலாக நோபல் பரிசு பெற்ற முதல் பெண் பரிசாளி

என்ற பெருமையையும் பெற்றார். தொடர்ந்து அவர் அமெரிக்க, சீன பத்திரிகைகளுக்குக் கதை, கட்டுரை, பயண நூல்களை எழுதி வந்தார்.

## டென்மார்க் நிருபர் ஜோஹனஸ் ஜென்சன்

டென்மார்க் நாட்டில் புகழ் பெற்ற விஞ்ஞானியின் மகனான ஜோஹனஸ் ஜென்சன் 20.1.1873-ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டிலுள்ள வடக்கு ஜத்லாந்தைச் சேர்ந்த ஹிம்மர்லாந்து என்ற நகரில் பிறந்து, 1893ல் கோபன்ஹேகன் பல்கலைக் கழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்றார்.

சிறுவயதிலேயே அவர், எமிலிஜோலா, சேக்ஸ்பியர், நட்ஹாம்சன், ருட் யார்டு கிப்லிங் நூல்களைப் படித்துத் தனது அறிவை வளமாக்கிக் கொண்டார்.

'பொலிட்டிகன்' Politiken என்ற டேனிஷ் செய்தித் தாளில் ஜென்சன் நிருபராகச் சேர்ந்து, ஸ்பானிஷ் அமெரிக்கா போர்ச் செய்திகளைத் திரட்டிப் பத்திரிகைக்கு அனுப்பி வந்தார்.

'மன்னரின் வீழ்ச்சி' என்ற பெயரில் ஜென்சன் எழுதிய இரண்டாம் கிறிஸ்டியன் என்ற டேனிஷ் மன்னனின் வரலாற்றை மிக அற்புதமாக எழுதினார. அந்த நூல் உலக இலக்கியவாதிகளின் பாராட்டுதல்களைப் பெற்றது.

1912-ஆம் ஆண்டில் ஜென்சன் மீண்டும் ஒரு உலகச் சுற்றுப் பயணம் செய்ததை, Introduction to our Epoch என்ற பெயரில் ஒரு பயண நூலாக வெளியிட்டார். இந்த வகைப் பயண நூற்கள் அவரால் ஆறு தொகுதிகள் வெளி வந்தன. இந்த நூற்களில் அவரது புதிய சிந்தனைகளின் முத்திரைகள் உலகப் புகழைப் பெற்றன.

சுருங்கக் கூறுவதனால், ஒரு பத்திரிகை நிருபராகப் பணியாற்றிய அவரது புதிய சிந்தனை முயற்சிகள், உலகத்தில் ஜென்சன் ஒப்பற்ற ஓர் இலக்கியத் திறனாளர் என்பதை நிரூபித்ததற்காக 1944-ஆம் ஆண்டில் நோபல் பரிசு நிறுவனம்

அவரைப் பாராட்டிப் பெருமையோடு நோபல் பரிசினை வழங்கியது.

## ஜெர்மன் பத்திரிகை ஆசிரியர் ஹெஸ்ஸி

ஜெர்மனியில் உள்ள ஊர்ட்டன் பர்க் மாநிலத்தின் கறுப்புப் பட்டணம் என்ற நகரில் 2.7.1877-ஆம் ஆண்டு பிறந்தவர் ஹெர்மான் ஹெஸ்ஸி Hermann Hesse என்பவர்.

ஹெஸ்ஸி தந்தை மதகுரு. தனது தந்தையைப் பின்பற்ற விரும்பாத அவர், புத்தகக் கடையிலும், கடிகாரம் பழுது பார்க்கும் கடையிலும் பணியாற்றினார். புத்தகக் கடை விற்பனையாளராக ஹெஸ்ஸி இருந்தபோது, ஜெர்மானிய பேரறிஞர் கொதே நூல்களைப் படித்த பின்பு, அவருக்கும் எழுத்தாளராக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

'மார்ஸ்', Marss என்ற பத்திரிகையில் ஹெஸ்ஸி இணையாசிரியராகச் சேர்ந்து, கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதி வந்தார். அவரது எழுத்துக்கள் கல்வியாளர்களையும், பாமரர்களையும் ஈர்த்தன. அந்தப் பத்திரிகையில் அவர் தொடர்ந்து எழுதி வந்த 'ஜெர்ட்ரூட்' என்ற நாவல் புத்தகமானது. அதனால் அவர் உலகப் புகழ் பெற்ற பத்திரிகை எழுத்தாளரானார்.

இந்தியாவுக்கு 1911-ஆம் ஆண்டு ஹெஸ்சி வந்தார். இந்தியப் பத்திரிகைகளில் Out of India என்ற பெயரில் கதை, கட்டுரைகள், கவிதைகள் எழுதியதால் இந்திய மக்கள் இடையேயும் அவரது செல்வாக்குப் பரவியது.

ஹெர்மான் ஹெஸ்ஸி தனது வாழ்நாள் முழுவதும் இலக்கியப் படைப்பாளியாகவே ஜெர்மானியில் வாழ்ந்தார். அப்போது கொதே பரிசு, கார்ட்ரைட் கெல்லர் பரிசு, பெர்லின் பல்கலைக் கழகச் சிறப்பு டாக்டர் விருது அத்தனையும் பெற்ற ஹெஸ்ஸி, 1946-ஆம் ஆண்டில் நோபல் பரிசையும் பெற்றார். இவரது இலக்கியங்கள் எல்லாம் உலக முக்கிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டதால், ஹெஸ்சிக்கு உலகம் முழுவதும் வாசகர்கள் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பிரெஞ்சு மேயர் பத்திரிகையாளர்

பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரில் 22.11.1896-ஆம் ஆண்டு பிறந்த ஆண்ட்ரி கைட், Andre Gide, கிரேக்க எழுத்தாளர்கள் படைப்புகளிலே ஒப்புயர்வற்றவராக விளங்கினார்.

ஆண்ட்ரிகைடு மார்ஷ் லேண்ட் என்ற பெயரில் விலங்குகள் தத்துவத்தை ஆராய்ச்சி செய்து எழுதிய நூலில், மனித வாழ்க்கைக்கும் அதைப் பொருந்துமாறு எழுதினார். இவர் 1896-ஆம் ஆண்டில் ரோக்யூ Roque என்ற நகரின் மேயராக இருந்தார். 'உலகத்தின் பழங்கள்' Fruits of the Earth என்ற புத்தகத்தை 1897-ஆம் ஆண்டில் எழுதி உலகப் புகழைப் பெற்றார்.

கைடின் எழுத்துக்கள், உலகப் புகழ் பெற்ற தத்துவ ஞானிகளான ஆல்பர்ட் காமு, Albert Camus ஜீன் பால் சார்த்ரே Jean Paul Sartre போன்ற படைப்பாளிகளை எல்லாம் ஈர்த்தன என்றால், அது மிகை யன்று. Strait is the Gate என்ற அவரது ஆங்கில நூல், 'லா போர்ட்டே எப்ராய்ட்' என்ற ஜெர்மன் மொழி நூலானது.

அவரது இந்த ஆங்கில மொழி பெயர்ப்பு நூல், கைட்டுக்கு உலகப் புகழைப் பெற்றளித்தது. அதனால் அந்த பெருமகனுக்கு நோபல் பரிசு நிறுவனம் 1947ம் ஆண்டில் நோபல் பரிசை அளித்துப் பாராட்டியது.

நோபல் பரிசைப் பெற்ற அந்த படைப்பிலக்கிய மேதை, அதற்குப் பிறகும் எழுத்துப் பணியில் சற்றும் ஓயாமல், 1950ம் ஆண்டில் 'ஜோமல்' 'Joumal' எனும் பெயரில் பத்திரிகையைத் துவக்கினார். அதில் தனது 1889 முதல் 1949ம் ஆண்டு வரையுள்ள தனது வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுதி அரியதோர் வாழ்வியல் அனுபவங்களைப் புத்தகமாக்கினார். இதைப் ப்டித்த இலண்டன் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகம் கைட்டுக்கு சிறப்பு டாக்டர் பட்டம் விருதை வழங்கிப் பாராட்டியது.

பத்திரிகையாளர்
வின்ஸ்டன் சர்ச்சில்

"The Never Sun set in the British Empire' என்று பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் முழக்கமிட்டு கிரேட் பிரிட்டன் ராஜ தந்திரிகளுள் ஒருவராகத் திகழ்ந்தவர் வின்ஸ்டன் சர்ச்சில் Winston Churchil என்பவர்.

இவர், கிரேட் பிரிட்டன் சாம்ராச்சியத்திற்கு 1940 முதல் 1945 வரையிலும் 1951 முதல் 1955ம் ஆண்டுகள் வரையிலும் இரண்டு முறை பிரதமராக இருந்தவர். செயற்கரிய செயல்களைச் செய்த சிந்தனையாளராகவும், சாதனையாள ராகவும் திகழ்ந்த அரசியல், இலக்கிய வித்தகரும் ஆவார்.

சர்ச்சில் 1896-ஆம் ஆண்டு முதல் 1897 வரை இந்தியாவின் வடமேற்கு எல்லைப் பகுதியில் போர்க்களச் செய்திகளைத் திரட்டி அரசுக்கும், பத்திரிகைகளுக்கும் அனுப்பும் நிருபராக பணியாற்றினார். அதனால் அவரை உலகப் பத்திரிகை மன்றம் சிறந்த பத்திரிகையாளர் என்று பாராட்டி விருதும் வழங்கியது.

சர்ச்சிலின் எழுத்துத் திறனைக் கண்ட 'மார்னிங் போஸ்ட்' Morning Post எனும் பத்திரிகை, போர்க் கால நேரடி அனுபவங்களைக் கட்டுரை வடிவில் எழுதுமாறு நியமித்தது. ஏற்ற பணிக்கேற்ப, ஒவ்வொரு கட்டுரையிலும், தனது அறிவு முத்திரையைப் பதித்தவர் சர்ச்சில்.

மறுபடியும் 'இலண்டன் மார்னிங் போஸ்ட்' என்ற பத்திரிகையில் 'போயர் போர்' வரலாற்றை தொடர்ந்து எழுதினார். செய்திகளை அவர் திரட்டும்போது போர்க் களத்தில் கைது செய்யப்பட்டு சிறை தண்டனைப் பெற்றார்.

சிறையிலே இருந்து சர்ச்சில் தனது தைரியத்தின் தந்திரங்களால் தப்பித்தார். 1900-ஆம் ஆண்டில் அவர் இலண்டன் திரும்பி வந்தபோது பிரிட்டிஷ் அரசு அவரை அரசு மரியாதையுடன் பாராட்டி வரவேற்றது.

இந்தச் சூழ்நிலையில் சர்ச்சில் இலண்டன் நாடாளுமன்றத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி சார்பாகப் போட்டியிட்டு வெற்றி

வாகைச் சூடினார். லாயிட் ஜார்ஜ் அமைச்சரவையில் போர்த் தளவாட அமைச்சரானார்.

சர்ச்சில், தனது வாணாளில் பல பதவிகளைப் பெற்றிருந்தாலும், எழுத்துத் துறையை மட்டும் அவர் எப்பொழுதும் கைவிடாமலேயே இருந்தார்.

1948 முதல் 1953-ஆம் ஆண்டு வரை நடைபெற்ற இரண்டாவது உலகப் போர் பற்றிய செய்திகளை அவர் ஆறு தொகுதிகளாக வெளியிட்டார். அந்தப் புத்தகங்கள் உலகப் புகழைப் பெற்றன. சர்ச்சில் சிறந்த இலக்கிய வித்தகராக உலகக் கல்விமான்களால் போற்றப்பட்டார்.

சர்ச்சில் நூல்களைப் பாராட்டிய நோபல் நிறுவனம், 1953 -ஆம் ஆண்டில் வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு இலக்கியவாதி பிரிவின் விருதினை நோபல் பரிசாகத் தந்து பெருமைப்படுத்தியது.

போர்க் கால நிருபர் துறையிலே தனது எழுத்துப் பணியைத் துவங்கிய வின்ஸ்டன் சர்ச்சில்; உலகம் போற்றும் ராஜ தந்திரிகளுள் ஒருவராக, சிறந்த பத்திரிகை நிருபராக மதிக்கப்படு மளவுக்கு உயர்ந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

### அமெரிக்கப் போர் நிருபர்
### எர்னஸ்ட் ஹெமிங்வே

அமெரிக்க நாவல் துறையில் புகழ் பெற்றவர் எர்னஸ்ட் ஹெமிங்வே என்ற போர்க்களச் செய்தி நிருபர். அவர் அமெரிக்காவில் கில்லினாய்ஸ் என்ற மாநிலத்தில் ஓக்பார்க் என்ற நகரில், 2.7.1899-ஆம் ஆண்டில் பிறந்தார்.

எர்னஸ்ட் ஹெமிங்வே ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து, அனுபவம் வாய்ந்தவராக இருந்தவராதலால் ‘டோரண்டோ ஸ்டார்’ 'Toranto Star' என்ற பத்திரிகை நிறுவனத்தில் போர்க் கள நிருபராகச் சேர்ந்து பணி புரிந்தார். அருமையான கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதினார்.

போர்க் கால நிருபராக ஹெமிங்வே பணியாற்றியதால், 1926-ஆம் ஆண்டில் அவர் ‘சூரியன் கூட உதிக்கின்றான்’ - The Fifth Column, என்ற நாவலை, தான் பார்த்த போர்ச்

சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டு அந்த நாவலை எழுதினார். அதனால், அதை, உலகம் வியந்து பாராட்டி மதித்தது. இதே அடிப் படையில் ஹெமிங்வே பல நாவல்களை எழுதினார்.

போர்க் காலத்தில் நடைபெறும் ஒற்றாடல்களை அடிப் படையாக வைத்து அவர் ஸ்பெயின் நாட்டிலிருந்தபோது "The fifth colum' வேவுத் தொழில் என்ற பெயரில் ஒரு நாடகத்தை எழுதினார்.

அந்த நாடகத்தில் உள்நாட்டுப் போரின் காதல் நிகழ்ச்சி களையும், வன்முறைச் சம்பவங்களையும், புகுத்தி எழுதி யிருப்பதைப் பார்த்த உலக இலக்கியவாதிகள் அவரைப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

வெற்றிகரமான பல போர்க் கள நிகழ்ச்சிகளை இலக்கியமாக்கிய எர்னஸ்ட் ஹெமிங்வேயைப் பாராட்டி நோபல் நிறுவனம் நோபல் பரிசை வழங்கியது.

*அல்ஜீரியா*
*பத்திரிகையாளர்*

ஆல்பர்ட் காமு என்ற பத்திரிகையாளர் 7.11.93-ஆம் ஆண்டில் அல்ஜீரியா நாட்டில் பிறந்தார். அல்ஜியர்ஸ் பள்ளிகளில் கல்வியை முடித்த காமு, அந்நாட்டுப் பல்கலைக் கழகத்தில் தத்துவத் துறை பட்டம் பெற்றார்.

ஆல்பர்ட் காமு, 1937-ஆம் ஆண்டில் 'இடையிடையே' (Between and Between) என்ற கட்டுரை நூலை எழுதினார். அதற்குப் பின் 'மகிழ்ச்சியான மரணம்' 'A Happy Death' என்ற நாவலை எழுதினார். இந்த இரு நூல்களும் காமுவுக்கு அல்ஜீரியா முழுவதும் நற்பெயரைப் பெற்றுத் தந்தது.

அல்ஜீர் ரிபப்ளிக்கன்' 'Alger Republican' என்ற செய்தித் தாளில் காமு ஆசிரியர் பணியை ஏற்றார். இதற்குள் இரண்டாம் உலகப் போர் துவங்கவே, காமு, 1938-ஆம் ஆண்டில் ஃபிரான்ஸ் நாட்டிற்குச் சென்று நிரந்தரமாகத் தங்கி விட்டார்.

அங்கு போர் எதிர்ப்பு இயக்கத்தில் சேர்ந்து கொண்டு, 'காம்பட்' 'Combat' என்ற வேவு அறியும் - துப்புத் துலக்கும் செய்தித் தாளின் ஆசிரியரானார். அதனால், அவர் தலைமறைவு வாழ்க்கை வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த ஆபத்தான சூழலில்தான் காமு, 'அன்னியன்' என்ற நாவலையும் எழுதினார். இந்த நாவல் காமுவை இலக்கியத் தாரகையாக்கிற்று. அவருடைய படைப்புகள் உலகம் முழுவதும் பரவியதுடன், புகழைத் தேடித் தந்தது.

'காலி கூலா' (Cali Gula) என்று அவர் 1944-ஆம் ஆண்டில் எழுதிய நாடகம், அவரை நாடக வானிலும், விண்மீனாக ஒளிர வைத்தது.

ருஷ்ய வரலாற்று நிகழ்ச்சிகளை உட்பொருளாக்கி The Just என்ற நாடகத்தை எழுதினார். அந்த நாடகம் காமு புகழை உலகில் நிலை நிறுத்தி விட்டது.

ஆல்பர்ட் காமுவின் இலக்கிய படைப்புகளின் அருமையைக் கண்ட நோபல் நிறுவனம் 1957-ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசை அவருக்கு வழங்கிப் போற்றியது.

## ஜப்பான் பெண் பத்திரிகையாளர்

மனித வாழ்க்கையைப் புதிய சிந்தனையில், புதிய கோணத்தில் நோக்கி நாவலை எழுதியவர்களில் ஜப்பானிய பெண் எழுத்தாளி 'யசுநாரி' கவாபட்டா (Yasu Nari Kawabata) என்பவர் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்.

ஜப்பான் டோக்கியோ பல்கலைக் கழகத்தில் கவாபட்டா படித்துக் கொண்டிருந்தபோது 'ஷின்ஷிக்கோ' என்ற மாணவர் பத்திரிகையில் கட்டுரை எழுதும் ஆசிரியர் பகுதியில் பணி புரிந்தார். இவரது எழுத்து ஜப்பானிய பிரபல எழுத்தாளரான வின்சிக்குச்சியைக் கவர்ந்தது.

உடனே, அந்த எழுத்தாளர் கவாபட்டாவை அழைத்து, 'பங்கி ஷஞ்சு' என்ற இலக்கிய இதழுக்கு ஆசிரியராகப்

பொறுப்பேற்கச் செய்தார். அங்கே சில காலம் பணியாற்றிய கவாபட்டா, தனது நண்பர்களுடன் இணைந்து சொந்தமாக 'பங்கிஜிதாய்' (Bungei Jidai) என்ற இலக்கியப் பத்திரிகையை ஆரம்பித்து நடத்தி வந்தார்.

அந்த பத்திரிகையில் கவாபட்டா, 'இஜ-ரி நகரத்து நடனக்காரி' எனும் தொடர்கதையை எழுதினார். அந்த நாவல் ஜப்பானிய மக்களைக் கவர்ந்தால், அவருக்கு ஜப்பான் மக்களிடம் பெரியதோர் செல்வாக்கு உருவானது.

இந்த நாவலின் கதாநாயகி ஒரு கன்னிப்பெண். அவள் தனது வாழ்க்கையைக் கடைசி வரை வெற்றிகரமாக நடத்த எடுத்துக் கொண்ட முயற்சிகள் கைகூடாமல், இறுதியில் சோக முடிவைப் பெற்ற இந்த சம்பவம் ஜப்பான் மக்களை மிகவும் கவர்ந்து விட்டதால், அவரது எழுத்து மக்களிடம் புகழ் பெற்று விட்டது.

1933ல் கவாபட்டா ஒரு பிரம்மசாரி இளைஞன் சமுதாயத்தில் உண்டாகின்ற மாறுதல்களை விரும்பாமல் எதிர்த்துப் போராடுகிறான். இறுதியில் மனிதர்கள் சமுதாயத்தில் வாழ்வதைவிட விலங்குகள் இனத்தில் நட்பு கொண்டு அமைதி பெறுவதாக அந்தக் கதை முடிகின்றது. இந்தக் கதையும் ஜப்பான் மக்களிடம் செல்வாக்குப் பெற்றுவிட்டது. ஜப்பான் மக்களிடம் பெரும் புகழ் பெற்றார் கவாபட்டா.

குடும்பங்களில் அடிக்கடி ஏற்படும் பூகம்ப நிகழ்ச்சிகளைத் தனது மற்ற நாவல்களில் சித்தரித்து வெற்றியடைந்தவர் கவாபட்டா.

மக்களிடம் உள்ள சில இனம் புரியாத தவிப்புகளில் ஒன்றான தனிமையின் தவிப்பை மரணம் சம்பவிப்பதற்கு முன்பு அதைச் சொல்லத் தெரியாத ஒருவித இன்ப நுகர்வை தனது கதைப்பாத்திரங்கள் மூலமாக வெளிப்படுத்தும் அவரது ஆற்றலைக் கண்டு உலக இலக்கிய உலகமே திணறியது. அதற்காகவே அவர் 1968-ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற்றார்.

இந்த மக்கள் சமுதாய பூகம்ப நிகழ்ச்சிகளை எல்லாம், சில நேரங்களில் சில நாவல்களில் கவாபட்டா தனது இலக்கியப்

பத்திரிகையான 'பங்கிஜிதாயில்' அடிக்கடி எழுதிச் சிறுகச் சிறுகப் புகழ் பெற்ற பத்திரிகையாளராக வாழ்ந்தவராவார்.

## போலந்தின் யூதமொழி பத்திரிகையாளர் :

போலந்து நாட்டின் தலைநகரான வார்சா என்ற நகரருகே உள்ள சிறு கிராமத்தில் 14.6.1904-ஆம் ஆண்டில் பிறந்தவர் ஐசாக் பஷீவிஸ் சிங்கர். 'Isaac Bashevis Shingar' இவர் யூதர்கள் குடியிருப்புப் பகுதியில் குடியிருந்ததால் இத்தீஷ் மொழியைக் கற்றார்.

ருஷ்ய இலக்கியங்களையும் ஹீப்ரு மொழி இலக்கியங்களையும் நன்கு படித்தவர். இவருடைய தமையன் ஒரு நாவலாசிரியர். அதனால் சிங்கரும் எழுத்தாளராக விரும்பி ஏராளமான பிறமொழி நூல்களைப் படித்தார்.

அமெரிக்காவில் நடைபெற்று வந்த 'யூத மொழி' என்ற நாளேடு ஒன்றில் பிழை திருத்தும் பணியில் வேலை செய்தார். நாளடைவில் நியூயார்க் அருகே உள்ள புரூக்ளின் நகரில் 'குலோபஸ்' என்ற பத்திரிகையில் ஆசிரியர் பொறுப்பில் அமர்ந்து, சிறுகதை, கட்டுரை போன்ற பலவற்றை எழுதி அமெரிக்க மக்கள் இடையேயும், யூத இனத்தவர் மத்தியிலும் மிகுந்த புகழ் பெற்றவரானார்.

1934-ஆம் ஆண்டில் சிங்கர் அந்தப் பத்திரிகையில் 'கோரேயில் சாத்தான்' என்ற நாவலை எழுதி வந்தார். தொடர் நாவல் அல்லவா? மக்கள் அந்த பத்திரிகையை விரும்பி வாங்கி தொடர் நாவலைப் படித்து மகிழும் அளவிற்கு அவரது எழுத்து செல்வாக்குப் பெற்றுவிட்டது.

ஜெர்மன் படையெடுப்பால் 1935-ஆம் ஆண்டில் போலந்து நாடு சீர்குலைந்ததால், சிங்கர் போலந்து ஓடினார். பிறகு மீண்டும் அமெரிக்க வந்து புரூக்ளினில் உள்ள யூத நாளேட்டில் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

'மஸ்கட் குடும்பம்' என்ற நாவலை அந்த நாளேட்டில் 1945 முதல் 1948-ஆம் ஆண்டு வரை தொடராக எழுதியதால்,

சிங்கர் புகழின் சிகரத்துக்கே சென்றமர்ந்தார். அந்த நாவலில் 19ம் நூற்றாண்டில் வாழும் நான்கு தலைமுறைக் குடும்பத்தினுடைய நிகழ்ச்சிகளை விடாமல் தொடர்ந்து எழுதினார்.

அந்த நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளி வந்ததால் அது உலகப் புகழைப் பெற்றது. உலகப் படைப்பாளிகளில் ஒருவராக ஐசக் பஷீவாஸ் சிங்கர் மதிக்கப் பட்டதால், அவருக்கு 1978-ஆம் ஆண்டின் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

யூத மொழி பத்திரிகை எழுத்தாளர் ஒருவர் நோபல் பரிசு பெற்றதில் முதன்மையானவர் சிங்கரே என்ற பெருமையை அவர் பெற்றார்.

## இலத்தீன் அமெரிக்கா பத்திரிகையாளர்

இலத்தீன் அமெரிக்காவில் உள்ள கொலம்பியாவின் ஒரு கிராமத்தில் கார்சியா மார்க்கெஸ் என்ற பத்திரிகையாளர் 3.6.1928-ஆம் ஆண்டில் பிறந்தார். வறுமையே உருவான பரம ஏழைக் குடும்பத்தில் தோன்றிய அவர், அரும்பாடுபட்டு, யார்யார் உதவிகளினாலோ சட்டத்துறையிலும், பத்திரிகைத் துறையிலும் படித்துப் பட்டம் பெற்ற ஏழையில் ஏழ்மையானவர் ஆவார்.

மார்க்கெஸ் பத்திரிகைத் துறையைத் தனது வாழ்க்கைத் துறையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். 'எல் எஸ்பெக்ட்டார்' எனும் நாளிதழ் பத்திரிகையில் நிருபராகப் பணி புரிந்தார். 1959-ஆம் ஆண்டு முதல் 1961 வரையிலும் கொலம்பியா கியூபின் நியூஸ் ஏஜென்சியில் வேலை செய்தார். அதே நேரத்தில் திரைப்படத் துறையிலும் திரைக்கதைத் துறையிலும் பணியாற்றினார்.

ஆனால், பத்திரிகைத் துறையில் தான் அவர் முழு மூச்சாக செயல்பட்டார். 1940-ஆம் ஆண்டில் பத்திரிகைகளில் சிறுகதைகள் எழுதி வந்தார். 1955-ஆம் ஆண்டில் 'இலைப் புயல்' என்ற பெயரில் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டார்.

மார்க்கெசின் சிறுகதைகளில் கிராமிய நிகழ்ச்சிகள் உயிரோட்டமாக இடம் பெற்றிருந்ததால், இலக்கிய வட்டாரத்தில் பெரும் புகழ் பெற்றார். அவருடைய கதைகளில் புதிய கண்ணோட்டமும், கதை கூறும் வித்தியாசப் போக்கும், புதுமையான ஒரு கிராமிய அணுகுமுறையும் காணப் பட்டதாலும், கதைப் பாத்திரங்களில் மாறுபட்ட மனித உணர்ச்சிக் குணங்கள் இருந்ததாலும், அவருடைய சிறுகதைகளுக்கு அமெரிக்காவிலும் உலக இலக்கிய வட்டங்களிலும் வரவேற்பு அதிகமாக இருந்தது.

மார்க்ஸ் ஏராளமான சிறுகதைகளையும், நாவல்களையும் எழுதியதால், அவர் உலகப் புகழ் பெற்ற எழுத்தாளரானார். அவர் எழுதிய "தனிமையில் நூறு ஆண்டுகள்' என்ற நாவல் 1982-ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசைப் பெற்றது.

பத்திரிகை வாழ்க்கையே தனது உயிர் வாழ்க்கை என்று நம்பி அரும்பாடுபட்ட கார்சிய மார்க்கெஸ், தனது ஏழ்மையையே தகர்த்தெறிந்த பத்திரிகையாளர் ஆனார். ஆனால் : நோபல் பரிசையும் ஓர் ஏழையால் பெற முடியும் என்பதை நிருபித்த பத்திரிகை எழுத்தாளராகவும் அவர் மதிக்கப்பட்டார்.

## அமெரிக்க பத்திரிகையாளர் பெஞ்சமின் ஃபிராங்க்லின்

மெழுகுவர்த்தி, சோப்பு செய்யும் ஜோசய்யா பிராங்க்லின் மகனாக, ஓர் ஏழைக் குடும்பத்தில் 1706-ஆம் ஆண்டில் பிறந்தவர் பெஞ்சமின் ஃபிராங்க்லின். அவர் 84 ஆண்டுகள் வாழ்ந்த தனது வாழ்நாளில் பல அற்புதங்களைச் செய்து காட்டி அனைத்திலும் வெற்றி பெற்றிட்ட ஒரு பத்திரிகையாளர் வழிகாட்டி ஆவார்.

பெஞ்சமின், இந்திய விடுதலையின் தந்தையான காந்தியடிகளைப் போல, சீன நாட்டு சன்யாட்சனின் சீர்திருத்த வேட்கைக்கு ஒப்ப; டாக்டர் ஜான்சனுடைய நடுநிலை துலாக் கோலுக்கு ஈடாக, டால்ஸ்டாயின் அன்பு ஊற்றுக்கண் பெருக்காக

அத்தனைப் பண்புகளும் ஒருருவாய் அமைந்த மனித நேயப் பத்திரிகையாளராக வாழ்ந்து காட்டிய மேதை அவர்.

பிராங்க்லின் 1729-ஆம் ஆண்டு முதல் 1766-ஆம் ஆண்டு வரை 'பென்சில்வேனியா கெசட்' என்ற பத்திரிகையை துவக்கி வெற்றிகரமாக நடத்தினார். அந்த இதழில் மக்களுக்கு இன்பம் ஊட்டும் கட்டுரைகளையும், கடிதக் கட்டுரைகளையும், மக்கள் நலனுக்காக பல திட்டங்களையும் எழுதினார்.

நகர்புற காவற்படை அமைப்பு, தெருப் பெருக்கும் திட்டம், வீதிகளுக்கு கற்கள் பாரவுந் திட்டம். உலாவியல் நூலகத் திட்டம், நகர் கட்டடத் திட்டம் ஆகியவற்றுக்கான திட்டப் பணிகளைத் தனது பத்திரிகையில் மக்களுக்கு அறிவித்து அவற்றுள் ஈடுபட்டார்.

பிராங்லினுடைய எழுத்தாண்மைத் திறத்தாலும், பத்திரிகை நடத்தும் புதுமைகளாலும் மக்களிடம் வரம்பு மீறிய செல்வாக்கைப் பெற்றார்.

அமெரிக்க நாட்டில் முதல் நகர மருத்துவமனை, முதல் அறிவராய்ச்சிக் கழகம், முதல் பல்கலைக்கழகம் ஆகியவை அவரது பத்திரிகை முயற்சிகளால் ஆரம்பிக்கப்பட்டன.

'ஜெனரல் மாகசீன்' 'General Magazine' என்ற ஒரு திங்கள் பத்திரிகையையும், பிராங்க்லின் துவக்கி நடத்தினார்.

அமெரிக்கா அப்போது பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்ததால், அந்த அரசின் பிற்போக்கு நடவடிக்கைகளை எதிர்த்தும், நையாண்டிக் கட்டுரைகள் மூலமாக ஆங்கில ஏகாதிபத்தியத்தைச் சாடியும் எழுதினார். இதனால், பிரிட்டனின் பெரும் அறிஞர்கள், சிறந்த எழுத்தாளர்கள், அரசியல் நிபுணர்கள் நட்புகள் அவரைத் தேடி வந்து சந்தித்தன.

அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்குக் கூட்டாட்சி தேவை என்று தனது பத்திரிகையில் எழுதி, அதற்கான திட்டமும் கொடுத்தார். அமெரிக்க அஞ்சல் நிலையத் தலைவரானார். பென்சில்வேனியா நகராட்சி தலைவரானார். அமெரிக்காவில் அடிமைத் தளையை ஒழிக்க பிராங்க்லின் திட்டம் வகுத்துச் செயல்பட்டார்.

ஒரு பத்திரிகையாளரால் நாட்டுக்கும் மக்களுக்கும் என்னென்ன நன்மை தரும் திட்டங்களை தர முடியுமோ - அவற்றுக்கெல்லாம் பெஞ்சமின் பிராங்க்லின் ஒரு முன்னோடி யாக நின்று முதல் திட்டங்களை வகுத்துச் செயல்பட்ட மக்கள் தொண்டராக இன்றும் அமெரிக்க மக்களால் மதித்துப் போற்றப்படுபவராக இருக்கின்றார் என்றால் மிகையாகா.

## ரைட் சகோதரர்களும் பத்திரிகையாளர்களே!

ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த ஆர்வில் ரைட், வில்பர் ரைட் என்ற ரைட் சகோதரர்கள், *1886*-ஆம் ஆண்டில் 'தி மிட்ஜெட்' (The Mid Jet) என்ற பெயரில் ஒரு பத்திரிகையை அமெரிக்காவில் உள்ள டேடன் என்ற நகரில் துவக்கினார்கள். அமெரிக்க மொழியில் மிட்ஜெட் என்றால் 'குள்ளன்' என்று பொருளாகும்.

அந்தப் பத்திரிகை பொருளாதார நெருக்கடியாலும், முன்பின் திட்டம் இல்லாமல் எதைச் செய்தாலும் எதுவும் வெற்றி பெறாது என்ற காரணத்தாலும் இரண்டு மூன்று மாதங்களோடு நின்று விட்டது.

ரைட் சகோதர்களின் தந்தையாரான மில்டன் ரைட், கிறித்துவமத பிரச்சாரகராகப் பணியாற்றிக் கொண்டிருந்த வராதலால், அவர் 'கிறித்துவப் பாதுகாவலன்' என்ற ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து அதை நடத்தி வந்தார். அந்த பத்திரிகையை மடித்துக் கொடுக்கும் பணியைத் தனது மகன் வில்பர் ரைட்டிடம் தந்தை ஒப்படைத்தார்.

வில்பர் ரைட் பத்திரிகையை மடிக்கும இயந்திரம் ஒன்று செய்தால் என்ன என்ற சிந்தனையிலே மூழ்கி, அண்ணணும் தம்புயுமான வில்பரும் - ஆர்வியும் தனது வீட்டில் போடப் பட்டிருந்த பழைய இரும்புகள், மரக்கட்டைகளைக் கொண்டு, பத்திரிகை மடிக்கும் இயந்திரத்தைக் கண்டுப்பிடித்தார்கள்.

இரண்டு நாட்கள் செய்ய வேண்டிய அந்த பத்திரிகை மடிக்கும் வேலையை, அந்த இயந்திரம் இரண்டே மணி

நேரத்தில் செய்து முடித்ததைக் கண்டு அவர்களது தந்தையும் - பிள்ளைகளும் மகிழ்ந்தார்கள்.

வில்பரும், ஆர்விலும் காலால் மிதித்து அச்சடிக்கும் Fradle அச்சு இயந்திரம் ஒன்றைக் கண்டுப்பிடித்தார்கள். பிறகு அச்சடிப்பதற்குரிய எழுத்துக்களையும் வாங்கினார்கள்.

‘குள்ளன்’ என்ற பத்திரிகை நின்று போன இப்போது அச்சு இயந்திர வசதிகளோடு ‘தி வெஸ்ட் சைடு நியூஸ்’ அதாவது மேற்கு திசைச் செய்தி 'The West Side News' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார்கள். அதன் ஆசிரியர் பொறுப்பை வில்பர் ஏற்றார். நிர்வாகி ஆர்வில்!

‘மேற்கு திசைச் செய்தி’ மக்கள் இடையே நல்ல செல் வாக்குப் பெற்றதால், பன்னூறு பிரதிகள் துவக்கத்திலேயே, பரபரப்புடன் விற்பனையாயின. ரைட் சகோதரர்களிடம் இப்போது பண வறுமை இல்லை என்ற நிலை பிறந்தது.

பத்திரிகையாளர்களாக வாழ்க்கையைத் துவக்கிய ரைட் சகோதரர்கள்தான், தங்களது நுட்ப அறிவின் முதிர்ச்சிகளால், வானத்தில் பறக்கும் வானவூர்தியை, ஆகாய விமானத்தை 1903-ஆம் ஆண்டில் கண்டுபிடித்து வானத்தில் பறந்து காட்டினார்கள். ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்பது திருவள்ளுவர் பெருமானது வாழ்வியல் பொய்யா மொழி அல்லவா?

பத்திரிகையாளர்களான ரைட் சகோதரர்கள் கண்டுபிடித்த ஆகாய விமான அற்புதத்தை ‘வர்ஜீனியா பைலட்’ என்ற பத்திரிகை பாராட்டி செய்தி வெளியிட்டது. அதன் நிருபர் மகிழ்ச்சி துள்ளி உலகத்திலுள்ள 21 பத்திரிகைகளுக்கு அந்தச் செய்தியைத் தெரிவித்தார். என்ன இருந்தாலும் பத்திரிகையாளர் சாதி அல்லவா? அதனால்!!

பாரீஸிலிருந்து வெளிவந்த ‘ஹெரால்ட்’ 'Heralit' என்ற பிரெஞ்சு பத்திரிகை, ஒன்று ‘பறப்பவர்களா? அல்லது பொய்யர்களா?’ என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதி ரைட் சகோதரர்கள் பறக்கவே இல்லை என்று மறுத்தது.

பத்திரிகையாளர்களுக்கும் கயமைக் குணம் உண்டல்லவா? அந்த ரகம் அந்த ஹெரால்டு!

எதிர்ப்புகளை ஏறுபோல் சந்தித்த ரைட் சகோதரர்கள் 17.12.1903-ஆம் ஆண்டன்று பத்திரிகை நிருபர்களை அழைத்து, அவர்கள் எதிரிலேயே தங்களது ஆகாய விமானத்தில் ஏறி அமர்ந்துக் கொண்டு வானில் 51 நிமிடங்கள் விமானத்தைப் பறக்க விட்டுக் கீழே இறங்கினர்.

ரைட் சகோதர்களின் இந்த செயற்கரிய செயலின் அற்புதத்தைக் கண்டு, அமெரிக்க பத்திரிகைகள் எல்லாம் புகழ்ந்து பாராட்டின. எனவே, ஒரு பத்திரிகையாளன் விடா முயற்சியோடு ஒரு செயலில் ஈடுபட்டால், எண்ணியதை எண்ணியாங்கு எய்துவான் என்ற திருவள்ளுவர் பெருமான் வாழ்வியல் சட்டத்திற்கு சான்றாக ரைட் சகோதரர்கள் விளங்கினார்கள்.

## நூலாளர்
## குறிப்பு :

இதுவரை பத்திரிகை ஆசிரியர்களாக, இணை ஆசிரியர் களாக, கட்டுரையாளர்களாக, கவிஞர்களாக, விமர்சகர்களாக, சீர்திருத்தச் சித்தர்களாக, அரசியல், கலையியல், இலக்கியவியல் போன்றவற்றிலே தன்னிகரற்றவர்களாகப் பத்திரிகைத் துறையில் அற்புதங்களைச் செய்த எழுதுகோலர்களது தொண்டுகளை மட்டுமே படித்தீர்கள்.

காரணம், இந்த நூல் 'பத்திரிகையாளர்களுக்கு வழிகாட்டி' என்ற நூலானதால், பத்திரிகையாளர்களாக, இதழ்களின் கட்டுரையாளர்களாக, நிருபர்களாக பணியாற்றிப் பெருமை பெற்றவர்களது உழைப்பை, திறனை, அஞ்சாநெஞ்ச உணர்வுகளை, அவர்களது செயற்கரிய செய்த மக்கள் தொண்டுகளை மட்டுமே நாம் குறிப்பிட்டிருக்கிறோம்.

இவை அல்லாமல், பத்திரிகைகளில் பணியாற்றாமல் எழுத்துலக வட்டத்தில் விண்மீன்களாக ஒளிவிட்டவர்கள் ஏராளம் பேர்; அவ்வளவு அறிஞர் பெருமக்கள் உள்ளனர்.

அறிவியல், மருத்துவவியல், கணிதவியல், வரலாற்றியல், அரசியல், வானியல், பொருளியல், கலையியல் போன்ற பல துறைகளிலே அவர்கள் உழைத்து அரும் பாடுபட்டுள்ளார்கள்.

அத்தகைய வித்தகர்களது கட்டுரைகளை, இலக்கிய உணர்வுள்ள எழுத்துக்களை, உலகத்திலே உள்ள எண்ணற்ற நாடுகளிலிருந்து வெளிவந்த கணக்கற்ற பத்திரிகைகள் வெளியிட்டு; மக்கட் தொண்டுகளை ஆற்றிப் பத்திரிகை உலகுக்கு அரிய பெரிய சேவைகளைச் செய்திருக்கின்றன. அவற்றை எல்லாம் தொகுத்து வெளியிட்டால் நூல் விரியும், பக்கங்கள் பெருகும்; அதற்கு ஏராளமான சூழ்நிலைகளும் தேவை.

எனவே, ''உலக நாடுகளில் ஒவ்வொன்றிலுமுள்ள சில பத்திரிகைகளது வளர்ச்சிகளை, அவற்றின் மக்கட் தொண்டுகளை மட்டுமே வெளியிட்டிருக்கிறோம். குறையிருந்தால் அதை நிறைவாகக் கொள்ள வேண்டுகிறேன்.

- ஆசிரியர்

# 4

# இந்தியாவில் - இதழியல் கலை! தோற்றம்! வளர்ச்சி! தொண்டு!

"உலக நாடுகள் பத்திரிகை வரலாறு" என்ற பகுதியில், ஒவ்வொரு நாட்டிலும், அவரவர் தாய் மொழிகளில் தோன்றிய பத்திரிகைகளில் சிறப்பான பத்திரிகைகளையும், அவற்றின் பணிகள் மக்களுக்கு எவ்வாறு பயன்பட்டன என்பதையும், அந்தந்த ஏடுகளில் எழுதிய பத்திரிகையாளர்கள் எவ்வாறெல்லாம் தங்களது எழுத்துக்களை ஆட்சி செய்து வெற்றி பெற்று உலக மக்கட்கு அறிவுத் தொண்டுகளை ஆற்றினர் என்ற முழு விவரச் சுருக்கங்களையும் படித்தீர்கள்.

'இந்தியாவில் இதழியல்' என்றால்; இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் பேசப்படும் இந்தியர்களின் தாய் மொழியில் வெளிவந்த பத்திரிகைகள் என்பதே பொருள். இந்த இந்திய பத்திரிகைகளின் தோற்றம், வளர்ச்சி, தொண்டு பல்வேறு வகைகளில் இருந்தாலும், அந்த இதழ்கள் ஒவ்வொன்றிலும் ஊடுருவி நிற்கும் கருத்துக்கள்; இந்திய மக்களின் சுதந்திர நலன்களுக்கு ஏற்ற கருப்பொருளாகவே காணப்பட்டன.

எம். சலபதிராவ் என்பவர், தான் எழுதிய Press என்ற நூலில் 1974-ஆம் ஆண்டில் குறிப்பிட்டுள்ளதுபோல, "இந்தியப் பத்திரிகைகள் : ஒரு சார்ந்திருக்கும் பத்திரிகைகளாகத் துவங்கப்பட்டவை. அவை இப்பொழுது வளர்கின்ற சமுதாயத்தின் பத்திரிகைகளாக, பல சவால்களுக்குப் பதில்

கூறுவனவாக மாறிவிட்டன'' என்று; இந்திய இதழ்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறியதன் உண்மைக் கருத்தின் கரு வளர்ச்சிகளை இதே தலைப்புப் பகுதியிலேயே படிக்கப் படிக்க உணர முடியும்.

இந்திய இதழியலுக்கு முன்னோடிக் குறிப்புகளாகக் காணப்படுபவை; சாம்ராட் அசோகரின் கல்வெட்டுகளும் - அவரது ஆட்சியால் மக்களுக்குக் கிடைத்தச் செய்திகளின் நன்மைகளும் ஆகும்.

புத்த சமயம் இந்தியாவிற்கு மிகச் சிறந்த நீதிநெறி முறைகளை வழங்கியது என்பதை நெஞ்சார உணர்ந்த மாமன்னர் அசோகர் - அவரது ஆட்சியில், அன்பு, அரவணைப்பு, உயிர் வாழும் இனங்களுக்கு மனத்தால், எண்ணத்தால், செயலால் தீங்கு செய்யாமை போன்ற சிறப்புத் தன்மைகளைக் கடைப்பிடித்தார் என்பதே சிறப்புச் செய்திகள்.

வேளைதோறும் உணவுக்காக வெட்டப்பட்டுச் சமைக்கப்பட்ட எண்ணற்ற மயில் கறி உணவை உண்ணுவதை அவர் அடியோடு நிறுத்தி, உயிரீனும் பழக்க வழக்கத்தை மாற்றிக் கொண்டார். அதனால்; அவரது அரண்மனையே சைவ உணவை உண்டு வந்தது.

பேரரசர் அசோகர், பொறுமை, கனிவு, சகிப்புத் தன்மை ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாக, கலிங்கப் போருக்குப் பிறகு தன்னையே மாற்றிக் கொண்டார். அவரது முரட்டுத் தனத்தை அழித்துக் கொண்டு பொறுமை என்ற தத்துவத்துக்கு அணிகலனானார்! சகிப்புத் தன்மைக்குச் சான்றாளரானார். இந்த இரண்டு அரிய பண்புகளும் இந்தியச் சமுதாயத்திற்கே அவர் ஆட்சியில் புத்துயிர் புகுத்தின. அவையே இன்றைய இந்தியாவின் வெளி உறவுக் கொள்கைச் செய்தியாக உலகில் பவனி வருகிறது.

அசோகர் வழியைப் பின்பற்றியே தற்காலத்தில் சாலை ஓர மர நிழல்கள் பணி, ஓய்வு விடுதிகள் அமைத்தல், கால்நடைகள் முதல் மக்கள் வரை உருவாகும் பிணி நீக்கும் மனைகள், மருத்துவ மூலிகை வளர்ச்சிகட்கு தரும் மானியத் தொகை; கடவுளுக்காக விலங்குகளை பலியிடும் கொள்கை

நிறுத்தம், வெளிநாடுகளுக்கு இராஜ தந்திரிகளைத் தூதுவர்களாக நியமிக்கும் அம்பாசிட்டர் (Ambassador), சமயங்களை வளர்க்கும் மாநாடுகள் என்பவை; தற்காலத்தில் மாறி, அரசியல் கட்சிகள் மாநாடுகளாக அவை அனைத்தும் இன்றும் நடைபெற்று வருகின்றன.

அசோக மாமன்னரால் நிறுவப்பட்ட புத்த சமய நினைவுச் சின்னங்களான சாஞ்சி, சாரநாத், பாஹீத் மற்றும் அமராவதி கற்றூண்கள் போன்றவை ஆகும். அவரது மூன்று சிங்கங்கள் சின்னத்தைத்தான் இன்றைய இந்திய அரசும் அசோகச் சின்னமாகப் போற்றி அரசுச் சின்னமாக வைத்து வழிபடுகின்றது.

இன்றைய இந்திய ஆட்சிக்கு அசோகர் செய்திகள் மூலகங்களாகப் பயன்படுவதைப் போல, இந்திய இதழியலுக்கும் அவரது கல்வெட்டுகள் மூலகங்களாக, முன்னோடிச் செய்திகளாக இருக்கின்றன எனலாம். அவரது கல்வெட்டுகள் காலத்தால் அழிக்க முடியாத இதழ்களாக நிலைத்து நின்றுள்ளன.

இந்திய மன்னர்களான சுங்க வம்சக் காலத்திலும், மௌரிய சாம்ராச்சிய ஆட்சியிலும், கனிஷ்க, குப்த, ஹர்ஷவர்த்தனர் அரசுகளிலும், கலிங்க, சாளுக்கிய நாடுகளிலும், மொகலாய ஆட்சிகளிலும், தெற்கே பல்லவ, சோழ, பாண்டிய, சேரர்கள் ஆட்சிகளிலும் கல்வெட்டுகள், அரண்மனைகளின் செய்தி அனுப்புவோர் வாயில்லாகவும், மன்னர்களது முரசு கொட்டிகளின் பிரகடனங்கள் மூலமாகவும், அலுவலர்களுக்கும் பிற அரசர்களுக்கும், பொது மக்களுக்கும் செய்திகளைப் பரப்பும் வசதிகளை உருவாக்கிக் கொண்டதாக அந்தந்த அரசு வரலாறுகள் அறிவிக்கின்றன.

இன்றைக்கும்கூட ஒரிசா நாட்டில் புறாக்கள் மூலமாகச் செய்திகளை அனுப்பும் வசதிகள் இருப்பதை நாம் அறிகிறோம். இந்தச் செய்திகளை அனுப்பும் ஓலைகளே, லிகிதங்களே, கடிதங்களே இன்றையப் பத்திரிகைகள் செய்திகளுக்குக் கருக் கூறுகளாக அமைந்துள்ளன.

முகலாயர்கள் ஆட்சிகளிலும், செர்ஷா போன்ற முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் அரசுகளிலும் செய்திகளை அனுப்புவதற்கென்ற ஓர் எழுத்தாளர் துறை இருந்துள்ளது. இவர்கள் அரசுச் செய்திகளை அறிவிப்பவர் களாகையால், முகலாயர் காலத்தில்: குறிப்பாக பேரரசன் ஔரங்கசீப் ஆட்சியில் மன்னன் ஆணைக்கேற்ப சுதந்தரமாகச் செயல்பட்டார்கள்! எனவே, செய்தித் துறைக்கும் முழுச் சுதந்திரம் வேண்டும் என்பதை முகலாயர் பேரரசுகள், குறிப் பாக மாமன்னர் அக்பர் ஆட்சியில் இருந்ததாக அறிகின்றோம்.

இவ்வாறு இந்திய அரசுகள் செய்திகளை அனுப்பிய விவரத்தை; அப்போது வெள்ளைக்காரப் பாதிரியாக சமயத் தொண்டு செய்ய வந்த ஸ்காட்லாண்டு நாட்டைச் சேர்ந்த இராபர்ட் வில்லியம் என்பாரும், பிரெஞ்சு மருத்துவராக இருந்த பிராங்கே பெர்னியர் என்பவரும் "S. Arasarathnam; Merchants Companies and come in Coramandel 1600 - 1740 Cambridge" என்ற நூலில் எழுதியுள்ளார்கள்.

இராபர்ட் கிளைவ் இந்தியா வந்தபோது, கிழக்கிந்தியக் கம்பெனி எவ்வாறு இந்தியாவில் இயங்குகின்றது என்பதை, அப்போதிருந்த சில செய்தி எழுத்தாளர்களின் உதவியால், அவ்வப்போது கடிதங்கள் மூலமாகத் தங்களுக்குத் தேவையான வசதிகளை வருவித்துக் கொள்ளவும், இங்குள்ள அவர்களது சூழ்நிலைகளை விளக்கியும், செய்திப் போக்குவரத்து செய்து கொண்டார்கள்.

கிறித்துவ சமயத் தொண்டாற்றி வந்த டேனிஷ்காரர்கள், தங்களது விவிலிய நூலை அச்சடிக்கத் தஞ்சை மாவட்டத்திலே உள்ள தரங்கம்பாடி என்ற கடற்கரை ஊரிலே 1713-ஆம் ஆண்டில் அச்சகத்தை ஆரம்பித்தனர். அதற்கான அச்சுத்தாள் உருவாக்கும் நிறுவனத்தை 1715-ஆம் ஆண்டில் தரங்கம் பாடிக்கு அடுத்துள்ள பொறையார் என்ற ஊரில் நிறுவினார்கள். ஆனால், அவர்களால் விவிலிய நூலையோ அல்லது கிறித்துவத்தைப் பரப்பும் பத்திரிகையையோ அச்சடிக்க முடியவில்லை.

ஆங்கிலேயர்களின் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியின் போது, பத்திரிகைகளை இங்கிலாந்து நாட்டிலேயே அச்சடித்துக் கப்பலில் கொண்டு வந்தார்கள். பற்றாக்குறையால் அதிகாரிகள் பலருக்கு அந்தப் பத்திரிகைகள் கிடைப்பதில்லை. பிறகு எப்படி பொது மக்கள் படிக்கக் கிடைக்கும்?

எனவே, கிழக்கு இந்திய நிறுவனத்தில் பணியாற்றிய சிலர், தங்கள் வேலைகளை விட்டு விலகி, தங்களது குறைகளை எடுத்துக் காட்டிட, ஒரு பத்திரிகையைத் துவங்கத் திட்டமிட்டார்கள். அவர்கள் பத்திரிகைகளை ஆரம்பித்தால் அதனால் கம்பெனியின் ஊழல்கள் மக்களுக்கும், பிற அதிகாரிகளுக்கும் தெரிந்து அவமானம் ஏற்படுமே என்ற எண்ணத்தால், பத்திரிகையை வெளியே வரமுடியாமல் தடுத்து நிறுத்தும் குறுக்கு வழிகளைச் செய்தும், பத்திரிகை ஆரம்பிப்பதில் பங்கு பெற்று உழைக்க இருந்தவர்களை மீண்டும் இங்கிலாந்துக்கே திருப்பி அனுப்பி விட்டார்கள் - கம்பெனியின் பெரிய அதிகாரப் பொறுப்பில் இருப்பவர்கள்.

ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி (James Augiustus Hicky) என்பவர்; அதிகாரிகளின் அதட்டல் மிரட்டல்களைக் கண்டு அஞ்சாமல் "வங்காள கெசட் அல்லது கல்கத்தா பொது விளம்பரத் தாள்" என்ற பத்திரிகையைத் துவக்கினார். இந்தப் பத்திரிகைதான் இந்தியாவின் முதல் செய்தித் தாள் என்று 'இதழியல் கலை' என்ற நூலில் ஆசிரியர் டாக்டர் மா.பா. குருசாமி கூறுகிறார்.

ஆனால், அவர் 'இது உண்மை அன்று' என்கிறார். 'இந்திய விடுதலைப் போரில் இனிய தமிழ்' என்ற நூலாசிரியரான டாக்டர் எஸ். துரைசாமி; ஏன் அவ்வாறு அவர் கூறினார் என்பதற்குரிய காரணம் இது:

> "1811-ஆம் ஆண்டில் முதன் முதலாக வெளிவந்த 'தமிழ்ப் பத்திரிகை' கிறித்துவப் பிரச்சார ஏடாகவே இருந்தது" என்று;" மு.இ. முகமது மரைக்காயர் - தமிழ் இலக்கிய கொள்கை - பக்கம் 232-ல் அவரால் கூறப்பட்டதை துரைசாமி எடுத்துக் கூறுகிறார்.

1882ஆம் ஆண்டில் 'சுதேசமித்திரன்' வார இதழாகத் துவங்கப்பட்டது. 1887ல் 'லலிதப்ரஸ் நோதயா' என்ற நாளிதழ் துவக்கப்பட்டது. அதையே முதல் நாளிதழாகக் கருத வேண்டும். ஆனால் அது விரைவாக நின்றுவிட்டது.

'1892ல் 'சுதேசமித்திரன்' நாளிதழாக வரத் தொடங்கிப் பல்லாண்டுகள் நிலைத்துப் பணி புரிந்தது. தமிழில் முதல் அரசியல் நாளிதழ் என்று போற்றப்படும் பேறு 'சுதேசமித்திரனுக்கே' உண்டு. இதன் ஆசிரியர் திரு. ஜி. சுப்பிரமணி ஐயர். இந்தியத் தேசியக் காங்கிரசின் முதல் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டவர். அவர் சிறந்த தேசியவாதி. 4.5.1887ல் அய்யர் இவ்விதம் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

"நம் தேசக் கடைகளில் அரிசி, பருப்பு, காய்கறி தவிர மற்றவையெல்லாம் ஆங்கிலேயர் சாமான்களேயன்றி நமது சாமான்கள் அல்லவே! அப்படிப்பட்ட சாமான்களைச் சிருஷ்டிக்க நமது தேச மக்களுக்குத் திறமை இல்லையே! தைரியமில்லையே! ரோஷம் இல்லையே! ஆகவே, இவரையே நம் சுதேச இயக்கத்திற்கு வித்திட்டவர் என்று சொல்லலாம் அல்லவா?

பிரபலமான ஆங்கில நாளிதழ் 'தி இந்து'விற்கும் இவர்தான் முதல் உரிமையாளர்.

- என்று, அ.மா. சாமி - தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி என்ற நூலில் பக்கம் 210ல் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவர், கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகள் குறைகளை எழுதுவதற்குத் துவக்கப்பட்ட பத்திரிகை செய்தித்தாள் என்ற வகையிலே சேர்க்கப்பட்டு விட்டதே தவிர, அந்தப் பத்திரிகை கம்பெனியாரின் அரசியலை விமர்சித்த பத்திரிகையே ஆகும்.

ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கியின் பத்திரிகை வெளிவந்த ஆண்டு 1780. ஏறக்குறைய 93 ஆண்டுகளுக்கு முன்பே ஹிக்கி

அந்த 'கல்கத்தா கெசட்' இதழை வெளியிட்டார் என்பதால், 'இதழியல் கலை' ஆசிரியர் அதனைத் துணைத் தலைப்பின் முதல் செய்தித் தாள் என்றரோ என்னவோ? ஆனால், உள் செய்தியில் ஹிக்கி இதழ்தான் முதல் பத்திரிகை என்று உறுதிபடக் கூறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஹிக்கி, தன்னை அந்த நாளேட்டில் முன்னாள் அச்சகர் என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்தியப் பத்திரிகை வரலாற்றில் ஹிக்கி வில்லியம் போல்ட்டைப் போல ஓர் அஞ்சா நெஞ்சர்; ஆனால், செய்தித் தாள் அச்சிடுவதிலே பயிற்சியற்றவர். அதன் மீது எனக்கு ஆசையுமில்லை. நான் கடின உழைப்பாளனு மில்லை. ஆனாலும், எனது மனச் சான்றுக்கும், அறிவிற்கும் விடுதலை வாங்க, இந்தப் பத்திரிகைப் பணியில் எனது உடலை அடிமைப்படுத்திக் கொள்வதில் மகிழ்வடை கின்றேன்' என்று ஹிக்கி கூறியுள்ளார்.

தான் துவக்கிய நாளேட்டைப் பற்றி ஹிக்கி கருத்றிவித்த போது, 'எனது பத்திரிகை எல்லாம் பிரிவினருக்கும் உரிய அரசியல் இதழ், வாணிபப் பத்திரிகையான இதில், யாரும் ஊடுருவ முடியாது' என்று பெருமையோடு குறிப்பிட்டார். அந்த ஏடு இங்லீஷ் மொழியில் வார இதழாக வெளி வந்தது.

வங்காளத்திலுள்ள கல்கத்தா மாநகரில் ஹிக்கி தனது 'வங்காள கெசட்' பத்திரிகையை நடத்தி வந்தாலும், அதற்கான எல்லா வகையான செய்திகள், கருத்துக்கள் அனைத்தையும் அப்போது இலண்டன் நகரிலே இருந்து வந்து கொண்டிருந்த "London News" என்ற நாளேட்டுச் செய்திகளில் வரும் குறிப்பிட்டச் செய்திகளைத் திரட்டித் தனது கெசட்டில் வெளி யிட்டார். அவ்வளவுக் கருத்துக்களையும் அவர் அப்படியே தனது மொழி நடையில் சிறப்பாக எழுதிப் பிரசுரித்ததால், அந்த ஏட்டிற்கு கம்பெனி பணியாளர்கள் இடையேயும், வெளி மக்களிடையிலும் நல்ல வரவேற்பும், மரியாதையும் வாரத்துக்கு வாரம் பெருகியது.

அப்போது கம்பெனியின் தலைமை ஆளுநராக இருந்தவர் வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு "Waran Hastings"

என்பவர். அவரது துணைவியாரின் பாலியல் தொடர்பான செய்திகள் அதில் வெளியானதைக் கண்ட ஹேஸ்டிங்ஸ் கோபமடைந்தார்.

அவருடன் மற்ற பெரிய அதிகாரிகளான சிமியோன் ட்ரோஸ் (Simon Droz), தாமஸ் டீன் பியர்ஸ் (Thomas Dean Perase), சுவீடன் கிறித்துவ மதகுரு ஜான் சக்காரியா கிர்ரெண்டர் (John Zacharaiah Kierender) மற்றும் சிலர் ஹிப்பியின் கடுமையான எழுத்து நடைத் தாக்குதலுக்குப் பலியானார்கள்.

தலைமை ஆளுநர் வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது ஊழல் புகார்களும், அதற்கான சலுகைகளுக்காக அவர் செய்த லஞ்ச லாவண்ய விளையாடல்களையும்; அதே நேரத்தில் கம்பெனி அதிகாரிகளுடன் ஹேஸ்டிங்ஸ் துணைவியார் நடத்தி வந்த தகாத உறவுகளையும் கடுமையாகச் சாடி ஹிக்கி எழுதியதால், தாள முடியாத அவமானத் தீயினாலே ஏற்பட்ட புண் காயங் களை எண்ணியெண்ணி உள்ளுக்குள்ளேயே வேதனைப் பட்டதின் எதிரொலியால்: ஹிக்கிக்கு, அரசு பல இடையூறு களைச் செய்தது. அந்த இடுக்கண்களிலே ஒன்று அவரது பத்திரிகைக் குரிய அஞ்சலகச் சலுகையைப் பறித்ததும் ஆகும்.

சுவீடன் பாதிரியார் ஜான் சக்காரியா, தன்மீது எழுதிய அவதூறுகளுக்காக நீதிமன்றத்தின் நெடும்படிக் கட்டுகள் மீது ஏறினார்! வழக்குத் தொடர்ந்தார். அதன் பயன், ஹிக்கி நான்கு மாதச் சிறைத் தண்டனையையும், 500 ரூபாய் அபராதத்தையும் பெற்றார்.

இந்த வழக்கு தான், இந்தியாவில் இங்லீஷ்காரர்களின் ஆணவத்தால், அகம்பாவ ஆட்சி நிர்வாகத்தால், லஞ்ச லாவண்ய ஊழல்கள் பெயரால் ஒரு பத்திரிகை மீது ஓர் ஆட்சி தொடுத்திட்ட முதல் வழக்காகும். இந்தியப் பத்திரிகை யாளர்களில் ஓர் அரசை எதிர்த்து ஒரு பத்திரிகை ஆசிரியன் மன உரத்துடன், நேர்மையுடன், சந்தித்திட்ட முதல் வழக்கும் ஆகும்.

அதனால், அஞ்சா நெஞ்சன் ஹிக்கி, இந்த தண்டனைகளுக்கும் அரசு மிரட்டல் - பயமுறுத்தல்களுக்கும் அஞ்சாமல், தலைமை ஆளுநர் ஹேஸ்டிங்சையும் தலைமை நீதிபதி சர். எளிஜா இம்பே (Sir Ellijah Impey) என்பவரையும்

முன்பைவிடக் கடுமையாகத் தாக்கித் தனது பத்திரிகையில் எழுதினார்.

விடுமா இங்லீஷ் கம்பெனி அரசு? பத்திரிகை ஆசிரியர் ஹிக்கியைக் கைது செய்யும் ஆணையுடன் நானூறு காவலர்கள் கொண்ட ஆயுதப் படை சென்றது. சும்மா இருப்பாரா அந்த இங்லீஷ்கார 'ஆணவி'களை எதிர்க்கும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர்?

அச்சகத்துள் நுழைந்த அந்த இங்லீஷ் காவலர்களை ஹிக்கி கடுமையாகத் தாக்கினார். அச்சக இரும்புக் கருவிகளை, இயந்திர சாமான்களை வீசி எறிந்து கண்டபடி அவர்களைக் காயப்படுத்தினார். அவரைக் கைதியாகச் . சிறைப்பிடிக்க முடியாமல், அந்தப் படை திரும்பி விட்டது. ஆனால், ஹிக்கி, தான் ஒரு பத்திரிகை ஆசிரியன் என்ற தன்மானத்தோடும் மரியாதையைக் காக்கும் எண்ணத்தோடும் கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் நீதிபதி முன்பு நின்றுவிட்டார்.

நீதிமன்றம் ஹிக்கிக்கு ஓராயிரம் ரூபாயைப் பிணைத் தொகையாகக் கட்ட உத்தரவிட்டது. பத்திரிகை ஆசிரியனால், அதுவும் ஆட்சியை எதிர்க்கும் ஒரு பத்திரியாளரால் எப்படிக் கட்ட முடியும்? ஹிக்கி காரக்கிரகத்துள் தள்ளப்பட்டார். தான் ஒரு பத்திரிகையாளன் என்ற சுயமரியாதையை அவர் நிலை நாட்டினார்! இருந்தும் தட்டத் தட்ட உயரே பந்து எழுவதைப் போல, இந்தப் பத்திரிகை விரோதிகளுக்காக அவர் பயப்படாமல் சிறை உள்ளே இருந்தவாறே தனது 'வங்காளக் கெசட்' இதழை நடத்தி வந்தார்.

தண்டனை பெற்று விட்டதற்காக, ஹிக்கி அஞ்சவில்லை. முன்பைவிட மிகக் கடுமையான நடையில் ஆட்சிப் போக்கை எதிர்த்து எழுதினார். அவரது பத்திரிகை வழக்கை விசாரித்த நீதிபதி அவரது ஒரு குற்றத்துக்காக மட்டும் ஓராண்டு சிறை தண்டனை—; இருநூறு ரூபாய் அபராதம் என்றார்.

அடுத்து தலைமை ஆளுநர் வாரன் ஹேஸ்டிங்ஸ் ஹிக்க பத்திரிகை மீது தொடுத்த வழக்கிற்காக, 5000 ரூபாய் இழப்பீட்டுத் தொகை கட்ட வேண்டும் என்று தீர்ப்பளித்தார் - அதே நீதிபதி. ஹிக்கி தனது வழக்கை மறு விசாரணைக்கு

கொண்டு சென்றபோது, அந்த நீதிபதி தலைமை ஆளுநருக்கு ஹிக்கி கட்ட வேண்டிய இழப்பீட்டுத் தொகையை ரத்து செய்தார்.

கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியும், அதிகாரிகளும் ஒரு பத்திரிகையாளர் மீது இத்தகைய ஓர் அடக்க முறையை ஏவி விட்டதைக் கண்டு ஹிக்கி அஞ்சவில்லை. ஓர் ஆசிரியன், பத்திரிகையாளன்; ஆட்சியின் கெடுபிடிக் கொடுமைகளை எப்படி எதிர்த்து ஏறுநடை போட வேண்டும் என்பதற்கான ஓர் எடுத்துக்காட்டாக அன்றே அவர் நின்று காட்டிய மாவீரராகத் திகழ்ந்தார்.

ஆனால் ஹிக்கி, பத்திரிகை ஆசிரியனுக்கும் பத்திரிகை நடத்துவோனுக்கும் பத்திரிகை சுதந்தரம் தேவை என்பதை உணர்ந்து அதையும் கட்டுரை வடிவில் தனது எண்ணமாக வெளியிட்டார்.

'பத்திரிகை ஆசிரியனால், பத்திரிகையாளனால் ஓர் ஆட்சியில் எதையும் ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும் ' என்ற பேனா முனை வீரர் வால்டேரின் கருத்துக்களுக்குச் சான்றாக, இந்திய விடுதலையின் தந்தையாக இயங்கிய அண்ணல் காந்தி அடிகள், தென் ஆப்பிரிக்காவில் 'இண்டியன் ஒப்பீனியன்' Indian Opinion என்ற பத்திரிகைக்கு அவர் ஆசிரயராக பணியாற்றியபோதே, பத்திரிகைகளுக்குரிய நான்கு ஒழுக்கங்களை, கடமைகளை வெளியிட்டார். அவை இவை :

1. பத்திரிகைகள் உண்மையாகப் பணி புரியவேண்டும்.

2. உண்மையான கருத்துக்களை மட்டுமே உலகுக்கு உரைப்பது; உணர்த்துவது.

3. நேர்மையாக ஆட்சியின் குறைகளை எடுத்துக் கூறுவது.

4. எதை எழுதினாலும் - எழுத்துக்களைத் தன்னடக்கத் துடனேயே ஆட்சி செய்வது

இந்தக் கருத்துக்கள் நான்கும் பல ஆண்டுகளுக்கு முன்பு காந்தி அண்ணலால் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இவை இப்போதும் இளம் தலைமுறைப் பத்திரிகையாளர்களுக்கும் பொருந்துகிறது அல்லவா?

*சங்கராச்சாரியார்
சந்திரசேகரர்:*

அண்ணல் மகாத்மா கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே, காஞ்சி பெரியவர் சந்திரசேகர பரமாச்சாரியாரும் பத்திரிகையாளர்களுக்குச் சில நெறிகளைக் கூறியுள்ளார். அவைக் கீழ்க்கண்டவை :

''அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கும் வரையில் எல்லா கல்வியும் வாய்மொழியாகச் சொல்லி, காது வழியாகக் கேட்டே, வழிவழியாக வளர்ந்து வந்திருக்கிறது''.

''அந்தக் காலத்தில் பனை ஓலையில் எழுதுகிற தேர்ச்சி பெற்றவர்கள் ஒரு சிலரே இருந்தார்கள். மற்றபடி பெரிய வேத வேதாந்தம் தெரிந்தவர்கள்கூட எல்லாம் செவி வழியேதான் கேட்டறிந்தார்கள்''

''அச்சு இயந்திரங்கள் வந்தன. அப்புறம் நிறையப் புஸ்தகங்கள், நியூஸ் பேப்பர்கள் ஏற்பட்டு விட்டன. பௌராணிகர்கள் இடத்தை இவை பிடித்துக் கொண்டன''.

'எனவே, பத்திரிகையாளர்களும், எழுத்தாளர்களும் தான் இன்றை பௌராணிகர்கள். ஸுதெரும் மற்றும் பௌராணிகர் களும் எப்படி தர்மங்களை ரஸமான கதைகள் மூலம் பொது ஜனங்களிடையே பிரச்சாரம் செய்தார்களோ, அவ்விதமே செய்ய வேண்டியது இன்றைய பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களின் கடமை'.

''ஜனங்களுக்குப் பிடித்ததை மட்டுமே சொல்வது என்று வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களின் அறிவை, மனத்தை உயர்த்துகிற விஷயங்களையே எழுத வேண்டும். இதைச் சுவாரசியமாகச் செய்ய வேண்டும். உத்தமமான விஷயங்களைப் புதுப்புது விதங்களில் உணர்த்த வேண்டும்''.

''பத்திரிகையாளர்கள் வாழ்நாள் முழுவதும் மாணாக்கர் களாகவே இருந்தால்தான், இப்படிப் புதுப்புது விஷயங்களை அறிந்து மற்றவர்களுக்குப் பிரச்சாரம் செய்ய முடியும்''

''சத்தியத்தை சர்க்கரைப் பூச்சிட்ட மாத்திரைகளாக்கித் தரவேண்டும். சர்க்கரைப் பூச்சுத்தானே ஒழிய, முழுவதும்

சர்க்கரை ஆகிவிடக் கூடாது. வெறும் சர்க்கரை உடம்புக்கு நல்லதல்ல. வெறும் இந்திரிய ரஞ்சகமான சமாச்சாரங்களில்தான் ஜனங்களுக்கு அதிகக் கவர்ச்சி இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு அவ்விதமே எழுதுவது சரியல்ல''

''ஜனங்களுக்கு ஆத்மாபிவிருத்தி தருகிற முறையில் எழுதுவதற்கு எழுத்தாளர்கள் முனைந்தால், தானாகவே ஜனங்களுக்கு ருசி பிறக்கும்; நம்மையும் உயர்த்திக் கொண்டு நம் வாசகர்களையும் நாம் உயர்த்த வேண்டும்'' என்கிற கடமை உணர்ச்சியைப் பத்திரிகையாளர்களும், எழுத்தாளர்களும் பெற வேண்டும்''

''இவ்விதம் ஆத்ம க்ஷேமம், லோக க்ஷேமம், சாந்தி, சுபிட்சம் எல்லாவற்றுக்கும் மெய்யான சேவை செய்கிற பாக்கி யத்தைப் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் பெற வேண்டும்'' என்று; 'தெய்வத்தின் குரல்' முதல் தொகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி, கிழக்கு இந்தியக் கம்பெனி வர்த்தகத்தில் நடந்த ஊழல்களையும், ஹேஸ்டிங்ஸ் குடும்ப விவகார உறவியல் ஈனங்களை அவர் அம்பலப்படுத்தியதை யும், அரசு அதிகாரிகள் அனைவரும் எதிர்த்ததைக் கண்ட கம்பெனி ஊழியர்களில் சிலர், அரசு ஆதரவுடன் அவர்களது அனுமதியைப் பெற்று 'இந்தியா கெசட்' (India Gazette) என்ற பத்திரிகையை அதே 1780-ஆம் ஆண்டே துவக்கினார்கள். அவர்களுக்கு ஹேஸ்டிங்ஸ் அரசு அஞ்சலக சலுகையை அளித்தது. இதைக் கண்ட ஹிக்கி, அரசின் பாரபட்சப் பத்திரிகைப் போக்கை எதிர்த்து எழுத்துப் போரிட்டார். என்ன பயன்? பாவம்தான் மிச்சம்!

ஹிக்கிக்குப் பிறகு 1784-ஆம் ஆண்டில் 'கல்கத்தா கெசட்', 'வங்காள ஜெர்னல்', ஓரியண்டல் மேகசின்' அல்லது 'கல்கத்தா அம்யூஸ்மெண்ட்' என்ற பத்திரிகைகள் அடுத்தடுத்து வெளிவந்து ஹேஸ்டிங்ஸ் பிரபுவுக்கு ஜால்ரா தட்டிக் கொண்டே நடந்தன. இந்த மூன்றுக்கும் துணையாக 'கல்கத்தா கிராணிக்கல்'(Calcutta Chronicle) என்ற பத்திரிகை 1786ல் வெளி வந்து ஓங்காரமாக தாள ஓலமிட்டது.

இந்த ஜால்ரா கலைக்கு எதிராக, அஞ்சா நெஞ்சோடு, 'இந்தியன் வொர்ல்டு' (Indian World) என்ற பத்திரிகையை வில்லியம் டூன் (William Dune) என்பவர் தோற்றுவித்தார். ஆனால், இடையே பல இடையூறுகளால் அது நின்று விட்டது.

மேலே கூறப்பட்டவை அனைத்தும் வங்க் மாநிலத்திலே இருந்து வெளிவந்ததைக் கண்ட 'மெட்ராஸ் ஸ்டேட்' (Madras State) என்று வெள்ளையர்களால் அழைக்கப்பட்ட இன்றைய தமிழ்நாட்டின் சென்னை நகரிலிருந்தும் சில பத்திரிகைகள் வெளி வந்தன.

## தமிழ்நாட்டில் பத்திரிகைகள்

'சென்னை கூரியர்' (Madras Courier) என்ற வார ஏடு 12.10.1785ல் வந்தவற்றுள் ஒன்று. அதன் ஆசிரியர் ரிச்சர்டு ஜான்சன் என்பவர். அவர் கிழக்கிந்திய கம்பெனி ஆதரவுடன் அந்தப் பத்திரிகையைத் துவக்கினார். காரணம், ஹிக்கியைப் போல நம்மால் கம்பெனிக் கொடுமைகளுக்கு ஈடு கொடுக்க முடியாது என்பதால். இதன் ஆசிரியர் ஹியூக் பாய்டு என்பவர். அவர் சில மாதங்களானதும் அதை விட்டு விலகி 'ஹாரகாரு' (Harakaru) என்ற இதழைத் துவங்கினார்.

ஓர் ஆண்டு முடிவதற்குள் அதன் ஆசிரியர் காலமாகவே, பத்திரிகை நின்று விட்டது. வில்லியம்ஸ் என்பவரால் 1795-ஆம் ஆண்டில் 'சென்னை கெசட்' (Madras Gazette) என்ற ஏடும், ஹாம்ப்ரீஸ் என்பவரை ஆசிரியராகக் கொண்டு, 'இந்தியன் ஹெரால்டு' (Indian Herald) என்ற பத்திரிகையும் வெளி வந்தன.

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் கிழக்கு இந்தியக் கம்பெனியின் விசுவாசிகளுக்கே பத்திரிகை நடத்தும் அனுமதியை, அதற்கான பிற சலுகைகளை இங்லீஷ்காரர்கள் வழங்கி வந்தார்கள். அவர்களுக்கு எழுத்துரிமை காக்கும் உணர்வே இல்லை. ஏதோ பிழைப்புக்காகவே பத்திரிகை நடத்துபவர்களாக இருந்தார்களே தவிர, இலட்சியமோ, மக்கள் சேவையோ அவர்களுக்குக் கடுகளவும் கிடையாது.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் தலைமை நிர்வாகம், கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகங்கள் அந்தந்த மாநிலத் தலைநகரங்களிலே இயங்கி வந்தன. பெங்கால் ஸ்டேட்டுக்கு அதன் தலைநகர் கல்கத்தாவிலும், பாம்பே ஸ்டேட்டுக்கு அதன் தலைநகரமான பாம்பேயிலும், மெட்ராஸ் ஸ்டேட்டுக்கு அதன் தலைநகரான சென்னை மாநகரிலும் அதனதன் கிழக்கு இந்தியக் கம்பெனி நிர்வாகங்கள் மூலமாக நடந்து வந்தன என்பதும் குறிப்பிடத்தக்க அரசியல் வரலாறாகும்.

பெங்கால் ஸ்டேட்டில் இருந்து வெளி வந்த பத்திரிகையாளர்கள் யார் யார் என்பதையும், பத்திரிகைகளின் பெயர்களையும், அதனதன் பண்புகளையும் படித்தீர்கள். இவர்களுள் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவர் ஒருவர்தான் பத்திரிகையாளர் ஆண்மகனாகத் திகழ்ந்து தண்டனைகளையும், அபராதத் தொகைகளையும் கட்டி, 'ஆட்சி எதிர்ப்பு' என்ற தனது இலட்சியத்திற்காக இதழியல் துறையைத் திசை திருப்பும் கலங்கரை விளக்கமாக விளங்கினார். மற்ற எல்லாப் பத்திரிகை யாளர்களும் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகப் பிழைப் பெனும் பஜனைக்குரிய ஜால்ராக்களாகவே திகழ்ந்தார்கள்.

### பம்பாய் மாநில பத்திரிகைகள்

மராட்டிய மாநிலத்தின் முதல் இதழாக, பம்பாய் மாநகரிலிருந்து 'பம்பாய் ஹெரால்டு' (Bombay Herald) என்ற பத்திரிகை 1789-ஆம் ஆண்டில் வெளி வந்தது. அடுத்தபடி யாக 1790-ஆம் ஆண்டில் 'பம்பாய் கூரியர்' (Bombay Courier) என்ற இதழை; லூக் ஆஸ்பர்னர் என்பவர் வெளியிட்டார்.

### பத்திரிகைகளுக்கு ஒழுங்கு முறைச் சட்டம்

வங்காள மாநிலத்திலேயே, கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாக ஒழுங்கை எதிர்த்தும், ஆதரித்தும் பத்திரிகைகள் சில வெளிவந்தன. அரசை எதிர்க்கும் பத்திரிகைகளை விட, ஆதரிக்கும் பத்திரிகைகளே அதிகமாக வெளி வந்தன.

கி.பி. 1790-ஆம் ஆண்டிற்குப் பின்பு ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் அவரவர் தாய்மொழிகளில் பத்திரிகைகள்

வெளிவர ஆரம்பித்தன. அதே வேகத்தில் அவை வளர்ச்சியும் பெற்றன. அதனால், பத்திரிகைகள் ஒழுங்கு முறைச் சட்டத்தை கம்பெனி நிர்வாகம் 1790-ஆம் ஆண்டில் கொண்டு வந்தது. இந்த ஒழுங்கு முறைகளால் இதழ்கள் நன்கு வளர்ச்சிப் பெற்றன.

அந்த வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக : கல்கத்தாவிலிருந்து 'ஏசியாடிக் மிரர்' (Asiatic Mirror) என்ற பத்திரிகை 1794-ஆம் ஆண்டிலும், 1791-ஆம் ஆண்டில் 'ஓரியண்டல் ஸ்டார்' (Oriental Star) என்ற இதழும், 1795-ஆம் ஆண்டில் 'கல்கத்தா கூரியர்' (Calcutta Courier-ரும், 'இண்டியன் அப்பல்லோ'வும் 'பெங்கால் ஹாரகாரு' என்ற ஏடு 1795-ஆம் ஆண்டிலும் 'டெலி கிராப்' (Telegraph) எனும் தாளிகை 1796-லும் 'ரிலேட்டர்' "Relater" எனும் இதழ் 1799-ஆம் ஆண்டிலும் அடுத்தடுத்து வெளிவந்து கொண்டே இருந்தன.

வாரன்ஹேஸ்டிங்ஸ் தலைமை ஆளுநர் பொறுப்பில் இருந்து விலகிச் சென்றதும், லார்டு வெல்லெஸ்லி (Lord Wellesley) என்பவர் 13.5.1799ல் தலைமை ஆளுநராகப் பதவியேற்ற பின்பு, பத்திரிகைகளுக்கான ஒழுங்குமுறைகள் திட்டம் ஒன்றை அவர் வெளியிட்டார். அவை இவை :-

ஒவ்வொரு இதழிலும் அதனை அச்சிடுவோர், ஆசிரியர், உரிமையாளர் பெயர்களை வெளியிட வேண்டும். ஏன் இந்த திட்டம் பிறந்தது? சிரிக்கக் கூடாது : சிந்திக்க வேண்டும். ஏனென்றால் இன்றும் நாம் நமது பத்திரிகைகளில் மேற்கண்ட முறையைப் பின்பற்றி வரும் சட்டமாக இருக்கின்றது. அதனால் சிரிக்கக் கூடாது என்றோம்.

தலைமை ஆளுநர் வாரன்ஹேஸ்டிங்ஸ் துணைவியாருடைய பாலியல் அசிங்கங்களை, வங்காள கெசட் பத்திரிகையின் ஆசிரியரான ஹிக்கி என்பவர் தனது பத்திரிகையில் எழுதுவதற்குக் கட்டுரையாக்கியிருந்தக் கருத்தை, வேறோர் ஆட்சி எதிர்ப்புக் கம்பெனி ஊழியர் எடுத்துக் கொண்டு சென்று துண்டறிக்கையாகப் (12'x8'' அளவில்) பக்கமாக்கி, அதனை மக்களுக்கு வெளியிட்டு அக்கருத்தை முன்கூட்டியே பரப்பி விட்டார்.

இதனை அறிந்த வாரன்ஹேஸ்டிங்ஸ், யார் அந்தக் கருத்தை வெளியிட்டவர்? எந்த அச்சகத்தில் அது அச்சடிக்கப்பட்டது? அதன் உரிமையாளர் யார்? முகவரி என்ன என்பதைக் கண்டுபிடிக்கப் பெரும்பாடுபட்டும், காவலர்களால் அந்த விவரத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் அடங்கா சினம் கொண்ட ஹேஸ்டிங்ஸ் இதழ்களுக்கான ஒழுங்கு வகைகளை, ஒழுக்க முறைகளைப் புதிதாகக் கொண்டு வந்தார்.

அதற்குள் ஹேஸ்டிங்ஸ், 1799-ஆம் ஆண்டில் பதவியை விட்டு விலகி விடவே, புதிதாக 13.5.1799ல் பதவியேற்ற லார்டு வெல்லெஸ்லி, ஹேஸ்டிங்ஸ் ஒழுங்கு முறைச் சட்டத்தை மீண்டும் வெளியிட்டார். அந்தச் சட்டம் இது :-

1. ஒவ்வொரு பத்திரிகையிலும் யார், அதை அச்சிடுகிறார்கள்? ஆசிரியர் யார்? சொந்தக்காரர் யார்? முகவரி என்ன? என்ற விவரத்தை வெளியிட வேண்டும்.

2. பத்திரிகை ஆசிரியர், அதன் சொந்தக்காரர் இருவரும் தலைமைச் செயலாளரிடம் அவரவருடைய முகவரிகளைக் கூற வேண்டும்.

3. என்ன செய்திகளைப் பத்திரிகையில் வெளியிட ஆசிரியரும், உரிமையாளரும் வெளியிட விரும்புகின்றனரோ, அவற்றை எல்லாம் அரசு தலைமைச் செயலரிடம் காண்பித்து, அவருடைய முன் ஒப்புதலைப் பெற்ற பின்பே அச்சிட வேண்டும்.

4. பத்திரிகைகளை ஞாயிற்றுக் கிழமை தோறும் வெளியிடக் கூடாது.

5. ஒரு பத்திரிகையின் கட்டுப்பாட்டாளர்; அந்த ஏட்டின் ஆசிரியரோ, அச்சகத்தாரோ, உரிமையாளரோ அல்லர்; அரசின் செயலாளர்தான் அதன் கட்டுப்பாட்டாளர் ஆவார்.

6. மேற்கண்ட விதிகளை மீறுபவர்களுக்கு வழக்கு மன்றமோ, அபராதம் விதிப்பதோ ஏதும் கிடையாது. உடனே அவர்கள் நாடு கடத்தப்படுவார்கள்.

என்பவை தான் லார்டு வெல்லெஸ்ஸி வெளியிட்ட பத்திரிகைச் சட்டம். நாடு கடத்தப்படுவார்கள் என்றால், இந்திய மண்ணிலே பிறந்தவன் இங்கிலாந்து மண்ணிலா நடமாடுவான்? அன்று அன்று! சட்டத்தை அன்று மீறுபவர்களிலே பெரும்பான்மையர் இங்கிலாந்துக்காரர்களே ஆவர்! அதனால் அவர்களை மிரட்டி அச்சுறுத்திடவே இந்த நாடு கடத்தல் தண்டனை ஆகும்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி நிர்வாகத்தின் கீழ், பத்திரிகைகள் ஏறக்குறைய பதினேழு ஆண்டுகளாகத் திணறித் தவித்துக் கொண்டிருந்தன. வெல்லெஸ்ஸியின் பத்திரிகைச் சட்டத்தால் பத்திரிகை ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டார்கள். தலைமறைவு வாழ்க்கை நடத்தினார்கள். என்ன காரணம் இதற்கு?

சில ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், அச்சகத்தார்கள் சில இதழ்களில் அவரவர்கள் பெயர்களை அச்சடிக்காமலேயே வெளியிட்டும், விற்பனை செய்து கொண்டும் இருந்த நிலை அரசுக்கு எட்டிற்று.

குறிப்பாக, அரசியல் விவகாரங்கள் பத்திரிகைகளில் வெளியிட்டது போக; இப்போது மதக் குழப்பத்தை மக்கள் இடையே பரப்பும் வகையில், கிறித்துவ மதக் குருக்கள், இந்து சமயத்தையும், முகமதிய மதத்தையும் அவரவர் பத்திரிகைகளிலே தாக்கி எழுதும் நோக்கத்தில் எழுதி, அந்தந்த மதத்திலே குழப்பங்களை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் பத்திரிகைக் குழப்பவாதிகளைக் கண்ட தலைமை ஆளுநரான லார்டு மிண்டோ (Lord Minto) அவற்றை அச்சடிக்கும் அச்சகங்களை உடனே கல்கத்தா நகருக்கு மாற்றுமாறு உத்தரவிட்டார்.

ஏறக்குறைய 13 ஆண்டுகளுக்குப் பிறகு, 1813-ஆம் ஆண்டில் மீண்டும் வாரன்ஹேஸ்டிங்ஸ் தலைமை ஆளுநராக பொறுப்பேற்றுக் கொண்டார் - கம்பெனி ஆட்சிக்கு. இவர் வெல்லெஸ்லி போட்ட பத்திரிகைச் சட்டத்தின் கெடுபிடியைச் சிறிது தளர்த்தியதால், மறுபடியும் இதழியல் துறையில் கணிசமான வளர்ச்சியும், கண்ணியமான கருத்துக்களும் இடம் பெற்று வலம் வந்தன.

வாரன் ஹேஸ்டிங்ஸ் பதவி ஏற்ற பின்பு, *1815*-ஆம் ஆண்டில், 'வங்காள கெசட்' என்ற பத்திரிகை ஆங்கில வார ஏடாக வெளி வந்தது. இதன் ஆசிரியர் கங்காதர் பட்டாச்சாரியார். இந்த பத்திரிகை ஒரே ஒரு வருடம் மட்டுமே வெளி வந்து நின்றது.

மதக் குழப்பத்தை உண்டாக்கும் சொரம்பூர் கிறித்துவப் பாதிரியர்களின், 'திக்-தர்சன்' என்ற வங்காள மாதப் பத்திரிகையும், *1818*-ஆம் ஆண்டில் 'கார்டியன்' என்ற ஏடும், 'சமாச்சா தர்பன்' என்ற வங்க வார இதழும், 'பிரண்ட் ஆஃப் இந்தியா' (Friend of India) என்ற இங்லீஷ் மாத இதழும் வெளி வந்தன.

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பு, இந்தியர்களுக்கு நாட்டுப் பற்றை உருவாக்கிட ஆலன் அக்டேவியஸ் ஹ்யூம் எவ்வாறு சுதந்தர உணர்வுக்குத் தந்தையாக விளங்கினாரோ, அதே போன்றே, 'ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம், இராசாராம் மோகன்ராய் என்ற இருபெரும் இதழாசிரியர்கள் விளங்கினார்கள். அவர்கள் அந்தக் காலத்திலேயே பத்திரிகை சுதந்தரத்திற்காகப் பெரும் போராட்டக் களம் கண்ட மாவீரர்கள்' என்று M. Chalapathi Rau, "The Press', National Book Trust of India, 1974 என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

இராசாராம் மோகன்ராய் பத்திரிகைச் சுதந்திரத்துக்காக வீதி வீதியாகக் கூட்டம் போட்டுப் பொது மக்களுக்குப் பத்திரிகை அருமையைப் பெருமையாகப் பறையறைந்த பத்திரிகைச் சுதந்தர வீரர் ஹிக்கிக்கு வாரிசாக வாய்த்தவர். இந்து - கிறித்துவ மதவாதிகளின் மமதையெனும் நெருப்பாற்றை நீந்திக் கரை கண்டவர். அவர்களது அருமையான உழைப்புக்களை அறிந்தவர்கட்குத்தான், பத்திரிகை வளர்ச்சி எத்துணைப் பூகம்ப பிளப்புக்களைத் தாண்டி மீண்டு வந்துள்ளது என்ற வரலாற்றருமையை நம்மால் புரிய முடியும்.

## இராசாராம் மோகன்ராய் - *1772 - 1883*
## (Raja Ram Mohan Roy)

ஆன்மிக ஞானிகளும் அறிவியல் வித்தர்களும் தோன்றிய வங்க மாநில பர்த்துவான் மாவட்டத்தில் இராதா நகரம் எனும்

சிற்றூரில் 1772-ஆம் ஆண்டில் தோன்றியவர் இராசாராம் மோகன் ராய். அவருக்கு 14 மொழிகளில் பேரறிவும் புலமையும் இருந்தது.

'கடவுள் ஒருவரே! பல கடவுள்கள் இல்லை, அவருக்கு உருவம் கொடுத்துக் கொண்டாட வேண்டியதில்லை' என்று ராய், வங்கப் புலவர்கள் இடையே வாதாடி வாகை சூடியவர். அதற்குக் காரணம், 1786-ஆம் ஆண்டு முதல் காசி மாநகரில் வேதங்களையும், உபநிடதங்களையும் அவர் பயின்று இந்து சமயத்தின் அடிப்படை உண்மைகளை உணர்ந்து கொண்டது தான்.

இராம் மோகனர் இங்லீஷ்காரர்களுடனும், கிறித்துவப் பாதிரிகளுடனும், முஸ்லீம்களுடனும் அமர்ந்து உணவு உண்பதால், அவரை நாத்திகர் என்றும், இந்து மதத்தின் விரோதி என்றும் இந்து பிரமணர்கள் பிரச்சாரம் செய்தார்கள்.

இராசாராம், இந்து, முஸ்லீம், கிறித்தவ சமயங்களைச் சீர்த்திருத்துவதோடு இராமல், இந்தியப் பத்திரிகைச் சுதந்தர வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். அவர் கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகப் பணியிலே இருந்து ஓய்வுப் பெற்றபோது, சமஸ்கிருதம், பாரசீக மொழி, அராபிய மொழி, ஹீப்ரு மொழி, கிரேக்க மொழி, இங்லீஷ் மொழி, வங்கமொழி போன்ற மொழிகளிலே எதைப் பற்றியும் விவாதித்து வாதாடும் வல்லமை பெற்றவராக விளங்கினார்.

கணவன் இறந்த பின்பு அவனுடன் உடன்கட்டை ஏறும் சதி என்ற திட்டத்தை இராசா ராம் எதிர்த்துப் போராடி வந்ததைக் கண்ட அப்போதைய தலைமை ஆளுநராக இருந்த வில்லியம் பென்டிங் பிரபு; உடன்கட்டை ஏறுவதைத் தடுக்கும் சட்டத்தை 1829-ஆம் ஆண்டில் கொண்டு வந்து அமல் படுத்தினார்.

இந்து மதத்தில் உருவ வழிபாடுகளைச் செய்யும்போது விலங்குகளை உயிர்ப்பலி கொடுப்பதையும், ஒருவன் பல திருமணங்களைச் செய்து கொள்ளும் பழக்கத்தையும், சாதி முறைகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளையும் தீவிரமாக ஒழித்துக்கட்டத் தனது பத்திரிகை எழுத்துக்கள் மூலமாக அரும்பாடுபட்டார்.

ஒவ்வொரு இந்தியனும் ஆங்கில மொழியைக் கற்கவேண்டும் என்றார். இந்திய அரசியல் விடுதலைக்காகத் தொண்டாற்றினார். அதற்காகத் தனது தீவிர எழுத்துக்களைப் பயன்படுத்தினார். ஆங்கிலத்தில் 'பிராமனிக்கல் மேக்கசின்' (Brahmancial Magazine) என்ற பத்திரிகையை நடத்தினார். வங்காள மொழியில் 'சம்பத் கௌமதி' (Sambad Kaumdi) என்ற இதழையும், பாரசீக மொழியில் 'மீரட்-அல்-அக்பர்' (Mirat-ul-Akbar) என்ற புரட்சி ஏட்டையும் துவக்கிப் பணிபுரிந்தார்.

மத மூடநம்பிக்கைகளை எதிர்த்து இராசாராம் மூன்று பத்திரிகைகளையும் மூன்று மொழிகளில் நடத்தி வந்ததால், தினந்தோறும் அவர் பத்திரிகைகள் எதிர்ப்புக்களைச் சந்தித்தார். அவருக்கு அரசியல் எதிர்ப்புகளும், சமுதாயத்தில் பழமை விரும்பிகளின் போராட்டங்களும் மதவாதிகளின் கண்டனங் களும் மலைபோல் குவிந்தன.

இராசாராம் நடத்திய வங்கமொழிப் பத்திரிகையில் பணிபுரிந்த ஆசிரியர் ஒருவர், அவரது பத்திரிகையிலிருந்து விலகி, அவருக்கு எதிர்ப்பாளர்கள் யார்யாரோ அவர்களுடன் அணி சேர்ந்துக் கொண்டு, 'சமாச்சார் சந்திரிகா' (Samachar Chandrika) என்ற ஓர் இதழை நடத்தி, இராசாராமைக் கடுமையாக எதிர்த்து எழுதினார்.

அதே நேரத்தில் இராசாராம் கிறித்துவப் பாதிரிகள் இந்து சமயத்தைத் தாக்கி எழுதும் கேள்விகளுக்குப் பதில் கூறும் நிலையும் ஏற்பட்டது. எழுதினார், கடுமையாக எழுதினார். புரட்சிக் கருத்துக்களை மக்களுக்கு விளக்கிக் கூறி, தனது கொள்கைகளில் வெற்றியும் பெற்றார். அப்போதுதான் இராசாராமுக்கு ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம் "James Silk Bucking hom" என்பவர் நண்பரானார். இருவரும் இணைந்து எல்லா எதிர்ப்புக்களையும் சமாளித்தார்கள். பத்திரிகைச் சுதந்தரத்தை யும், அதன் மரியாதை, மதிப்பையும் காத்திடப் பெரிதும் அவர்கள் போராடினார்கள்.

ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம் என்ற இந்த பத்திரிகையாளர் இங்கிலாந்தில் பிறந்து, 1786-ஆம் ஆண்டு முதல் 1855 வரை

வாழ்ந்தவர். அவர் ஒரு கப்பல் தலைவர். அவர் பணியாற்றியக் கப்பலில் அடிமைகளைக் கம்பெனி நிர்வாகம் ஏற்றி வந்ததால், அதை எதிர்த்து மனித உரிமைகளுக்காகப் போராடித் தனது பணியை விட்டு விலகியவர். இவர் இந்தியப் பத்திரிகைச் சுதந்தரத்துக்காக, இராசாராம் மோகன்ராயுடன் சேர்ந்துப் போராடிய ஓர் இலட்சிய வீரர் ஆவார்.

'கல்கத்தா ஜர்னல்' (Calcutta Journal) என்ற பத்திரிகையை ஜேம்ஸ் 1818-ஆம் ஆண்டில் இந்தியாவில் நடத்தினார். கிழக்கிந்திய கம்பெனியில் நடைபெறும் ஊழல்களை அவர் அஞ்சாமல் வெளியிட்டதோடு நில்லாமல், இந்திய மூடப்பழக்க வழக்கங்களில் ஒன்றான உடன்கட்டை ஏறும் சதியை ஒழிக்க அவர் சேவை செய்தார். அதனால் அவரது பத்திரிகை மக்களிடையே பரபரப்பாக விற்பனையானது.

விடுவார்களா கம்பெனி ஆட்சியாளர்கள் ஜேம்ஸை? அதனால் 1823-ஆம் ஆண்டில் அவரை மீண்டும் தாய்நாடான இங்கிலாந்து நாட்டுக்கே திருப்பி அனுப்பி விட்டார்கள்!

இங்கிலாந்து சென்ற பக்கிங்ஹாம், அங்கும் வாளாவிராமல் 'ஓரியண்டல் ஹெரால்டு' என்ற பத்திரிகையை அங்கே துவக்கி, இந்தியாவில் கம்பெனி செய்யும் அக்கிரமங் களை ஜேம்ஸ் கண்டித்து எழுதினார். அவர் இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினரானார். கம்பெனிக்கு அளித்து வந்த வணிக ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கும் மசோதாவை எதிர்த்து வாதிட்டார். இந்தியர்களுக்கும் கம்பெனி நிர்வாகத்தில் உரிய பங்களிக்க வேண்டுமென அவர் போர்க்கொடி உயர்த்தினார்.

பக்கிங்ஹாம், இராசாராமுடன் இணைந்தும், தனித்து நின்றும் தனது பத்திரிகைப் பணியைச் சிறப்பாக நடத்தி, இந்தியப் பத்திரிகை உலகுக்கு சுதந்தரம் வழங்க வேண்டும் என்பதற்காக ஓயாமல் உழைத்தார்.

இவ்வாறாக, இந்தியாவின் வடபகுதியில் பத்திரிகைச் சுதந்தரத்திற்காகப் பல போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. இந்த உரிமைப் போர்களைக் கண்ட,

வாரன் ஹேஸ்டிங்ஸ் என்ற தலைமை ஆளுநர், சில ஒழுங்கு முறை வசதிகளைச் செய்து கொடுக்கத் திட்டங்களை வகுத்தார்!

இந்தியாவில் கிழக்கு இந்தியா கம்பெனியின் ஆட்சிக்கு மீண்டும் தலைமை ஆளுநராகப் பொறுப்பேற்ற வாரன் ஹேஸ்டிங்ஸ். 1818-ஆம் ஆண்டில் இந்தியப் பத்திரிகைகளை அச்சேற்றுவதற்கு முன்பு, செய்திகளைத் தணிக்கை செய்ய வேண்டும் என்றிருந்த கட்டுப்பாட்டைத் தளர்த்தினார்.

பத்திரிகை ஆசிரியர்களுக்குரிய சில பொறுப்புக் களையும், உரிமைகளையும் அவர் வழங்கினார். அவருக்குப் பிறகு வில்லியம் பெண்டிங் பிரபு அதே பதவிக்கு வந்தார். பத்திரிகைகள் அனுபவித்தக் கெடுபிடிகளைத் தளர்த்தி, இந்திய மொழிப் பத்திரிகைகள் வளர்ந்திட மேலும் வசதிகளைச் செய்தார்.

அவருக்குப் பிறகு ஆக்லண்ட் பிரபுவும், எல்லன் பரோ பிரபுவும், ஹார்டிங்ஸ் பிரபுவும், டல் ஹௌசி பிரபுவும் 1836 - ஆம் ஆண்டு முதல் 1856-வரை தலமை ஆளுநர் பதவிக்கு வந்தார்கள். இவர்களுக்குப் பிறகு 1855- ஆம் ஆண்டு இறுதியில் மெட்காஃப் என்ற தலைமை ஆளுநர் கொண்டு வந்த பத்திரிகைச் சட்டம், வங்கம், பம்பாய், சென்னை, இந்தியாவின் வடமேற்கு மாநிலங்களில் பத்திரிகைகள் வளர்ச்சி பெற்றிட வழிசெய்தது.

இந்தத் தலைமை ஆளுநர்களது ஆட்சிக் காலத்தில் அச்சு இயந்திரங்களின் வளர்ச்சி புதுப்புது வகையில் தோன்றி அச்சுக் கலை முன்னேற்றத்தில் ஒரு மறுமலர்ச்சி உண்டானதால், பத்திரிகைகள் வேகமாகவும், புதுப்புது மேல் நாட்டு நுட்பங்களோடும், செய்திகளை விரைவாகச் சேகரித்து அனுப்பும் வசதிகளும் பெருகின. அதே நேரத்தில் உலக நாடுகளின் பத்திரிகை வளர்ச்சிகளில் ஏற்பட்ட அச்சுக்கலை முன்னேற்றங்களும் நம்மிடையே ஒன்றிணைந்து புதியதோர் இதழியல் யுகமே உருவானது. அதனால், இந்தியப் பத்திரிகை களும் மேல்நாட்டு பத்திரிகைகளோடு போட்டியிடும் வளர்ச்சி யும் பெற்றன.

## அடக்குமுறை வேதாளம் மீண்டும் மரமேறியது:

பிரிட்டிஷ்காரர்களுடைய புதிய தலைமை ஆளுநர்கள் ஓரளவு பத்திரிகை உரிமைகளைக் கொடுத்த நிலை மாறி, மறுபடியும் அடக்கு முறை என்ற வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையானது. காரணம், 1857-ஆம் ஆண்டில் உண்டான முதல் சுதந்தரப் போர்தான்!

1857 - ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இராணுவத்திற்கும் இந்திய ராணுவ வீரர்களுக்கும் இடையே ஏற்பட்ட மனித உரிமைப் போரை, இந்திய வரலாற்றின் முதல் சுதந்தரப் போரை, ஆங்கிலேயர்கள் 'சிப்பாய் கலகம்' என்று கூற ஆரம்பித்தார்கள்.

முதல் சுதந்தரப் போர், ஆங்கிலேயர்களது கம்பெனி ஆட்சியை வேரோடும் வேரடி மண்ணோடும் நிலை குலையச் செய்துவிட்டது. இந்தியர்களின் இந்த ஆவேசப் போராட்டத்தைக் கண்டு கம்பெனி ஆட்சி பீதியடைந்தது; அச்ச முற்றது; இதற்குக் காரணம் பத்திரிகை பலமல்ல என்றாலும், பத்திரிகைகளை இந்தியாவில் வளரவிடுவது ஆபத்தானது என்று ஆட்சியாளர்கள் எண்ண ஆரம்பித்து விட்டார்கள்.

அந்த அச்சத்தால், 1857-ஆம் ஆண்டில் கம்பெனி நிர்வாக ஆட்சி ஒரு கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்தது. இந்த சட்டத்திற்கு GAGGING ACT அதாவது வாய்ப்பூட்டுச் சட்டம் என்று பெயரிடப்பட்டது-அப்போதைய பத்திரிகை யாளர்களால்! இந்தச் சட்டத்தால் இந்திய இதழ்கள் வளர்ச்சி மிகவும் பாதித்தன.

## விக்டோரியா பேரரசி அறிக்கை

இந்த நேரத்தில் இங்கிலாந்துப் பேரரசி விக்டோரியா, 'இந்தியா இனிமேல் இங்கிலாந்து நாட்டு ஆட்சிக்குக் கட்டுப் பட்டது' என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டார். அத்துடன் கிழக்கு இந்தியக் கம்பெனி ஆட்சியின் நிர்வாகமும் முடிந்தது.

விக்டோரியா மகாராணி அறிவிப்பின்படி Lord Canning கேனிங் பிரபு என்பவர் முதல் வைசியராய் Viceroy என்ற பொறுப்பை இந்தியாவில் ஏற்றதும், பத்திரிகைகள் மீது போடப்பட்ட கெடுபிடி உணர்வுகள் சிறிது தளர்ந்தன. அந்தச் சூழ்நிலையால் 1853 - ஆம் ஆண்டில் "இந்து பேட்ரியட்" **Hindu Patriot** என்ற பத்திரிகையை கிரிஸ் சந்திர கோஷ் என்பவரும், 1868 - ஆம் ஆண்டில் ஷஷிர்ல் குமார் கோஷ் என்பவரால்" அமிர்த பஜார் பத்திரிகா" (Amrita Bazzar Patrika) என்ற இதழும், பிரம்ம சமாஜி யான கேசவ சந்திர சென் என்பவரால் 1870ல் 'சுலப் சமாச்சார்' (Sulab Samachar) என்ற பத்திரிகையையும் அடுத்தடுத்து வெளியிட்டார்கள்.

ஒன்றன்பின் ஒன்றாக இவ்வாறு பத்திரிகைகள் வெளிவந்துக் கொண்டிருப்பதைக் கண்ட அப்போதைய வைசியராய் லார்டு லிட்டன் பிரபு, இந்திய மொழி பத்திரிகைகள் வளர்ந்தால், ஆட்சிக்கு ஆபத்து என்று எண்ணி, இந்திய மொழி பத்திரிகைகளைக் கட்டுப்படுத்திட 1878- ஆம் ஆண்டில் தாய் மொழிப் பத்திரிகைச் சட்டம் (The Vernacular Press Bill) என்ற ஒரு சட்டத்தை இயற்றினார். இந்தச் சட்டத்தை அப்போதைய பத்திரிகையாளர்கள் அனைவரும், 'இது ஓர் அடக்கு முறைச் சட்டம்' என்று கடுமையாக எதிர்த்தார்கள்.

லிட்டன் பிரபுவுக்குப் பிறகு வைசியராயாகப் பதவி ஏற்றிட்ட லார்டு ரிப்பன் "Lord Roppon" 1882 - ஆம் ஆண்டில் லிட்டன் பிரபு சட்டத்தை அடியோடு அகற்றினார். பத்திரிகைகளுக்கு மனிதாபிமான உரிமைகளை வழங்கினார். லார்டு ரிப்பன் எங்களப்பன் என்று பொதுமக்கள் புகழ்ந்து பேசுமளவுக்குப் பத்திரிகைகளும் அவரைப் பாராட்டின. ஆனால், அவருக்குப் பிறகு பதவி ஏற்ற லார்டு எல்ஜின் Lord Elgyn, மிண்டோ பிரபு, செம்ஸ்ஃபோர்டு ஆகிய வைசியராய்கள் ஆட்சிகளில் பழைய லிட்டன் பிரபு அடக்குமுறைகளே தொடர்ந்து நடந்து வந்தன.

# 5

# விடுதலைப் போரில் தமிழ்ப் பத்திரிகைகள்

ஆதிக்கவெறி எனும் ஆணவ சிகரத்திலே வீற்றிருக்கும் ஆங்கிலேயர்களின் அகம்பாவ ஆணிவேரை அறுத்தெறியவும், இந்தியத் திரு நாட்டுக்குரிய விடுதலை ஜோதியை நாடு முழுவதும் ஒளிபடரச் செய்யவும், பம்பாய் நகரிலுள்ள கோகுல் தாஸ், தேஜ்பால் சமஸ்கிருதக் கல்லூரியில், 1885 - ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 28 - ஆம் நாள் நண்பகல் 12-15 மணிக்கு, டபிள்யூ.சி. பானர்ஜீ சுதந்தர விளக்கை ஏற்றி வைத்து ஒளி பரப்பினார்! தாதாபாய் நவ்ரொஜி அந்தக் காங்கிரஸ் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்.

தமிழ் நாட்டின் தலை நகரமான சென்னை மாநகரிலே வசித்து வந்த முக்கிய தலைவர்களும்,'சுதேச மித்திரன்', 'இந்து' ஆங்கில பத்திரிகை ஆசிரியர்களும் 'தேசிய இயக்கப் பிரதிநிதிகளும்' இந்த அகில இந்தியத் தேசியப் பேரவைக் காங்கிரஸ் கூட்டத்திற்குச் சென்று கலந்து கொண்டார்கள்.

வங்கக் கிறித்துவரும், பாரிஸ்டருமான பானர்ஜியின் பெயரை, வங்க மாநிலத்தில் ஐ.சி.எஸ். அதிகாரியாகப் பணிபுரிந்த ஆலன் அக்டேவியன் ஹியூம் என்பவர் தனது பதவியை விட்டு விலகி, காங்கிரஸ் பேரவைத் தலைவரை அந்தக் கூட்டத்தில் முன் மொழிந்தார்.

சென்னை நகரிலிருந்து பம்பாய் சென்று தேசியக் காங்கிரஸ் துவக்க விழா கூட்டத்தில் பங்கேற்றவர்களில் பலர் பத்திரிகையாளர்களாக இருந்ததால், அவர்களும், அவர்களது பத்திரிக்கைகளும் அன்று முதல் அகில இந்தியத் தேசியக் காங்கிரஸ் பேரவை இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பெரிதும் துணை நின்று பணியாற்றினார்கள்.

அவர்களில் 'சுதேச மித்திரன்' நாளேட்டை நடத்திய தி.ஜி.சுப்பிரமணிய ஐயரும், 'தமிழ்நாடு' என்ற தினசரியை நடத்திய டாக்டர் வரதராஜலு நாயுடுவும் ஆங்கிலேயர்களின் அடக்குமுறைகளைச் சந்தித்தவர்கள்'' எண்கிறார் அ.மா.சாமி தனது ''தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி என்ற புத்தக அணிந்துரையில்.

இந்திய மக்களிடம் இருந்த சுதந்தர எழுச்சியுணர்வுகளை ஒன்று திரட்டி, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தத் தூண்டுதல்களாக விளங்கியவை தமிழ்ப் பத்திரிகைகளே என்றால் அது மிகையன்று.

தமிழ் நாட்டில் முதன் முதலாகத் ''தமிழ்ப் பத்திரிகை'' என்ற ஒரு பத்திரிகை வெளிவந்தது. அந்த ஏடு முழுக்க முழுக்க இயேசு கொள்கைக்காகவே பணியாற்றியது என்று மு.இ.முகம்மது மரைக்காயர் எழுதிய 'தமிழ் இலக்கியக் கொள்கை'' என்ற நூல் கூறுகின்றது.

ஆனால், அ.மா.சாமி என்பவர், தமிழின் முதல் பத்திரிகை *1812* - ஆம் ஆண்டில் வெளிவந்தது என்றும், அதன் பெயர் ''*மாசத் தினச் சரிதை*'' என்றும் கூறுகின்றார்.

*கி.பி.1812* - ஆம் ஆண்டுக்கும் - *1882* - ஆம் ஆண்டில் 'சுதேச மித்திரன்' தமிழ் வார இதழ் வெளிவந்ததற்கும் இடைபட்ட *70* ஆண்டுகளில் எந்தத் தமிழ்ப் பத்திரிகையும் வரவில்லையா என்று ஆய்ந்தால், *1831* ஆம் ஆண்டில் கிறித்துவ சங்கத்தினர் 'தமிழ் மேகசி'ன் (Tamil Magazine) என்ற ஒரு பத்திரிகையை நடத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

பெர்சிவல் பாதிரியார் என்ற ஓர் ஆங்கிலேயர். சென்னை நகரில், *1856;* ஆம் ஆண்டில் ''*தினவர்த்தமானி*'' என்ற ஒரு

தமிழ் வாரப் பத்திரிகையை நடத்தி இருக்கின்றார். இந்த வார ஏடு செய்திகளுக்கு மட்டுமே முதலிடம் தராமல், அறிவியல் வளர்ச்சிகள் பற்றிய புதிய கண்டு பிடிப்புக்களுக்கும், இலக்கிய ஆய்வுகட்கும், கலை உணர்வுகளுக்கும், பிற கட்டுரை களுக்கும் இடமளித்து அவர் பத்திரிகையை நடத்தியுள்ளார். அதனால், 'தினவர்த்தமானி' என்ற இந்த தமிழ் வார ஏடு; தமிழப் பத்திரிகை உலகில் முக்கியமான ஓர் எடுத்துக் காட்டாகக் குறிப்பிடும் நிலை பெற்றுள்ளது.

பிரிட்டிஷ் ஆட்சியில் நடைபெற்று வந்த கல்வித் துறை; ஒரு பத்திரிகையை நடத்திட ஆதரவளித்து வந்தது. அந்த பத்திரிகையின் பெயர் 'ஜநவிநோதினி'. இந்த இதழ் 1870-ஆம் ஆண்டில் வெளி வந்தது. இந்தப் பத்திரிகை பிரிட்டிஷார் உதவி யோடு வெளியிடப்பட்டதால் இங்கிலாந்து நாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் இருக்கும் கல்வி சம்பந்தப்பட்ட கட்டுரைகளை எல்லாம் தமிழில் மொழி பெயர்த்து இந்த திங்கள் ஏடு வெளியிட்டது.

தமிழ் நாட்டுப் பத்திரிகை உலக வரலாற்றில் முன்னோடி யாக விளங்கியவர்களில் மற்றொருவரும் இருந்துள்ளார். அவர் பெயர் சே.ப. நரசிம்மலு நாயுடு என்பதாகும். சே.ப. நரசிம்மலு நாயுடு என்பதன் முழு பெயர், சேலம் பகடால நரசிம்ம நாயுடு என்ற விவரத்தை திரு. பெ.சு. மணி அவர்கள் தனது 'காரல் மார்க்சின் இலக்கிய இதயம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சேலம் பகாடல நரசிம்மலு நாயுடு, 1878-ஆம் ஆண்டில் சேலம் நகரிலிருந்து 'தேசாபிமானி' என்ற பத்திரி கையைத் தமிழில் நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கச் சம்பவமாகும்.

கோயம்புத்தூர் நகரிலிருந்து 'கலாநிதி' என்ற வாரம் இருமுறை வெளிவரும் பத்திரிகையை 1881-ஆம் ஆண்டில் வெளி வந்தது. இந்த இதழ்தான் முதன்முதல் வாரம் இரண்டு முறை வெளிவந்த முதல் பத்திரிகை என்பதும் மறக்க முடியாத பத்திரிகைக் குறிப்பாகும்.

தற்சிந்தனையாளர் சங்கத்தினர் Free Thinkers Association என்ற சங்கமைப்பாளர்கள்; 'ஃபிரி திங்கர்' (Free Thinker) என்ற இங்லீஷ் பத்திரிகையை 1870-ஆம் ஆண்டில் நடத்தினார்கள். இதே கால வட்டத்தில் 1860ல் 'மெட்ராஸ் டைம்ஸ்', 1868ல் 'மெட்ராஸ் மெயில்' 1886-ஆம் 'தஸ் பெக்டேட்டர்', என்ற பத்திரிகைகளும் வெளிவந்தன.

சென்னையில் லட்சுமி நரசு செட்டியார் நடத்திய 'கிரசண்ட்', ராஜா சர் மாதவராவ் வெளியிட்ட 'நேட்டிவ் பப்ளிக் ஒப்பீனியன்', இராமச்சந்திர ஐயரின் 'மெட்ராசி', பரமேஸ்வரம் பிள்ளையின் 'மெட்ராஸ் ஸ்டான்டர்ட்' என்ற பத்திரிகைகள் வெளி வந்து தேசத் தொண்டாற்றியதை நாம் மறக்க முடியாது.

இந்தப் பத்திரிகைகள் எல்லாம் வெளிவந்த பிறகுதான், 1882-ஆம் ஆண்டில் ஜி. சுப்பிரமணிய ஐயரால் 'சுதேச மித்திரன்' என்ற தமிழ் வார இதழ் வெளி வந்துள்ளது.

அதுவரை, தமிழில் நாளேடாக எதுவும் வெளி வந்ததாக்க் குறிப்பேதும் இல்லை. 1887-ஆம் ஆண்டில் 'லலிதப்ரஸ் நோதயா' அதாவது 'லலிதபிரசனோதயா' என்ற பெயரில் ஒரு தமிழ் தினசரி ஏடு வெளிவந்துள்ளது. இதுதான் தமிழ் மொழியில் வெளிவந்த முதல் நாளேடு ஆகும். இந்தப் பத்திரிகை நீண்ட நாள் நடத்தப்படவில்லை.

இதற்குப் பிறகுதான், 1892-ஆம் ஆண்டில் ஜி. சுப்பிர மணிய ஐயரால் வார ஏடாக நடத்தப்பட்ட 'சுதேச மித்திரன்' தமிழ் நாளேடாக வெளிவந்து நீண்ட நெடுங்காலமாக தமிழ் நாட்டு அரசியலுக்குத் தொண்டாற்றியதை நாம் நன்கு அறிவோம்.

இதன் ஆசிரியரான ஜி. சுப்பிரமணிய ஐயர்தான், 1885-ஆம் ஆண்டில் பம்பாய் நகரில் துவக்கப்பட்ட அகில இந்திய தேசியக் காங்கிரஸ் பேரவைக் கூட்டத்தில் பங்கேற்ற பத்திரிகையாளர்களிலே ஒருவரராவார்.

'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர் சிறந்த தேசியவாதி. அவர் தனது 4.5.1887-ஆம் நாளிதழில் எழுதியதாவது :-

''நம் தேசக் கடைகளில் அரிசி, பருப்பு, காய்கறி தவிர மற்றவை எல்லாம் ஆங்கிலேயர் சாமான்களேயன்றி நமது சாமான்கள் அல்லவே! அப்படிப்பட்ட சாமான்களை சிருஷ்டிக்க நமது தேச மக்களுக்கு திறமை இல்லையே! ஐக்கியம் இல்லையே! தைரியம் இல்லையே! ரோஷம் இல்லையே!'' என்று ஐயர் எழுதியதாக, அ.மா. சாமி தனது 'தமிழ் இதழ்கள் - தோற்றம் - வளர்ச்சி' என்ற புத்தகத்தின் குறிப்பிடுகிறார்.

இதே ஜி. சுப்பிரமணிய ஐயர்தான், 'தி இந்து' (The Hindu) என்ற இங்லீஷ் நாளேடு பத்திரிகைக்கும் உரிமையாளராக இருந்தார். எனவே, இந்த வீர தீரமான பத்திரிகையாளரே விடுதலைப் போரில் ஈடுபாடு கொண்ட முதல் பத்திரிகையாளர் என்று உறுதியிட்டு அறுதியை இறுதியாகவே கூறலாம் இல்லையா?

இந்த ஜி. சுப்பிரமணிய ஐயருக்கு Hindu நாளேட்டை - நடத்திட சேலம் வழக்கறிஞர் விசயராகவாசாரியர் பெரும் உதவியாக உழைத்தார். 'இந்து' பத்திரிகை முதன் முதலாக வார ஏடாக 20.9.1878-ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் வெளி வந்தது. அதன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயருடன் அவருக்குப் பின்பலமாக சி. கருணாகரமேனன், கே. சுப்பாராவ், கே. நடராஜ ஐயர் ஆகியோர் பேருதவி புரிந்தார்கள்.

அதே 'இந்து' வார இதழ், 1883-ஆம் ஆண்டில் வாரம் மும்முறை பத்திரிகையாக வெளிவந்தது. பத்திரிகை வரலாற்றில் வார ஏடாகவும், வாரம் மும்முறை இதழாகவும் வெளிவந்த ஒரே பத்திரிகை 'தி ஹிந்து'தான். அதற்குப் பிறகே 'இந்து' நாளேடாக வெளிவந்து தேசப் பணி புரிந்தது.

'இந்து' பத்திரிகையின் சட்ட ஆலோசகராக இருந்த எஸ். கஸ்தூரி ரங்க ஐயங்கார், 'இந்து' இதழை 1905-ஆம் ஆண்டில் வாங்கி நடத்தினார். அன்று முதல் இன்று வரை இந்து நாளேடு, உலக நாளேடுகளில் ஒன்றாக, உலக நாடு களால் கருதப்பட்டு விற்பனையாகி, பெயரும் புகழும் பெற்று நிலைத்து நின்று மக்கட் தொண்டாற்றி வருகின்றது.

இதே கால கட்டத்தில் 1906-ஆம் ஆண்டில் திருநெல் வேலி நகரிலிருந்து வேதமூர்த்தி முதலியார் என்பவர் 'சர்வஜன மித்திரன்' என்ற இதழை நடத்தி வந்தார்.

## 20-ஆம் நூற்றாண்டில் வந்த பத்திரிகைகள்

இருபதாம் நூற்றாண்டின் முன்பகுதிக் காலத்தை விடுதலைப் போரின் உச்சக்கட்டக் காலமாகக் கூறலாம். இந்திய நாட்டின் எல்லா மாநிலங்களிலும் பொங்குமாங் கடலலை களைப் போன்ற தேசிய உணர்ச்சிகள் மக்களிடையே பொங்கிக் கொண்டிருந்த உத்வேகத்தை; அண்ணல் காந்தியடி களின் அறப்போர்கள் நடத்திக் கொண்டிருந்தன.

ஆங்கிலேயர் ஆட்சியின் அடக்குமுறைகள், போர்க் கள வீரர்கள் மாறிமாறி எய்து கொண்டிருக்கும் அம்புகளைப் போல பறந்தோடி வந்து மக்களது விடுதலை உணர்வுகளைக் காயப் படுத்திப் புண்ணாக்கி, குருதியைக் கொப்பளிக்க வைத்துக் கொண்டிருந்தன.

இக் காலக் கட்டத்தில் இந்தியா முழுவதுமுள்ள பத்திரிகைகள் எல்லாம் ஆட்சிக்கு எதிராக அதனதன் கண்டனக் கருத்துக்களை வெளியிட்டுப் போராடிக் கொண்டிருந்தன. குறிப்பாகத் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் தத்தம் கடமைகளை உணர்ந்து திறம்படச் செயலாற்றிய அருமை பெருமைகளை இப்போது காண்போம்.

## 'இந்து' நாளேடு'

இந்து பத்திரிகை, தமிழ்நாட்டுப் பத்திரிகை உலகில் ஒரு விடிவெள்ளி ஏடாகும். ஜி. சுப்பிரமணிய ஐயர், சேலம் வழக்கறிஞ மேதை விசயராகவாச்சாரியார் போன்ற திறமை மிக்கவர்களின் செயலாற்றலால், நிர்வாக நிபுணத்துவத்தால், இன்று 'இந்து' உலக அளவில் உயர்ந்து ஒளிசிந்தும் விடிவெள்ளியாகத் திகழ்கின்றதையும்; நம் கண்ணெதிரிலேயே காட்சியாகக் காண்கின்றோம்.

அதன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர்; இந்தியத் தேசியக் காங்கிரஸ், இயக்கத்தின் நிறுவனத் தூண்களுள் ஒருவராகவும், சேலம் விசயராகவாச்சாரியாரின் தேச உணர்ச்சித் தியாகங்களின் செயற்புகழாலும் 'இந்து' நாளேட்டு அந்தக் காலக் கட்டத்தில் வானோங்கி வளர்ந்தது. அதற்காக அரும்பாடு பட்டவர்களும் அந்த இருவரே ஆவர். அதே நேரத்தில் அதன் செய்திகள் வெளியிடும் போக்குகளாலும், மக்கள் அந்தப் பத்திரிகை மீது வைத்திருக்கும் நாட்டுப் பணி சேவைகளாலும், 'இந்து' இன்றும் மக்களது மனவானிலே கொடிக் கட்டி பறந்தாடி வருகிறது.

## 'சுதேசமித்திரன்' நாளேடு தொண்டு

'சுதேசமித்திரன்' இதழ் 1882-ஆம் ஆண்டில் வாரப் பத்திரிகையாக தவழ்ந்து, வாரம் மும்முறை பத்திரிகையாக 1887-முதல் நடந்து, 1889-முதல் நாளிதழ் என்ற வாலிபமாகி, பிறகு வீழ்ந்துபட்டது. அகில இந்தியத் தேசியக் காங்கிரஸ் பேரவை என்ற இன்றைய பேரழகுக் கோட்டையை எழுப்பிய கலைஞர்களுள் ஒருவராகத் திகழந்த ஜி. சுப்பிரமணிய ஐயர் என்பவரே, 'சுதேசமித்திரன்' பத்திரிகை ஆசிரியராகவும் விளங்கியவர் ஆவார். எந்தத் தேசிய எழுச்சியோடு அவர் அதைத் துவக்கினாரோ அதே புரட்சியோடு சுதேசமித்திரனையும் அவர் நடத்தினார் என்பது மறக்கத் தக்க சம்பவமன்று.

## மக்கள் கவி பாரதியார்

விடுதலைக் கவிஞர், மக்கள் கவிஞர் என்று பிற்காலத்தில் போற்றப்பட்ட மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார், அதே சுதேசமித்திரன் நாளேட்டில் 1904-ஆம் ஆண்டில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அவருடைய தேசி உணர்ச்சிக் கருத்துக்களாலும், செழுமையான தமிழ் உரை நடையாலும், நாட்டுப் பற்றுக் கொந்தளிக்கும் தேசியக் கீதங்களாலும், சுதேசமித்திரன் ஏடு மக்களிடையே பரபரப்பான

விற்பனையையும், தேசிய சொரணையையும் உருவாக்கியது. மக்கள் அவரது எழுத்துக்களால் உணர்ச்சி பெற்று விடுதலை வீரர்களானார்கள் என்பது உண்மையுள் உண்மை ஆகும். ஏறக்குறைய நான்கு ஆண்டு காலம் 'இந்தியா' என்ற திங்கள் இதழை நடத்தினார். இந்தியாவின் ஒரு மாநிலமாக இருந்த வங்காளத்தைப் பிரிட்டிஷார் பிரித்தபோது, இந்தியாவே கொந்தளித்து எழுந்தது. பாரதியார் தீவிரவாத உணர்வுடைய பாலகங்காதர திலகருடன் சேர்ந்துக் கொண்டு, அவரது கருத்தை ஏற்று, வெள்ளை ஏகாதிபத்தியத்தின் வேரறுக்கும் எழுத்துப் பணியில் ஈடுபட்டார். அதனால் மக்கள் இடையே பாரதி ஒரு தேசிய கவி என்ற பெருமையைப் பெற்றார்.

இந்தியா மாத ஏட்டில் 10.4.1909-ஆம் ஆண்டன்று 'தேச பக்தி' என்ற தலைப்பிட்டுக் எழுதியக் கட்டுரையில், 'பாரத தேசத்து முப்பது கோடி ஜனங்களுக்குத் தொண்டு செய்வதைவிடச் சிறந்த மதம் வேறு கிடையாது' என்ற விவேகானந்தர் அடிகளின் தேசப் பற்றுக் கருத்தை எதிரொலித்து, துருவன், பிரகலாதன் முதலியோர் விஷ்ணுவிடத்தில் செலுத்திய பக்தியை நாம் நம் ஸ்வதேசத்தினிடத்திலே செலுத்த வேண்டும்' என்று பாரதியார் எழுதினார்.

மக்கள் கவி பாரதி, வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்து தமிழில் கவிதைகள் எழுதியிருந்தாலும், 'பாலபாரதி' என்றதோர் வாரப் பத்திரிகையை அவர் இங்லீஷ் மொழியில் நடத்தினார்.

விடுதலைக் கவிஞர் பாரதியாரின் வெள்ளையர் ஆட்சி எதிர்ப்பு விமர்சனக் கட்டுரைகள், மக்களது விழிப்புணர்வு களைத் தட்டி எழுப்பி விரைவுபடுத்தும் அக்னிக் கோள்களாக அமைந்தன.

காங்கிரஸ் ஓர் ஆலயத்தைப் போன்றது. என்ன வரினும் நாம் அதைப் பாதுக்காக்க வேண்டும் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தேசிய இயக்கத்தில் தீவிரமாக இருந்த கிருஷ்ணசாமி ஐயர், 1909ல் பிரிட்டிஷ் அரசின் கீழ் நீதிபதி பதவியை லஞ்சம் போல் ஏற்றதைப் பாரதியார் மிக வன்மையாகக் கண்டித்தார்.

'அந்நிய ஆட்சிமீது ஆத்திரத்தை வளர்த்து விட்டால் மட்டும் தேசிய உணர்வு உறுதி பெற்று விடாது என்றார். ஆக்கவேலைகளைச் செய்து அதைக் காத்து வளர்க்க வேண்டும் என்பதைப் பாரதியார் தெளிவாக மக்கட்கு எழுதி விளக்கினார். கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றலின்றி, நாட்டத்தில் கொள்ளாதவர்களைத் தனது பாடல் அடிகளாலேயே கேலி செய்தார். அவர்களைப் பற்றிப் பரிதாபப் பட்டார் பாரதியார்' என்று . திரவியம் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி, தனது 'தேசியம் வளர்த்த தமிழ்' என்ற நூலில் பாரதியார் நாட்டுப் பற்றைப் பற்றி பெருமையோடு எழுதுகிறார்.

இத்தகைய ஓர் உணர்ச்சியின் அக்கினிக் குண்டமாக இருந்த பாரதியார், ஏன் 'சுதேசமித்திரன்' தின ஏட்டை விட்டு விலகினார்? இதுவும் ஒரு வினா தானே!

இந்தியத் தேசியக் காங்கிரஸ் இயக்கம் 1885-ஆம் ஆண்டு துவங்கியது முதல்; அண்ணல் காந்தியடிகள் அந்த இயக்கத்தைத் தலைமை ஏற்று நடத்திய 1920- ஆம் ஆண்டு வரையில் ஆண்டாண்டுதோறும் இந்திய முக்கிய நகரங்களில் கூடிக் கலந்துரையாடி, இந்தியர்கள் வேண்டுதல் மனுக்களை ஆட்சியாளர்களுக்கு அனுப்பிடத் திரட்டி, விருந்துண்டு, மிதவாத பேச்சுக்களை அவரவர் நேரத்துக்குள் மேடை ஏறிப்பேசி, இறுதியாக இங்கிலாந்து மன்னருக்கு வாழ்த்துக் கூறும் வகையில் God Save the King என்ற பாடலைச் சேர்ந்திசைப் பாடிப் பேரவையை முடித்துவிட்டு அவரவர் ஊர்களுக்குப் புறப்பட்டுப் போய் விடுவதைப் போல, சென்னையிலும், அதே தேசிய இயக்கம் சில வழக்குரை ஞர்களின் வாசல் காவலாளியாக இருந்தது. காரணம், அவர்கள் வழக்குச் சொல்லிகள் அல்லவா? அதனால், சட்டப்படி நடந்து கொள்வார்கள்; White Scholarகளைப் போல, Easy Chair Politiciansகளைப் போல, மேனாமினுக்கிகளாக, ஆடைகளில் அழுக்குப்படாமல், மிதவாதிகளாக, அரசியல் செய்தார்கள். சென்னையிலும் காங்கிரஸ் இயக்கத்தின் நிலை இதுதான்.

1907-ஆம் ஆண்டில் நடைபெற்ற சூரத் காங்கிரஸ் பேரவையின் கூட்டத்தில் மிதவாதியான கோபாலகிருஷ்ண

கோகலே அணிக்கும், தீவிரவாதியான பாலகங்காதர திலகர் அணிக்கும் இடையே மூண்ட கொள்கைப் போராட்ட மோதல்களிலே, பேசும் மேடையில் பாதுகைகள், நாற்காலிகள், மேசைகள் ஆகியவற்றுக்கு இறக்கைகள் முளைத்து மேடை நோக்கி பறந்த பின்பு, அதே காங்கிரஸ் பேரவைகள் அடுத் தடுத்த ஆண்டுகளில் மிதவாதமும் இல்லாமல், தீவிரவாதமும் அல்லாமல் நடுநிலைவாதம் பேசும் இயக்கமாக மாறியதைப் போல, சென்னையிலும், 1905-ஆம் ஆண்டு முதல், காங்கிரஸ் இயக்கத் தேசியக் கொள்கை நிலைகள் சற்று மாறின!

சுதேசி இயக்கத்திற்கு 'வந்தே மாதரம்' என்ற பாடல் தாரக மந்திரமானது. God Save the King ஒழிந்தது. தீவிரவாத தேசீயத் தலைவரான மராட்டிய அரிமா பாலகங்காதர திலகர் அணியின் பலம் ஓங்கவே, தமிழ்நாட்டிலும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., தேசிய கவி பாரதியார், தமிழ்த் தென்றல் திரு.வி.க., கொள்கைச் சிங்கம் சுப்பிரமணிய சிவாவை ஒத்தவர்கள் சென்னைக் காங்கிரஸ் இயக்கத்தில் திலகரைப் பின்பற்றி தீவிரவாதிகளாகி, அவர்களது பத்திரிகை எழுத்துக்களும், பேச்சுக்களும், தீவிர விடுதலை உணர்ச்சியை உந்த விட்டது.

ஆனால், அகில இந்திய தேசியக் காங்கிரஸ் பேரியக் கத்தை நிறுவிய சென்னைத் தூண் போன்றவர்களில் ஒருவராக விளங்கிய சுதேசமித்திரன் பத்திரிகை ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர், திலகரது தீவிரவாதத்தை ஆதரிக்க முடியாமல், கோபால கிருஷ்ணகோகலேயின் மிதவாதிகள் அணியிலேயே இருந்து விட்டதால், தேசிய கவி பாரதியார் 1906-ஆம் ஆண்டின்போது, 'சுதேசமித்திரன்' பத்திரிகையின் துணை ஆசிரியர் பணியிலே இருந்து விலகினார்! பிறகு தான் 'இந்தியா' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார்.

ஆங்கில அடக்குமுறை நாளுக்கு நாள் அதிகமாவதைக் கண்டு ஃபிரெஞ்சு ஆட்சிக்குக் கட்டுப்பட்ட புதுவை எனப்படும் பாண்டிச்சேரி நகருக்கு கவி பாரதி சென்றார். அங்கிருந்து 'விஜயா', 'கர்மயோகி' என்ற தமிழ்ப் பதிப்புப் பத்திரிகைகளை நடத்தி, முன்பைவிட காங்கிரஸ் இயக்கத்தின் விடுதலை உணர்வுக்குத் தீவிரமாகப் பணி புரிந்தார்.

பணப் பற்றாக்குறை காரணமாக, நெருக்கடிகள் அதிக மாக அவரை நெருக்கவே 1910-ஆம் ஆண்டில் அவர் திரும் பவும் சென்னை நகர் திரும்பி 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் பணியாற்றினார். பாவம், தனது 39-வது வயதில் யானை அவருக்கு எமனானாதல் மாண்டார். ஆனால், மகாகவி பாரதியார் பத்திரிகைக்கு ஆற்றியுள்ள பணிகளின் அருமை களை, அஞ்சாமையை, அவரால் உருவான பெருமைகளை நம்மால் மறக்க முடியாதவை ஆகும்.

### "ஞானபானு" ஆசிரியர் சுப்பிரமணிய சிவா!

இந்திய விடுதலைப் போரில் தமிழ்நாட்டின் செருமுனைச் செங்களத்தில் வெங்களம் கண்ட கொள்கைப் போர்வீரன் சுப்பிரமணிய சிவா. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.யின் கெழுதகைக் கொள்கை நண்பர். திடகாத்திரமான வாலிப செம்மேனி பளபளக்க சிறை சென்ற விடுதலைக் களச்செம்மல் சிவா; குட்ட நோயோடும் கை, கால்களில் பெரும் புண் களோடும், ரத்தம், சீழ்வடியும் ரணகள வடுக்களோடும் தடியூன்றிய வயோதிகத் தோற்றத்தோடும், பாப்பாரப் பட்டி எனும் கிராம வீதிகளிலே அலைந்து வேதனைப்பட்ட தியாகி அவர்.

காசியிலே இருந்து இராமேஸ்வரத்திற்கும்; இராமேஸ்வரத் திலிருந்து கைலாச நாதர் பெருமான் வீற்றிருக்கும் கைலாயத் திற்கும் புனித ஆன்மிகப் பயணம் போகும் பக்தகோடி யாத்ரிகர்களைப் போல, இந்தியா முழுவதிலும் உள்ள தேசிய காங்கிரஸ் இயக்கவாதிகள் அனைவரும் தர்மபுரி மாவட்டத் திலுள்ள பாப்பாரப்பட்டிக் கிராமத்திற்கு புனிதப் பயணம் வந்து, அங்கு தன்னால் எழுப்பப்படும் பாரத மாதா கோயிலைத் தரிசிக்க வேண்டும் என்று அவாவுற்று, பாரத மாதா திருக் கோவிலைக் கட்டி முடித்திட பாப்பாரப்பட்டி எனும் ஊரில் ஐந்தாறு ஏக்கர் நிலத்தை மக்களிடம் இலவசமாகப் பெற்று, அதை அப்படியே கரம்பாகப் போட்டு விட்டே செத்துப்போன உண்மையான ஒரு காங்கிரஸ் தியாகி. திலகர் அரசியலின் தீவிர வாதத் தொண்டர்! மிகச் சிறந்த கோடை இடி பேச்சாளரும் ஆவார்.

அத்தகைய ஒரு தேசியக் கொள்கைக் குலத் திலகமான சுப்பிரமணிய சிவா, 1913-ஆம் ஆண்டில், 'ஞானபானு' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து ஆங்கிலேயே ஆதிக்க மலையைத் தவிடுபொடியாகச் சிதற வைக்கும் சிற்றுளியாக விளங்கி நடத்தினார் பத்திரிகையை!

'ஞானபானு' பத்திரிகை ஓர் இலக்கிய ஏடாகவும், அதே நேரத்தில் தமிழ்ப் பற்றுடைய கூர் அம்பாகவும், ஆங்கிலேயர் களது ஆணவ ஆட்சியை எதிர்க்கும் கள வாளாகவும் காட்சி தந்தது.

அடிமை தூக்கத்தில் ஆழ்ந்து உறங்கும் கும்பகர்ண தமிழ்ச் சாதியின் பலரைத் தனது வீரமிக்க எழுத்துக்களது அறிவுணர்ச்சிகளால் தட்டி எழுப்பி, அவர்களது ஊக்கத்திற்கும், நோக்கத்திற்கும் ஆக்கமூட்டும் பத்திரிகையாகவும் ஞானபானு தமிழ்நாட்டை வலம் வந்தது.

## திரு.வி.க. 'நவசக்தி'<br>'தேசபக்தன்' இதழ்கள்

தமிழ் , இங்லீஷ் மொழிகளில் பெரும் புலமை பெற்றிருந் தவரான தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள், 1917-ஆம் ஆண்டில் 'தேச பக்தன்' என்ற காங்கிரஸ் இயக்க நாளேட்டின் ஆசிரியுர் பொறுப்பில் இருந்து விலகி, 'நவசக்தி' என்ற தின இதழை 1920-ஆம் ஆண்டில் ஆரம்பித்தார்.

திரு.வி.க. அவர்கள் 'தேச பக்தன்' என்ற நாளேட்டை விட்டு விலகியதும், பாரிஸ்டர் வ.வே.சு. ஐயர், தேசபக்தன் தினசரி பத்திரிகையின் ஆசிரியராக அமர்ந்து ஆங்கிலேயர் ஆட்சியின் கொடுமைகளை மக்களுக்கு விளக்கினார்.

தென்றல் நடைத்தமிழ் எழுத்தாளரான திரு.வி.க. அவர்கள் 'நவசக்தி' வார இதழை ஏறக்குறைய இருபதாண்டுகள் திறம்பட நடத்தித் தேசியக் காங்கிரஸ் கட்சிக் கொள்கைளுக்கு ஒரு பிதாமகன் பீஷ்மராக விளங்கினார்.

திரு.வி.க. நவசக்தி பத்திரிகையில் துணை ஆசிரியராக அப்போது பணியாற்றியவர். தற்போதைய 'கல்கி' என்ற

பத்திரிகையின் நிறுவனரும் ஆசிரியருமான 'கல்கி' கிருஷ்ணமூர்த்தியும், 'கலைமகள்' என்ற இலக்கிய மாத இதழின் ஆசிரியராக இருந்து மறைந்தவருமான கி.வா. ஜகநாதனும் மாவர் - அவர்கள் காலமானார்கள்.

'தேசபக்தன்' என்ற பத்திரிகையின் நோக்கத்தைப் பற்றி திரு.வி.க. எழுதுகையில் : 'தேசபக்தன்' சுதந்திரத்தை விரும்பு கிறான். சுய ஆட்சி கேட்கின்றான். இந்தியாவிற்கும் இங்கிலாந் திற்கும் சகோதரத்துவத்தை உண்டு பண்ணுகின்றான்' என்று குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர் சுப்பிரமணிய ஐயர்; வெள்ளையர் ஆட்சி அவருக்குக் கொடுத்த 'சர்' பட்டத்தைத் தூக்கி எறிந்த நேரத்தில், 'மயிலை முனீந்திரர்' என்று தலைப்பிட்டு 21.6.1918ல் அவர் ஒரு கட்டுரை வரைந்தார். அதைப் படித்த ஐயர், திரு.வி.க-வை மிகவும் புகழ்ந்தார்.

அவரது பாராட்டுதலைப் படித்த திரு.வி.க. அதற்குப் பதிலளித்தபோது, நானா எழுதினேன்? தங்களது வீரத்தில் தோய்ந்த பக்தி அதை எழுதியது. தாங்கள் மூலம் - யான் கருவி' என்றார்.

பிண வெறியன் டயர் ஜாலியன் வாலாபாக் படு கொலையை நடத்தியதற்கு முன்பு வரையில், அண்ணல் காந்தி உட்பட்ட எல்லா காங்கிரஸ் இயக்கத் தலைவர்களும் பிரிட்டிஷ் ஆட்சி மீது ஓரளவு நம்பிக்கை வைத்திருந்தார்கள். அதனால், அந்த நேரத்துப் பத்திரிகைகளில் தேச பக்தியுடன் ராஜ பக்தி விசுவாசமும் இணைந்திருந்தது. திரு.வி.க.வின் பத்திரிகையும் அந்த அன்பையே எதிரொலித்தது.

ஜெனரல் டயர் நடத்திய துப்பாக்கி வேட்டையைப் பார்த்த காந்தியடிகள், பிரிட்டிஷ் ஆட்சியை 'சைத்தான் ஆட்சி' என்று அறிவித்தார். அவரது கருத்து நாடெங்கும் பிரதிபலித்தது.

அடிகளின் கருத்தறிவிப்பிற்குப் பிறகு, அப்போதையத் தமிழ்ப் பத்திரிகைகளில் மட்டுமல்ல, இந்திய இதழ்கள் அனைத்திலும் ராஜ பக்தி மறைந்து, தேச பக்தியே காட்சி தந்தது.

## 'திராவிடன்' பத்திரிகை நீதிக்கட்சி ஏடானது

ஆதி திராவிடர்கள் தேசிய நலனை நாடும் பத்திரிகையாக, முதன் முதல் 'திராவிடன்' என்ற இதழ் ஜே.எஸ். கண்ணப்பர் என்பவரை ஆசிரியராகக் கொண்டு, 1917-ஆம் ஆண்டில் வெளி வந்தது. போகப் போக அந்த ஏடு பிராமணர் அல்லாதார் அனைவருக்கும் பாடுபடும் பத்திரிகையானது. இறுதியில் அந்த இதழ் நீதிக் கட்சிப் பத்திரிகை ஆனது.

## டாக்டர் வரதராசுலு 'தமிழ்நாடு' பத்திரிகை

டாக்டர் வரதராசுலு நாயுடு, பத்திரிகையாளர்களுள் சிறந்த பத்திரிகையாளராக விளங்கியவர். அவர் 1926-ஆம் ஆண்டில் திருப்பூர் என்ற நகரில் 'பிரபஞ்சமித்திரன்' என்ற வாரப் பத்திரிகையை நடத்தினார். 'காற்றையும் தண்ணீரையும் போல தமிழ் நாட்டுக்கு இன்றியமையாதனவாய் இருந்த தேச பக்தியையும் மொழிப் பக்தியையும் வளர்த்தது டாக்டர் வரதராசுலுவின் 'பிரபஞ்சமித்திரன்' இதழ். தமிழ் நாட்டுக்கு அது செய்த இரண்டு பெரிய நன்மைகள் ஆகும்' என்கிறார். டாக்டர் வரதராசுலுவிடம் பத்திரிகைப் பணி பயிற்சி பெற்ற டி.எஸ். சொக்கலிங்கம் என்ற பிற்கால தினமணி, தினசரி நாளேடுகளின் ஆசிரியர்.

சேலம் நகரிலிருந்து டாக்டர் வரதராசுலு நாயுடு, 1927-ஆம் ஆண்டில் 'தமிழ்நாடு' வார பத்திரிகையை ஆரம்பித்தார். பிறகு அதே இதழை 'தமிழ்நாடு' நாளேடாக நடத்தினார். டாக்டரின் பத்திரிகை எழுத்துக்கள், மக்களிடையே நாட்டுப் பற்றெனும் உணர்ச்சிகளை உருவாக்கியது. ஆங்கிலேயர்களின் அன்றைய அரசியல் சம்பவங்களை டாக்டர் கடுமையாகவும், சூடாகவும் விமர்சித்த முறைகளை மக்கள் பெரிதும் விரும்பிப் பாராட்டினார்கள்.

டாக்டர் வரதராசலு நாயுடுவின் எழுத்துக்களைப் பின்பற்றி, பண்பட்ட எழுத்தாளர்கள் சிலர் தோன்றினார்கள். அவர்களுள் தலைசிறந்தவர் டி.எஸ். சொக்கலிங்கம் என்பவர்.

காந்தியடிகளால் நடத்தப்பட்ட ஒத்துழையாமைப் போராட்டத்தைத் தடுத்திட, ஆங்கிலேயே ஆட்சி மகாகனம் சீனிவாச சாஸ்திரியாரை ஓர் அணையாகப் பயன்படுத்தியது. அதைக் கண்ட டாக்டர் நாயுடு 'ஜிண்டான் சாஸ்திரி' என்று தலைப்பிட்டு, ஒரு கட்டுரையை எழுதினார். அந்தக் கட்டுரை யில் ஆட்சியை எதிர்க்கும் குத்தலும் குடைச்சலும், கொள்கை உணர்வும் எப்படி இருந்தது என்பதை இதோ படித்துப் பாருங்கள் :-

''வயிற்றில் ஏற்பட்ட கோளாறு வாயில் நாற்றத்தை உண்டாக்குவதை மாற்ற, 'ஜிண்டான்' என்ற மாத்திரையை உட்கொள்வதைப் போல, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது வயிற்றுக் கோளாற்றை மறைத்து, வெளிப் பகட்டைக் காத்துக் கொள்வதற்கு, சாஸ்திரியைப் பயன்படுத்துகிறது' என்று இடித்துக் கூறினார்' என்று தேசியம் வளர்த்த தமிழ் என்ற நூலுள் கா. திரவியம், ஐ.ஏ.எஸ். என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு பத்திரிகையின் தமிழ்நடை வேகமாகவும், படிப்போர்க்கு விறுவிறுப்பாகவும் அமைந்த பத்திரிகையாகப் பணி புரிந்தது. டாக்டர் வரதராசுலு நாயுடுவின் எழுத்து, கருத்து எழுத்தாளர்கட்கே ஒரு பயிற்சிக் கூடமாக விளங்கியது.

பதட்டமில்லாத, ஆனால் பார்வையைக் கவரும் தலைப்புகள், அத்துமீறாத, அழுத்தமாகக் கருத்த வெளியிடும் குறிப்புகள், நிதானம் இழக்காத, நேர்மையான எண்ணங்களை எடுத்துரைத்த கட்டுரைகள், பண்பு தவறாமல், பலமாகக் கொள்கைப் பரப்பிய தலையங்கங்கள் ஆகியவை டாக்டர் வரதராசுலு நடத்திய 'தமிழ்நாடு' நாளேட்டின் சிறப்பான முத்திரைகள்' என்று கா. திரவியம், ஐ.ஏ.எஸ். குறிப் பிட்டுள்ளார்.

தமிழ் மரபோடு ஒட்டிய சொற்களைப் பயன்படுத்த வேண்டுமென்பது அவரது தமிழ் ஆர்வமாகும். எடுத்துக் காட்டாக Water - Falls என்ற இங்லீஷ் மொழிச் சொல்லை டாக்டர் மொழி பெயர்த்தபோது, 'நீர்வீழ்ச்சி' என்று எழுத வில்லை. இன்றும் பலர் மேற்கண்ட சொல்லையே பயன் படுத்தி மொழி பெயர்க்கின்றார்கள்.

ஆனால், டாக்டர் வரதராசுலு அக்காலத்திலேயே, அதாவது 77 ஆண்டுகளுக்கு முன்பேயே, 'அருவி' என்ற அருமையான தமிழ்ச் சொல்லை Water-Falls என்ற இங்லீஷ் சொல்லுக்காக மொழி பெயர்த்தார் என்றால், அந்த தமிழ்ப் பெருமகனுடைய தமிழ்வேட்கையை எவ்வாறு பாராட்டி மகிழ்வது என்று இன்றைய பத்திரிகையாளர் தலைமுறைகள் சிந்திக்க வேண்டிய ஒன்றல்லவா?

தான் பயன்படுத்தும் கருத்துக்களை டாக்டர் வரதராசலு சுருக்கமாகவே கூறுவாராம். சொல்லில் சிக்கனம் காண்பவராம். அவர் தமிழ்நடையில் கோணல், வளைவுகள் இராதாம். குறிப்பான சொற்களையே பயன்படுத்துவாராம். ஆனால் தமிழ்நடை மட்டும் எடுப்பாகவும், கருத்துத் தெறிப்புக் களாகவும், தெளிவான புரிதல்களாகவும் இருக்குமாம். இவைதான் டாக்டர் நாயுடுவின் தமிழ்ப் பத்திரிகைப் பணி! இந்த அரிய முயற்சியை, பத்திரிகையாளர்களான நாமும் பயன்படுத்தலாம் அல்லவா?

டாக்டர் நாயுடு எழுதும்போது, இன்றைய சில பத்திரிகை களைப் போல சட்டப் பயந்தாங்கொல்லித்தனமில்லாமல், அதாவது தெரிகிறது, புரிகிறது - கூறுகிறார்கள். பேச்சு அடி படுகிறது என்று சுற்றி வளைத்து எழுதாமல்; முனைப்பாகவும் தைரிய உணர்ச்சியோடும், நேருக்கு நேராகவும் எழுத வேண்டும் என்று அவர் எழுத்தாளர்களுக்கு ஆலோசனை கூறுவாராம்.

'படும்', 'பட்ட' என்பவற்றைப் பாடுபட்டுப் பயன் படுத்துவதை 'விடும்' என்று அவர் கூறிய நல்லுரை, ஏற்றமிகு எழுத்துக்கு ஏற்ற இலக்கண விதியாக அமைந்ததோடு, செயப்படு பொருளாகச் சிறைப்பட்டுக் கிடக்காமல், செய் பொருளாக விழிப்புற்று எழச் செயல்வீரர்களைத் தூண்டும்' என்று 'தேசியம் வளர்த்த தமிழ்' என்ற நூல் கூறுகின்றதை இன்றைய இளம் பத்திரிகையாளர்கள் தலைமுறை எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்றாக இருக்கின்றது.

டாக்டர் நாயுடு அவர்களின் பத்திரிகைத் தொண்டில் மிகச் சிறப்பானது எது தெரியுமா? அவரது 'தமிழ்நாடு' பத்திரிகையில்

அவரால் எழுதப்பட்ட தலையங்கங்களை, 'இந்து' இதழும், 'சுதேசமித்திரன்' பத்திரிகையும் வாரந்தோறும் அவரவர் ஏடுகளிலே அவற்றை வெளியிடும் என்றால்; டாக்டரது எழுத்துக்களை எவ்வாறு போற்றலாம் கூறுங்கள்?

டாக்டர் கருத்துக்கள் மக்களிடம் எந்த அளவுக்குச் செல்வாக்குப் பெற்றதோ அந்த அளவுக்கும் மேலாக ஆள்வோரிடமும் ஆத்திரத்தை, எரிச்சலை, கோபத்தை, வஞ்சகத்தை மூட்டினவாம்.

டாக்டர் நடத்திய பிரபஞ்ச மித்திரன் பத்திரிகைக்கு ஆயிரம் ரூபாய் முன் ஜாமீன் கட்ட வேண்டும் என்று ஆங்கிலேயர் ஆட்சி ஆணையிட்டது. அக்காலத்தில் 1000 ரூபாய் என்றால் சாமான்யமா என்ன?

அதற்குக் காரணம், டாக்டர் பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரை ராஜத்துரோகமாக இருந்ததாம். அதனால் 1000 ரூபாய் ஈடுகாணம் தொகையாகக் கட்ட வேண்டும் என்றது அரசு.

இந்த ராஜத்துரோகக் கருத்துக்காக 1921-ஆம் ஆண்டில் அரசு டாக்டர் மீது வழக்குத் தொடுத்தது. காந்தி அடிகளின் கொள்கைக்கேற்ப டாக்டர் அந்த வழக்கை எதிர்த்து எதிர் வழக்காட மறுத்து விட்டார். அதனால்; டாக்டர் ஒன்பது மாதம் சிறைத் தண்டனை பெற்றார்!

அரசியலில் மட்டுமா டாக்டர் இத்தகையப் புரட்சிகளைப் பத்திரிகை மூலமாகச் செய்தார்? சமுதாயத் துறையிலும்தான் செய்தார்!

கோவிலில் பொட்டு கட்டி விடும் தேவதாசி முறை ஒழிப்பைக் காங்கிரஸ்காரர்களே எதிர்த்தார்கள். ஆனால், டாக்டர் நாயுடு, தனது தமிழ்நாடு பத்திரிகையின் முழு மக்கள் பலத்தைக் கொண்டு அந்த முறையை எதிர்த்தார்.

இந்து அறநிலையக் குழுவும், சில தேசியப் பத்திரிகைகளும், காங்கிரஸ்காரர்களும் ஒன்று சேர்ந்து மதத்தின் பெயரால் மக்களைச் சுரண்டும் ஊழல் போக்குகளைத் தமிழ்நாடு பத்திரிகை வாயிலாக எதிர்த்து நாயுடு எழுதினார்.

அரும்பெரும் தியாகியான வ.வே.சு. ஐயர் நடத்திய சேர் மாதேவி குருகுலத்தில் பார்ப்பன மாணவர்கள், பார்ப்பனரல் லாத மாணவர்கள் இடையே உணவு பரிமாறும் சாதிபேதப் பாகுபாடுகள் வழக்கத்தை எதிர்த்து, சமபந்தி உணவு முறை பழக்கத்துக்கு வரவேண்டும் என்பதற்காக, தமிழ்நாடு பத்திரிகை மூலமாகச் சேவை செய்தார் டாக்டர் வரதராசலு நாயுடு!

தனது தமிழ்நாடு பத்திரிகையின் எழுத்து மூலமாய் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தைப் பலமாக, வளமாக உருவாக்கி, இந்திய நாட்டின் விடுதலைப் போருக்குரிய படைத் தளபதியாகப் பத்திரிகையைப் பயன்படுத்தினார். அதனால் பத்திரிகையாளர்களால் டாக்டர் வரதராசுலு நாயுடுவின் பத்திரிகைத் தொண்டை மறக்க முடியாமல், விடுதலைப் போருக்கு வீரம் மணந்த ஒரு பத்திரிகையாளராய் பத்திரிகை வரலாற்றில் இடம் பெற்றவராக இன்றும் வாழ்கின்றார்.

### டி.எஸ். சொக்கலிங்கத்தின்
### 'தினமணி, தினசரி, காந்தி!'

டாக்டர் வரதராசுலு நாயுடுவின் 'தமிழ்நாடு' பத்திரிகைப் பாசறையில் 1923-ஆம் ஆண்டு முதல் பயிற்சிப் பெற்றவர் திரு. டி.எஸ். சொக்கலிங்கம். அவர் 25 ஆண்டுகளுக்கு மேலாகப் பத்திரிகை உலகுக்கு உழைத்து, நாட்டுப் பற்றை மக்களுக்குள் உருவாக்கியவர். 1927-ஆம் ஆண்டில் 'தமிழ்நாடு' நாளேட்டிற்கு ஆசிரியராக அமர்ந்தார். 1931-ஆம் ஆண்டில் 'காந்தி' என்ற பத்திரிகையைத் துவக்கி அப்போதைய காலணா என்ற நாணய மதிப்பு விலைக்கு விற்பனை செய்தார். பிறகு வார இதழாக இருந்த அதை நாளேடாகப் பெரிய அளவில் மாற்றி வெளியிட்டார். அந்த ஏடு மக்கள் இடையே பெரிய வரவேற்பையும் செல்வாக்கையும் பெற்றுப் பரபரப்பாக விற்பனையானது.

பீகார் மாநிலத்தில் 1934-ஆம் ஆண்டில் பூகம்பம் ஏற்பட்டபோது, பிரிட்டிஷ் அரசு மெத்தனமாக இருந்ததால், 'சர்க்கார் எங்கே?' என்று எழுதிய கட்டுரைக்காக அரசு அவர்மீது ராஜத்துரோக வழக்கைத் தொடுத்தது. அதனால்

பத்திரிகைக்கு அவர் கட்டியிருந்த முன் ஜாமீன் பணம் பறிபோயிற்று.

அதுவரை பத்திரிகை வரலாற்றில் முன் ஜாமீன் பணத்தைப் பறிகொடுத்த பத்திரிகை அன்னி பெசண்ட் அம்மையாரின் 'நியூ இந்தியா' என்ற இதழும், டி.எஸ். சொக்கலிங்கத்தின் 'காந்தி' என்ற ஏடும்தான். இந்த ஈடுகாணம் பறிமுதலை எதிர்த்து சொக்கலிங்கம் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அதனால் நீதிமன்றம் அரசு உத்தரவைத் தள்ளுபடிச் செய்து விட்டது. இதற்குக் காரணம் ஆசிரியர் சொக்கலிங்கம் எழுதிய கட்டுரையின் இரண்டொரு சொற்கள் அவருக்குச் சாதமாக அமைந்ததுதான்.

எனவே, கட்டுரை எழுதுவோர் கட்டுரைக்காகப் பயன் படுத்தும் சொற்களைச் சற்று கவனத்துடன் ஆட்சி செய்ய வேண்டும் என்று அப்போது வெளிவந்து கொண்டிருந்த 'தாருல் இஸ்லாம்' என்ற பத்திரிகை, இதழாசிரியர்களுக்கு அறிவுரை கூறியதை நாமும் இன்று நினைவில் நிறுத்த வேண்டிய கருத்தாக இருக்கிறது.

1934-ஆம் ஆண்டில் சொக்கலிங்கம் 'தினமணி' என்ற நாளேட்டில் ஆசிரியராகப் பணியாற்றி நேரத்தில், அவர் எழுதிய அரசியல் விமர்சனங்கள், ஆணித்தரமானக் கட்டுரைகள், வேகமான தலையங்கங்கள், விளக்கமான குறிப்புகள் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற தமிழ் நடை ஆகியவை; அவருடைய பத்திரிகை ஆசிரியர் திறமைக்குச் சான்றுகளாக அமைந்து, மக்களிடையே நல்ல செல்வாக்கைப் பெற்றுத் தந்தன.

மணலைக் கயிறாகவும் திரிக்கலாம்; வானத்தையும் வில்லாக வளைக்கலாம்; ஆனால் எழுத்தாளர்களை ஒன்று சேர்ப்பதென்பது அவற்றைவிடக் கடினமான காரியம் என்று 1944-ல் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டில் அன்றே அவர் குறிப்பிட்ட உணர்ச்சிகள் இன்றைக்கும் ஓர் அறிவுரையாக நமக்கு அமைந்துள்ளது.

ஒன்றுபட மறுக்கும் எழுத்தாளர்கள்கூட ஒருமுகமாகப் பாராட்டும் ஒரு பத்திரிகையாளராக, எழுதுகோல் வீரராக

தென்காசி நகர் சொக்கலிங்கம் அன்றே விளங்கினார் என்பதுதான் அவருடைய சிறப்பு.

## 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி பத்திரிகைத் தொண்டு

'கல்கி' கிருஷ்ணமூர்த்தி என்ற பத்திரிகை ஆசிரியர் திரு.வி.க. நடத்திய 'நவசக்தி' என்ற நாளேட்டில் பயிற்சி பெற்றவர் ஆவார்.

மக்கள் பேராதரவைப் பெற்ற எழுத்தாளராகப் புகழ் பெற்றவர். வாழ்வோடு ஒட்டிய வளமான தமிழ்நடையை எழுதுவார். தமிழ்ப் பற்றையும், தேசிய உணர்வையும் குழைத்து, அடிமைத்தனத்துக்கு மருந்தாக அளித்து, ஆர்வத்துக்கு விருந்தாகப் படைத்து, படித்தவர்க்கும்,' பாமரர் களுக்கும் இடையே பலமான பாலமாகத் தனது பத்திரிகையை அமைத்துக் கொண்ட ஒரு சாதனை எழுத்தாளராவார் கல்கி.

'ஆனந்த விகடன்' பத்திரிகையில் கல்கி 1933-ஆம் ஆண்டில் எழுதிய கட்டுரைகளில், அவர் எழுதாத பொருள் இல்லை; தழுவாத துறை இல்லை; மீட்டாத உணர்வு இல்லை; இசையா? இங்கிதமாக எழுதுவார்; நாடகமா? அனைவரையும் மெய்மறக்கச் செய்வார்; சரித்திரம் கலந்த நாவல்களா? அவற்றைத் தமிழ் மக்களைத் தேனில் சுவை காண்பதுபோல படித்துச் சுவைக்க வைப்பார்? அன்றாட மனிதனின் கோணங் களையும், அவரது குறும்பான எழுத்துக் குத்தல்களால் மக்களை அறிவு மலர்ச்சியில் மிதக்க வைத்தவர் 'கல்கி' எனப்பட்ட கிருஷ்ணமூர்த்தி!

கவிதைத் துறையிலே பாரதியார் உருவாக்கிய பண்புகளை, திருப்பங்களை, உரைநடையில் உருவாக்கிய திறமையான பத்திரிகையாளராகத் திகழ்ந்தவர் கல்கி. செழிப்பான அவரது தமிழ்நடைப் பத்திரிகை, உலகுக்கு ஓர் இலக்கிய நாவல்களாகத் திகழ்ந்ததை இந்தச் செந்தமிழ் நாடறியும்.

## 'ஆனந்த விகட'னின் அற்புதத் தேசப்பற்று

மக்களைச் சிரிக்க வைக்கும்; அதே நேரத்தில் அவர்களைச் சிந்திக்க வைக்கும். விகடத் துணுக்குகளை ஆனந்த விகடன்

பத்திரிகையில் படித்தோர் அனைவரும் நாட்டுப் பற்றின் உரிமை வேட்கைகளை அனுபவித்தக் காலம் 'ஆனந்த விகடன்' பத்திரிகை வெளிவந்த நேரம்.

இந்தப் பத்திரிகை 1926-ஆம் ஆண்டில் இட்டா பார்த்தசாரதி நாயுடு பெற்ற மக்களால் நிறுவப்பட்டு, பூதூர் வைத்திய நாத ஐயரை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்தது.

இந்த விகடனில் கவிமணி தேசியக விநாயகம் பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, தம்பையா, கல்கி கிருஷ்ண மூர்த்தி, பி.ஸ்ரீ., தேவன், தும்லன் ஆகியோரது எழுத்துக்கள் மக்களின் உள்ளங்களில் தேசிய உணர்வுகளை ஊட்டின.

மக்களின் அடிமைத்தன வேதனைகள் ஒருபுறம், வேடிக்கை நிகழச்சிகள் ஒருபுறம், கேலி அழும் ஏழைகள் ஓலம் ஒருபுறம், கேலிச் சிரிப்பு ஒரு புறம். பரிகாசம் ஒரு புறம். பாட்டாலும், படத்தாலும் உருவாகும் கட்டுரைகள் ஒருபுறம் ஆகியவற்றை ஏற்று, 'ஆனந்த விகடன்' ஏடு மக்களை விழிப்புறச் செய்து வந்த பத்திரிகையாக அன்று வெளிவந்தது. இந்தக் கருத்துக்கள் அனைத்தும் நாட்டின் சுதந்தரப் போருக்குரிய வித்துக்களாக விளங்கின. இந்தப் பணிகளை விகடன் அன்றும் செய்து புகழ் பெற்றது. ஆனால், இன்றும் அதே ஆனந்த விகடன் பல குட்டி விகடன்களை ஈன்றுள்ளது. ''ஜூனியர் விகடன்'' 'சுட்டி விகடன்' 'அவள் விகடன்' 'சக்தி விகடன்' என்ற குட்டிகளாகப் பல்கிப் பெருகி, பத்திரிகைச் சந்தையிலே, பணமணத்தை நுகர்ந்து வலம் வந்து கொண்டிருக்கின்றன. இது இன்றைய 'விகடன்' நிலை. துடிப்புடன் துணிவுடன் செய்து வருவதை நாம் பார்க்கின்றோம்.

### சங்கு சுப்பிரமணியன் 'சுதந்திரச் சங்கு' ஏடு!

சங்கு சுப்பிரமணியம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு 1932-33-ஆம் ஆண்டுகளில் வெளிவந்த பத்திரிகை 'சுதந்திரச் சங்கு!' இந்தப் பத்திரிகை விலை என்ன தெரியுமா? மூன்று

தம்படிகள்! அதாவது அன்றைய நாணய மதிப்பில் காலணா விலையில் விற்பனையான பத்திரிகை.

இந்த 'சங்கு', படித்தவர்களைவிடப் பாமரர்கள் இடையே தான் அதிக செல்வாக்குப் பெற்று விற்பனையானது. ஏன் தெரியுமா? விலை காலணா என்பதால். முதல் பக்க முகப்பு கேலிச் சித்திரமும், பிற பக்கங்களில் ஆங்கிலேயர் ஆட்சியின் எதிர்ப்பையும் ஏற்று வெளிவந்த இதழாகும்.

அண்ணல் காந்தியடிகளின் அகிம்சை வழி நின்று, இந்தியாவை அடக்கு முறைக்கு ஆளாக்கிய ஏகாதிபத்திய தாக்குதலுக்குச் சவால் விட்டு எழுதி வெளிவந்த பத்திரிகை இது.

செயலுக்கு அஞ்சி, சொல்லில் தஞ்சம் புகுந்து, உரையாடல்களிலே ஊசலாடி, உணர்ச்சிகளைப் பறிகொடுத்து, பாமரரிடம் ஒதுங்கி, பதவிகளில் பதுங்கி, மிதவாதிகள் என்ற பெயரில் இதமான சுகவாழ்வு நடத்தி, அரசியலில் மிதந்து வந்தவர்கள்மீது பொது மக்களுக்கு ஆத்திரம் இருந்ததை 'சுதந்திரச் சங்கு' பத்திரிகை 'சாஸ்திரிகள் பேச்சு' என்று தலைப்பிட்டுக் கடுமையாகக் கண்டித்தது.

செத்தல் வாடுவின் காய்ந்த வத்தல், துரைச் சித்தம், க்ஷணப் பித்தம், குரங்காட்டி மந்திரி, ஷோக்குப் பிள்ளைப் போக்கு, மீசைக்குப் பூசை போடல், அவலும் உமியும் ஊதித் தின்போம் போன்ற சங்கு பத்திரிகைகளின் தலைப்புகள் அக்கால மக்கள் இடையே பிரசித்திப் பெற்றக் கவர்ச்சித் தலைப்புகளாக இருந்தன.

தேசிய உணர்வைத் துணிவுடன் பரப்பத் தொண்டாற்றிய பத்திரிகைகளில் 'சங்கு' பத்திரிகை ஒன்றாக விளங்கியது.

'பாரத தேவி' என்ற ஒரு தினசரி பத்திரிகையைச் சதானந்தம் என்பவர் 1938-ஆம் ஆண்டில் துவக்கிப் பல ஆண்டுகள் நடத்தினார். தேசிய உணர்வுகளுக்காக அது பர பரப்புடன் உழைத்தது.

'இளந்தமிழன்
மாத இதழ்

விடுதலைப் போராட்ட வீரர் நா. சோமயாஜலு 'இளந்தமிழன்' என்ற திங்கள் இதழைத் தூத்துக்குடி நகரிலே துவக்கி விடுதலைப் போர் பணிக்காக நடத்தினார்.

சிங்காரவேலரின்
'தொழிலாளன்'

பொதுவுடைமைச் சிற்பி என்று மக்களால் மதிக்கப்பட்ட ம. சிங்காரவேலர், 'தொழிலாளன்' என்ற பத்திரிகையைத் தொழிலாளர் நலனுக்காக உழைத்திட நடத்தினார்.

ப. ஜீவானந்தம்
'ஜனசக்தி' 'தாமரை'!

தமிழகப் பொதுவுடைமை தலைவர்களிலே ஒருவராகப் போற்றப்பட்ட கவிஞர், உரைநடை வீரர், ஆவேசப் பேச்சாளர், பாரதியார் பாடலின் வீர எதிரொலி, சீர்திருத்த நோக்காளரான இலக்கிய வித்தகர் ப. ஜீவானந்தம், 'ஜனசக்தி' என்ற பொதுவுடைமைக் கட்சி நாளேட்டைத் துவக்கி நடத்தியவர் ஆவார். அவர் விடுதலைப் போராட்ட தேசபக்தராக விளங்கித் தியாகம் புரிந்த கொள்கை வீரராகவும் வாழ்ந்தவர்.

அண்ணல் மகாத்மா அவர்கள் 1927-ஆம் ஆண்டில் தென்னாட்டிற்குச் சுற்றுப் பயணம் வந்தபோது தேசியக் காங்கிரசின் தீவிரத் தொண்டராகப் பணியாற்றி வந்த ப.ஜீவானந்தம் காந்தியடிகளுடன் சென்றார். அப்போது, சிறுவயல் என்ற கிராமத்தில் காந்தியடிகள் ஜீவாவிடம், 'உங்களுக்கு என்ன சொத்து இருக்கிறது என்று கேட்க, அதற்கு ஜீவா, 'இந்தியாதான் என் சொத்து' என்றார்.

உடனே மகாத்மா, 'இல்லையில்லை. நீங்கள்தான் இந்தியாவின் சொத்து' என்றாராம்' என்று அ.மா. சாமி தான் எழுதிய 'தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ஜீவாவுக்கு காந்தியடிகளிடம் எத்தகைய ஒரு மதிப்பும் மரியாதையும் இருந்தது பார்த்தீர்களா? இந்த

ஜீவாதான் பிற்காலத்தில் 'தாமரை' என்ற பத்திரிகைக்கும் ஆசிரியராக இருந்த பொதுவுடைமைச் சிற்பி ஆவார்.

## இராஜாஜியின் 'விமோசனம்'

இந்திய விடுதலைப் போரில் அண்ணல் காந்தியடிகளின் சிந்தனைகளுக்குத் திறவுகோலாக விளங்கிய சக்கரவர்த்தி இராசகோபலாசாரியார் திருச்செங்கோடு ஆசிரமத்தில் தங்கியிருந்த 1927-ஆம் ஆண்டில், 'விமோசனம்' என்ற பத்திரிகையை மதுவிலக்குக் கொள்கைக்காக நடத்தினார்.

## ச.து.சு. யோகி 'பாலபாரதி'

விடுதலைப் போர் வித்தகஞானியருள் ஒருவரான ச.து.சு. யோகி என்பவர், சிறுவர் சிறுமிகளுக்கு தேசிய உணர்வையூட்டிட 'பாலபாரதி' என்ற பத்திரிகையில் இளைஞர்களின் தேசியக் கடமைகளை வலியுறுத்தி நடத்தினார்.

## பாவலர் நடத்திய 'தேசபந்து' இதழ்

சுதந்திரப் போராட்ட வீரர்களுள் ஒருவரான தே.பொ. கிருஷ்ணசாமி பாவலர் என்பார், 'தேசபந்து' என்ற பத்திரிகையைத் துவக்கித் தேசத் தொண்டாற்றினார்.

'இந்துநேசன்', 'பாரதி', 'சுதந்திர வீரன்', 'பாரதமித்திரன்', 'காங்கிரஸ் பேரிகை', 'பாரதமணி', 'வீரசக்தி', 'சுதந்திரம்,', 'பொதுஜனம்', 'இந்துஸ்தான்', 'தமிழர் போதினி', 'இந்திய ஒளி', பரலி சு. நெல்லையப்பரின் 'லோகோபகாரி', இராய. சொக்கலிங்கத்தின் 'ஊழியன்' எழுத்தாளர் வ.ரா.வின் வர்த்தகமித்திரன் 'சத்திய வர்த்தமானி' 'சுதேசபூஷணி', 'வெற்றிக் கொடியோன்' போன்ற பத்திரிகைகள் விடுதலைப் போர் காலத்தில் தோன்றி, வளர்ந்து, ஒளியுதறி இறுதியிலே மறைந்தன. அதனால், இவற்றின் ஒட்டு மொத்த உழைப்புகள், தேசத் தொண்டுகள், நாட்டுணர்ச்சி பணிகள், தியாக வரலாறுகள் அனைத்தும் தேசிய முரசுக் கொட்டுவனவாகவே இருந்தன.

# 6

# சுதந்திர இயக்கத்தில் இருபதாம் நூற்றாண்டு இதழ்கள்

இந்திய விடுதலை இயக்கம் மக்களிடையே பரபரப்பாகவும், விறுவிறுப்பாகவும் இந்தியா முழுவதுமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சரியாகப் பரவாமல் இருந்ததற்குக் காரணம், பத்திரிகை பலம் பெருகாததின் விளைவே ஆகும்.

கங்காதர் பட்டாச்சாரியார், இராஜராம் மோகன்ராய், ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம், ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி போன்ற ஒரு சிலரின் பத்திரிகைகள் மட்டுமே அப்போது தோன்றின.

அவற்றில் கூட பிரிட்டிஷ் ஆட்சியரின் ஒழுக்கக் கேடுகளை அம்பலப்படுத்தும் பத்திரிகைகளே அதிகமாக வெளிவந்தன. அதனால், அகில இந்திய தேசியக் காங்கிரசின் முற்போக்குக் கொள்கைகள் மக்கள் இடையே நன்றாக வேறுான்றாமல் இருந்தன.

இந்திய தேசியக் காங்கிரஸ் இயக்கம் 1885-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட பிறகு, அதன் தலைவர்கள் நகர்தோறும் பேரவை மாநாடுகளைப் போன்ற அகில இந்தியக் கூட்டங் களை நடத்தி, பிரிட்டிஷ் ஆட்சியிடம் கோரிக்கை மனுக்களைக் கொடுக்கும் பணிகளே அவர்களுக்குச் சரியாக இருந்தது.

சென்னை ஜி. சுப்பிரமணிய ஐயரும், சேலம். விசயராகவாச்சாரியாரும் இணைந்து, 'இந்து' நாளேட்டையும், 'சுதேசமித்திரன்' வார, தின இதழ்களையும் தமிழ்நாட்டில் துவக்கிக் கொள்கைப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்ததற்குப் பிறகுதான், மக்கள் காங்கிரஸ் பேரியக்கம் பற்றிப் புரிந்து கொள்ளும் வாய்ப்புகள் வாய்த்தன.

இந் நிலைக்குப் பிறகு, இருபதாம் நூற்றாண்டில் இந்திய விடுதலை இயக்கத்தில், வட நாட்டிலும் - தென்னாட்டிலும் பத்திரிகைகள் பல ஆரம்பிக்கப்பட்டு, அவை தீவிரமாகக் கொள்கைப் போர் நடத்தும் நிலை உருவானது. அதனால், இந்திய இதழ்களின் வளர்ச்சிக்கும் ஓர் உத்வேகம், பரபரப்பு, விறுவிறுப்பு, சுறுசுறுப்பு ஆகியவை மக்கள் இடையே தீவிரமடைந்தன.

இந்தத் தீவிர உணர்ச்சிகளை அப்போதையக் காங்கிரஸ் இயக்கத் தலைவர்கள் ஒன்று திரட்டி, பிரிட்டிஷ் பேரரசுக்கு எதிராகப் போராடத் திட்டம் வகுக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள்.

மாராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த விஷ்ணு கிருஷ்ண சிப் லாங்கர் என்பவர் மராட்டிய மொழியில் கேசரி (Kesari) என்ற பத்திரிகையையும், இங்லீஷில் 'மராட்டா' (Mahratta) எனும் இதழையும் துவக்கி நடத்தினார். இந்தப் பத்திரிகைகளைத்தான் பிற்காலத்தில் பால கங்காதர திலகர் எனும் மராட்டியத் தலைவர் ஏற்று நடத்தினார்.

பம்பாய் நகரில் பல ஆண்டுகளாக நீதித் துறையில் பணி யாற்றிய நீதிபதி மகாதேவ கோவிந்த ரானடே விருப்பத் திற்கேற்ப 1887-ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியடிகளின் அரசியல் ஆசானான பாரிஸ்டர் கோபால கிருஷ்ண கோகலே என்ற மிதவாதக் காங்கிரஸ் இயக்க அணியின் தலைவர் ஆசிரியராக அமர்ந்து ' சர்வ ஜன சபை' (Sarva Jana Sabha) என்ற ஆண்டுக்கு நான்கு முறை வெளிவரும் காலாண்டு பத்திரிகையை நடத்தினார்.

கோபால கிருஷ்ணன் கோகலே 'சுதாரக்' (Sudharak) என்று ஆங்கிலத்திலும், மராத்தியிலும் பத்திரிகைகளை நடத்தி தேசியப் பிரச்சனைகளை மக்களுக்கு உணர்த்தினார்.

இந்திய தேசியக் காங்கிரஸ் பேரவையில் 1907-ஆம் ஆண்டில் பெரும் பிளவு ஏற்பட்டது. அப்போது காங்கிரஸ் மிதவாத அணியிலே கோகலே இருந்தார். உடனே தனது தொண்டர்களோடு 'தக்காண சபை' (Deccan Sabha) என்ற ஓர் அமைப்பை நிறுவினர். இந்திய ஊழியர் சங்கம் என்பதை அமைத்தார். இந்த சங்கம் சார்பாக 'தியான் பிரகாஷ்' (Dhyan Prakash) என்ற பத்திரிகையை நடத்தினார். பத்திரிகைச் சுதந்திரத்திற்கு இந்த இதழ் கடுமையாகப் போரிட்டது.

### பிரிட்டிஷ் ஆட்சி அடக்கு முறைகள்

பிரிட்டிஷ் அரசு, செய்தித் தாள் சட்டம் என்ற ஒரு சட்டத்தை 1908-ஆம் ஆண்டு கொண்டு வந்தது. இதை குற்றங்களுக்குத் தூண்டிவிடும் சட்டம் - VII என்று; அதாவது (The News Papers (Incitement to Offences Act VII) என்று அரசு குறிப்பிட்டது.

எந்தப் பத்திரிகை ஆசிரியர் கலகங்களைத் தூண்டிவிடும் வகையில் செய்திகளை எழுதுகின்றாரோ, அவர்மீது நடவடிக்கை எடுத்திட, உள்ளூர் அதிகாரிகளுக்கு இது அனுமதியளிக்கும் சட்டமாகும். இந்தச் சட்டத்தின்படி பத்திரிகைகள் மீது அரசு ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. அதில் ஏழு பத்திரிகைகளை அரசு கைப்பற்றியது.

மிண்டோ - மார்லி சீர்திருத்தங்கள் என்ற சட்ட நடவடிக்கைகள் பெயரால், பத்திரிகைகளை அடக்க அரசுக்கு அதிகாரம் அளித்தது. இந்தச் சட்டத்தை மதன்மோகன் மாளவியா, பூபேந்திர நாத்பாசு, பிரோஷ்ஷா மேத்தா ஆகியோர் நாடாளுமன்றத்தில் வன்மையாகக் கண்டித்தார்கள்.

'இந்திய இதழ்கள் சட்டம்' என்றொரு சட்டம் 1910-ஆம் ஆண்டு அரசினரால் கொண்டு வரப்பட்டு, அதன் வாயிலாகப்

பிணையத் தொகை கட்ட வேண்டும் என்றார்கள். இந்தக் கெடுபிடி முறையால் எட்டு பத்திரிகைகள் பழிவாங்கப்பட்டன.

பாலகங்காதர திலகர் மீதும், அவரது பத்திரிகை மீதும் அரசுக்கு எதிராகச் செயல்பட்ட வழக்குத் தொடுக்கப்பட்டது. இவ்வாறு பல பத்திரிகைகளை அரசு ஒடுக்க நடவடிக்கை மேற்கொண்டது.

## அரசை எதிர்த்து இதழ்கள் எதிர் நீச்சல்

ஆங்கில ஏகாதிபத்தியம் பத்திரிகைகளை இவ்வாறு பழி வாங்கி, அதன் ஆசிரியர்களைச் சிறையிட்டது. அவர்களை நாடு கடத்தி வாட்டி வதைத்தது. ஆனாலும், எந்தப் பத்திரிகை ஆசிரியரும் பயந்து ஓடிப் பதுங்கிக் கொள்ளவில்லை. வருவது வரட்டும் என்று அரசு எதிர்ப்புகளைத் தங்களது பத்திரிகை வளர்ச்சிக்கு உரமாக்கிக் கொண்டார்கள்.

அரசு எதிர்ப்புக்கு அஞ்சாத பத்திரிகைள் சில : திலகரின் 'கேசரி', அரவிந்தரின் 'வந்தே மாதரம்',விவேகானந்த அடிகளாரின் சகோதரர் பூபேந்திர நாத்தின் ' ஜுகெந்தா' பிரமோபந்தா உபாத்தியாயாவின் 'சந்தியா', பிரோஷ்ஷா மேதாவின் 'பாம்பே கிரானிக்கிள்', மௌலான முகமுது அலியின் 'காம்ரேட்', அபுல்கலாம் ஆசாதின் உருது இதழ், 'அல்-ஹிலால்', வி.எஸ். சீனிவாசச்சாரியார் 'செர்வெண்ட் ஆஃப் இந்தியா'.

மேற்கண்ட எல்லா பத்திரிகைகளும் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து கர்ஜனையிட்டுக் கொண்டிருந்த வேங்கைகளாக உலாவின.

## காந்தியடிகளின் 'யங் இந்தியா; ஹரிஜன்'

மகாத்மா காந்தியடிகள் இந்திய விடுதலைப் போர் இயக்கமான அகில இந்திய தேசியக் காங்கிரசில்; 1920-ஆம் ஆண்டில் காலெடுத்து வைத்த பின்பு, காங்கிரஸ் இயக்கப்

போக்கில் அகிம்சையும், அற்புதமும் குடிகொண்டு கோலோச்சின. அதனால் இந்திய அரசியலில், அடிக்கடி போராட்டங்கள் உருவாகி புதிய புதிய திருப்பங்கள் விளைந்தன.

அகிம்சை அண்ணல் காந்தியடிகள், ஏற்கெனவே தென் ஆப்ரிக்காவில் 'இந்தியன் ஒப்பினியன்' (Indian Opinion) என்ற பத்திரிகையை நடத்திப் போதிய அனுபவம் பெற்றிருந்தவர் என்பதால், இந்திய மண்ணில் விடுதலைக்காக உழைத்திடும் கருவிகளென 'யங் இந்தியா', 'ஹரிஜன்', 'நவஜீவன்' ஆகிய பத்திரிகைகளைத் துவக்கி வெற்றிகரமாக நடத்தினார். இவர்தான் தேசிய இயக்கப் பத்திரிகைகளுக்கு தக்க அறிவுரை கூறும் தந்தையாக இருந்தார்.

இதழ்களை வருவாய் இழப்பில் நடத்தாமல் இலாபத்தில் நடத்தும் வழியை உருவாக்கி, உலகிலேயே அடிகள் ஒரு பெரும் பத்திரிகை ஆசிரியர், நிறுவனர், நடத்துனர் என்ற நற்பெயர்களை எடுத்து, அதை நிலைத்து நிற்கவும் வழி காட்டியவர் காந்தி பெருமான். அவர் நடத்திய எல்லா ஏடுகளும் ஓர் உன்னதமான உயர்ந்த இலட்சியத்தோடு நடந்தவைகளே தவிர, பணத்துக்காக எதையும் எழுதலாம் என்ற கீரர்கள் போக்கை அறியாதவர், தெரியாதவர்! எனவே, அந்தப் பத்திரிகைகளை அறநோக்கோடும், அகிம்சைப் போக்கோடும் நடத்திக் காட்டியவர் அடிகள்.

பத்திரிகைப் பணியை காந்தி அடிகள் தன்னுடைய வாழ்க்கைக் குறிக்கோளுக்குரிய கலங்கரை விளக்கமாக்கிக் கொண்டார். எவ்வாறெனில், அவருடைய குறிக்கோள் அன்றுள்ள கடுமையான அரசியல் சூழலில், ஆயுதம் ஏந்தா அறப்போர் தத்துவத்தோடு நேரடித் தொடர்புக்கேற்ற சத்தியாக் கிரகத்தை நாட்டுக்கு அறிமுகப்படுத்தி, அதை ஓர் ஒப்பற்ற அரசியல் ஆயுதமாக்கி, அனைவரும் ஏற்கும் பண்பை மக்கள் இடையே நிலை நாட்டினார். இதுவே ஓர் அற்புதமன்றோ அரசியல் உலகில்?

அதனால்தான் அண்ணல் ஆங்கில அடக்கு முறைகளைப் பற்றித் தனது 'யங் இந்தியா' ஏட்டில் ஒருமுறை

குறிப்பிடும்போது, "அடக்கப்பட்ட உணர்ச்சிகளோடு பத்திரிகைகளை நடத்துவதைவிட அவற்றை வெளியிடாமலே இருப்பது நல்லது'' என்று குறிப்பிட்ட உணர்ச்சி, இளம் பத்திரிகையாளர்களுக்கான ஓர் அறிவுரை ஆகும்.

காந்தியடிகள் பத்திரிகை ஆசிரியரான பிறகு, அவரைப் பின்பற்றி, சுவடுகள் மாறாமல் பல பத்திரிகைகள் வட இந்தியாவிலும், தென் இந்தியாவிலும் வெளிவந்து, அண்ணலின் அறப்போர்களுக்கும், விடுதலைப் போர் இலட்சியங்களுக்கும் பேருதவிகளாக, படைக் கலன்களாக, பிரச்சாரக் கருவிகளாக, போராட்ட முரசுகளாக, அறிக்கை வலம்புரி சங்குகளாக ஒலி எழுப்பின! நாட்டை விழிப்புறச் செய்தன! சுதந்திர ஊது குழல்களாக அலைஓசை, எழுப்பின எனலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, விடுதலைப் போரின் வெற்றிச் சிகரமாக, அண்ணல் காந்தியடிகளின் அரசியல் வாழ்வின், இறுதிக் கட்ட போர் முரசாக, அதாவது ஆங்கிலேயர் ஆதிக்கத்திற்கும் அடிமை இந்தியர்களுக்கும் இடையிலே நடைபெற்ற குருக்ஷேத்திரப் போர் முனையாக; 1942-ஆம் ஆண்டில், 'வெள்ளையனே வெளியேறு' (Quit India) என்ற போர்க் களம் அமைந்ததை உலகமே உணரும்.

அத்தகையப் போர் முனையின் வெங்களத்தில் பத்திரிகைகள் பல செங்களமாடிடும் எழுத்துக்களை அக்கினி அம்புகளாக எய்தன. துள்ளிச் சென்ற விடுதலைப் போர் போராட்ட வேல்கள், வெள்ளையர் ஆணவ வேர்களை வெட்டி வீழ்த்திப் பகையை அள்ளி அள்ளிக் குவித்தன.

எனவே, விடுதலைப் போர்க் காலத்தில் இந்தியா முழுவதும் நடைபெற்று வந்த பத்திரிகைகள் எல்லாம் ஆற்றிய பங்குகளை ஒரு தனி வரலாறாக எழுதலாம். அவ்வளவு அற்புதங்களை நமது பத்திரிகையாளர்கள் ஆற்றி உள்ளார்கள். அந்த உண்மைகள் உலக விடுதலை இயக்கங்களுக்குரிய அரிச் சுவடிகளாகும்!

7

# சமுதாய விடுதலைப் போரில் திராவிடர் இயக்க இதழ்கள்

'இனப் பெயர் ஏன்' என்று பிறன் எனைக் கேட்டால்
மனத்தில் எனக்குச் சொல்லொணா மகிழ்ச்சியாம்
'நான்தான் திராவிடன்' என்று நவில்கையில்
தேன்தான் நாவெலாம்! வான்தான் என்புகழ்!
'முன்னாள்' எனும் பன்னெடுங் காலத்தின்
உச்சியில் 'திராவிடன்' ஒளி செய் கின்றான்
அன்னோன் கால்வழி யாகிய தொடர் கயிற்று
மறுமுனை நான்!என் வாழ்வின் கால்வழி
யாகிய பொன்னிழை அளக்க ஒண்ணா
எதிர்கால லத்தின் கடைசியோ டியைந்தது.
சீர்த்தியால், அறத்தால், செழுமையால் வையப்
போர்த்தி றத்தால் இயற்கை புனைந்த
ஒருயிர் நான்!என் உயிர்இனம் திராவிடம்!
ஆரியன் அல்லேன் என்னும் போதில்
எத்தனை மகிழ்ச்சி! எத்தனை மகிழ்ச்சி!
விரிந்த வரலாற்றுப் பெருமரம் கொண்ட
''திராவிடன்'' ஆலின் சிறிய வித்தே!
இந்நாள் வாழ்வுக் கினிதினி தாகிய
பொன்னேர்-கருத்துக்கள் பொதிந்துள அதனில்!
உன்இனப் பெயர்தான் என்ன என்று
கேட்கக் கேட்க அதனால் எனக்கு
மீட்டும் மீட்டும் இன்பம் விளைவதாம்''

- என்று பாவேந்தார் பாரதிதாசன் அவர்கள் 'திராவிடன்' என்ற இனப் பெயர் ஏன் என்று என்னைக் கேட்டால், நான்தான் திராவிடன் என்று கூறுவேன் என்று அருமையாக, பெருமையா திராவிடர் இன வரலாற்றை, 'திராவிட நாடு' என்ற இனப்பெயர் கொண்ட கவிதைப் பகுதியில் பக்கம் 212-213ல் கூறியுள்ளார்.

இந்தியா என்று உலக மக்களால் அழைக்கப்படும் பரத கண்டத்தில் பல மாநிலங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று சென்னை மாநிலம். அறிஞர் அண்ணா அவர்கள் 1967-ஆம் ஆண்டில் முதல் அமைச்சரான பிறகு, தமிழர் இலக்கிய மரபுக்கேற்ப அதற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிட்டார்.

தந்தை பெரியார் அகில இந்தியத் தேசியக் காங்கிரஸ் பேரியக்கத்தை விட்டு வெளியே வந்த பிறகு, சுய மரியாதை இயக்கம் என்ற ஓர் அமைப்பைக் கண்டு, பிறகு அது அண்ணா அவர்கள் தீர்மானத்திற்கேற்ப, திராவிடக் கழகமாக மாற்றப் பட்டது. அந்தத் தாய்க் கழகத்திலே இருந்து தோன்றியதுதான் திராவிடரியக்கம்.

பாவேந்தர் பாரதிதாசன் பாடியுள்ள மேற்கண்ட பாடல் தமிழ் மக்களாகிய திராவிடர் என்ற ஓர் இனத்தின் பெருமை மிக்க வரலாற்றைப் பற்றிய பாடலாகும். தமிழர்கள் திராவிடர்களா? இந்திய மக்களில் வேறோர் இனத்தவரா? என்ற இன வேறுபாட்டை, வடபகுதி வாழ் இந்தியர்கள் ஒவ்வொரு ஆண்டுதோறும் இன்றுவரைக் கொண்டாடி வரும் 'இராம லீலா' என்ற புராண விழாவே அதற்குத்தக்க சான்றாகும்.

திராவிட மாவீரன் இராவணன் என்ற தென்னிலங்கை வேந்தனை, இராமன் என்ற ஆரிய மன்னன் தீயிட்டு எரிக்கும் இனப் படுகொலை நிகழ்ச்சியை வட இந்திய மக்களைக் கோலாகலமாகக் கொண்டாட விட்டுவிட்டு, 26.10.74 அன்று நடைபெற்ற அந்த நிகழ்ச்சியில் இந்தியக் குடியரசு தலைவராக இருந்த பக்ருதீன் அலி அகமது அவர்களும், இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களும் கலந்து கொண்டாடு கிறார்கள் என்றால் இது மதச் சார்பற்ற நாடா?

"பல இலட்சக்கணக்கான தென்னிந்திய, தமிழ்நாட்டு திராவிட மக்கள் தங்களை அந்த விழா அவமானப்படுத்துகிறது;

ஆத்திரமூட்டுகிறது. இந்தக் கொடூரமான இனப்படுகொலை விழாவுக்குக் குடியரசுத் தலைவரும், பிரதமரும் போகக் கூடாது. போனால், பல இலட்சக்கணக்கான திராவிட மக்களாகிய நாங்கள் தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே இராமன் உருவத்தைத் தீயிட்டுக் கொளுத்துவோம் என்று'' தமிழ் மக்கள், அதாவது திராவிடர்கள் ஆயிரக்கணக்காக தந்தி களைக் கொடுத்தார்கள் குடியரசு தலைவருக்கு பிரதமருக்கும்.

உயர்ந்த பதவியில் இருக்கும் அந்த பெருமக்கள், இலட்சக்கணக்கான மக்கள் குரலை அன்று மதித்தார்களா? கேட்டார்களா? இந்தியா மதச் சார்பின்மை நாடுதான் என்பதை அவர்கள் நிரூபித்தார்களா? இல்லையே! ஏன்?

எனவே, 25.12.74 அன்று சென்னை மாநகரில் திராவிட இனம் ஒன்று திரண்டு மாலை 6.50 மணிக்கு இராமன், சீதை, இலட்சுமணன் என்ற உருவங்களுக்குத் தீயிட்டு, 'இராவண லீலா' என்ற ஒரு விழாவைக் கொண்டாடினார்கள். இந்த நிலை யாரால், எதற்காக, ஏன்? நடைபெற்றது என்பதைச் சிந்திக்கும் போதுதான், 'திராவிடன்' என்ற ஓர் இனமுண்டு; தனியே அவர்க்கோர் நாகரிகம் உண்டு' என்ற தெளிவு எல்லார்க்கும் ஏற்படுகின்றது.

இராவணன் திராவிடனா? என்றால், அதையும் இலங்கேஸ்வரன் என்ற நாடகத்தை எழுதி, தமிழ்நாடு முழு வதும் நடத்தி, இராவணனை ஒரு பிராமணன் என்று குறும்புப் புராணம் மூலம் எழுதி நிரூபிக்கிறார்கள்? அவ்வாறானால், ஆரிய இராவணனை ஆரிய ராமனை விட்டே தீயிட்டுக் கொளுத்த விடலாமா? என்ற கேள்வியும் எழுகின்றது அல்லவா?

இந்தக் கேள்வியின் பதில் என்ன? இராவணன் திராவிட மன்னன்தான் என்பது தானே? தற்போது தமிழ்நாட்டில் 'செல்லமே' என்ற ஒரு திரைப்படம் வெளிவந்து ஓடிக் கொண்டிருக்கின்றது. அந்தப் படத்தில் ஒரு பாட்டு :- அதாவது திராவிட மறவனும் ஆரிய் அழகு சுந்தரியும் மாறி மாறி பாடிடும் டூயட் பாடல் அது? என்ன தெரியுமா? அந்த பாடல்?

ஆரிய உதடுகள் என்னது;
திராவிட உதடுகள் உன்னது;

ஆரியம் திராவிடம் கலக்கட்டுமே;
ஆனந்த தாண்டவம் பிறக்கட்டுமே!

என்பதுதான் அந்தப் பாடல். அப்படியானால், ஆரியம் என்ற இனமும், திராவிடம் என்ற இனமும் இன்று வரை வாழ்கிறது என்பதுதானே சமுதாயச் சிந்தனை? அந்தச் சிந்தனைப் போகம் ஒன்றாக வேண்டும் என்றுதானே இரு இனக் காதல் களமும் விரும்புகிறது. இந்த இனவேறுபாடு 2005-ஆம் ஆண்டில் திரைப்படத்தில் போகம் காண மோகம் கொள்கின்றபோது, திராவிட-ஆரிய இன மோதலை இந்திய அரசே உருவாக்கலாமா? இதுவா மதச் சார்பற்ற நாடு?

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 31.1.76 அன்றிரவு தி.மு.கழக ஆட்சியைக் கலைத்தார். பிறகு நெருக்கடி நிலை (Emergency) யைப் பிறப்பித்தார். அதனால் பத்திரிகை நிலைகள் பெரிதும் பாதித்தன. காவல் துறைத் தணிக்கை அதிகாரிகளது பார்வைக்குப் பிறகே சில பத்திரிகைகள் அச்சாகும் சூழ்நிலை. அந்தச் சூழ்நிலை பத்திரிகைச் சுதந்தரத்தின் கழுத்தை ஈரத்துணிப் போட்டு அறுத்துக் கொண்டிருந்தது.

அதன் எதிரொலி என்ன தெரியுமா? திராவிடர்களுக்கு, குறிப்பாகத் தமிழர்களுக்கு மானம் ஊட்டிய தந்தை பெரியார் பத்திரிகை ‘விடுதலை’ என்ற நாளேடு, எந்தக் காலத்திலும், எந்த நேரத்திலும் பெரியார் அவர்களைத் தந்தை பெரியார் என்று எழுதுவது அந்த ஏடு வழக்கம். அந்த இதழ் அவருடைய பத்திரிகை ஏடு. அது மட்டுமன்று, சுயமரியாதை இயக்கமும், அதன் வழிவழி வந்த கழகங்களும் பெரியார் அவர்களைத் தந்தை பெரியார் என்றே குறிப்பிடுவது வழக்கமாக இன்றும் இருக்கின்றது.

இந்தக் கழகப் பழக்க வழக்கத்திற்கு ஏற்றவாறு, இந்திரா காந்தியின் நெருக்கடி கால்க் கெடுபிடிகள் நேரத்தில் விடுதலை. நாளிதழில் தந்தை பெரியார் என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்த்த ஆரியத் தணிக்கை அதிகாரிகள், ‘தந்தை பெரியார் என்று எழுதக் கூடாது என்றும், அதே நேரத்தில் சங்கராச்சாரி எனும் பெயருடன் ‘ஆர்’ என்னும் மதிப்பு விகுதியைச் சேர்த்தே அச்சாக வேண்டும் என்றும் அச்சுறுத்தினார்கள். என்ன பெயர் இதற்கு? பெரியார் திராவிட இனத்தின் பெருந் தலைவர்?

சங்கராச்சாரியார் ஆரிய இனத்தவர்களின் பெருந் தலைவர். இவர்கள் இடையே திராவிட எதிர்ப்பு, பிராமண ஆதரவு மனப்பான்மை தோன்றியது ஏன்? இதுதான் திராவிட-ஆரிய இன அடையாள உயர்வு தாழ்வு மனப்பான்மை! ஆகும்.

மதச்சார்பின்மை என்று கூறப்படும் ஒரு நாட்டில் இந்த இன பேத வாதங்கள் உருவாகலாமா? உருவாவதற்கு அரசுகளே காரணமாக இருக்கலாமா? அந்த நிலைமைகள் ஏற்படும்போது, திராவிடன் - தன்னை - தன் இனத்தை உயர்வாக மதிப்பதிலே என்ன தவறு? இந்த எண்ணத்தைத்தான் பாவேந்தருடைய மேலே உள்ள இனப்பெயர் பாடற்பகுதி நமக்கு வலுவூட்டுகிறது. மீண்டும் மீண்டும் நான் திராவிடன் என்று தோள் தட்ட வைக்கின்றது.

எனவே! பகுத்தறிவு ஆசான் தந்தை பெரியார் அவர்கள் கண்ட சுயமரியாதை இயக்கம்தான் தமிழ்நாட்டின் வரலாற்றையே மாற்றிய இயக்கமாகும் என்று பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் செயலாளர் கி. வீரமணி கூறுவதும் உண்மை தானே!

தந்தை பெரியார் கண்ட திராவிடரியக்கத்தை, அதன் கொள்கைகளைப் பலப்படுத்திட, அந்த இயக்கத்தின் சார்பாக, எண்ணற்ற திராவிடரியக்கப் பத்திரிகைகள் வெளி வந்துள்ளன. அவற்றை சற்று விரிவாகவே இப்போது அறிவோம்.

## பெரியார் 'குடியரசு', 'விடுதலை' பத்திரிகைகள்

தமிழ்ப் பத்திரிகை உலகமானாலும் சரி, திராவிடர் இயக்கப் பத்திரிகைகளானாலும் சரி தந்தை பெரியார் அவற்றுக்கு பெருந்தொண்டு செய்துள்ளார். காங்கிரஸ் கட்சியிலே அவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தபோது, 'குடியரசு' என்ற பத்திரிகையைத் துவக்கி, தனது கட்சிப் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தினார்.

இந்திய விடுதலைப் போர் கொள்கைகளுக்கும், அண்ணல் காந்தியடிகளின் போராட்டங்களுக்கும் முன்னோடியாக விளங்கியவர் பெரியார்! அப்போது புதிய பத்திரிகையாகத் துவக்கப்பட இருந்த எஸ்.எஸ். வாசன் அவர்களுடைய 'ஆனந்த

விகடன்" பத்திரிகைக்கும், அண்ணல் கதர் பிரசார வணிக விற்பனைக்கும் குடியரசு இதழில்தான் அடிக்கடி விளம்பரங்கள் வந்து கொண்டிருக்கும்.

காங்கிரஸ் தேசியத்தை விட்டு பெரியார் வெளியேறினார். சுயமரியாதை இயக்கம் கண்டார். அதற்காக அவர் அரும்பாடு பட்டதோடு இராமல், குடியரசு பத்திரிகையைச் சுயமரியாதை இயக்கத்திற்கான கொள்கை விளக்க ஏடாக மாற்றினார். பத்திரிகை அந்த நேரத்தில் மிகப் பரபரப்புடன் விற்பனையானது.

வட நாட்டுக் காங்கிரஸ் தேசிய இயக்கத்தின் திறமைமிக்க தலைவர்களுள் மூவரை லால், பால், தாஸ் என்பார்கள் காங்கிரஸ் தலைவர்கள். அந்த மூவர் யார்? லாலா லஜபத்ராய், பால கங்காதர திலகர், சித்தரஞ்சன்தாஸ் என்பவரே அந்த மும்மணிகள். அந்த மூவரும் எழுத்து, பேச்சு, ஆக்கப் பணிகள் ஆகிய மூன்றிலும் நிகரற்றவர்களாக விளங்கியவர்கள். அதனால் அவர்களை அன்பாக, அருமையாக லால், பால், தாஸ் என்பார்கள்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் இயக்கத்திலும் குறிப்பாக பத்திரிகை உலகில் சுற்றி மூவரை மும்மூர்த்திகள் என்று அழைப்பார்கள் காங்கிரஸ் தொண்டார்கள். அந்த மூவர் யார்?

ஒருவர் முதலியார்; மற்றவர் நாயுடு; அடுத்தவர் நாய்க்கர். அதாவது 'தேச பக்தன்' ஆசிரியரான திரு.வி.க. முதலியார்; 'தமிழ்நாடு' நாளிதழின் ஆசிரியர் டாக்டர் வரதராசலு நாயுடு; 'குடியரசு' பத்திரிகை ஆசிரியர் ஈ.வெ.ராமசாமி நாய்க்கர் என்பவர்களே அந்தப் பத்திரிகை உலகின் மும்மூர்த்திகளாக விளங்கினார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

'குடியரசு' இதழ் சுயமரியாதைப் பிரசார பீரங்கி யானவுடன், பிராமணர் அல்லாதவர்க்குப் பாடுபடும் பத்திரிகையாக மாறியது. பெரியாரின் குடியரசு இதழ், திராவிட இயக்கப் பத்திரிகைகளுக்குத் தாயாகவும் திகழ்ந்தது.

**'விடுதலை', 'திராவிட நாடு'**
**காஞ்சி ஆசிரியர் அண்ணா**

அறிஞர் அண்ணா பி.ஏ.,(ஆனர்ஸ்) தேர்வுகளை எழுதி முடித்த பின்பு, 1936-ல் பெரியாரை அண்ணா திருப்பூர்

செங்குந்தர் மாநாட்டில் சந்தித்தார். 'விடுதலை' நாளேட்டிலும், 'ரிவோல்ட்' பத்திரிகையிலும் ஆசிரியராகப் பணியாற்றி அற்புதமான கட்டுரைகளையும், அரசியல் விமர்சனங்களையும், மறுமலர்ச்சித் தமிழ்நடையில் எழுதி, படித்த மாணவர்களிடம் மதிப்பைப் பெற்று, கழகத்துக்கு மாணவரணியை உருவாக்கினார்.

காஞ்சிபுரத்தில் 'திராவிட நாடு' என்ற வாரப் பத்திரிகையை அண்ணா துவக்கினார். அந்த இதழுக்குப் பெரியாரும் நன்கொர்டை கொடுத்தார். இங்லீஷ் இலக்கியங்களை அண்ணா ஆழமாகக் கற்றதால், எந்த ஒரு தமிழ் எழுத்தாளரிடமும் குடியேறாத புதிய ஒரு தமிழ் எழுத்து நடைபாணியும், புதுமைப் பேச்சுக்களும் அண்ணாவிடம் குடி கொண்டது. அதனால் திராவிட நாடு பத்திரிகை ஆயிரக் கணக்கில் விற்பனையானது மட்டுமன்று. விலைக்குக் கிடைப்பதும் அரிதாக இருந்தது.

அண்ணா தமிழ்நடையில் தனக்கென ஒரு பாணியை உருவாக்கிக் கொண்டதைப் போலவே ஆங்கில எழுத்து நடையிலும் படைத்துக் கொண்டார். தமிழ் இலக்கியம், வரலாறு, நாடகம், சிறுகதை, புதினம், வரலாற்று ஆராய்ச்சிகள்; ஆங்கில இலக்கிய நயங்கள் ஆகியவற்றிலே மட்டும் அண்ணா திறமையாளர் அல்லர்; அவரது ஆங்கிலப் பேச்சும், எழுத்து நடையும் தமிழ் நடை பாணியைப் போலவே அற்புதமாக அமைந்தனவாகும்.

ஆங்கிலத்திலே ஹோம் லேண்டு (Home Land), 'ஹோம் ரூல்' (Home Rule) என்ற பத்திரிகைகளையும், 'திராவிட நாடு', 'காஞ்சி' என்ற வார இதழ்களைத் தமிழிலும் பல ஆண்டுகளாக நடத்தினார். அவரது எழுத்துக்கள் மூட நம்பிக்கையின் முதுகெலும்புகளை முறித்தன. தன்மானக் கட்டுரைகள், இனமானக் கட்டுரைகள், தமிழாபிமானக் கட்டுரைகள், தம்பிக்குக் கடிதங்கள் என்ற கடிதக் கட்டுரைகள்; வரலாற்று ஆய்வுச் சமுதாயச் சீர்த்திருத்த நாடகங்கள் ஆகியவைற்றைக் கணக்கற்று எழுதியெழுதி தனக்கென வாசகர் வட்டத்தை ஊரூருக்கு உருவாக்கிக் கொண்ட ஊக்கச் சிற்பியாக உலா வந்தவர் அண்ணா.

அமெரிக்காவில் இங்கர்சால் பேச்சுக்கு மட்டுமே அரங்கக் கட்டணம் உண்டு. அதுபோலவே 'நா' நயமும், 'நா' வளமும், 'நா' நலமும், கொண்ட அண்ணா அவர்கள் பேச்சுக்கு மட்டும் தான் தமிழ்நாட்டில் அரங்க விலை. அதாவது பேச்சுக்கு மக்கள் கட்டணம் வழங்கும் புதுமை முறை உருவானது.

அண்ணா மேடை உரைகள் நூற்களாயின; கட்டுரைகள் நூற்களாயின; நாடகங்கள், நாவல்கள், சிறுகதைகள், வரலாற்று ஆய்வுகள்; கம்ப இதிகாச தோல்விகள், வரலாற்றில் ஆரிய ஆய்வுக் களங்கள், புராண, மத, எதிர்ப்புகள் எல்லாமே நூற்களாயின. திராவிட பவனி வந்தன.

இந்தி எதிர்ப்புப் போர், சாதி ஒழிப்புப் போர், இதிகாச எதிர்ப்புப் போர், அரசியல் எதிர்ப்புப் போர், இலக்கிய எதிர்ப்புப் போர், வரலாற்று எதிர்ப்புப் போர், திரையுலக மறு மலர்ச்சிப் போர் போன்ற பலப் போர்களைத் தனது அறிவாயு தங்களால் களம் கண்டு பரணி பாடிய அறிவுமானி அண்ணா!

இறுதியாக 1967-ஆம் ஆண்டில் நடைபெற்ற மக்களாட்சிப் போரில் வாகைச் சூடி, முதல்வராகி தமிழ் மண்ணுக்கு 'தமிழ்நாடு' என்ற பெயரைச் சூட்டி மறைந்த மான உணர்ச்சி மறத் திராவிடர் தளபதி அண்ணா! பத்திரிகை உலகில் அவர் வகுத்த எழுத்து வியூகங்களை எவராலும் மறக்க முடியாத அரிய தொண்டுகளாகும்.

## பாவேந்தரின் புதுவைக் 'குயில்'

புரட்சிக் கவிதைகள் புனைந்து புகழ்வானில் புதுவைக் குயிலாகச் சிறகடித்து பறந்த சமூக சீர்த்திருத்தக் குயில் பாவேந்தர் பாரதிதாசன்.

ஆரம்பத்தில் கனக சுப்புரத்தினம் என்று பெற்றோரிட்ட பெயரில் வளர்ந்து, படித்த பாவேந்தர், கதர் துணிகளை விற்றக் காங்கிரஸ்காரர். மைலம் மலையில் வீற்றுள்ள முருகப் பெருமான் மீது 'சுப்பிரமணியர் துதியமுது பாடி பராவியவர்; இத்தகைய ஓர் ஆன்மிகப் பக்தரான கனக சுப்புரத்தினம், 1928-ஆம் ஆண்டில் பாரதியாருக்குத் தாசனாக மாறி பாரதிதாசன் ஆனார்.

புனித ஆத்திகராக நடமாடியவர், புதுமையான நாத்திக ராகி, கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை நாத்திக வாதத்தை எதிர்த்து, "இல்லை என்பான் யாரடா? தில்லையைப் போய் பாரடா!" என்று தேசிய பத்திரிகை ஒன்றில் எழுத, உடனே பாவேந்தர் பாரதிதாசன் தனது 'குயில்' பத்திரிகையில், 'இல்லை என்பேன் நானடா - அத்தில்லை கண்டு தானடா!" என்று எதிரடி கொடுத்த சிரம் பழுத்த நாத்திகக் கவிஞராக நடமாடியவர்!

'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது' கலந்து கொள்ள வாருங்கள் நாட்டினரே' என்று அண்ணல் காந்தி சுதந்திர அறப்போருக்கு நாமக்கல்லார் அழைப்பு விடுத்துக் கவிதை பாடியபோது, அந்த அரசியல் அழைப்பை அவமதிக் காமல் பாவேந்தர் சமுதாய விடுதலைக்கு அழைப்பு விடுத்து மக்களைத் திரட்டினார்! அப்போது அவர், 'கொலை வாளினை எடடா! மிகு கொடியோர் செயல் அறவே, குகை வாழ்வொரு புலியே உயர் குணமேவிய தமிழா! என்று, சமுதாய விடுதலைக்கு முரசு கொட்டி அழைத்தவர் பாவேந்தர்!

"பார்ப்பனீயம் மேலென்று சொல்லிச் சொல்லி
பழையயுகப் பொய்க்கதையைக் காட்டிக் காட்டி,
வேர்ப்புறத்தில் செந்நீரை வார்த்து வார்த்து.
மிகப் பெரிய சமூகத்தை இந்நாள் மட்டும்
தீர்ப்பரிய கொடுமைக்குள் ஆக்கிவிட்ட
செயல் அறிந்து திடுக்கிட்ட வீரா!

என்ற இனமானக் கவிதையைத் திராவிட இனப் பெயருக்காக எழுதிய மானமிகு கவிஞர் பாவேந்தர்!

'நாளுக்கு நாணம்' என்ற கவிதையைக் 'குடி அரசு' பத்திரிகையில் பாவேந்தர் 10.3.1929ல் எழுதியபோது,

"எங்கள் நிலையில் ஈனத்தைக் காண
உள்ளம் நாணியோ
உன்றன் ஒளியிற் குன்றிக்குன்றி மேற்றிசை
சென்றிடு கின்றாய்'

என்று சூரியனை நோக்கிக் கேள்வி கேட்பவர் யார் தெரியுமா? பாவேந்தர் பாரதிதாசன்தான்.

'குயில்' என்ற பத்திரிகையைப் புரட்சிக் கவிஞர் புதுவையிலே கூவிக் கூவி நடத்தினார்! அந்த ஏடு 1946-ஆம் ஆண்டில் தடை செய்யப்பட்டு விட்டது. என்றாலும், மீண்டும் அந்தக் குயில் தமிழ் மக்களிடையே புரட்சிக் குரல் கொடுத்துக் கூவியது.

'முன்னேறும் திறம் வேண்டும்
மொய்ம்பேறும் தோள்கள் வேண்டும்
தன்மானம் நாம் பெறவேண்டும்!
வேறென்ன வேண்டும்?

என்ற சுயமரியாதை சித்த மருந்தைப் பாவேந்தர் தனது கவிதைத் தேனில் கலந்து திராவிட இனத்துக்குப் புகட்டியதை தமிழ்ப் பத்திரிகை உலக எழுத்தாளர்களால் மறக்க முடியுமா?

கனக சுப்புரத்தினம் எழுதிய, ' எங்கெங்கும் காணினும் சக்தியடா'' என்ற முதல் கவிதையை, பாரதியார் கவிதா மண்டலம் என்ற தலைப்பிட்டு, மகாகவி பாரதியார் 'சுதேச மித்திரன்' தேசிய தின ஏட்டுக்கு அனுப்பிப் பாரதிதாசனுக்குப் புகழைத் தேடி தந்தார்! பாரதியாரும் தனது மாணவரின் வித்தகக் கவிதையால் புகழ் பெற்றார்! இது கவிதை வரலாறு.

சுயமரியாதை இலக்கிய வரலாற்றில் பாரதிதாசன் பரம்பரை என்ற ஒரு மரபை உவமைக் கவிஞர் சுரதா போன்ற மானமிகு மாணவர்களால் உருவாக்கப்பட்டு வளர்ந்து வருவது தான் பாவேந்தர் பாடுபட்ட திராவிட இனமான உணர்ச்சி, புரட்சி என்பதை நம்மால் மறக்க முடியாது. திராவிடரின் பத்திரிகை உலகில் பாவேந்தர் தமிழ்த் தொண்டு வளையா வானமாக படர்ந்துள்ளது.

## நாகர்கோயில் 'தமிழன்' இதழ்

அன்றைய திருவாங்கூர் அரசுக்குட்பட்ட குமரி மாவட்டம் நாகர்கோவில் நகரிலிருந்து, 'தமிழன்' என்ற பத்திரிகையை நடத்தியவர் சிதம்பரம் என்ற வழக்கறிஞர். இவர் ஈரோட்டில் நடந்த இரண்டாவது சுயமரியாதை மாநாட்டின் இளைஞர் அணிக்குத் தலைமை ஏற்றவர்.

திருவாங்கூர் சட்டமன்ற உறுப்பினராகவும், நாகர் கோவில் நகராட்சித் தலைவராகவும் பணியாற்றியத் திறமையாளர். பத்திரிகை எழுத்தாண்மையில் மிகச் சிறந்த அறிஞர். இவரது கருத்துக்களை அப்போது மறைமலை அடிகள் போன்ற அறிஞர்கள் மேற்கோள்களாக எடுத்துக் காட்டிப் பேசுமளவிற்குச் சிறந்தவர்.

## பூவாளூர் பொன்னம்பலனாரின் 'புதுவை முரசு, சண்டமாருதம்'

திருச்சி மாவட்டம், பூவாளூர் சிற்றூரைச் சேர்ந்த அ. பொன்னம்பலனார் மிகச் சிறந்த சொற்பொழிவாளர். 'குடியரசு' பத்திரிகையின் தொடர் கட்டுரையாளர். புதுச்சேரி அரசு பிரெஞ்சு-இந்திய எல்லைக்குள் நுழையக் கூடாது என்று தடை விதிக்கப்பட்ட பேச்சாளர் அவர்.

பொன்னம்பலனார், 'புதுவை முரசு', 'சண்ட மாருதம்' என்ற பத்திரிகைகளை நடத்தி, சமுதாய மடமைகளைக் கூறுகூறாய்க் கிழித்தெறிந்தவர். சிறந்த கூர்மையான, கடுமை யான எழுத்துக்களால் சமுதாய மூடநம்பிக்கைச் சடங்குகளை விமர்சித்து எழுதிய சைவ சமய நெறியாளராகப் பிறந்தவர்.

## திருச்சி - திருமலைசாமி 'நகர தூதன்' இதழ்

திருச்சி நகரிலிருந்து 'நகர தூதன்' என்ற வாரப் பத்திரி கையை, பார்ப்பனர் அல்லாதார் விடுதலைக்கும், தொழிலாளர் கள் முன்னேற்றத்திற்கும் பத்திரிகை நடத்தியவர். இவர் இதழ் தமிழ்நாட்டைப் பரபரப்பாக்கியதற்குக் காரணம் திருமலைசாமி யின் எழுத்துக்களில் பொதிந்திருந்த கட்டுரைச் சொற்றொடர் கள்தான். கேலியும் - கிண்டலும், நையாண்டியும் - நக்கலும் கொண்ட அவரது தமிழ்ப்பாணி எழுத்துக்கள் - அக்காலத்தில் தமிழ் மக்கள் எல்லோராலும் ஈர்க்கப்பட்ட எழுத்துக்களாகும்.

'பேனா நர்த்தனம்' என்ற பகுதியில் கேசரி எனும் பெயரில் திருமலைச் சாமியின் எழுத்துக்கள் ஆடும். ஆட்டங்களைக் கண்டு, வைதீக எதிரிகள் அஞ்சி ஓடும் நிலை பல தட்டைவகள் நடந்துள்ளன. அவரது 'நகர தூதன்' பத்திரிகை

தமிழர்கள் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பும் சமுதாய முரசாக அன்று நடமாடியது.

## காரைக்குடி முருகப்பர் 'குமரன்' பத்திரிகை!

காரைக்குடி சொ. முருகப்பர் பத்திரிகை உலகில் சுயமரியாதைக் கருத்துக்களைப் பரப்பிட பெரும் புரட்சி வீரராய் திகழ்ந்தவர். செட்டி நாட்டு மண்ணில் துணிந்து விதவைத் திருணம் செய்து கொண்ட உணர்ச்சி வேங்கை.

மத மூடத் தன்மைகளை எதிர்த்து மறுமணம், கலப்பு மணம், காதல் மணம், சடங்குகள் அற்ற மணம், சிக்கன மணம், விதவை மணம் என்ற அறுவகை தன்மைகளைக் கொண்ட திருமணத்தைத் தமிழ்நாட்டிலேயே முதன் முதலில் செய்து கொண்ட ஒரே ஒரு சீர்திருத்தப் புரட்சிப் பத்திரிகையாளர் திரு. சொ. முருகப்பர்.

காரைக்குடி நகரிலிருந்து குமரன் என்ற பத்திரிகையை நடத்தி, செட்டி நாட்டு மண்ணிற்கு விழிப்புணர்ச்சியை ஊட்டியவர் என்ற அழியாப் புகழைப் பெற்ற மாவீரர் முருகப்பர்.

## "Rationalist' எஸ். இராமநாதன்

வ.வே.சு. ஐயர் சாதிபேத குருகுலப் போராட்டத்தை எதிர்த்தவர். வகுப்புரிமைப் போராட்டத்துக்காக வாதாடியவர் எஸ். இராமநாதன் என்ற பத்திரிகையாளர்.

சென்னை மாநிலத்திலேயே சட்டப் படிப்பில் முதன்முதல் M.L. பட்டம் பெற்ற கா.சு.பிள்ளை, எம்.எல். பிள்ளை என்று புகழ் பெற்றதைப் போல, தமிழ்நாட்டிலேயே B.A., தேர்வில் முதல் மாணவராக வெற்றி பெற்ற B.A. பிள்ளை எனப்படும் காந்திமதி பிள்ளை போல சென்னை மாநிலத்திலேயே M.A. தேர்வை எழுதி முதல் மாணவர் என்ற தகுதியைப் பெற்ற எம்.ஏ. இராமநாதன் ஆவார் இவர். உலக நாடுகள் பலவற்றுக்கு தந்தை பெரியாருடன் பயணம் செய்த வித்தகர். பெரியாருடையை கருத்துக்களை, அவருடைய மேல்

நாட்டுச் சுற்றுப் பயண உரைகளை அந்தந்த ஊர்களில் இங்லீஷில் மொழிப் பெயர்த்துப் பேசிய மிகச் சிறந்த அறிஞராகத் திகழ்ந்தவர் எஸ். இராமநாதன்.

சென்னையில் 31.12.1933 அன்று நடைபெற்ற நாத்திகர் மாநாட்டில், 'கடவுள் நம்பிக்கையை முழுமையாக ஒழிக்க வேண்டும்' என்ற தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய இந்த மேதை, 21.12.1933ஆம் ஆண்டில் அண்ணல் காந்தியடி களைத் தனது சுயமரியாதைக் குழுவினருடன் சந்தித்தபோது, காந்தியடிகள் தம்மை, 'தாம் ஒரு விஞ்ஞானி' என்று எஸ். இராமநாதனிடம் கூறியபோது, அவரிடமே தைரியமாக, நேருக்கு நேராக 'அல்லர் என்று' மறுத்துரைத்த துணிவுடைமை மிக்கவர் இராமநாதன்.

இத்தகைய அஞ்சாநெஞ்சர் ஆங்கிலத்திலும், தமிழிலும் கல்வியாளர்களும், புலமையாளர்களும் வியக்கத்தக்கப் பேச்சாளராக விளங்கினார் என்றால் இது சாமான்யமான அறிவுடைமையாகுமா?

இந்திய தேசியக் காங்கிரஸ் தலைவர்களாக அப்போது விளங்கிய பட்டாபி சீத்தாராமையா, டைகர் என்.எஸ். வரத்தாச்சாரி ஆகியோரிடம் Supersition of Khadi அதாவது, கதர் ஒரு மூடநம்பிக்கைக் கொள்கை என்று வாதித்தார் என்றால், அவரது புலமைக்கு வேறு சான்று என்ன வேண்டும்?

இத்தகைய ஓர் அரிய அறிஞர் "Rationalist' என்ற ஓர் ஆங்கிலப் பத்திரிகையை நடத்தினார். அந்தப் பத்திரிகை எஸ். இராமநாதன் அவர்களை இந்தியாவிலேயே ஒரு சிறந்த ஆங்கிலக் கட்டுரையாளர் என்ற புகழ் மகுடத்தைச் சூட்டி அழகு பார்த்தது.

ஒரு முறை எஸ். இராமநாதன், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சில தோழர்களுடன் சென்றார். பார்ப்பன பட்டர் களிடம் தான் எடுத்துச் சென்ற தேங்காய், பழத்தைக் கொடுக் காமல், தாங்களாகவே உடைத்து அவர்கள் வழிப்பட்டுக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியைக் கண்டு ஆத்திரம் பொங்கிய அர்ச்சகர்கள் அவரையும், உடன் சென்ற தோழர்களையும்

கோயிலுக்குள்ளேயே வைத்து, வெளிக் கதவைப் பூட்டி விட்டார்கள். இந்த நிகழ்ச்சி மதுரை நகரையே திணறடித்து விட்டது.

'ரேஷனலிஸ்ட்' பத்திரிகையில் இந்த நிகழ்ச்சியைப் படித்தவர்கள், இந்தச் சமுதாயத்தின் இழிந்த கேட்டினை ஒழிக்க வந்த சமத்துவமனிதர் என்று அவரையும், அந்தப் பத்திரிகைத் துணிவையும் பாராட்டதவர்களே அப்போது இல்லையாம்!

தோழர் எஸ். இராமநாதனின் பத்திரிகையான 'ரேஷனலிஸ்ட்', சமுதாய சமத்துவத்திற்காக அரும்பாடுபட்ட ஒரு பத்திரிகை என்ற புகழைப் பெற்ற பத்திரிகையாக இருந்தது என்பது பத்திரிகையாளர் உலகுக்கும் ஒரு பெருமைதானே!

## ஜே.எஸ். கண்ணப்பர் 'திராவிடன்' பத்திரிகை

ஜே.எஸ். கண்ணப்பர் என்றால், ஜனக சங்கர கண்ணப்பர் என்பது முழு பெயர். இவர் பெரியார் அவர்களுடன் காங்கிரஸ் இயக்கத்தை விட்டு வெளியே வந்து, 'திராவிடன்' என்ற பத்திரிகையின் பொறுப்பாளரானார். அரிய கட்டுரைகள் பல எழுதி திராவிட மக்கள் இடையே விழப்புணர்வுகளை உருவாக்கிய ஒரு சீர்திருத்த குணமுடைய பத்திரிகை ஆசிரியராகத் திகழ்ந்தார்.

ஒருமுறை பெரியாருடன் சீர்காழி எனும் நகருக்குள் வந்த போது, அங்கு ஜே.எஸ். கண்ணப்பருடன் வாழ்ந்த பிராமண அடிமைகள் சிலர், "கண்ணப்பன் பறையன், இராமசாமி சக்கிலியன் இருவரும் கோயிலுக்குள் நுழையப் போகிறார்கள், கோயில் தீட்டாய் விடும்" என்று சுவரொட்டிகளாலும் விளம்பரத் தட்டிகளாலும் இழிவுபடுத்தினார்கள் என்று "சுயமரியாதைச் சுடரொளிகள்" என்ற நூல் கூறுகின்றது.

திருவண்ணாமலை நகருக்கு ஒருமுறை கண்ணப்பர் தோழர்களுடன் சென்றபோது, 'பறையர்கள் வருகிறார்கள்' என்று பார்ப்பனர்கள் கோயிலையே இழுத்துப் பூட்டி விட்டார்கள் என்றும் மேற்கண்ட நூல் குறிப்பிடுகின்றது.

ஜே.எஸ். கண்ணப்பர் திராவிடன் பத்திரிகை ஆசிரியராக இருந்து, அதன் பொறுப்பாளராக பணியாற்றியவர் என்றாலும்,

திராவிடச் சமுதாயத்தில் பறையன் என்று தன்னை இகழ்ந்தாலும், அவர்கள் இன உரிமைக்காக தனது பத்திரிகையிலே எழுதிப் போராடியதால்தான் - இன்று ஆதி திராவிடப் பழங்குடி மக்கள் சமத்துவம் பெற்று வாழ்கிறார்கள் என்பதை எவரே மறுப்பர்?

## 'குத்தூசி
## குருசாமி'

இவருடைய ஊர் தஞ்சை மாவட்டத்திலுள்ள குருவிக் கரம்பை. 1906-ல் பிறந்தார். படிப்பு பி.ஏ., உச்சிக்குடுமி, சாம்பல்பட்டை, உருத்திராட்சக் கொட்டை, தேவார பாராயணம், கதாகாலட்சேபம், காந்தி பக்தி, குருசாமியின் தோற்றமும் செயலும் இவைதான்.

இத்தகையவரை, வ.வே.சு. ஐயரின் சேரன்மாதேவி குருகுலச் சாதிப் போராட்டம் சிந்திக்க வைத்தது. எழுத்துத் திறனில் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் சிறந்தவரானார். இவருடைய இங்லீஷ் புலமையைக் கண்ட தந்தை பெரியார் **Revolt** என்ற பத்திரிகைக்குத் துணை ஆசிரியராக்கினார். பிறகு 'விடுதலை' என்ற திராவிடரியக்க நாளேட்டிற்கு ஆசிரியரானார். 'குத்தூசி' என்ற பகுதியில் கட்டுரைகள் பல எழுதி திராவிட இனத்திடம் பெரும் புகழ் பெற்றார்.

அண்ணல் காந்தியடிகளை 1932-ஆம் ஆண்டில் தனது சுயமரியாதைத் தோழர்களுடன் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அடிகளும் - குருசாமியும் கடுமையாகத் தர்க்கம் செய்து கொண்டார்கள். எதைப் பற்றி?

"காந்தியடிகள் தனது வாயாலேயே, 'நானும் பார்ப்பனர் கொடுமைக்கு ஆளாகியதுண்டு. இன்னும் ஆளாகி வருகிறேன்" என்று சொல்ல வைத்தவர் குத்தூசி குருசாமி என்றால், அவரது வாதத் திறமை எத்தன்மைத்ததாக இருந்திருக்க வேண்டும்? ஒரு பத்திரிகை ஆசிரியனுக்கு இந்தத் தருக்க வாதத் திறமை தேவையல்லவா?

## சாமி சிதம்பரனாரின் 'லோகோபகாரி' இதழ்

சாமி சிதம்பரனார், 'அறிவுக் கொடி' என்ற பத்திரிகையை இரண்டாண்டுகள் நடத்தி, பகுத்தறிவுக் கொள்கையைப் பிரச்சாரம் செய்தார். அதற்கடுத்து 'லோகோபகாரி' என்ற பத்திரிகைக்கும் ஆசிரியராக இருந்து, அதில் இலக்கிய ஆய்வுகளைப் பகுத்தறிவு பார்வையுடன் எழுதி வெளியிட்டார்.

பெரியாரின் செங்கற்பட்டு மாநாட்டின் தீர்மானத்திற்கு முதலோடியாக, சுயமரியாதைத் திருமணம், கலப்புத் திருமணம, குறிப்பாக சிவகாமி அம்மையாரை விதவைத் திருமணமாக, 1930-ஆம் ஆண்டில் பெரியார் மனைவி நாகம்மையார் தலைமையில் செய்து கொண்ட புரட்சியாளர் சாமி. சிதம்பரனார்.

சுயமரியாதை இயக்க உணர்ச்சிக்களை, அதே நேரத்தில் பொதுவுடைமைக் கட்சிச் சார்புடனும், தனது எழுத்துக்களை ஆட்சி செய்த 'லோகோபகாரி'யாக நடமாடிய பத்திரிகை யாளரெனப் புகழ் பெற்று வாழ்ந்தவர் சாமி. சிதம்பரனார்.

## ஜீவா, 'ஜனசக்தி', 'தாமரை' இதழ்கள்

ப. ஜீவானந்தம், காரைக்குடிக்கு அருகே சிராவயல் என்ற சிற்றூரில் உள்ள காந்தி ஆசிரமத்தில் தொண்டாற்றிக் கொண்டிருந்தபோது, காந்தியடிகள் அங்கே வருகை தந்தார். அவரிடம் ஜீவா, பகவத் கீதையில் உள்ள வருணாசிரமத்தைப் பற்றி விளக்கம் கேட்க விரும்பினார்.

''பிராமணனாகப் பிறந்து தீய ஒழுக்கமுடைய ஒருவன் - சூத்திரன் தானே? என்ற வினாவை ,ஜீவா - காந்தியடிகளிடம் கேட்டார். உடனே அண்ணல் காந்தி, 'இல்லை, அவன் கெட்ட பிராமணன்' எனும் படு அடிமைத்தன்மை தேங்கிய விடையைப் பெற்ற அந்த நொடிதான், ஜீவாவின் வாழ்க்கையில் உண்டான திருப்புமுனை!

சேரன்மாதேவியில் வ.வே.சு. ஐயர் நடத்திய குருகுல சாதிபேத உரிமைக் கிளர்ச்சியில் அக்கறை காட்டிய ஜீவா, அந்த

நிகழ்ச்சி முதல் அவர் சுயமரியாதை உணர்ச்சியில் தீவிரவாதி யானார்.

திருநெல்வேலி நகரில் தீண்டாமை விலக்கு மாநாடு நடந்தது. அதற்கு நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமை உரை ஆற்றும்போது, ஜீவா அந்தப் பேச்சை இடைமறித்து, குறுக்குக் கேள்விகள் பல கேட்டு - அவரைத் தாக்கிப் பேசி, வாட்டி வதைத்துக் கொண்டிருந்தபோது, தந்தை பெரியார் அவர்களே அதைக் கண்டு, நடந்தவற்றுக்குப் பாரதியாரிடம் மன்னிப்புக் கேட்ட சம்பவம், ஜீவாவின் முனைப்பான வினைப்பாட்டிற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

காந்தியடிகள் 1927-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பயணம் செய்தபோது, ஜீவாவும் அவருடன் சென்றார். அப்போது அதே சிறுவயல் கிராம காந்தி ஆஸ்ரமத்தில் கீதைக்கு விளக்கம் கேட்டு முடிந்தவுடன், ‘உங்களுக்கு என்ன சொத்து இருக்கிறது? என்று அடிகள் கேட்டபோது, ‘இந்தியாதான் என் சொத்து’ என்றார் ஜீவா. உடனே மகாத்மா அவர்கள், ‘இல்லை; இல்லை! நீங்கள் இந்தியாவின் சொத்து’ என்றார் என்று அ.மா. சாமி தனது ‘தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி’ நூலில் கூறுகிறார்.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் தம்பி திரவியம் என்பவருக்கு, சென்னை தியாகராய நகரிலுள்ள வெங்கட்ராமன் தெருவில் 1952-ஆம் ஆண்டில் திருமணம் நடந்தது. திருமண நிகழ்ச்சியின் தலைவர் ஜீவா. வரவேற்பாளர் கவிஞர் கண்ணதாசன். வாழ்த்து கூறும் உரையாளர்கள் திருக்குறள் வீ. முனுசாமி, எம்.பி., அ. பொன்னம்பலனார் ஆகியோர்.

வரவேற்பாளர் கண்ணதாசன் தி.மு.க.வில் அப்போது தான் உறுப்பினரான புதியவர். அவர் வரவேற்புரை ஆற்றும் போது, உண்மையான சீர்திருத்தம் செய்வதையே தி.மு.கழகம் முதற் பணியாகக் கொண்டது என்றும், கம்யூனிஸ்டுகளும் காங்கிரசும் அத்தகையவரல்லர் என்றும் கூறி, அதற்கு ஓர் எடுத்துக்காட்டை விளக்கினார்.

மதுவிலக்குக் கொள்கையிலே காங்கிரஸ் சரியான சீர்திருத்தப் போக்கைக் கடைப்பிடிக்காததால்தான், ஜெமினி

ஸ்டியோ சாலைகளிலே மோர் விற்கும் பானைகளிலே கள் விற்கின்றது' என்றார்.

எடுத்துக்காட்டாக, உடலில் ஒரு புண் வந்தால் அதற்கு மருந்து போட்டால் புண் ஆறும்; மீண்டும் வேறோரிடத்தில் அதே புண் இடம் மாறி வரும். இந்தச் சிகிச்சையைத்தான் காங்கிரசும், கம்யூனிஸ்டும் செய்து வருகின்றன என்றார்.

ஆனால், தி.மு.கழகம் அத்தகைய சீர்திருத்தக் கட்சி அன்று. உடலிலே புண் ஏன் வந்தது; ரத்தம் கெட்டுள்ளதா? என்ற பரிசோதனைகளைச் செய்து, ரத்தம் கெட்டிருந்தால், கெட்ட ரத்தம் சுத்தமாவதற்கு மருந்து கொடுத்தால், புண் அறவே உடலில் வராது. இந்த சிகிச்சையைத்தான் தி.மு.கழகம் செய்கிறது என்றார் கவிஞர் கண்ணதாசன்.

தலைவராக வீற்றிருந்த ஜீவா அவர்கள், இடையிலே எழுந்தார்! மேடையிலே சிலம்பமாடியைப் போல சினம் பொங்கி, ஆடியாடி, பெருங்குரலெடுத்து, 'யார் இந்த கண்ண தாசன்? என்னைப் போல சீர்திருத்தப் பணிகளுக்காகக் கல்லடிப் பட்டவரா? சாணியடிகள் வாங்கியவரா? ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டவரா? என்ன தியாகம் செய்தார் - இவர் கம்யூனிஸ்டு களுக்கு அறிவுரை கூற? என்றெல்லாம் ஜீவா பேச, அப்போது திருக்குறளார் வீ. முனிசாமி இறுதியாக எழுந்து பேசும்போது, கலைவாணர் அரையணா கொடுத்து ஆட விட்டு விட்டு, ஓரணா கொடுத்து ஓய வைக்கின்றார் பாவம்' என்றார்.

கலைவாணர் நன்றியுரை கூறிய நேரத்தில், ஜீவா பேசுகின்றபோது யாராவது குத்தி விட்டால்தான் அவர் பேச்சு சூடேறும்; சுவையூறும்! அதற்கு ஆள் இல்லையே என்று எண்ணினேன். கவிஞர் கண்ணதாசன் கிடைத்தார்!'' என்று பேசி எல்லாரையும் சிரிக்க வைத்தார்.

ஏன் இவற்றை இங்கே குறிப்பிட்டோம் என்றால், ஒரு பத்திரிகை ஆசிரியனுக்கு வீரமும் வேண்டும்; விவேகமும் வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல; மக்கட் திரளின் மனதை நிறைவுப்படுத்தும் ஆற்றல், எழுத்திலும் எழுச்சி பெற வேண்டும்! பேச்சிலும் மூச்சாக அமைய வேண்டும் என்பதற் காகத்தான்!

காந்தி பஜனைகளில் மூழ்கி, சுயமரியாதை ஊர்வலம் வந்து, பொதுவுடைமைத் தத்துவத் தலைவராக வீற்றிருந்து பத்திரிகையிலே அரிமா பலத்தோடு தனது எழுத்தாண்மையைக் காட்டி, மேடைகளிலே கர்ஜனை முழக்கங்களிட்டு வந்த ஜீவா, என்ற நாஞ்சில் சிங்கம் செய்த 'ஜனசக்தி' புதையல் தொண்டுகளைத் 'தாமரை' மலரிலே ஏந்தி நின்று நாமும் நமது பத்திரிகைகளிலே வழிபாடுகள் செய்யலாம் இல்லையா?

### *'தீப்பொறி'*
### *சிற்றரசு*

'சிற்றரசு என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கின்றீரே எந்த நாட்டுக்கு நீர் சிற்றரசு?' என்று ஒருவர் சிற்றரசு பேச எழுந்த வேலூர் பொதுக்கூட்டம் ஒன்றில் கேட்டார். அதற்கு அவர், 'இராசகோபலாசாரியார் எந்த நாட்டுக்கு சக்கர வர்த்தியோ, அந்த நாட்டுக்கு அடுத்த நாட்டிலே நான் சிற்றரசாக இருக்கின்றேன்' என்றார்! வினா விடுத்தவன் விலா ஒடிந்து வீழ்ந்து அமர்ந்தான்! இராஜாஜியைச் 'சக்கரவர்த்தி' என்னும் பெயருக்கு முன்னால் குறிப்பிடுவதுண்டு. அதாவது சக்கர வர்த்தி இராஜகோபாலாசாரி என்று!

சிந்தனைச் சிற்பி என்று திராவிடரியக்கத் தோழர்களால் பெருமிதத்தோடு அழைக்கப்பட்ட சின்னராசு என்பவர்தான், சிற்றரசு என்று தனது பெயரை மாற்றிக் கொண்டார். எளிமையான பேச்சாளர்; ஆவேசமான எழுத்தாளர்; நகைச்சுவையோடு எதிரிகளைக் கிண்டலடிப்பவர். கூட்டத்து மக்களைக் கவர்ச்சித்துப் பேசும் பாணி அவரது பேச்சுப் பாணி! ஆனால், எழுதுவதில் வன்மையான பேனா வீரர்!

தீப்பொறி, தீச்சுடர், இன முழக்கம் என்ற மூன்று வார பத்திரிகைகளை தி.மு.கழக வளர்ச்சிக்காக நடத்தி சிற்றரசு வெற்றி கண்டவர். அவர்தான் மூன்று ஏடுகளுக்கும் ஆசிரியர். அதுமட்டுமல்ல; ஏறக்குறைய 20 புத்தகங்களுக்கு மேல் எழுதிய சிந்தனையாளராகவும் திகழ்ந்தார்.

1967-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டின் சட்டமன்ற மேலவைத் தலைவராக பணியாற்றியபோது, ஆஸ்திரேலி யாவில் நடைபெற்ற உலகச் சட்டப் பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள சிட்னி நகர் சென்றார்.

தமிழ்நாட்டில் வன்மையான பேச்சாளராக, வேகமான பத்திரிகை ஆசிரியராக, மென்மையான சட்ட மேலவைத் தலைவராகத் திகழ்ந்த சிந்தனை சிற்பி சி.பி. சிற்றரசு, 16.2.78ஆம் ஆண்டில் சிட்னி நகரில் இயற்கை எய்தினார்.

அப்போது முதல் அமைச்சாரக இருந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., அவரது புகழுடலை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து, உறவினரிடம் ஒப்படைத்தார். வாழ்க சிற்றரசு பத்திரிகைத் தொண்டு.

## 'தனியரசு' நாளேடு'
## ஏ.வி.பி. ஆசைத்தம்பி

தந்தை பெரியார் பேச்சுப் பாணியைப் போலவே பேசும் ஆற்றல் ஏ.வி.பி. ஆசைத்தம்பிக்கு இருந்தது. அதனால் ஏ.வி.பி. பேசுகிறார் என்றால் பெரியார் பேசுவதாக எண்ணிச் சென்று கேட்டவர்கள் ஏராளம் பேருண்டு.

பெருந்தலைவர் காமராசர் தோன்றிய விருதுநகரிலே பிறந்தவர் ஆசைத்தம்பி. இளம் வயதிலேயே திராவிடர் இயக்க எழுத்தாளர் ஆனார். பேச்சாளரானார். எழுத்து வன்மை கொண்ட சிந்தனையாளர். 'தனியரசு' என்ற நாளேட்டை நடத்திக் கட்சித் தொண்டு புரிந்தார். பரப்பரப்பூட்டும் கட்டுரை எழுத்தாளர் அவர்.

சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதி மக்களால் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். வடசென்னை நாடாளுமன்றத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றியவர் ஆசைத்தம்பி.

ஆசைத்தம்பி எழுத்து வன்மைக்கு சான்று கூற வேண்டுமானால், அவர் எழுதிய 'காந்தியார் சாந்தியடைய' என்ற ஒரு சிறு நூலைக் கூறலாம். அந்த நூலைக் காங்கிரஸ் ஆட்சி தடை செய்தது. ஏன் தெரியுமா?

'பாம்பையும், பார்ப்பானையும் கண்டால்....... பாம்பைக் கொல்லாதே' என்று ஒரு பழமொழி இன்றும் புதுமொழியாக இங்கே இருக்கிறது. கருப்புச் சட்டைக்காரன்

தானே? ஈரோட்டில் பயிற்சி பெற்றவன் அப்படித்தான் பேசு வானய்யா!' என்று தான் பலர் கூறுவார்கள். ஆனால், அப்படிக் கூறியவன் கருப்புச் சட்டைக்காரன் அல்லன். வெள்ளைக் காரன். பெவர்லி நிக்கோலஸ் என்பவர், குமரி முதல் காஷ்மீர் வரை எல்லா இடங்களையும், மக்களையும் பார்வையிட்டு, நிலை தெரிந்து ஆராய்ந்து, அதன் பின்னரே இந்தியாவைப் பற்றி ஒரு புத்தகம் **Verdict on India** என்று எழுதினார். அதிலே தான் அவர் குறிப்பிட்டிருக்கிறார் 'பாம்பைக் கொல்லாதே' என்று.

இந்த நூலை எழுதியதற்காக ஆசைத்தம்பிக்கு ஆறு மாதம் சிறை தண்டனை! சிறைக்குள்ளே அவர் தலையை மொட்டை அடித்தார்கள்! யார் அடித்தார்கள்? அதிகாரிகள்தான்!

'தனியரசு' என்ற பத்திரிகையிலே ஏ.வி.பி. ஆசைத்தம்பி எழுதிய எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஈட்டி முனைகளாகப் பாய்ந்தன. இந்தப் புத்தக ஆசிரியர் என்.வி. கலைமணி அந்த நாளேட்டில் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர் ஆவார்.

இத்தகைய எழுத்தாண்மைமிக்க ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.-ஆக, எம்.பி.யாக மட்டுமல்ல; திரை உலகிலும் புகுந்து, சேலம் மார்டன் தியேட்டர்ஸ் எடுத்த, புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். நடித்த 'சர்வாதிகாரி' என்ற திரைப்படத்துக்கும் கதை-வசனம் எழுதினார்.

அந்தமான் தீவு கழகத் தோழர்கள் அழைப்பை ஏற்றுச் சொற்பொழிவாற்றச் சென்ற ஏ.வி.பி. ஆசைத்தம்பி 7.4.70 அன்றிரவு எதிர்பாராத இறப்பை ஏற்றார்! அவரது புகழுடலைத் தமிழ் நாடு முதல் அமைச்சர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். மனிதநேயத்துடன் உறவினர்களிடம் கொண்டு வந்து ஒப்படைத்தார்!

**என்.வி. நடராசன்**
**'திராவிடன்' பத்திரிகை**

உழைப்பு; எளிமை, இரண்டாலும் முன்னேறிய சுயமரியாதை வீரர் என்.வி. நடராசன் தமிழ்நாட்டின் அமைச்சராகவும் பணியாற்றினார். இவர் சென்னையிலுள்ள 'ஹோ அண்ட் கோ' என்ற அச்சகத்தில் அச்சுக் கோர்ப்பவர் குழுவுக்கு மேலாளரர்க இருந்தார். சிலம்புச் செல்வர் என்று

அழைக்கப்பட்ட ம.பொ. சிவஞானமும் இதே நிறுவனத்தில் அச்சுக்கோர்க்கும் அணியில் வேலை செய்தவர் ஆவார்.

என்.வி. நடராசன் அவர்கள் 'திராவிடன்' என்ற வார இதழை தி.மு.கழகத்தின் கொள்கைப் பிரச்சாரப் பத்திரிகையாக நடத்திட, அறிஞர் அண்ணா அவர்கள் சந்திரமோகன் நாடகத்தை சென்னை ஒற்றைவாடை நாடக அரங்கில் நடத்தி நிதி திரட்டிக் கொடுத்தார். உடனே என்.வி.என். பத்திரிகையைத் துவக்கி எழுச்சியூட்டும் கட்டுரைகளை எளிய தமிழ் நடையிலே எழுதி திராவிடரியக்கக் கொள்கைகளைப் பரப்பினார்.

இந்தப் புத்தகத்தை எழுதிய புலவர் என்.வி. கலைமணி 1950-ஆம் ஆண்டில் 'திராவிடன்' பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேர்ந்து பணியாற்றியவர் ஆவார்.

அப்போது மத்திய அரசின் அஞ்சல் துறை, தொழிலாளர் துறை அமைச்சராக இருந்த பாபு ஜெகஜீவன் ராம் அவர்களுக்கு, கழகத் தீர்மானத்திற்கேற்ப சென்னையில், இன்றையைக் காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகமாக இருக்கும் சத்தியமூர்த்தி பவன், அன்றைய இந்திய தேசிய ராணுவத் திடல் என்று (I.N.A. திடல்) அழைக்கப்பட்ட இடத்தில் புலவர் என்.வி. கலைமணி 6.4.52 அன்று தன்னந்தனி இளைஞனாய் திடலுக்குள் சென்று, ஜெகஜீவன்ராம் அவர்கள் ஸ்பென்சர் தொழிலாளர் விழாவில் பேசி முடித்த பின்பு, கறுப்புக் கொடியை கையின் கொடுத்து இரண்டு வாரம் சிறை தண்டனை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்க சம்பவமாகும். சென்னை சிறையில் இவர் அடைக்கப்பட்ட இந்த சம்பவச் செய்தி T.M. பார்த்தசாரதியால் நடத்தப்பட்ட 'மாலை மணி' நாளேட்டிலும், 'சிறை மாளிகையில்' என்று தலைப்பிட்டு அறிஞர் அண்ணா அவர்கள் நடத்திய 'திராவிட நாடு' வார இதழிலும் வெளி வந்துள்ளது.

'திராவிடன்' வார இதழை நடத்திய திரு. என்.வி. நடராசன் அவர்கள் கழகத் தீர்மானத்தின்படி சென்னை குன்றத்தூர் நகரில் 144 தடைச் சட்டத்தை மீறியபோது துப்பாக்கி பிரயோகத்தை ஆட்சியால் நடத்தப்பட்டக் கொடுமைகளுக்கு அஞ்சாமல் கைதாகி, பூவிருந்தவல்லி சிறையில் அடைக்கப்பட்டார்.

'திராவிடன்' பத்திரிகை ஆசிரியர் என்.வி. நடராசன் தன்னலம் மறுத்துக் கட்சி தொண்டாற்றிய பத்திரிகையாளராக வாழ்ந்து 3.8.1975-ல் மறைந்தார்.

## சிங்கப்பூர் 'தமிழ் முரசு' கோ. சாரங்கபாணி

சிங்கப்பூர் தமிழர்கள் வெறும் மூட்டை சுமக்கும் பாட்டாளிகள் என்ற தாழ்நிலையைத் தூக்கி எறிந்து, அறிவு சுமக்கும் படிப்பாளிகள் என்ற உயர்நிலையையும் சிங்கப்பூர், மலேயா பகுதிகளில் உருவாக்கியவர் கோ. சாரங்கபாணி.

கடல் கடந்து சிங்கப்பூர் நகருக்குச் சென்று 'முன்னேற்றம்', 'தமிழ் முரசு' என்ற இரண்டு தமிழ்ப் பத்திரிகை களை நடத்திப் பத்திரிகைத் துறையில் அழியாப் புகழ் பெற்றவர்.

தமிழ்நாட்டில் இந்தி மொழித் திணிப்பு முதன் முதலாக 1937-ஆம் ஆண்டில் நடைபெற்றபோது, அங்கு வாழ்ந்த தமிழ் மறவர்களுக்குத் தமிழருமையூட்டி, இந்தி எதிர்ப்புப் போரில் கலந்து கொள்வதற்காகத் தமிழ் வீரர்களைக் கப்பலேற்றித் தமிழகம் அனுப்பி வைத்த தமிழ்நெஞ்சச் சான்றோராக சிங்கப்பூரில் வாழ்ந்த கொள்கைச் சிங்கம் அவர்.

'தமிழவேள்' என்ற விருது தமிழ் மக்களால் அவருக்குச் சிங்கப்பூரில் வழங்கப்பட்டது. அவருடைய 'தமிழ் முரசு' நாளேட்டில் தமிழக எழுத்தாளர்களை எழுத வைத்து, பத்திரிகையின் புகழை மலேயா நாட்டில் நிலை நிறுத்தியவர்.

## கலைஞர் கருணாநிதி 'முரசொலி' நாளேடு

தஞ்சை மாவட்டம் திருக்குவளை என்ற சிற்றூரில் பிறந்த மு. கருணாநிதி அவர்கள், 'சாம்போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும், என் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்' என்ற தமிழ் நெஞ்சச் சிங்கக் குருளையாக இளமையிலே இருந்தவர்.

அவர் 'முரசொலி' என்ற பெயரில், மாணவராக உள்ள போதே கையேட்டுப் பத்திரிகையாக நடத்தி, மாணவர்கள்

இடையே சுற்றுக்கனுப்பி சுயமரியாத உணர்வுகளைப் பரப்பிய திராவிடரியக்க இந்திரஜித்தாக வாழ்ந்தார்.

அன்று கலைஞர் கையேடாகத் துவக்கிய 'முரசொலி' 2005-ம் ஆண்டான இன்றுவரை தமிழ்நாட்டில் தமிழ் முரசு கொட்டி வருகிறது. அவரது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் 'துள்ளிவரும் வேலாக, பகையை அள்ளி வரும் வாளாக' திராவிடரியக்க வளர்ச்சிக்கு உதவுகின்றன.

கலைஞர் பத்திரிகை ஆசிரியர் மட்டுமன்று. சிறந்த புதுக் கவிதைச் சித்தர். சிறுகதை, பெருங்கதை, வரலாற்றாய்வுக் கதை, இலக்கியக் கட்டுரைகள் எழுதும் நாடக வித்தகர், சிறந்த நடிகர், திரையோவிய எழுத்துத் துறை முன்னோடி, புராண விமர்சகர், முத்தமிழ்க் கலை சொற்செல்வர். அரசியல் வெங்களத்தில் பலமுறை செங்களம் கண்ட செறுமுனை வேங்கை, மேடையிலே பூங்காற்றாகவும், புயலாகவும் மாறி, 'நா'வை நர்த்தன மாட வைக்கும் நல்லாற்றல் நாயகர், அழிந்த தமிழர் வரலாற்றுச் சின்னங்களைப் புதுப்பிக்கும் தமிழ் நாகரிகச் சிற்பி. தன்னந் தனியாக, சினிமா தனி மனித பலத்தைப் பலமுறை எதிர்த்து தோல்வி கண்டாலும், துவளாத துணிவாண்மை அரிமா! அரசியல் நெருக்கடி நிலை வெள்ளத்திலே கழகத்தைச் சோழ சாம்ராஜ்யக் கோட்டையாகக் காத்திட்ட இராஜராஜ சோழனுக்கு மூலவித்து. தமிழைச் செம்மொழியாக்கிட தளராது உழைத்திட்ட மூவேந்தர் மரபாளர்; பெருந்தலைவருக்கும் பெருந்தலைவராய் விளங்கித் திராவிடர் ஆட்சிக்கு மானமுட்டி யாக நின்று, கழகத்தைக் கபாடபுரமாக்காமல், தென் மதுரை யாகாமல், கவின்புகாராக மூழ்காமல், அரசியல் சூது ஊழை உட்பக்கம் கண்டு வாகை சூடிய வளமார் திராவிட வரலாறாக இன்றும் வாழ்பவரான (20.11.04) கலைஞர் பெருந்தகை; பத்திரிகை உலகுக்கு ஒரு சான்றாண்மையாளராவார்.

அந்த முத்தமிழ் மாமேதை உருவாக்கிய 'முரசொலி' நாளேட்டில் இந்தப் புத்தக ஆசிரியரான புலவ என்.வி. கலைமணி ஏழு ஆண்டுகள் துணையாசிரியராகப் பணியாற்றி 'எரியீட்டி' பத்திரிகையாளரானார் என்பதும் எனக்கோர் மகுடம் தானே!

கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ்நாட்டில் நான்கு முறை முதல் அமைச்சராக இருந்தவர்; ஏறக்குறைய 14 ஆண்டு காலம் தமிழ்நாட்டை ஆட்சி செய்த மும்முடிச் சோழனாவார். அவர், முத்தாரம் என்ற பத்திரிகைக்கும் ஆசிரியராக இருந்து அரிய படைப்புகளை வழங்கியவர்.

இவை மட்டுமா? வீர அபிமன்யு, மருதநாட்டு இளவரசி, மந்திரி குமாரி, பராசக்தி, பூம்புகார், மனோகரா, கண்ணம்மா, மண்ணின் மைந்தன் போன்ற 60 திரைப்படங்களுக்கு வசன கர்த்தாகவாக விளங்கித் திரைவானின் துருவ நட்சத்திரமாக வாழ்பவர்.

அரசியல் துறையில் அரசினர் தடைகளைத் தவிடு பொடியாக்கி, அடக்குமுறைகளை வீழ்த்தி ஆண்டுக் கணக்கில் சிறை கண்டவர். பத்திரிகை உலகுக்கு இன்றும் ஒரு சிரஞ்சிவி மூலிகையாக வாழ்ந்து வருபவர் என்றால், இவை எல்லாம் வரலாறே தவிர மிகை புராணமன்று.

கண்ணதாசன்
'தென்றல்'

உடுமலைப்பேட்டைக் கூட்டம் ஒன்றில் கவிஞர் கண்ணதாசன் மேடையில் தன்னை எப்படி அறிமுகப்படுத்திக் கொண்டார் தெரியுமா? 'வட்டிக்கு வட்டி வாங்கும் மட்டிப் பயல்கள் வாழும் செட்டி நாட்டு மண்ணில் பிறந்தவன் இந்த கண்ணதாசன்!' என்றார்.

கவிஞர் கண்ணதாசன் இலக்கிய உலகில் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரைப் போன்றவர்! நாவலர் தமிழ்க் கடல்; தமிழ்த் தொண்டர்; வீர சைவ வித்தகர்; வல்லாண்மை படைத்த நல்லாண்மை மிக்க, சான்றாண்மை மிதக்கும் தமிழ் ஞானி!

அந்தச் சான்றோன் உணர்ச்சி வசப்பட்டு ஆன்ம ஞான சீலரான வடலூர் வள்ளல் பெருமான் பாடிய ஆயிரக்கணக்கான பாடல்களை படித்த பின்பும், வள்ளலார் பாடல் அருட்பா அன்று மருட்பா என்று கடலூர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, நீதிமன்ற வளாகத்துள் வள்ளலார் நுழைந்தபோது, நாவலர் பெருமானும் எழுந்து நின்றாரே, அத்தகைய ஒரு பண்பு

படைத்தவர் கண்ணதாசன்! அதாவது வெள்ளை உள்ளம் கொண்ட குழந்தை மனம் படைத்தவர் கண்ணதாசன். அரசியல் உலகில் மட்டும் அவர் புகாமல் இருந்திருந்தால் அவரும் ஒரு தேசிய பாரதியாராகி இருப்பார் என்பதுதான் உண்மை!

அருளாளர் அருணகிரி நாதருக்குப் பிறகு, கம்பனையும், கவிழ்த்துப் புறங்கண்டு 'சந்தம்' பல கண்டவர் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள். அவரைப் போல கவிஞர் கண்ணதாசனும் தனது ஏழெட்டாயிரம் சினிமா, இலக்கியம், இயேசு காவியம் பாடல்களில் பலவித சந்தங்களை அனு பவித்துப் பாடியவர்! அரசியல்தான் அவரது அழுக்காற்றுக்கு அடையாளமாகி, கவிஞானத்தை ஏப்பம் விட்டு விட்டது!

அத்தகையச் செஞ்சொற் கவிதை ஞானத் திறமை யாளரான கண்ணதாசன் அவர்களைப் பத்திரிகை ஆசிரியராக பெற்ற 'தென்றல்' வார இதழும், 'தென்றல்' மாதத் தாளிகை யும், 'கண்ணதாசன்' என்ற இலக்கிய இதழும் தமிழ்த் தொண்டு செய்து வெற்றி பெற்றன! 'தென்றல்' வார இதழில் கண்ண தாசனின் வெண்பா போட்டி எண்ணற்ற இளம் தலைமுறைக் கவிஞர்களை உருவாக்கியது! அதற்குக் கவிதை உலகம் என்றும் நன்றியாற்றும்!

'தென்றல்' பத்திரிகை ஆசிரியராக மட்டுமே பணியாற்றி யவர் அல்லர் கண்ணதாசன்! வணங்காமுடி, நவசக்தியிலிருந்து வெளிவந்த கடிதம் போன்ற அரசியல் ஏடுகளுக்கும் அவர் ஆசிரியராக இருந்து தமிழ்ப் பணி செய்த தமிழ்த்தும்பி அவர். இயேசு காவியம் அவர் சேகரித்த பைந்தமிழ்த் தேனடை ஆகும்.

இவைத் தவிர, எண்ணற்ற தமிழ்நூல்களை, அதாவது அர்த்தமுள்ள இந்துமதம், வனவாசம், போல - புராண, இதிகாச, வரலாற்று ஆய்வு, இலக்கிய நூற்களை கவிதையாகவும், உரைநடையாகவும் எழுதியவர் கவிஞர் கண்ணதாசன்.

மகாதேவி, ஆடிப்பெருக்கு, தெனாலிராமன், சிவகங்கைச் சீமை, கறுப்புப் பணம், மாலையிட்ட மங்கை போன்ற திரைப் படங்களுக்கும் கதை-வசனம் எழுதிய பத்திரிகை ஆசிரியர் அவர்.

கவிஞர் கண்ணதாசன் வயது ஏற ஏற சிரம் பழுத்த ஞானியாகவும், ஏறக்குறைய ஐயாயிரம் திரையுலகப்

பாடல்களையும், அவற்றுள் பல தத்துவம் போதிக்கும் சித்தர்களைப் போலவும் காட்சியளித்து கொண்டிருக்கின்றன.

அறிஞர் அண்ணா அவர்கள் இயற்கை அடைந்தபோது, அவர் எழுதிய 'சொர்க்கத்தில் அண்ணா' என்ற நூல் உரைநடை பைபிளாக இன்றும் நடமாடிக் கொண்டிருக்கின்ற அளவுக்கு அவர் தனக்கென ஒரு தனித் தமிழ்பாணி நடையுடைய பத்திரிகை ஆசிரியராகத் திகழ்ந்தார். இத்தகைய தமிழ்த் தும்பி அமெரிக்காவுக்கு தமிழ்த் தொண்டாற்றச் சென்றபோது அங்கே மரணமடைந்தார்.

தமிழ்நாட்டின் அந்த இரண்டாவது தமிழக அரசவைக் கவிஞரை, அப்போது தமிழக முதல் அமைச்சராக இருந்த பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர்.; கவிஞரது புகழுடலைத் தமிழ் மண்ணுக்குக் கொண்டு வந்து புகழடைந்தார்.

## காஞ்சி மணிமொழியார் 'போர் வாள்' இதழ்

காஞ்சி மணிமொழியார் என்ற சுயமரியாதை வீரர், 'போர் வாள்' என்ற வாரப் பத்திரிகையை நடத்தி திராவிடர் இயக்கத்திற்கு அருந்தொண்டாற்றினார். அவருடன் அவரது மகனார் மா. இளஞ்செழியன், பி.ஏ., ஹானர்ஸ்; காஞ்சி கலியாணசுந்தரம் போன்றவர்கள் துணை ஆசிரியர்களாகப் பணியாற்றி, திராவிடரியக்கப் பத்திரிகை உலகிலே ஒரு புரட்சி வாள் போல, அதைக் கூர்மைத் தீட்டி, எதிரிகளை வீழ்த்தும் கருவியாக வார வாரம் வீசி வந்தார்கள்.

'போர் வாள்' இதழின் ஆசிரியர்க் குழுவில் ஒருவராகப் பணியாற்றிய மா. இளஞ்செழியன், காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரிக்குப் பேராசிரியராகச் சென்று விட்டதால், அந்த இடத்திற்கு இந்தப் புத்தக ஆசிரியரும் 'திராவிடன்' துணையாசிரியராகவும் இருந்த என்.வி. கலைமணி துணையாசிரியராக அமர்ந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஓர் அரசியல் கட்சிப் பத்திரிகை, திரையுலகில் வெற்றி கரமாக ஓடிக் கொண்டிருக்கும் சினிமாவுக்கு மலர் வெளி யிட்டது, பத்திரிகை உலகில் இதுதான் முதல் முறை 'என்.வி. கலைமணி முழுப் பொறுப்பை ஏற்று போர் வாள் வெளியிடும் 'பராசக்தி மலர்' என்ற பெயரில் வெளியிட்டார்.

### 'மாலை மணி'
### நாளேடு

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கென்று ஒரு நாளேடு இல்லையே என்ற அறிஞர் அண்ணாவின் குறையை, சுயமரியாதை வீரர் டி.எம். பார்த்தசாரதி நிறைவுப்படுத்தினார். அவர் சென்னை மண்ணடி முத்துமாரி செட்டித் தெரு என்ற முகவரியிலிருந்து 'மாலை மணி' என்ற நாளேட்டைத் துவக்கினார். அதற்கு ஆசிரியர் அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், கே.ஜி. இராதாமணாளன் ஆகியோராவர்.

அறிஞர் அண்ணாவுக்குப் பிறகு நாவலர் நெடுஞ் செழியன் அதற்கு ஆசிரியரானார். அவருக்குப் பிறகு, கே.ஜி. இராதாமணாளன் ஆசிரியரானார். இறுதியில் நட்டக் கணக்கு அதிகமாகவே மாலை மணி நின்றது.

### *பி.எஸ். இளங்கோ*
### *'மாலை மணி'*

சில ஆண்டுகள் கழித்துக் கழகத்தோர் பி.எஸ். இளங்கோ என்பவர் 'மாலை மணி'யை வார இதழாக அரசு அனுமதி பெற்று நடத்தினார். அந்தப் பத்திரிகைக்கு எந்தச் செய்தியும் தேவை யில்லை; அவசியமில்லை; பிறகு எப்படி அந்த ஏடு வெளியானது?

மாலை மணி 1 x 4 என்ற டெம்மி சைஸ் அளவில் 16 பக்கங்களைக் கொண்ட பத்திரிகையாகும். அன்றுவரை, ஏன் இன்று வரையிலும்கூட, அத்தகைய ஓர் அதிசயப் பத்திரிகை வெளிவந்தது கிடையாது. இனிமேலும் அப்படிப்பட்ட பத்திரிகை ஒன்று வெளிவரும் அளவுக்கு 'நா' வன்மைப் படைத்தோர் எவருமில்லை; என்ன அந்த அதிசயம் என்று கேட்கிறீர்களா?

### *16 பக்கமும் ஒரே*
### *ஒரு பேச்சுதான்!*

அது, பதினாறு பக்கங்களை உடைய ஒரு வாரப் பத்திரிகை. அறிஞர் அண்ணா அவர்களின் ஒரே ஒரு பேச்சை

மட்டுமே வாரா வாரம் வெளியிட்டதால், 50 ஆயிரம் பிரதிகள் விற்றன என்றால், அது அதிசயமல்லவா?

அறிஞர் அண்ணா பொதுக்கூட்டம் ஒன்றில் 'தலைவர் அவர்களே' என்று அழைப்பதிலிருந்து வணக்கம் கூறிப் பேச்சை முடிக்கும் வரையுள்ள ஒரு மணி நேரப் பேச்சை, தமிழ் நாட்டில் அவர்பேசும் ஒரு கூட்டப் பேச்சை, அப்படியே வெளி யிட்டு அதை விற்பனை செய்தது 'மாலைமணி' பத்திரிகை.

அண்ணா அவர்கள் பேச்சை நேரில் கேட்டு இன்புறுவது போல, கட்சித் தோழர்களும், தலைவர் அவர்களே என்று அண்ணா பேச ஆரம்பித்ததிலிருந்து, அவர் முடிக்கும் வரையு ள்ள பலதரப்பட்ட கருத்துக்களைக் கட்சிக்காரர்கள் ஒருசேரப் படிக்கும் ஒரு வழக்கம் இருந்ததை, அந்தப் பத்திரிகை அதை முழுமையாகப் பயன்படுத்தி கொண்டதால், வாரந்தோறும் மாலை மணி வார ஏடு ஏறக்குறைய 50 ஆயிரம் பிரதிகள் வரை விற்பனையானது.

அண்ணாவின் ஒரே ஒரு பேச்சு மட்டும் அவருக்கு ஒரு வாரத்துக்குரிய கட்டுரையாக இருந்தால் போதும். அந்தப் பேச்சு இதழ் தமிழ்நாட்டில் 50 ஆயிரம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகும். ஓர் ஊரில் உள்ள ஒவ்வொரு மன்றமும் கட்சிப் பத்திரிகைகளை அந்த மன்ற உறுப்பினர்கள் அவரவர் பணத்தில் வாங்கி வழங்குவர். ஒரு பத்திரிகையை ஒரு மன்றத்திலுள்ள 50க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் படிப்பார் கள். இப்படித்தான் பி.எஸ். இளங்கோ மாலை மணி வளர்ந்தது என்றால், இது எப்படிப்பட்ட பத்திரிகை பலம்? தொண்டு? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்றல்லவா?

இந்தப் பத்திரிகை நாளேடானது! எப்போது? முதன் முதலாக 'முரசொலி' மாறன் நாடாளுமன்றத்திற்கு வேட்பாள ராகத் தேர்தலில் நின்றபோது ஆசிரியர் பி.எஸ். இளங்கோ, புலவர் கலைமணியை மாலை மணி நாளேட்டிற்குத் துணை ஆசிரியராக நியமித்துக் கொண்டார்! அந்த 'மாலை மணி' நாளேட்டில் தான் 'எரியீட்டி' என்ற அரசியல், இலக்கிய, கலை உணர்வோடு கலந்த கட்டுரை நாள்தோறும் ஒன்னரை பக்கம் வெளிவரும். மாலை மணி பத்திரிகை வெளியிடும் எரியீட்டி கட்டுரைக்காக தினந்தோறும் 60 ஆயிரம் பிரதிகள் விற்றன.

எரியீட்டி
சவுக்கடி

'மாலை மணி'யிலிருந்து தனியாக வந்து 'எரியீட்டி' நாளேட்டைப் புலவர் என்.வி. கலைமணி துவக்கினார்.

ஆளும் கட்சியை ஆதரித்து, நியாய மனதோடு விமர்சிக்கும் எந்த எதிர்க்கட்சித் தலைவர்களையும், நிலவை உடைத்து அதன் ஒளியை மையமாக்கி சந்தன மணம் கமழும் தென்றல் நடை இதத்தோடு பதமாக அவர்களை வரவேற்றுப் பதிலை எழுதும். எரியீட்டி' தோழமைக்கு இது இலக்கணமாகும்.

அரசியல் பகைக்கு இலக்கணம் என்ன தெரியுமா? கதிரவனை நொறுக்கி அதன் கனல் வெள்ளத்தை மையாக்கி, கோடை நெருப்புச் சுடரொளிகள் கலந்த எழுத்துக்களால் அதன் எதிரிகளின் அரசியல், சிந்தனைகளைக் கண்டனம் செய்யும்! இதுதான் எரியீட்டி!

நாள்தோறும், மாலைதோறும் எரியீட்டி மேற்கூறிய இலக்கணங்களோடு வெளிவரும். இப்படிப்பட்ட எரியீட்டி பத்திரிகையைப் புலவர் என்.வி. கலைமணி என்ற நான் தான் நடத்தினேன்!

சவுக்கடி
நாளேடு

'சவுக்கடி' பத்திரிகையைப் பற்றி இவ்வளவு சுருக்கமாக ஏன் இங்கே கூறுகிறோம் என்றால், கட்சிப் பத்திரிகை நடத்துவோர்; எழுதும்போது தீவிரவாதிகளாகி விடக்கூடாது. வரம்பு மீறிய உணர்ச்சியாளர்களாகக் கூடாது. அதிக கட்சி அக்கறை காட்டுபவராக இருந்தால், அவர்கள் வாழ்க்கையிலே உருப் படவே முடியாது. பராரியாகும் பரிதாப நிலை உண்டாகும். உண்மைக்கு அரசியல் உலகம் தரும் மரியாதை இது!

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. திறமையான வழக்கறிஞராக இருந்தும், கட்சியின் தீவிரவாத உணர்வுடையவராக அவர் இருந்ததால், அவரது கடைசி காலம் என்ன? சொக்கலால் ராம் சேட பீடியை விற்று, மண்ணெண்ணெயை அளந்து ஊற்றிப் பிழைக்கும் நிலையும் தானே அவருக்கு அரசியல் தந்த பரிசு? அவர் சிறை மீண்டபோது அவரைப் பார்த்து வரவேற்க

வந்தவர் எத்தனை பேர்? ஒரே ஒருவர்! அவரும் குட்ட நோய் தியாகி! ஆம்! அவர்தான் சுப்பிரமணிய சிவா! 'ஞானபானு' பத்திரிகை ஆசிரியர் அவர்!

தீவிர உணர்ச்சி கொண்ட மக்கள் கவி பாரதியார் நிலை என்ன? அவர் உயிரோடு வாழ்ந்தபோது வயிறார உண்ண முழுமையான உணவுண்டா? அவர் பிணம் பின்னாலே எத்தனை தேசியவாதிகள் வந்தார்கள் - ஊர்வலமாக?

ஏமாளியான தியாகி சத்தியமூர்த்தி கதி என்ன? கட்சியிலே வஞ்சக அரசியலுக்குப் பலியாகி; 'அம்போ' என்று செத்தவர் தானே? ஒரு காமராஜர் தானே நன்றியாளராக நடமாடினார்; அவருக்காகப் போராடியனார்; நயவஞ்சக அரசியலால் அவரும் வீழ்த்தப்பட்டுப் பலியானவர் தானே - சாகும்போது!

தீவிர தேசபக்தியாளர் பாலகங்காதர திலகரைப் பின்பற்றிய திரு.வி.க., வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, பாரதியார் ஆகிய இவர்கள்; தங்கள் சொந்த இலக்கிய, தமிழ்த் திறமைகளால் வாழ்ந்தவர்களே தவிர - கட்சியாலல்ல!

கோபால கிருஷ்ண கோகலே மிதவாதிதான்! அவர்தான் அண்ணல் காந்தியடிகள் ஆசான். காந்தியடிகளை நம்பியோர் பின்பற்றினோர் பெருந்தலைவர் காமராசரைப் போல ஓரிருவர்தானே பெரும் புகழோடு வாழ்ந்தவர்கள்? ஆனால், அவர்களைக் கவ்வாது விட்டதா சாகும்போதுகூட அரசியல் சூது வஞ்சகங்கள்?

எனவே, கட்சிப் பத்திரிகை நடத்துவோர் கொள்கைத் தீவிர வாதிகளாகி விடக் கூடாது? ஆனால், அவர்கள் கதி அதோ கதிதான்! அதற்காக மிதவாதியாகவும், இருந்துவிடக்கூடாது. ஓரளவு இரு வாதங்களையும் அடக்கி வாசிக்கும் நடுநிலை யாளர்களாக கட்சிப் பத்திரிகைக்காரர்கள் உழைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே ஓர் அனுபவச் சுருக்கத்தை முன்னுரையாகக் கொடுத்துள்ளோம்.

நாவலர்
'மன்றம்'

சென்னை பூவிருந்தவல்லிக்கு அடுத்து 'நேமம்' என்ற கிராமம்தான் நாராயணசாமி எனப்படும் நாவலர் நெடுஞ்செழி

யனின் முன்னோர்களது ஊர். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மாணவர், எம்.ஏ. பட்டதாரி. இவர் வாலிப வயதில் தந்தை பெரியாரைப் போல கறுந்தாடி வைத்திருந்ததால், இளந்தாடிப் பெரியார் என்று இவரை திராவிடரியக்கம் அழைத்துப் பெருமைப்படுத்தியது.

பல்கலைப் படிப்பின்போதே நாவலர், அறிஞர் அண்ணா அறிவு வட்டத்தில் தொடர்புடையவராக இருந்ததால் சிறந்த சொற்பொழிவாளராகவும், எழுத்தாளராகவும், இலக்கிய வட்டத்துத் தேனியாகவும், குறிப்பாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்களை உணர்ச்சித் ததும்ப மேடைக்கு மேடை முழக்கமிட்டு, அவரது கவிதைத் திறனை நிலை நாட்டியவராகவும், தந்தை பெரியார் சிந்தனைகளின் முன்னோடி யாகவும் விளங்கியவர். இவரது இளவல் இரா. செழியன் என்பவர் நாடாளுமன்ற அரசியல் வித்தகராக விளங்கி வாழ்பவர்.

நாவலர் நெடுஞ்செழியன் ‘மன்றம்’ என்ற மாதமிரு முறைப் பத்திரிகையை நடத்தினார். அந்த இதழ், அரசியல், கலை, இலக்கிய ஆய்வு ஏடாக வெளி வந்து கற்றார் பேராதரவையும், கழகத் தோழர்களின் பாராட்டையும் பெற்றதால் விற்பனையும் பெருகியது. மேல் நாட்டு மேதைகளது மக்கட் தொண்டுகளை ‘மன்றம்’ மாதந்தோறும் வெளியிட்டு திராவிடரியக்கத் தோழர்களை அறிவு சுடர்களாக வளர்த்த பெருமை மன்றம் பத்திரிகைக்கு உண்டு.

நாவலர் சிறந்த பண்பாளர்; ஒழுக்கமே உருவானவர்; மாற்றாரும் மதிக்குமளவிற்கு மதி நலமிக்கவர். கோடையிடி பேச்சாளர்; புள்ளி விவரம் தராமல் எந்தப் பொருளையும் மேடையில் பேசாதவர். தமிழ் இலக்கியத்தை மறுமலர்ச்சி நோக்கோடு பார்த்து எழுதும் திறமையாளர்.

அறிஞர் அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர். ஜெயலலிதா அமைச்சரவைகளில் இரண்டாவது இடம் பெற்ற அமைச்சராக அமர்ந்த மரியாதை பெற்றவர். அவருடைய மன்றம் பத்திரிகை ஓர் இலக்கிய மணம் பரப்பும், அரசியல் உணர்வூட்டும், சுயமரியாதைச் சுடருதறும் பத்திரிகையாகத் தமிழ்நாட்டில் பணி புரிந்தது

## பேராசிரியர்
## 'புது வாழ்வு'

திராவிடர் இயக்கத்தின் தோழர்கள் தமிழ் உணர்வுடைய பண்பாளர்களானதால் ஒவ்வொருவரும் சிறந்த சொற்பொழி வாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும், கதாசிரியர்களாகவும், கட்சியை வளர்க்கும் கொள்கை வேளாளர்களாகவும், சினிமாத் துறையின் கதை-வசனம் பாடல் ஆசிரியர்களாகவும் இருந்தார்கள். எந்த ஒரு கட்சியிலும் இத்தகைய ஆற்றலாளர்களைத் தொண்டர்களாகக் காண முடியாது. திராவிடர் இயக்கம் ஒன்றுதான் இத்தனைத் துறைகளிலும் தனது இயக்கக் காளையர்களைப் பயிற்றுவித்த இயக்கமாக இருக்கின்றது.

பேராசிரியர் அன்பழகன் அந்த இயக்கக் காளையர் களுக்குப் பயிற்சித் தரும் நாவன்மையும், இலக்கியச் சிந்தனை யும், அரசியல் வித்தகமும் அமைந்தவராகக் காட்சி தந்து வருபவர். அவர் மாணவப் பருவத்தில் 'புதுவாழ்வு' என்ற பத்திரிகையை நடத்தினார்! அவரது எழுத்தாற்றலால், அவரைப் பின்பற்றும் மாணவர்கள் இன்றும் இருக்கிறார்கள்.

அமைதியே உருவான பேராசிரியர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார். கலைஞர் அமைச்சர் அவையில் தொடர்ந்து கல்வி அமைச்சராகவே இருந்து வருபவர் நமது பேராசிரியர் ஒருவரே! அவரது 'புதுவாழ்வு' பத்திரிகையும் அமைதியான இலக்கிய ஏணியாக பலருக்கு உதவியது எனலாம்.

## ப. கண்ணன்
## 'பகுத்தறிவு'

சேலம் மாவட்டம் ஜலகண்டபுரம் என்ற நகரிலிருந்து 'பகுத்தறிவு' என்ற திங்கள் இதழைத் தொடர்ந்து நடத்தியவர் ஜலகண்டபுரம் கண்ணன். அமைதியான எழுத்தாளர்.

அவர் சுயமரியாதை இயக்கத்தவர் மட்டுமன்று; பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் அருமை பக்தர்.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவின் கதை இலாகா பிரிவில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடன் இணைந்து பணியாற்றிய பாவேந்தரின் அன்பராவார்.

ஜலகண்டபுரம் கண்ணன் நடத்திய 'பகுத்தறிவு' பத்திரிகை; தீரன் சின்னமலை போன்ற திராவிட மாவீரர்களின் வரலாற்றாய்வை நாடகமாக்கியது. தலைகொடுத்தான் தம்பி என்ற படத்திற்கு வசனம் எழுதிய குழுவில் ப. கண்ணனும் ஒருவராவார்.

## ஏ.கே. வேலன்
## 'ஞாயிறு' இதழ்

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற திரைப்படம் தமிழ் நாட்டையே ஒரு வசூல் உலுக்கல் செய்த படமாகும். ஏ.கே. வேலன், சென்னை சாலிகிராமம் பகுதியில் வேலன் ஸ்டியோ என்ற ஒன்றைத் துவக்கி நடத்தி வந்தது அவரது இறுதி வாழ்க்கை ஆகும்.

கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் புலவருக்குப் படித்தவர் ஏ.கே. வேலன். தமிழ்ப் பற்றுணர்ச்சியோடு திராவிடர் இயக்கத்தில் இணைந்தவர். அந்தத் தமிழ் நெஞ்சம் திராவிடரியக்க வளர்ச்சிக்காகப் பத்திரிகை நடத்தியது. பத்திரிகை பெயர் 'ஞாயிறு'. மாதம் இருமுறை ஏடு. இந்தப் பத்திரிகையை அவர் வறுமையோடு போராடிய வயதில் தஞ்சை நகரிலிருந்து நடத்தியவர்.

சினிமா துறையில் புகழ் பெற்றப் படத் தயாரிப்பாள ராகவும், திரைக் கதாசிரியராகவும், வசனகர்த்தாவாகவும் விளங்கி, தமிழ்ப் புலமை பெற்ற ஒரு ஞாயிறாகத் திகழ்ந்தார்.

## என்.எஸ். இளங்கோ
## 'எதிரொலி'

அதிராம்பட்டினம் என்.எஸ். இளங்கோ என்றால் தஞ்சை மாவட்டத்தில் தெரியாதார் இரார். சிறந்த தமிழ்ப் புலமையால் அவர் அருமையான தேனினுமினிய 'பேச்சாளராக, தமிழ்நாடு முழுவதும் சுற்றியவர்! தஞ்சை மாவட்டக் கழகச்

செயலாளராகக் கடுமையாக உழைத்த திராவிடக் காளை அவர்! தலை மட்டும் வழுக்கை விழுந்து விட்டது.

அதிராம்பட்டினம் நகரிலிருந்து 'எதிரொலி' என்ற ஒரு திங்கள் இதழை நடத்தினார். அதே பத்திரிகையின் பெயரால் எதிரொலி என்ற புகைப்படம் எடுக்கும் ஸ்டுடியோவையும் நிறுவி வருவாய் சம்பாதித்தார்.

ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள் தஞ்சை மாவட்டச் சுற்றுப்பயணம் செய்தபோது, அதிராம்பட்டினம் கூட்டத்தில் கலந்து கொள்ள இளங்கோ வீட்டில் மதியம் உணவுண்டார். உணவு முடிந்த பின்பு, அண்ணா அவர்களுக்கு இளங்கோ வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார் - தாம்பூலம் தரிக்க.

அப்போது இளங்கோ அண்ணாவிடம் சிரித்துக் கொண்டே, "அண்ணா தலையில் வழுக்கை விழுந்தவர்கள் எல்லாம் அறிவாளிகளாக இருப்பார்களாமே' என்றார். அதற்கு எடுத்துக்காட்டாக லெனின், காந்தியடிகள், நேரு போன்றவர்கள் தலையைச் சுட்டிக் காட்டினாராம்.

உடனே அண்ணா அவர்கள், அந்த வழுக்கை இரகசியத்தை எந்த அறிவாளியும் வெளியே சொல்ல மாட்டான்' என்றார். உடனிருந்தோர் இளங்கோவைப் பார்த்து சிரித்து விட்டார்களாம். அண்ணாவுடன் அவ்வளவு நெருக்க மாகப் பழகும் தன்மானச் சிங்கம் அதிராம்பட்டினம் என்.எஸ். இளங்கோ. அவரைப் போலவே அவருடைய 'எதிரொலி' பத்திரிகையும் தன்மான வளர்ச்சிக் கருத்துக்காகப் பாடுபட்டது.

அதிராம்பட்டினம் இளங்கோ நடத்திய அதே 'எதிரொலி' என்ற பெயரில்தான்; அமைச்சர் ஆற்காடு வீராசாமி நாளேடு பத்திரிகையை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆற்காடு வீராசாமி
'எதிரொலி'

வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்க்காடு என்ற நகரினருகே பிறந்த ஆற்காடு வீராசாமி, தமிழ்நாட்டின்

அமைச்சராக அரும் பணியாற்றி வரும் கலைஞர் அவர்களின் உறுதுணை நம்பிக்கை நாயகமாவார்!

ஆற்காடு நகருக்கு என்றென்றும் அழியா வரலாற்றுப் புகழைத் தேடித் தந்த மேன் மக்கள் ஆர்க்காடு சகோதரர்களும் இரட்டையர்களுமான சர்.ஏ. இராமசாமி முதலியாரும், சர்.ஏ. இலட்சுமணசாமி முதலியாரும் ஆவர். அந்த இரட்டை மேதைகளின் அற்புதப் புகழுக்குப் பிறகு, ஆர்க்காடுக்கு மூன்றாவதாகப் புகழ் சேர்த்துப் பெருமைப்படுத்தியவர் ஆற்காடு வீராசாமி என்றால் மிகையன்று.

## உவமைக் கவிஞர்
### சுரதாவின் 'சுரதா'

திராவிடரியக்கக் கொள்கை பரவ வேண்டும் என்பதற்காகவும், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா சமுதாய அரசியல் கருத்துக்களுக்கு உறுதுணையாகவும், திராவிடரியக்க இளம் கவிஞர்களை ஊக்குவிப்பதற்காகவும், காவியம், இலக்கியம், சுரதா என்ற கவிதை வடிவப் பத்திரிகைகளை முதன் முதலில் திராவிடர் இயக்க வளர்ச்சிக்காக நடத்திய தனித்திறமை மிக்க கவியாளர் சுரதா.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களைக் கவிதை ஆசானாக ஏற்றவர். அதனால் சுப்புரத்தின தாசன் என்ற பெயரிலுள்ள சுப்பு என்ற சொல்லின் முதல் எழுத்தான 'சு'வோடு, ரத்தினம் என்பதின் முதல் எழுத்தான 'ர'வைச் சேர்த்து; தாசன் என்ற சொல்லின் முதல் எழுத்தான 'தா' வோடு முடித்து, அந்த மூன்று எழுத்துக்களை ஒன்றிணைத்து 'சுரதா' என்று பெயரை வைத்துக் கொண்டவர் சுரதா.

தனது கவிதை வட்ட ஆசானின் பெயருக்கு நன்றி காட்டும் வகையில் 'சுரதா' என்ற பத்திரிகையைக் கவிதைப் பத்திரிகையாக வெளியிட்டுக் கவிதைத் தொண்டாற்றி வந்தார்.

தமிழ்நாட்டின் இளைய தலைமுறைக் கவிஞர்களை உருவாக்கும் கவிதைத் திறமை, உவமை வல்லமை, கவிதை அழகு நடையில் புதுமைகள் அதிகம் அவரது கவிதைகளில் பூக்காடாக மலர்ந்து மணம் பரப்பியதால், இளம் கவிஞர்கள்

பூஞ்சோலை வண்டுகளைப் போல சுரதா அவர்களது கருத்துத் தேனைப் பருகிப் பறந்து ரீங்காரமிட்டார்கள்.

அந்தக் கவிஞர்கள் ஒன்று சேர்ந்து பாரதிதாசன் கவிதா மண்டலத்தை உருவாக்கித் தொண்டு புரியும் கவிதை வட்டமாகத் திகழ்ந்தார்கள். அந்தப் பெருமையை சுரதா, தனது ஆசானுக்கு உருவாக்கினார். சுரதா கவிதை வட்ட இளம் கவிஞர்கள் தலைமுறையினரை, பாவேந்தர் பாரதிதாசன் கவிதா மண்டலமாகத் திகழ வைத்துக் கொண்டிருக்கும் புகழ்ப் பூங்காவை, உருவாக்கியவராக சுரதா உலா வந்து கொண்டிருப்பதை தமிழ்நாடு மறவாது.

## புலவர் பொன்னிவளவன் 'அருவி' பத்திரிகை!

திராவிடரியக்கத் தமிழ்ப் புலமைத் தும்பிகளுள் புரட்சி நடையூறும் தேன் தமிழ்க் கவிதைகளை அழகாக, ஆழமாக, அலங்காரமாகப் பாடிய மரபுக் கவிஞனாக, சுரதா கவிதை பாணியைப் பின்பற்றிக் கவிதைகளை எழுதி வந்தவர் புலவர் பொன்னி வளவன். அவர் 'அருவி' என்ற கவிதைப் பத்திரிகையை திராவிடரியக்கத்துக்குத் தமிழ்த் தொண்டாக மட்டுமல்லாமல், இயக்கக் கவிஞர்களுக்குத் தலைமைக் கவிஞனாக, எழுச்சியூட்டும் உணர்ச்சிக் கவிஞனாக வாழ்ந்து மறைந்தவர். கழக வளர்ச்சிக்கு கவிஞர் என்ற ரோஜா செடியாக இளமைப் பருவம் முதல் வாழ்ந்த கொள்கைக் கவிஞர் பொன்னி வளவன் என்ற நவநீதக் கிருஷ்ணன்.

காங்கிரஸ் ஆட்சியில் அறிஞர் அண்ணாவின் ஆணையை ஏற்று, திருநெல்வேலி நகரில் சட்ட எரிப்புப் போர் என்ற போராட்டத்தில் ஈடுபட்டுக் கைதாகிச் சிறை சென்ற சிங்கக் கவிஞர் அவர்.

தனது சட்ட எரிப்புப் போரின் வாக்கு மூலத்தை நீதிமன்றத்தில் கவிதையிலே எழுதிப் படித்த திராவிடரியக்கப் போராட்ட வரலாற்றின் முதல் புரட்சிக் கவிஞர் புலவர் பொன்னி வளவன்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் கூட, எந்தக் கவிஞனும், நீதிமன்ற வாக்குமூலத்தைக் கவிதையில் பாடினார்

என்ற சான்றே தமிழ் வரலாற்றில் இல்லை. திராவிடரியக்கத் தமிழ்க் கவிதையின் வரலாற்றுப் பெருமைக்கு அரசியல் வண்ணம் கொடுத்த வழி காட்டிக் கவிஞராக வாழ்ந்து மறைந்தார். பாவேந்தர் கவிதை வட்டத்துப் புள்ளிகளுள் ஒருவராகத் திகழ்ந்த அவர்; சென்னை மாநகராட்சி மேனிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் பணி புரிந்தார் என்பதைக் கவிதை உலகமும், திராவிடரியக்க வரலாறும் மறவாது.

## 'நம்நாடு'
## நாளேடு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை பரப்பும் நாளேடு இது. அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு, சென்னை இராயபுரம் பகுதியிலே இருந்து வெளி வந்தது. இந்த தி.மு.க. தினசரி இதழில் நம்நாடு செங்குட்டுவன், நம்நாடு முத்துக் கிருஷ்ணன் போன்ற மற்றும் சிலர் துணை ஆசிரியர்களாகப் பணியாற்றி, திராவிடரியக்க வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டார்கள்.

ஆறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், கே.ஏ. மதியழகன், என்.வி. நடராசன் போன்ற பலர் பேச்சுக்களும், கழகப் பணி முழு விவரங்களும் வெளிவந்தக் கழக நாளேடு அது.

## தூத்துக்குடி
## 'கிளர்ச்சி' இதழ்

திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி நகரிலிருந்து திராவிடரியக்க வார இதழாக 'கிளர்ச்சி' வெளி வந்தது. அதன் ஆசிரியர்களான இராசு. தங்கப்பழம், எம்.எஸ். சிவசாமி என்ற இரட்டையர்கள் அப்பத்திரிகையை நடத்தி, எதிர்ப்புக் குரல் எழுப்பும் மாற்றுக்கட்சிகளுக்கு மறுப்புக் குரல் கொடுத்துக் கிளர்ச்சி செய்தது அந்தப் பத்திரிகை.

விபூதி வீரமுத்து என்பவர் நடத்திய 'அறப்போர்' என்ற காங்கிரஸ் பத்திரிகைக்கு, 'கிளர்ச்சி' இதழ் இரட்டையர்கள் காரசாரமாகப் பதில் எழுதிய எதிர்ப்பு வாதங்களை திராவிடரியக்கம் மறவாது.

## அரங்கண்ணல்
## 'அறப்போர்'

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இராம. அரங்கண்ணல், அறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் நடத்தி வந்த, 'திராவிட நாடு' என்ற வாரப் பத்திரிகையில் பல ஆண்டுகளாகத் துணையாசிரியராக இருந்தவர். அருமையான எழுத்தாளர். வரலாற்று ஆய்வு அறிவுடையவர். தமிழ் இலக்கியத்தில் நன்கு பயிற்சியுடையவர். எழுத்துத் துறையில் சுவையாக எழுதும் திறனுடைய அவர், சென்னை மாநகரிலே இருந்து 'அறப்போர்' என்ற பத்திரிகையை நடத்தினார்.

இராம. அரங்கண்ணல் மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவராகவும் இருந்தார். பிற்காலத்தில் சிறந்த திரைப் படத் தயாரிப்பாளராகவும் திகழ்ந்தார். அவர் எழுதிய கதை 'பொன்விளையும் பூமி' அவரே அதற்கு வசனம் எழுதினார். அறிஞர் அண்ணாவின் 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' எனும் திரைக்கதைக்கு வசனம் எழுதியவர் அரங்கண்ணல்.

## தில்லை வில்லாளன்
## 'தம்பி' பத்திரிகை

அறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த 'திராவிட நாடு' வாரப் பத்திரிகையில், தில்லை நகர் எனப் படும் சிதம்பரம் நகரைச் சேர்ந்த வில்லாளன் துணையாசிரி யராகப் பணியாற்றியச் சிறந்த எழுத்தாளர். அருச்சுனன் எனப்படும் அவரைத் தில்லை வில்லாளன் என்றே அழைப்பது வழக்கம்.

நாடாளுமன்ற மாநிலங்கள் அவை உறுப்பினராகவும், தில்லை வில்லாளன் பணியாற்றினார். அவர் 'தம்பி' என்ற பெயரில் இலக்கியப் பத்திரிகை நடத்திப் புகழ் பெற்றார்.

## 'கழகக் குரல்'
## திருவை. அண்ணாமலை

நெல்லை மாவட்டம் திருவைகுண்டம் நகரைச் சேர்ந்தவர் திருவை. அண்ணாமலை. சிறந்த கழக மேடைப் பாடகர். தென் மாவட்டக் கழகக் கொள்கைப் பிரச்சாரத்திற்கு நன்கு

உழைத்தவர். திருநெல்வேலி நகரிலிருந்து அவர் "கழகக் குரல்" என்ற வார இதழை நடத்தி வந்தார். பிறகு சென்னைக்கு வந்து குடியேறிய திருவை. அண்ணாமலை, கழகக் குரல் பத்திரிகையைச் சில மாதங்கள் நாளேடாகவும் நடத்தினார்.

## 'தென்னகத் தலைவன்'
## கே.ஏ. மதியழகன்

திராவிட முன்னேற்றக் கழக ஐம்பெருந் தலைவர்களிலே ஒருவராக விளங்கிய கணியூர். சோமசுந்தரம் எனப்படும் கே.ஏ. மதியழகன், 'தென்னகத் தலைவன்' என்ற நாளேட்டை நடத்தினார். அவருக்குப் பிறகு அந்த தினப்பத்திரிகையை அவரது உடன்பிறந்த தம்பி கே.ஏ. கிருஷ்ணசாமி நடத்தினார்.

கே.ஏ. மதியழகன் கல்லூரிக் காலம் முதல் திராவிடரி யக்கக் கொள்கை வீரர். அறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பிகளில் குறிப்பிடத் தக்க பேச்சாளரும் எழுத்தாளருமாவார். கே.ஏ. மதியழகன் 1967-ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா அமைச்சரவையில் உணவுத் துறை அமைச்சராக இருந்தார். தமிழ்நாடு சட்டப் பேரவை சபாநாயகராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 'கயல் தினகரன்'
## தென்னகத் தலைவன்

கயல் தினகரன் என்ற அருமையான எழுத்தாளர் 'தென்னகத் தலைவன் என்ற பெயரில் அறிஞர் அண்ணா மீதிருந்த ஆர்வக் கொள்கைப் பற்றால், வார இதழாக நடத்தி வந்தார். அந்தப் பத்திரிகையை, கே.ஏ. மதியழகன் கயல் தினகரனிடமிருந்து உரிமை பெற்று, வார ஏடாக, நாளேடாக நடத்தினார்.

## 'கவிக்கொண்டல்'
## செங்குட்டுவன்

அறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராக ஏற்று, தி.மு.கழகத்தின் சார்பாக 'நம்நாடு' நாளேடாக சென்னையிலிருந்து வெளி வந்தது. அந்தப் பத்திரிகையில்

துணை ஆசிரியராகப் பணியாற்றியவர் மா. செங்குட்டுவன். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திராவிடரியக்கக் கொள்கை வீரர். சிறந்த சொற்பொழிவாளர். சுவையூறும் கட்டுரைகளை எழுதுவதில் வல்லவர்; கவிதை எழுதும் திறன் பெற்றவர். பாவேந்தர் பாரதிதாசன் கவிதை வட்டத்தின் வளர்ச்சிக்கும், பாவேந்தரை நினைவுபடுத்தும் பிறந்த நாள் விழாவிற்கும் சிறப்பான தொண்டாற்றிடும் தமிழ்ப் பித்தர்.

'கவிக்கொண்டல்' என்ற பத்திரிகை; கொள்கை மேகமாக தமிழ்நாட்டில் வலம் வந்து, திராவிடரியக்க வயல்வெளியில் கதிர்மணிகள் வளம் கொழித்து வளர்வதற்கு ஏற்ற; செல்வ விண்நீராகப் பொழிந்து கொண்டிருப்பவர் மா. செங்குட்டுவன்.

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர், கலைஞர் போன்ற தலைவர்களிடம் அதிக ஈடுபாடு கொண்ட கொள்கைப் பாசம் நிறைந்தவர். ஏறக்குறைய 50 ஆண்டு காலம் தமிழக அரசியலின் நெளிவு சுளிவுகளையும், திராவிடரியக்க வரலாற்றின் முழு சம்பவங்களையும் நன்கு உணர்ந்த நினைவாளர் செங்குட்டுவன். அவர் நடத்தி வரும் 'கவிக்கொண்டல்' என்ற திங்கள் இதழ் அவரது நினைவுக் கோட்டத்தின் நிலையமாக ஏறக்குறைய 20 ஆண்டுகளாகத் திகழ்ந்து வருவதாக எனது நினைவு.

'சங்கொலி'

திருநாவுக்கரசு

திராவிடர் இயக்கக் கலைக் களஞ்சியமாக நடமாடுபவர் க. திருநாவுக்கரசு. அவர் 'சங்கொலி' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும், மறுமலர்ச்சி திமுகவின் அதிகாரபூர்வ ஏடாக, 'சங்கொலி'யைத் திறம்பட நடத்தி வருகிற பெருமைக்குரியவர். இளம் வயது முதலே அவர், திராவிடரியக்கக் கொள்கைப் பிணைப்பாளராக இருப்பது மட்டுமன்று, இந்த இயக்கத்தின் வேர்கள் யார் விழுதுகள் யாரென்று அவர்களது வரலாற்றுக் குறப்புக்களை, இன்றும் "சங்கொலி" வாரப் பத்திரிகை வாயிலாக அடையாளம் காட்டி வருவது, வருங்கால இளைய தலைமுறையினர்களுக்கு ஒரு வழிகாட்டிக் குறிப்பேடாகவும் விளங்குகிறது.

வைகோ
'சங்கொலி'

மறுமலர்ச்சி தி.மு.க.வின் பொதுச் செயலாளராகப் பணியாற்றி வரும் வை.கோபால்சாமி எனப்படும் 'வைகோ'; சங்கொலி பத்திரிகை ஆசிரியராகி, அதை வார இதழாக்கி, ம.தி.மு.க.வின் கொள்கை பரப்பும் ஏடாக நடத்தி வருகிறார். ஒரு தின ஏடு நடத்தும் கட்சிப் பணியை வார இதழ் ஒன்று நடத்துகிறது என்றால், அதற்குப் பொறுப்பாசிரியராக இருக்கும் க. திருநாவுக்கரசின் தனித்திறமை ஆகும்.

திராவிடரியக்கத்தின் ஆரம்பக் காலத்தில், அதாவது 1944-ம் ஆண்டு முதல் 1967 வரை எவ்வாறு திராவிடர் இயக்கப் பத்திரிக்கைகள் உணர்வுபூர்வமாக நடத்தப்பட்டு வந்தன என்பதற்குரிய அடையாளம் தேவையா? இன்றைய 24 பக்கம் அளவுடன் வெளிவந்து கொண்டிருக்கும் டபுள் டெம்மி 1 x 4 அளவுள்ள 'சங்கொலி' வார இதழை வாங்கிப் படித்துப் பார்த்தாலே போதுமானது.

திராவிடர் இயக்கப் பத்திரிகைகளின் தோற்றம், வளர்ச்சி - வீழ்ச்சிகளை அனுபவித்தவர்களுக்குத்தான் அந்த அரிய பயிற்சிகளின் அருமைகள் புரியும்; பெருமைகள் தெரியும்.

'சங்கொலி' இதழ், தோற்றம், அழகுமிகு தலைப்புகள், கட்டுரைக் கருத்துக்கள் எல்லாமே அறிஞர் அண்ணா காலத்து வடிவமாக அமைந்து தமிழ்நாட்டை வலம் வந்து கொண்டிருக் கின்றது. 'திராவிட நாடு, முரசொலி, தென்றல், தீப்பொறி, எரியீட்டி, சவுக்கடி, மாலை மணி, போர்வாள் போன்ற ஏடுகள் எப்படிப்பட்ட பரபரப்பையும் விறுவிறுப்பையும் எதிர்பார்ப்பையும் அன்று உருவாக்கிக் கொள்கை பரப்பும் பரணியைப் பாடினவோ, அதையே இன்றும் 'சங்கொலி' முழக்கம் எழுப்பி, சங்க நாதம் செய்து வருகின்றது. அதற்கு வைகோவின் புயல்வேகப் பேச்சும், எழுத்தும், கழக யூக வியூக ஆக்கப் பணிகளும்தான் விதைகளாகும்.

அட்டாவதானி என்றால் எட்டு வகைச் சிந்தனையில் காரிய சித்தி ஆற்றுபவர்; தசாவதானி என்றால் ஒரு காரியத்தைப்

பத்துவகையில் திறம்படப் புரிபவர்; சோடசாவதானி என்றால் பதினாறு வகையிலும், சதாவதானி என்றால், நூறு வகைச் சிந்தனைகளோடும், எடுத்த ஒரு காரியத்தைச் செய்து வெற்றி பெறுபவர் ஆவார் என்பது பொருள்.

மேற்கண்ட அவதானங்களை வெற்றிகரமாக ஆற்றிக் கவி காளமேகம் செய்து காட்டினார்; செய்குத் தம்பி பாவலர் தசாவதானியாகவும், சதாவதானியாகவும் விளங்கிப் புகழ் பெற்றார். அட்டாவதானி புரசை சபாபதி முதலியார், சித்தாந்த சரபம், அட்டாவதானி பூவை. கலியாண சுந்தர யதீந்திரர் மற்றும் சிலர் அவதானக் கலையில் கீர்த்திப் பெற்றவர்கள் ஆவர்.

ஏன் இதை இங்கே சுட்டினோம் என்றால், அவதாரம் என்பது வேறு, அவதானி என்பது வேறு. அவதாரம் என்றால் விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்து ஆன்மீகத் திருவிளையாடல் களை ஆற்றி, தெய்வீகச் சக்திக்குப் புகழூட்டுவது. அது சுலபம் அவர்களுக்கு. காரணம், அவர்கள் மனித சக்தியை மீறியவர்கள். தங்களைச் சுரர்களாக்கி அறிமுகப்படுத்திக் கொண்டவர் களாதலால் எதையும், எண்ணியபடி செய்து கொள்வார்கள். ஆனால், அவதானிகள் அத்தகையவரல்லர்.

அவதானிகள் மக்களிலே ஒருவராகப் பிறந்து, வாழ்ந்து இறப்பவர்கள். அவ்வாறானால் அம்படிப்பட்டு மாண்ட இராமர், ஆற்றுக்குள் மூழ்கி இறந்த கிருஷ்ணன் ஆகியோரும் மனிதர்களாகப் பிறந்தவர்கள் தானே என்று கேட்டு விடாதீர்கள்! ஆன்மீகம் என்றால் யாரும் கேள்விக் கேட்கக் கூடாது! அது மதம்; தெய்வீகம் சம்பந்தப்பட்ட சம்பவங்கள்.

அவதானி என்பவர், தனது அறிவால், சிந்தனையால் திறமையை வெளிப்படுத்தும் ஓர் அறிவுக் கலைஞர். அவதானம் கற்றால்தான் திரும்ப அதை ஆற்ற முடியும். உரிய பயிற்சிகளைக் கடுமையாகப் பெற வேண்டிய கலை. இங்கே 'வைகோ'வும், திருநாவுக்கரசும் அவர்கள் நடத்தும் 'சங்கொலி' யும் அவதானக் கலை ஆசான்களாக விளங்கி வருகின்றனர்.

24 பக்கங்கள் கொண்ட ஒரு வார இதழ், அந்த வாரத்தில், அட்டவதானியாக, தசாவதானியாக, சோடசாவதானியாக அவதானக் கலையை - அரசியல், சமுதாயம், இனம், மொழி, போன்ற ஆய்வுத் துறைகளில் செய்து, அவை கட்டுரை

வடிவில் தேர்வு செய்து வெளி வருவதைப் பார்க்கின்றோம். அத்தனை திருப்புமுனைக் கருத்துக்களை ஒரு வார இதழ் வாரந்தோறும் அதனது வாசகர்களுக்குக் கற்பிக்கும் ஆசானாக, 'சங்கொலி' இசைபாடி உலா வருகின்றது. எடுத்துக்காட்டாக, மாதம் தோறும் 'நமது நினைவில்' நிற்க வேண்டிய திங்கள் வரலாற்றுக் குறிப்புகள்' என்ற வரலாற்று ஆய்வுக் கலை அவதானத்தில்; 1886-ஆம் ஆண்டில் விடுதலை இயக்க வீரர் எஸ்.எஸ். விசுவநாததாசு பிறப்புத் தினத்தைக் குறிப்பிட்டுக் காட்டி, அவரது வரலாற்றை நமக்கு நினைவுப்படுத்தும் தேசிய அவதாரமாக, அன்றைய; விசுவநாத தாசின் தேசபக்த உணர்வுகள் அவதானமாக உள்ளது அல்லவா?

அவ்வாறானால் 'சங்கொலி' பத்திரிகையும், அதன் ஆசிரியரான 'வைகோவும்', பொறுப்பாசிரியராகப் பணி யாற்றும் க. திருநாவுக்கரசுவும் தமிழ்நாட்டின் பத்திரிகை உலக அவதானக் கலைஞர்கள்தானே!

எனவே 'சங்கொலி' என்பது அரசியல் உலகில் பணம் திரட்டும் ஒரு விளையாட்டு இதழன்று. ஏனெனில், திருமண மானதும் முதல் பிரவசத்தின்போது குறிப்பிடப்படும் பிரசவ நேர உபாதைகளைப் போன்ற நிகழ்ச்சிகள் கொண்ட முதல் பிரசவ சாதனைகளாகும்! இத்தகைய ஒரு வலி தரும் பத்திரிகையைத் தினந்தோறும் நடத்தியவனுக்குத்தான் அந்த பத்திரிகையின் வாரப் பிரதிவார பிறப்பின் அருமைகளைப் பெருமையாக நினைக்கும் மகிழ்ச்சியே முகிழ்க்கும்! அந்தத் தோற்றப் பெருமைகளைச் 'சங்கொலி'க் கொள்கை நாதங் களென எழுப்பி - நமக்கெலாம் உவகை மழலை ஒலிகளை வழங்கி வருகின்றது. வாழ்க 'சங்கொலி' முழக்கங்கள்.

## 'அண்ணா'
## நாளேடு

மக்கள் திலகம், நடிகர் எம்.ஜி.இராமச்சந்திரன் தனது அரசி யல் கொள்கைப் பிரச்சாரத்துக்காக அறிஞர் அண்ணா அவர் களது பெயரால் நாளேடாக நடத்தும் நிறுவனராக விளங்கினார். அந்த ஏடும் திராவிடரியக்க அவரது அரசியல் வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட உணர்ச்சிப் பத்திரிகையாக நடந்தது.

## அடியாரின்
## ‘மறவன் மடல்’

கலைஞர் ‘முரசொலி’ நாளேட்டில் துணையாசிரியராக இருந்த திருப்பூர் தண்டபாணி என்ற அடியார், ‘மறவன் மடல்’ என்ற பத்திரிகையை நடத்தினார்! சிறந்த சிந்தனை வளமிக்க எழுத்தாளரான அடியார்; கடலலை போன்ற அலைமோதும் அரசியல் நிலையற்றக் கருத்துக்களால் அதை நடத்த முடியாதவ ராகி, இறுதியில் இஸ்லாம் இனமாகி, பாகிஸ்தான் அதிபரை நேரில் சந்தித்துப் புகழ் பெற்ற எழுத்தாளராக மறைந்தார்!

## ‘மன்ற முரசு’
## முசிறிபுத்தன்

ஆரம்ப கால திராவிடரியக்கத் தொண்டராக இருந்து, பிறகு இரும்பு வணிகம் செய்து, ஓரளவு வருமானம் உடையவராக விளங்கினார். புரட்சி நடிகர் திரை ரசிக மன்றங்கள் ஒன்றாக இணைந்ததால் அதன் பொதுச் செயலாள ராகப் பணியாற்றி புகழ் பெற்றார். எம்.ஜி.ஆர். புதுக் கட்சியைத் தோற்றுவித்தபோது, அவர் பின்னே சென்று ரசிக மன்றத்தை நிலை நாட்டினார். சட்டமன்ற உறுப்பினராகவும், தொண்டு செய்தார். அவர் ‘மன்ற முரசு’ என்ற நாளேட்டை நடத்தி நல்ல முறையில் வருமானியனார்! எம்.ஜி.ஆர். அரசியல் வளர்ச்சிக்கு பலமான துணையாக நின்றவர்களிலே ஒருவரானார்.

## திருநாவுக்கரசர்
## ‘பொன்மனம்’

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த இளம் வழக்குரைஞராக திராவிடர் இயக்கத் தொண்டாற்றி வந்த திருநாவுக்கரசு, மக்கள் திலகம் கட்சி சார்பாக அறந்தாங்கித் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அமைச்சராகவும் நீடித்தார். அவர், ‘பொன்மனம்’ என்ற பத்திரிகையை நாளேடாக நடத்தினார். ஜெயலலிதா மந்திரிசபையிலும் அமைச்சராக இருந்தார். பிறகு தனிக்கட்சி கண்டார்! அதை பாரதிய ஜனதா கட்சியில் இணைத்துவிட்டு, பிரதமர் வாஜ்பாய் தலைமையில் இயங்கிய மத்திய அரசு மந்திரியாக இருந்தார். ‘பொன்மனம்’ இதழும் நின்று விட்டது.

## ஜெயலலிதாவின் 'நமது எம்.ஜி.ஆர்'

மக்கள் திலகத்தால் அரசியலுக்குள் நுழைந்த ஜெ. ஜெயலலிதா, தனது கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளரானார். எம்.ஜி.ஆர். அவரை மாநிலங்களவை நாடாளுமன்ற உறுப்பினராக்கினார். எம்.ஜி.ஆர். மரணமடைந்த பின்பு, அ.தி.மு.க. பொதுச் செயலாளரானார். 'நமது எம்.ஜி.ஆர்.' என்ற நாளேட்டைத் துவக்கினார். கவிஞர் மணிமொழி அந்த நாளேட்டின் ஆசிரியராக இருந்தபோது, புலவர் என்.வி. கலைமணி அவருடன் துணை ஆசிரியராகப் பணி புரிந்தார்.

'டாக்டர் நமது எம்.ஜி.ஆர்.' என்ற அந்த நாளேட்டை நிறுவிய ஜெ. ஜெயலலிதா, இரண்டு முறை தமிழ்நாட்டிற்கு முதல் அமைச்சரானார். இன்றும் டாக்டர் நமது எம்.ஜி.ஆரை அவரது கொள்கைப் பரப்பும் நாளேடாகவே நடத்திக் கொண்டிருக்கிறார்.

## மா. நடராசனின் 'புதிய பார்வை, தமிழரசி'

அண்ணா தி.மு. கழகத்தை நடதத் வரும் பொதுச் செயலாளர் ஜெ. ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரி சசிகலாவின் கணவர் எம். நடராசன்.

திராவிடர் இயக்கம் மாணவர் அணியிலே தொண்டாற்றி வந்த மா. நடராசன், தமிழ்நாடு அரசு ஊழியராகவும் பணி புரிந்தார். அவர் 'தமிழரசி' என்ற வார இதழுக்கு 'அமுத சுரபி' என்ற மாதப் பத்திரிகையின் ஆசிரியரான விக்ரமன் அவர்களைப் பொறுப்பாசிரியராக்கி நடத்தி வந்தார். மா. நடராசன் அந்த வார இதழின் ஆசிரியராவார்.

கலைஞர் 'குங்குமம்' வார இதழில் எழுத்தாளர் சாவி. ஆசிரியராகவும், பாவை சந்திரன் என்பவர் துணை ஆசிரியராகவும் இருந்தார்கள். மா. நடராசன் அந்த பாவை. சந்திரனை அழைத்து, 'புதிய பார்வை' என்ற பத்திரிகைக்குப் பொறுப்பாசிரியராக்கி, புதிய பார்வையை நடத்தினார். அவை இரண்டும் நிறுத்தப்பட்டு விட்டன.

## ஈரோடு சின்னசாமி 'சமநீதி' வார இதழ்

சோசலிஸ்ட் கட்சியின் தமிழ்நாட்டுத் தூண்களிலே ஒருவராகத் திகழ்ந்தவர் ஈரோடு மு. சின்னசாமி. அவர் மொடக்குறிச்சி ஊரர்! அருமையான, இயற்கை ஆற்றல்மிக்க, எதிலும் விரைவான செயற்திறமையுடைய, உரமிக்க, கட்சித் தொண்டர்களை ஊக்குவிக்கும் அற்புத அன்பு சக்தியுடைய தீப்பொறி பறக்கும் அரசியல் பேச்சாளர் ஆவார்.

கலைஞர் அரசியல் பற்றுடைய அந்த சோசலிஸ்ட் தலைவர்; சி.பா. ஆதித்தனார் சோசலிஸ்ட் கட்சியில் இருந்தபோது இருவரும் நண்பர்களானார்கள்.

'தினத்தந்தி' பத்திரிகையின் நிறுவனரான சி.பா. ஆதித்தனார், நாம் தமிழர் இயக்கம் என்ற ஒரு சுதந்தரத் தமிழ்நாடு பெறும் ஆர்வமுடையக் கட்சியை உருவாக்கிய போது, ஈரோடு சின்னசாமி அந்த இயக்கத்திற்குச் சக்தியூட்டும் தலைமைப் பேச்சாளர்களுள் ஒருவராக்கப்பட்டார். இருவருக்கும் கொள்கை முரண்பாடு உண்டானதால், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். பரிந்துரையை ஏற்று தி.மு.க. பேச்சாளரானார்.

'சமநீதி' என்ற வாரப் பத்திரிகையை ஈரோடு சின்னசாமி நடத்தினார். அந்த பத்திரிகையைப் பொறுப்பேற்று நடத்தும் பொறுப்பை சோசலிஸ்ட் கட்சியின் எழுத்தாளராக இருந்த அரிய திறமையாளரான ஆர். சீனிவாசமூர்த்தி என்ற திருமாறனிடம் அவர் ஒப்படைத்தார்.

'சமநீதி' என்ற அந்த ஏடு மக்கள் திலகம் அணியானது. அதன் சார்பாக ஈரோடு சின்னசாமி, ஈரோடு சட்டமன்ற உறுப்பினரானார். அவர் நடத்திய சமநீதி என்ற பத்திரிகையை பிறகு எம்.ஜி.ஆர். உரிமை ஏற்று நடத்தினார்.

## 'புதிய பூமி' நாளேடு; நாஞ்சில் மணிமாறன்!

'மனோன்மணீயம்' என்ற காப்பிய நாடகத்தை எழுதிய பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, தனது நாடக

நாயகனான சேர மன்னன் என்ற வஞ்சி நாட்டான் கோபமாகக் கூறும் வசனம் ஒன்றை எழுதினார். 'வஞ்சியான் எவரையும் வஞ்சியான்' என்பதே அந்த வசனம்.

திரை உலகில் சிவாஜி கணேசன் புகுவதற்கு முனபு சிவாஜி கணேசனாக அனல் பறக்கும் வசனங்களைப் பொறி பறக்கப் பேசியவர் நடிகர் பி.யு. சின்னப்பா. அவர், 'வஞ்சியான் எவரையும் வஞ்சியான்' என்ற வசனத்தைக் கனல் தெறிக்க பேசும்போது அரியணை அதிருமாறு சினச் சீற்றத்துடன் பேசி, அந்த வசனத்தை ஓர் எரிமலை ஆக்குவார்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எழுதிய அந்த வசனத்தின் பண்புக்கேற்ப, நாகர்கோயில் நகரிலே பிறந்த நாஞ்சில் நாட்டவரான நாஞ்சில் நீ. மணிமாறன் என்ற சிறு வள்ளலான அவர், எவரையும் - எந்தநேரத்திலும், எந்தத் துறையிலும் வஞ்சியாதவர் மட்டுமன்று. வாரி வழங்கிய பறம்பு நாட்டரசரான பாரி வள்ளல் வாரிசைப் போல - வறுமையாளர் களை இன்முகம் காட்டி வரவேற்கும் திராவிடரியக்க வள்ளல் நாஞ்சில் மணிமாறன் ஆவார்.

இளம் வயது முதலே கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் பிறந்த நாகர்கோயில் மண்ணிலே பிறந்துவிட்டக் காரணத்தால், பிறந்ததற்காக வாழ்கின்ற வறுமைப் பிஞ்சுகளுக்கு சிவகெங்கை மன்னர் பாஸ்கர சேதுபதி, உலகம் போற்றும் விவேகானந்தர் அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகருக்குச் சென்று ஆன்மிக ஞான உரை ஆற்றி வேதாந்த கேசரி என்ற விருதைப் பெற்றிட வாரி வழங்கி வழி அனுப்பி வைத்ததைப் போல - நாஞ்சில் நீ. மணிமாறன் என்ற மனிதரும் புலவர்களுக்கு அள்ளியள்ளிக் கொடுத்துப் போற்றும் பண்பாளராக வாழ்பவராவார்.

அந்த மணிமாறன் அவர்கள், 'புதிய பூமி' என்ற நாளேட்டைத் துவக்கி, திராவிடரியக்கக் கொள்கைகளை வளர்த்தார். அறிஞர் அண்ணா தலைமையை இளம் வயதிலேயே ஏற்ற அவர், சென்னை நகர் வந்து செம்மொழி யாம் தமிழ்மொழிக்குப் 'புதிய பூமி' என்ற முத்தமிழ்க் கலைக் குழுவை உருவாக்கிக் கலை நிகழ்ச்சி நடத்தி இன்றும் முத்தமிழ்த்

தொண்டு புரிந்து வருகிறார். ஏறக்குறைய ஓர் ஐம்பதாண்டுக் காலமாகத் திராவிடரியக்கத் தொண்டுகளாற்றி வரும் ஒரு கலைஞராக நடமாடி, அரசியலில், கலையியலில் எவரிடமும் எதையும் எதிர்பாரா சத்தியச் சாட்சியாக வாழ்ந்து வருகிறார்!

*'மகரந்தம்'*
*மணிமொழி*

முரசொலி நாளேட்டில் ஏறக்குறைய 15 ஆண்டு காலமாக துணை ஆசிரியராகப் பணியாற்றிவர் கவிஞர் மணிமொழி. திராவிடர் இயக்கத்துள், குறிப்பாக பாவேந்தர் பாரதிதாசன் கவிதா மண்டலத்தில் ஒருவராக வாழ்ந்தவர்.

நாஞ்சில் மணிமாறனும், கவிஞர் மணிமொழியும் இரட்டைப் புலவர்களைப் போல இணைந்து, திராவிடர் இயக்க வளர்ச்சிக்குப் பத்திரிகைத் தொண்டு புரிந்தவர்களாவர்! ஆற்காட்டு சகோதரர்களான சர்.ஏ. இராமசாமி, சர்.ஏ. இலட்சுமணசாமியைப் போல, இயக்கக் கொள்கைகளைப் பட்டித் தொட்டியெலாம் ப்ாங்குடன் வளர, ஆடல் - பாடல், இசை - நாடகம் மூலமாகத் தொண்டு புரிந்து வந்த கலைச் சித்தர்கள் இந்த இருவர் என்பதைக் கலையன்பர்கள் அறிவர்.

கவிஞர் மணிமொழி, நாஞ்சில் மணிமாறன் இருவரும் இணைந்து 'மகரந்தம்' என்ற இலக்கியத் திங்கள் இதழை நடத்தினார்கள். கவிஞர் மணிமொழி காலமான பிறகும் திரு. மணிமாறன் அவர்கள் தனித் திறமையுடன் கலைத் தொண்டாற்றி வருகிறார். வாழ்க நாஞ்சில் மணிமாறன் தமிழ்த் தொண்டு!

*'தினகரன்'*
*கந்தசாமி*

'தினகரன்' என்ற நாளேட்டின் ஆசிரியராக, நிறுவனராக இருந்த கந்தசாமி அவர்கள், பத்திரிகைப் பணியால் திராவிடர் இயக்கத்துக்கு வந்து தொண்டாற்றி, கலைஞர் அவையில் மந்திரியாகவும் இருந்தார். இவரது உறவினரான சி.பா. ஆதித்தனார், அறிஞர் அண்ணா அமைச்சரவையில் சட்டப் பேரவைத் தலைவராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'தினகரன்' நாளேடு, முழுக்க முழுக்க திராவிடரியக்கக் கொள்கை வளர்ச்சிக்கான ஏணியாக இருந்து வருகிறது. எப்போதிலிருந்து? 1967-ஆம் ஆண்டிற்குப் பிறகு! எனவே, தினகரன் தின ஏட்டின் தொண்டு சாதாரணமானதன்று. தி.மு. கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை எந்த ஒரு தனிப்பட்ட பத்திரிகையும் 'தினகரன்' அளவுக்கு நன்றி விசுவாசத்துடன் தொண்டாற்றி யதில்லை.

பி.எஸ். இளங்கோ என்ற தி.மு.கழகத்தவர் 'மாலைமணி' என்ற நாளேட்டை நடத்தினார். அந்த ஏட்டில் 'எரியீட்டி' என்று வெளிவந்த கட்டுரைகள், காலையில் வரும் அரசியல் பகைக்கு மாலையிலோ, மறுநாளோ பதிலெழுதும் பழக்கம் இருந்தது. அந்தப் பழக்கம் வழக்கமானதும், கட்சி வளர்ச்சிக்கு அந்தக் கட்டுரைகள் பகைக்கு எரி நெருப்பாகிக் கட்சி வாசகர்கள் உள்ளத்தைக் கொதிக்க வைத்தன. அதனால், கட்சி வளர்ந்தது. தொண்டர்கள் உணர்ச்சிகளின் உருவங்களாக கட்சி அரசியலுக்குள் உழைத்தார்கள்.

அதனைப் போலவே, தினகரன் பத்திரிகையின் இரண்டாம் பக்கத்தில் எழுதப்படும் செய்திக் கட்டுரைகள், சட்ட விளக்கங்கள் அரசியல் வித்தக மற்றவர்களுக்கு அறிவுரையாக அமைந்தது ஒருபுறமிருக்க, மறுபுறம் உண்மையான கழகத் தொண்டர்களை ஊக்குவிக்கும் ஊற்றுக் கண்ணின் உண்ணீராகவே வேட்கை தீர்த்து வருகின்றது எனலாம்.

### ஜே.பி.ஆர்
### 'நீதியின் குரல்

திராவிடரியக்க முழுநேரத் தொண்டராக, அறிஞர் அண்ணா, கலைஞர், புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., வி.என். ஜானகி எம்.ஜி.ஆர். காலம் வரை உழைத்த ஜே.பி.ஆர். என்ற திராவிடரியக்க மாவீரர், இன்று கல்வியாளராக, வழக்குரைஞராக, கல்விக் கல்லூரிக் கோட்டங்களை நடத்தும் முதல்வராக உள்ளார் என்றால், இது திராவிடர் இயக்கத்துக்குக் கிடைத்த பெரும்பேறு அல்லவா?

சென்னை வால்டாக்ஸ் சாலையிலே இருந்த ஒற்றை வாடை நாடகக் கலையரங்கத்தில், 1962-ஆம் ஆண்டு வாக்கில்,

தத்துவமேதை என்று அழைக்கப்பட்ட டி.கே. சீனிவாசன் என்பவருக்கு நிதியளிப்பு விழா நடந்தபோது, 'இரயில்வே துறையில் திருச்சி சந்திப்பில், பொறுப்பான அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த நான், எனது வாழ்க்கையைக் கட்சியை நம்பிக் கெடுத்துக் கொண்டேன்' என்று டி.கே.சி. வருத்தமாகக் குறிப்பிட்டார்.

அறிஞர் அண்ணா அவர்கள் அவருக்குப் பதில் கூறும் போது, கட்சியை நம்பித் தனது வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டதாக இங்கே டி.கே. சீனிவாசன் குறிப்பிட்டார்.

ஒருவர் தனது வாழ்க்கையில் நாட்டு நலன் முன்னேற தொண்டாற்றுவது அவசியம்தான். அதைவிட முக்கியமானது வீட்டு நலன் என்பதையும் உணரவேண்டும். வீடு நன்றாக வாழ்ந்தால்தான் நாடும் வாழும், உயரும், நலன் பெறும்! நாட்டுக்காக உழைத்து வீட்டைக் கெடுத்துக் கொண்டேன் என்று கூறுபவன் எனது தம்பி அல்ல' என்றார்.

இதற்குப் பிறகுதான் டி.கே.சீனிவாசன் மாநிலங்கள் அவை உறுப்பினராக்கப்பட்டார். தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவன மேலாண்மை இயக்குநராகவும் ஆனார்.

அறிஞர் அண்ணா அவர்களது வாக்கை ஜே.பி.ஆர். வேத வாக்காக ஏற்றுக் கொண்டு, 'நீதியின் குரல்' என்ற நாளேட்டை திராவிடர் இயக்கத்துக்காக நடத்தினார். பிறகு செல்வர்களும் மதிக்குமளவிற்கு அன்னை சத்தியா என்ற பெயரில் கல்லூரி வகைகளை நடத்தி அவைகட்கு முதல்வராகவும் இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## Anna
## "Home Land"

அறிஞர் அண்ணா அவர்கள் 1962-ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க. சார்பாகப் போட்டியிட்ட வேட்பாளர்களில் 50 பேரை வெற்றி பெறச் செய்து சட்டமன்ற உறுப்பினர்களாக்கினார். காஞ்சிபுரத் தொகுதியில் அறிஞர் அண்ணா தோல்வி கண்டார். பிறகு தில்லி நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரானார்.

அந்த நேரத்தில் அண்ணா இங்லீஷ் வார இதழை நடத்த விரும்பினார். ஹோம் லேண்ட் (Home Land) 'Home Rule' என்ற பத்திரிகைகளை நடத்தினார். அற்புதமான அவரது ஆங்கில நடை கட்டுரைகள், வடநாட்டில் பெரிதும் பாராட்டுப் பெற்றன. அண்ணாவின் ஆங்கிலப் பத்திரிகைக்கு திருச்சி எம்.எஸ் வெங்கடாசலம், நாவலர் தம்பி. இரா. செழியன், எம்.பி. ஏ.எஸ். வேணு போன்ற கழக எழுத்தாளர்கள் துணை ஆசிரியர்களாகப் பணியாற்றினார்கள்.

## Sunday Observer

நீதிக் கட்சி எனப்படும் ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள பத்திரிகை ஆசிரியர்களுக்கு தமிழ்மொழியில் சரளமாகப் பேச, எழுத வராது. அவர்கள் தங்களது வீட்டுக் குள்ளேதான் தமிழைப் பேசுவார்கள். அத்தகையவர்களிலே ஒருவர் 'சண்டே அப்சர்வர்' என்ற இங்லீஷ் வாரப் பத்திரிகையின் ஆசிரியர் பி. பாலசுப்பிரமணியம் என்பவர். அவர் தில்லி நாடாளு மன்றத்துக்கு ஐக்கிய முன்னணி என்ற திராவிட இயக்கக் கூட்டணி சார்பாக டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் என்ற பெரும் தொழிலதிபரை எதிர்த்து 'புலி' பெட்டி சின்னம் சார்பாக நின்று தோற்றுவிட்டார். சண்டே அப்சர்வர் பாலசுப்பிரமணியம் . அறிஞர் அண்ணாவால் நன்கு மதிக்கப்பட்டவர். சிறந்த ஆங்கில பேச்சாளராகவும், எழுத்தாளராகவும், பத்திரிகை யாளராகவும் இருந்தார்.

## "Liberator" Krishnasamy

ஜஸ்டிஸ் கட்சியின் நிறுவனத் தூண்களில் ஒருவராக இருந்த சர்.ஏ. இராமசாமி முதலியார் அவர்களின் மூத்தமகன் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி பாரிஸ்டர்: 1942-ஆம் ஆண்டில் Liberator என்ற ஆங்கில நாளேட்டை ஆரம்பித்தார். 1952-ஆம் ஆண்டு வரை அந்த நாளேடு ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கை வளர்ச்சிக்காக உழைத்தது. டாக்டர் கிருஷ்ணசாமி, பத்திரிகை உலகில் தனது தந்தையைப் போலவே சிறந்த எழுத்தாளர் என்பதை மெய்ப்பித்தார்.

டாக்டர் கிருஷ்ணசாமி இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். பாரிஸ்டர் டாக்டர் கிருஷ்ணசாமி தில்லி நாடாளுமன்றத்தில் நுழையும்போது 'லிபரேட்டர்' பத்திரிகை ஆசிரியர் என்ற செல்வாக்கோடு நுழைந்து அரும்பணிகள் பல புரிந்தார்.

## டாக்டர் டி.எம். நாயர்
## Justice

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன், கெட்டிஸ்பர்க் எனுமிடத்தில் பேசிய அரசியல் சொற்பொழிவு உலகப் புகழ் பெற்ற பேச்சாகும். அந்த மேதை அங்கே ஆற்றிய உரை உலக ஜனநாயக ஆட்சிக்கு மூலவித்தாக, மக்களுக்காக, மக்களால் மக்களுக்கு நடத்தப்படும் அரசாக ஓர் அரசு அமைய வேண்டும் என்ற மக்களாட்சி உரிமைகளை அங்கே முழக்க மிட்டார். அதனால் அந்தப் பேச்சு உலகப் புகழ் பெற்றது.

ஆபிரகாம் லிங்கனைப் போலவே, நீதிக் கட்சியைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவரான டி.எம். நாயர், 1917-ஆம் ஆண்டில், சென்னை சேத்துப்பட்டு கூவம் ஆறு ஓடும் பகுதியிலே இன்றும் இருக்கின்ற ஸ்பர்டேங் ரோட்டின் திடல்' (Spurtank Road Speech) ஒன்றில் பேசினார். அந்த உரைக்கு ஸ்பர்டேங் உரை (Spurtank Spech) என்று பெயர்.

அந்தக் கூட்டத்தில் டாக்டர் டி.எம். நாயர் பேசும்போது சுதந்திரம் (Liberty), சமத்துவம் (Equality) சகோதரத்துவம் (Fraternity) என்ற முப்பெரும் அரசியல் தத்துவ விளக்கங்களை அப்பகுதியிலே வாழும் கல்விமான்களும், பாமரர்களும் கலந்து கொண்ட பெருங் கூட்டத்தில் விளக்கி அறிமுகப்படுத்தினார்.

டி.எம். நாயர் துவக்கிய இங்லீஷ் நாளேடான ஜஸ்டிஸ், நாயர் கூறிய கொள்கைகளைக் கடுகளவும் வழுவாமல், தனி மனிதர்களுக்கும், சமூகத்திற்கும் இடையே நடுநிலை தவறாமல், நீதியை நிலைநாட்ட, சமத்துவத்தை, சகோதரத் துவத்தை மக்கள் இடையே பரப்பிட அரும்பாடுபட்டது. அரசியல் உட்பகையால் ஜஸ்டிஸ் ஏடு பலம் சீரழிந்தது.

*சர்.ஏ. இராமசாமி*

**Justice Daily**

நீதிக் கட்சியில் தோன்றிய சில பலவீன சூழல்களால் நிறுத்தப்பட்ட டி.எம். நாயர், இராமன் பிள்ளை ஆகியோரைப் பதிப்பாசிரியராகக் கொண்ட ஜஸ்டிஸ் பத்திரிகை மீண்டும் 17.1.1927-ஆம் ஆண்டு சர்.ஏ. இராமசாமி முதலியாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்தது. அந்த நாளேட்டின் முதல் இதழில் 'நாம்' (ourselves) என்ற தலையங்கத்தை சர்.ஏ. இராமசாமி முதலியார் எழுதி, ஜஸ்டிஸ் கட்சியின் பலவீனச் சூழல்களை விளக்கினார்.

ஜஸ்டிஸ் நாளேடு, காங்கிரஸ் கட்சி கூறுவதைப் போல, வேற்று மண்ணுக்குரிய ஒவ்வாத செடி அல்ல (Exotic Plant) இந்த நாளேடு; ஒவ்வாத சூழ்நிலையால் வாடி வதங்காது என்று குறிப்பிட்டார் சர்.ஏ.ஆர். ஏறக்குறைய எட்டு ஆண்டுகள், 1935-ம் ஆண்டுவரைப் பத்திரிகைப் பணியை ஆற்றி விட்டு; அதை நடத்தும் பொறுப்பை டி.ஏ.வி. நாதன் என்பவரிடம் ''சக்தி வாய்ந்த பத்திரிகை ஜஸ்டிஸ்' என்று கூறி 1935-ஆம் ஆண்டில் விட்டுவிட்டு சென்றார்.

பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் அமைத்தப் போர்க் கால அமைச்சரவையில் (War Cabinet) ஒரு தமிழ்நாட்டுப் பத்திரிகை யாளர் முதன் முதல் இந்தியாவின் பிரதிநிதியாக இடம் பெற்ற புகழ் சர்.ஏ. இராமசாமி முதலியார் என்ற பத்திரிகையாளரையே சாரும்.

சர்.ஏ. இராமசாமி அவர்கள் ஜஸ்டிஸ் பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவத்தைக் கண்ட பிரிட்டிஷ் அரசு, 1948-ஆம் ஆண்டில், மார்ச் 29 அன்று ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாட்டுச் செய்தி சுதந்திர மாநாட்டில் U.N. Conference on Freedom of Information என்ற இந்தியத் தூதுக் குழுவின் தலைவராய் சர்.ஏ.ஆர். முதலியார் பங்கேற்றார்.

அந்த மாநாட்டில் சர்.ஏ.ஆர். உலக வல்லரசுகள் வியக்கும் வண்ணம் பேசினார். செய்தித் தாள்கள் சில நன்னெறி முறைகளை (Code of Ethics) வகுத்துக் கொண்டு செயல்பட

வேண்டும் என்று அவர் உரையாற்றினார். அவர் ஆங்கிலத்தில் உரையாற்றிய கருத்தின் சாரம் இது :

'மருத்துவத் தொழிலில் நன்முறையில் வகுக்கப்பட்ட சில நன்னெறிகள் உள்ளன என்பதை உலகம் அறியும். அவற்றை ஒழுங்குப்படுத்த மருத்துவக் குழு (Medical Council) ஒன்றுள்ளது. மருத்துவர்கள் தங்கள் நடைமுறையில் அந்த நெறிமுறைகளைப் பின்பற்றுகிறார்களா என்பதைப் பார்ப்பதும், அந்தக் குழுவின் பணியாகும்''

'இதைப் போன்றே வழக்கறிஞர் தொழிலிலும் சில நெறிமுறைகள் உள்ளன. கற்றறிந்தோர் தொழிலானர் பத்திரிகைத் தொழிலுக்கு (Journalism) அத்தகைய நெறிமுறைகளை வகுப்பதற்கான காலம் வந்து விட்டது என எதிர்ப்பார்ப்பது தவறா?''

''பத்திரிகைத் தொழிலில் ஈடுப்பட்டுள்ள என் நண்பர்கள் இப்பொழுது சங்கங்கள் அமைத்துச் செயல்படுகிறார்கள். அதற்கு மேலும் அவர்கள் சற்று உயர்ந்து சென்று தங்களுக்கெனச் சில நெறிமுறைகளை வகுத்துக் கொள்வது இயலாத காரியமா? எனக் கேள்வி மேல் கேள்வி கேட்டார்...' சர்.ஏ.ஆர். முதலியார்.

'நன்முறையில் கற்றுத் தேர்ந்த, பண்பாடும் பரந்த நோக்கமுமுடைய பத்திரிகையாளர்கள் குழாம் ஒரு நிறுவனத்தை அமைத்து அதன் மூலம் தங்களின் நடத்தையை ஒழுங்குப்படுத்திக் கொள்ள இயலும் என நான் நம்புகிறேன்''. - என்று டாக்டர் சர்.ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் தனது ஜெனிவா சொற்பொழிவின் இறுதியில், தான் ஒரு சமாதானத் தூதர் என்பதை விளக்கினார்.

''போர் தவிர்க்க இயலாது என நான் நம்புவதற்கில்லை. மனிதனின் பொது அறிவு போரை அனுமதிக்காது. இத்தகைய மாநாடு போர் நிகழா வண்ணம் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்'' என்ற கருத்தையும் ஏ.ஆர். முதலியார் அந்த மாநாட்டில் வலியுறுத்தி முழக்கமிட்டார்.

(- டாக்டர் ஏ.இராமசாமி முதலியார் ஜெனிவா மாநாட்டின் பேச்சு - ''இணையிலா இரட்டையர் வாழ்க்கை வரலாறு'' என்ற நூலில்)

## டாக்டர் ஏ.ஆர்.முதலியார் பேச்சின் எதிரொலி!

ஜெனிவா மாநாட்டில் பத்திரிகையாளர் உரிமைகளை, நலன்களைப் பற்றி விரிவாக உரையாற்றியக் கொள்கையை மாநாடு ஏற்றுக் கொண்டது. மாநாட்டில் உணர்ச்சிக் கொந்தளிப்புகள் உருவெடுத்தன. என்றாலும், பத்திரிகையாளர் களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே பொதுவான ஒழுக்க நடத்தைகளை, மரபினை (Standard of Conduct) சிறப்பான முறையில் ஜெனிவா மாநாடு வரையறுத்துச் செய்தது.

மாநாட்டிற்கு முன்பு சர்.ஏ.இராமசாமி முதலியார், இலண்டனில் தங்கியிருந்தார். அப்போது பத்திரிகையாளர்கள் சிலர், ஆர்க்காட்டாரைச் சந்தித்தார்கள். அவர்களில் ஒரு பத்திரிகையாளர் நமது இராமசாமி முதலியாரிடம், 'இந்தியத் தூதுக் குழுவின் தலைவராகப் பத்திரிகையாளர் சந்திக்கின்ற ஜெனிவா மாநாட்டில் கலந்துகொள்ள உமக்கு என்ன தகுதி இருக்கிறது'? என்று கேட்டு விட்டார்! காரணம், அந்த இலண்டன் நிருபருக்கு டாக்டர் சர்.ஏ. இராமசாமி முதலியார் யார்? எப்படிப்பட்டவர்? தூதுக் குழுவின் தலைவராவதற்கு முன்பு அவர் என்ன பணி செய்தவர்? என்பதை எல்லாம் அந்த நிருபர் அறியாததால் அப்படிக் கேட்டு விட்டார்.

''இந்தக் கேள்வியை நீங்கள் எங்களுடைய அரசைக் கேட்டிருக்க வேண்டும்' என்று கூறிய டாக்டர் இராமசாமி முதலியார், பிறகு ஜஸ்டிஸ் ஆங்கில நாளேட்டில் தான் எட்டு ஆண்டுகள் பதிப்பாசிரியராகப் பணியாற்றியதையும் குறிப்பிட்டார்.

அடுத்து ஒரு நிருபர், 'ஜெனிவா மாநாடு எப்படிப்பட்ட முடிவை எடுக்க இருக்கிறது?' என்ற வினாவை விடுத்தார்.

அதற்கு, டாக்டர் ஏ.ஆர். முதலியார் பதில் கூறும்போது, 'பத்திரிகையாளர் சுதந்தரமாக இருக்க வேண்டுமானால், சில கட்டுப்பாடுகளை ஏற்றுத்தான் ஆக வேண்டும். (To be free you must accept chains) என்று அறிவுரை கூறிய அவர், செய்தித் தாள்கள் மீது திணிக்கப்படும் கட்டுப்பாடுகளை டாக்டர் இராமசாமி முதலியார் வரவேற்றார். ஆனால், அவற்றின்

பதிப்பாசிரியர் ஆற்றுகின்ற பணிகள் மீது உரிமையாளர்கள் குறுக்கீடுகள் எதுவும் இருக்கக் கூடாது. குழலிசை வாணர்களுக்குப் பணம் கொடுக்கலாம். ஆனால், இந்தப் பாட்டுதான் பாட வேண்டும் என்று கட்டளை போடக் கூடாது (The piper may be paid - but the tune must not be dictated) என்று கூறினார் அவர்.

டாக்டர் ஏ. இராமசாமி அவர்கள், 1957-ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் செங்கற்பட்டு நாடாளுமன்ற தொகுதியில், தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட்ட பாரிஸ்டர் ஏ. கிருஷ்ணசாமியை ஆதரித்தும், காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட ஓ.வி. அழகேச முதலியாரை எதிர்த்தும் தேர்தலில் பேசுவதற்கு செல்ல நேரிட்டது.

அந்த எம்.பி. தொகுதிக்கு உட்பட்ட காஞ்சிபுரம் சட்ட மன்ற தொகுதியில் முதன் முதலாக அறிஞர் அண்ணா போட்டி யிடுகிறார். அந்தத் தேர்தலில்தான், 'அரியலூர் ரயில் விபத்தை யும், அதனால் மக்கள் மாண்டதையும் சுட்டிக் காட்டி மக்களிடம் வாக்குகள் கேட்கும் வகையில், "அரியலூர் அழகேசரே ஆண்டது போதாதா? மக்கள் மாண்டது போதாதா?" என்ற சுவரொட்டிப் போர் நடந்து கொண்டிருந்த நேரம் அது.

அரசியல் மேதை டாக்டர் ஏ. இராமசாமி அவர்கள் சொற் பொழிவைக் கேட்க மக்கள் வெள்ளம்போல திரண்டிருந் தார்கள். அந்தக் கூட்டத்தில் ஆர்க்காட்டார் இங்லீஷில் ஆற்றொழுக்காக, அற்புதமாக உரையாற்றியதை அறிஞர் அண்ணா அவர்கள் மொழி பெயர்த்தார். 1935-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் தனது கல்வியை முடித்த பின்பு டாக்டர் சர்.ஏ. இராமசாமி முதலியார் உரைகளின் மொழிப் பெயர்ப்பாளராகவே தமிழ்நாட்டு அரசியலில் முதன் முதலாகக் காலடி வைத்தவர்.

ஆர்க்காட்டார் அண்ணாவிடம் அன்பும், மரியாதையும் அளவிற்கதிகமாகவே பாராட்டினார். அண்ணாவும் அவரைத் தனது அரசியல் ஆசானாகவே இறுதிவரை மதித்தார். அண்ணா 1967-ல் தமிழ்நாட்டு முதல் அமைச்சர் ஆனபோது, டாக்டர் ஏ.ஆர். முதலியார் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்து மாலை சூட்டி அவருக்குத் தனது நன்றியை உணர்த்தினார்.

சென்னை மாநகரில் இன்றும் காட்சி தந்து கொண்டிருக்கும் மவுண்ட் ரோடு (அண்ணா சாலை) அண்ணா சிலையை யார் திறப்பது என்று சர்ச்சை ஏற்பட்டபோது, அறிஞர் அண்ணா அந்த சிலையை டாக்டர் சர்.ஏ. இராமசாமி தான் திறக்க வேண்டும் என்றார். அறிஞர் அண்ணா சிலையை சர்.ஏ.ஆர். முதலியார் திறந்து வைத்து, அண்ணாவின் தனித் திறமைகளை, அரிய பண்புகளைப் பாராட்டிப் பேசிய காட்சியை இலட்சக்கணக்கான மக்கள் கண்டு, கேட்டு மகிழ்ச்சிப் பெற்றார்கள். ஒரு பத்திரிகையாளர் சிலையை, மற்றொரு பத்திரிகையாளர் திறந்து வைத்தக் காட்சியை இலட்சக்கணக்கான மக்கள் கண்டு களித்தார்கள்.

# 8

# தற்கால - கட்சி சார்பற்ற தமிழ்ப் பத்திரிகைகள்

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, பத்திரிகைகள் நடத்த விரும்புவோர், அவரவர் எண்ணங்களுக்கு ஏற்றவாறு 'நடுநிலை' இதழ்கள் என்ற பெயரிலே தினசரி, வாரம், திங்கள், மும்மாத இதழ்கள், ஆண்டு மலர்கள், வாரம் இருமுறை ஏடுகள், மாதம் இருமுறை இதழ்கள் என்று ஏராளமான பத்திரிகைகள் வெளிவருவதும், பொருளாதார நெருக்கடிகளால் அவை நின்றுபோவதுமாக இருக்கின்றன.

புது தில்லியிலே உள்ள பத்திரிகைத் தாட்கள் வழங்கும் அலுவலகத்திலே பணியாற்றும் நாராயணசாமி நாயர் என்ற அதிகாரியிடம் நான் ஒரு முறை தாள் கோட்டா பற்றி உரையாடி விவரம் அறிந்தபோது, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 356 பத்திரிகைகள் வெளிவருவதாகக் கூறினார். அந்த விவரம் ஒரு வணிக நோக்கு என்பதால் அவ்வளவு பத்திரிகைகள் வெளிவருவதாக அவரது புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

## நாளேடு

**வகைகள் :**

மதுரை மாநகரிலே இருந்து வெளிவந்த 'தமிழ் நாடு' என்ற பத்திரிகையைக் கருமுத்துதியாகராச செட்டியார் உண்மையான

தமிழ் வளர்ச்சிப் பற்று நோக்கோடு நடத்தினார். நல்ல நோக்கத்திற்குத் தான் சமுதாயத்தில் வரவேற்பு அதிகமிருக்காதே! அதனால், அந்த தமிழ்நாடு இதழ் நின்றுபோய், பிறகு வார இதழாக வெளிவந்து, இறுதியில் அதுவும் நிறுத்தப்பட்டு விட்டது.

பண நெருக்கடியா செட்டியாருக்கு என்றால், அவர் ஒரு பெரும் தொழிலதிபர் ஆவார்! தமிழர்களிடையே தமிழ்ப் பற்றுக்கு எவ்வளவு மரியாதை இருக்கிறது என்பதை அவர் முழுமையாக உணர்ந்த பிறகு அந்த நாளேட்டையும், வார இதழையும் நிறுத்திவிட்டார் - பாவம்!

கோவை நகர்
'நவ இந்தியா'

கோவை மாநகரில் இருந்து 'நவ இந்தியா' என்ற ஒரு நாளேட்டை இராமகிருஷ்ணன் என்பவர் நடத்தினார். பிறகு தலைநகரமான சென்னை மாநகருக்கு அந்தப் பத்திரிகையை இடம் மாற்றிப் பார்த்தார்! என்ன செய்வது? பெரும் செல்வச் சீமானான அவரும் அதை நிறுத்திவிட்டார்! தமிழ் மக்கள் இடையே நல்ல வரவேற்பு இருந்தால் மட்டும் போதுமா? பத்திரிகைகள் பரவலாக விற்பனையாக வேண்டுமே!

'நவ சக்தி'
தனுஷ்கோடி

தமிழ்த் தென்றல் என்று தமிழ் மக்களால் மதித்துப் போற்றப்படும் திரு.வி.க. அவர்கள் 'நவசக்தி' என்ற வார இதழைத் துவக்கினார். வெற்றிகரமாகத்தான் நடத்தினார்!

அவருக்குப் பிறகு முருக-தனுஷ்கோடி என்ற தேசியவாதியால் பெருந்தலைவர் காமராசர் ஆதரவோடு காங்கிரஸ் கட்சிக் கொள்கைகளைச் சுமந்த நாளேடாக வெளிவந்து கட்சித் தொண்டு செய்தது. அதற்குப் பிறகு அதுவும் நின்றுவிட்டது.

மதுரைநகர்
'மதுரை மணி'

மதுரை மாநகரிலே இருந்து நடுநிலை என்ற தகுதியோடு 'மதுரை மணி' என்ற நாளேடு துவங்கப்பட்டது. பொதுமக்கள் இடையே பரவலாக அந்தத் தினசரி இதழ் விற்பனையாகும் வாய்ப்பு இல்லை. என்றாலும்,, இன்றும் அது தொடர்ந்து வந்து கொண்டுதான் இருக்கிறது.

திருச்சி, சென்னை
'தின மலர்' தினசரி!

'தின மலர்" என்ற நாளேடு முதன் முதலில் திருச்சி மாநகரிலே இருந்து வெளிவந்தது. அதன் உரிமையாளர் இராம. சுப்பையர் தினத்தந்தி நாளேட்டுக்குப் போட்டியாக விற்பனையாவதற்குக் கடுமையாக உழைத்து வெற்றி பெற்றார். அந்த வெற்றியின் விறுவிறுப்பு, திருநெல்வேலி மாநகரிலும் அதே தின மலர் மாவட்டப் பத்திரிகையாக வெளிவந்து அவை பரபரப்பாக விற்பனையாக அய்யர் வழிகாட்டி விட்டார். இன்று அந்த தின மலர் நாளேட்டை அவரது செல்வன் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பொறுப்பேற்றுப் பல நகரங்களிலே மாவட்ட நாளேடாகவும் பதிப்பித்து நடத்தி வருகிறார். சென்னை மாநகரிலே தினமலர் விற்பனை நாளேடாக மக்கள் எதிர்பார்ப்போடு சுறுசுறுப்பாக இயங்கி வருகின்றது. இராம சுப்பைய்யரிடம் தினமலர் என்ற நாளேடு அன்று தாளுண்ட நீரின் உழைப்பு; இன்று தமிழ் மக்களுக்குத் தலையாலே தந்து பத்திரிகைத் தாகவேட்கையைத் தணித்து வருகின்றது.

ஆதித்தனாரின்
'தினத்தந்தி'

பாரட்லா சட்டப் படிப்பை இலண்டன் மாநகரிலே முடித்துக் கொண்டு சிங்கப்பூர் வழியாக சென்னை மாநகர் வந்த சி.பா. ஆதித்தினார், பாமரனுக்கும் பத்திரிகை படிக்கும் ஆசையை உருவாக்கிய பத்திரிகை உலகத் தந்தையாக சிறந்து ஓங்கி வளர்ந்தார்.

தினத்தந்திக்கென்று அவர் ஒரு பாமரர் தமிழை உருவாக்கிய சிற்பியாகத் திகழ்ந்தார்! மக்கள் பேசும் தமிழில் கொச்சை ஒலி நீக்கி எழுதுவதுதான் 'தினத்தந்தி' தமிழ் என்பதை அவர் நிரூபித்துக் காட்டினார். தினந்தோறும் காலையில் பல லட்சம் மக்களுடன் அவர் தினத்திந்தி மூலமாகப் பேசும் வியாபார விற்பனைத் தொடர்பை உருவாக்கிக் காட்டினார். ஏழை மக்கள் அனைவரும் எழுத்துக் கூட்டியாவது தினத் தந்தி நாளிதழைப் படிக்க வைக்க வேண்டும் என்ற செயற்கரிய முயற்சியை அவர் செய்துகாட்டி; அனைவரையும் அந்தப் பத்திரிகையை வாங்கிப் படிக்க வைத்தவர் ஆதித்தனார்!

''இலக்கியம் படிக்க ஆசைப்படுபவன் 'தினமணி' படிக்கட்டும்! அன்றாட வாழ்க்கை இலக்கியம் படிக்க நினைக்கும் பாமரன் 'தந்தி' வாங்கிப் படிக்கட்டுமே'' என்ற சிந்தனையிலே வெற்றி பெற்றவர் ஆதித்தனார்.

'தினத்தந்தி' வெற்றிச் சிகரத்தின் ஒளி விளக்கான பிறகு, அதே ஏழை பாமரர்களை மாலையிலேயும் படிக்க வைக்கும் பத்திரிகை வேட்கையை 'மாலைமுரசு' என்ற நாளேடு மூலம் உருவாக்கி, அதிலும் அவர் வெற்றி பெற்றார்.

நாளேடுகளில் அரிய பெரிய வெற்றி பெற்ற ஆதித்தனார், 'வாராந்தரி ராணி' என்ற வாரப் பத்திரிகையைத் துவக்கி, அதைக் குடும்பம் குடும்பமாகத் தமிழ் மக்கள் வாங்கிப் படிக்கும் பழக்கத்தை வழக்கமாக்கிவிட்டார்.

நாளாயிற்று, வாரமாயிற்று, மாதாந்திற்குரிய கல்வித் தொண்டு ஏதாவது செய்ய வேண்டாமா? என்ற சிந்தனைக் கனியாகப் பழுத்ததுதான் 'இராணி முத்து' என்ற அவரது திங்கள் கதை வெளியீடுகள்!

இவ்வாறு தமிழ் நாட்டு மக்களைத் தினந்தோறும் காலையிலும் - மாலையிலும் வார, தினங்களிலும், மாத நாட்களிலும் பத்திரிகைகள் வாயிலாக வாழ்க்கைச் செய்திகளைப் படிக்க வைத்த பத்திரிகையாளர் யார்? 'நாம் - தமிழர்' என்ற பாசபந்த உறவை நாட்டிய ஆதித்தனாரைத் தவிர?

## பொதுஉடைமை கட்சி "தீக்கதிர்"!

'தீக்கதிர்' என்ற கம்யூனிஸ்ட் கட்சி நாளேடு, பாட்டாளி மக்கள்; தொழிலாளர் தோழர்கள்தம் வாழ்க்கைக்குரிய நலன்களுக்காகத் தீச்சுடரொளிகளை ஆதிக்கவாதிகள் மீது உமிழ்ந்து உழைத்து வெற்றி கண்டு வரும் பொதுவுடைமை ஏடாக பவனி வருகிறது. அதன் ஆசிரியர் அகத்திலிங்கம் பன்னூலுணர்ந்த புலமையாளர் மட்டுமல்ல; அரசியல், இலக்கியம், வரலாறு ஆய்வுக் கருத்துக்களைக் கட்டுரைகள் வாயிலாக அள்ளியள்ளி வழங்கும் அறிவு தாதா! மார்க்ஸ் மரபாளர்! ஜீவாவின் வாழையடி வாழையாக வந்த பத்திரிகை வாரிசு! சிறந்த பொதுவுடைமைக் கருத்துக்களை 'தீக்கதிர்' மூலமாகக் கொள்கை ஒளியேற்றி வழிகாட்டும் பண்பாளர் அவர்!

## வருமானம் திரட்டும் பத்திரிகை வகைகள்!

"குமுதம், குங்குமம், வண்ணத் திரை, முத்தாரம், அமுதசுரபி, கலைமகள், கல்கி, விகடன்" போன்ற பருவ இதழ்கள், பிறர் எழுத்தில் வாழும் பத்திரிகைகள். தனி மனித பல்சுவை விருந்தாற்றல் இந்தப் பத்திரிகைகளுக்கு இல்லாவிட்டாலும், பெண்கள் தலை அழுக்கில் உயிர் வாழும் பேன்களைப் பெருமாளாக்கி, அவைகட்கு விழாக்கள் எடுத்து உயிர் வாழும் பணம் திரட்டிகள்; கூடுமானவரை ஓரினத்திற்காகவே கதை திரட்டிகள்; எப்படியாவது வருமானம் வந்தால் போதும் என்பதற்காகவே சினிமா நடிகைகளை நம்பி வாழ்ந்து வரும் பத்திரிகைகள். பருவ ஏடுகளது பெண்ணாள் களைப் பற்றிப் பாவேந்தர் பாரதிதாசன் "பத்திரிகை" என்ற தலைப்பில் பாடிய ஒரு பகுதி இது. படித்துப் பாருங்கள்!

"சிறுகதை ஒன்று சொல்லிப்
பெருமதி யூட்டும் தாளே!
அறைதனில் நடந்த வற்றை
அம்பலத் திழுத்துப் போட்டுக்

கறையுளம் தூய்மை செய்வாய்!
களைப்பிலே ஊக்கம் பெய்வாய்!
நிறைபொருள் ஆவாய் ஏழை
நீட்டிய வெறுங்க ரத்தே

- ஏழைகள் பணத்தை எப்படி எல்லாம் பெறலாம்; அவர்களை வெறுங் கையர்கள் ஆக்கலாம்; அதற்காக எவ்வாறெலாம் எழுதலாம் என்ற கலைகளுக்குரிய ஏடுகளே மேலே உள்ளவை எல்லாம்! அந்த பத்திரிகைகளால் ஏழை அறிவா உயரும்? விற்பனைதான் பெருகும்; விலைதான் உயரும். இருபாலரும் பெருமை பெறார்.

விந்தன்
'மனிதன்'

'கல்கி' பத்திரிகையிலும், 'தினமணி' கதிர் இதழிலும் ஆசிரியர் பொறுப்பிலே பணிபுரிந்த கோவிந்தன் எனப்படும் விந்தன், 'மனிதன்' என்ற இதழை நடத்தினார். அவர் என்ன சினிமா பெண்களை அட்டையில் அச்சடித்தா தனது பத்திரிகை விற்பனையைப் பெருக்கினார்?

கோவிந்தன் மனிதர், புனிதர், மக்கள் அறிவை வளர்த்து வளமாக்கிட; 'மனிதன்' இதழை நடத்தி, ஒவ்வொரு பக்கத்தையும் வாழ்வியல் இலக்கிய ஊற்றுக் கண்களாக்கிடும் இதழியல் சிற்பியாகத் திகழ்ந்தார், குறை கூற முடியுமா அவர் 'தினமணி கதிர்', மனிதன் பத்திரிகை வேளாண் அறுவடைகளை?

பகீரதன்
'கங்கை'

'கல்கி' பத்திரிகையிலே துணை ஆசிரியர் பணி புரிந்தவர்தான் பகீரதன்! அவர் ஆசிரியராக இருந்து நடத்திய இதழ்தான் கங்கை! கங்கை நீருக்கு ஆன்மீக உலகில் என்ன மரியாதை உண்டோ, மதிப்புண்டோ, அவ்வளவு மதிப்பு கங்கை இதழுக்கும் கற்றவர்கள் இடையே இருந்தது. பகீரதன், விந்தன் இலக்கிய ஆய்வுகளை, கட்டுரைகளைப்

படித்தவர்களுக்குத் தெரியும் - அவர்களது எழுத்துக்களின் அற்புத அருமைகள்!

பகீரதன் 'ஓம் சக்தி' என்ற பத்திரிகையிலும் கட்டுரைக் கொடை செய்தவர்தான்! கூற முடியுமா குறை அந்தக் கட்டுரைகளை? உண்மையான பத்திரிகையாளர்களாக ''மக்கள் இடையே அறிவு உலா வந்த ஏழை எழுத்தாளர்களாகவே மாண்டவர்களாவர்!

'கலைமகள்'

கி.வா. ஜ!

'கலைமகள்' என்ற இலக்கியப் பத்திரிகையை கி.வா. ஜகன்னாதன் ஆசிரியராக இருந்து நடத்திய காலம் வரை, வெறும் இலக்கியம், கவிதை, வரலாறு, ஆன்மிகம் கருத்துக்களை உடையதாக நடத்தப்பட வில்லை. ஆராய்ச்சிகளையே அந்த இதழ் அரியணையாகக் கொண்டு இலக்கிய உணர்வாளர்களைக் கோலோச்சியது என்றால் மிகையன்று.

சேக்கிழார் பெருமானுடைய திருத்தொண்டர் மாக்கதையை கி.வா.ஜ. ஆராய்ச்சி செய்த கோணம் - நேர்க்கோணம். நீள் சதுரமிட்ட சதுரர் கி.வா.ஜகன்னாதன். அவரால் நடத்தமுடியாதா - 'குங்குமம், குமுதங்களை?'. எனவே, கலை மகள் ஏடு ஓர் இலக்கிய ஊட்டி; கவிதைக் கொண்டைக்கானல்; ஆன்மிகத் திருச்செந்தூர்! கடலழகுக் காட்சிகளே அதன் கோலம் எனலாம்!

'அமுத சுரபி'

விக்ரமன்

வரலாற்று எழுத்தாளர்களில் தென்றலென விளங்கும் திரு. விக்ரமன் அவர்கள், 'அமுத சுரபி', மாத இதழுக்கு ஆசிரியராக இருந்தார். அந்தப் பத்திரிகை மணிமேகலை அட்சய பாத்திரம் போல கலை, இலக்கியக் காட்சிகளைத் தந்தது. பல ஏழை எழுத்தாளர்கள், எழுத்தர்கள் பசிப் பிணிகளை அது நீக்கியது. அதற்கொப்பவே, 'அமுத சுரபி' ஏடதனில், கற்றார் போற்றும் வண்ணம் அமுதக் கருத்துக்களைத் திங்கள்தோறும்

சுரந்து கொண்டே வாரி வழங்கியது. விக்ரமன் ஆண்டாண்டாக வெளியிட்ட அமுத சுரபி, தீபாவளி மலர்ச் சோலைத் தோட்டங்களுக்கு ஈடாகுமா குமுதம், குங்குமம் தமிழ் தொண்டுகள்? பருவ இதழ்கள் என்றால் பணம் பண்ணும் சிலந்தி வலைக் காட்சிகளா வாசகர்களை சிக்க வைக்க? இவையெலாம் பத்திரிகைத் தொண்டுகளில் அறிவூட்டும் அறமன்று; காலத்திற்கேற்ப காசு தேடும் திறம்! தரம்! ஆகும்!

### 'விகடன்' குடும்ப பத்திரிகைகள்

ஜெமினி ஸ்டுடியோ எஸ்.எஸ்.வாசன், 'ஆனந்த விகடன்' பத்திரிகையை நடத்திக் காட்டி வெற்றி பெற்றவர். அந்த விகடன் இதழ் குடும்பத்துள், 'சக்தி விகடன்', 'அவள் விகடன்', 'சுட்டி விகடன்' என்ற பத்திரிகைகள் வெளிவந்து விற்பனையாகின்றன. மக்களுக்கு இந்த இதழ்கள் என்ன தொண்டாற்றுகின்றன என்பதை விகடன் குடும்பத்தைத் தான் கேட்க வேண்டும். ஆனால், பண வருவாய்க்குத் தொண்டு செய்கின்ற அந்த பத்திரிகைகளைப் பாராட்டலாம். அதுவும் பணம் தேடும் படலத்திற்குரிய ஒரு வருவாய்க் கலையூற்றுக் கண் தானே!

### திருச்சி நகர் 'குறள் மலர்'

திருச்சி பாலக் கரை பகுதியிலிருந்து குறள் மலர் என்றொரு வாரப் பத்திரிகையை திருக்குறள் வீ. முனிசாமி, பி.ஏ.,பி.எல்., நடத்தி வந்தார். திராவிடரியக்க நேரடித் தொடர்பில்லாத் திருக்குறளார், தந்தை பெரியார் சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட சிந்தனையாளர். 1952 தேர்தலில் தினமணி பத்திரிகை உரிமையாளர் இராமநாத் கோயங்காவை வன்னியர் கட்சி வேட்பாளராக திண்டிவனம் நாடாளுமன்றம் தொகுதியில் தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட்டு இலட்சம் ஓட்டு வித்தியாசத்தில் தோற்கடித்தவர். மிகச் சிறந்த நகைச் சுவைப் பொழிவாளர். அவரிடத்தை இன்றுவரை நிரப்புவாரில்லை!

## மகாலிங்கம்
## 'ஓம் சக்தி'

பொள்ளாச்சி தொழிலதிபர் டாக்டர் நா. மகாலிங்கம் 'ஓம் சக்தி' என்ற இதழுக்கு கெளரவ ஆசிரியராக இருப்பவர். 'கல்கி' துணை ஆசிரியராக இருந்த பகீரதன் ஓம் சக்தி ஆசிரியர் குழுவில் பணிபுரிந்தார்.

டாக்டர் மகாலிங்கம் சிறந்த எழுத்தாளர், தேர்ந்த இலக்கிய ஆராய்ச்சியாளர், அருமையாகப் பேசும் ஆற்றலுடையவர். தமிழ் மொழி வளர்ச்சி, ஆன்மிக ஆய்வு, வரலாற்று ஆய்வு, மொழி ஆய்வு நோக்கு; ஆகிய எல்லாச் சிறப்புகளையும் பெற்ற தமிழ்ப் பண்பாளர். சிறந்த எழுத்தாளர்! கற்றவர்களுக்கு கற்கண்டு கட்டுரை வழங்குபவர்!

''ஓம் சக்தி'' பத்திரிகையில் தனது ஆராய்ச்சி முடிவுகளை, சீரிய சிந்தனை வெளிப்பாடுகளைத் தொடர்ந்து எழுதி வரும் திறமையாளர். ஆசிரியர் பகீரதன் ஓம் சக்தியில் தொடர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சிக் கருத்துக்களை எழுதியவர். ஓம் சக்தி இதழில் ஆன்மிக கட்டுரைகள் வெளிவருவதோடு, சிறப்பாக, வள்ளல் பெருமானைப் பற்றிய அரிய சிந்தனைகளும் இடம்பெறுகிறது. மேல் நாட்டு இலக்கிய மொழி பெயர்ப்புகள், அறிவியல் அறிஞர்கள் வரலாறு; சிந்தனைக்குரிய சிறந்தக் கட்டுரைகள், வேதாத்திரி மகரிஷியின் தத்துவ ஆராய்ச்சிகள் அனைத்தும் ஓம் சக்தியில் இடம் பெற்ற அறிவுச் சோலையாக மணக்கும் இதழாகும்.

## சிலம்புச் செல்வரின்
## 'செங்கோல்; தமிழ் முரசு'

தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர்களிலே ஒருவராக உருவானவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம். இராஜாஜியின் கருத்தை ஆதரிப்பவர். ம.பொ.சி. சிறந்த நாவன்மை பெற்றவர். அவர் பேசும் மேடையில் எதிர்கட்சிக் காரன் கேட்கும் வினாவை இவரே கேட்டு, அதற்கு அவரே பதிலளிக்கும் பாணி ம.பொ.சி. மேடை பேச்சு பாணி! இதுவரை

200 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ள பல்சுவை இலக்கியச் சிந்தனையாளர்.

அகில இந்திய தேசியக் காங்கிரஸ் இயக்கம் நடத்திய போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்று தியாகம் புரிந்தவர். தமிழ்ப் பற்றுடையவர். சிறந்த எழுத்தாளர். நாடு சுதந்திரம் பெற்ற பின்பு, காங்கிரஸ் இயக்கத்தை விட்டு வெளியேற்றப்பட்ட ம.பொ.சி. தமிழரசுக் கழகம் என்ற ஒரு கட்சியைத் துவக்கிச் சிறப்பாகவே நடத்தினார்.

தனது கட்சி வளர்ச்சிக்காக 'செங்கோல்', 'தமிழ் முரசு' என்ற இரண்டு வாரப் பத்திரிகைகளை ஒன்றன் பின் ஒன்றாக நடத்தி வந்தார். இரண்டுக்கும் அவரே ஆசிரியர்.

சுதந்திரம் பெற்ற பிறகு வட எல்லை போராட்டத்தை அவருடைய தமிழரசுக் கழகம் சார்பாக நடத்திச் சிறை சென்றார். திருத்தணி நகரமும், அதைச் சுற்றியுள்ள சில தமிழ் மக்கள் அதிகமாக வாழும் கிராமங்களும், ம.பொ.சி. நடத்திய போராட்டத்தால் தமிழ் நாட்டுக்குக் கிடைத்தவையே. மொழிவாரி மாநிலம் பிரிக்கப்பட்ட போது, படாஸ்கர் குழு ம.பொ.சி. போராட்டத்தைக் கவனத்தில் கொண்டு மத்திய அரசு பரிந்துரைத்ததை பெற்றுக் கொண்டு அதற்கு அனுமதியும் அளித்தது. அதனால், திருத்தணி தமிழ்நாட்டின் வட எல்லையானது. திருப்பதி ஆந்திரருக்கு போனது.

ம.பொ.சி.யின் முயற்சியால், வீர பாண்டியக் கட்டபொம்மன் விடுதலைப் போர் வீரனானான். அவன் கதை திரைப் படமானதற்கும் ம.பொ.சி.தான் முதல் காரணம். கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. தியாக வரலாற்றைத் திரைப்படமாக்கிட ம.பொ.சி.யின் தமிழ்ப் பற்றே காரணமாகும். இரண்டு திரைப் படங்களிலும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனே கட்டபொம்மனாகவும், வ.உ.சி.யாகவும் நடித்தார்.

தமிழரசுக் கழகம் கலைக்கப்பட்ட பிறகு ம.பொ.சி., தி.மு.கழகத் தேர்தல் சின்னமான உதய சூரியன் சின்னத்தில் சென்னை மயிலாப்பூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஒரு பத்திரிகையாளர் சென்னை சட்டமன்ற

மேலவைத் தலைவராக பதவி பெற்றார் என்றால், அது பத்திரிகைத் துறைக்கும் பெருமை அல்லவா?

## பத்திரிகையாளர் சங்கம் நடத்தும் - "தமிழ்த் தென்றல்"!

"எந் நாட்டும் இல்லாத இந் நாட்டுத் தென்றலே! வாழ்க"! என்றார் பாவேந்தர் பாரதிதாசன்!

'தென்றல்' என்றால் சிலருக்கு கவிஞர் கண்ணதாசன் நடத்திய பத்திரிகை பெயர் தான் நினைவிலே ஊஞ்சலாடும்!

தமிழ்த் தென்றல் என்றால், திரு.வி.க.விற்கு தமிழ் அன்பர்கள், பண்பர்கள் கொடுத்த விருது ஆயிற்றே என்ற ஊற்று நீரிலே தமிழர் நீராடுவர்.

ஆனால், தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் நடத்தும் 'தமிழ்த் தென்றல்' திங்கள் இதழை இங்கே நாம் குறிப்பிடுகிறோம். திங்கள் இதழ்தான் என்றாலும், அதன் கருத்துக்கள் திங்கள் ஒளியைப் பொழிவதை நாம் அனுபவிக்கின்றோம். சங்க மாநிலத் தலைவர் திரு. டி.எஸ்.இரவீந்திர தாஸ், இதழின் ஆசிரியர். தமிழ்ப் புலமை பெற்ற சட்டாவதானி. அவரது எழுத்து, கலந்துரையாடல், சிந்தனை, உழைப்பு எல்லாமே வெள்ளுவா ஒளியே!

உழைக்கும் பத்திரிகையாளர் வாழ்க்கைக்கு தென்றல் தரும் இன்பம் போன்ற இதமான வசதிகளைச் செய்து கொடுக்க சங்கத் தலைவர் விரும்பி உழைக்கின்றார்! ஆனால், வீசும் காற்றின் மேற்பட்ட பஞ்சு போல, மஞ்சு போல அவற்றைப் பறக்கடித்து-கரைத்து விடுகின்றது ஜனநாயக ஆட்சி! மக்களாட்சியின் நான்காவது தூண் அல்லவா பத்திரிக்கை யாளர்கள் சங்கம்? அதற்கு ஜனநாயக அரசு ஆற்றும் நன்றி இதுதானோ!

எதிர் காலத்தில் பத்திரிகையாளர்களுக்குரிய வசதிகளை எந்த அரசாவது ஆற்றாமமலா போகும்? என்ற மன அமைதியோடு 'தமிழ்த் தென்றல்' பத்திரிகைப் பணிகள் மூலம் போராடி வருகிறார். டி.எஸ். இரவீந்திரதாஸ். பத்திரிகையாளர்

சங்கம் நடத்தும் பத்திரிகை என்பதற்கேற்ப, அதன் இதழ்கள் அறிவொளியைப் பரப்புகின்றன.

தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்கப் பணிகளை, தலைமை நிலையப் பொறுப்பாளராக அமர்ந்து ஆற்றிவரும் சகோதரி வளர்மதி - பத்திரிகை வளர்ச்சிக்குரிய பணிகளையும் செய்து வருகிறார்.

## 'தமிழ் மூவேந்தர்' ''முரசு'' மாத இதழ்

'இலக்கியச் சுடர்' மூவேந்தர் முத்து, நடத்திவரும் இலக்கியத் திங்கள் இதழ் 'தமிழ் மூவேந்தர் முரசு'. அந்த பத்திரிகைக்கு 'கலைமாமணி' பேராசிரியர் சிலம்பொலி சு.செல்லப்பனார் சிறப்பாசிரியராகவும், 'இலக்கியச் சுடர்' மூவேந்தர் முத்து ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார்கள் என்றால்; அதன் இலக்கியச் சேவைகள் எவ்வாறு இயங்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ!

தமிழ் மொழிக்காக அரும்பாடுபட்டு மறைந்த அரிய அறிஞர்களுக்கு அஞ்சலி செலுத்திடும் தமிழ்ப் பண்புணர்வுகளை; ஆண்டாண்டு தோறும் ஆறு ஆண்டுகளாகத் தமிழ் மக்களுக்கு முரசறைந்து நினைவூட்டி வருகிறது மூவேந்தர் முரசு! பாவேந்தர் விழா, திரு.வி.க. விழா, அ.ச.ஞானசம்பந்தர் விழா நூல் பதிப்புச் செம்மல்கள் விழா, தமிழ்த் தொண்டர் ஆர்.எம்.வீரப்பன் பிறந்த நாள் விழா, கவிஞர் கண்ணதாசன் பவள விழா; பாவாணர் நூற்றாண்டு விழா, அறிஞர் அண்ணா நினைவலைகளது சம்பவங்கள், மேல் நாடுகளில் நடைபெறும் தமிழ்க் கலைவிழா, கவிதை இனங்களுக்குத் தக்காரைக் கொண்டு தொண்டாற்றும் வித்தகப் பண்பு, வாழ்க்கைக்குரிய மருத்துவக் குறிப்புகள் போன்ற பல தமிழ் உணர்ச்சிகளை மூவேந்தர் முரசு வாயிலாக நினைவொலிகள் எழுப்பி, மற்ற பத்திரிகைகளுக்கும், மக்களுக்கும் தமிழ்ப் பணி சேவை உணர்வுகள் மூலமாகத் தொண்டு புரிகின்றது.

## 'யோகக் கலைக்கு ஒரே ஓர் இதழ்!

புகழ்பெற்ற தமிழ்ப் பதிப்பகங்களில் ஒன்றாக நிலைத்துவிட்ட பாரதி பதிப்பகம் நடத்தும் திங்கள் இதழ் யோகக் கலை! பதிப்பகத்தின் திறமையாளராக விளங்கிய தெய்வத்திரு பழ. சிதம்பரம் அவர்களின் ஆற்றல்மிகு மக்கட் பேறுகளான பழ. சி. இராசேந்திரன், பழ. சி. மணி, பழ. சி. வைத்தியநாதன், பழ.வெங்கட் ஆகியவர்களின் கடும் உழைப்பின் எதிரொலியாக இயங்கி வருகின்ற 'யோகக் கலை' பத்திரிகையில்; யோகாசனம், தியானம், இயற்கை மருத்துவம் மற்றும் வரலாற்றுச் சம்பவ நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளன.

யோகாசனப் பேராசிரியர் ஆசன இரா.ஆண்டியப்பனின் ஆசனப் பயிற்சி முறைகள், பலன்கள் அனைத்தும், தமிழ்நாட்டுச் சித்தர் ஞானத்திற்குரிய ஒளிச் சுடர்களாகத் திகழ்கின்றன. சன் டி.வி.யில் ஆண்டியப்பன் நடத்திவரும் யோகாசனப் பயிற்சிகள், 'யோகக் கலை' பத்திரிகைக்குரிய விளக்கங்களாகவும் விளங்குகின்றன.

மொத்தத்தில், 'யோகக் கலை' விஞ்ஞானிகளான பதினெண் சித்தர்களின் ஒரே ஒரு குருகுல இதழாக 'யோகக் கலை' பத்திரிகை உலா வந்து, ஆரோக்கிய வாழ்வை மக்களுக்கு வழங்கி வருகின்றது.

## "நக்கீரன்" தொண்டு "Invincible" லா?

தருமி என்ற கவிஞனின் வறுமை ஒழிய ஆலவாயப்பன் எழுதிக் கொடுத்த "கொங்குதேர் வாழ்க்கை" என்ற கவிதையிலே பொருட் குற்றம் கண்ட புலவர் பெருமான் நக்கீரரைப் பார்த்து : 'கீர் கீரென்று அறுக்கும் கீரனோ என் கவியை ஆராயத் தக்கவன்?'' என்று கொந்தளித்தக் கோபத்தோடு மதுரை சொக்கேசர் பெருமான் பாண்டியன் அவையிலே பொங்கினார்!

'சங்கறுப்பது எங்கள் குலம், தம்பிரானுக்கு ஏது குலம்?' என்று நக்கீரர் "நா" பெருமான் முன்பு சீற்றமாட, அதைப்

பொறுக்காத சிவபெருமான் நெற்றிக் கண்ணைக் காட்ட, 'நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே' என்று அக் கவிதைக் குற்றத்தை நிலைநாட்டிடப் போராடிய அருளாளர் 'நக்கீரர்'!

அந்த நக்கீரர் பெருமான் பெயரோடு நடமாடும் பத்திரிகையை நடத்துபவர் கோபால் என்ற பத்திரிகையாளர். அவர் நடத்தும் Investigation இதழ் "நக்கீரன்".

ஒருவனுடைய குற்றங்களைச் சோதனை செய்கின்ற, அலசி ஆராய்கின்ற அந்த ஏடு, கர்நாடகம், தமிழகம் என்ற இரண்டு அரசுகளின் இனிமையான தயவுக்காக 'நக்கீரன்' தூது சென்று, இறுதியில் invidious எனப்படும் 'போட்டிப் பொறாமைகளைத் தூண்டக் கூடிய 'பத்திரிகை என்ற தரத்தைப் பெற்றான் 'நக்கீரன்!'.

'நக்கீரன்' சென்ற தூது வேலையை ஊக்கமூட்டக் கூடிய invigorates பத்திரிகைப் பணி என்று எண்ணாமல், இரண்டு அரசுகளின் ஒழுங்கு, உறவுகளைத் தலைகீழாகத் திருப்பும் பணி inversion என்று கருதி, நக்கீரன் தலையிலே பொடா சட்டச் சுமையை ஏற்றி வைத்தது வஞ்சக, பழி வாங்கும் பண்புடைய தமிழக அரசு.

சிவபெருமானுடைய நெற்றிக் கண் தீப்பொறிகளுக்குப் பலியாகித் தீராக் குட்ட நோய் பெற்ற நக்கீரனாரைப் போல, 'நக்கீரன்' கோபால்; பொடா என்ற ஆணவக் குண வஞ்சகத்துக்கு ஆட்பட்டு சிறைபட்டதால், '40' என்ற நாடாளுமன்ற மக்கட் சக்தியின் வெற்றியெனும் கருணையால், நக்கீரன் சிறைக் கபாடத் தாள் தூள் தூளாக்கப்பட்டு வெளியே வந்தார். இது, இன்வஸ்டிகேஷன் என்ற பத்திரிகைக்கு அந்த ஏடு தேடிக் கொண்ட 'மரியாதை'!

புலனாய்வுப் பத்திரிகை என்றால், குற்றம் சாட்டப்பட்டவனுடைய குற்றங்களை மட்டும் எடுத்துக் காட்டும் ஒரு முனைப் போக்குதான் என்பதாக மட்டும் அமையக் கூடாது. குற்றம் சாட்டுபவன் மட்டும் நியாயவானா? யோக்யமானவனா? சமுதாயத்தில் நாணயமுடையவனா!

என்பதையும் மக்களுக்கு எடுத்து விளக்கும் இதழாக இருக்க வேண்டாமா? குற்றம் சாட்டுபவன் என்ன புராண அரிச்சந்திரன் பேரனா? அவனுக்கும், அவனைப் போலவே குற்றம் சாட்டப்பட்டவர்கள் கூறும் காரண - காரியங்களுக்காகவும் வாதாடுகின்ற பத்திரிகைகள் துவக்கப்பட வேண்டுமோ!

'இன்வெஸ்டிகேட்' பத்திரிகைகள் செய்யும் துப்புத் துலக்கல் பணிகள் invisible ஆக, எந்த வஞ்சகச் சக்திகளாலும் வெல்ல முடியாததாக இருக்க வேண்டும்! அதுதான் investigate என்பதன் இலக்கணம்!

ஒரு செய்தியை நீதிமன்றம் பயத்துக்காக அஞ்சி, தெரிகிறது, புரிகிறது; நம்பப்படுகிறது; கூறப்படுகிறது என்று உண்மையை மூடி மறைத்தால், செய்த அந்த புலன் விசாரணை மதில்மேல் பூனையாக மாறாதா?

எனவே, புலன் விசாரணைப் பத்திரிகையின் விசாரணை முடிவுகள், குற்றம் சாட்டப்பட்ட, குற்றம் செய்த இருமுனை வாதிகளுக்கும் ஓர் எச்சரிக்கை அறிவிப்பாக Alert ஆக அமைய வேண்டும். அப்போதுதான் அடுத்து ஒருவன் குற்றம் செய்யாமல் பய பக்தியோடும் AWE, அதிர்ச்சியோடும் சமுதாயத்தில் நடமாடுவான். மக்களிடையே ஒரு விழிப்புள்ள நிலை Awareness உருவாகும்.

தற்போது இன்வெஸ்டிகேஷன் என்ற பெயரால் பல பத்திரிகைகள் புற்றீசல் போல பறந்து பறந்து பொத்து பொத்தென்று பணம் எனும் புதர் மேலேயே இறக்கைகள் சிதறி வீழ்ந்து அழிகின்றன! இது புலனாய்வுப் பத்திரிகைத் துறைக்கே அவக்கேடு ஆகும்!

'விகடகவி'

பல்சுவை இதழ்

"வரலாற்றுப் புகழும், வரலாற்று இழுக்கும், இவ்விரண்டும் உணர்ச்சி வசப்பட்டுச் செய்யும் பெரிய நன்மையாலும், கவனமின்மையால் செய்யும் சிறிய தவறினாலும் நிகழ்ந்துவிடும்" என்று விகடகவி என்ற பல்சுவை மாத இதழ், வாசகர்களுக்கு மட்டுமல்ல; பத்திரிகையாளர்

களுக்கும் ஓர் எச்சரிக்கை அறிவிப்பாக (Alert), எப்போதும் விழிப்போடு இருக்க வேண்டும் என்ற ஓர் அக்கறை ஒலியை அடித்துக் கொண்டே திங்கள் தோறும் வெளிவருகிறது.

விகடகவி என்றால் Humourous Verse அதாவது நகைச் சுவைப் பாடல் என்றும் : நகைப்பை நடமாட விடுபவர் Buffoon என்றும், Jester என்றும் கூறுவர்.

ஆனால், கற்றார்களுக்கு வேறுபாடகவும் Change, சிந்தனை இளைப்பால் களைப்புத் தேவைப்படுவோர்க்கு A Mas Querade Dance போன்ற ஒருவகை நாட்டிய நாடகத் தமிழ் இன்பமாகவும், எதிர்வாதமிடுவோர்க்கு Roughness போன்ற கரடு முரடான ரோஜா முள்ளாகவும், இலக்கணப் பகுதி போன்ற சில சிந்தனைகள் Comical லாகவும்; நடிகன் தனுஷ் போன்றவன் கட்கு What is hideous என்ற பயங்கர விமர்சனமாகவும், காரகம் போன்ற செய்திகள் வரலாற்று அழகுணர்வூட்டும் Beauty ஆகவும் 'எது கட்சி? என்ன கொள்கை? யார் தலைவன்?'என்ற Bewilderment எனும் திணறலை, திகைப்பை மூட்டுவதாகவும்; இன்றைய சமுதாய அரசியல் ஒரு வகை Kind of Hell நரகமாகக் காட்சியளிப்பதை Haughty Person என்ற செருக்குப் பண்போடு விகடகவி பல்சுவை இதழ் Jester ஆக நடமாடுவது பத்திரிகை உலகுக்கு ஒரு புதுமை

பத்திரிகைக்கு ஆசிரியர் ஜே.பால், தலைமை நிர்வாக ஆசிரியர்கள் தோழியர்கள் பா.பிரேமலதா, ஜெ.நிரஞ்சின் ஆவர்! எந்த கட்சி ஏடு இது, என்று கணிக்க முடியாத உருவத்தோடு நடமாடுகிறது.

உலகப் புகழ்பெற்ற நகைச்சுவை நாயகம் சார்லி சாப்ளின் திருஉருவை சின்னமாகப் பெற்றுள்ளதால், மக்கள் சிந்தனைக்கே அந்தப் பத்திரிகைக் கருத்துக்கள் அடையாளங் களாக அணி வகுக்கின்றன!

## 'கழக முரசு' முருகு' இதழ்

பெயர்தான் கழக முரசு! ஆனால், அதன் தொண்டு சீரிய இலக்கிய ஆய்வுப் பணியாக, இலக்கிய அறிஞர்கள் இடையே

சுற்றுலா வட்ட ஒலியை எழுப்பி வருகிறது. தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழிப் புலமையாளரான கவிஞர் முருகுவண்ணன் இதன் ஆசிரியர்.

கவிஞர், தனது 80 ஆண்டுக் காலம் முத்தமிழ்த் தொண்டில் ஏறக்குறைய 60 ஆண்டுகளாக இலக்கிய வானியலில் விந்தைகள் பல விளைவித்தக் கூர்த்த மதியினர்; இருமொழி ஊற்றுக் கண்களாகச் சுரப்பவர்; அந்தச் சுரப்பு நீர் விண் நீராகவும்; தண்ணீராகவும், உண்ணீராகவும், வெந்நீராகவும், அமுதம் போன்ற உமிழ் நீராகவும், பன்னீராகவும், சில நேரங்களில் கண்ணீராகவும் இலக்கிய வேட்கைகளில் சுவையூட்டியதுண்டு.

தமிழின் தனிமையை இனிமையோடு நிலைநிறுத்தும் கவிஞர் மட்டுமல்லர்; விண்ணியல், மண்ணியல் ஆய்வுகளை 'அருட்பா' சிந்தனையில் நடத்தி அரிய கவிதைகளை வரைந்தவர். திருக்குறட் கடலைக் கடைந்து அமிழ்தம் எடுத்து, என் போன்ற பசிஞர்களுக்கு ஊட்டுபவர்; 'கழக முரசு' அறிஞருலகத்திற்கு மென்னோசை எழுப்பி, இன்னோசை வழங்கி, பண்ணோசையால் மண்மாந்தரை மகிழவைத்து, கவிஞர் தனது எண்பதாவது வாழ்க்கைக் கல்லில் காலடி பதிய வைத்து, தமிழ்ப் பணியாற்றி வரும் பூ மனத் தும்பியாக இலக்கிய தேன் கூடு கட்டி வருபவர்!

## 'அல்லயன்ஸ்'
## "விவேக போதினி"

திருமயிலை கபாலீச்சுரம் திருக்குளம் எதிரே இலக்கிய முத்துக்களை ஆழ்ந்து; ஆய்ந்து வழங்கி நூறாண்டு காலமாக 'அல்லயன்ஸ்' என்ற பெயரில் பதிப்பகமாகக் காட்சி வழங்கி வருகின்றது.

அந்த அறிவுப் பூங்காவை நிறுவிய வித்தகர் திரு. குப்புசாமி ஐயர்; பல்வேறு இலக்கிய நூற் எழிற் பூவினங்களின் இதழ் மணங்களை நுகர்ந்தவர். தேசப் பிதா அண்ணல் காந்தியடிகள், தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர்,

ரைட்ஹானரபில் வி.எஸ்.சீநிவாச சாஸ்திரி, இராஜாஜி, நாவலர் சத்தியமூர்த்தி ஐயர், தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஆகியோர் அல்லயன்ஸ் பதிப்பகத்தைப் பாராட்டி மகிழ்ந்துள்ள சம்பவம் பதிப்பக உலகமே அனுபவிக்காத ஓர் அரிய சம்பவமாகும்.

இத்தகைய ஆற்றலும், அனுபவமும் உள்ள திரு. குப்புசாமி ஐயர், 'விவேகபோதினி' என்ற தமிழ் இலக்கிய மாதப் பத்திரிகையை நடத்தி தமிழ் உலகுக்கு இலக்கியத் தொண்டு புரிந்துள்ளார். அவர் வகுத்த பாதையில் அவரது பெயரன் திரு. சீநிவாசன் இன்று ஆற்றிவரும் அரிய பணியை எழுத்துலகம் என்றும் மறவாது. வாழ்க, வளர்க, அல்லயன்ஸ் சீநிவாசன் எழுத்துத் துறையின் சேவைத் திறம்!

# 9

# ஆறு நாடுகளின் உருவாக்கமே நமது குடியரசு சட்ட அமைப்பு

☆ பிரிட்டன் நாட்டு அரசியல் அமைப்பு

☆ அமெரிக்க ஐக்கிய நாடுகள் உயர்தர நீதிச் சட்டம்

☆ கனடா நாட்டின் கூட்டாட்சி முறை

☆ அயர்லாந்து நாட்டின் மாநில அரசுக் கொள்கை

☆ ஆஸ்திரேலியா நாட்டின் கூட்டாட்சிக் கொள்கை அரசியல் அமைப்பு முறை

☆ ஜப்பான் நாட்டின் சட்ட வழிமுறைகள்

மேற்கண்ட நாடுகளின் குடியரசுச் சட்டங்களிலிருந்து நமது இந்திய நாட்டு அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

இந்த ஆறு நாடுகளின் சட்ட உருவாக்கங்களால் தான் நமது இந்திய ஃபீனல் கோர்டு சட்டம் நிற்கிறது.

# 1930-ஆம் - ஆண்டிலேயே நமது குடியரசு நாளைக் கொண்டாடினோம்!

அகில இந்திய தேசியக் காங்கிரஸ் இயக்கப் பேரவை, 1885-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து, ஒவ்வொரு ஆண்டுதோறும் காங்கிரஸ் இயக்கப் பேரவை, இந்திய மாநிலங்களின் முக்கிய நகரங்களிலே கூடி அதன் ஆண்டு விழா நடவடிக்கைகளை ஆராய்ந்தும், மேற்கொண்டு என்ன திட்டங்களைத் தீர்மானித்துச் செயலாற்றலாம் என்பதை; அதன் தலைவர் பெருமக்கள் கூடி, நாடு முழுவதுமுள்ள தேசியக் காங்கிரஸ் தொண்டர்களையும் அழைத்து, ஒரு மாநாடு போலத் திரண்டு கலந்துரையாடுவது வழக்கம்.

அதற்கேற்ப, அகில இந்திய தேசியக் காங்கிரஸ் பேரவை 1930-ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்திலே உள்ள லாகூர் என்ற மாநகரில் கூடியது.

அந்தப் பேரவையில், நீதி, பொருளாதாரம், அரசியல் அமைப்பு, சுதந்தரம் தன்மை, அதற்கான கருத்துகள், பிரார்த்தனை, நம்பிக்கை, சமத்துவம், சுய கௌரவம், தேசிய ஒற்றுமை, இந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைக் குறித்து மாநாட்டிற்கு வருகை தந்த காங்கிரஸ் பேரவைத் தலைவர்கள் கலந்துரையாடினார்கள்.

இறுதியாக எடுத்த முடிவில், 1929-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாள் நள்ளிரவிலிருந்து, ஜனவரி 1-ஆம் நாள், 1930-ஆம் ஆண்டு விடியற் காலைக்குள், மூவண்ணத் தேசியக் கொடியை நாட்டு மக்கள் முன்னிலையில் ஏற்றி, ஓர் உறுதி மொழியை எடுத்துக் கொண்டார்கள்.

அந்த உறுதி மொழிக்கு ஏற்றவாறு ஒவ்வொரு ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 26ஆம் நாளைக் குடியரசு நாளாகக் கொண்டாட வேண்டும் என்பதே அந்த மாநாட்டின் தீர்மானமாயிற்று.

இந்திய அரசியலமைப்புக் கூட்டம் 1946-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் தேதியன்று கூடியது. இந்த அமைப்பு

பல்வேறு குழுக்களை நிர்ணயம் செய்து, அந்தக் குழுக்கள் வெவ்வேறு விஷயங்களைச் சேகரித்து, இறுதியில் அரசியலமைப்புச் சட்டத்தை 395 தொகுதிகளாகவும், 8 பிரிவுகளாகவும் நிர்ணயம் செய்து, இந்தியக் குடியரசுச் சட்டம் நவம்பர் 26-ஆம் தேதி 1949ல் முன்னிலைப் படுத்திய பின்பு, இந்திய தேசியக் காங்கிரஸ் உறுப்பினர்களால் ஜனவரி 26-ஆம் தேதி 1950-ஆம் ஆண்டு அமலுக்குக் கொண்டு வரப்பட்டது.

உலக நாடுகளின் குடியரசுத் தொகுப்புகளில் இந்தியாவின் தொகுப்பு மிகப் பெரியது.

(- ஆதாரம், 'விகடகவி' மாத இதழ் பிப்ரவரி 2004)

# 1. தாய்மொழிப் பத்திரிகைச் சட்டம்
## (VERNACULAR PRESS ACT - 1768)

இந்தியாவில் செய்திப் பத்திரிகையை முதன்முதலாகத் துவக்க விரும்பினார் வில்லியம் போல்ட்ஸ் என்ற ஆங்கிலேயர். அதற்கான எல்லா பணிகளையும் ஆற்றிய அவரை; ஆங்கில அரசு நாடு கடத்தல் கட்டளையைப் பிறப்பித்து இந்தியாவை விட்டே விரட்டி அடித்துவிட்டது.

நாடு கடத்தல் உத்தரவைப் பெற்ற அந்த இதழியல் வேக்காட்டு ஆர்வத் தும்பி, தனது தாய் நாடான இங்கிலாந்துக்குப் புறப்படுவதற்கு முன்பு, அவர் பணியாற்றிய கல்கத்தா தலைமைச் செயலகத்தில் பின்வருமாறு முழக்கமிட்டார் :

''பொது மக்களுக்கு கல்கத்தா நகரில் அன்றாடச் செய்திகளை அறிய வாய்ப்பில்லாதது, மக்களுக்கும் வணிகத்திற்கும், இந்தியச் சமுதாயத்திற்கும் பேரிழப்பாகும்.

இந்தியர் ஒவ்வொருவருக்கும் செய்திகளைப் படிக்கும் வாய்ப்பு மிகமிக அவசியமானது. எனவே, அச்சுத் தொழில் அறிந்தவர்களுக்கும், அச்சகம் நடத்துனருக்கும் நான் ஊக்க ஆதரவுகாட்ட விரும்புகிறேன்.

பொதுமக்களுக்குச் செய்தியாகக் கூற வேண்டிய கையெழுத்துப் படிவங்களை வைத்திருப்போர், என்னைக் காலை 10 மணியிலிருந்து 12 மணிக்குள் எனது அறையில் சந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்....'' என்றார் வில்லியம் போல்ட்ஸ்.

இவ்வாறு போல்ட்ஸ் அறிவித்தார் என்ற காரணத்துக்காக ஆங்கிலேயர் ஆட்சி அவரைத் தனது தாய் நாட்டுக்கே திருப்பி அனுப்பிவிட்டது.

இந்தியப் பத்திரிகைத் தடைச் சட்டம் இதழைத் துவங்குவதற்கு முன்பே அவரது செயற்கருவை அழித்து விட்டது.

போல்ட்சைப் போலவே, ஜேம்ஸ் அகஸ்டல் ஹிக்கி என்பவர் 1780-ஆம் ஆண்டில் 'பெங்கால் கெசட்' என்ற இதழைத் துவக்கி, தலைமை ஆளுநர் வாரன்ஹேஸ்டிங்சாலும், அவரது மனைவியாலும், பெருந்துன்பத்திற்கு ஆளானார். காரணம், ''கிழக்கு இந்தியக் கம்பெனி செய்திருந்த ஊழல்களை அம்பலப்படுத்துவேன்'' என்று அவர் பகிரங்கமாகக் கூறியதற்காக. அதன் விவரம் வேறோரிடத்தில் உள்ளது படிக்கவும்.

## 2. தலைமை ஆளுநர் வெல்லெஸ்லி பிரபு 1799-ல் வெளியிட்ட ஐந்தம்ச சட்டம்!

வாரன்ஹேஸ்டிங்சும், அவரது துணைவியாருடைய ஊழல்களும் அம்பலப்படுத்தப்பட இருப்பதை அறிந்து, அவருக்குப் பிறகு ஆங்கிலேயர் ஆட்சி நிர்வாகத்திற்குத் தலைமை ஆளுநராகப் பதவி ஏற்ற டல்ஹௌசி பிரபு, செய்திப் பத்திரிகைகள் வளர்ச்சிகளை அடக்கிட, பழிவாங்கும் உள்நோக்கத்தோடு, ஐந்து அம்சத் திட்டம் ஒன்றை கி.பி. 1799-ஆம் ஆண்டு கொண்டு வந்தார். விவரம் வருமாறு :

1. செய்தித் தாட்களை அச்சிடுவோர் முகவரி, பெயர் இதழில் அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டும்

2. ஆங்கில ஆட்சியின் செயலாளருக்கு, பத்திரிகை நடத்தும் உரிமையாளரின் முகவரி அச்சிட்டு வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட இரண்டு சட்டங்களும் ஏன் வந்தது தெரியுமா? தலைமை ஆளுநராக இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸின் மனைவி, தனக்கு வேண்டப்பட்டவர்களுக்கு எல்லா நன்மைகளும் பெற்றிடப் பல பரிந்துரைகளைச் செய்தார்! இறுதியில் அந்தப் பரிந்துரைகள் பாலியல் அநாகரிகமாக உருவெடுத்தது. அதை ஒருவன் துண்டறிக்கையாக அச்சிட்டு வீதிதோறும் வழங்கிவிட்டான்! அவ்வாறு செய்தவன் யார்? என்பதை அறிந்திடக் காவல்துறை எவ்வளவோ முயன்றும்கூட முடியாமல் போய்விட்டது! பாவம், ஹேஸ்டிங்சுக்கு ஊழல் கெட்ட பெயர் ஒரு புறம், மனைவியால் இழிச் சொல் மறுபுறம் உண்டானது.

அத்தகைய ஓர் அவமானம் மறுபடியும் தலைமை ஆளுநர் பதவிக்கு வந்துவிடக் கூடாது அல்லவா? அதனால் அச்சகம், பத்திரிகை உரிமையாளர்கள் முகவரிகளைப் பத்திரிகையில் வெளியிடல் வேண்டும் என்ற கட்டளையை டல்ஹௌசி பிறப்பித்தார்! அதுதான் இன்றும் நாம் பத்திரிகையின் கடைசி பக்கத்தில் அச்சிட்டு வெளிவரும் Imprint என்ற அடையாள அறிகுறி ஆகும்.

ஐந்தம்ச சட்டத்தின் மூன்றாவது சட்டம் : 'ஞாயிற்றுக் கிழமைகளில் பத்திரிகைகளை வெளியிடக் கூடாது' என்பதாகும்.

ஞாயிறு மனித குலத்துக்கு இயேசு படைத்த ஓய்வு நாள் அல்லவா? அந்த நாள் அரசு விடுத்துள்ள விடுமுறை நாள். அன்றைக்கு ஏதாவது சிக்கல் ஏற்பட்டுவிட்டால், எல்லாருக்கும் முனுமுனுப்புதானே! அதனால் ஓய்வு நாளில் பத்திரிகைகள் வெளியே வரக்கூடாது என்று சட்டம் இயற்றினார் டல்ஹௌசி பிரபு!

4. பணியிலே அமர்ந்துள்ள தலைமைச் செயலக அதிகாரிகள் பத்திரிகை வெளியே வரலாம் என்ற அனுமதியைக்

கொடுத்த பின்புதான் இதழ்கள் விற்பனையாக வெளியே வரவேண்டும்.

"மேலே குறிப்பிட்ட நான்கு சட்டங்களையும் மதிக்காதவர்கள், பின்பற்றாதவர்கள், நாடு கடத்தப்படுவார்கள்" என்பதுதான் ஐந்தாவது அம்ச சட்டமாகும்.

இந்த ஐந்தம்ச சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, ஆங்கிலேயர் ஆட்சியைத் தாக்கி எழுதும் முறை குறைந்தது. அதனால் மக்கள் இடையே பத்திரிகை வாங்கும் பரபரப்பும் தளர்ந்தது. விற்பனை இல்லாததால் பத்திரிகைகளை நடத்துவோர் பலர் இதழ்களை நிறுத்திவிட்டார்கள். ஏன் இவ்வாறு சட்டம் கொண்டு வந்தார் டல்ஹௌசி பிரபு?

ஞாயிற்றுக் கிழமைகளில் பத்திரிகை படிப்போர், ஓய்வாக ஆர அமர்ந்து படித்தக் கருத்தைச் சிந்திக்க ஆரம்பித்து விடுவார்கள் அல்லவா? சிந்தனையின் எதிரொலி என்னவாகும்? ஆட்சியை எதிர்க்கும் எண்ணம் தோன்றத்தானே செய்யும்? அதனால்தான், பத்திரிகைகளின் ஞாயிறு விற்பனைகளை அழித்தார் டல்ஹௌசி.

இந்த ஞாயிறு சட்டத்தைக் கண்ட இதழாளர்களான 'கல்கத்தா கூரியர், வெள்ளியன்றும், 'ஆசியாடிக்' என்ற பத்திரிகை புதன்கிழமை அன்றும், 'ஓரியண்டல் ஸ்டார்' என்ற இதழ் சனிக்கிழமை அன்றும் அவரவர் பத்திரிகைகள் வெளிவரும் நாட்களை மாற்றிக் கொண்டார்கள்.

## 3. கி.பி. 1800ல் வெளியான அஞ்சலகச் சட்டம்

டல்ஹௌசி சட்டத்தால் நிறுத்தப்பட்ட பத்திரிகைகளும், காரணங்களும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு அமைதியைத் தேடித் தந்தன. இருந்தாலும், பத்திரிகைகளை மேலும் அடக்க நினைத்த அவர், 1800-ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு சட்டத்தைப் பிறப்பித்தார்.

''பத்திரிகை நடத்துவோர் தங்களது விற்பனை இதழ்களின் அஞ்சல் தலைக்குரிய பாதுகாப்புக் கட்டணத்தைக் காப்பீட்டுத் தொகையாகக் கட்ட வேண்டும்'' என்பதுதான் அந்தப் புது சட்டம்.

பணம் இருப்பவர்கள் டல்ஹௌசி உத்தரவைக் கண்டு அஞ்சாமல் காப்பீட்டுத் தொகையைக் கட்டினார்கள்! பணமற்ற சாதாரண பத்திரிகைகளால் அந்தத் தொகையைக் கட்ட முடியவில்லை. அவர்களை அரசு அதிகாரிகள் வற்புறுத்திக் கட்ட வைத்தார்கள். அதற்குப் பிறகும் கட்ட முடியாதவர்களது பத்திரிகைகளை அஞ்சலகத்தார் கண்டிப்பான செயலோடு வெளியூர்களுக்கு அனுப்ப ஏற்க மறுத்து விட்டார்கள்.

டல்ஹௌசியின் இந்த புதிய சட்டம், பத்திரிகையாளர்களை வளர விடவில்லை. ஈரத் துணியைக் கட்டி கழுத்தை அறுப்பவனது இரக்கமற்றச் செயல் போல இருந்தது - அஞ்சலகக் காப்பீட்டுத் தொகைக் கட்டணச் சட்டம்!

## 4. ஆடம்ஸ் ஒழுங்கு முறைச் சட்டம் (ADAMS REGULATION ACT - 1823)

வங்க மொழி வித்தகர் மட்டுமன்று, ஈரேழ் மொழிகளிலே புலமையாளரான இராஜாராம் மோகன்ராய், 'சம்பத் கௌமதி', மீரட் அல்-அக்பர் என்ற வங்க, பாரசீக மொழிகளிலே பத்திரிகைகளை நடத்திய மாமேதை ஆவார்.

அந்த பன்மொழி வித்தகர் நடத்திய தனது பத்திரிகைகளில் எழுதிய தலையங்கப் பகுதிக் கருத்துக்களை அடக்கிட, ஆங்கிலேய ஆட்சி கொண்டு வந்த அடக்குமுறைச் சட்டம்தான் இந்த ஆடம்ஸ் ஒழுங்கு முறைச் சட்டம். இந்தச் சட்டத்தை டல்ஹௌசி பிரபு 1823-ஆம் ஆண்டில் கொண்டு வந்து கடுமையாக அமல் படுத்தினார்.

இராஜாராம் மோகன்ராய், ஆங்கிலேயரின் கிழக்கு இந்திய வியாபாரக் கம்பெனியில் பணியாற்றிய நற்புகழாளராவார். அப்படிப்பட்டவர் மீதுதான் ஆங்கிலேயர் ஆட்சி ஏவியது அடக்குமுறைச் சட்டத்தை!

விளம்பரம், விலைப்பட்டியல், போக்குவரத்துச் செய்திகளை வெளியிட, அரசு தலைமைச் செயலாளரிடம் அனுமதி பெற வேண்டும் என்று இந்தச் சட்டம் அறிவித்தது.

தலைமைச் செயலாளரிடம் மிகக் கஷ்டப்பட்டு அனுமதிபெற்றால் கூட, அந்த அனுமதி நீடிக்காது. ஆளுநர் நினைத்தால் அந்த அனுமதியை ரத்து செய்து விடலாம்.

பத்திரிகை அச்சடித்தான பிறகு அதன் பிரதி ஒன்றை உள்ளூர் நீதிமன்றத்தினர்க்கு உடனே, 24 மணி நேரத்துக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என்பதும் அதே சட்டம் தான்.

அரசு தலைமைச் செயலர் அனுமதி இல்லாமல் பத்திரிகையில் செய்திகளை வெளியிட்டால், அபராதம் உண்டு! எவ்வளவு தெரியுமா? 400 ரூபாய்! அந்த அபராதத்துடன் விவகாரம் முடிந்ததா என்றால், அத்துடன் சிறைத் தண்டனையும் உண்டாம்! எவ்வளவு காலம் தண்டனை என்று கேட்பவர்களுக்கு; ஆறு மாதம் என்கின்றது அந்தச் சட்டம்.

## 5. செய்தித்தாள் பதிவுச் சட்டம்
### (ACT No. II OF 1835)

இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவர் சார்லஸ் மெக்கல்பால் என்பவர். இவர் டல்ஹௌசியைவிட கல்லுள்ளம் கொண்டவர். இவர்தான் செய்தித்தாள் பதிவுச் சட்டத்தை 1835-ஆம் ஆண்டு கொண்டு வந்து நடமாட விட்டவர்.

ஆனால், இவர் ஒரு நல்ல செயலையும் செய்துள்ளார். தன்னால் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டம் இந்திய மாநிலங்களுக்கு எல்லாம் பொருந்தக் கூடிய சட்டம் என்று கூறாமல், கொஞ்சம் இரக்க உள்ளத்தோடு, கிழக்கு இந்தியக் கம்பெனியின் ஆட்சிக்கு உட்பட்ட எல்லைப் பகுதிகளுக்குள் மட்டுமே இந்தச் சட்டம் அமலாகும் என்பதை அவர் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். அதனால் பத்திரிகையாளர்களுக்கு ஓரளவு மனக்குறையும் குறைந்தது.

செய்தித்தாள் பதிவுச் சட்டத்தின்படி பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில், அதை அச்சிடும் அச்சகத்தாரும், பத்திரிகையை நடத்துவாரும், அவரவர் முழு பெயர்களையும், அச்சகம் இயங்கும் இட முகவரியையும், பத்திரிகை உரிமையாளர், அதை வெளியிடும் இடத்தின் முகவரியையும் முழுமையாக வெளியிடப்பட வேண்டும்.

வெளியிட மறந்தால், தவறினால் 5000 ரூபாய் அபராதம் கட்ட வேண்டும். சிறை தண்டனை உண்டா? உண்டு! இரண்டு ஆண்டு!!

## 6. 1857- ல் வந்த - வாய் பூட்டுச் சட்டம்! (இதழ், சட்ட எண் : 15)

இந்தியாவில் நடைபெற்ற இந்து - முஸ்லீம் இணைந்த ஆங்கிலேயர் ஆட்சி எதிர்ப்புப் போரை இந்திய வரலாற்றாசிரியர்கள் "இந்தியாவின் முதல் சுதந்திரப் போர்" என்று பெயரிட்டு எழுதினார்கள். ஆனால், ஆங்கிலேய வரலாற்றாசிரியர்களும் அவர்களது வெறி ஆட்சியும் அந்தப் போரை, போராகக் கருதாமல், சிப்பாய்க் கலகம் என்று குறிப்பிட்டு ஆணவமாடினார்கள்.

ஏன் இந்தப் போர் நிலை சிப்பாய்கள் இடையே மூண்டது? இங்லீஷ் ஆட்சியினர்; இந்துமத - இஸ்லாம் மத சுதந்திரங்களை, உரிமைகளை அசிங்கப்படுத்துகிறார்கள், அவமானப் படுத்துகிறார்கள். இப்படியே அந்த உணர்வை வளரவிட்டால் மத சுதந்திரம் அழிந்துவிடும் என்ற முடிவுக்கு வந்து, இணைந்து ஒற்றுமையோடுப் போரிட்டார்கள் இந்து-முஸ்லீம் இன வீரர்கள்!

இந்தியப் பத்திரிகைகள் எல்லாம், இந்த இந்து - முஸ்லீம் மத உரிமைப் போரை ஆதரித்து செய்திகளை வெளியிட்டார்கள். தலையங்கங்களை, கட்டுரைகளைப் பத்திரிகைகள் எழுதின.

இத்தகைய இனமான பத்திரிகைகளை வளரவிடக் கூடாது என்ற ஆணவ மனப் போக்கில்,, பத்திரிகைகளை அடக்கி, ஒடுக்கி, நசுக்க வேண்டும் என்ற கொடூரச் சிந்தனையோடு கொண்டுவரப்பட்ட சட்டம் தான் 1857 - ஆண்டு இதழ்ச் சட்ட எண் 15 என்ற சட்டமாகும். இந்தச் சட்டத்தை எல்லா இந்திய பத்திரிகைகளும் ஒருமனதாக வாய்ப்பூட்டுச் சட்டம் என்று எழுதியே எதிர்த்தன. இந்த சட்டத்தின் நோக்கம் என்ன?

1. அச்சகம் அமைக்க முன் அனுமதி பெற வேண்டும்.

2. ஆங்கில ஆட்சியின் மீது வெறுப்புணர்ச்சிகளை உண்டாக்கும் செய்திகள் தடை செய்யப்படும்.

மேற்கண்ட சட்டத்தின் கொடுமையான அடக்கு முறைகளைத் தாங்கமுடியாமல் பெங்கால் ஹாரகாரு BENGAL HARKAR. சுல்தான் அல்-அக்பர் SULTAN-AL-AKBAR சமாச்சா SAMACHA, பிரஸ் ஆஃப் இண்டியா PRESS OF INDIA, பாம்பே டைம்ஸ் BOMBAY TIMES போன்ற பத்திரிகைகள் நிறுத்தப்பட்டு விட்டன என்று கூறுவதைவிட; தடைச் சட்டத்துக்குப் பலி கொடுக்கப்பட்டுவிட்டன என்றே சொல்லலாம்.

லார்டு ரிப்பன் எங்களப்பன் என்று இந்திய மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட ரிப்பன் பிரபு : கம்பெனி ஆங்கிலர்; ஆட்சியின் தலைமை ஆளுநராக வந்தார். அவர் 1882-ஆம் ஆண்டில் இந்தச் சட்டத்தின் ஆணி வேரையே அறுத்தெறிந்தார்.

## 7. 1867-ஆம் ஆண்டில் உருவான இதழ் சீர்திருத்தச் சட்டம். எண். 25

இந்தச் சட்டம் ரிப்பன் பிரபு ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டமாகும்.

பத்திரிகைகள் நன்கு வளர்ச்சி பெறும் நோக்கங்களோடு இந்தச் சட்டம் பல சீர்திருத்தங்களைப் பெற்றிருந்தது.

இந்தச் சட்டம் 1867-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டிருந்தாலும், இன்று வரை, அதாவது 2005-ஆம் ஆண்டு வரையிலும் அது உயிரோடு நடமாடி வருகிறது. அந்தச் சட்டத்தின் நோக்கங்கள் பின் வருமாறு :

1. அச்சகம் நடத்துவோர், நீதிபதி ஒருவர் முன்பு உறுதி மொழிப் பத்திரம் எழுதித் தரவேண்டும்.

2. அச்சக உரிமையாளரும், பத்திரிகை வெளியிடுவோரும், எங்கே அதை அச்சடிக்கிறோம் என்ற இடத்தின் முகவரியை அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

3. அச்சடிக்கப்பட்ட பத்திரிகைகளின் இரண்டு பிரதிகளை அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

4. பத்திரிகைகளைக் கொடுக்கத் தவறுகின்றவர்களுக்கு அபராதம் 2000 ரூபாய் அல்லது 6 மாதம் சிறைத் தண்டனை வழங்கப்படும்.

இவைதான், 1867-ஆம் ஆண்டின் பத்திரிகைச் சட்டத்தின் சீர்த்திருத்தங்களாகும்.

## 8. 1887-ஆம் ஆண்டு வந்த நாடு கடத்தல் சட்டம். எண் - 27

ஆளுநர் ரிப்பன் பிரபுக்குப் பிறகு, 20 ஆண்டுகள் கழித்து, 1887-ஆம் ஆண்டில் ஜான் லாரன்ஸ், மேயோ பிரபு என்ற இருவரும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

இந்தச் சட்டத்தால் பத்திரிகைக்கு உண்டான லாபம் என்ன தெரியுமா? ஆங்கிலேயர் ஆட்சி பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்ட விக்கிமாதித்தன் கதை போல, பத்திரிகை நடத்துவோரைப் பழி வாங்கும் சூழ்ச்சிகளைப் பெற்றதுதான் லாபமாகும்.

ஆங்கில அரசுக்கு எதிரான கருத்துக்களை எழுதும் பத்திரிகை ஆசிரியர்கள், இந்திய எல்லைகளை விட்டே

துரத்தப்படுவார்கள். அதாவது பால கங்காதர திலகர் தனது 'கேசரி' பத்திரிகையில் வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து எழுதியதற்கு பர்மாவிலே உள்ள மாண்டலே காராக்கிரகத்திலே பூட்டிக் கொடுமைபடுத்தியதைப் போல, இப்போது 1887-ஆம் ஆண்டில் வந்த சட்டமும் பத்திரிகை ஆசிரியர்கள் நாடுவிட்டு வேறோர் நாட்டுக்கு விரட்டியடிக்கப்படுவர் என்பதுதான் அந்த சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஒருவேளை அந்த ஆசிரியர்கள் நாடு கடத்தப்படுபவராக இல்லாவிட்டால், குறைந்த அளவு 3 ஆண்டுகள் சிறை தண்டனையை அனுபவித்தாக வேண்டும்.

அந்தச் சட்டம் இந்தியன் பீனல் கோடு 124A, 153A, 505 ஆகிய பிரிவுகளுக்கு ஏற்றவாறு அமல்படுத்தப்பட்டு தண்டனைகளை வழங்கும். எனவே, மேற்கண்ட பிரிவுகளால் இணைக்கப்பட்ட அராஜகம் சட்டம் இது.

## 9. 1878-ஆம் ஆண்டில் வெளியான இந்திய மொழிப் பத்திரிகைச் சட்டம்

### (THE VERNACULAR PRESS ACT OF - 1878)

மேயோ பிரபுவும், ஜான் லாரன்சும் கொண்டு வந்த இந்த சட்டம், பத்திரிகை ஆசிரியர்கள் இடையே பெரும் எதிர்ப்பைப் பெற்றது. அதனால்; இதழ்கள் உலகமே புரட்சி மனப்பான்மை என்ற தீ வளைய வட்டத்துக்குள் நுழைந்து தங்களையே தியாகம் செய்யத் தயாரான நேரத்தில், தலைமை ஆளுநராக அப்போது பொறுப்பேற்றிருந்த லிட்டன் பிரபு கொண்டு வந்த இந்திய மொழிகளது பத்திரிகைச் சட்டம் வெளியானது.

லார்டு லிட்டன் ஆட்சியின்போது பத்திரிகைகள் ஆங்கில ஆட்சியை எதிர்த்து நெருப்புக் குவியல் நடையில் எழுதின. அதனால் சட்டமெனும் தீயணைப்பு இயந்திரச் சக்தியைப் பயன்படுத்தினால்தான், அந்த நெருப்புக் கனல் நடை எதிர்ப்புக்களைச் சமாளிக்க முடியும் என்று எண்ணிய லார்டு லிட்டன், இங்கிலாந்து பாராளுமன்றத்துக்கு இந்தியப் பத்திரிகை

உலகின் சூழ்நிலையை எடுத்துரைத்த அவர், மன்றத்தின் ஒப்புதலையும் பெற்றுவிட்டார். அந்த ஒப்புதலுக்கேற்ப சட்டம் திருத்தப்பட்டது. என்ன அந்த சட்டத் திருத்தம்?!

பத்திரிகை நடத்துபவர்கள், ஒரு குறிப்பிட்ட பணத் தொகையை முன் ஜாமீனாக, அதாவது பிணையத் தொகையாக Deposit ஆக கட்ட வேண்டும்.

ஆட்சி மீது மக்களுக்கு வெறுப்பும், ஆத்திரமும் பொங்குமாறு பத்திரிகையில் எழுதக் கூடாது.

இனம், மதம், சாதி, மொழிகளது பேதங்களை உண்டாக்கி, அதனால் கலவரங்களைத் தூண்டிவிடும் நோக்கங்களில் பத்திரிகைச் செய்திகளை வெளியிடக் கூடாது.

மேலே கூறப்பட்ட விதிகளை ஏற்றுக் கொண்டதாக, அச்சகத்தாரும், பத்திரிகை பதிப்பிப்போரும் நீதிபதி முன்பு அல்லது காவல்துறை அதிகாரியிடம் உறுதிமொழிப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

அவ்வாறு ஆட்சியை எதிர்த்து எழுதினால், நீதிபதி அல்லது காவல்துறை அதிகாரிகளால் பத்திரிகைகளைப் பறிமுதல் செய்துவிடும் அதிகாரமும் அவர்களுக்கு உண்டு.

மேற்கண்டவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் எதுவாக இருந்தாலும், அவற்றை எதிர்த்து நீதியின் சந்நிதானப் படிக்கட்டுகளைக் கூட மிதிக்கக் கூடாது, அதாவது கோர்ட்டுக்குப் போக முடியாது.

இந்தச் சட்டத்தை மீறுபவர்களுக்கு முதல் முறையாக எச்சரிக்கை மணி ஒலிக்கப்படும். அந்த ஓசையைக் கேட்க மறுத்ததற்கேற்ப, மீண்டும் அதே தவறைச் செய்தால், கட்டப்பட்டிருந்த முன் பணம் பறிபோகும். அதற்குப் பிறகு அபராதமும் விதிக்கப்படும். சிறை தண்டனையும் உண்டு.

லார்டு லிட்டன் பிரபுவால், இங்கிலாந்து பாராளுமன்ற ஒப்புதலோடு கொண்டு வரப்பட்ட இந்திய மொழி இதழ்ச் சட்டம், பத்திரிகை உலகுக்கு பெரும் கேடுகளை விளைவிப்பதாய் விளங்கியது.

அந்த நேரத்தில் தமிழ்நாட்டில் அதிகமான தாய்மொழிப் பத்திரிகைகள் நடத்தப்படவில்லை. அதனால், சென்னை மாநிலப் பத்திரிகை வட்டத்துக்கு அதிக பாதிப்புகள் ஏதுமில்லை.

ஆனால், இந்தியாவின் பிற மாநிலங்களிலும், குறிப்பாக வங்காள மொழியில் வெளிவந்த 'அமிர்தபசார்' என்ற பத்திரிகையை அந்தச் சட்டம் வெகுவாகப் பாதித்ததால், இரவோடு இரவாக அந்த ஏடு மன மாறி இங்கிலீஷ் மொழிப் பத்திரிகையாகிவிட்டது.

லார்டு லிட்டன் பிரபுவுக்குப் பிறகு, மீண்டும் மனித நேயம் படைத்த ரிப்பன் பிரபுவே தலைமை ஆளுநராகப் பதவி ஏற்றார். அப்பாது கொடுங்கோலன் லிட்டன் சட்டத்தை அவர் திரும்பப் பெற்றுவிட்டார்.

## 10. 1908-ஆம் ஆண்டில் வெளிவந்த குற்றத் தூண்டல் தடுப்புச் சட்டம்

### (INSITEMENT OF OFFENCER ACT OF 1908)

நாட்டில் நடைபெறும், கொலை, கொள்ளை, திருட்டு போன்றக் குற்றங்களைத் தூண்டுகின்ற செய்திகளை, கட்டுரைகளை வெளியிடும் பத்திரிகைகள் மீது, அரசு நடத்துவோர் நீதிமன்றத்தில் முறையிட்டால். அந்தப் பத்திரிகைகளை, அச்சடிக்கும் அச்சகத்தை பறிமுதல் செய்யும் அதிகாரம் நீதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது.

அந்த நீதிபதியின் தீர்ப்பு, பத்திரிகையாளர்கட்குப் பாதகமாக இருந்தால் அதை எதிர்த்து மேல் நீதிமன்றத்துக்குச் சென்று முறையீடு செய்திட 15 நாட்கள் கெடு கொடுக்கப்பட்ட வசதியும் ரிப்பன் பிரபு காலத்தில் வழங்கப்பட்டது.

லிட்டன் பிரபு ஆட்சியிலிருந்த இந்தச் சட்டத்திற்குப் பலியான பத்திரிகைகள், அச்சகங்களின் எண்ணிக்கை 963 ஆகும். அவருடைய ஐந்தாண்டுக் கால ஆட்சியில், பத்திரிகைகள் கட்டியிருந்த Deposit தொகை, அதாவது பறிமுதலான பிணையத் தொகை எவ்வளவு தெரியுமா? ஐந்து

லட்சம் ரூபாய். அந்தக் காலத்தில் 5 லட்சம் என்றால் சாமான்யத் தொகையா அது?

## 11. 1910-ஆம் ஆண்டின் பத்திரிகைகள் சட்டம்
## (THE PRESS ACT OF 1910)

அகில இந்திய தேசியக் காங்கிரஸ் பேரவையின் வளர்ச்சி நாளுக்கு நாள் ஆல்போல் தழைத்து மக்கள் மனதிலே அருகு போல வேரோடி வந்தது. இதற்குக் காரணம், ஆண்டாண்டும் இந்த பேரியக்கம் ஒவ்வொரு மாநிலத்திலும் புகழ்பெற்ற கல்விமான்களையும், வழக்குரைஞர்களையும் பல்கலை வித்தகர்களையும், தோற்றுவித்து, அவர்கள் தங்களது உடல், உயிர், உடைமை அனைத்தையும் தேசத்திற்குக் காணிக்கை யாக்கவும் தயாராக இருந்த நிலைதான்!

பண்டித மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு, லாலா லஜபதி ராய், சித்த ரஞ்சன் தாஸ், சுபாஷ் சந்திர போஸ், அரவிந்தர், வீர சாவர்கர், பால கங்காதர திலகர், கோபால கிருஷ்ண கோகலே, இராசேந்திர பிரசாத், வல்லபபாய் படேல், டி.பிரகாசம், நீலம் சஞ்சீவரெட்டி, பெருந்தலைவர் காமராசர், இராசாசி, முத்துரங்க முதலியார், சத்தியமூர்த்தி ஐயர், குமாரசாமி ராஜா, பசும்பொன் முத்துராமலிங்க தேவர், சிலம்புச் செல்வர் ம.பொ.சி., ப.ஜீவானந்தம், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, சேலம் விசயராகவாசாரி, நிஜலிங்கப்பா மொரார்ஜி தேசாய் போன்ற அரும்பெரும் தியாகமணிகளது எழுத்தும், பேச்சும், உழைப்பும், சிந்தனைத் திறனும் ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பேரிடியாய் ஒலித்துக் கொண்டே இருந்தன.

அண்ணல் காந்தியடிகள், தென் ஆப்ரிக்கா வாழ் இந்தியர்களுடைய மனித உரிமைகளுக்காக, சமத்துவ வாழ்க்கைக்காகத் தென்னாப்ரிக்காவில், இதே பிரிட்டிஷ் சாம்ராச்சிய ஆணவ ஆட்சியை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த நேரம்.

உரலுக்கு ஒரு பக்கம் இடி என்றால், மத்தளத்திற்கு இரு பக்கமும், இடியாக அடிக்கும் அரசியல் நெருக்கடிகளை

இந்தியாவிலும், தென்னாப்ரிக்காவிலும் கிரேட் பிரிட்டன் பேரரசு அனுபவித்துக் கொண்டிருந்தது.

இந்தக் காலக் கட்டத்தில் தேசியக் காங்கிரசுக்கு ஆதரவாகவும், நாட்டின் விடுதலை உணர்ச்சிகள் ஆங்காங்கே மக்கள் இதயக் கடலிலே ஆர்த்த அலைகளாய் பொங்கி, எழுந்து, புரண்டு, உருண்டு பேரிறைச்சல்களை எழுப்பிக் கொண்டிருந்த நேரமாக இருந்தமையால், இந்திய மாநிலங்கள் தோறும் அவரவர் தாய் மொழியில் பத்திரிகைகள் தோன்றி ஆங்கில ஆட்சியை எதிர்த்து எழுதிப் போராடி அதிரடித்துக் கொண்டிருந்தன.

பத்திரிகைச் செய்திகளின் உணர்ச்சிகளை நாள்தோறும் படித்து வந்த மக்களின் சுதந்தர எழுச்சி வேகத்தை, ஆங்கில ஆட்சியால் தாக்குப்பிடிக்க முடியாத நிலை உருவாகி வருவதைக் கண்ட ஆங்கில வெறிபிடித்த அதிகாரிகள்; எப்படியாவது பத்திரிகைகள் எழுச்சியை அடக்கி ஒடுக்கிட வேண்டும் என்று திட்டமிட்டார்கள்.

அந்தத் திட்டத்தின் எதிரொலிதான், 1910-ஆம் ஆண்டில் வெளிவந்த பத்திரிகையாளர் சட்டம். இந்தச் சட்டம் லார்டு லிட்டன் காலத்தைய சட்டத்தைவிட மிகக் கடுமையாக இருந்தது.

இந்தச் சட்டத்தின் அடக்குமுறை ஆற்றல் என்ன தெரியுமா? பத்திரிகை நடத்துவோர் 500 ரூபாய் முதல் 2000 ரூபாய் வரை தங்களது பத்திரிகைக்கு முன் ஜாமின் பணம் கட்ட வேண்டும். செய்த குற்றத்தையே மீண்டும் பத்திரிகைகள் செய்யுமானால், ஏற்கனவே கட்டப்பட்டிருந்த பிணையத் தொகையை இழக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, வாழ்க்கை நடத்துவதற்காக வருவாய் தேடும் அச்சகத்தையும் அந்தச் சட்டம் பறிமுதல் செய்துவிடும்.

ஆட்சிக்கு எதிரான செய்திகளை வெளியிட்டால், அஞ்சலக அதிகாரிகள் அந்தப் பத்திரிகைகளை அந்தந்த ஊர் முகவர்களுக்கு அனுப்பாமல் நிறுத்தி வைத்துவிடும் அதிகாரத்தையும் ஆங்கில ஆட்சியர் அஞ்சலகத் துறைக்கு அளித்திருந்தார்கள்.

அச்சடித்த பத்திரிகைப் பிரதி ஒன்றை பத்திரிகை உரிமையாளர் அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். அதிகாரிகள் அளிக்கும் தண்டனையை எதிர்த்துப் பத்திரிகையாளர் நீதிமன்ற விசாரணைக்குப் போக முடியாது. இந்தக் கடுமையான அடக்குமுறைச் சட்டத்தை பத்திரிகையாளர்கள் மீதும், குறிப்பாக அதன் ஆசிரியர்கள் மேலும் ஏவி விட்டது ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சி!

இந்த அதிகாரக் கெடுபிடிகளால் முன் ஜாமீன் தொகையைக் கட்ட முடியாத பத்திரிகைகள் எல்லாம் நின்றுவிட்டன. இன்றைக்கு பாண்டிச்சேரியில் நடக்கின்றதே அரவிந்தர் ஆஸ்ரமம், அதன் உரிமையாளரான அரவிந்த கோஷ் தனது 'பந்தே மாதரம்' பத்திரிகையை உடனே நிறுத்திவிட்டு, பத்திரிகைத் துறையில் பிரிட்டிஷ்காரர்கள் அதிகாரப் பேயாட்டங்களைப் பொறுக்க முடியாமல், அரசியலை விட்டே ஓடி வந்தார்.

பிரெஞ்சு ஆட்சி நடக்கும் பாண்டிச்சேரி நகருக்குள் சந்நியாசியாக நுழைந்து ஆன்மீகவாதியாக மாறிய அவர், ஆஸ்ரமம் நடத்த ஆரம்பித்துவிட்டார்! அவ்வளவுக் கொடுமைகளை அந்தச் சட்டம் பத்திரிகையாளர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருந்தது!

இவ்வளவு அதிகாரக் குத்தலையும், குடைச்சலையும் கொடுத்துக் கொண்டிருந்த அந்தச் சட்டக் கொடூரத்தைக் கண்ட அதே ஆட்சி, 1921-ஆம் ஆண்டில் - அதாவது பதினோறு ஆண்டுகளுக்குப் பிறகு, சர் தேஜ் பகதூர் சாப்ரு என்பவர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, அதன் சாதக பாதகங்களின் பரிந்துரைகளைக் கேட்டு, 1910-ஆம் ஆண்டின் பத்திரிகைச் சட்டத்தை ஆங்கில அரசு திரும்பப் பெற்றுக் கொண்டது.

## 12. 1930-ல் இயற்றப்பட்ட செய்தித்தாள் - அவசரச் சட்டம்

பத்திரிகையாளர்கள் 1921-ஆம் ஆண்டு முதல் 1930 - வரை, சற்று நிம்மதியான சிந்தனைகளோடு தொழிலை வளர்த்து

வந்தார்கள். ஆனால், நாட்டு மக்களது விடுதலைப் போர் உணர்ச்சிகளைப் பத்திரிகையாளர்களால் தடுத்து நிறுத்த முடியுமா என்ன? மக்களது சுதந்திரப் புரட்சி நாளுக்கு நாள் நெய் பெய்யப்படும் நெருப்பு போல புகைந்து புகைந்து சுடர்ப் பொறிகளை வெடித்து வீசிக் கொண்டே இருந்தது.

சுதந்திரச் சுடர்கள் மக்கள் இதயத்திலே பொறிகளாக வெளிவரக் காரணம் பத்திரிகைகள்தான் என்பதை உணர்ந்த ஆட்சியின் அதிகாரிகள், 1930-ஆம் ஆண்டில் செய்தித்தாள் அவசரச் சட்டம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

என்ன இந்தச் சட்டத்தின் நோக்கம்? ஏன் அவசரம் அவசரமாக இந்தச் சட்டம் வந்தது? என்றெல்லாம் விவரம் கேட்ட பத்திரிகையாளரிடம், ஆட்சி அதிகாரிகள் அறிவித்த அறிவிப்பு என்ன தெரியுமா?

"அவசியம் எப்போதெல்லாம் ஆட்சிக்கு ஏற்படுகின்றதோ, அப்போதெல்லாம் செய்தித் தாட்களை நிறுத்தி வைப்போம்" என்ற உரிமையை அரசிற்கு அந்தச் சட்டம் வழங்கியுள்ளது என்றார்கள் அந்த அதிகாரிகள்!

இந்த அவசரச் சட்டத்தைக் கண்டு எந்த இந்திய மொழிப் பத்திரிகையாளர்களும் அயரவில்லை; அஞ்சவில்லை. அவர்கள் மேலும்மேலும் எரி எண்ணெயில் தோய்த்த தீப்பந்தம் போலவே எரிந்து எரிந்து எழுதினார்கள். உரிமைத் தீ சுடரிட ஆரம்பித்தது.

## 13. 1931-ல் பத்திரிகைகள் சந்தித்த நெருக்கடிக் கால அவசரச் சட்டம்
## (INDIAN PRESS EMERGENCY ACT 1931)

இந்திய விடுதலைப் போரின் தந்தையான அண்ணல் காந்தியடிகள் அடிக்கடி அறப்போர் புரிந்து வருவதை உலக நாடுகள் எல்லாம் அறிந்த ஒன்று.

அதற்கேற்ப காந்தியடிகள் 1931-ஆம் ஆண்டில் வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து சட்டமறுப்பு அறப்போர்

இயக்கம் நடக்கும் என்று அறிவித்ததால், போராட்டமும் நடந்து கொண்டிருந்தது.

நாடு பொங்குமாங்கடலானது. மக்கள் சுனாமி அலைகளென ஆங்காங்கே கொந்தளித்துப் போராடினார்கள்.

மக்கள் அறப்போராட்டத்தின் உணர்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டிய பத்திரிகைகள் மீது, ஏகாதிபத்திய ஆட்சி 1931-ஆம் ஆண்டில் இயற்றிய சட்டத்தைப் பத்திரிகை யாளர்கள் மீது ஏவியது. என்ன அந்தச் சட்டத்தின் கொடுமை என்கிறீர்களா?

வேறொன்றுமில்லை; பத்திரிகைகள் 2000 ரூபாயை முன் ஜாமீனாக ஏற்கனவே கட்டி வந்த நிலையை மாற்றி, இப்போது 10,000 ரூபாயைப் பிணையத் தொகையாகக் கட்ட வேண்டுமென கட்டளையிட்டது. பத்திரிகையாளர்கள் மட்டுமல்ல; எந்த அச்சகம் அந்தப் பத்திரிகையை அச்சடிக்கின்றதோ, அந்த அச்சகத்தாரும் 10,000 ரூபாயைப் பிணையத் தொகையாகக் கட்ட வேண்டும் என்பது அச்சட்டத்தின் முதுகெலும்பு நோக்கமாகும்.

இவற்றுக்கெல்லாம் மேலான வேறோர் கொடுமை என்ன தெரியுமோ?

அச்சகமும், பத்திரிகை உரிமையாளரும் கட்டிய பிணையத் தொகைகளை, மாநில அரசுகளே கபளீகரம் செய்து கொள்ளும் அதிகாரமும் உடையது அந்தச் சட்டம்? எப்படி நெருக்கடிச் சட்டம்? அதன் கொடுமை?

# 14. 1932 - ல், மற்ற நாடுகளின் வெளி உறவு முறைச் சட்டம்

## (FOREIGN REGULATION ACT 1932)

உலகப் பேரரசு என்றால், போர்க் கால நடவடிக்கைகளை அடிக்கடி சந்திக்கும் சூழ்நிலைகள் அதற்கு உருவாவதுண்டு. 1914-ஆம் ஆண்டில் உலக முதல் போர் ஆரம்பமாகி, 1918-ல் முடிந்தபோது, உறவு நாடுகள் - பகை நாடுகள் என்ற அணிகள் உருவாயின.

அதிலும் குறிப்பாக, ஐரோப்பா கண்டம் என்றாலே, எப்போது பார்த்தாலும் - தமிழ்நாட்டு மூவேந்தர்களைப் போல எங்காவது ஒரு மூளையில் போரொலி கேட்டுக் கொண்டே இருக்கும் கண்டம் அது! இங்கிலாந்து நாட்டுக்குக்கும் அதில் பங்குண்டு என்பது உலக வரலாறு.

அதற்கேற்ப, கிரேட் பிரிட்டனுக்கும் நட்புறவு நாடுகள், பண்டைய நாடுகள், பகை நாடுகள் ஆகிய அணிகள் உண்டாகலாமல்லவா? அதனால், அவற்றுக்கு எதிராக இந்தியப் பத்திரிகைகள் பத்திரிகை மூலம் எந்தவிதக் கருத்தையும் கூறிட வாயைத் திறக்கக் கூடாது.

வெளிநாடுகளின் உறவு இருக்கும்வரை எந்த ஒரு செய்தியினையும் ஆதரித்தோ - எதிர்த்தோ பத்திரிகைகளில் எழுதக் கூடாது என்பதற்காகவே கொண்டு வரப்பட்ட சட்டம் இது.

## 15. 1934-ல் வெளி வந்த இந்திய அரசின் பாதுகாப்புச் சட்டம்

இந்தச் சட்டம் இந்தியாவிலே உள்ள சிற்றரசுகளைச் செய்தித்தாள்கள் தாக்கி எழுதக் கூடாது என்று பத்திரிகை யாளர்களது பேனாமுனைகளுக்குத் தடை விதிக்கப்பட்ட சட்டம் இது. ஏனென்றால், சிற்றரசுகள் எல்லாம் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு தரும் சூழ்நிலைகள் அமைந்துவிடக் கூடாதல்லவா? அதனால்!

# 10

## பத்திரிகை வளர்ச்சிகளை அழிக்கும் அடக்குமுறைச் சட்டங்கள்!

'வாள்முனையின் வலிமையைவிட பேனா முனையின் சக்தி பலம் வாய்ந்தது' என்றான். பிரெஞ்சு நாட்டின் எழுத்துலகச் சிற்பியான வால்டேர்! என்ன காரணம் அதற்கு?

ஒரு பேரரசை, ஏகாதிபத்திய ஆட்சியைப் பேனா முனையில் அழிக்கவும் முடியும்; ஆக்கவும் முடியும். எழுதுகோல் சிந்தனையால் கவிழ்க்கவும் இயலும்; காக்கவும் முடியும்' என்றான் சமயப் பற்றற்ற அந்தச் சான்றோன்.

அதனால்தான் அரசியல் சட்டத்தை மக்களாட்சிக்காக வகுத்த வித்தகம், அரசியல் சட்டம், நாடாளுமன்றம்; நீதிமன்றம் என்ற முப்பெரும் சக்திக்கும் மேலாக - நான்காவதாகப் பத்திரிகைப் பலத்தை அரணாக அமைத்தது.

எனவே, ஓர் அரசு நிலையாகச் செயல்பட வேண்டுமானால் பத்திரிகைகள் அவற்றின் உரிமைகளோடு சுதந்திரமாகச் செயல்படவேண்டும் என்று எண்ணினர் அரசியல் மேதைகள்.

அவை அவ்வாறு செயல்படாமற்போனால், ஆட்சிக்கு அடிமைகளாக இயங்கினால், எந்த மக்களாட்சியாலும்

நாட்டுக்குரிய நலன்களை செய்யமுடியாமல், கேடுகளை, தீமைகளை உருவாக்கும் என்பது உறுதி.

இன்றையப் பத்திரிக்கைகள் வெளியிடும் செய்திகளில், எழுதும் கருத்துக்களில் எவை உண்மை, எவை உண்மை யற்றவை என்பதை மக்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவற்றால் நாட்டிலே குழப்பங்களும், கலகங்களும், கலவரங்களும், அராஜகங்களும், அநீதிகளும் உண்டாகின்றன.

அதற்கு அடிப்படை நோக்கங்கள் என்ன? பத்திரிகையாளர்களில் பலர் ஒரு செய்தியை அவரவர் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறுவெளியிடுகின்றனர் எதற்கெடுத் தாலும், உரிமைகள், சுதந்திரம் என்று அலறிக்கொண்டு வியாபாரக் குறிக்கோள்களுடன், பண ஆசையுடன், கட்சிகள் நோக்குடன், அரசியல் லாப நட்ட பதவி வெறிப் பிடிப்பு களுடன் செய்திகளை அவரவர் கண்ணோட்டங்களுக்கேற்ப வெளியிடும் அதர்மச் செயல்களிலே ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தகையச் செய்திகளை, கருத்துக்களைப் படிக்கும் மக்களில் பலர், மிருக உணர்ச்சிகளுக்குப் பலியாகின்றார்கள். பாலுணர்ச்சிகளுக்கு இரையாகின்றார்கள். சாதி, மத, அரசியல், பொருளாதாரப் பேதக் கலகங்களுக்கு ஆட்பட்டு, அரசியல், மதவியல், சாதிவியல் கலவரங்களை உருவாக்குகின்றார்கள். மக்கள் அமைதியான வாழ்க்கையை நடத்த முடியாமல் கோப, தாப உணர்ச்சிகள் உண்டாகி அடிதடி, குத்துவெட்டு, காவல் நிலையங்களின் கோரக் கெடுபிடிச் செயல்கள், இறுதியாக நீதிமன்ற நிழலை நாடி அமைதிகாணும் களைப்பு நிலைகள் ஏற்படுகின்றன.

சுதந்திரமாக உள்ள நாடுகளானாலும், அடிமை நாடுகளானாலும், ஆங்காங்கே இத்தகையச் சம்பவங்கள் அடிக்கடி தலைவிரித்தாடுவதை நாம் பார்க்கின்றோம். அத்தகையக் காலங்களில் பத்திரிகைகளில் வரும் செய்திகளை கருத்துக்களை ஒரு வரம்புக்குள் கட்டுப்படுத்தும் சூழ்நிலைகள் உண்டாகின்றன.

இந்த நோக்கத்தைத் தவிர்க்க வேண்டும் என்று எண்ணிய R.C.S.சர்க்கார், தனது 'இந்தியாவில் பத்திரிகைகள் நிலை' என்ற நூலில் 'பத்திரிகைச் சுதந்திரம் என்பது ஒரு தேவையான தீமையாகும்' என்கிறார்.

பத்திரிகைச் சுதந்திரத்தைச் தவறாகப் பயன்படுத்தும் இதழ்களுக்கும், சரியாக நடத்தும் பத்திரிகைகளுக்கும் இடையே உள்ள கட்டுப்பாடுகளில், ஒரு நடுநிலை நோக்கு உருவாக்கப்பட வேண்டும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

'சர்க்கார்' எழுதிய நோக்கத்திற்கு மாறாக, ஆங்கிலேயர் ஆட்சி, பத்திரிகைகள் மீது ஏவி விட்ட அடக்கு முறைகளையும் நாம் உணர்ந்தால்தான், அவர் ஏன் அவ்வாறு குறிப்பிட்டார் என்பதின் அருமையை நம்மால் உணர முடியும்.

இந்தியாவில் ஆங்கில ஏகாதிபத்தியம் ஏறக்குறைய இரண்டரை நூற்றாண்டாக நடைபெற்று வந்தது. அந்தக் கால கட்டத்தில் இந்திய மொழிகளில் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்தும் வந்தன.

அந்தப் பத்திரிகைகள் தனது நாட்டின் அடிமை விலங்கைத் தகர்த்தெறியத் தீவிரமாக உழைத்தன. ஆங்கிலேயர் ஆட்சி இந்தியர்களை மிருக உணர்ச்சிகளோடு நடத்தி வந்தக் கொடுமைகளை எதிர்த்து அவை எழுதின. அரசாங்கத்தில் இந்திய மக்களுக்குரிய வாழ்வியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்பதற்காக அக்காலப் பத்திரிகைகள் போராடின. அதற்காகவே, அகில இந்திய தேசியக் காங்கிரஸ் பேரவை என்ற இயக்கம் 1885-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது.

அந்த நேரத்தில் மக்களுக்குத் தேசிய சுதந்திர உரிமைகள் தேவை என்பதற்காக இந்தியர்களால் ஆங்கிலேயர் ஆட்சியிடம் ஏராளமான மனுக்கள் கொடுக்கப்பட்டன. அவற்றை எல்லாம் அந்த அன்னிய அரசு மதிக்கவில்லை.

இங்கிலாந்திலிருந்து வெள்ளையர்களை கொண்டு வந்து, இந்திய அரசு ஆட்சிப் பதவிகளில் வலிய வலியத் திணித்து, இந்திய மக்களின் சாதாரண சமத்துவ உரிமைகளைக்கூட

புறக்கணித்த ஆட்சிக் கொடுமைகளை எதிர்த்து, இந்திய மொழிகளில் பத்திரிகைகளை ஆரம்பித்து நடத்திப் போராடின.

மக்களின் அந்த அடிப்படை வாழ்க்கையின் நியாயமான உரிமைகளைத் தங்களது பத்திரிகைகளில் எழுதியும், மனுக்கள் பல கொடுத்தும், நேரிடையாகப் பெரிய அதிகாரிகளைப் பேட்டிகண்டும், தலைமை ஆளுநரைக் கேட்டுப் பார்த்தும் சலித்துவிட்ட காரணத்தால், இந்தியப் பத்திரிகைகள் சற்று காரசாரமாகவே ஆட்சியை எதிர்த்து எழுத ஆரம்பித்தன.

இந்திய மக்களுக்காக கேட்கப்பட்ட உரிமைகளை, வசதிகளை ஆங்கில அரசு வழங்காததோடு, உரிமைக்காக வாதாடும் பத்திரிகைகளை அடக்குமுறைகளால் அழித்துவிடச் சில தடைச் சட்டங்களை இயற்றி அமல்படுத்த ஆரம்பித்தது. அந்தச் சட்டங்கள் எப்படிப்பட்டவை என்பதை உணர்ந்தால்தான் நாம் எப்படிப்பட்ட ஏகாதிபத்திய வெறிபிடித்த ஆட்சியின் கீழ் அடிமைகளாக வாழ்ந்தோம் என்பதை ஓரளவாவது அறியலாம் அல்லவா? அந்தச் சட்ட வகைகள் வருமாறு:

# 11

# பத்திரிகை நடத்துவோர்க்குரிய பொதுவான அடிப்படைச் சட்டங்கள்

## *1. மான இழப்பு வழக்குச் சட்டம்*

வேளாண்மை செய்யும் உழவனுக்கு எப்படி ஏர் உழும் கருவியும், மாடும் தேவையோ, அதைப்போல பத்திரிகை நடத்த விரும்புபவர்களுக்கு மனம்போனபடி எழுதும் உணர்சிகளுக்கு அடிமையாகாத எச்சரிக்கையும், பொறுப்பான கவனமும், கட்டுப்பாடும், கண்ணியத்தோடு சிந்தனைகளை ஓடவிடும் கடமையும் தேவையாகும். தவறினால் ஒருவரின் பெருமையைச் சிறுமைப் படுத்தும் மான இழப்புக்கு; எழுத்தும், கருத்தும் காரணங்களாகிவிடும். அதனால், குற்றவியல் சட்டத்திற் கேற்ப Criminal Law வழக்கையும், சமுதாயவியல் சட்டத்தின்படி Civil Law நடவடிக்கைகளையும் சந்திக்கவேண்டிய நிலைகள் உண்டாகும்.

தனிப்பட்ட ஒருவரைப் பத்திரிகையாளர் ஒருவர் இழிவுபடுத்தி அவதூறாக (Scandal) எழுதினார் என்ற குற்றத்திற்கும், எழுத்து வாயிலாக அவதூறானக் கருத்தைப் பத்திரிகையில் வெளியிட்டார் Libel என்ற குற்றத்திற்கும் அந்த இதழாளர் ஆளாக நேரிடலாம். இந்தியக் குற்றவியல் IPC

சட்டத்தின் 499-ம் பிரிவுப்படி எந்தக் குற்றம் அதற்குப் பொருந்துகிறதோ, அதற்கேற்றவாறு, 500-ஆம் பிரிவுச் சட்டப்படி தண்டனையை ஏற்கவேண்டிய நிலை எழும்.

ஒருவரை அவமதிக்கும் வகையில் பேசுவதோ அல்லது எழுதுவதோ, சைகைகள் மூலம் வெளிப்படுத்துவதோ, அவமதிப்புக் குற்றத்தின்கீழ் வருமானால், அதற்கு மூன்று காரணங்கள் அமைந்திருக்கவேண்டும். அவை:

1. எந்த ஒரு மனிதனையாவதுஅவமதித்திருக்க வேண்டும்.

2. அத்தகைய அவதூறைப் பேசிய அல்லது மற்றவர்கள் படிக்க வேண்டுமென்று எழுதிய சொற்களாலோ, ஜாடை மாடைகளால் அதைப் புரிந்து கொள்ளக்கூடிய மறைமுக முறைகளாலோ அந்தக் குற்றம் அமைந்திருக்க வேண்டும்.

3. அந்த அவதூறு ஒருவரின் பெருமையைச் சிறுமைப் படுத்தும் குறிக்கோளோடோ அல்லது அவரின் சமுதாயத் தகுதிகளை அவமானப்படுத்தப்பட வேண்டும் என்பதை வேண்டுமென்றே அறிந்து எழுதப்பட்டதாகவோ, பேசப்பட்ட தாகவோ இருக்கவேண்டும்.

அவதூறுத் தொடர்பானவற்றை - வெறுப்பைக் - கிண்டலை, கேலியைத் - தூண்டக் கூடியவையாக இருக்க வேண்டும்.

அதனால், சம்பந்தப்பட்டவரை மக்கள் வெறுத்தோ, புறக்கணித்தோ, ஒதுக்கப்படக்கூடிய சூழ்நிலைகளோ அமைந்திருக்க வேண்டும்.

அந்த ஆளின் பணியையோ, தொழிலையோ பாதித்து அவமானப்படுத்தியதாகவோ அந்தக் குற்றம் இருக்கவேண்டும். அல்லது அவரது வியாபாராத்தைச் சீர்குலைப்பதாக அது இருந்தாலும் குற்றமாகும்.

### விதிவிலக்குகள்:

ஒருவரை அவமதிப்புச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட பத்து சூழ்நிலைகளில் தண்டிக்க முடியாது என்று 499ம் சட்டப் பிரிவு

விதி விலக்குக் கூறுகின்றது. அந்தப் பிரிவு கூறும் பத்து வகை விதிவிலக்குகள் இவை:

1. பொது நலனை எண்ணி உண்மையை வெளியிடாமல் இருப்பது.

2. பொது நன்மைகளைக் க்ருதி சிலவற்றை வெளியிடுவது.

3. அரசில் பணிபுரியும் பணியாளர்களைப் பற்றி நியாயமான எண்ணங்களைக் கூறுவது.

4. பொது நலன்களுக்குத் தேவையானது என்று தெரிந்தால் அதற்காக வாதாடுவது.

5. நல்ல எண்ணங்களோடு வழக்கு மன்ற நடவடிக்கைகளை வெளியிடுவது.

6. நீதிமன்ற தீர்ப்புப் பற்றியோ, சான்று பற்றியோ, நல்ல எண்ணத்தோடு கருத்தறிவிப்பது.

7. பொது நடவடிக்கைகள் பற்றிப் பொது நல நோக்கத்தோடு அவற்றை விமர்சனம் செய்வது.

8. சட்டப்படி அதிகாரம் உடையவர்கள் சட்ட எல்லைக்குள் கருத்து அறிவிப்பது.

9. அதிகாரத்தில் உள்ளவர்களின் குறைகளை நற்சிந்தனை களோடு குறிப்பிட்டுக் கூறுவது.

10. பொது நன்மைகளைக் குறித்தோ, தனிப் பட்டவர்களையோ காப்பாற்றுவதற்காகச் சிலரைக் குறைக்கூறி, பொதுநலனுக்காக ஒருவரை எச்சரிக்கைச் செய்வது ஆகிய பத்து வகைச் சூழ்நிலைகளும் அவமதிப்புக் குற்றமாகாது.

## வழக்குத் தொடுப்பு:

1973-ம் ஆண்டின் குற்றவியல் வழக்குத் தொடர்பின்படி 199(1) யார் அவமதிப்புக்கு ஆளானார்களோ, அவர்கள்தான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியும். ஆனால், இந்திய

குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், மாநில ஆளுநர், மத்திய, மாநில மந்திரிகள் ஆகியவர்கள் அவமதிப்புக் குற்றத்திற்கு ஆளானதாகக் கருதினால், அவர்கள் சார்பில் அரசு வழக்குரைஞர்கள் வழக்கைத் தொடுக்கலாம்.

அவமதிப்பு வழக்கைத் தொடுப்பவர், யார் அவமதிப்பு செய்தாரோ அவர் மீது மட்டுமின்றி, அந்தச் செய்தியை வெளியிட்ட பத்திரிகையின் பதிப்பாளர், அச்சகத்தார், அதனை எழுதிய ஆசிரியர் ஆகிய அனைவர்மீதும் அவமதிப்பு வழக்கைத் தொடரலாம். வழக்கு மன்றத்தில் அது உண்மை யானதுதான் என்று நிரூபிக்கப்பட்டால் அனைவருக்கும் தண்டனை உண்டு.

தண்டனை

வகைகள்

தண்டனை பெற்ற அவமதிப்பாளர்களுக்கு குற்றவியல் சட்டத்தின் 500-வது பிரிவின்படி, 2 ஆண்டுகள் வரை சிறை தண்டனையோ, அபராதமோ அல்லது இரண்டுமோ சேர்ந்து கொடுக்கப்படலாம்.

சட்டக் குழு (The Law Commission) மேற்கண்ட இரண்டு தண்டனைகளுடன், நீதிமன்றத் தீர்ப்பைப் பத்திரிகைகளில் வெளியிடவும், வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடுத்தோரின் செலவுகளையும் ஏற்றாக வேண்டுமென்றும் பரிந்துரைத் துள்ளது.

எனவே, மான இழப்பு வழக்குத் தொடுத்தவர் பொது சட்டத்தின்படி இழப்பீடு தொகையைப் பெறலாம். குற்றவியல் சட்டப்படி அவமதிப்பு செய்தவர் தண்டனை பெறுவார்.

# 12

## நாடாளுமன்ற நடவடிக்கைகளில்:

# பத்திரிகைகளைப் பாதுகாக்கும் ஃபெரோஸ் காந்தி சட்டம்!

மக்களாட்சி எனப்படும் ஜனநாயகத் தத்துவத்திற்கு, அரசியல் சட்டம், நாடாளுமன்றம், நீதிமன்றம் மூன்றும் விலைமதிக்க முடியாத மும்மணிச் செல்வங்களாகும். அத்துடன் நான்காவதாக நடமாடும் நான்மணிச் செல்வம் பத்திரிகை களாகும். இவை நான்கும் ஒரு நாட்டிற்குத் தேவையான மதிப்பையும், மரியாதையையும், பெரும் புகழையும் தேடித் தருகின்ற 'நான்மணிக் கடிகை' ஆகும்.

ஒரு நாட்டின் ஆட்சியை ஏற்று நடத்துவது நாடாளுமன்றமும், அந்தந்த மாநில சட்டமன்றங்களுமாகும். அதனால், அந்த ஆட்சிமன்றங்களில் நடைபெறும் செய்திகளை நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பது பத்திரிகைக்ளின் மக்களாட்சிக்குரியத் தொண்டுகளாகும்.

அந்த மக்களாட்சியின் தூது தத்துவத்தைப் பத்திரிகைகள் கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும், பொறுப்புணர்வு களுடனும், சேவை மனப்பான்மையுடனும், கவனத்துடனும் நிறைவேற்ற வேண்டும்.

நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் நடை பெறும் அரசியல், பொருளியல், சமுதாயவியல் நடவடிக்கை

களைப் பத்திரிகைகள் எந்தவிதச் செய்திக் கலப்படமும் செய்யாமல் 'உள்ளது உள்ளபடியே' நாட்டு நன்மை நாடி பத்திரிகைகளில் வெளியிடவேண்டும்.

பொறுப்போடு அவ்வாறு வெளியிடாவிட்டால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் களின் உரிமை மீறல் குற்றமோ, ஆட்சிமன்றங்களை அவமதித்தக் குற்றமோ பத்திரிகைகளுக்கு வந்துவிடும்.

பொதுவாழ்க்கையில் ஈடுபட்டுவிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தந்த ஆட்சி மன்றங்களில் ஆற்றும் பணிகளைப் பத்திரிகைகள் கவனக்குறைவு இல்லாமல் வெளியிடவேண்டும்.

தவறு நேர்ந்தால் அந்தந்த ஆட்சி மன்றங்களின் பணிகளுக்கு இழுக்கு நேர்ந்ததாகக் கருதி, பத்திரிகைகள் மீது உரிமை மீறல் குற்றமும், ஆட்சி மன்றங்களின் அவமதிப்பும் ஏற்பட்டுவிடும். ஆகவே, எந்தவிதக் குறைகளும் நேராதபடி அவற்றின் நடவடிக்கைகளை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது பத்திரிகைகளின் கடமை.

உரிமை மீறல் குற்றம் என்றால் என்ன? என்பதற்கான சட்ட விளக்கம் திட்டவட்டமாக எதுவும் இல்லையென்றாலும், ஆட்சி மன்றங்களின் நடவடிக்கைகளை தவறாக வெளியிடுதலும், சபைகளது நடவடிக்கைகளை வேண்டு மென்றே சிதைத்துப் பதிப்பித்தலும், அவைத் தலைவர்கள் அவை நடவடிக்கைகயை வெளியிடக்கூடாது என்று நீக்கியப் பகுதிகளை வெளியிடுதலும், சபைகளின் உரிமைகளை மீறல் என்ற பெயரில் பத்திரிகைகள் மீது குற்றங்கள் கூறப்படுகின்றன.

இவ்வாறு உரிமை மீறல்களைச் செய்யும் பத்திரிகைகளை தண்டிக்கும் அதிகாரம் வழக்குமன்றங்களுக்கு இல்லை. அதற்கான முழு முதல் அதிகாரம் நாடாளுமன்றம், சட்ட மன்றங்களுக்கு மட்டுமே உண்டு.

எடுத்துக்காட்டாக, 1987-ம் ஆண்டில் 'ஆனந்தவிகடன்' என்ற தமிழ்ப் பத்திரிகையில் வெளியான ஒரு கேலிச் சித்திரம்

(Cartoon) சட்டமன்ற உறுப்பினர்கள் பணிகளை அவமதித்த தாகக் கூறப்பட்டது. அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் சட்டமன்றத்தால் தண்டிக்கப்பட்டு சிறை தண்டனையும் பெற்றார். இந்தச் சம்பவம் உரிமை மீறலுக்குரிய எடுத்துக்காட்டாக உள்ளது.

## 1. பத்திரிகைக்குப் பாதுகாப்புச் சட்டம்:

இந்திய நாடு ஆங்கிலேயரிடமிருந்து விடுதலைப் பெற்றப்பிறகு, 1956-ம் ஆண்டில் நாடாளுமன்ற நடவடிக்கைகளைப் பத்திரிகைகள் வெளியிடும்போது தவறு ஏற்பட்டுவிட்டால் தண்டனை தருவதோடு மட்டும் நிற்காமல், பாதுகாப்பும் வழங்கப்படவேண்டும் என்ற எண்ணம் ஃபெரோஸ் காந்தி Feroz Gandhi என்ற நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஏற்பட்டது. இந்தச் "சட்டத்திற்கு The Parlimentary Proceedings, Protection of Publication Act - 1956" என்று பெயர்.

நாடாளுமன்ற நடவடிக்கைகளைப் பத்திரிகைகள் பிரசுரிக்கும்போது, அவற்றுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக ஃபெரோஸ் காந்தி நாடாளுமன்றத்தில் வாதாடி சட்டம் கொண்டுவந்ததால் அந்தச் சட்டத்திற்கு ஃபெரோஸ் காந்திச் சட்டம் என்ற பெயர் ஏற்பட்டது. இந்த சட்டத்தின் நோக்கம் இது:

'நாடாளுமன்ற செயற்பாடுகளை, தீய குறிக்கோளோடு பத்திரிகைகள் தவறாக வெளியிட்டுள்ளன என்பதை உறுதி செய்யப்பட்டால்தான் - தண்டனை வழங்கலாம். நாடாளுமன்ற நடவடிக்கைகள் அவதூறுகளாக இருந்தாலும் - அவை உண்மைகளாக இருந்தால், அவற்றை வெளியிடுவது உரிமை மீறலாகாது' என்று ஃபெரோஸ் காந்திச் சட்டம் கூறுகின்றது.

இந்தியாவில் நெருக்கடி காலச் சட்டம் வந்தபோது Emergency ஃபெரோஸ்காந்தி சட்டம் நீக்கப்பட்டுவிட்டது. நெருக்கடி முடிந்ததும் இந்தச் சட்டம் மீண்டும் உயிர்பெற்று அமலுக்கு வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## 2. எரியீட்டி மீது உரிமை மீறலா?

தமிழ்நாட்டுச் சட்டமன்ற நடவடிக்கையை ஒரு கேலிச் சித்திரத்தின் மூலமாக அவமதித்துவிட்டது 'ஆனந்தவிகடன்' பத்திரிகை என்பதற்காகத் தண்டனை தந்த அவமதிப்பு சட்டம் வாழும்போதுதான் 'மாலைமணி' என்ற நாளேட்டில் வெளிவந்த 'எரியீட்டி' என்ற ஒரு கட்டுரை ஃபெரோஸ் காந்தியின் பாதுகாப்புச் சட்டத்தின் பலனைப் பெற்று மீண்டது.

1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தி.மு.கழகக் கூட்டணிச் சார்பாக, தமிழ்நாட்டுச் சட்டப்பேரவைத் தலைவராக இருந்த 'தினத்தந்தி' நிறுவனர் சி.பா.ஆதித்தினார், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம், சென்னிமலையிலோ அல்லது பெருந்துறை தொகுதியிலோ போட்டியிட்ட ஒரு சோசலிஸ்ட் கட்சி உறுப்பினர் பாலசுப்பிரமணியம் போன்றவர்கள் உதய சூரியன் சின்னத்தில் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்று சட்டமன்ற உறுப்பினரானார்கள்.

கூட்டணி சார்பாக வெற்றி பெற்ற சோசலிஸ்ட் பாலசுப்பிரமணியம், கூட்டணியில் இருந்துகொண்டே தி.மு.கழக நடவடிக்கையை எதிர்த்துப் பொது மேடைகளில் பேசி வந்தார்.

அவருடைய அரசியல் தாக்குதலுக்கு மாலைமணி நாளேட்டின் 'எரியீட்டி'க் கட்டுரைப் பகுதியில் பதில் எழுதவேண்டிய நிலை ஏற்பட்டது. 'எரியீட்டி'க் கட்டுரையின் நோக்கம் என்னவென்றால்:

> நிலவை உடைத்து அதன் ஒளியை மையாக்கி, தென்றலின் இதமான குளிர் நடையிலே எழுதுகோலை உலாவவிட்டு தி.மு.கழக அரசியல் நண்பர்களை வரவேற்று வாழ்த்துப் பாடும் அன்புரைப் பண்பு 'எரியீட்டி'யின் நோக்கமாகும்.
>
> அந்த நண்பர்கள் அரசியலில் துரோகிகளாக மாறும்போது, சூரியன் கக்கும் கனல்களை மையாக்கி, சித்திரைத் திங்கள் கோடையிலே எழுதுகோலை துவைத்துக் கொதிக்கக் கொதிக்க,

கோபம் கொந்தளிக்கத் துள்ளுநடை போட்டுக் கண்டன நெருப்பைக் கக்கித் தாக்கும் குணமுடையது 'எரியீட்டி'.

மேற்கண்ட குணங்களோடு அந்த சோசலிஸ்ட் உறுப்பினரின் கூட்டணித் துரோகத்தைச் சாடியது. அக்கட்டுரைக்குத் தலைப்பு என்ன தெரியுமா? 'உதய சூரியன் ஒளியிலே மலம்கூட விளம்பரம் பெறுகிறது' என்பதுதான். இதைப் படித்த சோசலிஸ்ட் உறுப்பினர் தமிழ்நாடு சட்டப் பேரவை நடக்கும்போது, 'மாலைமணி' பத்திரிகை மீது உரிமை மீறல் பிரச்சனையைக் கொண்டு வந்தார். 'எனது தொகுதி மக்களுக்கு என்னைப் பணியாற்றவிடாமல் மாலைமணி எரியீட்டி மிரட்டித் தடுக்கின்றது'' என்று பேசினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் அப்போது முதலமைச்சர். சி.பா. ஆதித்தனார் சட்டப் பேரவைத் தலைவர். அவர்கள் ஒப்புதலுடன் சோசலிஸ்ட் உறுப்பினரின் உரிமை மீறல் தீர்மானம் வாத - விவாதத்திற்குப் பிறகு அது உரிமை மீறல் குழுவின் ஆய்வுக்குச் சென்றது. என்ன முடிவு என்று கேட்கிறீர்களா?

சட்டப்பேரவை ஆய்வுக் குழுவுக்குச் சென்ற ஓர் உரிமை மீறல் தீர்மானம், சட்டப்பேரவையில், மூன்று நாட்களல்ல, மும்முறை மன்றம் கூடிக் கலைந்துத் துவங்கும்போது, அந்த தீர்மானத்தைப் பேரவை புதுப்பித்துக்கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு Renewal செய்யாமல், தீமானத்திற்குப் புத்துயிர் அளிக்காவிட்டால், புது உரமூட்டப்படாவிட்டால் அந்தத் தீர்மானம் தானாகவே செத்துவிடும். அதற்கேற்ப, அந்த தீர்மானம் இயற்கையாகவே இறந்த பிணமாகிவிட்டது.

அந்த 'எரியீட்டிக் கட்டுரை எழுதியவர் இந்தப் புத்தகத்தை எழுதிய புலவர் என்.வி.கலைமணி என்பவர்தான். ஏன் இதை இங்கே கூறுகிறோம் என்றால், எந்தக் கட்டுரை எழுதினாலும், எவரைப் பற்றி எழுதினாலும், உணர்ச்சிக்குப் பலியாகி உரிமை மீறல் பிரச்சனைக்கு எந்த பத்திரிகையாளரும் ஆளாகி விடக்கூடாது என்பதற்காகவே சுட்டிக் காட்டினோம். ஃபெரோஸ் காந்தியின் பத்திரிகைப் பாதுகாப்புச் சட்டம்

அன்றைய முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் சிந்தனையிலே ஊடுருவியதால், 'எரியீட்டி' ஆசிரியர் தண்டனை பெறாமல் மீண்டார் என்பதைச் சுட்டிக் காட்டவே இங்கு அதனைக் குறிப்பிட்டோம்.

எனவே ஃபெரோஸ் காந்திச் சட்டத்தைப் பத்திரிகை யாளர்களால் வாழ்த்தி வரவேற்காமல் வாழ முடியுமா? சிந்தித்துப் பாருங்கள்.

## 3. நீதிமன்றம் நிந்தனைக் குற்றம்

ஒரு ஜனநாயக ஆட்சிக் கோட்டையைத் தாங்கிக் கொண்டிருக்கும் நான்கு தூண்களில் மூன்றாவது தூண் நீதிமன்றம். நான்காவது தூணாக விளங்குவது பத்திரிகைத் துறை.

நீதிமன்றங்களில் நடைபெறும் முக்கியமான, மக்கள் கவனத்தை ஈர்க்கக்கூடிய, சிக்கலான, சுவையான, பொதுமக்கள் நலன்களோடு சம்பந்தமுடைய வழக்குகளின் நடவடிக்கைகளை அறிந்துகொள்வதில் மக்களும் அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள்.

அந்த ஆர்வத்தைப் பத்திரிகைகள் மக்களிடையே வளர்ப்பதின் மூலமாக - நீதிமன்றங்களின் பெருமைகளை, அரிய நீதிகளின் அருமைகளை, அவ்வப்போது எடுத்துரைக்கும் சீரிய பணிகளைப் பத்திரிகைகள் செய்கின்றன.

ஆனால் ஒன்று, நீதிமன்றங்களது வழக்கு நடவடிக்கைகளை மிகக் கவனமாக பத்திரிகைகளில் எழுதவேண்டும். இல்லாவிட்டால் நீதிமன்றங்களை அவமதித்த குற்றத்திற்குப் பலியாவோம்.

இந்தப் புத்தகத்தை எழுதிய ஆசிரியர் புலவர் என்.வி.கலைமணி, 'முரசொலி' நாளேட்டில் துணை ஆசிரியராகப் பணியாற்றியபோது, சீன ஆக்ரமிப்புபோர் நடந்த நேரத்தில், தமிழ் நாட்டில் அமைச்சராக இருந்த எம்.பக்தவச்சலத்தை எதிர்த்து காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சி.வி.எம்.அண்ணாமலை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றுவிட்டார்.

தோற்றுவிட்ட சி.வி.எம். அண்ணாமலை, முதலமைச்சர் பக்தவச்சலத்தை எதிர்த்து தேர்தல் வழக்குத் தொடுத்தார். அந்த வழக்கு திரு மயிலையிலே உள்ள தேசிகாச்சாரி சாலையிலுள்ள ஒரு தனி பங்களாவில் திரு.சத்திய நாராயணா என்ற நீதிபதி தலைமையில் நடைபெற்றது. ஏறக்குறைய ஓராண்டுக் காலம் நடந்த அந்த வழக்கு விசாரணையையும், சென்னை சைதாப்பேட்டையிலே நடைபெற்ற எம்.ஜி.ஆர்.சுடப்பட்ட வழக்கு விசாரணையையும் இந்த புத்தக ஆசிரியர்தான், 'முரசொலி', நம்நாடு என்ற தினப்பத்தரிகைகளிலே தொடர்ந்து வெளியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்க பத்திரிகைத் துறை நீதிமன்றப் பணிகளாகும்.

மேற்கண்டவாறு வழக்கு நடவடிக்கைகளை, விசாரணைகளைப் பத்திரிகையில் கவனமாக வெளியிட்ட பொறுப்புணர்ச்சியால்தான், எந்தவித நீதிமன்ற அவமதிப்புச் சட்டங்களையும், Contempt of Courtயும் நான் சந்திக்கவில்லை.

எனவே, பத்திரிகை ஆசிரியர்களுக்கும், நிருபர்களுக்கும் அந்தக் கவன ஆற்றல் அமையவேண்டும் என்பது அவசியமாகும் என்பதாலே அந்த அனுபவத்தை இங்கே ஆதாரமாக்கினோம்.

### நீதிமன்றக் குற்றங்கள்:

நீதிமன்றத்தையும், சட்டங்களையும், நீதிபதிகளின் அதிகாரங்களையும் வேண்டுமென்றே எந்தத் தனிப்பட்ட மனிதனும் இழிவுபடுத்தும் வகையில் செய்திகளை வெளியிடக்கூடாது. அவ்வாறு செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தால் அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

எடுத்துக்காட்டாக, நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும் வழக்கைப் பற்றிய தவறான செய்தியை வெளியிடக்கூடாது.அல்லது நடைபெறும் ஒரு வழக்கு இப்படித்தான் இருக்கவேண்டும் என்று புனைந்துரைக்கக் கூடாது.

நீதிபதியின் குணாதிசயங்கள், செயற்பாடுகள் பற்றிக் குறை காணக் கூடாது. சாட்சியம் கூறவந்தவர்களை விமர்சித்துப்

பேசக் கூடாது. அல்லது வழக்கின் போக்குப் பற்றி தவறான கருத்துக்களைக் கூறக்கூடாது. இவ்வாறு ஒரு பத்திரிகை பகிரங்கமாக எழுதுமானால், அது நீதிமன்ற நிபந்தனைக் குற்றமாகும்.

தினந்தோறும் பத்திரிகையாளர்கள் அல்லது நிருபர்கள் காவல் நிலையத்திற்குச் சென்று, அங்கே என்னென்ன குற்றங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்பதை அறிய வேண்டும். அவற்றை எச்சரிக்கையோடு இதழ்களில் வெளியிட வேண்டும்.

'கொலைகாரர் சங்கராச்சாரி' கைது செய்யப்பட்டார்' என்று நிருபர்கள் செய்திகளை வெளியிடக்கூடாது. 'சங்கராச்சாரியைக் காவல்துறை கைது செய்தது. காரணம் அவர் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டள்ளது'' என்றுதான் செய்தியைப் பிரசுரிக்கவேண்டும்.

1952-ம் ஆண்டில் வெளிவந்த நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் 32ம் பிரிவு (The Contempt of Court Act XXXII) நீதிமன்றங்களை அவமதித்தால் ஆறு மாதங்கள் வரை சிறைத் தண்டனை அல்லது 2000 ரூபாய் அபராதம், அல்லது இரண்டையுமே விதிக்கலாம் என்று கூறுகின்றது.

நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் 1971-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. அதில் நீதிமன்ற நிபந்தனைகள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

1. நீதிமன்ற ஆணைகளுக்கு அல்லது தீர்ப்புகளுக்கு பத்திரிகைகள் அடங்காமல் அவமதிப்பது சமூகச் சிவில் Civil குற்றம்.

2. பத்திரிகைகள் செய்யும் நிந்தனைகள் குற்றவியல் கிரிமினல் Criminal அடிப்படையில் வரும் குற்றங்களாகும்.

எனவே, பத்திரிகையாளர்கள் எழுதும் கருத்துக்கள், நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்திற்குள் வராதவாறு எழுதப்பட வேண்டும் என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய எச்சரிக்கையாகும்.

# 4. அலுவலக இரகசியங்களை வெளியிடும் குற்றச் சட்டம்

நாட்டில் நடைபெறும் நடப்புக்களை எல்லாம் மக்களாட்சியில் வாழும் மக்கள் தெரிந்துவைத்துக் கொள்வது நல்லது. அதற்கான எல்லா விவரங்களையும் அரசு திரட்டி வைத்துள்ளது. அவற்றுள் பலவற்றை நிர்வாகம் செயல் படுத்துவதையும் பார்க்கின்றோம். இந்த விவரங்களைச் சேகரிக்கும் வேலையைப் பத்திரிகைகளும் செய்கின்றன.

நாட்டின் பாதுகாப்பு, தனிப்பட்ட சில மனிதர்களைப் பற்றிய இரகசியங்கள், வெளிநாட்டின் தொடர்புகள், ஒரு வழக்குப் பற்றிய புலனாய்வுக் கருத்துக்கள், நாட்டை ஆளும் அமைச்சர் அவையின் முடிவுகள் ஆகியவற்றினுடைய எல்லா இரகசியங்களையும் வெளியிடாமல், எவரும் அறியாமல், நிர்வாகத் திறமைகளின் சார்பாகப் பாதுகாத்து வைப்பதை, அரசுக்குத் தெரியாமல் அந்தப் பத்திரிகைகளில் அம்பலப் படுத்துவது சட்டப்படிக் குற்றமாகும்.

ஒரு விவரத்தை ஒற்றாடல் செய்வதும், அரசு வைத்திருக்கும் இரகசியங்களையும் அதன் விவரங்களையும் வேற்றவர்களுக்குக் கொடுப்பது போன்ற குற்றங்களுக்குப் பெயர்தான் அலுவலக இரகசியச் சட்டம் Official Secrets Act. இந்தச் சட்டம் என்ன வரையறுத்துக் கூறுகிறது என்று பார்ப்போம்.

மேற்கண்ட இரண்டு குற்றங்கள் அல்லாமல், மூன்றாம் குற்றப் பிரிவு ஒன்றும் உள்ளது. நாட்டின் பாதுகாப்புக்கு இடையூறாக, எவரும் போகக்கூடாது என்று தடை செய்யப்பட்ட இடத்திற்குள்ளும் யாரும் நுழையக் கூடாது.

மீறி நுழைந்து அங்குள்ள இரகசியங்களை அறிந்து மற்றவர்களுக்குக் கொடுப்பது எதிரிகளுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ, இரகசியங்களை வரைபடம் மூலம் வரைவது அல்லது அதற்கான திட்டம் வகுப்பது, அல்லது இரகசிய நகல்களை உருவாக்கிக் கொடுப்பது, நமது எதிரிகளுக்குப் பயன்படும் வகையில், புள்ளி விவரங்களைத் திரட்டிக் கொடுப்பது அல்லது ஒலி நாடாக்களில் பதிவு

செய்தனுப்புவது அல்லது பத்திரிகைகளில் வெளியீடு செய்வதுபோன்ற செயல்கள் எல்லாமே குற்றங்கள்தான் என்று சட்டம் அறிவிக்கின்றது.

நாட்டிலே அமைய இருக்கின்ற அல்லது இயங்கிக் கொண்டிருக்கின்ற அணு உற்பத்தி நிலையங்கள் பற்றிய அதிகாரம் பெற்றவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு அந்த அணு சம்பந்தப்பட்டச் செய்திகளை வழங்குவதை, 1962-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட Atomic Energy என்ற அணுசக்தி சட்டக் குற்றங்களாகும் என்று சுட்டிக் காட்டுகின்றது.

ஒரு நடைமுறை செயலை இரகசியமானதா - இல்லையா என்று முடிவுகட்டுவது சிக்கலானதுதான். என்றாலும், சில நேரங்களில் அலுவலர்களும், அரசியல் தலைவர்களும் தங்களுடைய தவறுகள் வெளியே தெரியாமல் இருக்க, பலவற்றை இரகசியங்கள் என்று மறைத்து வைக்கலாம். இவற்றை எல்லாம் மக்கள் நலனுக்காகத் துப்பறிந்து பத்திரிகைகள் அம்பலப்படுத்தலாம்.

எடுத்துக்காட்டாக, இந்திய அரசு அயல்நாட்டில் வாங்கிய இராணுவ தளவாடங்களில் ஊழல் முறைகேடுகள் நடந்துள்ளன என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் "Indian Express' நாளேடு குற்றம் சாட்டியது.

சாட்டியக் குற்றத்தை மெய்ப்பிக்க சில ஆவணங்களைப் பத்திரிகையில் வெளியிட்டது. அந்த ஆவணங்களை அச்சிட்டு வெளியிட்டதே அலுவலக இரகசியச் சட்டத்தின் கீழ்வரும் குற்றம் என்று இந்திய அரசு எண்ணியது.

## 5. பத்திரிகைகள் - புத்தகங்களைப் பதிவு செய்து பாதுகாக்கும் சட்டம்

இந்தச் சட்டம் ஆங்கிலேயர் ஆட்சியில் 1867-ம் ஆண்டில் இயற்றி அமல் செய்யப்பட்ட பத்திரிகைச் சட்டம். இதற்குப் பெயர் பத்திரிகைகள், புத்தகங்கள் பதிப்புச் சட்டம் ஆகும். The press and Registration of Books Act.

இந்தச் சட்டத்தில் 1940, 1956ம் ஆண்டுகளில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. இது பத்திரிகைகளை

ஒழுங்குப்படுத்தக் கொண்டுவரப்பட்டது. ஆனால், பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டப்படுத்துவது இதன் நோக்கமன்று. இந்தியாவில் வெளியிடப்படும் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் இந்த சட்டம் பாதுகாக்க வழிசெய்கின்றது.

பத்திரிகைகள் :

தில்லியிலிருக்கும் தலைமைப் பதிவாளரிடம் பத்திரிகை சம்பந்தப்பட்ட எல்லா விவரங்களையும் கொடுக்கவேண்டும் என்று இந்தச் சட்டம் அறிவிக்கின்றது.

பத்திரிகை வெளியீட்டாளர், உரிமையாளர், ஆசிரியர் ஆகியோர் மாவட்ட நீதிபதியிடமோ, பெரு நகர நீதிபதியிடமோ வாக்குறுதி வழங்கி, பெயர் பதிவு செய்த பின்புதான் பத்திரிகைகளை வெளியிட வேண்டும். ஒரு பத்திரிகையை எப்படிப் பதிவு செய்து நடத்தப்படவேண்டும் என்ற விவரத்தை இந்தச் சட்டம் கூறுகின்றது.

ஒவ்வொரு இதழிலும் அச்சிட்டவர், வெளியிட்டவர், ஆசிரியர் பெயர்கள், அச்சிட்ட இடம், வெளியிட்ட தேதி ஆகியவை தெளிவாக அச்சிட்டிருக்கவேண்டும்.

பத்திரிகையை வெளியிடுபவர்கள், செய்தித் தாட்கள் பதிவாளர் Registrar of News papers கேட்கின்ற எல்லா விவரங்களையும் கொண்ட ஆண்டு அறிக்கைகளைக் கொடுக்க வேண்டும்.

இந்தச் சட்டத்திற்கேற்ப,ஆங்கிலம், இந்தி, உருது மொழி களில் வெளிவரும் ஒவ்வொரு இதழையும் புதுதில்லியிலே உள்ள பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்.

பிறமொழி இதழ்கள் குறிப்பிட்ட வட்டார வெளியீட்டுச் செய்தி நிறுவனங்களுக்கு Press Information Bureauவுக்கு ஒரு பிரதியை அனுப்பி வைக்கவேண்டும்.

## 6. ஆபாச வெளியீடு

### தடைச் சட்டம்

பத்திரிகைகள் எல்லாச் செய்தி, கருத்து வடிவங்களையும் எழுதலாம். அதற்கு உரிமை உள்ளது. ஆனால் மக்கள் மனதை,

சமுதாயத்தை, ஒழுக்கத்தைக் கெடுக்கக்கூடிய ஆபாசமான, அருவருப்பான, கீழ்த்தரமான செய்தி, கருத்துவடிவமுள்ள கட்டுரைகளை, படங்களை வெளியிடுவதைத் தடை செய்ய ஆபாச வெளியீட்டுத் தடைச்சட்டம் Opscene Prohibition Act கொண்டுவரப்பட்டது.

### ஆபாசங்கள் விளக்கம்:

IPC, 292, 293, 294 பிரிவுகள் எந்தெந்த கருத்துக்கள் ஆபாசம் என்பதை விளக்குகின்றன. இந்த பிரிவுகளின்படி நாகரிகமற்ற செய்திகள், கீழ்த்தரமான உணர்வுகளைத் தூண்டும் கருத்துக்கள், எழுத்துக்கள், புகைப்படங்கள், ஓவியங்கள், திரைப்பட விளம்பரங்கள், நாடகங்கள் போன்றவை ஆபாசங்களாகும்.

ஒன்றை ஆபாசமாக வெளியிடுபவரின் நோக்கமும், வெளியிடும் முறையும் நினைக்கச் செய்கின்றன. எடுத்துக் காட்டாக, ஆண்-பெண் உறவுபற்றித் திருமணமானவர் களுக்குப் பயன்படும் வகையில், அறிவியல் அடிப்படை வழியில் வெளியிடலாம். ஆனால், வியாபார நோக்கத்தில் பத்திரிகைகள் விற்பனையை அதிகப்படுத்த பாலுணர்வில், தரக்குறைவான முறையில் வெளியிடுவதுதான் ஆபாசமாகும்.

### தண்டனை என்ன?

ஆபாச வெளியீட்டுத் தடைச் சட்டத்தின்படி, ஆபாசமான வெளியீடுகளை அரசு பறிமுதல் செய்யலாம். ஆபாசமானவற்றை எழுதியவருக்கும், வெளியிட்டவருக்கும் மூன்று மாதங்கள் வரை சிறைத் தண்டனை கொடுக்கலாம். அபராதம் விதிக்கலாம். ஆபாசமான பொருட்களை இறக்குமதி செய்வதை அரசு தடுக்கலாம். அதற்கும் தனிச் சட்டம் உள்ளது.

## 7. பதிப்புரிமைச் சட்டம் (The Copyright Act)

அறிஞர்கள், சான்றோர்கள், ஆன்றோர்கள் சிந்தனை களால் உருவான அறிவுப் படைப்புக்கள் அனைத்தும் அவரவர்களுக்கே உரிமையானது. அவற்றைப் பாதுகாத்து வைப்பதும் அறிவுடைமையாகும்.

அதாவது, இலக்கியம், நாடகம், இசை வடிவம், கலைசார்ந்த கற்பனைப் படைப்புகள் எவையாக இருந்தாலும் அவை படைப்பாளிகள் சொத்தாகும். இந்த உரிமையைப் பாதுகாக்க அரசுச் சட்டம் துணை நிற்கின்றது.

சட்ட விளக்கம்:

இதற்கான பாதுகாப்பு பதிப்புரிமைச் சட்டம் முதன் முதலாக 1941-ம் ஆண்டில் இயற்றப்பட்டது. தற்போதும் இந்தச் சட்டம் அமலில் உள்ளது. இந்தச் சட்டத்தை மேலும் ஊக்குவிக்கும் வகையில் சில திருத்தங்கள் செய்யப்பட்டு 1957-ம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஒன்றின் பதிப்புரிமை ஒருவருக்கு இருக்க வேண்டுமானால், அது படைப்பாளிகளின் சொந்தப் படைப்பாக இருக்கவேண்டும்.

மற்றொன்றைப் பார்த்துப் படைத்த ஒன்றுக்கு ஒருவர் உரிமை கொள்ள முடியாது. கருத்துக்களுக்கோ, பாடப் பொருளுக்கோ, கருப்பொருளுக்கோ, வரலாற்று நிகழ்ச்சி களுக்கோ யாரும் உரிமை கொண்டாட முடியாது. ஏனென்றால் அவை எல்லாம் பொதுச் சொத்துக்களாகும்.

ஒரு குறிப்பிட்ட முறையின் வடிவத்தில் ஒன்றை வெளியிடும்பொழுதுதான் அதற்குப் பதிப்புரிமை உண்டு.

பதிப்புரிமைச் சட்டத்தின் 45ம் பிரிவு பதிப்புரிமையைப் பதிவு செய்துகொள்ள வாய்ப்பளிக்கின்றது. ஆனால் பதிவு செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை.

இலக்கியப் படைப்புகள், இசை, நாடகம் போன்ற வற்றுக்குப் பதிப்புரிமை படைத்தவர்களின் வாழ்நாள் முழுவதும் அவருக்கே சொந்தமாக இருக்கும்.

அவர் காலத்திற்குப்பிறகு ஐம்பதாண்டுகளுக்குப் பதிப்புரிமை அவரது சந்ததிகளுக்கு உண்டு.

புகைப் படங்களுக்குப் பதிப்புரிமை - 50 ஆண்டுகளுக்கு அவற்றை எடுத்தவர்களுக்கு உண்டு. இந்தக் குறிப்பிட்டக் காலத்திற்குப் பிறகு அதை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்.

விதி விலக்குகள்:

இந்தச் சட்டத்தின்படி, ஒருவரின் படைப்பிலிருந்து ஆய்வுக்காகவோ, தனிப்பட்ட படிப்புக்காகவோ, மதிப்பீட்டிற் காகவோ சில பகுதிகளை எடுத்துப் பயன்படுத்தினால் அது குற்றமாகாது.

நியாயமான முறையில் மேற்கோள் காட்டவோ, சரியான முறையில் சுருக்கத்தைக் கூறவோ சட்டம் இடம் தருகின்றது.

ஒருவரின் படைப்பிலிருந்து சிலவற்றைப் பயன் படுத்தும்பொழுது மூலத்தைக் குறிப்பிடவேண்டும்.

செய்தி தாட்களுக்குச் சிறப்பு விதி விலக்குகள் வழங்கப் பெற்றுள்ளன. பத்திரிகைகள் பொதுநலன் கருதி, எந்த இலக்கியப் படைப்பையும், நாடகத்தையும், இசையையும் வெளியிடலாம். இது நடப்புச் செய்திகளை வெளியிடும் வகையில் சேரும். ஆனால், ஒரு பத்திரிகையில் வெளியான கட்டுரையை அப்படியே சொல்மாறாமல் வெளியிட வேண்டுமானால் அந்த இதழின் அனுமதியைப் பெறவேண்டும். இதழ்கள் பதிப்புரிமைச் சட்டத்தின் எல்லைக்குள் செயல் படுவது நல்லது.

## 8. இளம்பருவ மனங்கள் கெடாமல் தடுக்கும் சட்டம்:

இளம் வயதுடைய சிறுவர், சிறுமிகள், வாலிபர்கள் உள்ளங்களைப் பாழ்படுத்தக்கூடிய வெளியீடுகளைத் தடை செய்யும் சட்டம் 1956-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. இதற்கு Young Persons Harmful Publications Act என்றுபெயர்.

குற்றங்களை அந்த உள்ளங்கள் பெறத் தூண்டுகின்ற, துராக்கிரமமான கொடும் செயல்களில் ஈடுபடச் செய்கின்ற, பய உணர்வுகளைத் தூண்டுகின்ற கதைகள், படங்களைக் கொண்ட புத்தகங்களையோ, பத்திரிகைகளையோ, கையேடுகளையோ, கைப் பிரதிகளையோ, செய்தித் தாட்களையோ மற்ற பிறவற்றையோ, சிறுவர், சிறுமி, வாலிப உள்ளங்களைப் பாழ்படுத்துகின்ற தன்மையில் வெளியிடுகளை வெளியீடுவது தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

இந்த வெளியீடுகளை வெளியிடுவது, விளம்பரப் படுத்துவது, விற்பனை செய்வது, வைத்திருப்பது, மற்றவர்களுக்கு வழங்குவது குற்றமாகும்.

இளம் மனதுகளைப் பாழ்படுத்தும் அத்தகைய வெளியீடுகளை அழித்திட நீதிமன்றம் உத்தரவிடலாம். மாநில அரசுகள் பறிமுதல் செய்யலாம். இந்த அதிகாரம் காவல் துறைக்கும் இந்தச் சட்டம் வழங்குகின்றது.

## 9. தபால், தந்தி சட்டப் பயன்பாடுகள் (Indian Telegraph Act)

அரசாங்கமோ அல்லது அதிகாரம் பெற்ற தபால் தந்தி பணியாட்களோ, தந்திச் செய்திகளைத் தடுக்கவோ, தாமதப்படுத்தவோ, நிறுத்தவோ செய்திட 1856-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இந்தியத் தந்திச் சட்டம் அதிகாரம் அளிக்கின்றது. ஆனால், எப்போது அதைச் செய்யலாம்?

நாட்டில் பொது நெருக்கடி நிலையை ஆட்சி பிரகடனப்படுத்தி இருக்கும் நேரத்திலும், நாட்டின் பாதுகாப்பு, பொதுநலன் போன்றவற்றைக் கருத்தில்கொண்டும் அரசு மேற்கண்ட இந்தியத் தந்திச் சட்டத்தைப் பயன்படுத்தி அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

இதே செயல்களை அரசு செய்திட 1898ம் ஆண்டின் இந்திய அஞ்சலகச் சட்டமும் அதிகாரம் அளித்துள்ளது.

இந்தச் சட்டத்தை அரசு தவறாகப் பயன்படுத்தவும், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கவும் வாய்ப்பு உள்ளது. ஆனால் ஒன்று, நாட்டின் பாதுகாப்பு, நாட்டின் அமைதி நாடி இவை போன்ற கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன.

## 10. பத்திரிகைகளில் பணிபுரிவோருக்குரிய சட்டம்

பத்திரிகைகளில் வேலை செய்பவர்களுக்காக (The working Journalist Act) என்ற இந்தச் சட்டம் 1956-ம் ஆண்டில் இயற்றப்பட்டுள்ளது.

பத்திரிகைகளில் வேலைசெய்பவர்களுக்குரிய சம்பளம், சேமிப்பு நிதி, வேலை செய்யும் நேரம், அவர்களுக்கான விடுமுறை காலம் போன்றவற்றை மேற்கண்ட சட்டம் எல்லையிடுகிறது. பத்திரிகையாளர் என்றால் யார்? என்ற விவரத்தையும் இந்தச் சட்டம் கூறுகின்றது.

பத்திரிகைகளில் பணிபுரிகின்ற அதன் ஆசிரியர்கள், துணையாசிரியர்கள், செய்தியாளர்கள் ஆகியோர் ஒரு வாரத்தில் ஆறு நாட்கள் மட்டுமே வேலை செய்யவேண்டும். ஏழாவது நாள் அவர்களுக்கு விடுப்பு கொடுக்க வேண்டும்.

ஒரு நாளைக்கு பத்திரிகையாளர்கள் ஆறு மணி நேரம் மட்டும்தான் வேலை செய்ய வேண்டும். அதாவது வாரத்திற்கு 36 மணி நேரம் என்றும், மாதத்திற்கு 144 மணி நேரம் என்றும் அவர்களுக்கு வேலைநேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### செய்தி சேகரிப்போர்
### (Reporters)

செய்தி சேகரிப்பவர்கள் ஒரு நாளைக்கு ஒரே வேலையைத்தான் (Assignment) செய்யவேண்டும். அவர்கள் ஒரு நாளில் இரண்டு விதமான வேலைகளைச் செய்ய அவசியம் வந்தால், மறுநாள் அவர்கள் வேலைசெய்ய வேண்டியதில்லை.

### சம்பளக் குழு:

குறிப்பிட்டக் கால இடைவெளியில் பத்திரிகையாளர்களின் சம்பளங்களை வரையறுப்பதற்காக சம்பளக் குழுவை நியமிக்க இந்தச் சட்டம் உரிமை தருகின்றது. இந்த நிலைக்கேற்றவாறு பத்திரிகையாளர்கள் மாறுகின்ற கால, வேலை சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி உயர்ந்த ஊதியம் பெறலாம்.

## 11. நினைவில் நிறுத்த வேண்டிய சட்டங்கள்

மேலே கூறப்பட்ட பத்திரிகைச் சட்டங்கள் இல்லாமல், பத்திரிகை நடத்துவோர் அவசியம் நினைவில் நிறுத்தக் கூடிய சில முக்கியமான சட்டங்களைக் கீழே விளக்கியுள்ளோம். கவனம்கொள்வது நல்லது.

## பொது நூலகங்கட்கு இதழ்கள் அனுப்பும் சட்டம்:

பத்திரிகையோ, புத்தகங்களோ அச்சானபிறகு, அவற்றைப் பொது நூலகங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று 1954-ம் ஆண்டு இதழ்கள் சட்டம் கூறுகின்றது. இந்த சட்டத்திற்கேற்ப ஒருவர் வெளியிடுகின்ற புத்தகங்கள், பத்திரிகைகள் பிரதிகள் ஒவ்வொன்றையும் இலவசமாகக் கீழ்க் கண்ட தேசிய பொது நூலகங்களுக்கு அவசியம் அனுப்பி வைக்க வேண்டும்.

## முகவரிகள்:

1. இணை இயக்குநர், நூல்கள் பதிவாளர், தலைமைச் செயலகம், சென்னை-600009.

2. பொது நூலக இயக்குநர், பொது நூலக இயக்ககம், அண்ணாசாலை, சென்னை-600 002.

3. பொது நூலகர், கன்னிமாரா நூலகம், சென்னை-600008.

4. தேசிய நூலகம், பெலவெதெரா, கொல்கத்தா-7

5. மத்திய நூலகம், டவுன் ஹால், மும்பை-23.

6. தேசிய மத்திய நூலகம், புதுதில்லி

மேற்கண்ட நூலகங்களுக்குத் தவறாமல் புதிய வெளியீடுகளின் பிரதிகள் ஒன்றை அனுப்பவேண்டும் என்று அரசு சட்டம் அறிவிக்கின்றது.

## இ.பி.கோ. குற்றவியல் சட்டங்கள்: (Indian Penal Code-1867)

கி.பி.1867-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இந்தக் குற்றவியல் சட்டம், தடுக்கப்படவேண்டியவற்றை அச்சிடுவதும், வெளியிடுவதும், புழக்கத்தில் விடுவதும் குற்றம் என்று இந்த சட்டம் அறிவிக்கின்றது.

இந்த சட்டத்தில், நாட்டின்மீது வெறுப்பை வளர்ப்பதைத் தேசத் துரோகம் என்று 124A, பிரிவு கூறுகின்றது. மதம், இனம்,

பிறப்பிடம், வாழிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு குழுவினரிடம் வெறுப்பை வளர்ப்பதும் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் என்று 153A பிரிவு கூறுகின்றது.

குற்றவியல் சட்டத்தின்படி, பத்திரிகைகளோ, ஒரு புத்தகமோ தடை செய்யப்படவேண்டிய உட்கருத்துக்களைக் கொண்டிருப்பதாக மாநில அரசு கருதுமானால், அதைக் குற்றவியல் வழக்கு Criminal Procedure Code முறையின் 95-ம் பிரிவுப்படி அச்சிட்ட அல்லது வெளியிட்ட பத்திரிகைகள், புத்தகங்கள் பிரதிகளைத் தடை செய்து பறிமுதல் செய்யும் அதிகாரம் உடையது - இந்தக் குற்றவியல் சட்ட வகைகள்.

## மருந்துகள், தந்திர - நிவாரணங்கள் சட்டம்:
(The Drugs and Magic Remedies Act - 1954)

மந்திர, தந்திரங்களால் வாழ்க்கைக்குரிய நலன்கள், வசதிகள் கிடைப்பதாக ஒரு சிலர் பத்திரிகைகளிலேயும், சுவரொட்டிகளிலேயும் விளம்பரங்கள் செய்து மக்களை ஏமாற்றிப் பணம் பறித்துவரும் மருந்து, மந்திர, தாயத்து, மோதிர விற்பனையாளர்களது விற்பனைகளைத் தடுப்பதற்காகவும், ஆட்சேபனைக்குரிய விளம்பரங்களைக் கட்டுப்படுத்தவும் இந்த சட்டம் 1954-ம் ஆண்டில் அரசால் கொண்டுவரப்பட்டது.

## பரிசுப் போட்டித் தடைச் சட்டம் - 1955
(The Prize Competition Act - 1955)

இந்தச் சட்டம், பத்திரிகைகள் குறுக்கெழுத்துப் போட்டிகள் நடத்தினால், அதற்குப் பரிசு ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாது என்று இந்த சட்டம் தடைபடுத்துகிறது. அதே நேரத்தில் சட்டத்திற்குப் புறம்பான முறையில் நடைபெறும் பரிசுப் போட்டியை வரம்புக்கு மீறி விளம்பரம் செய்வதையும் இந்தச் சட்டம் தடுக்கின்றது.

# 13

# பத்திரிகை மன்றம் ஏன்? எதற்காக? எப்படி?

## (Press Council)

நாட்டில் இன்று நடந்துவரும் பத்திரிகைகளில் சில தரத்தோடும், பல பத்திரிகைகள் வியாபார அறிவோடும், விற்பனையை அதிகப்படுத்தும் அவரவர் சுயநல நோக்கத்தோடும், தரக் குறைவாகவும், பண்பற்ற முறையில் - மனம் போன போக்கில், தனி மனிதர்களது தகுதிகளைக் கூட மதிக்காமல், தாக்கி எழுதும் பணக் கண்ணோட்டத்தோடும், மஞ்சள் பத்திரிகை மகத்துவத்தோடும் நடைபெற்று வருகின்றன.

மேலே சுட்டிக் காட்டப்பட்ட எல்லாக் குறைகளும் நாம் கூறுவதல்ல : நமது நாட்டில் அமைக்கப்பட்ட முதல் ''பத்திரிகைக் குழு''; Press Commission - இந்திய நாட்டிலே நடைபெற்றுவரும் பத்திரிகைகள் அனைத்தையும் ஆராய்ந்து கூறிய கருத்தாகும்.

மஞ்சள் தரத்தோடு சில பத்திரிகைகள் தாக்கும், போக்கும் - நோக்கும் கண்டு தாளமுடியா வருத்தத்தோடு, பத்திரிகை மன்றம் மேலும் கூறுவது என்ன தெரியுமா?

"பத்திரிகைகள்
தரத்தோடும்
பொறுப்போடும்
நடந்து கொள்ளல் வேண்டும்"

என்று கூறியுள்ளது; இது, உண்மையான ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்தான் என்பதிலே, இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. பத்திரிகைக்குத் தங்களது, வாழ்க்கையைத் தியாகம் செய்து வறுமையோடு வாடியவர்களுக்குத்தான் அதன் அருமை தெரியும்.

பத்திரிகைக் குழு:

பத்திரிகைகளுக்குரிய மரியாதை மதிப்பும்; ஒழுக்கம் ஓம்பும். பண்புடனும் அதன் சுதந்திரத்தைக் காட்டிக் காக்க வேண்டும்.

இதழியல் தொழிலில் ஈடுபட்ட அனைவரிடமும் பொறுப்புணர்ச்சி அமைய வேண்டும். அமைந்ததும், தொண்டு மனப் பான்மையை வளர்க்க வேண்டும்.

இந்த நிலை வளர வேண்டுமானால், ஒரு பத்திரிகை மன்றத்தை Press Councilலை அமைத்தாக வேண்டும் என்று நியமிக்கப்பட்டிருந்த Press Commission குழு கூறியிருந்தது.

உலகத்தில் முதல்முறையாக 1916-ஆம் ஆண்டில் சுவீடன் நாட்டில் தான் பத்திரிகை மன்றம் தோன்றியது. பிறகு, உலக நாடுகளில் 40 பத்திரிகைக் கிளை மன்றங்கள் அமைந்தன.

சட்டத்தின் பயன் :

பத்திரிகைக் குழுவின் பரிந்துரைக்கேற்ப, நாடாளுமன்ற மக்களவையில் பத்திரிகை மன்ற மசோதா அப்போது கொண்டு வரப்பட்டது. அந்த நேரத்தில் 1957-ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வந்தது. அதனால், நாடாளுமன்றம் கலைந்தது; மசோதாவும் சட்டமாகாமல் நின்றது.

எட்டாண்டு கழிந்தது. தேசிய ஒற்றுமை மன்றம், National integration council பத்திரிகைகளுக்கென ஒரு மன்றம் அமைக்க

வேண்டிய சூழ்நிலையை தேசிய ஒற்றுமை மன்றத்திற்கு வற்புறுத்தியது. அதனால், 1965-ஆம் ஆண்டில் பத்திரிகை மன்ற சட்டம் Press Council Act நிறைவேறிற்று; இந்தியப் பத்திரிகை மன்றம் 4.7.1966ல் அமைக்கப்பட்டது. அதன் தலைவர் ஜேர்.ஆர். மல்ஹோத்ரா என்பவர் ஆவார்.

இந்திய நாட்டில் நெருக்கடி நிலையை 1975-ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் அமலாக்கியபோது, 8.12.1975 அன்று ஓர் உத்தரவைப் பிறப்பித்தார். 10.1.1976 முதல் பத்திரிகை மன்றம் கலைக்கப்பட்டது. அந்தச் சட்டத்திற்கு The Press Council Ropeal Act - 1976 என்று பெயர்.

ஏன் பத்திரிகை மன்றத்தைக் குடியரசுத் தலைவர் கலைத்தார்? அந்த மன்றம் திறமையாகச் செயல்பட வில்லை' என்ற காரணத்துக்காக அதைக் கலைத்தார் ஜனாதிபதி!

இந்திய நெருக்கடி நிலை நீங்கியது. 1978-ஆம் ஆண்டில் பத்திரிகை மன்றம் சட்டத்தை மறுபடியும் குடியரசுத் தலைவர் கொண்டு வந்தார். இந்தச் சட்டம் 3.1.1979 முதல் மீண்டும் நாட்டில் அமலுக்கு வந்தது. நீதிபதி ஏ.என்.சென் Justice A.N. Sen மன்றத்துக்குத் தலைவரானார்.

மன்றம்

அமைப்பு :

தலைவர் ஒருவர்; உறுப்பினர்கள் 28 பேர்; இந்த இருபத்தெட்டு மன்ற உறுப்பினர்களில் 20 பேர் பத்திரிகைக் காரர்கள் : 5 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்கள்; கல்வி; அறிவியல்; சட்டம்; இலக்கியம், பண்பாடு ஆகிய துறைகளில் யார் சிறப்பானவர்களோ, அவர்களில் 3 பேர் இருப்பார்கள். இதுதான் பத்திரிகை மன்றம் அமைப்பு வடிவம்.

பத்திரிகை மன்றத்தின் தலைவரை நாடாளுமன்ற மேலவைத் தலைவர்; மக்கள்வைத் தலைவர்; பத்திரிகை மன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்ட ஓர் உறுப்பினர் ஆகியவர்களைக் கொண்ட குழுதான் முடிவு செய்யும்.

பத்திரிகை மன்றம் நீதிமன்றப் பணிகளையும் மேற்பார்வையிட வேண்டிய நிலையிருப்பதால், உச்ச நீதிமன்ற

Supreme Court நீதிபதிகளையே பொதுவாகப் பத்திரிகை மன்றத்துக்குத் தலைவராக நியமிக்கப்படுகிறார்கள்.

## மன்றம் எப்படி செயல்படுவது?

பத்திரிகைகள் சுதந்திரத்தைக் காப்பாற்றக் கடுமையாக உழைப்பதும்; செய்தித் தாட்கள், செய்தி நிறுவனங்கள் தரத்தைக் காப்பதும் - வளர்ப்பதுமான பணிகளே அதன் அடிப்படை நோக்கங்களாகும்.

செய்தித் தாட்களும், செய்தி நிறுவனங்களும் உயர்ந்த தொழில் தரத்தை நிலைநாட்டும் வகையில், அதற்கான நெறிமுறை வழிகளை வகுப்பது; மன்றத்தின் பணிகளாகும்.

பத்திரிகைகளும், பத்திரிகைக்குச் செய்தி சேகரிக்கும் நிறுவனங்களும் சுதந்திரமாகச் செயல்பட பத்திரிகை மன்றம் உதவிட வேண்டும்.

செய்தித் தாட்களும், செய்தி நிறுவனங்களும், இதழியலாளர்களும்; பொது நல நாட்டத்தோடும், பொறுப் போடும், உரிமை உணர்வுகள் உந்துதலோடும் பணிபுரியத் துணையாக இருக்க வேண்டும்.

பத்திரிகைகளை வெளியிடுவதில் ஈடுபட்டுள்ள எல்லாப் பிரிவினரிடமும் தொழில் உறவை வளர்த்துக் கொண்டும், வேண்டிய உதவிகளை அவற்றுக்குச் செய்யும் சூழ்நிலை யினையும் பத்திரிகை மன்றம் உருவாக்க உழைக்கின்றது.

மன்றம், பத்திரிகைகளின் அமைப்பு முறை செய்தித்தாள், செய்தி நிறுவனம் ஆகியவற்றுக்குச் சொத்துக் குவிந்தால்; அவற்றை ஆராய்ந்து, பத்திரிகைகள் சுதந்தரமாகச் செயல்படுவதற்கான பரிந்துரைகளை மன்றம் செய்ய வேண்டும்.

அயல் நாட்டார் உதவிகளைப் பெறும் செய்தித் தாட்களை மதிப்பிட்டுக் கூறுவதும் இந்த பத்திரிகை மன்றத்தின் வேலையாகும்.

செயல்பாடுகள் :

பத்திரிகை மன்றத்திடம் வரும் குற்றச் சாட்டுகளை விசாரித்து முடிவு கூறுவது. வரையறுத்த அதிகாரத்திற்குள் 1966-ஆம் ஆண்டு முதல் 1981 - வரையில் இந்த மன்றம் 880 குற்றச் சாட்டுக்களை விசாரித்து தீர்ப்பளித்திருக்கிறது.

இந்த 880 விசாரணைகளில், 214 குற்றங்கள் பத்திரிகைச் சுதந்திரம் பற்றியதாகும். அவற்றில் மத்திய - மாநில அரசுகள் மீது பத்திரிகைகள் சாட்டிய குற்றங்களும் சம்பந்தப் பட்டிருக்கின்றன.

தனி மனிதர்களும், நிறுவனங்களும், மத்திய - மாநில அரசுகளும் பத்திரிகைகள் மீது 566 குற்றச்சாட்டுக்களைக் கூறியுள்ளன. இவற்றின் மீது பத்திரிகை மன்றம் எடுக்கும் முடிவுகளைச் செய்தித் தாட்கள் வெளியிடுகின்றன.

பத்திரிகையாளர்கள் பின்பற்ற வேண்டிய வழி முறைகள், பணி நோக்கங்கள் எதையும் பத்திரிகையாளர் மன்றம் வரையறுத்துக் கூறவில்லை.

காலப் போக்குகளில் வரும் வழக்குகளை விசாரித்துக் கூறுகின்ற தீர்ப்புகளின் அடிப்படையில் நெறிமுறைகளை உருவாக்க முடியும் என்று பத்திரிகை மன்றம் எண்ணுகிறது. அதற்குரிய வகையில் அந்த மன்றம் பொது மக்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இடையில் ஒரு பாலமாகப் பணியாற்றி வருகின்றது.

மதிப்பீடு :

பத்திரிகையாளர்களைக் கட்டுப்படுத்த, தண்டிக்க, போதுமான அதிகாரம் பத்திரிகை மன்றத்துக்கு வழங்கப்பட வில்லை. அதனால்தான் பத்திரிகைகள் திறமையாகப் பணியாற்றிட முடியவில்லை என்று விவரம் புரிந்தோர் நினைக்கின்றார்கள்.

பத்திரிகையாளர் மன்றம் கால விழிப்புக்கு ஏற்றவாறு இப்போது செம்மையான பலத்தோடு இயங்கி வருகிறது.

எனவே, பத்திரிகைச் சுதந்திரத்தை, தரத்தை, திறத்தை மேலும் நன்றாக வளர்த்திட, காத்திட பத்திரிகை மன்றத்தின் பலம் பயன்பட்டு வருவதால், அதற்கு மேலும் உரமூட்டினால் திறமையோடு அது செயல்படத் தக்க வாய்ப்பை உருவாக்கித் தந்தால், இந்தியப் பத்திரிகைகள், பத்திரிகையாளர்கள் வளர்ச்சிகளுக்கு அந்தப் பணி சிறந்த தொண்டாக அமையும் என்பது உறுதி.

# 14

# பத்திரிகை நடத்துவது எப்படி?

'துக்ளக்' சோ
விளம்பரம்

2005-ஆம் ஆண்டான இன்றும் வெளிவந்து கொண்டிருக்கும் 'துக்ளக்' என்ற வாரப் பத்திரிகை ஆசிரியரான 'சோ' - ஒரு வழக்குச் சொல்லி; திரை உலகில் ஒரு நகைச்சுவை நடிகர். இனமான அரசியல் நடத்துவோரின் தொடர்பாளர்; அவர் முதன் முதலாகப் பத்திரிகை நடத்த விரும்பின நேரத்தில் :

சென்னை மாநகரில், தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில், 'சோ' பத்திரிகை நடத்தலாமா?'' என்ற பெயரில் பொது மக்கள் கருத்தறிய, ஒரு வாசகர் வட்டத்தை நடத்தினார். 'முரசொலி' அடியார், கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் அறந்தை நாராயணன், புலவர் என்.வி.கலைமணி மற்றும் சிலர் அதில் கருத்தறிவித்தார்கள்.

என்.வி. கலைமணி
கருத்துரை

''இன்றைய உலகில் பத்திரிகை நடத்துவது ஒரு சிறப்பான தொழில்தான். பத்திரிகை நடத்த ஏதோ பல்கலைக்

கழகப் பட்டங்கள் பெற்றிருக்க வேண்டும் போலவும், அல்லது ஜர்னலிசம் Journalism படித்தவர்கள் மட்டும்தான் பத்திரிகை நடத்தத் தகுதியுடையவர்கள் என்பதைப் போலவும், 'சோ பத்திரிகை நடத்தலாமா?' என்று கூட்டம் போட்டுக் கேட்கிறார்.

இந்தக் காலத்தில் யார் வேண்டுமானாலும் பத்திரிகை நடத்தலாம். மதம், சாதி, இனப்பற்றுக்காக; வழக்குச் சொல்லி வாதாடும் குறிக்கோளோடு 'சோ' தனது பத்திரிகையை நடத்தாமல் இருந்தால், உண்மையாகவே அவர் பத்திரிகைத் தொண்டர்தான் என்று மக்களால் மதிக்கப்படுவார்.

'சோ' சினிமா நடிகர். அவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனைப் போலத் தனது பத்திரிகையில் சமுதாயச் சீர்திருத்த இலட்சியங்களைப் பரப்புவாரா? அல்லது 'துக்ளக்' இன பண்புகளோடு தனது இன மானம் காக்க நடத்தப் போகிறாரா?

சோ : அப்போது எழுந்து குறுக்கிட்ட 'சோ', "கலைவாணர் சினிமாவிலே என்ன கிழித்துவிட்டார்?" என்று கோபமாகக் கேட்டார்.

கலைமணி : உடனே குறுக்கிட்டு, சினிமா நடிகனைக் கூத்தாடி என்று அருவருத்துப் பேசிய சமுதாயத்திலே, இன்று உம்மை இந்த மேடையிலே; சுயமரியாதையோடு, நடிகர் என்ற மரியாதையோடு பேச வைக்கும் சுயமரியாதையை இந்தச் சமுதாயத்தில் உருவாக்கியவர்களிலே கலைவாணர் ஒரு முன்னோடிக் கலைஞர் என்பதை நீர் நன்றியோடு உணர வில்லையா? என்றார்.

வாக்கு வாதங்கள் முற்றி அதிகமாகவே, தலைவர் எழுந்து, இப்போது அறந்தை நாராயணன் பேசுவார்' என்றார்.

அறந்தை : தோழர் கலைமணி கருத்தை நான் ஆதரிக்கிறேன். 'சோ', தனது சாதிக்காக வாதாடாமல் பத்திரிகை நடத்துவேன் என்று இங்கே கூடியுள்ள மக்கள் எதிரே பிரமாண வாக்குமூலமாகக் கூறுவாரா? என்றதும் ஒரே கைத்தட்டல்!

கூட்டம் குழப்பத்தில் முடியும் நிலையில்; கூட்டத்தில் உணர்ச்சி கொந்தளிக்கவே, தலைவரே நன்றி கூறிவிட்டார்; கூட்டமும் கலைந்தது.

ஏன் இதை இங்கே சுட்டிக் காட்டினோம் என்றால், பெருந்தலைவர் காமராஜர் தனது பொது வாழ்க்கையின் ஆரம்பக் கட்டத்தில் விருதுநகர் நகராட்சித் தேர்தலிலே வேட்பாளராகப் போட்டியிட முயன்றபோது, விருது நகர் காங்கிரஸ் கட்சிச் செயற்குழுவில் "காமராஜ் நகர சபை தேர்தலிலே நிற்கலாமா? வேண்டாமா?" என்று கருத்துக் கேட்கப்பட்டது. யாரும் எதிர்ப்புக் கூறாமல் நிற்கலாம் என்ற முடிவு உருவாயிற்று. அதனால் காமராஜர் வேட்பாளரானார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஒருவர் வாக்களிக்க வேண்டுமானால், அவர் கல்வித் துறையில் பல்கலைக் கழகம் பட்டம் பெற்றிருக்க வேண்டும். அல்லது நகராட்சிக்கு வரி கட்டக் கூடிய ஏதாவது சொத்து, இருக்க வேண்டும் என்பவை தேர்தல் விதிகளாகும்.

வேட்பாளர் காமராஜர் பெயரில் வரிகட்டக் கூடிய அளவுக்கு வீடோ, நிலமோ எதுவும் கிடையாது. அதனால் ஆட்சிக்கு வரிகட்டக் கூடிய நிலையில் அப்போது காமராஜ் இல்லாததால், அவர் நகராட்சித் தேர்தலிலே கவுன்சிலராகப் போட்டியிடும் தகுதியில்லை.

காமராஜருக்கும், பசும்பொன் முத்துராமலிங்க தேவருக்கும் நண்பராக இருந்த விருதுநகர் சுப்பையா ஆசாரி என்பவர், உடனே பசும்பொன் கிராமம் சென்று காமராசரின் இக்கட்டான நிலையை உணர்ச்சி பொங்கத் தெரிவித்தார். காங்கிரஸ்காரரான முத்துராமலிங்கத் தேவர் உடனே எட்டு ரூபாயை அந்த ஆசாரியிடம் கொடுத்து, ஓர் ஆடு ஒன்றைக் காமராஜ் பெயருக்கு விலைக்கு வாங்கச் சொல்லி, அதைக் கால் நடைச் சொத்தாக்கி, அரசுக்கு வரிகட்டி, காமராசர் வேட்பாளராக நின்று வெற்றிபெற்று, நகரமன்ற உறுப்பினரானார்.

அதனைப் போல, 'சோ'வும் பத்திரிகை நடத்தலாமா? என்ற கேள்வியை எழுப்பி, பத்திரிகை நடத்த, பல்கலைக் கழகப்

பட்டமோ, ஆங்கிலர் ஆட்சி போல வேட்பாளர் வரி கட்டியிருக்க வேண்டும் என்ற விதிகளோ தற்போதைய மக்களாட்சியில் இல்லையல்லவா? அதனால்தான் இங்கே இந்த சம்பவத்தை நினைவு படுத்தினோம்! அவ்வளவுதான்!

நமது நாட்டில் பத்திரிகைகளை யார் வேண்டுமானாலும் நடத்தலாம். நடத்த விரும்புவோர்க்கு அரசு விதிமுறைகள் சில உள்ளன. அவற்றைப் புரிந்து கொண்டு, பின்பற்றினாலே யாரும் பத்திரிகையை நடத்தலாம்.

## ஆரம்ப விதிமுறைகள் :

பத்திரிகை உலகில் புதிதாகப் புக விரும்பும் ஒருவர், முதலில் என்ன வகையான இதழ்களை நடத்தலாம்? நாளிதழா, வார இதழா? வாரம் இருமுறை இதழா? வாரம் மும்முறையா? மாதமா? மாதம் இருமுறையா? மும்மாதத்திற்கு ஓரிதழா? ஆண்டு மலரா? என்பதை முதலில் சிந்தித்துத் திட்டமிட வேண்டும். ஏனென்னறால், அதற்குரிய பண நிலை வசதிகளுக்கான திட்டம் தீட்டுவது நல்லதல்லவா?

முடிவெடுத்த பின்பு, என்ன நோக்கத்திற்காகப் பத்திரிகை நடத்தலாம் என்பதை எண்ண வேண்டும். இலக்கியத்துக்காக மட்டுமா? உவமைக் கவிஞர் சுரதாவைப் போல கவிதைத் துறை வளர்ச்சிக்கா? அரசியலுக்கா? பொருளாதாரப் போக்குக்கா? கல்வி வளர்ச்சிக்கா? சமுதாய மூன்னேற்றத்திற்கா? சமுதாய சீர்திருத்த மறுமலர்ச்சிக்கா? திரைத் துறை பொழுது போக்குக்கா? அறிவியல் துறையிலே பணியாற்றுபவர்களின் தொண்டு விமரிசனத்துக்கா? நகைச் சுவைக்காகவா? அரசியல் கட்சிக்காகவா? ஆட்சிக்கு ஆதரவாகவா? விஞ்ஞான; மருந்தியல் புதுமைகளை விளக்கவா? வரலாற்று விவரங்களை நினைவுப்படுத்தவா? தினந்தோறும் நடைபெறும் சமுதாய வம்படி, அதிரடிகளைச் சுட்டிக் காட்டிச் சட்டத்தின் சக்தியை உணர்த்தவா? நீதிமன்ற வழக்குகளின் வாதாட்ட அபூர்வ வரலாறுகளை எடுத்துக் காட்டவா? வணிக நிறுவனங்களுக்குள்

ஒற்றுமையை உருவாக்கி அவர்கள் உரிமைகளை உணர்த்தவா? மேடைப் பேச்சுக்களை மட்டுமே தேர்ந்து வெளியிடவா? மஞ்சள் ஏடா? இவற்றுள் எந்த வகைப் பத்திரிகையை நடத்தலாம்? எப்படி நடத்தலாம்? எதற்காக நடத்தலாம் என்ற துறை வகையை முடிவு செய்து தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

ஏன் இவற்றைக் கூறுகிறோம் என்றால், பத்திரிகை நடத்துவது புகழுக்காக, பதவிக்காக, பணத்துக்காக, வணிக நோக்குக்காகத்தானே! அதனால்தான் குறிப்பிட்டோம். அதெல்லாம் இல்லை, தொண்டுக்காக, இலட்சியத்துக்காக, பொழுதுபோக்குக்காக என்று எவராவது கூறினால், அவர்கள் இறுதியிலே கடனாளிகளாவர்; சொத்துக்களை அழிப்பர்; இகழைப் பெறுவர்; உறவுமுறைகள் பகையைத் தேடி ஓட்டாண்டிகள் ஆவர்! எனவே, பத்திரிகை நடத்துவோர்க்கு அறிவு வளம், ஆதரவு பலம், பண பலம் ஆரம்பத்தில் வேண்டும். போகப் போக பத்திரிகைப் பலம் அவர்களை இமய உச்சியிலே கூட அமர வைக்கலாம்!

பத்திரிகைத் தொழில் பயங்கரமான தொழில் என்று நாம் பயங்காட்டுவதற்காக மேலே உள்ள விவரங்களைக் கூறவில்லை. முழுக்க முழுக்கத் திறமை பலம் திகழ்பவராக பத்திரிகையாளர் இருக்க வேண்டும்.

'தினத்தந்தி' குடும்பம், முரசொலி குடும்பம், ஆனந்த விகடன் குடும்பம், குமுதம் குடும்பம், தினமலர், தினமணி குடும்பம் அடுக்கடுக்கான வகைத் தொழிலில் வெற்றிக் கொடிகளைப் பறக்க விடவில்லையா?

அந்த இதழ்க் குடும்பங்களின் அறிவுரைச் சுவடுகளை ஏகலைவன் துரோணரிடம் கற்ற வித்தையைப் போல, நமது மனத்தில் நாம் பதிய வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே மேலே உள்ளவற்றை பாடமாக்கினோம்; படமாக்கவில்லை.

## பதிவு செய்யும் வழிகள் சில!

எந்த வகையான பத்திரிகைகளைத் துவங்க நினைத்தாலும், அவற்றைத் துவங்குவதற்கு முன்பு பத்திரிகைப் பெயர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

அந்த 'பத்திரிகைப் பெயரை, சென்னை நகராக இருந்தால் பெருநகர நீதிபதியிட மனு செய்து (Metropolitan Magistrate), மாவட்டமாக இருந்தால் மாவட்ட நீதிபதியிடமும் (District Magistrate), வட்டமாக இருந்தால் வட்டத் துணை நீதிபதியிடமும் (Sub-divisional Magistrate) பதிவு செய்து பத்திரிகைக்குரிய டெக்ளரேஷன் (Declaration) என்ற உரிமையை பெற வேண்டும்.

எந்த ஊரில் பத்திரிகையை நடத்த விரும்புகிறோமோ அந்தந்த இடத்திலுள்ள நீதிமன்றங்களில் பணிபுரியும் நீதிபதி களிடம் இதழ் நடத்துபவர் மனு விண்ணப்பிக்க வேண்டும்.

காவல் துறையிடம் மனு விண்ணப்பிக்காமல் நீதித் துறைக்கு ஏன் போக வேண்டும் என்று கேட்பீர்கள் அல்லவா? காவல் துறைக்கும் - பத்திரிகைத் துறைக்கும் எந்தவித ஒட்டுறவும் கிடையாது. ஜனநாயக நாட்டில் பத்திரிகைத் துறை நான்காவது தூண்! அதைத் தட்டிக் கேட்கும் அதிகாரம் மக்களாட்சிக் கோட்டையின் மூன்றாவது தூணான நீதிமன்றத் தூணுக்குத்தான் அந்த அதிகார பலம் உண்டு. அதனால்தான் பத்திரிகை நடத்துவோர் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க வேண்டும் என்பது இதழியல் இன மரபு ஆகும்.

விண்ணப்பிக்கும் மனுவில் பத்திரிகை வெளியிடும் இடம் முகவரி, பெயர், எந்த மொழியில் அது நடத்த இருக்கிறது? எந்த நாட்களில் அந்தப் பத்திரிகை வெளிவருகிறது? அச்சகம் பெயர், முகவரி, நாளேடா, வாரமா, மாதமா என்று இதழ் வெளிவரும் கால அளவு போன்ற பத்திரிகை விவரங்களைக் குறிப்பிட்டு, நீதிபதி முன்பு கையொப்பமிட்டு அந்த மனுவைக் கொடுக்க வேண்டும்.

பத்திரிகைப் பெயரைக் குறிப்பிட்டீர்கள் அல்லவா? அத்துடன் மேலும் மூன்று பெயர்களை அதே மனுவில் குறிப்பிட வேண்டும். ஏன் தெரியுமா?

நீங்கள் குறிப்பிடும் பெயரில் வேறு எவராவது பத்திரிகை நடத்தும் உரிமையை நீதிமன்றத்தில் உங்களுக்கு முன்னே பெற்றிருக்கக் கூடும். அதனால் நீங்கள் பத்திரிகைக்கு வைத்துள்ள பெயரில் உங்களுக்கு நடத்தும் உரிமை கிடைக்காது.

தனியாக வேறு மூன்று பெயர்களைக் குறிப்பிட்டிருந் தீர்கள் அல்லவா? அந்தப் பெயர்களில் எவரும் நீதிமன்ற உரிமை பெறாதிருந்தால் அவற்றுள் இரண்டாவதாக நீங்கள் குறிப்பிட்ட பெயருக்கு உரிமை கிடைக்கும்.

எந்த பெயர்களுக்கும் உரிமை கிடைக்கவில்லை என்றால், அந்தப் பெயர்களில் பத்திரிகை நடத்தும் உரிமைகளை எவரோ ஏற்கனவே பெற்றுவிட்டார்கள் என்று பொருள். அதனால், விண்ணப்பித்த உங்களுக்கு உரிமை கிடைக்கவில்லை என்று உணர வேண்டும்.

பத்திரிகை நடத்தும் அனுமதியை நீதிபதியிடமிருந்து பெற்றுவிட்டால், பிறகு நீங்கள் பத்திரிகையாளராகப் பதிவு செய்யப்பட்டு விட்டதாகப் பொருள்.

## பத்திரிகை உரிமை பெற்றாகி விட்டதா?

பத்திரிகை நடத்த நீதிபதி அனுமதி பெற்ற பின்பு உடனடியாக ஆறு வாரத்திற்குள் அதைத் துவக்கிவிட வேண்டும். மாத இதழாக இருந்தால் மூன்று மாதங்களுக்குள் அதை ஆரம்பித்துவிட வேண்டும்.

மேலே கூறிய கால எல்லைக்குள் பத்திரிகையை நடத்தா விட்டால், அதற்கு நீதிபதி வழங்கிய அனுமதி தானாகவே செத்துவிடும். பிறகு, மறுபடியும் நீதிமன்றத்திற்கு மனு செய்து உயிர்ப்பிக்க வேண்டிய சூழ்நிலை வரும். Renewal என்று அதற்குப் பெயர்.

வேறு அச்சக மாற்றமோ, வேறு வெளியீட்டகமோ, வேறு வெளியிடும் கால அளவோ, புதிதாக இடம் மாற்றம் ஏற்பட்டாலோ, நீதிமன்றத்திற்கு மனு அனுப்பி, அவர்கள் குறிப்பிடும் தேதிக்குச் சென்று, நீதிபதி முன்பு கையெழுத்துப் போட வேண்டும்.

பத்திரிகை துவக்கப்பட ஏதோ சில தடைகள் ஏற்பட்டு ஓராண்டாகி விட்டால், பத்திரிகை நின்றுவிட்டதாக நீதிமன்றம் நினைக்கும்.

மறுபடியும் அதை நடத்தும் சமயம் வந்தால், பத்திரிகைப் பெயருக்குப் புத்துயிரளிக்க நீதிமன்றத்திலுள்ள பத்திரிகைப் பணிப் பிரிவுக்கு மீண்டும் மனுமூலம் தெரிவித்து, நீதிபதி முன்பு கையெழுத்துப் போட வேண்டும்.

பத்திரிகை ஆசிரியர் பெயரை முதல் பகத்திலேயே அச்சடிப்பது சிறப்பானது. கடைசி பக்கத்தில் பத்திரிகைப் பதிவு எண், அச்சிட்டவர் முகவரி, வெளியிடுபவர் முகவரி, ஆசிரியர், உரிமையாளர், பத்திரிகை வெளியிடப்படும் இடம், முகவரி போன்ற விவரங்களை, அதாவது (Imprint line) இம்பிரிண்ட் என்பதை அச்சடிக்க வேண்டும். எடுத்துக்காட்டுக்காக. ஏதாவது ஒரு பத்திரிகையின் கடைசி பக்கத்தைப் பார்த்தாலே போதும். புரியும்.

பத்திரிகை வெளிவந்தவுடன் அதன் பிரதிகளில் ஒவ்வொன்றை புதுதில்லியிலே இருக்கும் Registrar of News Papers என்ற அலுவலகத்துக்கு அனுப்பி பத்திரிகையை அங்கே பதிவு செய்துக் கொள்ள வேண்டும். பதிவு எண்ணை உங்களுடைய பத்திரிகை அலுவலகத்திற்கு அந்த அலுவலகம் அனுப்பி வைக்கும்.

முன்பு குறிப்பிட்டதுபோல பொது நூலகத்திற்கும், எந்த நீதிபதி முன்பு பத்திரிகை நடத்த அனுமதிபெற கையெழுத்துப் போட்டோமோ; அந்த நீதிமன்ற பத்திரிகைப் பிரிவுக்கும், காவல் துறை ஆணையருக்கும், பத்திரிகையாளர் செலவிலேயே பிரதியை அனுப்ப வேண்டும்.

## அஞ்சலகச் சலுகை பெறுவது எப்படி?

பத்திரிகை அச்சடித்து வெளிவந்த உடனே கடைசி பக்கத்தின் உச்சி முனையில் Regd. என்று ஆங்கிலத்தில் அச்சிட்டு; அருகே இடம் காலியாக இருக்கும் இடத்தில் டில்லி பத்திரிகைப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட ரிஜிஸ்டர்டு நெம்பரை அதாவது பதிவு எண்ணை அச்சடிக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக (Regd. No.5454), பதிவு எண் 5454 என்பதைப் போல அச்சிட்டிருக்க வேண்டும். அவ்வாறு அச்சடித்தால்தான் பத்திரிகையை வெளியூர்களுக்கு அனுப்பிவைக்கும் மத்திய அரசின் அஞ்சல் சலுகை வசதி கிடைக்கும்.

அஞ்சல் சலுகை பெற வேண்டுமானால், எந்த நீதிமன்றத்தில் பத்திரிகை நடத்திட அனுமதி பெற்றோமோ, அந்த அனுமதி நகலுடன் பத்திரிகைப் பிரதி இரண்டு இணைத்து, வெளியூர்களிலே பத்திரிகை விற்பனையாகின்றதா சந்தா வாசகர்கள் இருக்கிறார்களா? என்பதை அஞ்சலகத்தினர் சோதித்துப் பார்ப்பதற்காக 50 சந்தா வாசகர்களது முகவரிகளை இணைத்து, அஞ்சலக அஞ்சல் வசதி உதவி தேவை என்று பத்திரிகை Letter Paperரிலே எழுதி, பத்திரிகை வெளிவரும் எல்லைக்குட்பட்ட பெரிய அஞ்சலதிகாரி யார் என்பதை விசாரித்து, மேற்கூறிய விவரங்களை அந்த Post Office அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

பத்திரிகை அலுவலகத்தினர் கொடுத்துள்ள 50 சந்தாதாரர் முகவரிகளில் அஞ்சலக அதிகாரிகள்; பத்து பேர்களுக்காவது அவர்கள் செலவிலேயே அஞ்சலனுப்பி, "நீங்கள் குறிப்பிட்ட பத்திரிகையின் சந்தாதாரரா?" என்று கேள்வி கேட்டு, அதற்கு சந்தாதாரர்கள் பதில் எழுதும் வசதிக்கான ஓர் அஞ்சலுறையை உள்ளே வைத்து அனுப்பிப் பதில் எழுதுமாறு கேட்பார்கள்.

அஞ்சலகத்தார் அனுப்பும் அஞ்சலட்டையை சந்தாதாரர்கள் பெற்றதும், 'ஆம்' நான் சந்தாதாரர்தான், எனது

சந்தா எண் இது என்று எண்ணையும் குறித்து, உடனே அனுப்பிய அஞ்சலகத்தாருக்கே அட்டையைப் பூர்த்தி செய்து அனுப்பிவிட வேண்டும்.

அவ்வாறு அனுப்பப்பட்ட பத்து அஞ்சலட்டைகளில் குறைந்தது ஆறு அட்டைகளாவது 'ஆம்' என்ற பதிலோடு அவர்களுக்கு வந்துவிட்டால், அஞ்சலகம் அந்தப் பத்திரிகைக்குரிய அஞ்சல் சலுகை அனுமதியை வழங்கிவிடும். இதுதான் பத்திரிகையைக் குறைந்த தபால் செலவில் அனுப்பி வைக்கும் அரசு அஞ்சல் சலுகை வசதி.

அஞ்சலகத்தார் பத்திரிகையாளருக்கு அனுப்பிய சந்தாதாரர் சலுகை உத்தரவு நகலை, சம்பந்தப்பட்ட எல்லையிலுள்ள அஞ்சலக அதிகாரியிடம் காண்பித்தால், பத்திரிகையைச் சந்தாதாரர்களுக்கு மட்டுமல்ல, வெளியூர் விற்பனை முகவர்களுக்கும் Agents இரயில்வே நிலைய பார்சல் அதிகாரிகளுக்கும், பத்திரிகைகளை அனுப்பி வைக்கும் அஞ்சல் சலுகை நகலைப் பார்த்ததும் அனுமதித்து விடுவார்கள்.

அஞ்சலகம் குறிப்பிடும் வெளியீட்டு நாட்களில் பத்திரிகையைத் தவறாமல் அனுப்பிவிட வேண்டும். குறிப்பிட்ட அந்த நாள் தவறினால் அரசு வழங்கிய அஞ்சல் சலுகை அனுப்பமுடியாத தடைகள் உண்டாகும்.

அஞ்சலகமும், இரயில்வே பார்சல் நிலையமும், பதிவு பண்ணப்பட்ட பத்திரிகைதானா என்று பார்க்க Regd. எண் அச்சாகி இருக்கிறதா என்று பத்திரிகையின் கடைசி பக்க மேல் முனை இடத்தை அஞ்சலக அதிகாரிகள் பார்ப்பார்கள்.

எனவே, தவறாமல் இதழ்தோறும் பதிவு எண்ணும், இம்பிரிண்ட் விவரமும் அச்சடித்திருக்க வேண்டும். இல்லையானால், பத்திரிகை விற்பனைக்குப் போகாத சூழ்நிலைக்கு உருவாகிவிடும் என்ற பயம் பத்திரிகை நடத்தும் அலுவலகத்திற்கு இருந்தாக வேண்டும். இந்த விவரம்தான் பத்திரிகை நடத்துவதற்கான ஆரம்பகட்ட பணிகளாகும்.

# 15

# அரசு ஒதுக்கும் செய்தி அச்சுத்தாள் பெறும் திட்டம்

செய்தி அச்சடிக்கும் செய்தித்தாள் வெளிச் சந்தையில் வாங்கி அச்சடித்தால் விலை அதிகமாகக் கொடுத்து வாங்க வேண்டிய நிலை இருக்கிறது.

அதனால், பத்திரிகை நடத்துவோருக்கு மத்திய அரசு குறைந்த விலையில் அரசு மேற்பார்வையில் செய்தி அச்சுத்தாள் (News Print Paper) வழங்கும் திட்டம் ஒன்றுள்ளது.

அரசு விலைக் கட்டுப்பாடு அதற்கு உள்ளது. அந்த அலுவலகம், புது தில்லியில் உள்ளது. அதன் கிளை அலுவலகங்கள் சென்னை, மும்பை, கொல்கொத்தா போன்ற பெருநகரங்களில் உள்ளன.

அந்த அலுவலகத்தில் அரசு செய்தி அச்சுத்தாள் பெறும் படிவம் உள்ளதைப் பெற்று, அந்த மனுவில் அவர்கள் கேட்கும் விவரங்களைப் பூர்த்திச் செய்து, புது தில்லியிலுள்ள செய்தி அச்சுத்தாள் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்.

அந்தப் பதிவாளர் அலுவலகம் ஆண்டாண்டு தோறும் அரசு அச்சுத்தாள் ஒதுக்கும் கொள்கையை (News Print Allocation

Policy) அறிவிக்கும் நேரத்தில் நாம் சென்று அதற்கான ஆக்கப் பணிகளில் ஈடுபட வேண்டும்.

## அச்சுத்தாள் கோட்ட
## (Quota) விவரம்

அச்சுத்தாள் வழங்கும் நிறுவனத்தார் தரும் படிவத்தைப் பூர்த்தி செய்த பின்பு, பதிவாளர்களுக்கு இரண்டு படிகள் அனுப்ப வேண்டும்.

இந்தப் படிவம் புது தில்லி இந்தியச் செய்தித்தாள் தலைமை அலுவலகத்திலும், புது தில்லியிலுள்ள Paper Exports and Imports அலுவலகத்திலும், சென்னை யிலுள்ள Paper South Trading Corporation என்ற நிறுவனத்திலும் பெறலாம்.

ஆனால், பேப்பர் இறக்குமதியாளர்கள் Government Established Importers அரசு பேப்பர் கோட்டா விற்பனைக் காரர்களா? என்று கவனிக்க வேண்டும்.

ஓர் ஆண்டுக்கு எவ்வளவு பேப்பர் நமது பத்திரிகைக்குத் தேவை என்பதையும், நாம் அச்சடிக்கும் பத்திரிகையின் பக்கங்கள் எத்தனை என்பதையும், அது எந்த அளவு பேப்பர் வகை என்பதையும், அதாவது டபுள் டெம்மியா? டபுள் கிரவுனா? அல்லது வேறு வகையான காகித அளவா? தின ஏடா? வார இதழா? மாதப் பத்திரிகையா? என்று விவரத்துக்கு ஏற்றவாறு ஆண்டுக்குரிய மொத்த பேப்பர் தேவையைக் கணக்கிட்டு, அதிகாரப் பூர்வமான ஆடிட்டரிடம் அதற்குரிய சான்றிதழ் பெற்று, புது தில்லி இந்தியச் செய்தித்தாள் பதிவாளருக்கு இரண்டு படிவங்களை அனுப்ப வேண்டும்.

நாம் அனுப்பும் செய்தித் தாட் கணக்குகள் சரிதானா என்று தில்லி அலுவலக அரசு அதிகாரிகள் பரிசோதனை செய்த பிறகு, நமக்கேற்றச் செய்தித் தாட்களை ஒதுக்கிக், கட்டளைப் படிவம் (Order) அனுப்புவார்கள்.

குறைந்த அளவு 40 டன் தாட்கள் தேவைப்படுவோருக்கு வருமான வரிச் சான்றிதழ் தேவையில்லை. அதிகம் வேண்டுபவர்கள் ஆடிட்டர் சான்றிதழோடு அனுப்ப வேண்டும்.

செய்தி அச்சுத் தாட்கள் மட்டுமன்று; ஆர்ட் பேப்பர் (Art Paper), மெக்கானிக்கல் கிளேஸ் எனப்படும் பேப்பர், ப்ளாக் மேக்கிங், சிங்க் (Zink), புகைப்படம் (Film) கார்டு போர்டு, ப்ரவுன் பேப்பர் போன்றவைகட்கும் கோட்டா அளவு உண்டு! தேவை என்றால் அதற்கான படிவங்களில் அரசு கேட்கும் விவரங்களைப் பூர்த்தி செய்து அனுப்பினால் பெறலாம். அந்த விவரம் முழுவதையும், நியூஸ் பிரிண்ட் பேப்பர் வழங்கும் நிறுவனத்திலேயே கேட்டுப் பெறலாம்.

பத்திரிகை அச்சடிக்கும் வெளிநாட்டு இயந்திரங்களை இறக்குமதி செய்யுமளவுக்கு வலிமையுடைய பத்திரிகை யாளராக இருந்தால், அதற்குரிய விண்ணப்பங்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் அரசு பிரிவு அலுவலகத் தலைமை அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும்.

அததற்குரிய விவரங்கள் விண்ணப்ப மனுக்களிலேயே இருக்கின்றன. படித்துப் பார்த்துத் தவறேதும் ஏற்படாதவாறு அதைப் பூர்த்திச் செய்து அனுப்பினால் அரசு உதவிகளை உறுதியாகப் பெறலாம்.

வெளிநாட்டு அச்சடிக்கும் மெஷின்களுக்கான /அந்நிய செலாவணித் தொகையில் அச்சு வகை சம்பந்தப்பட்டவை களுக்கு 50 சதவிகிதம் சிறு பத்திரிகைகளுக்கும், 35 சதவிகிதத்தை நடுத்தர வளர்ச்சியுடைய இதழ்களுக்கும், 15 சதவிகிதத்தை பெரிய பத்திரிகையாளர்களுக்கும் பயன் படுத்துகிறது அரசு.

அச்சு இயந்திரங்கள் இறக்குமதி செய்ய விரும்புபவர்கள் ஜெர்மனி, இத்தாலி, இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா,

செக்கோஸ்லோவாக்கிய நாட்டு இயந்திரங்களை இறக்குமதி செய்யலாம். அவை நீடித்து உழைக்கும் தரமுடையதாக இருக்கின்றன.

தற்போது செய்தித் தாட்கள் நமது நாட்டிலேயே பிரமாதமாகத் தயாராவதால் அந்நிய நாட்டு பேப்பர்களை வாங்க வேண்டிய அவசியமில்லை.

# 16

# ஒவ்வொரு பத்திரிகையும் - அரசுக்கு ஆண்டறிக்கை அனுப்ப வேண்டும்

பத்திரிகைகளைப் பற்றிய முழு விவரங்கள் அரசுக்குத் தேவை. அப்போதுதான் அவற்றை ஒரு ஒழுங்கு முறையில் நெறிப்படுத்த முடியும். அதற்கு உதவியாக பத்திரிகை யாளர்கள் ஒவ்வொருவரும் அதற்கு ஆண்டு அறிக்கை அனுப்ப வேண்டும் என்ற கட்டுப்பாட்டை உருவாக்கி இருக்கிறது அரசு.

ஒரு பத்திரிகையாளர், அவர் நடத்தும் பத்திரிகையைப் பற்றிய அந்த ஆண்டின் முழு விவரங்களை அதாவது Annual Statement விவரத்தை, புது தில்லியிலுள்ள பத்திரிகைப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும.

இந்த விவரங்களைப் பத்திரிகைச் சட்ட விதிப்படிவத்துள் பூர்த்தி செய்து, ஃபிப்ரவரி திங்கள் இறுதிக்குள் அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பும் படிவம் II-ல், கடந்த ஆண்டுக் குரிய எல்லா விவரங்களையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

பத்திரிகை உடைமையையும், ஆசிரியர் பற்றிய முழு தகவல்களையும், IVம் படிவத்தில் பூர்த்தி செய்து மார்ச் மாதங்களில் வரும் இதழ்களில் வெளியிட வேண்டும்.

ஒரு பத்திரிகை 2000 பிரதிகளுக்கு மேல் விற்பனை யாவதாக இருந்தால், அதன் சர்க்குலேஷன் விற்பனைப் பற்றிப் பதிவு செய்த ஆடிட்டரின் சான்று பெற்று, ரிஜிஸ்தார் ஆஃப் நியூஸ் பேப்பர், புது தில்லி (Registrar of News Paper, New Delhi) என்ற அலுவலகத்தாருக்கு அனுப்ப வேண்டும்.

அவ்வாறு அரசு சட்ட விதிகளுக்கு உட்பட்டு பத்திரிகை விவரங்களை அனுப்பா விட்டால், பத்திரிகைச் சட்ட விதிகளை மீறியதாக எண்ணி, அந்தப் பத்திரிகை மீது 1970ம் ஆண்டு மார்ச் மாதம் வரை செய்துள்ள சட்டத் திருத்தற்திற்கேற்பவும், 1867ம் ஆண்டில் ஆங்கிலேயர் காலத்து, பத்திரிகை, புத்தகங்கள் சட்டப் பதிவுகேற்பவும், 19K பிரிவின் படி தக்க நடவடிக்கை எடுத்துத் தண்டனையும் கிடைக்க வழி ஏற்படும்.

## பதிவாளர் ஆண்டறிக்கை

இந்தியா முழுவதிலும், அந்தந்த மாநிலங்களிலும் உள்ள எல்லாப் பத்திரிகை விவரங்களையும் மேற்கண்ட ஆண்டறிக்கை விவரங்களின்படி பெற்ற பதிவாளர்தான், இந்திய அரசுக்குரிய முழு ஆண்டறிக்கையை அளிப்பவராவார்.

எனவே, ஒவ்வொரு பத்திரிகையாளரும் அவரவர் ஆண்டறிக்கை விவரங்களைச் சரியான முறையில் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்.

அனுப்பினால்தான் அந்த ஆண்டறிக்கையைச் சரியான முறையில் பதிவாளர் அரசுக்கு வழங்க முடியும். அப்படி வழங்கினால்தான், அந்த ஆண்டறிக்கையால் பத்திரிகைகளும் தக்க அரசு வசதிகளைப் பெற்றிட வாய்ப்பாகவும் அமையும்.

## திடீரென நுழைந்து சோதனை முறை!

அவ்வாறு அனுப்பாத பத்திரிகையாளர் அலுவலகங் களுக்கு, பத்திரிகை, புத்தகச் சட்டம் 19F என்ற பிரிவுக்கேற்ப, பத்திரிகைப் பதிவாளரோ, அல்லது அவர் அதிகாரம்

பெற்றவரோ எந்த பத்திரிகை அலுவலகத்திற்குள்ளும் சென்று எப்படி நடக்கிறது பத்திரிகை என்ற விவரங்களை அறியலாம். அதைத் தடுக்கக் கூடாது; முடியாது.

சர்க்குலேஷனுக்குப் போகும் பத்திரிகைகளின் அடிப்படையில்தான் பத்திரிகைகளுக்கு அச்சுத்தாள் கோட்டா ஒதுக்கீடு செய்கிறார் பதிவாளர். அதனால், வாங்கிய பேப்பர் ஒதுக்கீடு அளவில் பிரதிகள் அச்சிடுகிறார்கள்; விற்பனை செய்கிறார்கள் என்பதற்கான ஒழுங்கான கணக்குமுறைக்குச் சரியான சான்று தேவையல்லவா? அதற்காகத்தான் பதிவாளர் அலுவலகம் சோதனை் நடத்துகிறது.

எவ்வளவு இதழ்கள் அச்சடிக்கிறார்கள்? விற்பனை யாகும் பிரதிகள் எவ்வளவு? விற்காத பிரதிகள் (ரிட்டர்ன்) எவ்வளவு? என்பதற்கான ஆவணங்களைச் சரியானபடி பத்திரிகை அலுவலகம் வைத்திருக்கா விட்டால், சர்க்கு லேஷனுக்கு அனுப்பிய பிரதிகள் என்று கூறும் கணக்கை உண்மை என்று ஏற்றுக் கொள்ளாது புது தில்லியிலுள்ள பதிவாளர் அலுவலகம். அதற்குப் பிறகு அரசு அந்தப் பத்திரிகைக்கு குறைந்த விலையில் கிடைக்கும் தாள் ஒதுக்கீட்டை ரத்து செய்து விடும்.

ஒவ்வொரு பத்திரிகையும் அந்தந்த மாநிலத்தில் எவ்வாறு சர்க்குலேஷன் ஆகின்றது என்பதைப் பதிவாளர் அலுவலகம் அறிந்தாக வேண்டும் என்ற அக்கறைக்காகவே, அரசு நமது நாட்டை நான்கு பகுதிகளாகப் பிரித்து, அந்த ஒவ்வொரு பகுதி (Zone)க்கும் ஓர் அலுவலரை Circulation Officerராக நியமித்துள்ளார்கள்.

வடக்கு (North) மண்டலம் புது தில்லியிலேயே உள்ளது. தெற்குப் பகுதி (South) சென்னையில் உள்ளது. மேற்கு(West)ப் பகுதி மும்பையிலும், கிழக்குப் (East) பகுதி கொல்கொத்தாவிலும் பதிவாளர் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

முதன் முதலாக எப்படிப் புதிய பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும் என்பதை அறிந்து, மெட்ரோபாலிட்டன் நீதிபதி,

மாவட்ட நீதிபதிகளிடம் பத்திரிகை வெளியிடுபவரும், அச்சகத்தாரும், அதற்குரிய விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து அவர்களின் ஒப்புதலைப் பெற்றார்களோ, அதைப் போலவே பத்திரிகையை நிறுத்துவதென்றாலும் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து நிறுத்தி விட்டோம் என்பதையும் அவர்களிடம் தெரிவித்து ஒப்புதல் பெற்றாக வேண்டும். இல்லை என்றால் தண்டனைக்குரிய குற்றமாக அதை எண்ணி நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், இப்போது யாரும் இந்த விதியை ஏனோ பின்பற்றப்படுவதில்லை. காரணமும் புரியவில்லை.

பத்திரிகைகள் வெளியிடுபவர்கள் அதற்குரிய விதிகளை, ஒழுங்குமுறைகளைப் பின்பற்றி வெளியிடும்போது நாட்டில் நடைபெறும் பத்திரிகைகள் வெளியிடும் முறைகளும் நெறிப்படுத்தப்பட்டத் துறையாகத் திகழும் அல்லவா?

# 17

## செய்தியாளரும் ஒரு - தசாவதானக் கலைஞரே!

வேளாண்மை செய்யும் விவசாயி ஒருவனுக்கு எப்படி வயலும் வாய்க்காலும் மாடும் கிணறும் அவசியம் தேவையோ, அதுபோல, பத்திரிகையாளருக்கும் செய்தி சேகரிப்பாளர்கள் அவசியம் தேவை!

பத்திரிகை துவங்கிய காலத்தில், அவரவர் செய்திகளை அஞ்சல்களிலும், அவசரச் செய்திகளானால் தந்தி, டெலிபோன், ட்ரங்கால்களிலும், இறுதியாக ஆட்கள் மூலமாகவும், அந்தந்தப் பத்திரிகைகட்குரிய உள்ளூர் விற்பனை முகவர்களாக இருக்கும் ஏஜெண்டுகள் மூலமும் பத்திரிகை அலுவலகத்திற்குச் செய்திகள் வந்து சேரும்.

கடிதம் மூலமாக பெரும்பாலும் பத்திரிகைக்கு வருவது தான் சர்வ சாதாரணச் செயலாக இருக்கிறது. கடிதத்திற்கு வடமொழியில் 'நிருபம்' என்று பெயர். அவர்கள் அன்றாடம் நிகழும் செய்திகளை 'நிருடம்' மூலமாக எழுதியனுப்புவதால், அவர்களுக்கு நிருபர் என்று பெயர் வந்தது. இங்லீஷ் மொழியில் அவர்களை Reporters என்று கூறுவார்கள். தமிழில் நாம் அந்தச் சொல்லைச் செய்தியாளர் என்கிறோம்.

கட்டுரையாளர்கள், கதை, கவிதை எழுதுவோர்களது பெயர்களைத்தான் முன்பெல்லாம் பத்திரிகைகள் வெளியிட்டன. அதனால், அந்தப் பெயர்கள் அத்தகைய எழுத்தாளர்களுக்கு மக்கள் இடையே செல்வாக்கும், சொல்வாக்கும் ஈட்டித் தந்தன.

ஆனால், இப்போது செய்தியாளர்கள் பெயரும் செய்திகட்குக் கீழே பத்திரிகைகள் வெளியிடுகின்றன. அதனால் நாள்தோறும் மக்கள் இடையே பழகும் வாய்ப்புடைய செய்தியாளர்கள் பெயரும் புகழும் பெறுகிறார்கள். அவரவர் ஊர்களிலே செய்தியாளர்களுக்கு சொல்வாக்கும், செல்வாக்கும் நாளும் பெருகுகிறது.

உள்ளூர் காவல்துறை, நீதித் துறை, அரசுத் துறை, கல்வித் துறை, மருத்துவத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் பிறத் துறைகளிலிருந்தும் செய்திகளைச் சேகரிக்கும் பணி - மதிப்பும், மரியாதையும் அவர்களுக்கு உருவாக்குகின்றது.

அதனால், அந்தச் செய்தியாளர்கள், ஆட்சியர், காவல் துறை உயர் அதிகாரி, தாசில்தார், மருத்துவத் துறை, நீதித்துறை போன்றவற்றில், தான் ஒரு பத்திரிகைச் செய்தியாளர் என்று அடையாள அட்டையைக் காட்டி விட்டு - எந்தக் காரியத்தை யும் சுலபமாகச் சாதித்துக் கொள்ளும் சூழ்நிலைகள் உருவாகின்றன.

எனவே, ஒரு நாளேட்டிற்குச் செய்தியாளர்கள் இல்லை யென்றால் நாளேடு நடக்காது; பத்திரிகைகள் இல்லை யென்றால் செய்தியாளர்களுக்கும் மரியாதை கிடையாது. பழைய பெருங்காய டப்பாக்களைப் போல ஊரில் உலா வருவர். அவ்வளவுதான்! எதுவும் நடந்தவரை மிச்சம்.

செய்தியாளர்களால் பத்திரிகை தகுதி பெறுகின்றது. பத்திரிகையால் செய்தியாளர் தகுதி பெறுகின்றார்கள். அதனால் செய்தித் திரட்டுவோரால் ஒரு பத்திரிகையை உருவாக்கவும் முடியும், உருக் குலைக்கவும் முடியும்.

இதைத்தான் திரு. ரெங்கசாமி பார்த்தசாரதி என்பவர், தனது 'அடிப்படை - பத்திரிகைக் கொள்கைகள்' (Basic Journalism) என்று நூலில் குறிப்பிடும்போது, "ஒரு செய்தித் தாளின் புகழும், நம்பிக்கையும், செய்திகளையே சார்ந்துள்ளது. அதனால், அவர்களால் ஒரு செய்தித் தாளை ஆக்கவோ, அழிக்கவோ முடியும். அவர்கள்தான் ஒரு செய்தித் தாளுக்கு வாழ்வளிக்கும் இரத்தம் போன்றவர்கள்" என்கிறார்.

'ஒரு நாட்டின் செவிகளும், விழிகளும் பத்திரிகைகள் என்றால், செய்தி சேகரிப்போர் அதன் கால்களும் கைகளும்

போல ஓடியாடி உழைப்பவர்கள்' என்கிறார். பழநியப்பா பிரதர்ஸ் வெளியிட்ட 'செய்திகள்' என்ற நூலில் திரு. எம். செல்லையா என்பவர்.

இவற்றுக்கெல்லாம் என்ன காரணம்? ஒரு பத்திரிகையின் அடிப்படைக் காரணமாக இருப்பவர் Reportersகளே ஆகும்! இவர்களுக்கு நிருபர் என்று பெயர்தானே தவிர, இந்த செய்தியாளர்கள் தேனியைப் போல பறந்து பறந்து ஒவ்வொரு மலர்களையும் ஊடுருவதைப் போல, ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் செய்தி என்ற தேன் துளிகைளத் திரட்டும் கலைஞர்களாக உள்ளவர்களே செய்தியாளர்கள்!

'தினமணி' நாளேட்டின் சிறந்த செய்தியாளராகப் பணி யாற்றியவர் திரு. ஏ.என். சிவராமன் என்ற வார்த்தைச் சித்தர். போர்க் காலக் களங்களில் செய்திகளைச் சேர்த்திட இந்தியா வந்தவர்தான் இங்கிலாந்து நாட்டின் பிரதமராக இருமுறை இருந்த வின்ஸ்டன் சர்ச்சில்.

எனவே, செய்தி திரட்டுவது என்பது அவ்வளவு சுலபமான பணியன்று. கடலில் மூழ்கி முத்தெடுப்பதைப் போல, ட்சுனாமி என்ற கடல் பேரழிவுக்கும் அவர்கள் அஞ்சாமல் பணியாற்ற வேண்டியவர்களாவர்.

அமெரிக்காவில் மெல்வைல் இ. ஸ்டோன் என்பவர் அசோசியேட்டட் பிரஸ் (Associated Press) என்ற ஒரு செய்தி நிறுவனத்தை அமைத்தபோது, 'ஓர் ஆசிரியரின் அறிவைவிட செய்தி சேகரிப்போர் அறிவு செல்வாக்கும் சிறப்பும் உடையது' என்று குறிப்பிட்டார்.

சமுதாயத்தில் நடமாடும், ஒவ்வொரு மனிதனும் செய்தியாளன்தான்! அவனவன் அறிவுக்கு ஏற்றவாறு மக்களிடையே செய்திகளைப் பரப்பி விடுவான். ஆனால், அவன் செய்வது செய்தியாளன் பணியன்று. வதந்தியாளன் செயலாகவும் (Rumour) இருக்கக் கூடுமில்லையா? அதனால், அவரைப் போன்றவர்களல்லர் செய்தியாளர்கள். மக்களே போல்வர் 'கயவர்' என்றார் திருவள்ளுவர் பெருமான் - கயவர் களை அடையாளம் காட்டும்போது. அதுபோலவே வதந்தி பரப்புவோனும் வேறு! மனிதனைப் போலவே நடமாடுவான்.

எப்படி Reporterரைக் அடையாளம் காண்பது? செய்திகளைப் பரப்புகின்ற வாசகர்களின் எண்ணிக்கையை வைத்து அடையாளம் காணலாம்! அதெப்படி?

நிருபர் கொடுக்கின்ற செய்தி எப்படிப்பட்டதாக இருக்கின்றது? அதனால் மக்களுக்கு உண்டான உண்மை என்ன? நன்மை என்ன? செய்தியாளர் செய்த அறிவுப் பணி களின் ஆக்கச் செயல்கள்; செய்தியாளர் அந்தச் செய்தியை எந்த வடிவத்தில் வெளியிட்டார்; அவர் பிரசுரித்த செய்தியால் விளைந்த நோக்கம், ஊக்கம், ஆக்கம் என்னென்ன? ஆகிய சில வித்தியாசமான செய்திகளது வெளியீட்டால் அவர் மக்கள் இடையே ஒரு தனி அடையாளமாகக் காணப்படுவார்! அவர் தான் திறமையான செய்தியாளர்!

எனவே, செய்தியாளர்கள் திறமைகளைப் பத்து வகைகளாகப் பிரிக்கலாம். தமிழ்ப் படித்தவர்கள் இந்த உண்மைகளை உணர்வார்கள்.

### செய்தியாளர்கள் அவதானிகளே!

தமிழ்க் கலைகளில் அவதானக் கலை என்பது ஓர் அற்புதக் கலை. அந்தக் கலையிலும் அட்டாவ்தானம், தசாவதானம், சோடசாவதானம், சதாவதானம் என்று பல வகைகள் உண்டு. பொதுவாக, அவதானம் என்றால் என்ன என்பதைத் தெரிவது நல்லது.

அவதானம் என்றால் ஒரு கலையை அல்லது செய்தியைக் கிரகித்தல், சாதுரியம், நிதானம், நினைவு, பாவனை, பின்தொடர்தல், அவதானம் பண்ணல், நினைத்தல், பாடம் பண்ணல், திறமைக்கு வித்தாதல், பண்புகளைப் பெற்று ஒரு சவாலை, காரியத்தைச் செய்து முடித்தல் என்பவையே!

அட்டாவதானம் என்றால் எட்டு வகை அவதானம், தசாவதானம் என்றால் பத்து வகை அவதானம். சோட சாவதானம் என்றால் பதினாறுவகை அவதானம், சதாவதானம் என்றால் நூறு வகை அவதானங்களை மேடையில் மக்கள் முன்பு செய்வதில் வல்லவராக இருக்க வேண்டும்.

அவதானம் என்றால் என்ன என்பதை மேலே விளக்கி யுள்ளோம்! அதற்கேற்ப, எண்ணிக்கைக்குரியவாறு அவரவர் திறமைகளை அவதானப் பயிற்சிப் பெற்றோருக்கு அவை நன்கு தெரியும். 'சதாவதானி செய்குத் தம்பி பாவலர், அட்டவதானி 'பூவை கலியாண சுந்தர முதலியார் போன்ற சிலர் அதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்கள்.

செய்தியாளர்கள் செய்யும் தசாவதான இயல்பு வகைகள் எவை? அவர்கள் யார் யார் என்பதைப் பார்ப்போம்!

## 1. தலைநகரச் செய்தியாளர்கள்

செய்திப் பத்திரிகைகள் பெரும்பாலும் முக்கியமான நகரங்களிலே இருந்து வெளிவந்தால்தான் அவற்றுக்குச் செய்திகள் திரட்டிட வசதிகளாக இருக்கும். அந்தந்த நகரங்களிலே உள்ளூர் செய்திகளைத் திரட்டுபவர்கள் City Reporters என்ற நகர செய்தியாளர்கள் ஆவர்.

இவர்கள் அன்றாடம் அந்த நகரப் பகுதிகளிலே நடைபெறும் நன்மை தீமைகளைத் தரும் செய்திகளைச் சேகரித்துத் தங்களது தொடர்பான பத்திரிகைகளுக்கு வழங்கப் பணிபுரிவார்கள்.

2. ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகர்ப் பகுதி களிலிருந்து செய்திகளைச் சேகரிப்பவர்களுக்கு நகர்ப்புறச் செய்தியாளர்கள் (Mofussil Reporters) என்று பெயர்.

## 3. தேசியச் செய்தியாளர்கள்

இவர்கள் திரட்டும் செய்திகள் அகில இந்திய வளர்ச்சி நிலைமைகளுக்குத் தக்கவாறு அமைய வேண்டும். அதனால் அவர்கள் தேசிய நிருபர்கள் எனப்படுவார்கள்.

## 4. வெளிநாட்டுச் செய்தியாளர்கள்

உலக நாடுகளின் தலைநகரங்களில் வாழ்ந்து கொண்டு அங்குள்ள உலகச் செய்திகளை தத்தங்களது நாடுகளுக்கு அறிவிக்கும் செய்தியாளர்களாவர்.

## 5. பகுதிநேரச் செய்தியாளர்கள்

பத்திரிகை அலுவலகத்தில் நேரடியாக வேலை செய்யாமல், தங்களது வாழ்க்கைக்குரிய நிரந்தரப் பணிகளை

செய்து கொண்டு, ஓய்வுநேரங்களில் தகவல்களைச் சேகரித்துக் குறிப்பிட்டச் செய்தித் தாள்களுக்கு மட்டுமே செய்திகளை அனுப்புவர். அவற்றுக்குத் தக்கவாறு ஊதியம் பெறுவார்கள். இவர்களை Part-time Reporters என்பார்கள்.

6. ஒரு மாநிலத்தின் தலைநகரத்தில் இயங்கும் நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் நடைபெறும் செய்திகளை வழங்குபவர்களை மன்றச் செய்தியாளர்கள் (Lobby Correspondents) என்று குறிப்பிடுவார்கள்.

இந்த வகைச் செய்தியாளர்கள், அந்த நாட்டின் அமைச்சர்கள், குடியரசுத் தலைவர் அல்லது வெளிநாடுகளில் இருந்து நமது நாட்டிற்கு வருகை தரும் அதிபர்கள், மன்னர்கள், பிரதமர்கள் அரசியல்வாதிகள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளுக்குப் பின்தொடர்ந்து சென்று, அவர்களுடைய சம்பவங்களைச் சேகரித்து நாடு முழுமைக்குரிய வகையில் முக்கியமானச் செய்திகளைக் கொடுத்துக் கொண்டிருப்பவர்கள்.

7. இவ்வாறு பணிபுரியும் செய்தியாளர்களிலே Special Correspondents என்ற பெயரில் சிறப்புச் செய்திகளை மட்டுமே வழங்குபவர்களாக இவர்கள் இருப்பார்கள்.

8. ஒவ்வொரு ஊர் நிகழ்ச்சிகளைப் பார்த்து, அவற்றைப் பார்த்தது பார்த்தவாறே செய்திகளை அனுப்புவர்களும் Reporters இருப்பதுண்டு.

9. கண்ட செய்திகளைக் கண்டவாறும், அத்துடன் தங்களது யூகங்களைச் சேர்த்தும், செய்திகளை அனுப்பு வார்கள். இவர்களுக்கு விளக்கச் செய்தியாளர்கள் (Interpretative Reporters) என்ற பெயருண்டு.

10. செய்தி வல்லுநர் எனப்படுவோர் ஒரு சம்பவத்தை நேரில் சென்று பார்க்காமலேயே அதன் முக்கியத்துவம் இதுதான் என்று உறுதியை அறுதியிட்டு எழுதுபவர்களை Expert Reporters என்று சொல்வார்கள்.

இவ்வாறு செய்தியாளர்கள் பத்து வகை ஆற்றல்களோடு ஆங்காங்கே பணிபுரிபவர்களாக விளங்குவதால், பொதுவாகச் செய்தியாளர்களைத் தசாவதானிகள் என்றும் அழைக்கலாம் அல்லவா? செய்தி சேகரிப்பதும் ஒரு கலைதானே!

செய்தியாளர்களால் நாட்டுக்கு என்ன பயன் என்றால், அவர்கள் சமுதாய விழிப்புக்கு நாள்தோறும் பணியாற்றி, ஆங்காங்கே நடைபெறும் உண்மைகளை உலகுக்கு உணர்த்தும் பொறுப்பினைச் செய்வதால் அவர்களைச் சமுதாய விழிப்புணர்வூட்டும் ஆசான்கள் என்றும் கூறலாம்.

சமுதாயத்தில் அன்றாடம் நடைபெறும் அநீதிகளை மக்களுக்குச் சுட்டிக் காட்டுவதோடு இராமல், மக்களுக்கு தீமைகள் வருமுன் காக்கும் சீர்திருத்தவாதிகளாகவும் - செய்தியாளர்கள் இருக்கின்றார்கள். அதனால், அவர்களை மக்கள் இயக்க இயங்கும் சீர்திருத்தவாதிகள் என்றும் பெருமையோடு குறிப்பிடலாம் இல்லையா?

செய்தியாளர்கள் நியமிக்கப்படாத பத்திரிகையாக இருந்தால், அந்த இடங்களுக்குப் பத்திரிகை விற்பனையாளரே (Agent) Reporterராக பணியாற்றுவதுமுண்டு. அந்தவிதமான செய்தியாளர்கள் அந்த ஊரிலே உள்ள மக்களால் பெரிதும் மதிப்போடும், மரியாதையோடும் நடத்தப்படுபவர்களாக நடமாடுவார்கள்.

எனவே, செய்தியாளர்கள் மக்கள் நம்பிக்கைக்காக உழைக்கும் உண்மைப் பணியாளர்களாக உலா வரவேண்டும். இல்லையானால், ஊராரே அவர்களை அவமதிக்கும் நிலைகளையும் பெறுபவர்களாக இருக்க நேரிடும். இதை உணர்பவர்களால்தான் செய்தியாளர்களுக்கு மரியாதையும், மதிப்பும் உருவாகும் என்பதை - நிருபர்கள் உணர்ந்து செய்திகளைத் திரட்ட வேண்டும்.

ஒவ்வொரு நகரம், வட்டம், மாவட்டம், கிராமங்களில் பணியாற்றும் செய்தியாளர்களால், அந்தந்த பத்திரிகைகளுக்கு நல்ல புகழும், மரியாதையும், மதிப்பும் உருவாக வேண்டுமானால், அந்தச் செய்தியாளர்கள் நாணயவாதிகளாய் 'நா' நய வாதிகளாய், ஒழுக்கம் ஓம்பிகளாய், கையூட்டு ஆசை அற்றவர்களாய், நேர்மையான பண்புடையவர்களாய், பழக்க வழக்க அன்பர்களாய், கல்வியறிவுச் சிறப்புடையவர்களாய், செய்திகளைச் சேகரிக்கும் திறனாளர்களாய், மக்களுக்கேற்ற நண்பர்களாய், தன்னம்பிக்கை உடையவர்களாய், முன்கோப மற்றவர்களாய், நடுநிலையாளர் நோக்குடையவர்களாய்,

அழகும் கம்பீரமும் ஆற்றலுமுடையத் தோற்றமுள்ளவர்களாய், சுயநலமற்ற - பொதுநல அக்கறையுடையவர்களாய், எல்லா வற்றுக்கும் மேலாகப் பத்திரிகைச் சட்டங்களையும், அரசு சட்டங்களையும் உணர்ந்தவராய், அவற்றை மதிப்பவராய், உண்மையே உருவான ஒழுக்க சீலங்களைப் பேணுபவராய் இருந்தால்தான்; அந்தச் செய்தியாளரால் நாட்டுக்கும், சமுதாய மேம்பாடுகளுக்கும் நன்மைகள் இமயம் போல் ஓங்கி நிற்கும் தன்மையராய் திகழ்வார்கள். அப்படிப்பட்ட அறிவாளிகளால் தான் அந்தப் பத்திரிகையும் வளரும், வாழும் என்பதை உணர்பவர்தான் உண்மையான, உத்தமமான செய்தியாளர் என்ற பெயரைப் பெறுவார்.

இத்தகைய அரும்பெரும் பண்புகளை உடையவர் தான், நாளை ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராகவும், வர முடியும். வரவேண்டும். அப்போதுதான் பத்திரிகைக்கு நல்ல பெயர் நடமாடும். அத்தகையவர் ஒரு நாள் நாட்டை ஆள்பவராகவும் மாறும் காலம் தோன்றும் அல்லவா? அறிஞர் அண்ணாவைப் போல; கலைஞருக்கு நிகராக; வின்செண்ட் சர்ச்சில்லாக விளங்கிடலாம் இல்லையா?

# 18

# செய்தி என்றால் என்ன? தேர்வு செய்வது எப்படி?

செய்தித்தாள் பத்திரிகைக்குச் செய்திகள் என்பவை தான் மூலப் பொருட்கள்! செய்திகள் இல்லையானால் செய்தித் தாள்கள் இல்லை. எனவே, செய்தி என்ற சொல்லுக்குரிய பொருள் என்ன என்பதை நாம் புரிந்து கொள்வது நல்லதல்லவா?

செய்தி என்ற தமிழ்ச் சொல்லுக்கு இங்லீஷில் **News** என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

News என்ற சொல்லில் உள்ள முதல் மூன்று எழுத்தை New என்று சொல்லுகின்றோம். **New** என்றால் புதிய, முன்னில்லாத, முதன் முதலாகத் தெரிவிக்கப்படுகின்ற, முன் உணரப்படாத, தெரிய வராத, முன் கேட்டறியாத, முன் கண்டறியாத, அண்மையில் தோன்றிய, புதிதாக ஆக்கப்பட்ட, அண்மையில் செய்து முடிந்த, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட, புதிதான, பழக்கமில்லாத, மாறிய, மாறுபாடான, புது மாறுதலுடைய, புதுப்பிக்கப்பட்ட, புதிதாகச் சேர்க்கப்பட்ட, கெடாத, புது நிலையிலுள்ள, பழமைப்பட்டு விடாத, தேய்வுறாத, தளராத, பளபளப்புக் குறையாத, புத்தாக்கம் பெற்ற, புத்துயர்வு பெற்ற, வேறு வகையான, அனுபவமற்ற, புதுமுறையான, புதிதாக என்ற 32 விதமான பொருட்களை அந்த New என்ற இங்லீஷ் சொல் அறிவிக்கின்றது என்று ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம் என்ற அகராதி

கூறுகின்றது. இந்த நூலை சென்னைப் பல்கலைக் கழகம் 1965-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது.

இந்த பொருட்களுக்குரிய விளக்கங்களை, சம்பவங்களை ஒவ்வொன்றாக விளக்கினால் நூல் விரியும் என்பதால் New என்ற ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ப் பொருட்களை மட்டுமே கொடுத்துள்ளோம். காரணம், "**A word having the same form in its many parts of speech is treated as one word-if its etymons are the same**' என்பதற்கேற்ப, ஒரு சொல்லை பல சம்பவத்தின் மூலவேர்ச் சொல் பேச்சு வழக்குக்கு ஏற்றவாறு நாம் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதால், விளக்கம் தேவையில்லை என்று கருதிச் சுருக்கமாகப் பொருளை மட்டுமே இங்கே குறித்துள்ளோம்.

எடுத்துக்காட்டாக, New Comer காலம் தாழ்ந்து வந்து சேர்ந்தவர் New Look தற்கால உடை பழக்கம், புத்தம் புதிய தோற்றம், New Moon முதற் பிறை நிலா; New Year வரும் ஆண்டு; The New Woman புதுமை பெண் என்பவைக்கேற்ப New என்ற சொல்லைச் சம்பவத்திற்குகந்தபடி பயன்படுத்திக் கொள்வது ஆங்கில மரபு. அதாவது, வேர்ச் சொல் மாறாமல் பயன்படும் பல்வகைப் பேச்சு வழக்கு முறைக்கு ஏற்றவாறு பயன்படுத்தலாம்.

எனவே, News என்றால், செய்தி, புதுத் தகவல், புதிய நிகழ்ச்சிகளின் விவரம் என்றும் கொள்ளலாம்.

இந்த News என்ற சொல்லிலிருந்து News Agent (செய்தித் தாள் சேகரிப்பவர்); News Boy (செய்தித் தாள் கூவி விற்கும் சிறுவன்); News Letter (செய்தி மடல்); News Monger (ஊர் செய்தி வம்படிப்பவர்); News Paper (செய்தித்தாள்); News Print (செய்தித் தாளை அச்சிடும் தாள்); News Room (செய்தி வாசிக்கும் அறை) போன்று News என்ற சொல் எந்தெந்த தொழிற் சம்பவங்களோடு இணைகின்றதோ அதற்கேற்ற சம்பவங்களுக்குப் பொருள் கொள்ளலாம். இதுபோல தமிழ் மொழியிலும் உண்டு.

எனவே, New என்பது புதியது என்ற பொருளைத் தரும் சொல்லாகும். அது "S' சேர்ந்து பன்மையில் வரும்போது 'புதியன' என்பது பொருளாகும்.

News என்ற சொல்லில் உள்ள N என்பது North என்ற வட திசையையும், E என்ற எழுத்து East என்ற கிழக்கையும், W என்ற எழுத்து West என்ற மேற்கையும், S என்ற எழுத்து South என்ற தென் திசையையும் குறிக்கும் முதல் எழுத்துகளால் ஆன திசைகளது பெயராகும். அதாவது வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்ற நான்கு திசைகளில் உள்ள நாடுகளிலிருந்து வரும் அன்றாடப் புதிய புதியச் செயல்களைக் குறிக்கும் செய்திகளாகும் என்று News என்ற இங்லீஷ் சொல் கூறுகின்றது. ஆங்கிலேயர் நான்கு திசைகளிலும் அன்றாடம் நடைபெறும் செய்திகைளக் குறிக்கவே News என்ற சொல்லை உருவாக்கியுனார்கள்.

தமிழில் அதைச் 'செய்தி' என்கிறோம். அந்தத் தமிழ்ச் சொல்லின் 'தி' என்ற இறுதி எழுத்து திசைகள் நான்கு என்று எண்ணி, அந்த நாற்திசைகளில் வரும் புதிய புதிய செயல்களைச் 'செய்' என்ற தமிழ்ச் சொல்லில் அடக்கி 'செய்தி' என்றால் உலகத்தின் நான்கு திசைகளிலிருந்து வரும் புதிய செயல்களுக்குச் 'செய்தி' என்று குறிப்பிடலாம் இல்லையா? சரி, என்றால் ஒப்புங்கள்; இல்லையென்றால் விட்டு விடுங்கள். அதனால் நமக்கு நட்டமில்லை அல்லவா? ஏனென்றால் செய்+தி = செய்தி தானே!

எதையாவது உலகுக்கு உரைப்பதுதானே செய்தி. இன்றைய செய்தி, நாளைய வரலாறுதானே செய்தி? அந்தச் செய்தி உலக மக்களின் கவனத்தை இழுக்கும் காந்த சக்திதானே செய்தி?

எனவே, புதுமையான செயல் எதுவோ? அது செய்தி! மனிதனுக்குச் சுவையூட்டுவது எதுவோ அது செய்தி! மக்களுக்கு ஆர்வமூட்டும் சம்பவம் என்னவோ அது செய்தி! அதைத் தெரிந்து கொள்ளும் கருவிதானே செய்தித் தாள்?

அந்தச் செய்திகள் புரட்சிகளாக இருக்கலாம்; உணர்ச்சிகளாக உந்தி எழலாம்; எழுச்சிகளை எடுத்துரைக் கலாம்; வீழ்ச்சி அழிவுகளை விளக்கலாம் சமுதாயத்தின் தனி மனித குற்றங்களாகச் சதிராடலாம்; நீதியை நிலை நாட்டும் சந்நிதானங்களாகவும் அமையலாம்; பொருளாதார வளர்ச்சி

வீழ்ச்சிகளைத் தோற்றுவிக்கும் சந்தைகளாகலாம்; பெண் காம உணர்ச்சிகளின் களமாகக் காணப்படலாம்; மதம், சாதி, அடிதடி மோதல்களாய் கலவர மூட்டலாம்; விஞ்ஞான விந்தைகளாக விளங்கலாம்; கொலை, களவு, மர்மக் குற்றங்களாகத் தென்படலாம்; சினிமா, நாடகம், இலக்கியம், கவிதை, கலைத்துறைகளாகக் காட்சி தரலாம்; இயற்கைச் சீற்றங்களால் தாண்டவமாடிடும் ட்சுனாமி, சூறாவளி, புயல், பூகம்ப, எரிமலைக் கோரங்களின் கொடுமை அழிவுகளாக உண்டாகலாம்; பல வகையான ஆன்மீக சம்பவங்களாகத் திகழ்லாம்; எனவே, செய்திகள் என்பவை உலகத்தின் பல தோற்றங்களால் உருவாகுபவையே! அவற்றைச் சேகரித்துத் தாள்கள் மூலம் தந்து மக்களை எச்சரிக்கையோடு விழிக்க வைத்து, வாழ்க்கை நடத்த உதவுபவைகளே செய்தித் தாள்களின் அற்புதப் பணிகளாகும்.

இந்த வகையான சமுதாய மேம்பாடுகளுக்காக உழைப்பதுதான் செய்தித் தாள்கள். அதனால்தான் மக்கள் அவற்றை விரும்பி வாங்கிப் படித்துத் தெளிவு பெற்றிட விரும்புகிறார்கள்.

எந்த ஒரு சம்பவமானாலும், அதை எங்கே நடந்தது? ஏன் நடந்தது? எப்போது நடந்தது? எதற்காக நடந்தது? என்ன முடிவு? என்பதை மக்களுக்கு விவரமாகத் தெரிவிப்பதுதான் செய்தித் தாள் கல்வியாகும்!

பள்ளிப் பாடங்களைப் போதிப்பவன் பள்ளி ஆசிரியன்; நாட்டு நடப்புகளை விளக்கமாகப் போதிப்பவன் செய்தித் தாள் ஆசிரியன்! இரு ஆசிரியர்களும் நாட்டுக்கும் வீட்டுக்கும் எதிர்கால நன்மைகளை விளைவிப்பவர்கள் என்றால் அது மிகையாகாது.

# 19

# பத்திரிகைச் செய்திகளை வழங்கும் உலக, இந்திய அமைப்புகள்

தமிழ்நாட்டில் செய்தித்தாளை நடத்துகின்றோம். அமெரிக்கா, இரஷ்யா, ஐரோப்பா போன்ற நாடுகளில் நடைபெறும் அன்றாடச் செய்திகளை நாம் இங்கே இருந்து கொண்டே தெரிந்து கொள்கின்றோமே! எப்படி?

தமிழ்நாட்டுக்குள் நாம் செய்தித்தாளை நடத்தும்போது, ஒவ்வொரு மாவட்டத்திலும், வட்டத்திலும், பேரூர் சிற்றூர் களிலும் செய்தியாளர்கள் மூலமாக செய்திகளைப் பெற்றுக் கொள்கிறோம். காரணம், ஒவ்வொரு ஊர்களிலும் நமது பத்திரிக்கைக்காக பணியாற்றும் நிருபர்கள் செய்திகளை அங்கங்கே இருந்து திரட்டி அனுப்புகிறார்கள்.

அந்தச் செய்திகளை நமது பத்திரிகையில் பணியாற்றும் செய்தி ஆசிரியர், துணையாசிரியர் ஒழுங்குபடச் செம்மைப் படுத்தி, உருவாக்குகிறார்கள். அதனால், நாம் நாள்தோறும் நாட்டு மக்களுடன் தொடர்பு கொள்ளும் நிலை உருவாகின்றது.

அதனைப் போலவே, இந்திய மாநிலங்களிலும், தலைநகரான புது தில்லியிலும் பண வசதி படைத்த பத்திரிகைகள் செய்தியாளர்களை நியமித்துக் கொண்டு அவர்கள் மூலமாகச் செய்திகளைப் பெற்று, செப்பஞ் செய்து பத்திரிகையில் வெளியிட்டு, பிற மாநில மக்களின் வாழ்வியல் குறை நிறைகளை நமது மக்களுக்கு அறிவிக் கின்றோம். மக்கள்

அந்தச் செய்திகளைப் படித்து நாட்டு நிலைகளைத் தெரிந்து கொள்கிறார்கள்.

ஆனால், ஒவ்வொரு செய்தித் தாளும், அவை எவ்வளவுதான் பண வசதிகளைப் பெற்றிருந்தாலும், ஆங்காங்கே செய்தியாளர்களை நியமித்துச் செய்தி சேகரிப்ப தென்பது மிகக் கடினமான வேலையாகும். 'இந்து' போன்றபெரிய பத்திரிகை நிறுவ்னங்கள் சிலவற்றுக்குத்தான் அத்தகையை சக்தி இருக்க முடியும்! எல்லா பத்திரிகைகளாலும் முடியாது.

அதனால்தான் செய்திகளைத் திரட்டி மற்ற நாடுகளுக்கு வழங்கிட; ஒவ்வொரு நாட்டிலும் செய்தி நிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவை கூட்டுறவு மூலமோ அல்லது தனியார் வாயிலாகவோ நடைபெற்று வரும் செய்தி நிறுவனங்களாகும்.

இந்தச் செய்தி நிறுவனங்கள் பத்திரிகையாளர்களிடம் பணம் பெற்று உறுப்பினர்களாக்கிக் கொண்டு உரிய செய்திகளை உலகுக்குத் தருகின்றன. இதழ் நடத்தும் நமக்கும் பணம் பலம் இருந்தால் ஒன்றுக்கு மேற்பட்ட செய்தி நிறுவனங்களில் உறுப்பினராகிச் செய்திகளைப் பெறலாம்.

ஒவ்வொரு நாட்டிலும் உள்ள செய்தி நிறுவனங்கள், உலகத்திலுள்ள புகழ் பெற்ற நிறுவனங்களுடன் இணைந்து, உறுப்பினராகி, அந்தந்த நாட்டுச் செய்திகளை அவை பெற்று, அவற்றிலே இருந்து தங்களது நாடுகளிலுள்ள பத்திரிகை உறுப்பினர்களுக்குச் செய்திகளைக் கொடுத்து வெளியிடச் செய்கின்றன.

இத்தகைய உலகச் செய்தி நிறுவனங்கள் கடந்த பல ஆண்டுகளாக ஒவ்வொரு பெரிய நாடுகளிலும் நடந்து வருகின்றன.

அமெரிக்கா, இரஷ்யா, இங்கிலாந்து, சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, ஜெர்மன், இத்தாலி, ஃபிரான்ஸ் போன்ற நாடுகளிலே இத்தகைய உலகச் செய்தி நிறுவனங்கள் திறமையாக இயங்கி வருகின்றன.

கம்பியில்லாத தந்தி, தொலைபேசி, கடலடித் தந்தி (cable), டெலி பிரிண்டர், டெலக்ஸ் (Telex) முறைகள் செய்திகளை உலக நாடுகளுக்கு அனுப்பிட வசதியாக உருவாக்கப்பட்டு, அவற்றின் மூலமாக பிற நாடுகளுக்குரிய செய்திகளை அந்தந்த நாடுகளின் நிறுவனங்களுக்கு வழங்கி வருகின்றன.

பத்திரிகையாளரான நாம், அந்த நிறுவனங்களின் உறுப்பினரானதால் அவை கட்டணம் பெற்றுக் கொண்டு நமக்கு உலகச் செய்திகளைத் தருகின்றன. இவ்வளவு வசதிகள் செய்திகளைப் பரிமாற இருந்தும்கூட, தற்போது விண்வெளித் தொழில் நுட்ப வளர்ச்சியின் மூலமாக செயற்கைக் கோள் செய்தி அனுப்பும் முறையில் (Satellite) நேர் படி ஒளிப்படம் அனுப்பும் முறை (Facsimile Transmission)யால் தகவல் அனுப்பு வதும் பெறுவதுமான புதிய முறைகள் உருவாகியுள்ளன.

அவற்றாலும் உடனுக்குடன் நிமிடங்கள் கணக்கில் உலகச் செய்திகளைப் பெற்று வருவதும், அனுப்புவதுமாக செய்தித் துறை நிறுவனங்கள் வளர்ந்து விட்டன. அதனால் செய்திப் பத்திரிகை வளர்ச்சியும் நாள்தோறும் முன்னேறி வரும் காட்சிகளைக் காண்கின்றோம்.

உலகத்தின் முதல் செய்தி நிறுவனத்தை அமைத்தவர் சார்லஸ் ஹ்ராவாஸ் என்ற ஒரு பிரெஞ்சுக்காரர். அவர் 1825-ஆம் ஆண்டில் பாரிஸ் நகரில் ஒரு செய்தி நிறுவனத்தை அமைத்து, அந்த நிறுவனம் தற்போது உலகெங்கும் பல கிளை நிறுவனங் களைத் தோற்றுவித்து வெற்றிகரமாக நடத்தி வந்தார். அந்த நிறுவனம் பத்தாண்டுகளுக்குள் நல்ல செல்வாக்குடன் வளர்ந்து செய்திகைள வழங்கி வருகிறது.

இலண்டன் நகரிலே உள்ள ராய்டர் செய்தி நிறுவனத்துடன் பங்கு கொண்டு, அவற்றிலிருந்து செய்தி களைப் பெற்றதுடன், 1875-ஆம் ஆண்டில் அமெரிக்காவின் நியூயார்க் நகரிலுள்ள அசோசியேட்டட் பிரஸ் (**Associated Press**) என்ற நிறுவனத்துடன் செய்திகளை வழங்கும் பணியை வெற்றிகரமாகச் செய்து வருகின்றது.

அதே பிரெஞ்சுக்காரர் செய்தி நிறுவ்னத்தில் பணியாற்றி பெர்னார்டு உல்ஃப் என்பவர், 1848ல் ஜெர்மன் நாட்டில் ஒரு செய்தி நிறுவனத்தை ஆரம்பித்தார். இவர் முதன் முதலாக வணிக

நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அவற்றின் விலை விவரங்களைத் தொகுத்து, உலக நாடுகளிலுள்ள வணிக நிறுவனங்களுக்கு வழங்கி வருவாய் தேடிய அவர், பிறகு, அரசியல், சமுதாயச் செய்திகளையும் திரட்டித் தரும் பணியில் உயர்ந்து நின்று செல்வர் ஆனார்.

இவரது நிறுவனம் உலகின் பல நாடுகளில் கிளைகளை அமைத்துக் கொண்டு இலண்டன் ராய்ட்டர் செய்தி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு வளர்ந்தார்.

பெர்னால்டு உல்ஃப் நிறுவனம், பல்கேரியா, ருமேனியா, ரஷ்யா, கிரீஸ், துருக்கி போன்ற பல்வேறு நாடுகளிலும் செய்தி நிறுவனங்களை நிறுவி வந்தபோது முதல் உலகப் போர் 1914-18ல் உருவானதால், அதன் வளர்ச்சி குன்றி வீழ்ச்சியுற்றது.

## இலண்டன் இராய்ட்டர் நிறுவனம் (Reuter)

இராய்ட்டர் என்ற உலகச் செய்தி நிறுவன்ம் தற்போது இலண்டன் நகரிலே இருந்தாலும், இது 1850-ஆம் ஆண்டில் ஃபிரான்ஸ் நாட்டில் துவக்கப்பட்டு, 1851ல் இலண்டன் நகர் சென்றது.

இந்த நிறுவனம் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரிட்டன் நாடுகளிலே உள்ள 4 பத்திரிகைகளுக்கு உரிமையானது.

60 நாடுகளில் 150 நிறுவனங்களுக்கு இந்த நிறுவனம் செய்திகளை வழங்கி வருகின்றது. தனியார் இதைத் துவக்கியபோது என்ன செல்வாக்கோடிருந்ததோ அதே மதிப்போடு இன்றும் உலகில் செய்திகளை அது வழங்கி வருகின்றது. ஏஜென்சி ஃபிரான்ஸ் பிரஸ் (Agency Franle Press) எனப்படும் செய்தி நிறுவனம், 1835-ஆம் ஆண்டில் சார்லஸ் ஹாவஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது.

ஏறக்குறைய 109 ஆண்டுகளாக இது செயல்படுவதுடன் உலகின் முதல் செய்தி நிறுவனம் என்ற புகழை நிலை நாட்டிக் கொண்டது.

இந்த நிறுவனம் ஃபிரான்சுக்குரியதாக இருந்தபோது, செர்மன் இதை ஆக்ரமித்துக் கொண்டது. ஃபிரெஞ்சுக்காரர்கள்

போராட்டம் நடத்தியபோது இது தோன்றியது. அதனால் இது ஃபிரெஞ்சுக்காரர்களின் தலைமறைவுச் செய்திகளை வெளியிட்டதால் ஜெர்மானியர் இதைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இதற்கு ஆண்டுதோறும் பிரிட்டன் அரசு மானியம் வழங்கி வருகின்றது.

இந்த ஏஜென்சி நிறுவனத்தை 1957-ஆம் ஆண்டு முதல் ஃபிரெஞ்சுக்காரர்கள் சட்டத்தின் துணையால் தனித்தியங்க வைத்துள்ளார்கள். ஃபிரெஞ்சு செய்தித் தாள்கள், வானொலி, தொலைக்காட்சிகள், பொதுமக்கள் சார்பாளரும் இந்தச் செய்தி நிறுவன ஊழியர்களாகப் பணிபுரிகிறார்கள்.

ஏறக்குறைய 167 நாடுகளிலே இதற்குச் செய்தி நிறுவனக் கிளைகள் உள்ளன. 152 நாடுகளுக்குச் செய்திகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

### அனைத்துலக யுனைடெட் பிரஸ் செய்தி நிறுவனம்

இது 1907-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. ஸ்கிரிப்ஸ் யுனைடெட் பிரஸ் அசோசியேஷன் என்பது இதன் முழு பெயர். 1908-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஹார்ஸ்டஸ் இண்டர்நேஷனல் நியூஸ் சர்வீஸ் இத்துடன் இணைந்தது. 1958-ஆம் ஆண்டில் இது யுனைடெட் பிரஸ் இண்டர் நேஷனல் (UPI) என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது.

இது தனியார் நிர்வாகத்தில் இயங்கி வரும் ஒரே ஓர் உலகச் செய்தி நிறுவனம். இதில் 92 நாடுகளிலுள்ள 7097 பத்திரிகைகள் கட்டண உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

### இரஷ்யாவின் டாஸ் செய்தி நிறுவனம்

இந்த நிறுவனம் சோவியத் ரஷ்யாவில் செய்தி நிறுவனமாக இயங்கி வருகிறது. Telegrafnoe Agentsvo Sovetsrovo Soiuza என்பது இதன் முழு பெயர். இது 1918 முதல் TASS என்ற பெயரில் செய்தி நிறுவனமாக உள்ளது. இதனை 1925-ஆம் ஆண்டு வரை ரோஸ்டா (Rosta) என்று குறிப்பிட்டார்கள்.

இந்த நிறுவனம் சோவியத் ரஷ்யா அரசின் நேரடி நிர்வாகத்தில் இயங்கி வருகிறது. அரசையும், பொதுவுடமைக் கட்சியையும் சார்ந்த நிறுவனமாகும்.

ஏறக்குறைய 110 நாடுகளில் 40 செய்தி திரட்டும் அலுவல கங்களும், 61 தனியார் செய்தியாளர்களும் இந் நிறுவனத்தில் பணியாற்றுகிறார்கள்.

## இந்தியாவில் இயங்கும் செய்தி நிறுவனங்கள்

இந்தியப் பத்திரிகை உலகத்திற்கான உலகச் செய்திகளை வழங்குவதற்காக இலண்டன் நகரத்தில் இயங்கி வரும் இராய்ட்டர் செய்தி நிறுவனத்தின் கிளை 1878-ஆம் ஆண்டில் மும்பை நகரில் துவங்கியது.

ஆனால், **Bombay Times** என்ற இங்லீஷ் பத்திரிகை 860-ஆம் ஆண்டு முதல் ராய்ட்டர் செய்தி நிறுவனம் இலண்டன் நகரிலுள்ள காலத்திலிருந்தே, உலகச் செய்திகளை அதனிடமிருந்து 'பம்பாய் டைம்ஸ்' ஏடு பெற்று வெளியிட்டு வந்தது. பிறகு, ராய்ட்டர் பம்பாய் வந்த பிறகு அதனிடம் நேரடித் தொடர்பு கொண்டது.

திரு. கே.சி.ராய் என்பவர்தான் முதன் முதலில் இந்திய பத்திரிகைகளுக்கான உலகச் செய்திகளை வழங்கும் நிறுவனத்தைத் துவக்கினார். அப்போது பயணியர் (Pioneer) என்ற இங்லீஷ் நாளேடு புகழ் பெற்றிருந்ததோடிராமல், ஆங்கிலேயர் ஆட்சியின் செல்வாக்கோடும், செழித்திருந்தது.

'பயணியர்' இதழின் ஆட்சிச் செல்வாக்கைப் பெற்ற ஹென்ஸ்மேன் (Hensman) என்பவரோடு கே.சி.ராய் சேர்ந்து கொண்டு, தொழில் போட்டியைத் துவக்கினார். அதற்குத் துணையாக ஸ்டேட்ஸ்மேன்'( States man) 'இங்லீஷ்மேன்' (English man), இந்தியன் டெய்லி நியூஸ் (Indian Daily News) போன்ற பத்திரிகையாளர்களைப் பங்குதாரராகச் சேர்த்துக் கொண்டு 'இந்தியாவின் அசோசியேட்டட்' (Associated Press of India) என்ற செய்தி நிறுவனத்தைப் பம்பாய் நகரில் துவக்கினார்.

கே.சி.ராய் . அந்த நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராகச் செயற்பட விரும்பியதை, அவரது கூட்டாளிப்

பத்திரிகைகள் விரும்பவில்லை. அதனால் அந்த நிறுவனத்தை விட்டு விலகினார். 'பிரஸ் பீரோ' (Press Bureau) என்ற அமைப்பை உருவாக்கினார்.

சென்னை, மும்பை, கொல்கொத்தா போன்ற பெரு நகரங்களில் ராய் பிரஸ் பீரோ கிளைகளைத் துவக்கினார். இந்திய இதழ்கள் ஒவ்வொன்றும் மாதந்தோறும் 350 ரூபாயைச் செய்திக் கட்டணமாகச் செலுத்தின.

திடீரென்று ராய்க்குப் பணத் தேவைகள் அதிகமாயின. அவரால் அந்த நிறுவனத்தை நடத்த முடியாததால், இந்தியா விலே புதிய கிளைச் செய்தி நிறுவனத்தை அப்போது துவக்கி இருந்த இராய்ட்டர் செய்தி நிறுவனத்தோடு அதைச் சேர்த்து விட்டார்.

அதற்குப் பிறகு ராய் இந்தியன் நியூஸ் ஏஜென்சி (Indian News Agency) என்ற நிறுவனத்தைத் துவக்கி 1947-ஆம் ஆண்டு வரை நடத்தி வந்தார்.

அகில இந்தியத் தேசிய இயக்கம் பலம் பெற்று ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் பல போராட்டங்களை காந்தியடிகள் நடத்தி வந்த காலத்தில், சதானந்தர் என்பவர் 'ஃபிரி பிரஸ் இந்தியா நியூஸ் ஏஜென்சி' (The Free Press of India News Agency) என்ற ஓர் உலகச் செய்தி நிறுவன அமைப்பை, மற்ற சில பத்திரிகையாளர்களோடு இணைந்து நடத்தினார். ஆங்கிலேயர் ஆட்சியின் கெடுபிடிகளால் அவருக்கு நிதி நெருக்கடி நிலை உண்டானது.

ஓர் இந்தியர் நடத்தும் செய்தி நிறுவனம் என்பதால், யார்யார் இந்திய நிறுவனத்திடம் செய்திகளைப் பெற்றுப் பத்திரிகைகளில் வெளியிட்டார்களோ, அந்தப் பத்திரிகையாளர் களைச் சட்டமெனும் இரும்புக் கரத்தால் அடக்கி ஆங்கிலேயர் ஆட்சி அபராதங்களை விதிக்கச் செய்தது.

இதனை எதிர்த்த இந்தியர் சதானந்தர், 'ஃப்ரி பிரஸ் ஜெர்னல்' (Free Press Journal) என்ற பத்திரிகையை துவக்கி நடத்தினார். இருந்தாலும், ஆட்சியின் முன்பு சங்கீதமா? என்ற கருத்தின்படி சதானந்தரால் சமாளிக்க முடியாமல் பத்திரிகையை நிறுத்தி விட்டார்.

'ஃப்ரி பிரஸ் ஜெர்னலில் பணியாற்றிய பி. சென்குப்தா, (Sengupta) என்பவர், இந்திய யுனைடெட் பிரஸ் என்ற செய்தி நிறுவனத்தை உருவாக்கி, அதனின் நிர்வாக இயக்குநராகப்

பணியாற்றினார். அந்த நிறுவனத் தலைவர் டாக்டர் பி.சி. ராய் என்பவராவார். 1948-ஆம் ஆண்டுக்குப் பிறகு இது வளர்ச்சிப் பெற்று வந்தது.

தற்போது இந்தியாவில் டெலி பிரிண்டர் வசதிகளுடன் நான்கு பெரிய செய்தி நிறுவனங்கள் உள்ளன. அவை : இந்தியாவின் பிரஸ் டிரஸ்ட் (Press Trust of India), இந்தியாவின் யுனைடெட் நியூஸ் (United News of India) அதாவது UNI, இந்துஸ்தான் சமாச்சார் (Hindustan Samachar) சமாச்சார் பாரதி (Samachar Bharathi) என்பவைகளே அவை.

இந்தச் செய்தி நிறுவனங்கள் எல்லாம் இந்தியாவின் மாநிலங்களிலே இருந்து வெளிவரும் இந்தி, மராத்தி, நேபாளி, குஜராத்தி, ஒரியா, கன்னடா, பஞ்சாபி, உருது, தெலுங்கு, தமிழ், மலையாளம், வங்காளம் ஆகிய இந்திய மொழிப் பத்திரி கைகளுக்குரிய எல்லாச் செய்திகளையும் வழங்கி வருகின்றன.

இந்துஸ்தான் சமாச்சார், சமாச்சார் பாரதி, இந்தியாவின் யுனைடெட் நியூஸ் ஆகிய மூன்றின் செய்தி நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களும் இந்தியாவின் தலைநகரமான புது தில்லியிலே இயங்கி வருகின்றன. Press Trust of India என்ற செய்தி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மும்பை நகரிலே அமைந்து இயங்கி வருகின்றது.

சமாச்சார்

இந்திரா காந்தி அம்மையார் இந்தியாவின் பிரதமராக இருந்த காலத்தில் நெருக்கடி நிலையை 1976-ஆம் ஆண்டின் போது நாட்டில் அமல்படுத்தினார் அல்லவா? அப்போது இந்திய அரசு மேற்கண்ட நான்கு செய்தி நிறுவனங்களையும் ஒன்றிணைத்து 'சமாச்சர்' (Samachar) என்ற செய்தி நிறுவன அமைப்பை உருவாக்கிச் செய்திகளை, சென்சார் செய்து வெளியிட்டது. இதற்கு மத்திய அரசு 50 லட்சம் ரூபாயை மானியமாகக் கொடுத்தது.

மத்திய ஆட்சியில் 1977-ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு புதிய மாற்றம் உருவானாது. 14.4.1978ஆம் ஆண்டில் மறுபடியும் இணைந்த பழைய நிறுவனங்கள் நான்கும் பிரிந்து அதனதன் சுதந்திர உரிமைகளோடு இயங்கின என்பது குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

## 20

# கிரைம் செய்திகள் எவையெவை? அவை அறமா? சேவையா? ஆபத்தா?

மக்கட் சமுதாயத்தில் குற்றம் (கிரைம்) செய்யாத மனிதனே கிடையாது? புராண - வேத சாஸ்திர நெறிகள் எல்லாம் குற்றம் செய்பவனைத் திருத்துவதற்காவே எழுதப் பட்டவை! குற்றம் புரிபவர்களை அசுரர்கள் என்றும், குற்றம் செய்யாதவர்களைச் சுரர்கள் என்றும் அவை குறிப்பிடுகின்றன.

இராவணன், இரண்யன், கம்சன், பத்மாசூரன், பானுகோபன், இந்திரஜித்தன், கும்பகர்ணன் போன்ற எண்ணற்றவர்கள் அசுரர்கள்! இராமன், கிருஷ்ணன், இலட்சுமணன் போன்ற விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள் சுரர்களெனச் சுட்டப்படுகிறார்கள்!

எனவே, குற்றம் இழைப்பது என்பது மக்கட் சுபாவம், பண்புகளாக இருக்கின்றன. அதைத் திருத்தி மனிதனாக்குவது நீதிநெறி நூல்களும், அரசு சட்டங்களும்தான் என்பது உலகம் உணர்ந்த உணர்ச்சி வழி வகைகளாகும்.

மன்னிக்கும் பண்புடையவனே மனிதனாவான்; குற்றம் பார்க்கில் சுற்றமில்லை; குற்றங் கடிதல் அரசு அறநெறிகளில் ஒன்று என்ற பண்பார்ந்த நோக்கிலேதான் சட்டங்களை மனிதன் எழுதுகிறான்; அமல்படுத்துகிறான். நீதியை மனித சமுதாயத்தில் நிலைநாட்ட அரும்பாடுபடுகிறான் என்பதற்கு உலக சரித்திரத்தில் எண்ணற்றச் சான்றுகள் இருக்கின்றன.

இத்தகையச் குற்றச்சாட்டுகளின் நிகழ்ச்சிகளை மனிதன் படிக்க ஆர்வம் காட்டுவது என்பது என்னமோ உண்மைதான். என்றாலும்; அவற்றை சில பத்திரிகைகள் பணம் பண்ணுகின்ற செய்திகளாகவே பெரிதுபடுத்தி வெளியிடுகின்றன.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற இலட்சுமி காந்தன் என்பவர் ஒரு பத்திரிகை ஆசிரியன். 'இந்துநேசன்' என்ற பத்திரிகையை நடத்தியவரும் ஆசிரியரும் அவரே! அவரைக் கொலை செய்யும் சதி வழக்கில் சினிமா நடிகர்களும் சம்பந்தப்பட்டார்கள் என்பது வழக்கு!

அதனைப் போலவே, ஆளவந்தார் என்ற ஒரு பேனாக் கடைக்காரர் கொலை வழக்கு. அந்த வழக்கும் அக்காலத்தில் பிரபலமாக நடைபெற்றது. அதையும் பத்திரிகைகள் தொடர்ந்து விவரமாக வெளியிட்டன. அந்த வழக்கு விவரங்களையும் மக்கள் தொடர்ந்து ஆர்வத்தோடு விரும்பிப் படித்தார்கள்! பத்திரிகைகளும் பரப்பரப்பாக விற்றன.

இப்போது காவல் துறையினரால் சீரழிக்கப்பட்டதாக ஜெயலட்சுமி என்ற ஒரு பெண்ணின் வழக்கும் நடைபெற்று வருகிறது. அந்த வழக்கு விவரங்களையும் தற்போது பத்திரிகைகள் பரப்பரப்புடன் வெளியிட்டப்படி உள்ளன.

காஞ்சிபுரம் வரதராஜர் பெருமாள் கோயிலில் அதன் மேலாளராகப் பணிபுரிந்த சங்கரராமன் என்பவருடைய கொலை வழக்கில், காஞ்சி மடம் சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் அவர்களும், இளைய மடாதிபதி விசயேந்திரர் அவர்களும், அந்தக் கொலை வழக்குச் சதியில் ஈடுப்பட்டிருப்பதாகக் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். அந்த வழக்கின் விவரங்களையும் பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றன. அந்த வழக்குச் சம்பவங்களையும் தமிழ் மக்கள் தினந்தோறும் விரும்பிப் படித்துப் பரபரப்படைகின்றார்கள்.

என்வே, பொதுவாகச் சட்டத்திற்கு எதிராகவோ, மீறியோ, புறம்பாகவோ செய்யும் எந்த ஒரு செயலும், சதியும் குற்றம் என்று கூறப்பட்டு அது தண்டனைக்குரிய குற்றம் என்று சட்டம் சொல்லுகின்றது.

அதனைப் போலவே, திருட்டு, கொலை; சதி, கொள்ளை, கற்பழிப்பு, விபத்து, மோசடி, அதிகாரத்தைத்

தவறாகப் பயன்படுத்துதல், அடிதடிச் சண்டை, இலஞ்சம் பெறுதல் போன்றவை எல்லாமே கிரைம் குற்றம் (Crime News) புரியும் செயல்களாகின்றன.

பத்திரிகைகள் நிலை :

மேற்கண்ட வகையானச் குற்றச் செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. இதை மக்களும் விரும்பி ஆர்வமாகப் படிக்கின்றார்கள். இவ்வாறு Crime Newsகளை வெளியிடுவது நாட்டுக்குச் செய்யும் தொண்டுகள் தானா என்று சில நடுநிலையாளர்களும் சிந்திக்கிறார்கள்?

பொது மக்களில் வேறுசிலர் குற்றச் செய்திகளை வெளியிடுவது சமுதாயச் சேவை அல்ல; ஆன்மீகம் சம்பந்தப் பட்ட அல்லது காவல் துறை ஊழல் குறித்தக் குற்றச் செய்திகளை வெளியிடுவது பத்திரிகை தருமத்திற்கு விரோத மானது; அந்தச் செய்திகளைப் படிக்கும் மக்கள் சமுதாயத்திற்கு அவை ஊறு விளைவிப்பன என்றும் சிந்திக்கிறார்கள். எனவே, குற்றச் செய்திகளைப் பத்திரிகைகளில் வெளியிடுவதைப் பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் மக்களிடையே நிலவுகின்றன.

நாட்டில் நடைபெறும் எந்தவிதமான சம்பவங்களையும் கற்பனைக் கலவாமல்; உண்மையை உண்மையாக வெளி யிடுவது பத்திரிகைகள் கடமை. அவ்வாறு வெளியிடாமல் மறைத்து விட்டால் நாட்டில் நடக்கும் நன்மை - தீமைகள் பற்றிய விவரங்கள் மக்களுக்குத் தெரியாமல் போய்விடும். அது சமுதாய அநீதியுமாகும் என்பர் பலர்!

பத்திரிகைகளின் தர்மத்திற்குப் பங்கம் நேராமல், இதழ்களின் மரியாதைக்கு நேர்மைக் குறைவு ஏற்படாமல், சமுதாயத்தில் மேலும் குற்றங்கள் மேம்படாமல், காவல் துறை குற்றக் கண்டுபிடிப்புக்கு உதவும் வகையில் குற்றங்களைத் தொடர்ந்து செய்ய மக்களைத் தூண்டாமல், எச்சரிக்கையோடு அவர்கள் வாழும் வகையில், பத்திரிகைகள் பொறுப்புணர்ச்சி யோடும், கண்ணியத்தோடும், குற்றச் செய்திகளைத் தரத்தோடும் - மனசாட்சிப் பண்புகளோடு வெளியிட்டு வரும் அவற்றின் தொண்டு மனப்பான்மைகளின் தன்மைகளையும் மக்கள் பாராட்டுகிறார்கள்.

அதற்கான எடுத்துக்காட்டுகள்தான் 'இந்துநேசன்' பத்திரிகை ஆசிரியர் கிரைம் வழக்கும், ஆளவந்தார் கொலை வழக்கும், ஜெயலட்சுமி என்ற பெண்ணின் போலீஸ் கிரைம் புகார் வழக்கும், காஞ்சி மடாதிபதிகளான இரண்டு சங்காரசாரியார்கள் வழக்குகளின் குற்றப் புகார்களையும் பத்திரிகைகள் வெளியிட்டு வரும் சம்பவங்களாகும்.

எனவே, பத்திரிகைகள் எல்லாம் தங்களுக்கு உருவாகும் ஆபத்து உணர்வுகளைக் கருதாமல், சட்டம், பண்பாடு, அறம், மரபு, சமுதாயப் பொறுப்புணர்ச்சிகளோடு குற்றப் புகார்கள் செய்திகளை வெளியிடும் உண்மைச் செய்திகள் தான் என்றால், அவை மக்களால் பாராட்டப்படும் செய்திகளே! மிகையன்று!

# 21

# மத்திய - மாநில அரசுகளிடம் எவ்வாறு செய்திகளைத் திரட்டலாம்

குறிப்பு :- செய்தி திரட்டும் பணியாளர் தமது பத்திரிகைக்கு எவ்வாறு செய்திகளைச் சேகரிக்கலாம்; திரட்டிய செய்திகளை எப்படியெப்படி அதன் முக்கியத்திற்குரியவாறு எழுதலாம் என்பதைப் இப்பகுதியில் புரிந்து கொள்ளலாம்.

*மாநில அரசுச்*
*செய்தி வகைகள்*

நமது நாடு மக்களாட்சி நாடு. அதற்கேற்ற வகையில், அரசுத் துறைகள், மாநகராட்சி அலுவல்கள், பேரூராட்சி பணிகள், ஊராட்சி ஒன்றிய அமைப்புப் பிரிவுகள், சிற்றூராட்சி அதாவது ஊராட்சி மன்ற வேலைகள் இயங்கிக் கொண்டிருக் கின்றன.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள் அந்தந்த ஆட்சித் துறைகளுக்கு ஏற்றவாறு இயங்குகிறார்கள்.

இந்த மன்றங்களின் கொள்கைகள் - நடவடிக்கைகள், செயல் திட்டங்கள், பொது மக்களது வாழ்க்கை முறைகளை மேம்படுத்தவே பணியாற்றுகின்றன.

அரசு அதிகாரிகளும் அந்த ஆட்சி மன்றங்களின் பணிகளை இயக்குபவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அந்தந்த ஆட்சி மன்ற நடவடிக்கைகளைப் பொது மக்கள்

பயன்பெறும் வகையில் மன்ற உறுப்பினர்களது சட்டச் சிந்தைகளுக்குகந்தவாறு செயல்படுகின்றார்கள். அதனால், அந்த மன்றங்களின் செயற்பாடுகளைத் திரட்டிப் பத்திரிகைகளில் வெளியிட்டு மக்களுக்குத் தெரிவிக்கும் பொறுப்பு செய்தியாளர்களுக்கு உண்டு! அது இதழ்களின் கடமை!

மாநில அரசுச் செய்தியாளர்களுக்கு - அரசின் மைய இடம் அலுவலகத்தில் ஒரு தனி அறை, தொலைபேசி வசதிகளுடன் அமைந்துள்ளது. அங்கு எல்லாப் பத்திரிகைச் செய்தியாளர் களும் கூடுவார்கள். அரசுப் பிரிவைச் சார்ந்த செய்திகளை நிருபர்கள் அங்கே பெறலாம். அறிவிக்கை மூலமும், தொலைபேசிகள் வாயிலாகவும் செய்திகளை அங்குத் திரட்டலாம்.

அதன் பின்னர் செய்தியாளர்கள், அமைச்சர்களது அறைக்குச் செல்வார்கள். அங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரி களோடும் தொடர்பு கொண்டு செய்திகளைத் திரட்டுவார்கள்.

மக்கள் தகவல் தொடர்புத் துறை இயக்குநர் அறைக்குச் சென்றால், அங்கே அரசு சம்பந்தப்பட்ட முக்கியச் செய்திகளை வழங்குவார்கள். அமைச்சகங்களின் செய்திக் கூட்டங்கள், அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் வழங்கும் பேட்டிகள், அரசு நடத்தும் இதழ்கள், அரசுக்குச் செல்லும் தூதுக் குழுக்களின் செய்திக் கசிவுகள் (Leakage) ஆகியவற்றின் மூலமும் மாநில அரசுச் செய்திகளை திரட்டலாம்.

*மத்திய அரசு*
*செய்திகள்*

மாநில அரசுத் துறைகளைப் போலல்லாமல், மத்திய அரசின் ஒவ்வொரு அமைச்சர் அறைக்கும் தனித்தனியாகச் செய்தியாளர்கள் சென்று செய்திகளைச் சேகரிக்கும் முறையும் உள்ளது. அரசின் மக்கள் தொடர்புத் துறை அரசுக்குரிய செய்திகளை வழங்குகின்றது.

அமைச்சகங்கள் பத்திரிகைகளுக்குச் செய்திகளை அளிக்கும் நிலை ஏற்பட்டால், செய்தியாளர்களைத் தங்களது அறைக்குள் அழைத்து, அமைச்சர் முன்னிலையில் செய்திகளை வழங்கும் வழக்கம் உள்ளது.

அதுபோலவே, பிரதமர் அலுவலகமும், குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் அலுவலகங்களும் அடிக்கடிச் செய்தியாளர்கள் கூட்டத்தை நடத்திச் செய்திகளை அறிவிப்பார்கள்.

அந்தச் செய்திகளைப் பெற்றுக் கொண்ட அல்லது தொலைபேசி மூலம் அறிந்து கொண்ட செய்தியாளர்கள், நேராகத் தங்களுக்கென உள்ள செய்தியாளர்கள் அறைக்கு வந்து தொலைபேசி மூலம் அவரவர் பத்திரிகை அலுவலகங்களுக்கு அன்றையப் புதிய செய்திகளை அறிவிப்பார்கள்.

### அரசு செய்திகளைப் பெற்றிட மூன்று வழிகள்

தங்கள் ஆட்சி சம்பந்தப்பட்ட செய்திகளை அரசு மூன்று வழிகளில் செய்தியாளர்களுக்குத் தெரிவிக்கின்றன.

1. பத்திரிகை கடிதம் (Press Communique) : மூலமாகச் செய்தியை அறிவிப்பது ஒரு முறை. இது மிகவும் பொறுப்பான அறிவிப்பு முறை. அரசு சம்பந்தப்பட்ட முக்கியமான கொள்கைத் தீர்மானங்களை மட்டுமே இந்த முறை மூலம் அறிவிக்கப்படும்.

2. இரண்டாவது முறை : பத்திரிகைக் குறிப்பு முறை. அதாவது Press Note, அரசுத் தீர்மானங்கள், அரசு குறித்து சில விவகாரங்கள் பற்றிய அரசின் நிலைகளை இந்த முறை மூலம் அரசு விளக்குகின்றது.

3. பத்திரிகை வெளியீடு : அதாவது Press Release மூலமாக தினந்தோறும் நடக்கும் நிர்வாகச் செயல்களையும்,

நடவடிக்கைகளையும் அரசு அறிவிப்பது மூன்றாவது முறை. நாள்தோறும் பத்திரிகைகளுக்குரிய வெளியீடுகளைச் செய்தி தாள்களுக்கு அரசு வழங்குகின்றது.

மேற்கண்ட மூன்று முறைகளால், பத்திரிகைகட்குரிய செய்திகளை, செய்தியாளர்கள் மூலமாகக் கொடுப்பது அரசியல் சம்பந்தப்பட்ட வழக்கமாக இருந்து வருகின்றது.

# 22

# நீதிமன்றச் செய்தியாளர்கள் கவனிக்க வேண்டியவை!

நீதிமன்றத்தில் செய்திப் பணியாளராக உள்ளவர்கள்,

- நீதிமன்ற அமைப்பு முறை
- சட்டத்தின் அடிப்படைகள்
- நீதிமன்ற சொற் பொருள்கள்

ஆகியவற்றைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். சட்டப் படிப்புப் பட்டம் தேவையில்லை. ஆனால், சட்ட அறிவு இருப்பது நல்லது.

- நீதிமன்றச் செய்திகளைக் கவனமாக எழுதுதல்
- நீதிமன்ற அவமதிப்புக்கு ஆளாகாமல் இருப்பது (Contempt of the Court)
- வழக்குப் போக்கையோ அல்லது வழக்கோடு தொடர்பு கொண்டவர்களையோ, எவ்வகையிலும் பாதிக்காமல் செய்திகளை ஜாக்கிரதையாக எழுதவேண்டும்
- சட்டச் சொற்களை அப்படியே பயன்படுத்தக் கூடாது

- எல்லாரும் புரிந்து கொள்ளும் எளிய சொற்களால் நீதிமன்றச் செய்திகளை எழுத வேண்டும்.
- வழக்கைப் பற்றிச் செய்தியாளர் தனது கருத்துக்களைக் கூறக் கூடாது.
- வழக்கு நடந்த முறையை நடுநிலையோடு விளக்க வேண்டும்.
- படிக்கும் மக்கள் ஆர்வத்தைத் தூண்டும் நீதிமன்றக் காட்சிகளைச் சுவைபட எழுதுவது நல்லது.
- ஆனால், வெளியிடக் கூடாது என்று நீதிபதி கூறியதைச் செய்தியாக எழுதக் கூடாது
- வழக்கின் தீர்ப்பை முதலில் குறிப்பிட்டுவிட்டு, பிறகு விபரத்தை விளக்கலாம்.
- வழக்கு நடந்த விதத்தைத் தவறாக வெளியிட்டால் தண்டனை கிடைக்கும்.
- நீதிமன்ற வழக்கின் முடிவை யூகத்தோடு முன்கூட்டியே வெளியிடக் கூடாது. நீதிபதியைப் பற்றிக் கருத்தேதும் குறிப்பிட்டு எழுதக் கூடாது.
- கணவன் - மனைவி விவாக ரத்து, கற்பழிப்பு, இரவு ராணிகள் விளையாடல்கள் மீது நடக்கும் வழக்குகள் சுவையாக இருக்கிறதென்று அப்படியே அவற்றைப் பத்திரிகையில் வெளியிடக் கூடாது. ஏன் தெரியுமா? சமுதாயத்தின் பண்பாடு கெடும், பத்திரிகை தர்மமும் அன்று. இவை போன்ற சமுதாய ஒழுக்கக் கேடுகளை வளர இடம் தரக் கூடாது. சட்டமும் இதைத் தடுக்கிறது; தண்டனை தருகிறது.

# 23

# செய்தியாளர் தவறு செய்தால் சட்டமன்றமே - நீதிமன்றமாகும்!

இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் இரண்டு சட்டமன்றங்கள் உண்டு. ஒன்று சட்டப் பேரவை. அதை இங்லீஷில் Legislative Assembly என்பர். இது மக்களால் தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்களால் நடைபெறுவது. இதற்குச் சட்டப் பேரவை என்று பெயர்.

மற்றொன்று சட்டமன்ற மேலவை. இதன் உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய வாக்குகளால் (Votes) தேர்ந்தெடுக்கப்படுபவர்களாவர். இதனை Legislative Council என்று ஆங்கிலத்தில் கூறுவர்.

தமிழ்நாட்டில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு முன்பு வரை தொடர்ச்சியாகச் சட்டமன்ற மேலவை இருந்து வந்தது. எம்.ஜி.ஆர். தனது ஆட்சியில் மேலவையைக் கலைத்து விட்டார். இன்று வரை தமிழ்நாட்டில் சட்டமன்ற மேலவை மீண்டும் கொண்டு வரப்படவில்லை. அதனால், சட்டப் பேரவை மட்டுமே இயங்கி வருகின்றது. பீகார், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், கர்நாடகம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இரண்டு பேரவைகளும் இயங்குகின்றன.

இதனைப் போலவே இந்தியாவை ஆட்சி செய்யும் தலைநகரமான புது தில்லியிலும் இரண்டு நாடாளுமன்ற அவைகள் இருக்கின்றன.

ஒன்றுக்கு மக்கள் பேரவை (Lok Sabha) என்றும், மற்றொன்றுக்கு மாநிலங்களவை (Rajya Sabha) என்றும் பெயர். மக்கள் பேரவை உறுப்பினர்கள் மாநிலங்கள்தோறும் தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் ஆவர். மக்களவை உறுப்பினருக்குரிய வாக்குகளால் (Votes) தேர்வு செய்யப்படுபவர்கள் மாநிலங்களவை உறுப்பினர்களாவர்.

நாடாளுமன்றங்கள் இரண்டிலும், அரசியல் சம்பந்தப் பட்ட விவகாரங்கள் என்ன நடைபெறுகிறது என்பதை மக்கள் தெரிந்துக் கொள்ள விரும்புவார்கள். அதனால், நாடாளு மன்றம், சட்ட மன்றங்கள் செய்திகளைச் செய்தியாளர்கள் சேகரித்து அவரவர் பத்திரிகைகளுக்கு அனுப்புவதுண்டு. அதை இதழ்கள் வெளியிடுவது அதனுடைய மக்கள் தொண்டுகளாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், மாநிலச் சட்டப்பேரவை, நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கும் முறைகளையும், எப்படி அமைச்சர் அவைகள்; ம்த்தியிலும் - மாநிலத்திலும் இயங்க வேண்டும் என்பதையும், நாடாளுமன்ற மக்களவைத் தலைவர், மாநிலங்களவைத் தலைவர் எவ்வாறு அவைகளை நடத்த வேண்டும் என்பதையும், பேரவைக் கூட்டங்கள் எப்படி இயங்க வேண்டும் என்பதையும், மன்ற உறுப்பினர்கள் இயங்கும் நிலைகளையும் விவரமாக விளக்குகின்றது. அந்த விளக்கங்களை எல்லாம் செய்தியாளர்கள் நன்றாக உணர்ந்திருக்க வேண்டும். அப்போதுதான் நாடாளுமன்ற, சட்டமன்ற செய்திகளை எல்லாம் கவனக் குறைவு இல்லாமல், தவறு நேராமல் திரட்டிடச் சுலபமாக இருக்கும்.

## சட்டப் பேரவை

### நடவடிக்கைகள்

சட்டப் பேரவைகள் நடவடிக்கைகள் நேரத்தை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை :- கேள்வி நேரம், ஜீரோ நேரம் (Zero Hour), பல்வேறு வகைத் தீர்மானங்கள் நேரம், விவாதம், பதில் என்பவை ஆகும்.

சட்டமன்றமானாலும், நாடாளுமன்றமானாலும், கேள்வி நேரங்களில் செய்தியாளர்களின் கவனம் கூர்மையாக இருக்க வேண்டும். ஏனென்றால், உறுப்பினர்கள் கேட்கும் கேள்வி

களிலும், அவற்றுக்கு அமைச்சர்கள் அளிக்கின்ற விடைகளிலும் பற்பல தகவல்கள் கிடைக்கக் கூடும். அதனால் செய்தியாளர்கள் மிக எச்சரிக்கையாக இருத்தல் அவசியமாகும்.

ஜீரோ நேரம் என்றால் என்ன என்று வாசகர்கள் சிந்திக்கக் கூடும். அரசியல் சட்டத்தில் ஜீரோ நேரம் என்று ஒரு நேரம் ஒதுக்கப்படவில்லை. ஆனால், நாடாளுமன்றம், சட்டமன்றங் களும் கேள்வி நேரங்களை முடித்துக் கொண்ட பின்பு, உறுப்பினர்கள் தங்களது எண்ணத்திலெழும் கருத்துக்களில் எதனைப் பற்றியாவது விவாதிக்க, விளக்கம் கேட்க வேண்டு கோள் விடுக்கலாம். அதனால், இந்த நேரத்தை மன்றங்கள் ஒரு பொது நேரமாக ஏற்றுக் கொள்ளும் மரபாகி விட்டது.

அந்தந்த அவைகளில் உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டு வந்து முன் மொழிவார்கள். அவற்றுள் கவன ஈர்ப்பு தீர்மானம் (Calling Attention), ஒத்திவைப்புத் தீர்மானம் (Adjournment Motion), நம்பிக்கை இல்லாத் தீர்மானம் (No-confidence Motion), கட்டுப்படுத்தும் தீர்மானம் (Censure Motion) போன்றவை களும் உண்டு.

சட்டமன்ற உறுப்பினரோ, அமைச்சரோ கொண்டு வரும் பில்லுக்கு (Bill) மசோதா என்று பெயர். அதை முன்மொழிந்து விளக்குவது அவர்களது கடமைகளாகும்.

அவர்கள் கொண்டு வந்த தீர்மானங்களின் மசோதாக்கள் மீது விவாதங்களை உறுப்பினர்கள் நடத்துவார்கள். அந்த வாதங்களுக்குரிய பதிலை அமைச்சர்கள் கூறுவார்கள். தேவைப்பட்டால் வாக்கெடுப்பும் நடக்கும். இறுதியாக, தீர்மானங்கள் நிறைவேறி விடும்.

எல்லாவற்றையும், விட வரவு-செலவுத் திட்டங்களை அவையில் நிதியமைச்சர் வைப்பார். அதன்மீது உறுப்பினர்கள் விவாதங்கள் நடக்கும். இந்த நேரத்தில்தான் செய்தியாளர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால், பல முக்கியமான பிரச்னைகள், அதாவது வரி விதிப்பு, வரி விலக்குகள் போன்ற பிரச்னைகள் எழும்.

நாடாளுமன்ற, சட்டமன்றச் செய்திகளைச் செய்தி யாளர்கள் எழுதும்போது, என்ன நடந்தது, ஏன் நடந்தது, எப்படி நடந்தது என்ற முழு விவரங்களைக் கவனத்தில் கொண்டு சட்ட முறைகளையும், நடைமுறைகளையும் கூர்ந்து சிந்தித்து எழுத வேண்டும்.

அவைத் தலைவர் நீக்கியச் செய்திகளை எல்லாம் செய்தியாளர்கள் சேர்த்து எழுதிக் கொண்டு, பத்திரிகையில் வெளியிட்டு விடக்கூடாது.

ஏனென்றால் சட்டப் பேரவையின் உரிமை மீறல் பிரச்னை வந்து விடும். அந்தப் பிரச்னைக்கு பேரவை அவமதிப்பு என்று பெயர்.

## உரிமை மீறலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

1967-ஆம் ஆண்டு சட்டமன்ற, நாடாளுமன்ற பொதுத் தேர்தல் தமிழ்நாட்டில் நடைபெற்றபோது, அறிஞர் அண்ணா அவர்கள் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டார்கள். எல்லாக் கட்சிகளும் அந்தக் கூட்டணியில் பங்கு பெற்று ஆளும் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டன.

தமிழ்நாட்டின் சட்டப் பேரவைத் தொகுதிகளில் ஒன்று பெருந்துறை. அந்தத் தொகுதியில் சோசலிஸ்ட் கட்சியை சேர்ந்த பாலசுப்பிரமணியம் என்பவர், தி.மு.க. சின்னமான உதயசூரியன் சின்னத்தில் நின்று தேர்தலில் போட்டியிட்டார். அந்தத் தொகுதி சென்னிமலைத் தொகுதியா? பெருந்துறை தொகுதியா என்பது நினைவில் சரியாக இல்லை.

ஒரு கட்சி, வேறொருக் கட்சி சின்னத்தில் போட்டியிடுமா என்று கேட்டு விடாதீர்கள். தமிழரசுக் கட்சி வைத்திருந்த சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம், முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர், நாம் தமிழர் கட்சி நடத்திய தினத்தந்தி சி.பா. ஆதித்தனார் போன்றவர்கள் தங்களுக்குத் தோல்வி ஏற்பட்டு விடக்கூடாதே என்பதற்காக, மக்கள் செல்வாக்குப் பெற்ற உதயசூரியன் சின்னத்திலே 1967-ஆம் ஆண்டில் சட்டப் பேரவைக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் ஆவர்.

சில மாதங்களுக்குப் பிறகு, உதயசூரியனில் நின்று சட்டப் பேரவை உறுப்பினரானோமே என்பதை மறந்து, அண்ணா ஆட்சியைக் கடுமையாக விமர்சனம் செய்து சோசலிஸ்ட் கட்சிப் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசினார் - அந்த சோசலிஸ்ட் கட்சி உறுப்பினர்.

இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் அப்போது ''மாலைமணி'' என்ற நாளேட்டில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார்.

'எரியீட்டி' என்ற ஒரு கட்டுரைப் பகுதியிலே அவர் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்த காலம் அது.

சோசலிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர் அந்தப் பொதுக் கூட்டத்தில் ஆளும் கட்சியைத் தாக்கிப் பேசிய கருத்தை எதிர்த்து, எரியீட்டிப் பகுதியில் கலைமணி ஒரு கட்டுரையை எழுதினார். அந்தக் கட்டுரைக்கு 'உதயசூரியன் ஒளியில் மலம் கூட விளம்பரம் பெறுகிறது' என்பதைத் தலைப்பாக வெளியிட்டு அந்தக் கட்டுரை 'மாலை மணி' நாளேட்டில் வெளியானது.

சட்டமன்ற பிரச்னையை விமர்சனம் செய்து வெளியான கட்டுரை அன்று அது. பொதுக்கூட்டத்தில் அவர் ஆளும் கட்சியை எதிர்த்துப் பேசிய சொற்பொழிவின் கருத்து. உதயசூரியன் சின்னத்தில் நின்று அவர் தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டு, ஆளும் கட்சியை மனம் போனவாறு விமர்சனம் செய்வது நன்றியுடைய செயல்தானா? என்ற நோக்கில் எழுதப்பட்ட கட்டுரை அது.

அந்தப் பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர், தன்னைப் பற்றி எழுதிய 'எரியீட்டி'கட்டுரையை சட்டமன்றம் நடக்கும் கூட்டத்திற்கு கொண்டு வந்து காட்டி, ஒரு சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதி மக்களுக்குரிய பணிகளை ஆற்றவிடாமல் தடுக்கும் வடிவத்தில் இப்படி எழுதலாமா என்று கேட்டு, அதன் மீது உரிமை பிரச்னையை எழுப்பி, அக்கட்டுரையை உரிமை மீறல் குழுவின் விசாரணைக்கு அனுமதிக்கும்படி வாதிட்டார்.

சட்டப் பேரவைத் தலைவர் சி.பா. ஆதித்தனாரும், அப்போது உதயசூரியன் சின்னத்திலே நின்று வெற்றி பெற்றவர் என்பதால், அவரும் உரிமை மீறல் குழுவுக்கு அனுப்பிட அனுமதித்து விட்டார். அறிஞர் அண்ணா முதல் அமைச்சர் என்பதால் அவர் அவைத் தலைவர் கருத்துக்கு மறுப்புக் கூறாது மௌனமானார்.

ஒரு பத்திரிகைக் கட்டுரை அல்லது கருத்து, உரிமை மீறல் குழுவுக்கு அனுப்பப்பட்டால், அந்த உரிமை மீறல் பிரச்னை சட்டப்பேரவையின் உரிமை மீறல் குழுவால், சட்டமன்றம் மூன்று முறை இடைவெளி விட்டுவிட்டு மீண்டும் கூடும் கால வரம்புக்குள் அது விசாரிக்கப்பட வேண்டும் என்பது விதி என்று கூறப்பட்டது.

அதனால், அந்த உரிமை மீறல் பிரச்னை அந்த மூன்று முறை கால ஆயுளுக்குள் ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டம் முடிந்ததும், அந்தக் குழுவால் அந்தப் பிரச்னை Renewal செய்யப்படவேண்டும். அதாவது அந்தப் பிரச்னை புதுப்பிக்கப்படவேண்டும். அப்போதுதான் அது மீண்டும் விசாரணைக்குரிய ஆயுளைப் பெறும்.

ஆனால், அந்த உரிமை மீறல் பிரச்னையை, சட்டமன்றக் குழு மூன்றாவது முறையிலும் Renewal செய்யாமல் விட்டு விட்டது. அதனால், அந்தக் கட்டுரையாளன், அந்தப் பத்திரிகை உரிமை மீறல் பிரச்னையிலே இருந்து காப்பாற்றப்பட் விட்டதாகக் கேள்வி. அதற்குக் காரணம் யாராக இருக்க முடியும்? முதல் அமைச்சர் கருணைதானே காரணமாக இருக்கும்? எப்படியோ - என்னவோ காரணம். ஆனால் 'எரியீட்டி' கட்டுரையாளர் உரிமை மீறல் குற்றத்துக்கு ஆளாகாமல் தப்பித்தார்! அதுதானே முடிவின் முக்கியத்துவம்?

ஏன் இதை இங்கே குறிப்பிட்டேன் என்றால், பத்திரிகையாளன் உரிமை மீறலுக்கு ஆட்படாமல் சட்டமன்ற செய்திகளை எழுத வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டவே குறிப்பிட்டேன்.

இத்தனைக்கும் சட்டமன்றத்தில் நடந்த பிரச்னையைக் கூட அந்தக் கட்டுரை விமர்சனம் செய்யவில்லை. சட்டமன்ற உறுப்பினர் ஒரு பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரை பற்றிய விமர்சனம் அது. அதுவும் அந்தப் பிரச்னை அவருடைய சொந்த எண்ணப் பிரச்னை. அதற்கே அவர் சட்டமன்றத்தில் வாதாடினார் என்றால், உரிமை மீறலைப் பெற்றுவிட்டார் என்றால், சட்டமன்றத்தில் நடைபெற்றப் பிரச்னை என்றால் எவ்வளவு எச்சிரிக்கையோடும் ஜாக்கிரதையோடும் எழுத வேண்டும் ஒரு செய்தியாளர் என்பதை, செய்தி சேகரிப்போர் களுக்கு உணர்த்தவே இந்தச் சம்பவத்தை இங்கே சான்று காட்டினேன், அவ்வளவுதான்.

எனவே, எச்சிரிக்கையோடு, ஒரு செய்தியாளர் சட்டமன்ற விவகாரங்களை எழுதத் தவறிவிட்டால், சட்ட மன்றமே, நீதிமன்றமாக மாறி, தண்டனையும் வழங்கலா மல்லவா? எனவே எச்சரிக்கையோடு செய்தியை வெளி யிடுவது நல்லது.

# 24

# பொதுக் கூட்டச் செய்தியாளர்; உரை சுவையில் மயங்கிவிடக் கூடாது!

பத்திரிகைக்குரிய பலவகைச் செய்தி சேகரிப்பாளர்களில் பொதுக் கூட்டத்தில் செய்தி திரட்டுபவரும் ஒருவர். காரணம், இக் காலத்தில் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பேரூர்களிலும், மாவட்டத் தலைநகரங்களிலும், மாநிலத் தலைநகரத்திலும், ஏன் சிற்றூர்களிலும்கூட நாள்தோறும் தங்களுடையக் கட்சிக் குறிக்கோள்களை விளக்கிக் கூட்டங்கள் நடத்துகின்றன. பொது மக்கள் ஆயிரக்கணக்கிலும், இலட்சக்கணக்கிலும் கூடுகின்றார்கள். அவர்களுக்கு ஏற்றக் கருத்துக்கள் அங்கங்கே பேசப்படுகின்றன.

ஒவ்வொரு நகரங்களிலும், பேரூர்களிலும் இலக்கிய வட்டத்துப் பேரறிவாளர்களை அழைத்து, அரசு விடுமுறை நாட்களிலும், விழாக் காலங்களிலும் - இலக்கிய, தமிழார்வக் கூட்டங்கள், கவியரங்குகள் நடைபெறுகின்றன. அவற்றில், அறிஞர்களது பொழிவுரைகளில் சமுதாயத்திற்கும், இலக்கியத் துறைக்கும், ஏன், அரசியலுக்கும் பயன்படக்கூடிய கருத்துக்கள் உரையாற்றப்படுகின்றன. இந்தக் கூட்டங்களது சொற்பொழிவுகளைக் கேட்டுச் சுவைத்திட அறிஞர்கள், கல்விமான்கள், புகழ்பெற்ற எழுத்தாளர்கள், கவிஞர்கள் திரள்கின்றார்கள்.

சில திருக்கோவில் வளாகங்களில், புராண, இதிகாச, வேத, காலட்சேபங்களும், தேவார, திருவாசக, சைவ, வைணவ

சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன. மேற்கண்ட எல்லாக் கூட்டங்களுக்கும், பொது நிகழ்ச்சிகளுக்கும், ஆன்மிக விழாக்களுக்கும் செய்தியாளர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

ஏனென்றால், அவரவர் மேம்பாட்டுக்குரிய கருத்துக்கள், பொது மக்களுக்குரிய ஊர் வசதிக்கான தேவைகள் அனைத்தும் அங்குப் பேசப்படலாம் அல்லவா? அவை அரசுக்கும் - பொது மக்களுக்கும் தெரிய வேண்டும் என்ற விருப்பத்தால் பத்திரிகைச் செய்தியாளர்களைத் தக்க மரியாதைகளுடன் கூட்டம் நடத்துவோர் அழைக்கின்றார்கள்.

அந்தக் கூட்டங்களுக்குச் செல்லும் செய்தியாளர், குறிப்பெடுக்கும் நோட்டுப் புத்தகம், சீவப்பட்ட கூர்மையான பென்சில்கள், மை நிரப்பப்பட்ட பேனாக்கள் அனைத்தையும் தவறாமல் கொண்டு சென்று, அவர்களுக்கென ஒதுக்கப் பட்டுள்ள கௌரவ இருக்கைகளில் அமர்ந்து, நடைபெறும் நிகழ்ச்சிகளை ஆரம்பம் முதல் முடியும் வரை யார், யார் என்னென்ன பேசுகிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

### *இருவகைப் பேச்சாளர்கள்*

பொதுவாக நிகழ்ச்சிக்கு வருவோர் அனைவருமே ஆற்றொழுக்காகப் பேசுபவர்கள் அல்லர்! சிலர் பேசுவதற்குக் குறிப்புடன் மட்டும் வந்து மேடையேறி அதற்கேற்றவாறு உரை முடிச்சுப் போட்டு அழகாகப் பேசுவார்கள். இது குறிப்புப் பேச்சாகும்.

வேறு சிலர், கூட்டத்திலே மேடையேறிப் பழகாததால், தங்களது பேச்சையே தயார் செய்து கொண்டு வந்து பேசி முடிப்பார்கள். இது தயாரிப்பு பேச்சு முறை.

சிறந்த பொழிவாளர்கள், மேடையேறியதும் மழை போல, தென்றல்போல, புயல் போல, பாடிப்பாடி, ஆடியாடி, கோடை இடி போல, ஏற்றப் பாட்டுகளைப் போல, பாட்டுக் கச்சேரிப் பாடகரின் ஆரோக, அவரோகண ஏற்றத் தாழ்வோசை

களோடுப் பேசுவார்கள். அதாவது, பேச்சு மேடையேறியதும் என்ன நோக்கத்தில் அவர்கள் பேசிட கருத்துக்களை ஏந்தி வந்தார்களோ, அந்த எண்ணங்களை, உரைகளைப் பேசுவார்கள். இதற்கு Extemmpore Utterances என்று பெயர்.

சில அரசியல்வாதிகள் பேச்சுகள் உணர்வூட்டிம் தீப்பொறிப் பேச்சுக்களாக Dynamic அமையும். அதாவது, இயற்கையாற்றல் விளைவுகளை உருவாக்கும் பேச்சாக இருக்கும். சிலர் பேச்சுகள் Comedy எனும் கோமாளித்தனங் களைத் தோற்றுவிக்கும். தங்கு தடையின்றி முழுக் கருத்தையும் தென்றல் நடையில் தெரிவிக்கும் உரையாகவும் சிலர் உரைகள் இருக்கும். வேறு சிலர் பேச்சு Speak Volumes for அதாவது தேவைக்குரிய சான்றுகளை வழங்குவதாக அமையும். விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரது உரைகள் Speak without book குறிப்பில்லாமல் நினைவினின்றே புரண்டோடி வரும் விவரங்களாக விளங்கும். சிலர் பேச்சுகள் Speak well for அதாவது பண்புகளைச் சுட்டிக் காட்டும் சூதுவாது சூழாத வெளிப்படை உரைகளாகவும் இருக்கும். மட்டு மதிப்புடன் கம்பீரமாக Speak One mind பேசுபவராகவும் சிலரிருப்பர். குறிப்பிட்டுக் கூறுவதற்கு ஒன்றுமில்லை என்று சொல்லக் கூடிய Nothing to speak of என்ற பேச்சாளராகவும் போரடிப் பார்கள் சிலர். பேச்சுத் தொடர்பே இல்லாமல் கேட்போர் முக முறிவுகளை உருவாக்கும் Roughly Speaker பேச்சைச் சிலர் பேசுவர். மற்றும் சிலர் குத்து மதிப்பாக Speaking Acquaintance பேசுபவராகவும் இருப்பார்கள்.

எனவே, மேடைகளிலே உரையாற்ற வருபவர்கள் பலவிதமான கருத்துடையவர்களாக இருப்பதால், அவர்களிடம் செய்திச் சேகரிக்கச் செல்பவர் 'இவர் இப்படி, அவர் அப்படி' என்று அடையாளம் காண முடியாதவராகவும் இருக்கலாம் இல்லையா?

அதனால், கூட்டங்களில் குறிப்பெடுக்கச் செல்லும் செய்தியாளர், சற்றுக் கவனமாக, விழிப்பாக, எச்சரிக்கையோடு கவனித்து எடுக்க வேண்டிய குறிப்பை மட்டும் எடுத்துக்

கொண்டு, சேர்க்க வேண்டியதை மட்டும் செய்தி வடிவில் சேர்த்துக் கொள்ளக் பழகிக் கொள்ள வேண்டும்.

கூட்டத்தில் திரண்டுள்ள மக்கள் அளவு எவ்வளவு பேர் இருப்பர்; கூட்டத்தின் பேச்சுக்களை மக்கள் எப்படிக் கேட்டார்கள் என்பதையும் கணக்கிடும் சிந்தனை உடையவரே கூட்டச் செய்தியாளர்.

சில தலைவர்கள் உரையாடும்போது, அவர்களது சொல் மாறாமல் அப்படியே எடுத்தாக வேண்டிய நிலை உண்டாகும். சிலர் பேச்சுக்களைக் குறிப்பெடுத்துக் கொண்டு தேவைக்கேற்ப அதைச் செய்தியாக எழுதத் தெரிந்து கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டுக்கு ஒரு சம்பவம் இதோ :-

சென்னை சைதாப்பேட்டையில் நடைபெறும் அரசியல் கூட்டங்கள் அங்குள்ள கூவம் ஆற்றங்கரை ஓரத்தில், சலவை யாளர் துறையில்தான் நடக்கும். நான் கூறுவது 1960-ஆம் ஆண்டுக் காலத்திற்கு முன்பு ஆகும்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் முன் வாரம் பேசிச் சென்றதற்குப் பிறகு, அறிஞர் அண்ணா அவர்கள் அதே இடத்தில் மறுவாரம் உரையாடிக் கொண்டிருக்கும் நேரத்தில், கூட்டத்தில் ஒருவர் ஒரு சீட்டை அறிஞர் அண்ணாவிடம் சேர்ப்பித்தார். அறிஞர் அண்ணா அவர்கள் அதற்கு அந்தப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய பதிலுரை இது :

“சிவஞானம் எனது நண்பர்! அவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுப்பட்டுச் சிறையிலே சிப்பி ஏந்தியவர்தான். அதை நான் மறுக்கவில்லை. பெருமையோடு அவரது தியாக உணர்வை மதிக்கிறேன்; பாராட்டுகிறேன்; போற்றுகிறேன். ஆனால், நான் ஜஸ்டிஸ்கட்சிக்காரன், தந்தை பெரியாருடன் பணியாற்றியவன் என்பதற்காக என்னை இந்தியா சுதந்தரம் பெற்ற விடுதலையை எதிர்த்த துரோகி என்கிறார். என்னை வெள்ளைக்காரன் பூட்ஸ் நக்கி என்கிறார். இது எந்த வகையிலே நியாயம்?

நான் வெள்ளைக்காரன் பூட்ஸ் நக்கிதான்; அதற்காக வெட்கப்படவில்லை. உண்மையைப் பெருமையோடு ஒப்புக் கொள்கிறேன். ஆனால், காலங்கடந்து இதைச் சிவஞானம் கூறுகிறார்.

தந்தை பெரியார் இந்தியா விடுதலை பெற்ற நாளைத் துக்க நாளாக அறிக்கை விட்டார். அவர் தலைமையை நான் ஏற்றிருந்தபோதே ஆகஸ்ட் 15ம் நாள், நமக்கும் விடுதலை நாள்தான் என்று தந்தை பெரியாரை எதிர்த்து அறிக்கை விட்டவன் நான். எனது கருத்தை உண்மையான காந்தி பக்தர், தென்னாட்டு காந்தி என்று காங்கிரஸ்காரர்களால் பாராட்டப் பட்ட ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் போன்றவர்கள் பாராட்டினார்கள். அப்போது நினைத்திருக்க வேண்டாமா? அண்ணாதுரை ஒரு வெள்ளைக்காரன் பூட்ஸ் நக்கி என்று?.

'காண்டீபம், பேரிகை' பத்திரிகை நடத்தும் காங்கிரஸ் காரரான எஸ்.எஸ். மாரிசாமி, 'அமெரிக்கா' என்றொரு புத்தகம் எழுதி, அதற்கு அரசு பரிசளிப்பு விழா நடத்திட ஒரு குழு அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவின் தலைவர் பக்கா காங்கிரஸ்காரரான கல்வி அமைச்சர் டி.எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார். அவர் அமைத்த குழுவில் என்னையும் ஓர் உறுப்பினராக அவர் நியமித்தார். அப்போது சொக்கா காங்கிரஸ்காரர்கள் நினைத் திருக்க வேண்டாமா 'அண்ணாதுரை ஒரு வெள்ளைக்காரன் பூட்ஸ் நக்கி' என்று!

திராவிடர் கழகத்தைச் சேர்ந்த அண்ணாதுரையை, காங்கிரஸ்காரர் ஒருவர் எழுதிய புத்தகத்தை ஆய்வு செய்யும் குழுவில் உறுப்பினராகப் போடலாமா என்று சில காங்கிரஸ்காரர்கள் கல்வி அமைச்சர் அவினாசிலிங்கத்தை எதிர்த்துக் கேள்வி கேட்டார்கள்.

அவிநாசியார் அதற்குப் பதிலளித்தபோது, 'அண்ணா துரை எந்தக் கட்சியிலே இருந்தாலும் அவர் அழகு தமிழ் பேச்சாளர்; அடுக்கு மொழி பேசும் தமிழர்; அழகானக்

கட்டுரைகளைச் சுவையோடு எழுதி மக்களால் விரும்பப்படும் எழுத்தாளர். அவர் எந்தக் கட்சியில் இருந்தாலும் தமிழில் மறுமலர்ச்சி சிந்தனையைப் புகுத்தியவர் என்பதால், எஸ்.எஸ். மாரிசாமி எழுதிய தமிழ்நடையை ஆராயும் குழுவில் அண்ணாதுரையை உறுப்பினராக நியமித்தேன்'' என்றார்.

எந்தக் கட்சியிலே இருந்தாலும், அண்ணாதுரை ஒரு தமிழர் என்றாரே அவினாசிலிங்கம், அப்போது அவர் எண்ணி யிருக்க வேண்டாமா 'அண்ணாதுரை ஒரு வெள்ளைக்காரன் பூட்ஸ் நக்கி' என்று?

காந்தியடிகளைக் கோட்சே சுட்டுக் கொன்றபோது, 'எங்கே சென்னையில் இந்து-முஸ்லீம் கலவரம் வந்துவிடுமோ' என்று அச்சப்பட்ட காங்கிரஸ் ஆட்சியாளர்கள், என்னை அகில இந்திய வானொலியிலே அழைத்து அமைதி காக்கப் பேச வைத்தார்களே, அப்போது எண்ணியிருக்க வேண்டாமா 'அண்ணாதுரை ஒரு வெள்ளைக்காரன் பூட்ஸ் நக்கி' என்று?

இந்தியா விடுதலைப் பெற்றவுடன் முதல் மத்திய அமைச்சரவையிலே நிதி மந்திரியாக இருந்த ஆர்.கே. சண்முகம் செட்டியார் யார்? காங்கிரஸ் போராட்டங்களிலே கலந்து கொண்டு சிறை சென்று மீண்டு தியாகத் தழும்புகளைப் பெற்றவரா? ஜஸ்டிஸ் கட்சியோடு சம்பந்தப்பட்ட சர்.ஆர்.கே.எஸ். வெள்ளைக்காரன் பூட்ஸ் நக்கி அல்லவா?

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுதும் குழுவுக்கு தலைவர் யார்? காங்கிரஸ் கட்சியிலே வட மண்டலத் தலைவரா? தென் மண்டலத் தலைவரா? அவர்க்கும் காங்கிரசுக்கும் என்ன ஒட்டு உறவு?

இந்த அண்ணாதுரையாகிலும் வெள்ளைக்காரன் பூட்சை மட்டும் நக்கினான்! ஆனால், பூட்சையும், கழற்றிவிட்டு பாதங்களையே நக்கியவர்கள் யார்? காங்கிரஸ் தலைவர்கள் தான் என்பதைச் சிப்பியேந்திய சிவஞானம் மறந்து விட்டாரா? அறிவுப் பஞ்சம் உங்களுக்கு வரும்போதெல்லாம் உதவு பவர்கள் சர்.ஏ.இராமசாமி முதலியாரைப் போன்ற ஜஸ்டிஸ்

கட்சிக்காரர்கள் தான் என்பதை மறந்து விட்டரா நண்பர் சிவஞானம்?

அண்ணா அவர்களது இந்தப் பேச்சை, அப்போதிருந்த பத்திரிகைச் செய்தியாளர்கள் எல்லாம் வந்திருந்து குறிப்பு எடுத்தார்கள். பொழுது விடிந்து எல்லா பத்திரிகைகளையும் புரட்டிப் பார்த்தால் ஓர் இதழிலும் அண்ணா அவர்கள் ஆற்றிய உரைச் சுருக்கம் அறவே ஒரு பாரா கூட வெளியிடப் படவில்லை.

என்ன காரணம் என்று அந்தப் பத்திரிகைச் செய்தி யாளர்கள் அனைவரையும் விசாரித்தால், அந்தப் பேச்சுக்களை வெளியிட 'முரசொலி, தனியரசு, மாலை மணி, நம்நாடு போன்ற நாளேடுகள் இருக்கின்றனவே என்று பத்திரிகை உரிமையாளர்கள் கூறி விட்டார்கள் என்று அந்தந்த இதழ்களது செய்தியாளர்கள் கூறினார்கள்.

என்வே, அண்ணா அவர்களது அந்தப் பேச்சை 'முரசொலி', தனியரசு, மாலை மணி, நம்நாடு போன்ற கட்சி ஏடுகள் மட்டுமே அன்று வெளியிட்டனவே தவிர, பொது மக்கள் நலம் நாடும் எந்த ஏடுகளும் வெளியிடவில்லை. அந்தக் காலம் எப்படிப்பட்ட நேரம் தெரியுமா? Hindu போன்ற நாளேடுகள் எல்லாம் Annadurai also spoken என்று எழுதப்பட்டக் காலமாகும்.

பொதுக்கூட்டங்களுக்குச் செய்தி சேகரிக்கச் செல்கின்ற செய்தியாளர்கள், கூட்டங்கள் நடைபெறும் காரணங்களைச் சிந்தித்தும், பேசுபவர்கள் செய்திகளின் முக்கியத்துவத்தை உணர்ந்தும் செய்திகளைச் சேகரிக்க வேண்டும் என்பதை மேற்கண்ட அண்ணா பேச்சு உணர்த்துக்கின்றது அல்லவா? கட்சி பத்திரிகைச் செய்தியாளர்கள் அண்ணா பேச்சை எடுத்து வெளியிட்டார்கள். அதுதானே சரி!

அந்தப் பொதுக் கூட்டத்தில் அவர்கள் பேசிய பேச்சுக்களைச் செய்தியாளர்கள் சரியாகக் குறிப்பெடுக்காமல் விட்டுவிட்டார்கள். காரணம் என்ன என்று கேட்டதற்கு,

அறிஞர் அண்ணா அவர்களது பேச்சில் எதை எழுதுவது, எதை விடுவது என்று ஏற்பட்ட குழப்ப மயக்கத்தால், பேச்சை சரியாக எடுக்க முடியாமல் போய் விட்டது என்று கூறினார்கள்!

எனவே, பொதுக் கூட்டத்திற்குச் செல்லும் செய்தியாளர்கள், புகழ் பெற்ற பேச்சாளர்களது பேச்சுப் போதையில் மயக்கமடைந்து விடக் கூடாது.

# 25

# பதினாறு தகுதிகள் உள்ளவரே; விளையாட்டுப் போட்டிச் செய்தியாளர்

பத்திரிகை வாசகர்கள் பெரிதும் விரும்பிப் படிக்கும் சுவையான செய்திகளில், காதல் மட்டும் முக்கியமானதன்று; வீர விளையாட்டுச் செய்திகளில் வெளியிடப்படும் நுட்பங்களும் ஆகும்.

அதனால்தான் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வரும் தமிழ் மக்கள், வாழ்வியலை இரு கூறுகளாக்கி, அவற்றுள் ரத்தபாச உணர்வுகளை ஊட்டுவது அகம் என்றும், வீரம் விளைவிப்பது புறம் என்றும் கூறி வாழ்ந்து காட்டிப் புகழ் பெற்றார்கள். அதனால்தான் இந்தத் தமிழ் பண்பு வீரம் செறிந்த அறமறம் உடையதாக, மறஅறம் செறிந்ததாக மணந்து வருவதை இன்றும் நுகர்ந்து நாம் பெருமைப்படுகிறோம்.

பழந் தமிழர்கள் வீர விளையாட்டுகளில் - சிலம்பாட்டம், கில்லியாட்டம், கொம்பாட்டம், மற்போர், விற்போர், வாட்போர், கரகாட்டம், பரி போர், கரி போர், சேவல் போர், காளைப் போர், ஆடுகள் போர், ஏறு தழுவல் போர், அரிமா அடக்கல் போர், சடுகுடு வீரப்போர், கழைக் கூத்துப் போர் என்று பல வீர விளையாட்டுகள் தமிழர்களால் போற்றி வளர்க்கப்பட்டு வந்தன.

அந்த வீர விளையாட்டுகளில் ஒன்று கில்லியாட்டம்! கில்லி அடிக்கப்பட்டதும் வீரர்கள் ஓடி ஓட்டத்தைக் கணக்கிட்டு, அதிக ஓட்டங்கள் பெற்றவனே கில்லியாட்ட மறவனெனப் போற்றப்படுவான்.

அந்தக் கில்லி ஆட்டம்தான், இன்று உலகப் புகழ் பெற்றுள்ள கிரிக்கெட் விளையாட்டு. அது தமிழ் மக்களின் வீர விளையாட்டுடமை என்றால் எவனாவது ஒப்புவானா?

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தமிழர் இசைக் கருவிகளுள் ஒன்றாக இருந்த பதலை என்று தோலால் உருவான ஓர் இசைக் கருவியை, இன்று உலகம் தபலா என்று குறிப்பிடுவதைப் போல, கில்லி ஆட்டம்தான் கிரிக்கெட் ஆட்டம் என்றால் மட்டையைத் திருப்பி அடிப்பான் போலிருக்கிறது! அவ்வளவு கிரிக்கெட் வெறி இன்று பைத்திய வெறிபோல விளையாட்டு வரலாற்றில் புகழடைந்து விட்டது.

எனவே, பத்திரிகைகள் எல்லாம் இன்று அதிகப் பக்கங்களை ஒதுக்கி, படங்களையும் ஏராளமாக வெளியிட்டு, ஒவ்வொரு நாட்டிலும் கிரிக்கெட் என்ற விளையாட்டுத் துறையை விரிவுப்படுத்தி விட்டார்கள். அதனால் கிரிக்கெட் விளையாட்டு - சர்வதேச விளையாட்டாக விளங்கி விட்டது. கேட்டால் விளையாட்டுக் கலை என்று அதற்கு இலக்கண, இலக்கியம் வகுக்கிறார்கள்.

Sport என்றால் அது சாதாரண விளையாட்டக இருந்து, பின்பு, வீர விளையாட்டாகி, போட்டி விளையாட்டாக மாறி, உடற்பயிற்சி விளையாட்டாக விளங்கி, பந்தய விளையாட்டாகப் பரவி, வன்மை விளையாட்டாக பல்கி, மான ரோஷ விளையாட்டாக மாறி, இன்று விளம்பர விளையாட்டாக நின்றுக் கொண்டிருக்கிறது. இந்த விளையாட்டு, எதிராளியிடம் பெருந் தன்மையுடைய நடத்தை (Sporting Conduct)யையும், Sporting offer எனும் எதிர் அணிக்கு வாய்ப்புப் பேறு வழங்கும் அக்கறையும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

அதனால்தான் பத்திரிகைகள் விளையாட்டுத் துறைகளில் மக்களுக்குரிய ஆர்வத்தை அதிகப்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு பத்திரிகையும், விளையாட்டுச் செய்திகளை எழுதிட, விமர்சனம் செய்திட, விளக்கம் வழங்கிட சிறப்புச் செய்தியாளர்களை நியமித்துள்ளார்கள்.

எனவே, விளையாட்டு நுட்பங்களை, விரிவான, சுவையான, நுட்பமான விறுவிறுப்பான, பரப்பரப்பான மொழி நடையில் எழுதிட தனித்திறமை பெற்றவர்களாக விளையாட்டுச் செய்தியாளர்கள் விளங்குகிறார்கள்.

தனித் திறமையுடன் இவ்வாறாகப் பத்திரிகைகள் விளையாட்டுச் செய்திகளைத் தொடர்ந்து வெளியிடுவதால் அதற்கான வாசகர்களும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறார்கள்.

கிரிக்கெட் விளையாட்டுக்களை முன்பெல்லாம் வானொலிகள் வருணனைகளோடு வெளியிட்டன. இப்போது அந்தப் பணியைப் பத்திரிகைகள் மேற்கொண்டு விட்டன. இவற்றை எல்லாம் கேட்க, படிக்க வாசர்களுக்கு நேரம் போதாதக் குறையாகி விட்டது. அவ்வளவு Sportmanகளாக, விளையாட்டில் அக்கறை காட்டுபவர்களாக மாறி விட்டார்கள் வாசகர் என்றால் மிகையன்று.

### செய்தியாளர்க்கு
### தகுதிகள் சில

விளையாட்டுச் செய்திகளைச் சேகரிப்பவர்கள், விளையாட்டுகள் சிலவற்றைப் பற்றிய முழு விவரங்கள், அதற்கான சட்ட திட்ட விதிகள், நுட்பங்கள், விளையாடும் அறிவுத் திறமைகள், அவற்றை வாசகர்களுக்கு விளக்கிக் கூறும் சுவை நுட்பங்கள் அனைத்திலும் தேர்ந்தத் திறமையாளராக இருக்க வேண்டும். இருந்தால், பத்திரிகை விற்பனைப் பல்கிப் பெருகிவிடும்.

விளையாட்டு வீரர்கள் யார்? அவர்களது விளையாட்டுத் திறன்கள் என்ன? திறன்களால் முன்பு பெற்ற வெற்றி விவர வரலாறுகள், பெற்றிட்ட விருது விவரங்கள், ஏன் பெற்றார்? எப்படிப் பெற்றார்? எங்கே பெற்றார்? எப்போது பெற்றார்? என்ற விருது நுட்ப நிகழ்வுகள் போன்றவற்றை எல்லாம் விளையாட்டுச் செய்தியாளர் தெரிந்துள்ளவரானால் அவருக்கும் புகழ் விளையும்.

விளையாட்டுப் போட்டி எந்த நாட்டில் நடந்தாலும் நடுநிலை உணர்வோடு விமர்சனம் அமைய வேண்டும். ஒரு பக்க சாய்வு மருந்துக்கும் இருக்கக் கூடாது. அது கலவரங்களை உருவாக்கும். செய்தியாளர் பணிக்கும் எமனாகி விடும்.

விளையாட்டுத் துறைச் செய்தியாளர் ஆட்டத் திறனுடைய வராகக்கூட இருக்கலாம். ஆனால், அவர் உணர்ச்சி வயப்பட்டுச் செய்திகளை விளக்குவது ஆபத்து; விளையாட்டுக்களை வருணனை செய்வதில் உணர்ச்சிகளைக் கொட்டலாம். அதுவும் விளையாட்டு விதி வரம்புக்குள்ளேயே வட்டமிட வேண்டும்.

எழுதுபவர்களை விட, விளையாட்டுச் செய்திகளைப் படிப்பவர்கள் மிகவும் புத்திசாலிகளாக இருப்பார்கள் என்பதை எழுதும் செய்தியாளர் மறந்து விடக்கூடாது. எனவே, எழுதப்படும் செய்திகள் ஆழமாகவும், அருமையாகவும், சுவையாகவும், இனிமை பயப்பதாகவும் இருக்க வேண்டும் என்பதைச் செய்தியாளர்கள் கவனத்தில் நிறுத்தல் வேண்டும்.

விளையாட்டுச் செய்திகளை எழுதும் செய்தியாளருக்கு பதினாறு வகை திறமைகள் இருக்க வேண்டும். இதைத் தமிழ்க் கல்வி அறிவில் கூறுவதானால், விளையாட்டுச் செய்தியாளர் சோடசாவதானியாக இருக்கப் பழகிக் கொள்வது நல்லது.

என்ன அந்த சோடசாவதானம் என்ற 16 வகைக் கலைகள் என்கிறீர்களா? இதோ அந்த கலைகள் விவரம் :-

1. ஆடு கள வீரர்கள் யார்? யார்? அவர்கள் இதற்கு முன்பு எவ்வளவு வேறுபாட்டில் வெற்றி பெற்றார்கள்?

2. அந்த ஆடுகள வீரர் பெற்ற ஒவ்வொரு மதிப்பெண்ணையும் (Score) எவ்வாறு பெற்றார்?

3. என்ன நுட்ப விளையாட்டு முறைத் திறமையால் அதைப் பெற்றார் எனும் விவரம்!

4. பெற்ற வெற்றிகளின் திறமை உணர்வுகள்; செயல் நுட்பங்கள்.

5. ஏதாவது ஆட்ட விவகாரங்களில் குறைபாடுகள், சர்ச்சைகள் நடந்ததுண்டா? அவை எவ்வாறு தீர்க்கப்பட்டன?

6. என்ன குறைகளை அவரது ஆட்டத்தில் நிபுணர்கள் கண்டார்கள்? அல்லது பெற்ற பாராட்டுணர்வுகள் என்ன?

7. ஆட்டத்தில் ஈடுபட்டது முதல் அன்று வரை அவர் சாதித்த விளையாட்டுச் சாதனைகள் என்னென்ன?

8. அவர் ஆடிய ஆட்டங்களில் அவரால் நிருபிக்கப்பட்ட அற்புத நுட்ப உணர்ச்சிகள்?

9. அந்த நுட்பத் திறமைமிக்க ஆட்டத்தால் உண்டான திருப்புமுனை வெற்றிகள்.

10 ஆட்டத்தின் இறுதி நேரத்தில் அவர் காட்டிய உணர்ச்சிக் கூறுகள்.

11. அதனால் திடீரென எதிரணிக்கோ அல்லது தனது அணிக்கோ ஏற்பட்ட சாதனைகள்!

12. ஆடு களங்களில் ஏதாவது விபத்துகளில் சிக்கினவரா?

13. ஆட்டத்தில் திரண்டிருந்த ஆட்ட ரசிகர்கள் அளவு என்ன?

14. எந்த ஊர்களில் ஆடினாலும் அவர் ஆடிய ஆட்ட களங்களின் அமைப்பு நிலை.

15. ஆரம்ப கால நிலை; அதனால் ஏற்படும் தட்பவெப்ப, சாதக, பாதக நிலைகளது விளைவுகள்.

16. ஆட்டத்தில் பணியாற்றும் நடுவர்கள் யார்? அவர்கள் தரம், தகுதிகள் என்ன?

என்ற 16 வகைத் தகுதிகளையும், விளையாட்டுச் செய்திகளைச் சேகரிக்கும் நிருபர் பெற்றிருப்பாரேயானால், அவர் எழுதும் ஆட்ட விமர்சன விளக்கங்கள், புகழ் பெற்ற, பண்பட்ட, அனுபவ ஆட்டக்காரர் ஒருவர் விமர்சனம் எழுதும் திறமைக்கு ஈடாக விளங்கிப் புகழ் பெறுவார்! அவர் பணி புரியும் பத்திரிகையும் நல்ல பெருமை பெறும்; விற்பனையும் பெருகும் என்பது உறுதி.

# 26

# பத்திரிகை ஆசிரியராக தகுதிகள்; திறமைகள்!

பத்திரிகை ஒவ்வொன்றிலும், அது நாளேடானாலும் சரி. வார, மாத ஏடுகளானாலும் சரி எல்லா வகை இதழ்களின் கடைசிப் பக்கத்தின் இறுதியில், வெளியீட்டாளர் பெயர், முகவரி, அச்சிடுபவர் பெயர், முகவரி, ஆசிரியர் பெயரையும் அச்சிட வேண்டும். இது பத்திரிகைப் பதிவுச் சட்ட விதியாகும்.

'ஒரு பத்திரிகைக்கு அதன் ஆசிரியர்தான் அச்சாணியாக இயங்குபவர். சட்டப்படியும், நடைமுறைக்கேற்பவும், பத்திரிகையில் வெளிவந்த கருத்துகளுக்கும் வாராதவற்றுக்கும் பொறுப்பேற்க வேண்டியவர் அதன் ஆசிரியரே!

தவறான கருத்துக்கள் வெளி வந்தால், அதற்கும் ஆசிரியர் மீது தான் சம்பந்தப்பட்டவர்கள் வழக்குத் தொடர்வார்கள்.

அவமதிப்புச் செய்திகள் பத்திரிகையில் வெளி வருமானால், நீதிமன்றம், நாடாளுமன்றம், சட்டப் பேரவைகள் முன்பு நிற்கக் கூடியவரும் பத்திரிகை ஆசிரியரே!

பத்திரிகையில் செய்திகளை வெளியிட்டதற்காக, அல்லது வெளியிடாமைக்காக வாசகர்கள் கோபமுற்றால், ஆசிரியர் அமர்ந்துள்ள அறையைத்தான் முதலில் தாக்கு வார்கள்; வசைப் பாடுவார்கள்' என்று Rangaswami, Partha sarathy, Basic Journalism, Macmillan India Ltd., Delhi 1984' என்ற

நூலில் குறிப்பிடுகிறார். இது நூற்றுக்கு நூறு உண்மையான கருத்து.

ஒருவர் பத்திரிகை ஆசிரியராவதற்கு; அதற்கென தனி சட்டத் திட்டமோ, ஒழுங்குமுறைகளோ, அதற்கான மனுபோடும் பணிகளோ, தேர்வு சம்பந்தபட்ட நிகழ்ச்சிகளோ ஒன்றுமில்லை.

பணம் இருந்தால், ஆசிரியராகும் ஆசை இருந்தால், சம்பந்தப்பட்ட பத்திரிகைத் துறையின் நீதி மன்றத்துக்கு விண்ணப்பம் செய்து, நீதிமன்ற அனுமதியைப் பெற்று விட்டால் எவரும் ஆசிரியராகலாம்.

ஒருவர் பத்திரிகை ஆசிரியரர்க வேண்டுமானால், அவ்வளவு சுலபமாக ஆக முடியாது. அதற்கு பல்வேறு திறமைகள், அனுபவங்கள், தொழில் நுட்பங்கள், நூலறிவு பெற்றத் தனித் தன்மைச் சாதனைகள் எல்லாம் ஒருங்கிணைந்து இருந்தால்தான்; ஒரு சிறந்த பத்திரிகை ஆசிரியராக முடியும். ஏனென்றால், அந்த பத்திரிகையின் எழுச்சியும், வளர்ச்சியும், உணர்ச்சியும், புரட்சியும் வீழ்ச்சியும் அந்த ஆசிரியரையே சார்ந்திருக்கின்றது.

திருவள்ளுவர் பெருமான் கூறுவதைப் போல "தொட்டணைத் தூறும் மணற்கேணி - மாந்தர்க்குக் கற்றணைத் தூறும் அறிவு" என்பதற்கேற்ப, எவ்வளவுக் கெவ்வளவு தோண்டுகின்றோமோ, அவ்வளவுக் கவ்வளவு மணற் கேணியில் நீர் சுரப்பதைப் போல, எவ்வளவுக்கெவ்வளவு கல்வி கற்கின்றோமோ, நூலறிவு பெறுகின்றோமோ, அவ்வளவுக் கவ்வளவு அறிவு சுரந்து பெருகும். அந்த அறிவுதான் பத்திரிகை நடத்துவதற்கு அச்சாணியாகும்; முதலீடாகும்; திறமையும் பெருகும்.

இதைத்தான் ஔவை பெருமாட்டி, "உற்ற கலை மடந்தை ஓதுகிறாள்" என்றாள். அதாவது கல்விக்குரிய தெய்வமே இன்றும் படித்துக் கொண்டே இருக்கின்றாள் என்கிறாள். அதனால், "யாதானும் நாடாமால், ஊராமல் என்னொருவன்; சார்ந்துணையுங் கல்லாதவாறு" என்று தமிழ்

வேதத்தை நமக்குத் தந்த திருவள்ளுவரும், 'சாகும்வரை நீ படித்துக் கொண்டே இருந்தால்தான் என்ன? அப்போதுதானே எந்த நாடும், எந்த ஊரும் உனக்குச் சொந்த ஊராகும்? அதனால் பல நாட்டு மொழிகளையும் படி' என்று அறிவுரை கூறுகிறார்.

மூன்றாம் வகுப்போடு பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்ட கோவை. ஜி.டி. நாயுடு, 37 ஆயிரம் நூல்களைப் படித்ததால்தான், அவர் தொழிலியல் விஞ்ஞானியாக மாறி, பல புதிய விஞ்ஞானப் புரட்சிகளைச் செய்தார்.

மராட்டிய மண்ணில்; மாவீரன் சிவாஜி தோன்றிய பூமியில் பிறந்த மகாதேவ கோவிந்த ரானடே என்பவர் 'இந்து பிரகாஷ்' என்ற மராட்டிய மொழிப் பத்திரிகையையும், இங்லீஷ் மொழி பத்திரிகையையும் துவக்கினார். அந்தக் கல்வி மேதை, 34 ஆயிரம் சட்டப் புத்தகப் பக்கங்களைப் படித்தவர் என்று ஆங்கிலேயர் அரசு அவருக்கு நற்சான்றிதழ் வழங்கி அவரை மராட்டிய மாநில உயர் நீதிமன்ற நீதிபதியாகவும் நியமித்தது.

எனவே, "Genious is one percent inspirations and ninety nine percent perspiration" என்றார் மேதை எடிசன் என்ற விஞ்ஞானி. அதாவது பேரறிவுடைமை என்பது அகத்தூண்டுதல். அது ஒரு சதவிகிதம்தான்; வியர்வை சிந்துதல் 99 சதவிகிதம் இருக்க வேண்டும். அப்போதுதான் அவரவர் இலட்சியத்திலே ஒருவரால் வெற்றி பெற முடியும் என்றார்.

பத்திரிகை ஆசிரியனுக்கும் மேற்கண்ட தகுதிகள் அவசியம் இருக்க வேண்டும். பல்பொருள் கூட்டுக் குவியல்தான் பத்திரிகை. பல்பொருள் குழப்பத்தாட்களாக அது இருக்கக் கூடாது. தாறுமாறாக, அலங்கோலமாக நடந்தால் அது சமுதாயத்தைக் குழப்பக் களமாக்கி விடும்.

பத்திரிகை ஆசிரியனுக்குத் தேவை - சிந்தனையில் நேர்மை, நடுநிலை வழுவாத, நியாயமான, ஒரு சார்பற்ற பண்புகளாகும்.

ஓர் ஆசிரியனுடைய எழுத்துக்கள் விரிந்து செல்லும் ஒளிக் கதிர்களை வீசுவதாக விளங்க வேண்டும். அவனுடைய

எழுத்துக்களில் சமுதாயத்தை மேம்படுத்தும் கொள்கை உணர்ச்சி வேகம், சீறி எழும் செயல் துடிப்பு, எழுதும் எழுத்துக்களில் மெய்மை நடமாட்டங்கள், கற்பனைக் கலவாமைகள்; என்ன எழுத வந்தாரோ அதன் மூலக் கூறுகள்; பண்புகள் உயிர்த் தோற்றம்; வெளித்தோற்றமற்ற உள்ளார்ந்த தன்மை; எந்த சந்தேகமும், எவருக்கும், எப்போதும், தோன்றாமலிருக்குமாறு எழுத வேண்டும்.

அப்போது தான் அந்தப் பத்திரிகையை மக்கள் வாங்கிப் படிக்கும் ஆர்வம், வேட்கை, வெறியுணர்வு தோன்றும்.

பத்திரிகையில் வெளிவரும் கருத்துக்கள் ஒவ்வொன்றும் சொன்னதை எழுதுவதாக, எழுதும் வண்ணம் செல்வாக்குப் பெறுவதாக அமைந்தால்தான், அந்த ஏட்டுக்கு மக்களிடையே சொல்வாக்கும், செல்வாக்கும் அலைமோதி சிறந்த விற்பனையை அது அறுவடை செய்யும்.

ஆசிரியரால் எழுதப்படும் எந்தக் கருத்தும், சம்பவமும், நிகழ்ச்சிகளும், காரணமுடையதாக, வாதங்களை உருவாக்கும் காரணமாக, வாதச் சான்றுடையதாக, நம்பிக்கை நாணயச் சான்றுடைய செயல் விளக்க நோக்கமுடையதாக, அறிவாராய்ச்சிச் செறிவுக்கு முரணற்றதாக, யூக, வியூகங்களுக்கு வாதமிடும் இணக்கம் உடையதாக, உணர்ச்சிக் குன்றாமல் தொடர்ந்து படிக்கின்ற சொல்லாட்சி இன்பத்தை வழங்குவதாக, எழுதும் எழுத்துக்களில் இருத்தல் அவசியம்.

இத்தகைய எழுத்தாற்றலை நிறுவிடும் எழுதுகோலுக்கு நினைவாற்றல் - சுரபியாக, சிந்தனையும் கூர்மை மனமும் அமைய வேண்டும். பழைய சம்பவங்களில் உள்ள சங்கிலித் தொடர்புச் சிந்தனைகள், கருத்து அமைதி, கருத்து நிலைப்பாடு, எந்தப் பிரச்னையானாலும் நிதானமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றல் ஓர் ஆசிரியனுக்கு இருந்தால்தான் பத்திரிகை முன்னேறும்.

ஆசிரியனாகப் பொறுப்பேற்பவனுக்கு குறைந்தது 50 ஆண்டுக் கால இலக்கிய, கலை, அரசியல், சமுதாய மறுமலர்ச்சி

இயல் ஆகியவற்றில் போதிய பயிற்சியும், நினைத்த நேரத்தில் அதை எதிரொலிக்கும் சிந்தனை வளமும் இருக்க வேண்டும்.

ஒருவர் எழுதுகோல் ஏந்தும் முன்பே, மேற்கண்ட சாதனைகளை உடையவராக ஆசிரியர் இருப்பது பத்திரிகைப் பெயருக்கு நல்லது. ஏனென்றால், அவை ஆதாரமாகவும் (Reference) அல்லது ஆசிரியருக்குப் புறவரணாகவும், களக் காப்பரணாகவும் திகழலாமில்லையா?

இந்த மேற்கோள் சான்று ஆதாரங்களில் பல வகை உண்டு. பார்வைக்குரிய புத்தகம் (Book of Reference) தேவை நோக்குக்கு ஏற்பக் குறிப்பும் (Cross Reference), மாட்டேற்றக் குறிப்பு (In Reference to) தொடர்பாகவும், சட்டமன்றம் சம்பந்தம் பற்றிய ஆதார உணர்வுகளும் (Legislation by Reference), நூலக மேற்கோள்களைக் குறிக்கும் திறமுடைய வராகவும் (Library Reference), எழுதும் கட்டுரைகளில் (Reference Marks) உடுகுறி முதலிய *x+‡§II, சுட்டுக் குறியீடுகள் உணர்வாளராகவும் (Terms of Reference) ஆய்வுரிமை எல்லை பற்றிய வாசகங்கள் உடைய வராகவும் (With reference to) எது எப்படி இருந்தாலும், எவ்வாறாக இருந்தாலும் என்ற வகையில் பல மேற்கோள்களை நிறுவும் சான்றாதாரங்கள் இருக்கும் ஒரு பத்திரிகை ஆசிரியன் மேற்கண்டவற்றை, பாடமாகப் பெற்றிருத்தல் மிகவும் சிறந்ததாகும்.

இந்த ஆதாரங்களை எங்கெங்கு தேவையோ, அங்கங்கே எல்லாம், கருத்துக்கள் முடியும்போது ஆசிரியரோ, செய்தி ஆசிரியரோ, துணை ஆசிரியரோ, எழுத்தாளர்களோ சுட்டிக் காட்டுவது அவசியம். ஏன் தெரியுமா? வாசகர்களது நினைவுக் குறிப்பை இவை வலிமைப்படுத்தும்; வளர்க்கும்; அவர்களது அறிவை வளமாக்கும்.

பத்திரிகையில் இதுவரை நாம் என்ன படித்தோம் என்ற கருத்துக்களைக் கண்ணாடியில் காட்டும் முகம் போல, படித்தக் கருத்துருவங்களை அக்குறிகள் எதிரொலித்துக் காட்டும். படிப்போர் அதனால் பயன் பெறுவர். படித்ததை மறுமுறையும் நினைத்துப் பார்ப்பர். ஆசிரியர்களிடம் அல்லது

எழுத்தாளர் களிடம் படித்த பழைய எண்ணங்கள் பளிச்சென்று நிழலாடும்; நினைவுகளாக நிற்கும்.

ஆசிரியர் எழுதும் ஆதாரச் சான்றுகள், கண்டனம், ஏளனம், வசை, வரலாறு, இலக்கியம், அறிவியல், அரசியல், இழிபெயர் தருவது, புகழைக் குன்ற வைப்பது அல்லது புகழை மலைச் சிகர ஒளியாக்குவது, உள் நினைவை உந்தி ஏழ வைப்பது, தனக்குள் நிகழ்ந்ததை தானே எண்ணியெண்ணி மகிழ்வது போன்ற குறிப்புக்களாகவும் அவை அமையலாம். அதனால் ஆசிரியர் அந்தந்த குறியீடுகளுக்குள் அவற்றை அடக்கிக் காட்டினால்தான், வாசகர்கள் அதைப் படித்து உணர்வும் உற்சாகமும் பெற்று உவகையுலா வருவார்கள். அந்த உலாவின் எதிரொலி, பத்திரிகை விற்பனைக்குப் பவனி வரும் பறை போல ஒலிக்கும்.

ஆசிரியரின் அந்த வீர உலா, ஈர உலா, உவகை உலா எழுத்துக்கள், அரசியல் குறைகளை நீக்கலாம்; ஊழல்களைப் போக்கும் சீராக்கமாகவும் இருக்கலாம். ஆன்மிகத் துறையில் புதுமைகள் புகலாம்; நாடாளுமன்ற, சட்டமன்ற காரசார நிகழ்வுகளுக்கு அமைதியூட்டும் நிழற்குடைகளாகலாம். எனவே, பத்திரிகை ஆசிரியரின் மேற்கண்ட பணிகள் நாட்டைச் சீர்திருத்தலாம்; வாசகர்கள் இடையே மனமாற்றங்கள்கூட நிகழாலாமில்லையா?

பத்திரிகை ஆசிரியரின் இத்தகையக் கருத்துக்களை, எண்ண ஓட்டங்களை, சொல்லாட்சிகளைக் கவனமாகப் படிக்கும் வாசகர்கள், பத்திரிகைய்யைத் தொடர்ந்து வாங்கு வோராகவும் மாறலாம். அவர்கள் நிலையான சந்தாதாரர் களாகலாம்; அதனால், பத்திரிகை விற்பனையாளர்களுக்குப் பணமும் ஒழுங்காக வசூலாகும். வசூலானால் பத்திரிகை வளரும்; முன்னேறும்; தொழிலாளர்களுக்கு உற்சாகத்தோடு பணியாற்றிடும் புதுத்தெம்பும் பிறக்கும். அதனால் பத்திரிகைப் பெயரும் ஆசிரயரது எழுதுகோலின் தகுதியும், திறமையும், கட்சி சார்பற்ற புகழ் மெருகும் ஏறுமல்லவா?

❖ “எந்த அளவைகள் அனைத்தும் ஒன்றை ஒன்று சார்ந்ததே அல்லாமல், தனி நிலை இயல்புகள் உடையன

அல்ல'' என்ற அறிவியல் ஞானி ஐன்ஸ்டினுடைய ஆய்வுக் கொள்கை, எழுதுகோல் ஆற்றலுக்கும், அதன் சீர்த்திருத்த மக்கட் தொண்டுகளுக்கும், வாசகர் வட்டங்களுக்கும், ஒன்றுடன் ஒன்று சார்ந்து பொருந்துகிறதல்லவா?

எனவே, தனி நிலை இயல்புகள் உடையன அல்ல ஒரு பத்திரிகை வளர்ச்சிகள்! அலுவலக வேலைப் பையன் முதல் - நிர்வாகப் பொறுப்பாளர் உட்பட்டவர்கள் வரை ஒன்றை ஒன்று சார்ந்தக் கூட்டுறவு நோக்கத்தின் ஊக்கப் பணிகளின் ஆக்க வடிவம் தானே பத்திரிகை வளர்ச்சி?

❖ சிறந்த பத்திரிகை ஆசிரியர் என்பவர், அவருடன் பணியாற்றுபவர்களிடம் அன்பும், பண்பும் காட்டி; ஆர்வத் தோடு பணிபுரியும் உணர்ச்சியை ஊட்டும் (Nurse) தாயாகத் திகழ வேண்டும். குழந்தைகளைக் காப்பாற்றவும், கல்வி புகட்டவும், நியமிக்கப்பட்ட Nursing governess போல அலுவலகப் பணியாளர்களைப் பாதுகாத்தால், பத்திரிகை மனமாச்சர்யங்கள் அலுவலகம் உள்ளே முளைவிடாது.

❖ ஆசிரியர் எனப்படுபவர் எந்த நேரத்தில் எந்த சிக்கல் வந்தாலும் அவற்றை ஏற்கும் வைர நெஞ்சினராய் திகழ வேண்டும்.

❖ தனக்குச் சரி என்று உணரப்பட்டதை, தலையே துண்டித்து விழும் நிலை வந்தாலும், பண்டைய கிரேக்க வீரன் ஹெர்குலிஸ் (Hercules) அல்லது இரும்பு இதயமுடைய மாவீரன் நெப்போலியனைப் (Naopoleon) போல நெஞ்சுரம் பெற்றவராக இருக்க வேண்டும்.

❖ பத்திரிகை ஆசிரியன் பொது மக்கள் தோழனாக நட மாட வேண்டும்.. அவர்கள் தேவைகளை உணர்ந்து, நிலை களுக்கு ஏற்றவாறு அவரது எழுதுகோல் திறமைகள் அற்புதமாட வேண்டும்.

அரசியல் தலைவர்கள், சமுதாயச் சான்றோர்கள், கல்விமான்கள் தொடர்புகளோடு ஆசிரியர் ஒன்ற வேண்டும். அவர்களது மக்கட் தொண்டுக் கருத்துக்களை அலசி ஆய்ந்து

நல்லனவற்றைப் பின்பற்றுவது அனுபவ மூட்டும் நலமாகச் சிறக்கும்.

அண்ணல் காந்தியடிகள் நடத்திய 'ஹரிஜன்' பத்திரிகை ஆங்கிலேயர்களைத் திணர வைத்தது அரசியல் செல்வாக்கோடு! அதனைப் போல, பத்திரிகை ஆசிரியர் தன்மானியாக நடமாடி, தலைநிமிர்ந்து நின்று எழுதினால், எந்த எதிரியும் பகையாகா இரான்! பத்திரிகை நலம் நாடும் நல்லவர்கள் யாரும் கேடுபாடுடையவராக ஆகார்! அத்தகையவர்கள் நட்புகளை ஆசிரியர் சிதற விடக்கூடாது; எந்த ஆபத்து வந்தாலும் அவர்கள் உடுக்கை இழந்த கைகள் போல் உதவ முன் வரலாம் அல்லவா?

எனவே, செல்வாக்குப் பெற்றுவிட்ட பத்திரிகை ஆசிரியரிடம் பொறுப்புணர்ச்சி, நாட்டுப்பற்று, மொழிப் பற்று, பணியுமாம் என்றும் பெருமை என்ற உணர்வு, அனைவரையும் மதிக்கும் மாண்புடைமை இருந்து விட்டால், அந்தப் பத்திரிகை அழியாது; ஆசிரியரையும் மக்கள் மறவார் என்பது உறுதி.

# 27

## எழுத்துரிமை, பேச்சுரிமைகளைக் காக்க

# கட்சிப் பத்திரிகைகள் நடத்துவது எப்படி?

இந்தியா மக்களாட்சி நடைபெறும் மிகப் பெரிய நாடு. ஏறக்குறைய 110 கோடி மக்கள் மத நல்லிணக்கத்தோடு ஒன்றி வாழும் சுதந்திர நாடு. இந்த நாட்டின் ஒவ்வொரு ஆட்சி முறைத் திட்டங்களும் மக்களுக்கு, மக்களுக்காக, மக்களால் நடத்தப் படுபவைகளாகும்.

இந்த நாட்டில் பல கட்சிகள் இயங்குகின்றன. ஒவ்வொரு கட்சியும் அவற்றின் கொள்கைகளை, செயற்பாடுகளை, அவற்றால் நாடு மேம்பாடடைவதை தங்களது பத்திரிகைத் தொண்டுகளால் பொது மக்களுக்கு நாள்தோறும் விளக்கிக் கொண்டிருக்கின்றன. இந்தக் கட்சிகளில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சிகள் என்ற பிரிவுகள் இருக்கின்றன.

அகில இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி இந்தியாவின் பெரிய கட்சி மட்டுமன்று; எல்லாக் கட்சிகளுக்கும் மூத்தக் கட்சி. முதன் முதலில் தோன்றிய கட்சி என்பதால் இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும், அகில இந்திய அளவில் நன்கு வளர்ச்சிப் பெற்றக் கட்சியாக அது விளங்குகின்றது. மற்ற அகில இந்திய சிறிய கட்சிகளும் இந்தியாவில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை கம்யூனிஸ்ட் கட்சிகள், பாரதீய ஜனதா போன்ற வேறு சிலவாகும்.

ஒவ்வொரு மாநிலத்திலும் மாநிலக் கட்சிகள் இயங்கி வருகின்றன. அவை அந்தந்த மாநிலங்களின் முன்னேற்ற வளர்ச்சிக்காக அரசியல் துறையில் பணியாற்றி வருகின்றன.

தமிழ்நாட்டில் திராவிடர் இயக்கம், இன எழுச்சி உணர்வோடு ஏறக்குறைய 70 அல்லது 75 ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. அவற்றுள் மூத்த, மிகப் பெரியக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், திராடர் கழகம் ஆகியவை 'திராவிட' என்ற இன உணர்வுப் பெயரை முன்னிறுத்தி, அதன் பெயரால் இயங்குகின்றன. இவற்றுள் திராவிடர் கழகம் அரசியலில் ஈடுபடாத இன உயர்வுக்காக பணியாற்றி வரும் தாய் கழகம் ஆகும்.

இதற்கு அடுத்தப்படியாக, ஐந்தாறு மாவட்டங்களில் மக்கள் செல்வாக்குப் பெற்ற கட்சி பட்டாளி மக்கள் கட்சி; சிற்சில மாவட்டங்களில் தலித் மக்களுக்காக பாடுபடும் கட்சிகளும் உள்ளன. அகில இந்திய அளவிலான கம்யூனிஸ்ட் கட்சிகள் சில மாவட்டப் பகுதிகளில் பலம் பெற்று இயங்கு கின்றன. தேவரின மக்களுக்காக உழைக்கும் கட்சிகளும் உள்ளன. முஸ்லீம் லீக் கட்சி அகில இந்திய அளவில் வளர்ந் துள்ளதால் தமிழ்நாட்டிலும் முஸ்லீம் லீக் கட்சி ஏறக்குறைய 60 அல்லது 65 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது.

பாரதீய ஜனதா கட்சி என்ற ஓர் அகில இந்தியக் கட்சியை செல்வி ஜெயலலிதா தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தி அரசியலில் செல்வாக்கை உருவாக்கிக் கொடுத்தார். இதுதான் அந்தக் கட்சியின் தமிழ்நாட்டு வரலாறு. பிறகு கலைஞர் அதற்கு பரவலான செல்வாக்கு வளரக் கார்ரணமானார்.

அகில இந்திய தேசியக் காங்கிரஸ், தமிழ் நாட்டில் 1885-ம் ஆண்டு முதலே வேரூன்றியக் கட்சி. அக்கட்சி வரலாறு தேசிய செல்வாக்குப் பெற்றது மட்டுமன்று. பெருந்தலைவர் காமராசர் அவர்கள் என்று காங்கிரஸ் கட்சியில் தனது காற்சுவடுகளைப் பதித்தாரோ அன்று முதல் அது மிகப் பெரும் அரசியல்

செல்வாக்கோடு பலம் பெற்றிருந்தது. 1967-க்கு பிறகு இன்று வரை தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க.வுக்கு அடுத்தப் படியாக, வளர்ச்சியுடையக் கட்சியாக, தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையின் எதிர்கட்சி என்ற பலத்தோடு காங்கிரஸ், அரசியல் கட்சியாக நடமாடுகிறது.

பெருந் தலைவர் காமராசர் அவர்கள் செல்வாக்குறும் காலத்துக்கு முன்பு, 'நவசக்தி' என்ற தேசிய நாளேடுக்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாண சுந்தரனாரை ஆசிரியராகக் கொண்ட கட்சிப் பத்திரிகையாக அது தொண்டாற்றியது. அதே 'நவசக்தி' பெருந்தலைவர் காலத்திலும் தனுஷ்கோடி என்ற காங்கிரஸ் தலைவரால் காங்கிரஸ் கட்சிக்காக 1975-ம் ஆண்டு வரை நடைபெற்று வந்தது.

கம்யூனிஸ்ட் கட்சிக் கொள்கைகளைப் பரப்பிட 'ஜனசக்தி' என்ற நாளேடு உழைத்து வந்தது. இப்போது 'தீக்கதிர்' என்ற நாளேடு அந்தக் கட்சிக்காக அற்புதமாகப் பணியாற்றி வருகின்றது.

'முரசொலி', கலைஞரால் அவருடைய பள்ளிப் படிப்புக் காலத்திலேயே கையெழுத்து ஏடாகத் துவக்கப்பட்டு, ஏறக்குறைய 55 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் ஒரே ஒரு தி.மு.கழகக் கொள்கைகளின் ஒலியாக முரசுக் கொட்டி வருவதை இன்றும் நாம் கண்டு வருகிறோம். எம்.ஜி.ஆர். தமிழ்நாட்டு முதல் அமைச்சராக ஆவதற்கு முன்பு, 'அண்ணா' என்ற நாளேடு ஒன்றை அவரது அரசியல் வளர்ச்சிக் காகத் துவக்கப்பட்டு நடைபெற்று வந்ததை நாடறியும்.

'நமது எம்.ஜி.ஆர்' என்ற நாளேடு, செல்வி ஜெயலலிதா அவர்களால் நிறுவப்பட்டு, அதுவும் கால் நூற்றாண்டாக நடந்து வருகின்றது. அந்த தின ஏடு அண்ணா தி.மு.க.வுக்காக எம்.ஜி.ஆர். பெயரால் நடைபெற்று வரும் கட்சிப் பத்திரிகை ஆகும்.

தந்தை பெரியார் அவர்களால் உருவாக்கப்பட்ட 'விடுதலை' நாளேடு, திராவிடர் கழகக் கொள்கைகளைப்

பரப்புவதற்காக ஏறக்குறைய எழுபது ஆண்டு காலமாக நடைபெற்று வரும் ஒரே ஒரு திராவிடரியக்கக் கொள்கை இதழாகும்.

'சங்கொலி' மறுமலர்ச்சித் தி.மு.கழகத்திற்குரிய வார இதழாக, அதன் வளர்ச்சிக்குரிய 'சங்கொலி'யை வாரந்தோறும் போர்க் களக் போர்க் காலச் சங்கு போல ஒலித்து திராவிடரி யக்கத்தைத் தட்டி எழுப்பிக் கோட்டைக்குப் போகப் பாதை அமைத்து வருகின்றது. இந்தக் கழகத்திற்கு அவசியம் ஒரு நாளேடு தேவை. என்ன காரணமோ, புரட்சிப் புயல் 'வைகோ' சிந்தித்துக் கொண்டிருக்கின்றார். அந்தச் சிந்தனை, க. திருநாவுக்கரசு பொறுப்பாசிரியராக இருக்கும் காலத்திலேயே வெற்றி பெறுமானால் நாட்டுக்கு நல்லதோர் விடிவு காலத்தை உணர்த்தும் சங்கொலியாக அமையும்.

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் இராமதாஸ் அவர்கள் 'தினக்குரல்' என்ற நாளேட்டை நடத்தினார். அந்தக் குரல், கட்சி சந்தடி ஓசையிலே மறைந்து விட்டது. மீண்டும் எழுமா?

அகில இந்திய அளவில் எல்லா வளமும் உடைய தேசியக் காங்கிரஸ் கட்சி தனக்கென ஒரு தின ஏடு இல்லாமலேயே இருக்கின்றது? காலம்தான் அதன் கவனத்தைக் கணிக்க வேண்டும்.

தமிழ்நாட்டு அரசியலில் எழுத்துரிமைகளைக் காக்க, பேச்சுரிமையை நிலை நாட்ட, பொடா, தடாக்களது சட்டக் கொடுமைகளை, கோரங்களை மக்களுக்கு எடுத்துரைக்க எப்படிப்பட்ட கட்சி ஏடுகள் தேவை. அதை நடத்துவது எப்படி? எந்தக் கட்சி ஏடுகளிலே அதற்காகப் பயிற்சி பெறுவது நல்லது என்பதை; வருங்கால இளையத் தலைமுறைப் பத்திரிகை ஆசிரியர்கள் எண்ணிடத் தயாராக வேண்டும் என் பதற்காகவே, இந்தப் பகுதிக்கு 'கட்சிப் பத்திரிகை நடத்துவது எப்படி?' என்று ஒரு புதிய பகுதியை எழுதுகிறோம். ஆர்வ முள்ள இளைய தலைமுறைகள் படித்துப் பயன் பெற்றால் மகிழ்ச்சி.

## *கட்சிப் பத்திரிகை நடத்தப் பயிற்சி*

கட்டுரைகளில் எழுதும் எழுத்துச் செறிவுகளைச் சுத்தமாக எழுத வேண்டும்; அதனால் தவறுகள் அதிகம் ஏற்படாது; Scrawl எனப்படும் கிறுக்கல் எழுத்தாக இருக்கக் கூடாது? இருந்தால் ஏராளமான பிழைகள் ஏற்படும். இப்படி எழுதுவதால் என்ன பயன்? என்று கேட்கிறீர்கள் இல்லையா?

நீ ஒரு Scribble பத்திரிகை ஆசிரியன். அதாவது பிரச்னைகளை சிக்கல் எடுக்கும் கட்டுரை ஆசிரியன் என்பதை நீருபிப்பாயா இல்லையா? சிந்தித்துப் பார்! இவ்வாறு நீ பெயரெடுத்துப் புகழ் பெற வேண்டுமா? முதலில் நீ எழுதும் அறையைச் சுத்தமாக வைத்துக் கொள்! அதனால் மனச் சுத்தம் பெற முடியும். கட்டுரைப் போக்கும், அதன் தொடர்புகளும், கட்சி சார்பாக ஆசிரியரைக் காண வருபவர்களும், அவர்கள் தரும் செய்திகளும் சுத்தமாக இருக்கும். இல்லையேல் குழப்பவாதிகள்தான் குவிவார்கள்.

கட்சிப் பத்திரிகையில் எழுதும் கட்டுரைகள் கரடு முரடாக, திகைப்பெனும் பள்ளத்திலே விழுகின்றாவாறு எழுதக் கூடாது. பழி, பாவம், சிறு பிழை ஆகியவற்றுக்கு அஞ்சுகின்ற பண்பாளராக இருந்தால்தான் உன்னைத் தேடி வந்து மனதைப் புண்படுத்தும் கட்சிக் குணத்தினர் Scrupulous அண்டா மாட்டார்கள் - வாரார். இல்லையென்றால் பத்திரிகை அறை Scuffle அமளி, கை கலப்பு, வம்பு தும்பு எழும் அறையாகி விடும். அதாவது சட்டையைப் பிடித்துத் தள்ளுகின்ற தள்ளுமுல்லு அறையாகி விடும்.

அதனால், எழுதும் கட்டுரையில், அனுபவ அறிவுத் திறனும், தனித் திறமும், விறுவிறுப்பூட்டும் மாற்றுச் சுவையும் எடுத்துக் காட்டாக, சிலேடை நயம், கவிதை மேற்கோள், மற்றவர் கருத்தை ஆதரிக்கும் மாண்பு, அகநிலை நுண்நோக்கு ஆற்றல், நாம் எவருக்கும் இளைத்தவரில்லை என்கிற பெருமித நினைவுகள் ஓர் எழுத்தாளன் கட்டுரையில் நீய்ச்சலடிக்க வேண்டும்.

மதச் சார்பின்மை, அரசியல் ஒழுக்கம், சமயச் சார்பற்ற கல்வி முறை, குறிப்பாக சமுதாய வியல் ஒழுக்கம், சமநிலை உணர்ச்சியுடைய கட்டுரை எழுத்துக்கள்தான் பத்திரிகைக்குரிய பெருமையை வழங்கும். எதிலும் புல்லறிவாண்மையை Smatterer நுழைய விடுவீர்களேயானால், உங்கள் இடமிருக்கும் சுறுசுறுப்புகள் (Smartness) துடிதுடிப்புகள் எல்லாமே தளர்ந்து போய்விடக் கூடும்.

நீங்கள் எழுதும் கட்டுரையில் என்னென்ன Styles இருக்க வேண்டும் தெரியுமா? இதோ சில :

- பரந்த நீர் பரப்பில் அலையாடாத,
- ஒலி வகையில் வல்லோசை இல்லாத மெல்லோசையோடு,
- வள்ளலார் அருட்பாடல் மென்மை போல,
- கடுகடுப்பு, சொரசொரப்பு இல்லாத இன்சொற்கள்
- நத்தை நடை, ஆமை நடைகளை அகற்றி, 'அரிமா' நோக்கு நடை வளம்,
- முயல் வேக, மான் வேக ஓட்டத்தோடு பாயும் தமிழ் வேகம் துள்ளத் துள்ள,
- முழு நிலா சந்திரனை உடைத்து அந்த ஒளிக் குளிர்ச்சியை மையாக ஊற்றி எழுதும் போக்கு,
- தென்றற் சிறு காற்றலையின் இதமான வீச்சுடன் வரவேற்று வாழ்த்தும் தமிழ்நடையில் கட்டுரைக் கருத்துக்களை எழுத வேண்டும்.

இத்தகையக் கட்டுரையைக் கட்சிப் பத்திரிகையில் முதன் முதலாக படித்த ஒரு வாசகன், நாளையும் பத்திரிகை வாங்க வரமாட்டான் என்றா எண்ணுகிறீர்கள்? ஆளும் கட்சித் தலைவர் களை இந்த Styleல் வரவேற்றுப் பாருங்கள். விற்பனைப் பெருகாதா?

## எதிர்த்து எழுதும் கட்டுரை நடையில்...

ஆட்சிக் கட்சித் தலைவர்களை, எதிர்க் கட்சியைச் சேர்ந்த பத்திரிகைகளைக் கண்டனம் செய்து எழுதும் தமிழ் நடை

எவ்வாறு அமைந்திருந்தால் சிறப்பாக இருக்கும்? இதோ அந்த நடைக்குரிய இலக்கணம்.

அகம்பாவ உணர்ச்சியை அடக்கிக் கொண்டு, வேகமாகப் பின்வாங்கி முன்னோடி வந்து மோதும் செம்மறி ஆட்டுக் கடாக்களைப் போன்ற மானம்; ரோஷம்; அந்தத் தமிழ் நடையில் செஞ்சொற்களால் அமைந்திருக்க வேண்டும்.

பின் சென்று சுருண்டு உருண்டு புரண்டோடி வரும் பொங்கு மாங்கடல் அலைகளைப் போன்ற ஜால வித்தைகள் அந்தத் தமிழ்நடையில் தாண்டவமாட வேண்டும்.

காண்டா மிருகம் தனது கொம்புகளால் தாக்கும் போதுள்ள வலிமை, எழுதும் கட்டுரையில் மறைந்திருந்தாலும், கலை மான் கொம்புகளது வளைவுகள் உண்டாக்கும் ரத்தக் கசிவுக் காயங்கள் போல; எதிரிகளின் சிந்தனைக் கருத்துக்களைச் சிதறடித்து, அதன் 'கரு' என்கிற கபால ஓட்டைக் கழற்றி எறியும் தமிழ் எழுத்துக்கள் கட்டுரையில் அலை மோத வேண்டும்.

வானத்தில் வளரிளம் பிறைகளது ஒரு முனைக் கூர்மை போல, கண்டனக் கட்டுரைச் சொற்கள் எதிரிகள் எண்ணங்கள் மீது கூர்மையாகப் பாய்ந்து மோத வேண்டும்.

அறிவு கொப்பளிக்கும் கருத்துக்கள் எழுதுகோல் முனையில் பொங்கி வழிய வேண்டுமே தவிர, Horns of Dilemma அதாவது இருதலைக் கொள்ளி எறும்பு மயக்கம் நெஞ்சில் ஊர்ந்திடக் கூடாது. அதனால், அறிவுத் தோல்வி வந்தாலும் அதை 'வேலான் பட்ட வேழ நடையுணர்வோடு' சகித்துக் கொள்ளலாம்! ஏனென்றால், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் அல்லவா? அதனால்!

இவை போன்ற கட்டுரைச் சொற்களது உணர்ச்சிகள், சம்பவங்கள், அதற்கான சான்றுகள், ஆதார ஏடுகள் எல்லாம் எதிரியின் ஏறணைய நெஞ்சிலே பேரச்சத்தை, பயங்கரக் கிலியூட்டும் சினச் சீற்றத்தை உருவாக்கும்போது, கட்டுரையைப் படிக்கும் வாசகர் வட்டங்கள் எல்லாருமே வீரம் தவழும் வெங்களப் பாடல்களைப் பாடித் துள்ளுவார்கள். கட்டுரை எழுதுபவருடைய எழுதுகோலின் அற்புதங்களை

வழக்கமாக படிக்கும் அந்தப் பத்திரிகையின் வாசகர்கள் பக்தர்களாகி விடுவார்கள்.

குறிப்பு :- வாயால் சொல்லி விட்டால் போதுமா? எங்கே எடுத்துக் காட்டுக் கட்டுரைகள் என்று கேட்போர் களுக்கு 'மறுப்புக் கட்டுரை எழுதுவது எப்படி?' என்ற இப் புத்தக இறுதிப் பகுதியிலுள்ள கட்டுரைகளைப் படித்துப் பின்பற்றினாலே போதும். பல நூல்களது ஆதாரச் சான்றுகள் (References) உங்களுக்குக் கிடைக் கும். நீங்கள் எழுதுவதற்கும் அவை அடிப்படையாகச் சான்றளிக்கும்.

## கலைஞர் 'முரசொலி'

''முரசொலி''க்கும் வயதாகி விட்டது. Box Box-சாக பெட்டிச் செய்திகளை எழுதிக் குவிக்கும் 'முரசொலி' மாறன் அவர்களும் இப்போது இல்லை. இப்போது அது வேங்கைக்கு வாய்ப்பூட்டு போட்ட நிலையில் இருக்கிறது.

'தீக்கதிர்' ஏட்டைப் படிக்கும் போது ஒரு கம்யூனிஸ்ட் பத்திரிகையின் வைர நெஞ்சுரத்தைக் காணலாம். அற்புதமான தமிழாய்வுகள், அறிஞர்களது வரலாறுகள் அனைத்தையும் அது வழங்கித், தொண்டர்களை ஊக்குவிக்கும் ஆக்கப் பணிகளை ஆற்றுகின்றது.

## ம.தி.மு.க. 'சங்கொலி'

எல்லாவற்றுக்கும் மேலாக, தற்போது 'சங்கொலி' வார ஏட்டை விட்டால், அரசியல் ரீதியான எதிர்க்கட்சி ஏடு வேறு ஏதுமில்லை. 'ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணு' என்பார்களே அந்தத் தகுதியில் திராவிடரியக்கப் பழங்கால பத்திரிகை உணர்வுகளோடு பீடுநடையிட்டு அது வந்து கொண்டிருக்கின்றது.

'விடுதலை', 'உண்மை' என்று தந்தை பெரியார் வளர்த்த ஏடுகளில் இப்போது இனமான சைவ உணவு வாசனைதான் மூக்கைத் துளைத்து ஊடுருவுகின்றது. அவை வீர சைவமாக இருந்தாலும் பரவாயில்லை. அதனால், அவை என்று பழைய

அசைவ ஏடுகளா மாறி, ஆய்வுக் கருத்துக்களை வரும் இளைய தலைமுறைகளுக்கு வழங்குமோ! காலம்தான் வேகம் காட்ட வேண்டும்.

## "Paper War' - அல்ல

எனவே, கட்சிப் பத்திரிகைகள் **Paper War, Paper Warfare** ஆக மாறிவிடக் கூடாது. அது தாள் போர், தாள் வாக்குவாதம், செய்தித் தாள் மூலமாக, மேடைப் பேச்சில் கேட்டது வாயிலாக, தலைவர்களுடைய அறிக்கைக் கருத்துக்கள் சார்பாக நடத்தப்படும் கண்ணியமான, கட்டுப்பாடான, கடமையான ஒரு கருத்துப் போரே தவிர, வாக்குவாதக் களங்களே அன்றி, பத்திரிகைகள் கலவரமூட்டும் களமாக அது மாறிவிடக் கூடாது என்பதில் எழுத்தாளர்கள் எச்சரிகையாக எழுத வேண்டும்.

## PARALYSIS JOURNALIST

பத்திரிகைக்குப் பத்திரிகை இடையே வெளியிடப்படும் முரண் உரையாக, தலைவர்களுக்குத் தலைவர் அறிவிக்கும் முரணுரைபோலத் தோன்றும் மெய்யுரையாக, புரியாத புதிராக, ஏற்றுக் கொண்ட இயல்புக்கு மாறான செய்தியாக, கருத்தாக, நம்பமுடியாததாக, எழுதும் செய்திகளாகவோ, கருத்துக் களாகவோ, புதிராகவோ - எழுதும் கட்டுரைகள் இருக்கக் கூடாது.

அவ்வாறு அந்த எழுத்துக்கள் அமையுமானால், இருந்தால், எழுதிய எழுத்தாளர் தனது எழுத்தாட்சிகளை, சொல்லாட்சிகளை, பொருளாட்சிகளை, இயக்கும் ஆற்றலை இழந்து விட்ட பக்கவாதம், முடக்கு வாதம் (Paralysis Journalist) என்று, மற்ற எழுத்தாளர்களும் அல்லது பத்திரிகை உலகமும் அவரைப் பழிக்கும் என்பதை உணர வேண்டும்.

எழுதப்படும் கட்டுரைகள் எதுவானாலும் சரி, அது வெல்லுதற்கரிய Inexpugnable-யனவாக இருந்தால்தான்,

அடுத்தப் பத்திரிகை எழுத்தாளர் மீண்டும் தாக்கி எழுத அஞ்சுவார். அது மட்டுமன்று; இத்தகைய எழுத்துக்கள், பத்திரிகையைச் சார்ந்திருக்கும் கட்சிக்காரர்களை வீரர்களாக்கும். மற்றக் கட்சிக்காரர்கள் தாக்கிக் கைப்பற்ற முடியாத கொள்கை உறுதி கொண்ட வீரர்களாக அவர்கள் உலா வருவார்கள். அதாவது, ஆழ்ந்த கட்சிச் சிந்தனைகளை, உலக அறிவுச் சிந்தனைகளை எழுத்து மூலம் தெரிவிக்கும் முறையை Lucubrate என்பர். அந்தப் பணியைக் கட்டுரையாளர் செய்வது நல்லது.

ஆனால், அக்கட்டுரை எழுத்துக்கள், கருத்துக்கள், கேலிக்கும், முட்டாள்தனத்துக்கும் (Ludicrous) சான்றாகிவிடக் கூடாது.

கட்சிக்காரர்கள் அனைவரையும் அக்கட்சியின் இலட்சியத்திற்கான விடி வெள்ளியாக Luciferத் திகழ்ந்தால் அந்தப் பத்திரிகை மக்களிடையே கொள்கை மலராகப் பூத்து மணந்து கொண்டே தேன் பிலிற்றும்.

## பல் சுவைகளை வழங்க வேண்டும்

கட்சிப் பத்திரிகை நாளேடாக இருந்தால் தொடர் கதை எழுதச் சொல்லலாம். ஆனால், அந்தக் கதை ஆற்றொழுக்கான தொடர்பாக எழுதப்பட்டிருக்கின்றதா என்று படித்துப் பார்ப்பது ஆசிரியர் கடமைகளில் ஒன்று.

அவ்வாறு எழுதப்படும் கதையில் முழுநிலைப் பின்னணி விளக்கம்; சென்ற காலக் கதைச் சுருக்கம்; 'சங்கொலி' பத்திரிகையில் வெளி வந்த 'வைகோ' நடைப் பயணச் செய்திக் கட்டுரைகள் போல, மற்றும் துணுக்குரைகள், கேள்வி-பதில், சிற்றிலக்கியச் சிறுகதைகள், கவிதை மலர் பூக்காடுகள் அழகு, விந்தைகள் புரியும் விஞ்ஞானக் கூறுகள்; வரலாற்று ஓவிய நினைவுகள், பேரிலக்கியச் சிறுகதைகள்; புத்தக விமர்சனங்கள்; நாடகம், சினிமா, இசை, ஆடல் பாடல்களது கலை விமர் சனங்கள், இறுதியாக வீர விளையாட்டுப் போட்டி விந்தைகள், இளம் கவிஞர்கள் தலைமுறைகளை வளர்க்கும் கவிதைச் சோலை போன்ற பகுதிகளைத் தக்க வல்லவர்களைக் கொண்டு

வெளியிட்டால், அந்தப் பல்சுவை தேன் துளிகளைப் பருக வாசகர் தேனீக்கள்; பத்திரிகைப் பகுதி மலர்களை மலர வைத்து, நுகர்ந்து, தேனுறிஞ்சி, அடை நெய்து, பிற்கால உலகுக்கு வழங்கும் அறிவைப் பெறுவார்கள். கவிஞர் சுரதாவும், கவிஞர் கண்ணதாசனும் தங்களது கவிதை, உரைநடை இதழ்களில் இந்தப் பணிகளைச் செய்து வெற்றி பெற்றிட்ட வித்தகர்களாக விளங்கினர் என்பதைத் தமிழகம் அறியும்.

## ஆன்மீகம் செய்திகள்

ஆன்மீகக் கருத்துக்களைப் பத்திரிகையில் வெளியிடலாம். புற உலகில் தோன்றுவன எல்லாமே கருத்தளவே ஆகும் என்ற கொள்கையுடைய Idealisticக்குகளாக இருக்கலாம். இலக்கியவாதிகள் குறிக்கோளை உயர்வாக நினைக்கின்ற Idealize ஆக இருத்தல் சிறந்தது. மக்கள் ஆன்மீக உணர்வுகளைப் புரிந்து கொண்டு திருக்கோவில் விழாச் செய்திகளை வெளியிட்டு ஆன்மிகர்களை மகிழ்வுப்படுத்தலாம். அந்த வாசகர்களும் பத்திரிகை வளர்ச்சிக்கு ஆதரவாக நடமாடுவார்கள்.

தேசிய கவி பாரதியாருக்குப் பிறகு கவிதை வானம் வெளுத்து வந்தது. புரட்சிக் கவிஞராக விளங்கிய பாரதிதாசன் அதற்குச் செம்மையை ஏற்றிச் செவ்வானமாக்கினார். அவருடைய பாக்களின் வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல், நமது உடலின் நாடி நரம்புகளிலே துள்ளலை, துடிப்பை, நெருப்பை, கந்தக வெடிப்பை, தென்றல் சுவை போன்ற, புதுப்புதுச் சிந்தனை இசைகளோடு பாடி வந்த பாவேந்தர் 'பா' நயங்களைப் பத்திரிகையிலே எழுதி, பாவேந்தர் கவிதா மண்டலத்தை வளர்க்கும் இளைய தலைமுறைகளை உருவாக்கலாம்.

## பத்திரிகைத் தொண்டு

படிப்பு, கல்வி, ஆராய்ச்சி, இலக்கிய உணர்ச்சிகளது வளர்ச்சிகள், ஆழ்நிலை ஆய்வுகள், ஏடாய்வுகள், கூராய்வுகள்,

நுண்ணாய்வுகள், அறிவியல் சாதனைகள், கலைத் துறை முன்னேற்ற ஆய்வுகள், கருத்துப் படம், எழுதும் பயிற்சி, ஆர்வ உழைப்பு ஈடுபாடு, தலையங்கங்களது, வெற்றிகள், தொடர் வரலாற்றுப் புதினம் வெளியீடு, சங்க கால இலக்கிய ஆய்வுச் சிந்தனைகள், பொருளாதார வளர்ச்சி நிலை, அரசியலில் ஆளும் கட்சி ஆட்சியின் அவலங்கள், அதற்கான ஆக்கப் பணிகளை கூறும் திட்டங்கள், விளையாட்டுச் சிந்தனைகளின் பெருமைகள், சினிமா-நாடகம், இசைத் துறை களுக்குரிய விமர்சனங்கள் ஆகியவற்றுக்கான தூண்டுகோலாக அமைந்தால் அதுதான் பத்திரிகை ஆற்றும் மக்கட் தொண்டு!

இத்தகையப் பத்திரிகையின் வளர்ச்சிக்குப் பொது மக்கள் ஆதரவு காட்டுவதுதான், பத்திரிகையும் மக்களும் Heart and Heart அதாவது மனம் விட்டுப் பழகும் பண்பு நிலையில் உள்ளார்கள் என்று பொருள்!

# 28

# நேருக்கு நேர் சந்திக்கும் கலை!

## பேட்டி (Interview)

இரண்டு மனிதர்கள் நேருக்கு நேராகச் சந்தித்து, அறிவையும், அனுபவத்தையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வதற்குப் பேட்டி என்று பெயர்.

தலைவர்கள், செய்தியாளர்களை அழைத்துப் பேசுவதற்கும், செய்தியாளர் கூட்டமாக இருப்பவர்களிடம் சென்று செய்திகளைக் கேட்டு அறிவதற்கும் பேட்டி என்று பொருள்.

செய்தியாளர் நேரிடையாகவோ, தொலைபேசி வழியாகவோ, கடிதங்கள் மூலமாகவே தொடர்பு கொண்டு செய்திகளை அறிவதற்கும் பேட்டி என்றும் சொல்லலாம்.

சிலர் பேட்டி தருவதற்கே அஞ்சுவார்கள். காரணம். அவர்கள் தரும் செய்தி சிக்கலானப் பிரச்னைகளை உருவாக்கி, மக்களிடமும் சம்பந்தப்பட்ட அரசியல் அல்லது கட்சித் தலைவர்களிடமும் கெட்ட பெயரை உண்டாக்கி விடுமோ என்பதால் பேட்டிக் கொடுப்போர் பயப்படுவதும் உண்டு.

வேறு சிலர், பேட்டிக் கொடுத்தால் பெயரும், அனுபவமும், அறிவும் மக்களிடம் செல்வாக்குப் பெறும் என்ற ஆசையால், புகழ் பெறுவதற்காக பேட்டித் தரவும் விரும்புவது உண்டு என்று 'ஜனநாயகத்தில் பத்திரிகை பணி' என்ற தனது நூலில் திரு. ஏ.ஜி. வெங்கடாச்சாரி அவர்கள் கூறுகிறார்.

எனவே, பேட்டி ஒரு கலை. இரண்டு மனிதர்கள் நேருக்கு நேராகச் சந்தித்து வெளியிடும் அனுபவமும், அறிவுமுடைய கலை என்கிறார் 'சோமலே' எனும் அறிஞர் தனது 'தமிழ் இதழ்கள்' என்ற புத்தகத்தில்.

இரண்டு பேர்கள் சந்தித்துப் பேசும் பேச்சுக்கள் எல்லாமே பேட்டி எனும் பெயர் பெறாது. அது கலந்துரை யாடல் எனும் பெயர் பெறும்.

அந்த இரண்டு பேரும் ஒரு குறிப்பிட்டக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, செய்தியாளர் கேள்வி கேட்க, மற்றவர் அதற்கான அனுபவ உரைகளைக் கூறுவதுதான் பேட்டி என்ற பெயரைப் பெறும்.

எடுத்துக்காட்டாக, அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி அமைத்த பின்பு செய்தியாளர்கள் அவரை அணுகி, 'பானை இருக்கிறது; மூன்று படி அரிச போடவில்லையே' என்று சுவரொட்டிகளை ஒட்டிப் பிரச்சாரம் செய்கிறார்களே, உங்களது பதில் என்ன?' என்று கேட்டார்கள்.

அதற்கு அண்ணா அவர்கள் 'மூன்றுபடி அரிசி அரசு நோக்கு. தற்சமயம் மக்களுக்கு போடும் ஒரு படி அரிசிதான் இலக்கு' என்ற தகவலைத் தந்தார். இவ்வாறு தகவலைப் பெறுவதற்குத்தான் பேட்டி என்று பெயர்.

எனவே, பேட்டி காண்போர், இயல்பாக உள்ள பிரச்னைகள் வைத்துத்தான் பேட்டி காண வேண்டுமே தவிர, பேட்டி வழங்குபவருக்கு நெருக்கடியோ, அச்சுறுத்தும் சிக்கலையோ உண்டு பண்ணக் கூடாது. அது செய்தியாளருக்கும் அழகன்று.

அமெரிக்க நாவலரான இராபர்ட் கிரீன் இங்கர்சால் கூறியதை போல, மக்களுடைய அன்றாடச் சிந்தனைகளைப் பதிவு செய்வதுதான் பத்திரிகைப் பண்பு. ஒவ்வொரு மணி நேரமும் மனித சாதியின் முன்னேற்றத்தை அளந்து காட்டுவதுதான் செய்தியாளர் பணி என்கிறார். அதற்கேற்ற சூழ்நிலையைப் பேட்டியும் உருவாக்க வேண்டும் என்பது அவரது கருத்தின் நோக்கம்.

## அன்றாட நடப்புகளை அறியும் பேட்டி

தமிழ்நாட்டில் 'கம்ப ராமாயணத்தையும், பெரிய புராணத்தையும் தீயிட்டுக் கொளுத்த வேண்டும்' என்றார் தந்தை பெரியார். அதற்கான வாதப் பிரதிவாதங்கள், பத்திரிகைப் போராட்டங்கள், மேடைப் போர்கள் எல்லாம் நடந்து கொண்டிருந்தன! ஆத்திக நாத்திக அனலாறுகள் ஓடிக் கொண்டிருந்தன.

நாவலர் சோம சுந்தர பாரதியார், சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை போன்றவர்கள் எல்லாம் சேலத்திலும் சென்னையிலும் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா கருத்துக்கைள எதிர்த்து தங்களது அறிவாராய்ச்சிக்களை அரங்கு களிலே சொற்போராகத் தொடுத்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள், போர் தொடுத்தத் தமிழ் அறிஞர்களை எதிர்த்து மேற் கண்ட இருநகர சொற்போர்களிலும் வாதப் போர் நடத்தினார்.

அந்த நேரத்தில் அண்ணல் காந்தியடிகள் சென்னை யிலுள்ள இந்திப் பிரச்சார சபை விழாவுக்கு வந்திருந்தார். அடிகள் காலையிலும், மாலையிலும் தினந்தோறும், 'ரகுபதி ராகவ ராஜாராம்' பாடலைப் பாடி ராம பஜனை செய்யும் பழக்கமுடையவர் என்பது இந்திய மக்கள் அறிந்த செய்தி.

மகாத்மா அவர்கள் இந்திப் பிரச்சார சபை விழாவில் பேசி முடித்த பின்பு, அவரைச் சென்னைப் பத்திரிகைச் செய்தி யாளர்கள் கூட்டமாக அணுகி, 'தமிழ்நாட்டில் இராமயணத்தைக் கொளுத்த வேண்டும்' என்று பெரியார் இராமசாமி கூறுகிறார். ராம பக்தரான நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?' என்று அப்போதைய நாட்டின் பரபரப்பு சூழ்நிலைக்கு ஏற்றவாறு காந்தி அண்ணலிடம் கேள்வி கேட்டார்கள்.

அதற்கு அண்ணல் காந்தி, 'நான் வணங்குவது தசரதன் மகன் இராமனை அல்ல; சீதையின் கணவன் ராமனை அல்ல' என்று சுருக்கமாக இரண்டே வாக்கியங்களில் பதில் கூறினார்!

உடனே அறிஞர் அண்ணா அவர்கள் தனது 'திராவிட நாடு' பத்திரிகையில் 'எரியிட்டார் : என் செய்தீர்? என்று கேட்டு பதில் எழுதினார்.

இதுதான் அன்றைய கால கட்டத்தின் அன்றாட நடப்பினை அறியும் நேருக்கு நேர் சந்தித்துக் கேட்ட பேட்டிக் கலை. அதற்கு அடிகள் தனது அனுபவத்தை, அறிவை மக்களுக்கு விளக்கிக் காட்டிய பேட்டி காட்சியாக அமைந்தது. இந்தப் பேட்டி ஒரு வரலாற்றுச் சம்பவ ஆன்மிகத் தெளிவைத் தெரிவித்த பேட்டியாகும்.

## நிகழ்ச்சியின் விவரங்களை வெளிப்படுத்தும் பேட்டி

தந்தை பெரியார் சேலம் நகரில் பிள்ளையார் சிலைகளை உடைக்கும் போரட்டத்தை நடத்தினார்! இந்த சிலை உடைப்புப் போராட்டத்தால் வன்முறைகள் ஏதும் நடைபெற வில்லை; அமைதியாக மண் சிலைகளை நடுரோடில் போட்டு உடைத்தார்! தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டம் ஆன்மிக உலகில் ஒருவித பரபரப்பை உருவாக்கியது.

உடனே செய்தியாளர் ஒருவர் சேலத்தில் பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டம் முடிந்த பிறகு பேச வந்த அண்ணா அவர்களிடம் மேடையில் பேசுவதற்கு முன்பே, 'பெரியார் பிள்ளையார் சிலைகள் உடைப்புப் போராட்டம் நடத்தினாரே, அதனை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா? என்று பேட்டி கண்டு கேட்டனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் அதற்குப் பதில் கூறும் போது, 'போராட்டங்களைத் தேடியும் போக மாட்டேன். போராடும் கட்டம் வந்தால் நடத்தாமலும் இருக்க மாட்டேன்; பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்க மாட்டேன், சிலைகளையும் உடைக்க மாட்டேன்' என்றார்.

செய்தியாளர்களின் இந்தப் பேட்டி, அண்ணா அவர்களைச் செய்தியாளர் நேருக்கு நேர் சந்தித்தக் கலைக் காட்சி, அக்கால கட்டத்தில் நடைபெற்ற பகிரங்க நிகழ்ச்சியின் விவரங்களை வெளி கொணர்ந்து அதன் உட்பொருளை மக்களுக்குப் புலப்படுத்திய சாட்சி.

## கண்ணோட்டக் கருத்தை வெளிப்படுத்தும் பேட்டி

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பராசக்தி படம் மூலம் அறிமுகமாகி அண்ணா கட்சி நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட மன உணர்ச்சியுடையவராக இருந்தார். பிறகு அவர் தேசியக் கட்சியில் சேர்ந்து தீவிர பங்கு கொண்டதால், திருப்பதி கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்து திரும்பினார்.

செய்தியாளர்கள் அறிஞர் அண்ணா அவர்களை அணுகி, 'உங்களுடைய கட்சியிலே இருந்த நடிகர் திலகம் திருப்பதி சென்று வழிபாடு செய்துள்ளாரே' என்று நேருக்கு நேராகக் கேள்வியை எழுப்பினார்கள். அதற்கு அண்ணா மௌனியாக இருந்து விட்டார். 'ஒரு நாள் பழகினும் நட்புக்கு சீர்குலைவு வரக்கூடாதல்லவா? அதுதானே சான்றோர் எண்ணம்?

சென்னை இராஜா அண்ணாமலை மன்றத்திலே நடிகர் திலகம் நடிக்கும் வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகத்திற்கு தலைமை தாங்க வேண்டும் என்று நடத்துனர்கள் கேட்டதற்கு அறிஞர் அண்ணா ஒப்புக் கொண்டார், நாடக அரங்கிற்கு அவர் வந்து பேசிய தனது உரையில், 'சிவாஜி கணேசன் என்ற மலர் மலர்ந்து மணம் வீசும் நேரத்தில் அவரது அருமை மணத்தை நீங்கள் நுகர்கிறீர்கள். அவர் செடியாக, அரும்பாக இருக்கும் போதே, இந்தச் செடி, அரும்பு ஒரு நாள் தமிழ்நாடு முழுவதும் மணக்கும் மலராகும் என்பதை முன்கூட்டிய நான் அறிந்தவன். 'தம்பி' சிவாஜிகணேசன் எங்கிருந்தாலும் வாழ்க' என்று வாழ்த்திச் சென்றார்.

இந்தக் காட்சி, சிவாஜியை நேருக்கு நேர் கண்டு வாழ்த்தியக் காட்சி, அவர்மீது அண்ணா வைத்திருந்த கருத்தை, கண்ணோட்டத்தின் தனித்தன்மையை அன்று வெளிப்படுத்திய பேட்டி ஆகும். மாற்றான் தோட்டத்து மலரும் மணக்கும்' என்றவரல்லவா அவர்?

எனவே, பேட்டியினால் நாட்டுக்கு பல நன்மைகள், வரலாற்றுண்மைகள், நட்பு உணர்வின் நெறிகள், இலக்கியச் சிந்தனைகள், அரசியல் தன்னடக்க உணர்வுகள்,

சான்றாண்மைச் சம்பவங்கள் கிடைக்கின்றன. இத்தகைய பேட்டிகள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை எல்லாம் செய்தியாளர்கள் வெளிக் கொண்டு வந்து வரலாற்றில் பதிவு செய்தால், வருங்கால இளைய தலைமுறைகளுக்குரிய பாடமாக, படக் காட்சிகளாக அமையாதா?

பேட்டிகள் ஒரு செய்தியை உருவாக்க வேண்டும். பல சம்பவங்களைப் படம் பிடித்துக் காட்டுவதாய் அமைய வேண்டும். புதிய கண்டுபிடிப்பார்களது சாதனைகளைப் பேட்டி கண்டு அதன் அருமைகளைப் பொது மக்களுக்கு உணர்த்தலாம்.

விளையாட்டு வீரர்களைப் பேட்டிக் கண்டு அவர்களது ஆற்றலை உலகுக்கு வெளிப்படுத்தலாம். இவை பொது மக்களுக்குரிய வீர உணர்ச்சிகளை வளர்க்கப் பெரிதும் உதவியாக இருக்கும்.

இந்தியாவின் ஒவ்வொரு துறையிலும் புகழ் பெற்று விளங்குபவர்கள் இலை மறை காயைப் போல வாழ்கிறார்கள். அவர்களை அடையாளம் கண்டு மக்களுக்கு அறிமுகப் படுத்தும் பாலமாக பேட்டி விளங்க வேண்டும்.

'சன்' டிவியில் உங்களூர் விநோதங்கள் என்ற ஒரு பகுதி செயல்படுகிறது. அந்த டி.வி.யின் பத்து நிமிடத்தோடு அவர்களது சாதனை விவரங்கள் முடிந்து விட்ட சம்பவங்கள் அல்ல. செய்தியாளர்கள் அவர்களைத் தனியே பேட்டிக் கண்டு முழு விவரங்களையும் பத்திரிகையில் வெளியிடலாம். அதனால் அவர்களது சாதனை நோக்கம் மேலும் ஆக்கம் பெறும் வழியாக இருக்கும்.

சாலையின் ஓரத்தில் இளநீர் காய்களை வெட்டி விற்றவர் ஒருவர் சங்கத் தலைவரானார்! எப்படியானார் அவர் என்பதைத் தனி மனிதர் பேட்டியாகக் கண்டு முழு செய்தியை வெளியிடலாம். நாளை ஒரு பழ வியாபாரிகூட கனிகள் சங்கத் தலைவராக அல்லது பெரிய வணிகச் சீமானாக வரலாமில்லையா? அதைப் பேட்டியாக எடுத்து செய்தியாளர்கள் வெளியிடலாம்.

பொதுப்பணிப் பாலங்கள் கட்டும்போது செங்கல் சுமந்த ஒரு சிற்றாள், நகராட்சி கமிஷனராக உயர்கின்றார். அவர்

உழைப்பைச் செய்தியாளர் நேருக்கு நேர் பேட்டி எடுத்துப் பத்திரிகையில் வெளியிட்டால் அதைப் படித்து விட்டு மண் சுமப் பவன் நாளை சட்டமன்ற உறுப்பினராகவும் வரக் கூடு மில்லையா? வந்தவர்கள் உண்டு! இவை எல்லாம் தற்செயல் The Casual Interviews பேட்டிகளாக அமையலாம் தானே!

தொலைபேசியில் பேட்டி எடுப்பதை கூடுமான வரைத் தவிர்த்து விடுதல் செய்தியாளர்களுக்கும், பத்திரிகைகளுக்கும் மிக நல்லது; ஏனென்றால், அந்தச் செய்தியை வழங்கியவருக்கு சாதகம் விளைந்தால் செய்தியாளரையும், பத்திரிகையையும் பாராட்டுவார். ஒருவேளை சரியாக கவனிக்க முடியாமல், கரகரப்பு ஒலிகளால் சரியாக கேட்க முடியாமல் இடையில் தொலைபேசி தடை ஏதாவது ஏற்பட்டு அந்தச் செய்தி பாதகம் விளைவிக்குமானால், நான் அது போல ஒரு செய்தியை வழங்கவில்லை என்று அவர் மறுத்து விடுவார். அதனால் பத்திரிகைக்கும் கெட்ட பெயர், செய்தி சேகரித்தவருக்கும் அவப்பெயர் வந்து சேரும். எனவே, தொலைபேசியில் செய்தி சேகரிப்பதைத் தவிர்ப்பது கூடுமானவரை நல்லது.

செய்தியாளர், செய்தி பெறுவோரிடம் நம்பிக்கை யாளராக நடக்க வேண்டும். 'இந்தச் செய்தியை வெளியிட வேண்டாம்' என்று ஒரு தலைவர், மக்களால் போற்றப்படுபவர் கூறினால் அதை வெளியிடவே கூடாது. Off the record என்று அவர் கூறியே சொல்லும் போது அதை மீறினால், மறுபடியும் அந்தச் செய்தியாளர் பிறர் எவரிடமும் செய்தி பெற முடியாது. எல்லோருமே அவரை வெறுத்து ஒதுக்கும் நிலை ஏற்படும்.

ஒரு செய்தியாளர் பேட்டியை வெற்றிகரமாக முடிக்க, பேட்டி தருபவர் யார், அவர் கல்வித் தகுதி, துறை அனுபவம், மக்களிடம் உள்ள தொடர்பு அல்லது அரசிடம் அவருக்குள்ள செல்வாக்கு ஆகியவற்றை முன்கூட்டியே தெரிந்து கொண்டு, தான் காணும் பேட்டிக்கான கேள்விகளைத் திட்டமிட்டுப் பட்டியலிட்டுக் கொள்வது சிறந்தது. பிறகு அந்தக் கேள்விகளில் கேட்க வேண்டியதைக் கேட்டு பதில் பெறலாம்; நீக்க வேண்டியதை நீக்கி விட்டு விடலாம். அதை விட்டு விட்டு பேட்டி நடக்கும் இடத்திலே சமாளித்தும் கொள்ளலாம் என்று முன் தயாரிப்பின்றி சென்றால் நிச்சயம் குழப்பம் ஏற்பட்டு,

பேட்டி தோல்வி பெறலாம் என்ற எச்சரிக்கை செய்தியாளர்களுக்கு இருப்பது நல்லது.

செய்தி சேகரிப்பவர்களுக்குப் புகழாசை இருக்க வேண்டும். பத்திரிகைக்கும் தனக்கும் நற்பெயர் தேடிக் கொள்பவராக இருப்பது நல்லது. ஆனால் சந்தர்ப்பவாதியாகும் ஆசைகள் அவரிடம் அண்டக் கூடாது.

பேட்டி எடுப்பவர் அதை நடத்திக் கொண்டே பேட்டி தருபவரின் கருத்துக்களை குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி எடுக்கும்போது, பேட்டிக் கருத்துக்கள் தடைப்படக் கூடாது. தொடர்பு விட்டு விட்டு அறுபடக் கூடாது. பேட்டிக்குப் போவோர் அவர்களுடன் ஒலிப்பதிவு நாடா (Tape Recorders)களைக் கொண்டு சென்றால், பேட்டிப் பணியும் சுலபமாக முடிவடையும்.

பேட்டி எடுக்கும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நேரம், இடம், கேள்விப் பட்டியல், பொறுப்புணர்ச்சி, பொறுமை, நல்ல உடைத் தோற்றம், குறிப்பு எடுக்கும் கருவிகள், எவற்றை வெளியிடலாம், எதை வெளியிடக் கூடாது என்ற கேள்வி பதில் தகுதிகள் ஆகியவற்றைச் சிந்தித்து நடக்க வேண்டும்.

பேட்டி தருபவரை விட - நாம் விஷயமறிந்தவர் என்றோ, அவர் பதில் கூறும்போது இடையீடு செய்து எரிச்சலூட்டு வதாகவோ, அடிமைபோல - அவரிடம் ஏதோ பயன் பெறுபவர் போல பேட்டியளிப்போர் நினைக்கும் வகையில், செய்தியாளர் நடந்து கொள்ளக் கூடாது. குறிப்பாக 'கவர்' கிடைக்குமா? மது பான விருந்துண்டா? என்ற தவறுகளுக்குச் செய்தியாளர்கள் இடமளிக்கக் கூடாது?

# 29

# சொற்பொருள் உச்சரிப்பை தவறின்றி எழுதலாமே?

முதல் அமைச்சர் கலந்து கொள்ளும் அரசு விழாக்களில், அரசு திட்டங்கள் அறிவிப்புக் கூட்டங்களில் பத்திரிகையாளர்களை ஏன் புறக்கணிக்கின்றார் செல்வி ஜெயலலிதா என்பதற்கு, அவர் என்ன காரணம் கூறினார் என்பதைச் சிந்திக்கும்போது, நமக்கெல்லாம் மனவேதனை சுனாமி அலைகளைப் போலச் சுழன்றடிக்கின்றது? அப்படி என்ன அறிவித்து விட்டார் என்கிறீர்களா?

## செல்வி. ஜெயலலிதா கூறிய காரணம்!

'செய்தி சேகரிக்க வருவோர்களுக்கு இங்லீஷ் தெரிந்தால் தமிழ் எழுத வரவில்லை; தமிழ் தெரிந்தால் ஆங்கிலம் சரியாகத் தெரியவில்லை. இதனால் ஒன்றுகிடக்க ஒன்று செய்தியாக வெளிவந்து குழப்பம்தான் உண்டாகின்றது' என்றார்.

எவ்வளவு பெரிய இழுக்கு இது பத்திரிகைச் செய்தியாளர்களுக்கு என்று எண்ணிப் பார்ப்பவர்களுக்குத்தான் இந்த சுனாமி அலைகளது ஆபத்து புரியும். இது மட்டுமன்று.

செய்தியாளர்களில் பலருக்கு 'ழ' கர உச்சரிப்பே சரியாக சொல்லத் தெரியவில்லை. வாழை என்பதற்கு வாளை என்றும் பழம் என்பதற்கு பலம் என்றும், மதுரையை மருதை எனவும், குதிரையைக் குருதை எனவும் உச்சரிப்பவர்களும்; 'ண'கர, 'ன'

கர, 'ள' கர, 'ல'கர, 'ழ'கர பேத உணர்வுகளை உச்சரிக்கத் தெரியாதவர்களும் இன்றும் பத்திரிகைத் துறையில் இருக்கிறார்கள்.

அவர்கள் தென் மாநில சாதாரணமான மனிதர்களாக இருந்தால் பரவாயில்லை; பத்திரிகையாளர்களாக, செய்தியாளர் களாகப் பணி புரிகிறார்களே! அதனால்தான் அக்கறைப்பட வேண்டிய அவசிய முள்ளது. அவர்களைக் கூறித் தவறில்லை. இளமைக் காலக் கல்வியைக் கற்றுக் கொடுத்த ஆசான்களும், அத்தகையவர்களே! காரணம், மண்மொழி மாண்பு அது!

செய்தியாளர்களாக வந்து விட்டதற்காக அவர்கள் Linguist பன்மொழி அறிஞராகவோ Lingulate என்ற 'நா' பல் ஒலி அறிந்த வராகவோ, Phonetics ஒலியியல் தெரிந்தவராகவோ, Phonetician ஒலியியல் வல்லுநராகவோ Lingual, 'ட'கர, 'ண'கர போன்று 'நா' விடைப் பிறக்கும் ஒலி நூலுணர்ந்தவராகவோ இருக்க வேண்டும் என்று நாம் சொல்லவில்லை; எதிர் பார்க்கவுமில்லை.

செய்தியாளர், ஆசிரியர் பணிகளுக்கு வந்த பிறகாவது, தமிழ் வல்லாரிடையே எழுத்தொலிப் பிறப்பு களைப் பற்றி, அவற்றை எவ்வாறு உச்சரிக்க வேண்டும் என்பதைக் குறித்துத் தெரிந்துக் கொள்ள வேண்டாமா? காரணம், பத்திரிகைத் துறை பணிகளா யிற்றே என்பது தான் நமது ஆசை! அதனால்தான் கூறுகின்றோம்.

எனவே, இப்படிப்பட்டவர்கள் செய்தியாளராகச் சென்று தவலை போயிற்று என்ற சொற்றொடர்களின் முதல் சொல்லில் 'வ' கரத்தை மறந்து விட்டால் என்ன குழப்ப வேதனைகள் சூழுமோ, அந்த நிலைச் செய்தியிலும் தன்னை மறந்து ஏற்பட்டு விடக்கூடாதே என்பதாலும், தமிழ்நாட்டில் 'ழ'கர, 'ண'கர, 'ல'கர, 'ள'கர வித்தியாசங்கள் விநாச விளைவுகளை விளை வித்திடக் கூடாது என்பதாலும், முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் புகார் தமிழ்ச் செய்தியாளர்கட்கும் நேர்ந்துவிடக் கூடாதே என்ற தொழில் அபிமானத்தாலும்தான், இந்தப் பகுதியை இங்கே அவர்கள் கவனத்துக்கு நிலை நாட்ட விரும்புகிறோம்! காரணம், நாமும் ஒரு மூத்த செய்தியாளன், பத்திரிகை ஆசிரியன், 55 ஆண்டுக் கால அனுபவம் உள்ளவன் என்பதால் இங்கே எழுதுகின்றோம்.

## நிறுத்தக் குறிகள்

தற்காலச் செய்தியாளர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் எழுதும் வேகத்தில் எங்கெங்கே என்னென்ன நிறுத்தற் குறிகளை வைக்க வேண்டும் என்பதையும் மறந்து விடுகிறார்கள். அந்தக் குறிகள் இல்லாமையால், சுக்கு, மிளகு, திப்பிலி என்று படிக்க வேண்டிய வாசகங்கள் 'சுக்குமி, ளகுதி, ப்பிலி' என்று அனர்த்தமாகப் படித்துக் குழப்பம் அடையும் நிலை உண்டாகின்றது. அதனால், நிறுத்தக் குறிகளை எழுதுவதற்கு இது ஒரு பயிற்சியாகவும் இருக்குமல்லவா?

நாம் பேசும்போது கருத்து முடிகிற இடத்தில் பேசுவதைக் கொஞ்சம் நிறுத்துகிறோம். கருத்து முடிந்தாலும் சரி, முடியாமல் போனாலும் சரி, சில இடங்களில் நிறுத்தம் செய்கிறோம். கேள்வி எழுப்பும் போதும், ஆச்சரியப்படும் போதும் பேசும் பேச்சைக் கொஞ்சம் இழுத்து அல்லது எடுத்து நிறுத்துகிறோம்.

பேசும்போது உண்டாகும் இந்த நிறுத்தக் காலத்தை, எழுத்தில் சில குறிகள் போட்டுக் காட்டுகிறோம். இவைதான் நிறுத்தற் குறிகள் ஆகும்.

## முற்றுப் புள்ளி (.)

எழுதும் வாக்கியத்தின் முடிவைக் காட்டுவதற்காக, முற்றுப் புள்ளி (.) வைக்கின்றோம். இந்த முற்றுப் புள்ளி வைத்த இடத்தில் நான்கு மாத்திரை நிறுத்த வேண்டும் என்பது பொருளாகும். இது முற்றுப் புள்ளிக்குரிய கால அளவு.

மாத்திரை என்றால் என்ன? இதைச் செய்தியாளர்கள் பள்ளிக் கல்வியில் கற்ற ஒன்றுதான். ஆனால் அது, மனதை விட்டு மறைந்திருக்கக் கூடும்.

எனவே, மாத்திரை நேரம் என்றால், விரலை சொடுக்கும் அல்லது நெட்டை ஒடிக்கும் ஓசை வரும் நேரம். அல்லது கண் இமை, இமைக்கும் நேரம். இந்த நேரம் தான் மாத்திரை எனும் நேரத்தின் கால அளவு. எனவே, முற்றுப் புள்ளி உள்ள

இடத்தில் நான்கு முறை கண் இமைகளை மூடி மூடி திறக்கும் நேரம் நிறுத்த வேண்டும். அதுதான் மாத்திரை எனும் கால அளவு.

மற்ற நிறுத்தற் குறிகளுக்கு அளவு, முற்றுப் புள்ளிதான் மூல அளவை நேரம். அந்த மாத்திரை அளவைக் கொண்டுதான்

முக்காற் புள்ளி :
அரைப்புள்ளி ;
காற்புள்ளி,

ஆகிய நிறுத்தற் புள்ளிகள் கணக்கிடப்படுகின்றன.

இந்த முற்றுப் புள்ளியை வாக்கியம் முடிந்தவுடன் வைக்க வேண்டும். ஒருவர் முகவரி முடிக்கப்படும் இடத்தில் இடவேண்டும். சொற் குறுக்கங்களின் முடிவு. (திரு. இது திருவாளர் என்ற சொல்லின் குறுக்கம். இந்தக் குறுக்கம் முடிவில் (.) புள்ளியிட வேண்டும்.

ஒரு பெயரை எழுதும்போது, பெயர்களுக்குரிய முன் னெழுத்துக்களின் பின், எடுத்துக்காட்டாக கி.மா.கோ. ராஜன், நா.வா. கலைமணி. என்று எழுதும் போது முற்றுப் புள்ளி மேலே வைத்திருப்பதைப் போல இடவேண்டும்.

## முக்காற்ப் புள்ளி (:)

உட்பிரிவுகள், வகைகள், சிறு விளக்கங்கள், மேற் கோள்கள் போன்றவற்றிற்குரிய துணைத் தலைப்புகளுக்குப் பின் முக்காற்புள்ளி : இடப்பட வேண்டும். இதற்கு நிறுத்தும் கால அளவு மூன்று மாத்திரைகள். அதாவது மூன்று முறை கண் இமைக்கும் நேரம் கால அளவு.

## எடுத்துக்காட்டு :-

சமுதாயச் சீரழிவுக்குக் காரணங்கள் :
கலைஞரின் உரைச்சுருக்கம் :
தோல்விக்குரிய காரணங்கள் வருமாறு :

*அரைப்புள்ளி (;)*

பல பயனிலைகள் ஒரு வாக்கியத்தில் வரும்போது; முடிவாக வருகின்ற பயனிலையைத் தவிர, வாக்கியத்தினுள் வருகின்ற மற்ற பயனிலைகளுக்குப் பின் அரைப்புள்ளி இடப்படுகின்றது.

எடுத்துக்காட்டுகளும், குறிப்புரைகளும், குறிப்பெண்களும், எழுதப்படும்போது, கருத்தளவில் ஓர் உட்பகுதி முடிகின்ற இடத்திலும் அரைப்புள்ளி ஒரு வாக்கியத்தின் முடிவை அல்லது குறிப்புக்களின் முடிவைக் காட்டுவதன்று; தொடர்ந்து செல்லுகின்ற ஒரு கருத்தின் உட்பிரிவின் முடிவைக் காட்டுவது. இதற்குரிய கால அளவு இரண்டு மாத்திரைகள்.

*எடுத்துக்காட்டு :-*

1. சிவகவி முருகனை நோக்கிச் சென்றார்; அவரைப் பாடினார் : அருள் பெற்றார்; மற்றவர்கட்கும் வழிகாட்டினார்.

2. பலா வேர் விறகிற்கு ஆம்; மரப்பகுதி பலகைக்கும் ஆம்; கிளைகள் விட்டத்திற்கு ஆம்; பழம் உண்பதற்கு ஆம்.

*காற்புள்ளி (,)*

ஓரினத்தை அடுத்த பலவற்றை அடுத்தடுத்து எழுதும் போதும், எண், பெயர், முற்று, எச்சம் ஆகிய இடங்களில் பொருள் புரிவதற்காக நிறுத்தம் நிகழ வேண்டும் போதும், ஆனால், ஆதலால், ஆயின், மற்ற, என்பன போன்ற இடைச் சொற்களின்பின் நிறுத்தல் நிகழ வேண்டும் போதும், காற்புள்ளி வைக்க வேண்டும். காற்புள்ளி கால அளவு ஒரு மாத்திரை

*எடுத்துக்காட்டு :-*

1. சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி ஆகிய இவைகள் ஐந்தும் ஐம்பெருங்காப்பிய நூல்களாம்.

2. திருக்குறளில் '133' அதிகாரங்களும், திருவள்ளுவர் பெருமானால் எழுதப்பட்டவை.

3. அன்பும் அருளும், பண்பும் அன்பும், சுத்தமும் அசுத்தமும், விண்ணும் மண்ணும், திருக்குறள் நூலில் பின்னிக்

கிடக்கின்றன. ஆனால், வீடுபேறு இல்லையே, என்று ஆன்மீகிகளில் பலர் கூறுகின்றார்கள்.

கேள்விக் குறி?

கேள்வியைச் சுட்டிக் காட்டும் வாக்கியத்தின் கடைசியில் வினாக்குறி போடப்படுகின்றது. இதற்குரிய கால அளவும் முற்றுப் புள்ளியைப் போலவே நான்கு மாத்திரைதான். ஆனால்; கேள்வி கேட்பவன் தான்பேசும்போது, அந்தக் கேள்விக்குப் பதில் எதனையும் பிறரிடமிருந்து எதிர்பார்க்காமல் பேசுகின்ற நிலையில்தான் - இந்தக் குறிக்கு இவ்வளவு மாத்திரை நேரம் உரியது. விடை எதிர்ப்பார்க்கப்பட்டதாயின், இதற்கு மாத்திரை அளவு இல்லை.

எடுத்துக்காட்டு :-

1. யானோ அரசன்? யானே கள்வன்?

2. எட்டுத் தொகை நூல்கள் எவை?

ஆச்சரியக் குறி!

இகழ்வின் கண்ணும், உயர்வின் கண்ணும், விளியின் கண்ணும் வியப்புத் தோன்ற வருகின்ற சொல்லின் அல்லது சொற்றொடரின் இறுதியிலும் இந்தக் குறி வைக்கப் படுகின்றது. இதற்கும் நான்கு மாத்திரையே அளவு என்றாலும், முற்றுப் புள்ளியைப் போலவே நான்கே மாத்திரைதான் என்ற அளவு இல்லை.

எடுத்துக்காட்டு :-

தேரா மன்னா! செப்புவ துடையேன்!<br>
யானே கள்வன்!<br>
கண்டேன் கற்பினுக் கணியைக் கண்களால்!<br>
தீ! தீ! தீ!

மேற்கோள் குறி "-", '-'

ஒருவர் கூறிய சொல்லை மேற்கோளாகக் காட்ட வேண்டுமென்றால், மேற்கோள் குறிகள் இடப்படுகின்றன. கட்டுரை

யின் இடையில் தனியாகச் சிறப்பித்துக் காட்டப்பட வேண்டிய எழுத்து, சொல், சொற்றொடர் ஆகியனவும், மேற் கோள் குறிகளைப் பெறுகின்றன. முன்னதற்குப் பெரும்பாலும் இரட்டைக் குறிகளும், பின்னவற்றிற்குப் பெரும்பாலும் ஒற்றைக் குறிகளும் இடப்படும்.

மேற்கோளுக்குள் மேற்கோள் வரவேண்டு மென்றாலும் ஒற்றைக் குறிகள் இடப்படுகின்றன. இந்த முறைக்கு மாறாக மேற்கோள் குறி இடுவதும் உண்டு.

எடுத்துக்காட்டு :-

1. "யானோ அரசன்? யானே கள்வன்!" என்று அமைந்தான் பாண்டியன்.

2. வடமொழி நூலார் உவமையை 'உபமானம்' என்பர்.

3. "இலண்டனுக்குச் சென்றேன். 'நீர் இந்தியரோ?' என்று கேட்டார். ஓர் செவ்விந்திய நண்பர்", என்று அவர் கூறினார்.

4. 'டில்லிக்குச் சென்றேன். "நீர் சென்னை வாசியோ?" என்று கேட்டார் ஒரு ஆக்ரா நண்பர்' என்று அவர் கூறினார்.

பிறைக் குறிகள் ( ), [ ]

வாக்கியங்களின் இடையிடையே சிறு விளக்கங்கள் கூறப்படும்போதும், உட்பிரிவுகளுக்கான எண் வரிசை களுக்கும், மேலும் பிறவற்றிற்கும் பிறைக் குறிகள் போடப்படு கின்றன. பெரிய உட்பிரிவுகளுக்கு [ ] இத்தகைய குறிகளும், சிறிய உட்பிரிவுகளுக்கு ( ) இத்தகைய குறிகளும் இடப்படு கின்றன. இவற்றை 'அடைப்புக் குறிகள்' எனவும் கூறலாம்.

எடுத்துக்காட்டு :

(1) தமிழ்நாட்டு வரலாற்றில் சோழர் காலத்தில் (கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை) தமிழில் அரிய காப்பியங்கள் தோன்றலாயின.

(2) அவை யாவன :

(1) ..........
(2) ..........
(3) ..........

(3) தமிழ்நாட்டு வரலாற்றில் சோழர் காலத்தில் [கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் (கம்பர்) 12-ஆம் நூற்றாண்டு வரை] தமிழில் அரிய காப்பியங்கள் தோன்றலாயின.

## பத்தியமைத்தல்
## (Paragraph)

கட்டுரை முழுவதும் ஒரே துண்டாக எழுதப்பட்டிருக் காது. தொடர்ச்சியாகச் செல்லும் வரிகள். ஆங்காங்கு உடைக்கப்பட்டுக் கட்டுரை பல பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

பல வாக்கியங்கள் சேர்ந்த சிறுசிறு பிரிவு களாகக் கட்டுரை அமைந்திருக்கும். ஒவ்வொரு பிரிவிலும் ஒரு குறிப்பிட்ட கருத்து அல்லது ஒரே தன்மை வாய்ந்த கருத்துக்கள் விளக்கப் பட்டிருக்கும். இந்த ஒவ்வொரு பிரிவிற்கும் பத்தி (Paragraph) என்று பெயர்.

புதிதாக பாரகிராப் துவங்குவதாக இருந் தால், புதுக் கருத்துத் தொடங்க வேண்டுமானால், அதற் கான இந்தக் குறியீட்டை (¶)ப் போட வேண்டும.

பத்திகள் இல்லாத கட்டுரையில் ஒழுங்காகக் கோவை செய்யப்பட்ட கருத்துக்கள் அமைந்திருக்கும் என்று சொல்வதற் கில்லை. பத்திகள் கட்டுரையைப் பார்வைக்கு அழகு செய் கின்றன. படிக்கின்றவருடைய மனத்திற்கும், கண்ணிற்கும் தளர்ச்சி ஏற்படாமல் காக்கின்றன. அதனால் பத்தி பத்தியாகக் கட்டுரையை பிரித்து எழுத வேண்டும்.

எனவே, எழுதும்போது நிறுத்தற் குறிகளை மறந்து விடாமல் இட்டு, பத்திப் பத்தியாக, அழகாக, படிப்பதற்குத் தளர்ச்சி உண்டகாமல் செய்தியாளர்களும், ஆசிரியர்களும் எழுதப் பழகப் பயிற்சி பெறுவது நல்லதல்லவா?

# 30

# அச்சுப்படி திருத்துதலும் அவற்றுக்கான குறியீடுகளும்

ஒரு பத்திரிகையிலுள்ள பணிகளில் அச்சுப்படி Proof Reading திருத்துதல், முக்கியமான தலையாயப் பணியாகும். ஒரு பத்திரிகையில் அச்சுப் பிழைகள் வராமலிருந்தால்தான் அதைத் தரமுள்ள பத்திரிகை என்று மக்கள் மதிப்பார்கள்.

அச்சுப் பிழைகள் மலிந்து காணப்படுமானால், அவை வாசகர்களிடையே மிகப் பெரியக் குழப்பத்தையும், அனாவசிய மான வம்படி வழக்குகளையும், அதனால் பத்திரிகை விற்பனை யும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு, மக்களிடம் அனர்த்தங் களையும் உருவாக்கிவிடும்.

எடுத்துக்காட்டாக :- இந்தச் சம்பவத்தை பிழைதிருத்து வோரும், பத்திரிகை உரிமையாளரும் அதன் ஆசிரியரும் மனத்தில் நிறுத்துவது நல்லது.

ஓர் ஆளும் கட்சித் தலைவர், ஏறிவந்த ரயில் தாம்பரம் ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்தபோது, ஒரு சிறுவன் தனது தலையில் எண்ணெயில்லாமல், பரட்டை தலையுடன், அழுக்கு அடை அடையாகப் படிந்திருந்த கிழிந்த சட்டையுடன் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான்.

இரயிலில் வந்த அந்தத் தலைவர் அவன்மீது இரக்கப் பட்டு, அவனுடைய தோற்றத்தைக் கண்டு அவனை அழைத்து,

இரண்டு இட்லியுடன் வடை ஒன்றையும் வைத்துக் கொடுக்குமாறு நடைமேடை பலகாரம் விற்பவரிடம் கூறிப் பணமும் கொடுத்தார். அந்தச் சிறுவன் படிக்க வேண்டிய பருவத்தில் இப்படிப் பிச்சை எடுத்துப் பிழைக்கின்றானே என்று அவர் மனம் வருந்தினார்.

இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பத்திரிகைச் செய்தியாளர், அந்த நிகழ்ச்சியை அப்படியே எழுதி, அன்றைய நாளேடு ஒன்றுக்குச் செய்தியாக அனுப்பினார். அவர் ஒரு பிரபலமான ஆளும் கட்சித் தலைவர் என்பதால், அவருடைய கருணை உள்ளத்தைப் பாராட்டி இரக்க உணர்வோடு, "ஆளும் கட்சித் தலைவர் பிச்சை எடுக்கும் சிறுவனின் பரிதாப நிலையைக் கண்டு கதிரவனைக் கண்ட கமலம் போல மனம் கூம்பினார்" என்று செய்தி அனுப்பினார்.

அந்தச் செய்தி மறுநாள் காலைப் பதிப்பு நாளேட்டில் 'கூ'ம்பினார் என்ற எழுத்திருந்த இடத்தில், 'கூ' வன்னாவுக்குப் பதிலாக, 'ஊ'வன்னா வைப் போட்டு வந்து விட்டது. இந்தச் செய்திப் பிரச்னை பத்திரிகைக்குக் கெட்ட பெயரை உருவாக்கியதோடு நில்லாமல், அந்த அச்சுப்படியைப் பிழை திருத்தம் செய்வோரை வேலையை விட்டும் நீக்கி விட்டது.

இதை ஏன்? இங்கே சுட்டிக் காட்டுகிறோம் என்றால், ஒரு பத்திரிகையில் இப்படிப்பட்ட பிழைகள் வருமானால், அதனால் பத்திரிகைக்கு மக்களிடம் கெட்ட பெயர் உண்டானதோடு நில்லாமல், கட்சி அணிகள் தகராறுகளும் உருவாகின்றது. இதனால் செய்தியாளருக்கும் கெட்ட பெயர், கட்சியிலும் குழப்பம், பிழைத் திருத்துவோரும் பணி நீக்கம் செய்யப்பட்ட நிலைகள் ஏற்பட்டு விட்டன.

எனவே, கூடுமானவரைப் பிழைகள் மலியாமல் பத்திரிகை வெளிவர வேண்டும் என்ற அச்சமும், பிழை திருத்தும் பிரிவுக்கு உண்டாகி விட்டது. அதனால்தான் பிழை திருத்துவோர் மொழி அறிவு உள்ளவராக இருக்க வேண்டும் என்ற நிலை அவசியமாகின்றது.

அச்சுப்படி திருத்துவோர் எழுத்துப் பிழையைப் பார்ப்பதோடு நில்லாமல், செய்தியின் தலைப்பு, கொடுக்கப் பட்ட விவரங்களில் முரண்பாடுகள், எங்காவது சொற்கள், எழுத்துக்கள் மாறி இருக்கின்றனவா? மூலத்திலும், ஃப்ரூப் பிலும் வாசகங்கள் சரியாக உள்ளதா? அர்த்தம் அனர்த்தமாக மாறியுள்ளதா? புள்ளி விவரங்களைச் சரியாக அச்சுக் கோர்க்கப் பட்டிருக்கின்றதா என்பதை எல்லாம் எச்சரிக்கையோடு கவனிக்க வேண்டும். அது அவர்களது உயிரினும் மேலான கடமையுமாகும்.

அச்சுப்படி திருத்தும்போது, ஒருவர் மூலத்தை உரக்கப் படிக்க வேண்டும். மற்றவர் அதைத் திருத்த வேண்டும். திருத்தும்போது படியின் ஓரங்களில் Margin உள்ள இடத்தில் உரிய திருத்தக் குறிகளைச் சந்தேகத்திற்கு இடமில்லாமல் போட்டுத் திருத்த வேண்டும்.

என்ன அச்சுப் பிழை வந்துள்ளது என்பதைப் பிழைத் திருத்துவோர்க்குரிய குறிகளிட்டும், கோடுகளிட்டும் பக்க ஓரங்களில் சுட்டிக் காட்ட வேண்டும். இது செய்தித் தாள் திருத்தும் வழக்கமாகும்.

ஒரு வாக்கிய வரியில் செய்கின்ற திருத்தம் பின்னால் வரும் வரிகளின் அமைப்புக்குப் பாதிப்பு ஏற்படாமல் திருத்த வேண்டும். எந்த வாக்கியத்தில் தவறோ அந்த வரிக்கு நேராகப் பிழையைக் குறித்துச் சரியானதை எழுத் வேண்டும். பிழையின் மேலேயே திருத்தம் செய்யக் கூடாது. அது பிழைத் திருத்தும் முறையும் அன்று.

பொதுவாக, ஒரு வரியின் இடது பாதியில் பிழை இருந்தால், திருத்தத்தை இடது பக்க ஓரத்திலும், வலது பாதியில் தவறிருந்தால் திருத்தத்தை வலது பக்க ஓரத்திலும் குறிக்க வேண்டும். இதுதான் பிழை திருத்தும் வழக்கமான முறை.

பிழைகளைக் கோடிட்டுக் காட்டும் போது, மேலும் கீழுமுள்ள வரிகள் மேல் கோட்டை இழுத்துச் சென்று காட்டக் கூடாது. இரண்டு வரிகளுக்கும் நடுவே கோடிழுத்துச் சென்று ஓரத்தில் எது தவறோ அதைக் குறிப்பிட வேண்டும்.

ஒன்றுக்கும் மேற்பட்ட பிழைகள் ஒரு வரியில் ஏற்பட்டிருந்தால், அவற்றை மேலாகவோ, கீழாகவோ, வலமாகவோ, இடமாகாவோ, ஒன்றோடொன்று மோதாமல், சுத்தமாகவும், புரியும்படியும், கோடு போட்டுச் சுட்டிக் காட்டினால்தான், அச்சுக் கோர்ப்பாளர்களுக்குக் குழப்பம் ஏற்படாது. அதனால் அடுத்தடுத்த தவறுகள் அதே வாக்கியத்தில் ஏற்படாது என்பதைப் பிழைத் திருத்துவோர் உணருதல் நலம்.

ஒரு சொல்லில் இரண்டு மூன்று தவறுகள் நேர்ந்திருந்தால், அந்தச் சொல்லை நீக்கிவிட்டு, அதே சொல்லைச் சுத்தமாக மறு ஓரத்தில் எழுதிக் காட்ட வேண்டும்.

எண்கள் தவறு இருந்தால், அந்த எண்களை நீக்கிவிட்டு அதே எண்ணை மீண்டும் சரியாக ஓரத்தில் எழுதுவது நல்லது; மீண்டும் பழைய பிழை வாராது.

எழுத்துப் பிழைகளைத் திருத்துவதுதோடு இராமல், எந்த உருவ அளவு அச்சு எழுத்து அது, என்ற பாயிண்ட் Point வடிவத்தையும் சுட்டிக் காட்டும் அனுபவம் பெற்றிருப்பதுதான் பிழை திருத்துவோரின் திறமை. பிழைகளைத் திருத்துவதற் கென்று இருக்கும் குறியீடுகளைப் பிழை திருத்துவோர் சரியாக, மனப்பாடம் செய்திருக்க வேண்டும். அந்தக் குறியீடுகளை அச்சுக்கோர்ப்பவரும் நன்றாக உணர்ந்திருப்பார். அதனால் பிழை திருத்தும் பணி சிறப்பாக அமையும்.

அச்சுக் கோர்ப்பவர் எடுக்கும் பக்கம் காட்டப்படாத அச்சுப் படி, Galley Proof சரியாகத் தெளிவாக இருக்கின்றதா, மை சரியாகப் படிந்திருக்கின்றதா? எழுத்துக்கள் சுத்தமாகத் தெரிகின்றதா என்பதையெல்லாம் பிழைத்திருத்துவோர் அவசியம் பார்வையிடல் வேண்டும். காலி புரூஃப் சரியில்லை என்றால் மறுபடியும் ஒரு படி கேட்டுப் பெறுவது திருத்தும் பணிக்கு நல்லது.

அச்சுப் பிழை திருத்தக் குறியீடு அடையாளங்கள் பொதுவானவை. பத்திப் பிரித்தல், சொற்களைப் பிரித்தல், இரு

சொற்களை ஒன்று சேர்த்தல், இடைவெளி தரவேண்டியவை (Space) தொடர்பானவை (Punctuation) இணைக்க வேண்டியவை (Alignment) எழுத்தளவு (Type) போன்றவற்றில் எல்லாம் மாற்றம் செய்வதானால், அதற்கான குறியீடுகளைக் கவனமாக Prof-ல் குறிப்பிடல் வேண்டும்.

அச்சுப் பிழை திருத்தும் குறியீடுகளின் அடையாளங்கள் (Symbols) கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அடையாளக் குறிகளைத்தான் அச்சுக் கோர்ப்பு பணிகளில் ஆங்கிலம் உட்பட எல்லா இந்திய மொழிகளிலும் அச்சகத்தார், நூல் பதிப்பாளர் பத்திரிகையாளர் அனைவரும் பயன்படுத்துகிறார்கள்.

எனவே இந்த அடையாளக் குறிகளை நன்றாக மனதில் பதிய வைத்துக் கொள்வது பிழைத் திருத்துவோர்க்கு மட்டுமன்று, அச்சுத்தொழில் சம்பந்தப்பட்டவற்றுக்கெல்லாம் தேவையானதுமாகும்.

# அச்சுப் பிழைதிருத்தக் குறியீடுகள்

| | | | |
|---|---|---|---|
|  | தொடர்ச்சியாக வரச் செய் |  | இரட்டை மேற்கோள் குறி போடு |
|  | திருப்பிப் போடு | ⊖ | இணைப்புக் குறியைச் சேர் |
|  | இடநிரப்பியை அழுத்து | [or] | இடது அல்லது வலப்புறம் நகர்த்து |
| X | மொக்கை எழுத்தை மாற்று | ? | ஆசிரியரின் விளக்கம் தேவை |
|  | நீக்கி விடு | □ | ஓர் 'எம்' இடநிரப்பி போடு |
| ∧ | விட்டுப் போனதைச் சேர் |  | ஓர் 'எம்' கோட்டைப் போடு |
| # | இடம் விடு |  | இரண்டு 'எம்' கோட்டைப் போடு |
| ✓ | இடைவெளியை ஒன்று போல் செய் | ¶ | புதிய பத்தி பிரி |
| ‿ | சிறிய இடநிரப்பியைப் போடு | no ¶ | பத்தி வேண்டியதில்லை |
|  | சொற்களை இணை | wf | தவறான எழுத்து |
|  | இறங்கியிருப்பதைத் தூக்கு | stet | அப்படியே இருக்கட்டும் |
|  | தூக்கியிருப்பதை இறக்கு | trs. | மாற்றி அமை |
|  | வரியை நேர் செய் | caps. | பெரிய தலைப்பெழுத்தைப் போடு |
| ⊙ | புள்ளியைப் போடு | s.c. | சிறிய தலைப்பெழுத்தைப போடு |
|  | காற்புள்ளியைப் போடு | l.c. | கீழ் வகுப்பு எழுத்தைப் போடு |
|  | அரைப்புள்ளியைப் போடு | ital | சாய்வெழுத்தைப் போடு |
|  | முக்காற் புள்ளியைப போடு | rom. | ரோமன் எழுத்தைப் போடு |
|  | ஒற்றை மேற்கோள் குறி போடு | C.O. | புரட்டிப் போடு |

# 31

## பத்திரிகைகள் விற்பனைகளைப் பெருக்குகின்ற

# தனிச் சிறப்புக் கட்டுரைகளின் பயிற்சி வகைகள்

## "Feature Articles"

எழுதப் பழுகுதல் நலம்

# 32

## கட்டுரைகள் எழுதும்போது கவனிக்கப்பட வேண்டியவை :-

1. கட்டுரை எழுதத் தலைப்பைத் தேர்வு செய்தல்

2. எடுத்துக் கொண்ட பொருளுக்குரிய ஆதார நூற்களைச் சேகரித்தல்

3. அந்த நூற்களைப் படித்துக் குறிப்புகள் திரட்டுதல்

4. பொருளை நன்கு சிந்தித்துக் கருத்துக்களைத் தொகுத்தல்

5. தொகுத்தக் கருத்துக்களை கட்டுரையில் அமைய இடம் ஒழுங்குப் படுத்துதல்

6. தேர்ந்தக் குறிப்புகளில் சான்றோர் மேற்கோள் களை இடம் பெறச் செய்தல்

7. கட்டுரை வரையத் தொடங்குதல்

8. கட்டுரை எழுதி முடித்தப் பிறகு, அதனை மறுபடியும் படித்துப் பார்த்தல்.

# 33

# பத்திரிகையாளர்களுக்கு வழிகாட்டி கார்ல் மார்க்ஸ்

## (அஞ்சா நெஞ்சக் கட்டுரை)

*(ஜெர்மன் நாட்டில் பிறந்தவர் கார்ல் மார்க்ஸ். அவர் ஜெர்மன், ஃபிரெஞ்சு, பெல்ஜியம், இரஷ்சிய நாடுகளில் நடந்த எதேச்சாதிகார ஆட்சிக் கொடுங்கோன்மைகளை எதிர்த்து, அஞ்சாநெஞ்சுடன் பத்திரிகைகளை நடத்தியவர். பத்திரிகை சுதந்தரத்திற்காக மார்க்ஸ் அரும்பாடுபட்டவர். இன்றைய பத்திரிகையாளர்களுக்கு அந்த மேதையினுடைய வைர நெஞ்சுரம் இருக்க வேண்டும் என்பதற்காக, இந்த அஞ்சா நெஞ்சக் கட்டுரை வரலாற்றை இங்கே வெளியிட்டுள்ளோம். பயன்பெற இது உதவும்.)*

- நன்றி : 'தமிழ்த் தென்றல்'
அக்டோபர், 2004.

ஆசிரியர் என்ற சொல்லை, ஆசு என்றும் இரியர் என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். மனதிலே உள்ள ஆசுகளை, குற்றங்களை, இரியர் அதாவது நீக்குபவராதலால் அவரை ஆசிரியர் என்று அழைக்கின்றோம்.

அந்த ஆசிரியர்களிலே இரண்டு வகைகள் உண்டு. ஒன்று ஏட்டைக் கற்பிக்கும் பள்ளி ஆசிரியர். மற்றொன்று நாட்டைக் காட்டி நல்லதை நாட்டும் பத்திரிகை ஆசிரியர்.

ஜெர்மன் நாட்டின் பான் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகச் சேர்ந்து பணியாற்ற விரும்பிய கார்ல் மார்க்சுக்கு அப்போது அங்கே நடைபெற்றக் கொடுங்கோல் ஆட்சியில் தனக்கு ஆசிரியர் பணி கிடைக்காது என்று எண்ணி வேறு வேலை ஏதாவது தேடலாம் என்று அலைந்தார்.

அந்த அலைச்சலின் முடிவுதான் பத்திரிகை ஒன்றைத் துவக்கலாம் என்று திட்டமிட்டு, 1842-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், 'ரைன்லாந்து கெசட்' என்ற பத்திரிகையிலே பல கட்டுரைகளை எழுதி வந்தார். சில மாதங்களுக்குப் பிறகு அதே பத்திரிகைக்கு ஆசிரியரானார்.

மார்க்ஸ் தான் எழுதும் கட்டுரைகள் ஒவ்வொன்றையும், குறிப்பிட்ட அந்த சம்பவங்களை நேரில் போய் பார்த்து விட்டே வந்து, எழுதி வந்தார். அவர் எழுதும் எல்லாக் கருத்துக்களும் அவரது பார்வைக்குப் பிறகே அச்சேறின.

ஜெர்மன் கொடுங்கோல் அரசு அதிகாரிகள், செல்வச் சீமான்கள், அப்போதைய அரசியல்வாதிகள் பலரும், மார்க்ஸ் எழுத்துக்கள் ஒவ்வொன்றையும் ஊன்றிப் படிக்கும் சூழ்நிலை இருந்ததால், பத்திரிகைச் செல்வாக்கு அவர்கள் இடையே அதிகமாயின. அதனால் அதன் விற்பனையும் பெருகின.

'ஆட்சிக்காகவே மக்கள் இருக்கிறார்கள் என்ற ஆட்சிப் போக்கை மாற்றி, மக்களுக்காகவே ஆட்சி இருக்கிறது என்ற கருத்தை நிலைநாட்டி மார்க்ஸ் பத்திரிகையை நடத்தி வந்தார்'.

இதனால் அரசு கண்காணிப்பு அதிகாரிகளின் ஒற்றாடல் வேலைகள் நாளுக்கு நாள் அதிகரித்தன. பத்திரிகையைக் கண்காணிப்பு செய்ய அதிகாரி ஒருவரை அந்த அரசு நிய மித்தது. அவருடைய மேலாண்மை இல்லாமல் பத்திரிகையை வெளியிடக் கூடாது என்று உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

இரஷ்யாவில் நடைபெறும் ஏதேச்சாதிக்கார ஆட்சி முறைய மார்க்ஸ் கண்டனம் செய்து பத்திரிகையை வெளி யிட்டார். அப்போது ஜெர்மன் அரசுக்கும் இரஷிய அரசுக்கும் நட்புக் கூட்டணி இருந்ததால், இரஷியாவைக் கண்டித்து எழுதக் கூடாது என்று ஜெர்மன் அரசு ஆணையிட்டது.

அரசு நிர்பந்தங்களுக்கு உட்பட்டுத்தான் பத்திரிகை வெளிவர வேண்டும் என்று ஜெர்மன் அரசு பத்திரிகைச்

சுதந்திரத்தைப் பறித்தது. மார்க்ஸ் இந்த நிபந்தனையைத் தூக்கி எறிந்தார். ஆசிரியர் பதவியிலே இருந்து விலகி விட்டார்.

பத்திரிகை பங்குதாரர்கள் மார்க்ஸை சந்தித்து "என்ன காரணத்தால் ஆசிரியர் பதவியை விட்டு விலகினீர்கள்?" என்று அவரிடம் நேரிலே கேட்டபோது.

"மக்கள் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு சட்ட சபைக்குள் செல்பவர்களின் கடமை என்ன? என்பதை விளக்கி எழுதினேன்" என்றார்.

ஜெர்மன் அரசின் சுயேச்சதிகார அக்ரமத்தை, அதன் சுய ருபத்தை மக்களுக்குப் புரியுமாறு விளக்கினேன். ஒரு பத்திரிகை யின் நியாயமான கடமை எதுவோ அதைத்தான் எனது பத்திரிகை யும் செய்தது.

நான் அவ்வாறு எழுதினேன் என்பதற்காக, ஓர் அரசு பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்க, அதன் குரல்வளையை தனது அதிகாரத்தால் நெறிக்கும் போது என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அத்தகைய ஒரு பத்திரிகை ஆசிரியனாக இருப்பதை விட சும்மா இருப்பதே சுகம்" என்று கூறினார் மார்க்ஸ் அவர்களிடம்.

## பத்திரிகை பணம் பறிக்கும் கருவியா?

"பத்திரிகையைப் பணம் சம்பாதிக்கும் ஒரு கருவியாக, வேறொரு வியாபாரத்தை விரிவு படுத்திக் கொள்வதற்கான ஒரு துணையாகப் பயன்படுத்தக் கூடாது"

"எந்த ஒரு பத்திரிகையும் தனது இலட்சியத்தைக் கைவிடக்கூடாது. வியாபாரத்தில் இறங்கி விடுகிற எந்தப் பத்திரிகையும் சுதந்திரமாக இருக்க முடியாது"

"பத்திரிகை ஆசிரியன் பணம் சம்பாதிக்க வேண்டியது தான். எதற்காக சம்பாதிக்க வேண்டும்? உயிர் வாழ்வதற்காக சம்பாதிக்கலாம். தொடர்ந்து எழுதுவதற்காக பத்திரிகை இருக்க வேண்டுமே, அதற்காகவும் பணம் சம்பாதிக்கலாம். ஆனால், பணம் கொள்ளை அடிக்கவும், சுயநல வாழ்க்கையை விருத்தி

செய்து கொள்வதற்காகவும் பத்திரிகையை ஒரு கருவியாகப் பயன்படுத்தக் கடாது''

''எவன் ஒருவன் பணம் கொள்ளை அடிக்கப் பத்திரிகையைப் பயன்படுத்துகிறானோ, அவன் தண்டிக்கப்பட வேண்டியவன். ஏனென்றால், அவன் வணிக நோக்கங்களுக்கு அடிமையாகி விடுகிறான்'' என்ற பத்திரிகை இலட்சியங்களைக் கொண்டவர் மார்க்ஸ். அதனால்தான் எனது ஆசிரியர் பதவியை விட்டு விலகினேன்'' என்றார். அவர் ஆசிரியர் பதவியை விட்டு விலகியதும் விற்பனைக் குன்றியது. பிறகு பத்திரிகை நிறுத்தப்பட்டு விட்டது.

நிறுத்தப்பட்ட பத்திரிகையை பற்றி அவர் ஒரு மேடைப் பேச்சில் மக்களுக்கு விளக்கம் தந்தார். அந்தப் பேச்சு இது :

''ஒரு பத்திரிகை நின்று விட்டது என்றால் என்ன பொருள்? சுயமாகச் சிந்திப்பவர்களுக்கும், மக்களுக்காகப் போராடுகிறவர் களுக்கும் இனி ஜெர்மனியில் இடம் கிடையாது என்பது தானே?''

''மக்களுக்கு அவர்களுடைய நிலைமைகளை எடுத்துக் கூற வேண்டும் என்றால், மக்களோடு பத்திரிகை ஏராளமாகப் பேச வேண்டாமா? அவ்வாறு பேசிட உரிமை வேண்டாமா?''

''அந்த உரிமை இல்லையென்றால் மக்களுக்காகப் போராடுகிறோம் என்று கூறிக் கொள்வதில் என்ன பயன்?''

''ஓர் அரசின் தயவில் இருந்து கொண்டு மக்களுக்காக உழைக்கிறோம் என்பதெல்லாம் வெறும் பாசாங்கு! ஏமாற்று வித்தை!'' என்றெல்லாம் சற்று விரிவாகவே முழக்கமிட்டார் மார்க்ஸ்.

வேறொரு மேடையிலே பத்திரிகைச் சுதந்திரம் பற்றி மார்க்ஸ் பேசும்போது :

''பத்திரிகைக்கு சுதந்திரம் வழங்குகிறோம் என்று ஓர் அரசு கூறிக்கொண்டு, அதனை வளரவிடாமல், அரசைத் தட்டிக் கேட்க உரிமை வழங்காமல், கீழறுப்பான் வேலைகளைச் செய்வது மகா கேவலம்; வெளி வேஷம்; முட்டாள் தனம்!

"மிருக பலத்தைக் கையாளல், பத்திரிகையைத் தலை வணங்க வைத்தல், பல் இளிக்க வைத்தல், முதுகை வளைந்து கொடுக்கச் செய்தல், குதர்க்கமாகப் பேச வைத்தல் போன்றவற்றுக்காக ஒரு பத்திரிகை அஞ்சக் கூடாது"

"இவற்றையெல்லாம் பார்த்து நான் சலித்து விட்டேன். ஜெர்மன் அரசு என்னை ஆசிரியர் பொறுப்பிலே இருந்து விடுதலை செய்து விட்டது. இனி நான் ஜெர்மனியிலே செய்யக் கூடியது ஒன்றுமில்லை. அப்படி ஒருவன் ஜெர்மனியிலே இருக்க வேண்டுமானால், அவன் தனக்குத் தானே பொய்யனாக நடந்து கொள்ள வேண்டும்" என்று கர்ஜித்தார்.

இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு தான் மார்க்ஸ், கீழ் மட்டத்தில் நலிந்து கிடக்கும் ஏழை மக்கள், தொழிலாளர்கள், பொருளாதாரத்தின் மீதுதான் அரசியல் வாழ்வு கணிக்கப்படுகிறது என்பதைத் திட்டவட்டமாக உணர்ந்தார்.

எந்த ஒரு தத்துவமும் மக்களுடைய தொடர்பு பெறாவிட்டால், அதனால் நாட்டுக்கு எந்தவித பயனுமில்லை என்பதைப் புரிந்து கொண்டார்.

இதற்குப் பிறகுதான் ஏழை மக்கள் பொருளாதாரத்தைச் சீரழிப்பது எது? என்று மார்க்ஸ் ஆராய்ந்தார்.

இரும்பு பிடித்தவன் கையும், சொரி பிடித்தவன் கையும் சும்மா இராது என்பதற்கேற்ப, மார்க்ஸ் தனது நண்பர் ஆர்னால்டு ருஜ் என்பவரின் உதவியோடு பாரீஸ் நகரிலே இருந்து 'ஃபிரெஞ்சு மலர்' என்ற பத்திரிகையைத் துவக்கினார்.

'ஃபிரெஞ்சு மலர்' 1844-ஆம் ஆண்டில் வெளி வந்தது. அதில் ஜெர்மன் கொடுங்கோல் ஆட்சி பற்றியக் கட்டுரை ஒன்றை மார்க்ஸ் எழுதினார் என்பதற்காக, அந்தப் பத்திரிகையை ஜெர்மன் நாட்டுக்குள்ளேயே நுழைய விடாமல் தடை செய்துவிட்டது ஜெர்மன் அரசு.

அதற்குப் பிறகு பாரீஸ் நகரிலே இருந்து வெளிவந்த கொண்டிருந்த "முன்னேற்றம்' என்ற பத்திரிகையிலே மார்க்ஸ் பல கட்டுரைகளை எழுதினார். அவை ஒவ்வொன்றும், அரசர்ககள் கடவுளின் பிரதிநிதிகள் என்ற பாமரர்களின்

நம்பிக்கையைத் தகர்த்தெறியும் அணுகுண்டுகளாக இருந்தன. ஜெர்மன் மன்னன் நான்காம் ப்ரடெரிக் வில்லியம் என்பவனைப் பிற்போக்குவாதி என்று அந்தக் கட்டுரைகள் விமர்சனம் செய்தன.

அரசு அதிகார அம்புகள் மார்க்ஸ் மீது பாய்ந்தன. பாரீஸ் நகரத்தை விட்டே ஓட வேண்டும் என்று ஃபிரெஞ்சு அரசு உத்தரவிட்டது. உடனே மார்க்ஸ் பெல்ஜியம் நாட்டிலுள்ள ப்ரசெல்ஸ் நகருக்கு ஓடினார்.

பத்திரிகை ஆசிரியர் சுதந்திரத்தைக் காக்கவும், மக்கள் உரிமைகளை அரசுக்கு எடுத்துக் கூறவும், மாவீரன் கார்ல் மார்க்ஸ் சொல்லொணா வேதனைகளை அனுபவித்து வாழ்ந்து காட்டிய மேதை ஆவார்.

அவர் பத்திரிகைத் துறைக்கு ஒரு குரு, முன்னோடி, வழிகாட்டியாக உலகுக்குத் திகழ்ந்தவராவார்.

*புலவர் என்.வி. கலைமணி*

# 34

# பாரதியார் தமிழ்ப் பற்று பத்திரிகையாளரிடம் மணக்க வேண்டும்

## (தமிழ் மொழிப் பற்றுக் கட்டுரை)

மறைமலை அடிகளாரின் கல்லூரி மாணவர்களிலே ஒருவர் நாவலர் சோமசுந்தர பாரதியார், எம்.ஏ.பி.எல். அவர்கள். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் தலைவராய் இலங்கியவர்.

இவர்தம் ஆருயிர்த் தோழர் தேசீய கவி சுப்பிரமணிய பாரதியார். அடிகளின் அருமை பெருமைகளையும், தமிழ்த் தொண்டினையும் அறிந்த பாவலர் பெருமான் பாரதியார், தம் பாடல்கட்கு மறைமலை அடிகளாரிடம் மதிப்புரை பெற ஆவல் கொண்டார்.

அவ்வாவலை நிறைவேற்றிக் கொள்ள நாவலர் சோம சுந்தரப் பாரதியாரைத் துணை கொண்டார். அடிகள் அப்போது தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் விழாவுக்குத் தலைமை தாங்கி இருந்தார்.

இடை நேரத்தில் இருவரும் அடிகளைக் கண்டனர். நாவலர் பாவலரை அடிகட்கு அறிமுகப்படுத்தினார். அவர் விருப்பத்தையும் அறிவித்தார். மூவரும் சிறிது நேரம் அளவளாவினார்கள்.

அடிகள் அன்று பாவலரின் பாடல்களுக்கு மதிப்புரை வழங்கும் வாய்ப்பைப் பெறவில்லை. பிறகும்கூட அடிகட்கு அவ்வாய்ப்பு நேரவில்லை.

பாவலர் எழுதியிருந்த பாடல்களை நாவலர் அடிகட்கு சுட்டிக் காட்டியுள்ள பாடல்கள் இவை :

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்",
"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"
"பல்விதமாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு"
"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே"
"பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே"
"சாதி மதங்களையும் பாரோம் உயர்சன்மம்
இத்தேசத்தி லெய்தின ராயின்
"வேதிய ராயினும் ஒன்றே அன்றி வேறு
குலத்தவராயினும் ஒன்றே"
"நன்றிது தேர்ந்திடல் வேண்டும் இந்த
ஞானம் வந்தபின் நமக்கெது வேண்டும்"
"எல்லாரும் ஓர்குலம், எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் ஓர்நிறை"
"ஏழையென்றும் அடிமை என்றும் எவனுமில்லை சாதியில்
இழிவு கொண்ட மாந்தர் என்போர் இந்தியாவிலில்லையே"

எனும் பாடல்களின் வரிகளால் பாவலர் பாடல் அமைந்திருந்ததை அடிகள் கேட்டார்.

"நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட
மானிடரை நினைந்து விட்டால்"

தமிழையும், தமிழ் இலக்கியங்களையும் இகழ்வாரை நோக்கிப் பாரதியார் தனது பாடலை அடிகட்குப் பாடிக் காட்டினார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவதெங்குங் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்தல்
நன்றோ சொல்வீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல்
இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை
வெறும் புகழ்ச்சி யில்லை
ஊமையராய்ச் செவிடர்களாய் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒருசொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கஞ் செழிக்கச் செய்வீர்"

"தமிழ் எதற்கு? தமிழில் அறிவு நூலகளை ஆக்க முடியாது. அவற்றிற்குரிய தமிழ் சொற்களில்லை. தமிழால் அச்சொற்களைக் கூறவும் முடியாது. விரைவில் தமிழ் சாகும்; சாகவும் வேண்டும்" என்று வெளியில் சொல்ல வெட்கப்பட்டு உள்ளத்தில் தமிழை அழிக்க வகை தேடித் திரியும் தீயோரை என்னென்பேன்! என்று அடிகளாரிடம் பேசி, தமிழுணர்ச்சி வீறு கொண்டார் பாவலர்.

தமிழ்த் தாய் தன் மக்களை நோக்கிப் புலம்புவதாகப் பாடினேன். இது 'தமிழ்த் தாய் புலம்பல்' என்ற பாடலைப் பாரதியார் படித்துக் காட்டியது இது.

"இன்றொரு சொல்லினைக் கேட்டேன் - இனி
ஏது செய்வேன் எனதாருயிர் மக்காள்
கொன்றிடல் போலொரு வார்த்தை - இங்குக்
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்

"'புத்தம்'புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில்லை
சொல்லவுங் கூடுவதில்லை அதைச்
சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் -
அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்"
என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்த வசை எனக்கெய்திட லாமோ
சென்றிடுவீர் எட்டுத் திக்குங் - கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்!"

- என்ற பாடலைச் சுப்பிரமணிய பாரதியார் பாடிக் காட்டியதைக் கண்டு - நாவலரும், அடிகளும் மெய் மறந்தார்கள். இந்தத் தமிழ் உணர்ச்சி என்று தமிழிரிடம் எழுச்சி பெறுமோ! என்று, மறைமலை அடிகள் கவிஞர் பாரதியாரை உணர்ச்சி உந்தப் பாராட்டினார்!

# 35

# பத்திரிகையாளர்களுக்கு 'திரு.வி.க. தமிழ்நடை அனுபவங்கள்'

பாரதியாருக்கு அடுத்தப்படியாகப் பத்திரிகை உலகில் புரட்சி செய்து, தீந்தமிழுடன் தேசிய உணர்வைக் கலந்து ஊட்டியவர் திரு.வி.க. 'தெய்வமிகமேல், தக்கார் நெறிநில், தேசத்தோடொத்து வாழ்' என்ற வாசகங்களை ஒரு வட்டத்தில் சுற்றி வரைந்து, நடுவே இந்திய நாட்டுப் படமும், சென்னை நகர் அமைந்த இடத்தில் ஒரு விண்மீனும் பொறித்த இலச்சினைச் சின்னத்தைத் தாங்கி, திரு.வி.க.வின் 'தேசப் பக்தன்' 7.12.1917 அன்று தோன்றியது. இரண்டரை ஆண்டுகள் தேசபக்தனின் ஆசிரிய பீடத்திலிருந்து திரு.வி.க. எழுதிய கட்டுரைகள் 'தேசபக்தாமிர்தம்' என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டு, முதல் மலர் 1919-இல் வெளியிடப்பட்டது. அந்த தமிழ்நடை; பத்திரிகையாளருக்கு ஓர் எடுத்துக்காட்டு. இதோ அந்த தமிழ்நடைகள்.

'பண்டைத் தமிழ் மக்கள்' உரை நடையில் எனக்குப் பெரும் பற்றுண்டு. பிறமொழிக் கலப்பின்றித் தமிழ்பேசல் வேண்டும், எழுதல் வேண்டுமென்னும் ஆர்வம் எனக்குண்டு. அப்பற்றும் அவ்வார்வமும் என்னளவில் கட்டுப்பட்டுக் கிடப்பதை நோக்குழி, வீட்டின்பத்தில் வெறுப்பும், தமிழ்

நாட்டில் பலமுறை பிறவி தாங்கித் தொண்டு புரிவதில் விருப்பும் எனக்குள் நிகழ்கின்றன''

'தேசபக்தன் சுதந்திரத்தை விரும்புகிறான்; சுய ஆட்சி கேட்கிறான்; இந்தியாவிற்கும் - இங்கிலாந்திற்கும் சகோதரத் துவத்தை உண்டு பண்ணுகிறான். - 'பக்தன்' மாதவின் அடித் தொண்டன். அவன் பாரத நாட்டில் தோன்றிய ஒவ்வொரு வருக்கும் உரியன்' என்று 7.3.1918 இதழில் எழுதிய தலையங் கத்தில், பாரத நாட்டுக்குப் பத்திரிகையை அவர் காணிக்கை யாக்கினார். தேசபக்தனில் தம் எழுத்துப் பற்றி, 'யான் உருத்திரனானேன். என் எழுதுகோல் பாசுபதமாயிற்று' என்று திரு.வி.க. விமர்சித்தார். பஞ்சாப் படுகொலை, சத்யாக்ரக இயக்கம் ஆகியவை நிகழ்ந்த வேளையில் 'தேச பக்தன்' நிலையம் காளி கட்டமாயிற்றென்றும்' காளி, வீர நடம் உமிழும் சுவாலை எரிமலை போன்று விளங்கியதென்றும் அவர் நெஞ்சம் நிமிர்ந்து கூறினார். தேச பக்தனுக்கென்று ஒரு தனி நடை கொண்டேன். சிறு சிறு வாக்கியங்கள் அமைக்கலா னேன்; என் நடை எங்கெங்கேயோ ஓடும்; திரியும்; அலையும்; பொருளுக்கேற்ற கோலந் தாங்கும்; இடத்துக்கேற்ற நடம் புரியும்'' என்று தம் நடையை அவரே படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

அக்காலத்தில் பெயரளவில் தமிழில் வெளிவந்த போதிலும், தமிழ் உணர்வோ, மொழி வளமோ, நடைத் தெளிவோ குறையாய் வெளியிட்டு, கலங்கலும், கழிவும், கலப்பும் களங்கமும் நிறைந்த தமிழ் நடையில் தாக்கு பிடித்துக் கொண்டிருந்தன பெரும்பான்மையான தமிழ்ப் பத்திரிகைகள்.

அந்நிலையை மாற்றி, தமிழ் ஆர்வத்தை ஊட்டி, தெள்ளு தமிழ் நடையில் மனத்தை அள்ளும் வகையில், பத்திரிகையில் எழுத இயலும் என்பதை நிலை நாட்டியவை, திரு.வி.க.வின் 'தேச பக்த'னும் 'நவசக்தி'யும். 'அந் நாளில் நாட்டு மொழிப் பத்திரிகைகளில் அயல்மொழி நாற்றம் வீசும் ...... தேச பக்தன், பத்திரிகையுலகில் புரட்சி செய்தான். படிப்படியே செய்தான்.... தேசபக்தன் தமிழரை அன்னிய மோகத்தினின்றும் விடுவித்தான் என்று சொல்வது மிகையாகாது' என்று பெருமிதம் கொண்டார் திரு.வி.க.

அதிகாரிகளின் நற்செயல்களைப் போற்ற விரைந்து, மற்றவற்றை மறுக்க முனைந்து அற வழியே பொது வாழ்வை வழி நடத்தத் தொண்டு புரிந்தான். 'தேச பக்தன்'. மக்கள் மனத்தைக் கொள்ளை கொண்ட தலைவர்க்குச் சொல் மலர்களால் அஞ்சலி செய்த அப்பத்திரிகை, திலகர், காந்தியடிகள், பெசண்ட் அம்மையார் முதலியோர் புகழை ஓதி, வழிபாடே நடத்தி வந்தது.

'தலைமையேற்று ஒரு தேசத்தை நடத்துவோர் அந்நிலையில் அவர் தேசமேயாவர்; தேசம் அவரேயாகும். தலைமையாவது: தேசத்தின் உணர்வும் சக்தியும் திரண்டு தேங்குமிடம்' என்று தலைமையை வணங்கும் நெறிக்கு விளக்கம் அளித்தார் திரு.வி.க.

'தேச பக்தன் தோன்றியிராவிடில் வகுப்புவாதம் கிளைத்து ஓங்கியிருக்கும், வகுப்புவாதக் கட்சியின் நச்சுப் பல் தேசபக்தனால் பிடுங்கப்பட்டது. அக்கட்சியின் வேகம் ஒடுங்கியது. அது வறுத்த நெல்லாயிற்று; பல்லிழந்த பாம்பாயிற்று' என்று தேசபக்தனின் தொண்டைத் திரு.வி.க. மதிப்பிட்டார்.

டாக்டர் சுப்ரமணிய ஐயர், சர் பட்டத்தைத் துறந்தபோது, 'மயிலை முனீந்திரர்' என்ற தலைப்பில் *21.6.1918*-ல் திரு.வி.க. எழுதிய ஆசிரியர் கட்டுரையை சுப்ரமணிய ஐயர் பாராட்டினார்.

'நானா எழுதினேன்? தங்கள் வீரத்தில் தோய்ந்த பக்தி அதை எழுதியது. தாங்கள் மூலம்; யான் கருவி' என்று திரு.வி.க. பதிலிறுத்தலில், தன்னடக்கம் மட்டுமல்ல, கொள்கைக்குத் தன்னைக் காணிக்கையாக்கி, பக்தியின் படைக் கலனாகத் தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்ட தகைமை விளங்கியது.

தெய்வ பக்தி, ராஜபக்தி, தேசபக்தி, மூன்றும் அவர் நோக்கில் மேலோங்கியிருந்தது. *16.8.1918*ல் அவர் எழுதிய தலையங்கத்திலும் புலனாகிறது. 'எங்கள் மன்னர் மன்னராகிய ஐந்தாம் ஜார்ஜுக்கு வெற்றி ஓங்கச் செய்து, எங்கள் பந்தத்தை அவர் வாயிலாக ஒழிக்கக் கருணை புரிவாயாக. நாங்கள் விரும்புவது சுதந்திரம்; வெறுப்பது அடிமைத்தனம். சாந்தி, சாந்தி, சாந்தி. அவனின்றி ஓரணுவும் அசையாது' மன்னரை நம்புகிறாரே, மகேசுரன் துணையை நாடுகிறாரே, மக்கள்

சக்தியின் வல்லமையை மறந்து விட்டாரோ, என்று எண்ணத் தோன்றும் அளவுக்கு, அவர் எழுத்தில் பக்தியும், பழமையும் பதிந்திருந்தன.

பழைமையில் அவர் கொண்டிருந்த பக்தி, இன்றைய நாகரிகத்தில் அவருக்கு வெறுப்பை மூட்டியது. தற்கால நாகரிகம் பேயாக நமது தேசத்தைப் பிடித்தாட்டுகிறது. விஷமாக நமது தேசத்தை எரிக்கிறது. பூதமாக நமது தேசத்தை விழுங்குகிறது. தற்கால நாகரிகத்தை வெட்டிச் சாய்க்க வேண்டு வது நமது கடமை என்று 7.1.1919 இதழில் எழுதிய தலை யங்கம், தகைமைசால் நெறி, தர்மவெறியாகவும், பழமையில் கொண்ட நாட்டம், புதுமை அனைத்தும் சுட்டெரிக்கும் காட்டா மாகவும், மரபில் கொண்ட பிடிப்பு, முற்போக்கை எதிர்க்கத் துணியும் பிடிவாதமாகவும், பிற்போக்காகவும், வலுத்து விடுமோ என்ற அச்சத்தை ஊட்டும் அளவுக்குச் செல்கிறது.

பண்டைக் காலத்தில் சூரன், இராவணன் முதலிய ஒரு சில இராட்சதரிருந்தனர். இப்பொழுதோ வீடுகள்தோறும் இராட்சதர்கள் இருக்கின்றார்கள். இராட்சதர் என்போர் யாவர்? என்றும் பிறர்க்குத் தீங்கிழைப்பவர். பிறரை அடக்கியாள வேண்டுமென்று நினைப்பவர்; காம குரோத முதலிய தீக்குணங்கள் நிரம்பப் பெற்றவர் இன்னோர் இராட்சதர் எனப்படுவர். இவரல்லாத பிறரே அந்தணர் என்போர்' என்று 8.11.1918-இல் அவர் தலையங்கத்தில் எழுதியது சன்மார்க்க உபதேசமாக அமைகிறதே ஒழிய, சமுதாய அநீதிகளுக்கு முழு விளக்கம் தருவதாயில்லை என்று குறைபடுவதற்கு இடமுண்டு.

'மஹரிஷிகளே! நவநாத சித்தர்களே! எங்கிருக்கின்றீர்கள்? உலகத்தில் இராட்சத குணம் பெருகுகிறதே. நீங்கள் கருணை செலுத்த வேண்டிய காலமிதுவே' என்று அவர் நெஞ்சுருக வேண்டுகையில், சமுதாய அரக்கர்களை வீழ்த்த ஜன சக்தியை நம்புகிறாரா அல்லது ஞான ரிஷிகளைத் தேடுகிறாரா, அரசியலை அணுகுகிறாரா அல்லது அவதாரங்களை அழைக் கின்றாரா, சம தர்மத்தை நாடுகிறாரா அல்லது சாத்திரங்களில் சரணாகதி அடைகிறாரா என்ற ஐயப்பாடு எழத்தான் செய்கிறது.

இந்தியா மந்திரியாகிய மிஸ்டர் மான்டேகு நம்தேசத்தில் விஜயம் செய்திருக்கின்றார். இங்கிலாந்திலுள்ள தொழிற்கட்சிக்

காரரும் நம் சார்பாக நிற்கின்றனர். இச் செயல் யாவர் செயல்? ஈசன் செயலன்றோ? அவனின்றி ஓரணுவும் அசையாது என்னும் ஆப்த மொழி பொய்யாகுமோ? இப்பொழுது நாம் செய்ய வேண்டிய வேலை, பரோபகாரியாகிய அன்னை பெசண்ட் அம்மையார் தெய்வச் சபையாகிய காங்கிரஸ் அக்கிராசனத்திலிருந்து நமக்கு அனுப்பியுள்ள செய்தியை உற்று நோக்குங்கள்' என்று 28.12.1917-இதழில் எழுதிய தலையங்கத்தில், அரசியல் நிகழ்ச்சிகளும் ஆண்டவனின் திருவிளையாடல்கள் என்று விளக்கம் கூறியதன் மூலம், தெய்வ பக்தி எனும் பீடத்தில் தேச சக்தியைத் தத்தம் செய்து, வீறு கொண்டு எழ வேண்டிய மக்களுக்காக வேதாந்த விலங்குகள் பூட்டி விட்டாரே என்ற வேதனை பிறக்கிறது.

'காந்தி அடிகள் ஆறு வருடக் காவல் பெற்றார் என்னும் செய்தி எமக்கெட்டியபோது, எமது அடியிலிருந்து முடி வரை மின்சாரம் ஊடுருவி பாய்ந்தாலென ஒருவித நடுக்கம் உண்டாயிற்று' என்று 24.3.1922-இல் நவசக்தியில் எழுதுகிறார்.

'இங்கிலாந்தே! உனது அரசு கிறிஸ்து தர்மத்தை அடிப் படையாகக் கொண்டு இயங்குவது. உன் பெயரால் இங்கு எம்மை ஆளும் அதிகார வர்க்கத்தார் கிறிஸ்து போன்ற காந்தி யடிகளை ஓர் உலகச் சட்டத்தால் கட்டி இருக்கிறார். உனக்கு உண்மை வேண்டாமா? அன்பு வேண்டாமா? பொறுமை வேண்டாமா? மனிதர்கள் செய்த சட்ட கண் கொண்டு காந்தியடிகளை நோக்காதே. கிறிஸ்துவக் கண்கொண்டு நோக்கு! உண்மையும் அன்பும் பொறுமையும் புலனாகும். சாந்தி! சாந்தி! சாந்தி!' என்று முடிக்கிறார். அதில் அழுகை இருக்கிறது, அரசியல் இல்லையே; புலம்பல் இருக்கிறது, புரட்சி உணர்வு இல்லையே; வேதனை இருக்கிறது; விமோசனத்துக்கு வழி இல்லையே; வேதாந்தம் இருக்கிறது, வீரம் இல்லையே; பெண்மை இருக்கிறது, ஆண்மை இல்லையே; பொறுமை போதிக்கும்போது பொங்கி எழும் பொது மக்கள் சக்தியைப் போற்றவில்லையே, சாந்தி என்பது சமுதாயத்திற்கு அறை கூவலா? அல்லது ஆறுதலா? என்ற கேள்விகள் எழத்தான் செய்கின்றன.

இக்கேள்விகளுக்குப் பதில், 'தமிழ் பெரியார்கள்' என்ற நூலில் திரு.வி.க.வைப் பற்றி வ.ரா. அவர்கள் தீட்டிய சிறப்பான சொல்லோவியத்தில் ஓரளவு புலனாகிறது.

'ஆண் பெண் தன்மைகளால் வீட்டுக்கும் நாட்டுக்கும் இடையே நசுக்குண்டு கரைந்து உருகுகின்றார் திரு.வி.க.' என்று அவர் எடுத்துக்காட்டி, அறத்துக்கும் அரசியலுக்கும் சன்மார்க்கத்துக்கும் சமதர்மத்துக்கும், பரம்பரை வலுவுக்கும் நவீன தேவைகளுக்கும் இடையே எழும் மோதல்கள் பற்றி ஓயாத சிந்தனையில் மூழ்கிவிட்ட திரு.வி.க. 'காரிய உலகில் சோபை இல்லாது போனார்' என்று காரணம் காட்டுகிறார்.

மோன நிலையில் மூழ்கிய முனிவராகிவிட்ட திரு.வி.க. முழுமையான போராட்ட வீரராக விளங்க இயலவில்லை என்று வரலாற்று உண்மையைக் கூறுவது, அறம், அன்பு, அறிவு, தாய்மொழி, ஆர்வம், தாய்நாட்டுப் பற்று ஆகியவற்றின் உருவகமாய்த் திகழ்ந்த அவர், நாட்டுக்கும் தமிழுக்கும் ஆற்றிய கற்றொண்டுக்குக் களங்கம் விளைவிப்பதாகாது.

திரு.வி.க.வின் தமிழால் தேசியம் வளர்ந்தது; திரு.வி.க. வின் தேசியத்தால் தமிழ் தழைத்தது. ஆனால், திரு.வி.க. வளர்ச்சியின் முழுமையை அடைய இயலாமல் போயிற்று. அது அவருக்கு இழுக்கல்ல; நாட்டுக்கு இழப்பு. சண்டமாருதமாகவில்லையே என்று தென்றலைப் பழித்துப் பயனென்ன? தகிக்கும் கதிரவனாய் இல்லை என்பது தண்மதி யின் தவறல்லவே. அமைதியான குளத்தில் ஆற்றுப் பெருக்கு இல்லையே என்று வருந்தலாமா? தேனின் இனிமை தாகத்தைத் தணிக்கவில்லையே என்று குறை கூறுவது பொருந்துமா? தம் வாழ்வாலும் வாய்மையாலும் தொண்டாலும் தூய்மையாலும் தமிழகத்துக்கு வாழ்வளித்த பெரியார்களில் ஒருவர் திரு.வி.க. தமிழுலகம் அவருக்கு தலை சாய்த்து வணங்குவதால், தலை நிமிர்ந்து நிற்கும் தகுதி பெற்றுத் திகழும்.

(குறிப்பு : இக்கட்டுரை 'தேசியம் வளர்த்த தமிழ்' என்று கா. திரவியம், I.A.S. அவர்கள் எழுதிய நூலிலிருந்து எடுக்கப்பட்டது. நன்றி)

# 36

# இராஜாராம் மோகன்ராய் பத்திரிகைச் சுதந்திரப் போராட்டம்

## (கொள்கைப் போராட்டக் கட்டுரை)

இராஜா ராம் மோகன் ராய் பெண்களுக்கு நீதி வேண்டும் என்று அரும்பாடு பட்ட முதல் இந்திய மேதை.

கணவன் இறந்தால், துணைவன் உடல் எரியும் சிதை நெருப்பிலேயே பெண்கள் துடிதுடிக்க எரிந்துச் சாம்பலாக வேண்டும் என்ற 'சதி' எனும் கொடுமையான மூடப் பழக்க வழக்கத்தை எதிர்த்து இராஜா ராம் மோகன் ராய் போராடினார். (1829-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் இராஜப் பிரதிநிதியாகப் பணியாற்றிய லார்டு வில்லியம் பெண்டிங் உதவியால் 'சதி' திட்டத்தைச் சட்ட விரோதமாக்கி வெற்றி பெற்றார்! சதி திட்டத்தை வீழ்த்திப் பெண்களுக்குரிய நீதியை நிலை நாட்டிய சீர்திருத்த மா வீரராக இராஜராம் மோகன்ராய் திகழ்ந்தார்!)

கணவன் இறந்த பிறகு பெண்கள் மறுமணம் செய்து கொள்ளும் திட்டத்திற்காக அவர் போராடினார்.

பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் பங்கு கொடுக்க வேண்டும் என்று இராஜாராம் போராட்டம் செய்தார்.

பலமனைவிகள் திருமணத்தைச் சட்ட விரோதமாக்கிட ராம்மோகன் ராய் ஆங்கிலேயர் ஆட்சிக்கு அறிவுறித்தினார்.

பெண்களை விலைக்கு விற்கும் மூடப் பழக்க வழக்கத்தை எதிர்த்தும், 'பெண் விடுதலை' என்ற இயக்கப் போராட்டத்தை நடத்தியும், இராஜராம் மோகன்ராய் வெற்றி கண்டார்.

இந்து மதத்திலுள்ள உருவ வணக்க ஆராதனையைச் செய்து வந்த கல்கத்தா பிராமணர்களின் மூடப் பழக்க வழக்கத்தை எதிர்த்துப் போராடினார்.

அதற்காக சமஸ்கிருத மொழியிலிருந்த கோனோப நிடதத்தையும், ஈசோப நிடதத்தையும் வங்காள மொழியிலும், ஆங்கில மொழியிலும் மொழி பெயர்த்து அச்சிட்டு, மக்களுக்கு இலவசமாகக் கொடுத்தார்.

கல்கத்தா தெருக்கள்தோறும் பொது மக்கள் கூட்டத்தைக் கூட்டி, வேதங்களில் உருவ வணக்கம் உண்டா? நிருபிக்கத் தயாரா? என்று பிராமணர்களுக்கு சவால் விட்டுக் கூட்டம் நடத்தினார். 'வேதாந்த சாரம்' என்ற நூலை ஆங்கிலத்தில் அச்சிட்டு இந்து மதத்தின் பெருமைகளை உலகறியச் செய்திடப் போராடினார்.

'இயேசு நாதர் இறைவனல்லர்; நம்மைப் போலவே அவரும் ஒரு மனிதர்; அவர் உபதேசங்கள் உயர்ந்தவை; அவற்றை ஏற்கலாம்; ஆனால், அவரைக் கடவுளாக வழிபடு வது தவறு' என்று கூறி, கிறித்தவர்களை எதிர்த்துப் போராடினார்.

எனவே, இராஜாாராம் மோகன் ராய் வாழ்க்கையே ஒரு போராட்ட வாழ்க்கையாக அமைந்தது. குடும்பப் போராட்டம்; உறவின் முறையாரோடு போராட்டம்; பிராமணர்களோடு போராட்டம், கிறித்தவப் பாதிரிமார்களோடு போராட்டம்; இந்து மதப் புலவர்களோடு கொள்கை ஆய்வுப் போராட்டம்; இறுதி யாக ஆங்கிலேயே ஆட்சியாளர்களை எதிர்த்துப் பத்திரிகைச் சுதந்திரத்திற்காக நடத்தியப் போராட்ட வெற்றி. இவ்வளவு போராட்டங்களையும் அவர் அறிவு ஒன்றை நம்பியே போராடி வெற்றி கண்டார்.

இறுதியாக, இராஜா ராம்மோகன் ராய் நடத்திய பத்திரிகைச் சுதந்திரத்தின் விவரத்தையும் இதோ பாருங்கள்; படியுங்கள்.

## பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் வேண்டும்

இருபது ஆண்டுகள் வரை மோகன் ராய் ஓயாமல் பத்திரிகைகளில் எழுதினார். அவர் எழுதிய நூல்களையும், ஆசிரியராக இருந்த பத்திரிகைகளையும் கணக்கிட்டால் ஒரு தனி மனிதர் செய்த காரியங்களா இவை? என்ற மலைப்பு உண்டாகும்.

வங்காள மொழியில் அவர் ‘ஒருவனே தேவன்’ கொள்கைக்கான பிரார்த்தனைப் பாடல்களை இயற்றினார். அவருடைய உரை நடை மிகவும் எளிமையானது. ஆனால், வலிமை மிக்கது. நவீன வங்காள உரைநடைக்கு அவரே வழிகாட்டி; அடிமைப்பட்டுக் கிடந்த இந்நாட்டில் தேசிய உணர்ச்சி ஊட்டி பத்திரிகைகளைத் தோற்றுவித்த முதல்வர் அவரே. “இந்திய தேசியப் பத்திரிகைகளின் தந்தை” என்றே அவர் இன்றும் போற்றப்படுகிறார்.

முதல் பார்ஸீ வாரப் பத்திரிகையான ‘மிராத்-உல்-அக்பார்’ (அறிவுக் கண்ணாடி) அவரால் தொடங்கப்பட்டது. அதில் அரசியல் செய்திகளோடு விஞ்ஞானம், இலக்கியம், வரலாறு பற்றியக் கட்டுரைகளும் வெளி வந்தன.

கல்வித் துறை பற்றிய அவர் கருத்துக்களையும் அப்பத்திரிகை ஏந்தி வந்தது. அந்தப் பார்ஸீ பத்திரிகைக்கு முன்னால் அவர் வங்காளியில் ‘சம்வாத கௌமுதி’ என்று வாரப் பத்திரிகையை நடத்தினார்.

மக்களுடைய மனோ பாவத்தை வெளியிடுவதும், பிரதிபலிப்பதும், உருவாக்குவதும் பத்திரிகைகளின் பொறுப்பு. இப்பணியை மோகனர் செவ்வையாகச் செய்து வந்தார். அப்போது, இது அடிமை நாடுதானே?

ஆங்கிலேயர் ஆட்சியாளர்கள் பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் வழங்க விரும்பவில்லை. தேசியக் கருத்துகளுடன் வெளியாகும் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தவும் விரும்பினார்கள்.

1823-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14-ஆம் நாள் 'பத்திரிகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை' இயற்றி ஆங்கிலேயர் அமலுக்குக் கொண்டு வந்தனர்.

தம்முடைய பார்ஸீ வாரப் பத்திரிகையில் மோகனர் அச்சட்டத்தை கண்டித்துப் பல கட்டுரைகள் எழுதினார். அதன் பயனாக ஆட்சியாளர்களின் வெறுப்பை அவர் சம்பாதித்துக் கொண்டார். அவர் தனது பார்ஸீ பத்திரிகையை நிறுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

ஆனால், இராஜாராம் மோகன் ராய் அவர்களின் இடைவிடாத முயற்சிகளின் விளைவாக, 1835-ஆம் ஆண்டில் இந்தியப் பத்திரிகைகள் மீதிருந்த கட்டுப்பாடுகளை கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியாளர்கள் ஓரளவு தளர்த்தினார்கள்.

# 37

## வட சொல் நீக்கி, தனித் தமிழ் எழுதிட ;

# மறைமலையடிகளாரின் மொழி ஆய்வுக் கட்டுரை!

ஒரு மொழியில் பிற மொழிகள் எவ்வாறு கலக்கின்றன, என்று பார்த்தால், பிறமொழியாளர்களுடன் பழகுவதனாலும், பிறமொழிகளைப் பேசுவதாலும், ஒரு மொழியில் பிறமொழிச் சொற்கள் கலக்கின்றன என்பதை அறியலாம்.

இவ்வாறு கலத்தல் கடலில் காயங் கரைத்ததுபோல, எம்மொழிக்கும் தீங்கு செய்வதில்லை. நம்மை அடுத்துள்ள மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆய மொழிச் சொற்கள் தமிழில் எவ்வளவு கலந்துள்ளன? மிக மிகக் குறைவே. இல்லை என்றுகூடச் சொல்லலாம். அவ்வளவு குறைவு.

ஆனால், அரசியல் பொது மொழிகளாக அல்லது ஆணை மொழிகளாக ஓர் மொழி பிற மொழிகளிற் கலந்தால், அயன் மொழிச் சொற்கள் ஏராளமாய்த் தாய்மொழிகளில் கலந்து விடுகின்றன.

சான்றாக சில நூற்றாண்டுகட்கு முன்பு முகமதியர் ஆட்சியின்போது, அவர்கள் தம் தாய்மொழியாகத் - தெய்வ மொழியாகப் போற்றிய அரபுச் சொற்களும், உருது, இந்திச் சொற்களும் தமிழில் ஏராளமாய்க் கலந்தன என்பதற்கு சில சான்றுகள் இதோ :

'ஜமீன்தார், மிராஸ்தார், தாலூக்கா, ஜில்லா, முன்சீப், ஜட்ஜ், கச்சேரி, அயன், ரயத், ஜமா பந்தி, அலமார், மேசை, காடிகானா, நாஸ்தா, சலாம், ஜபர்தஸ்து, படே'

போன்ற ஏராளமானச் சொற்கள் தமிழில் கலந்துள்ளன. இவை சிலவே ஆகும்.

தொல்காப்பியத்திலும், திருக்குறளிலும் உள்ள சொற்கள் யாவும் தமிழ் சொற்களே என்பது மொழி ஆய்வாளர்களது கருத்து. நம் கருத்தும் அதுவே.

எனினும், வடமொழிப் பித்தர்கள் நூற்றுக்கு ஐந்து அல்லது ஆறு வடச் சொற்கள் அவற்றில் உளவென்பர். அவை வடமொழி தாம் என்பதற்குப் போலிக் காரணங்கள் காட்டுவர்.

ஆனால், வடமொழியில் ஒரு தமிழ்ச் சொல்கூட இல்லை என வழக்கிடுவர். அவர் கண்களுக்கு எல்லாம் வட மொழிச் சொற்களே. ஆம். பிறமொழிச் சொற்களே அவர்க்குக் கூடாதல்லவா?

சங்க நூல்களில் வடசொற்கள் மிகச் சிலவே. சங்க காலம் ஏறத்தாழ இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு.

சங்க காலத்தை ஒட்டித் தொடர்ந்த நூற்றாண்டுகளில் தமிழிற் கலக்கப்பட்ட வடமொழிச் சொற்களின் தொகை மிகுந்து கொண்டே வந்து, மணிப் பிரவாள நடை தோன்றிய 14, 15,16 ஆம் நூற்றாண்டுகளில், தமிழில் 100க்கு 60,70 வடசொற்கள் கலந்து, தமிழ்மொழியின் உருவத்தையே மறைத்து விட்டன.

அவ்வாறு தமிழில் கலந்து விட்ட வடமொழிச் சொற்கள், சொற்றொடர்கள் பலவற்றை இங்கு காண்க! அவை :

“மாதா, பிதா, சகோதரன், புருஷன், சம்சாரம், சகோதரி, சிரசு, தேகம், சிரம், பாதம், கிரகம், பூமி, தாவரம், சங்கமம், நதி, பர்வதம், வர்ஷம், வாரம், மாதம், தேதி, நட்சத்திரம், சூரியன், சந்திரன், ஸ்தலம், திதி, வார்த்தை, பதம், வாக்கியம், வசனம், சாஸ்திரம், புராணம், கவி, கவிதா சக்தி, வித்வான், வேதம், ஆகமம், இதிகாசம், கீதை, மனு, ஸ்மிருதி, சுருதி, யுக்தி,

அனுபவம், வர்த்தமானம், பரமேஸ்வரன், விஷ்ணு, பிரம்மா, இந்திரன், வருணன், வாயு, அக்னி, சனி, சுக்கிரன், சீதம், உஷ்ணம், ரத்தம், வாதம், விரதம், வாந்தி, வைத்தியம், க்ஷயம், ஜ்வரம், குரு, சிஷ்யன், தட்சணை, புஸ்தகம், வாசிப்பு, வாக்கு, புத்தி, சித்தம், அகங்காரம், மாயை, நியதி, வித்தை, ஆத்மா, பஞ்ச பசந்திரியம், கன்மேந்திரியம், ஞானேந்திரியம், அந்தக்கரணம், பாஷ்யம், சூத்திரம், அதிகரணம்,

மரம், பரபக்ஷம், சுபக்ஷம்,கிரமம், அக்கிரமம், நியாயம், நியாதிபதி, நீதி, ஜனனம், அவதாரம், மரணம், சிசு, யௌவனம், யுவன், யுவதி, வாலிபம், வயோதிகம், ஜனசபை, ராஷ்டிரபதி, ஜனாதிபதி, ராஜ்யம், ராஜ்ய சபை, லோக சபை, மந்திரி, அக்கிரசனாதிபதி, பிரசங்கி,

ஜனங்கள், விஷயம், தர்க்கம், வாதம், பிர்சனை, நிருபர், பத்ரிகை, புதினம், நவீனம், சஞ்சிகை, காரியாலயம், அங்கம், ஜன்னல், கபாடம், சங்கம், சமாஜம், கட்சி, பிரதிநிதி, பிரதி, சாதம், சாம்பார், சட்னி, ரசம், பலகாரம், அதிரசம், லட்டுகம், போஜனம், ஜலம், தாகம், ஜீரணம், மலம், மூத்திரம், ஆசை, இஷ்டம், இச்சை,

நஷ்டம், ஞானம், கிரியை, சுகம், துக்கம், ஆனந்தம், பிரமை, சாமி, ஈஸ்வரன், சர்வம், அகிலம், ஜகத்குரு, அண்டம், பிண்டம், சடாச்சரம், பஞ்சாட்சரம், அஷ்டாச்சரம், பிரணவம், விநாயகர், கணபதி, பிரணவ, சொரூபி, மூஷிகம், கஜம், சிங்கம்,

ரிஷபம், மேஷம், மேடம், பிரஜோற்பத்தி, விகாரி, சர்வதாரி, மாமிசம், மது, சூது, ஸ்திரி, மன்மதன், ரதி, சண்முகம், சுப்பிரமணியம், குகன், கார்திகேயன், ராமன், லட்சுமணன், பரதன், சத்ருக்கனன், கிருஷ்ணன், ராஜகோபாலன், நாராயணன், ஜகந்நாதன்,

விட்டல், லட்சுமி, சரசுவதி, பார்வதி, துர்க்கை, கலியாணம், விவாகம், முகூர்த்தம், யாகம், யக்ஞம், ஓமம், ஆகுதி, நிவேதனம், ஆலயம், மகாமண்டபம், அர்த்த மண்டபம், கர்பக் கிருகம்,

கோபுரம், கும்பம், கலசம், மூர்த்தி, அர்ச்சனை, புஷ்பம், ஆராதனை, விநியோகம், உத்சவம், துவஜாரோகணம், வாகனம், பிரபை, ஷத்காலம், சந்தி, உச்சிக் காலம், சாயரட்சை, அர்த்தசாமம், கற்பூரம், சாம்பிராணி, தூபம், சின்னம், ராமகோபால், ராம்சுந்தரம், வரதராஜன், காமராஜன், கந்தசாமி, கிருஷ்ணசாமி, சீனிவாசன், பத்மாவதி, கற்பகம், ஜாதி, சமூகம், ஜனம், மகாஜனம், ஜனனம், வியாபாரம், ஜீவனம், லட்சம், கோடி, கஜம்,

ஆத்திரம், அதிருட்டம், கோபம், தாபம், ஹாஸ்யம், துஷ்டன், துரோகி, விரோதி, சத்துரு, பலாத்காரம், புஜம், பலம், பவிக்கிரமம், வீர்யம், ஆக்கிரமிப்பு, ஆதிக்கம், ஆதீனம், சத்யாகிரகம், துராக்கிரகம், சத்யம், அகிம்சை, தானம், சம்பத், தனம், பகிஷ்காரம்,

துவேஷம், பாசம், பிரச்சாரம், உபந்நியாசம், கலாட்க்ஷேபம், பிரசங்கம், சமத்துவம், சகோதரத்துவம், சமரசம், சமதர்மம், ஆலோசனை, அவசியம், ஜம்பம், காரசாரம், வேகம், குரோதம்,

லோபம், மோகம், மதம், மாத்சர்யம், வாத்சல்யம், பீதி, பயம், லாபம், நஷ்டம், வர்த்தகம், எஜமான், தாசன், யோக்கியன், அதிகாரி, அலங்காரி, அநாமதேயம், சேஷ்டை, பந்து, மித்ரர், சுதேசமித்திரன், தினமணி, தினத்தந்தி,

ஆனந்தவிகடன், பிரசண்ட விகடன், குமாரக விகடன், குமுதம், ஜனசக்தி, விஜயா, மஞ்சரி, பௌர்ணமி, அமாவாசை, நவராத்திரி, விநாயக சதுர்த்தி, ஸ்ரீராமநவமி, ஸ்ரீஜெயந்தி, சங்கராந்தி, அன்னம், வஸ்திரம், மோட்சம், நரகம், தர்மம், அதர்மம், பிரமசரியம், கிருகஸ்தம், வனப்பிரஸ்தம், சந்நியாசம், ஸ்தோத்திரம், நமஸ்காரம்,

அகங்காரம், நித்யம், அநித்யம், ஜடம், சித்து, கிரீடம், சிங்காசனம், ஆபரணம், ஆக்ஞா சக்ரம், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி, மாணிக்க வாசகர், மதுர கவி, குலசேகர், ராமானுஜர், மத்துவர், சங்கரர், சங்கராசாரி, நீலகண்டர், அகத்தியர், வசிஷ்டர், அரிச்சந்திரன், சந்திரமதி, சிந்தாமணி, தருக்க சங்கிரகம், அலங்காரம்,

ஞானபோதம், திருவாசகம், பிரபந்தம், சயனம், நர்த்தனம், சங்கீதம், பைரவி, ஆனந்த பைரவி, மோகனம், மத்யமாவதி, தயா, தாட்சண்யம், அதிதி, பிச்சை, ஆசீர்வாதம், சாதம், ரசம், ஜலம், ஸ்நானம், புத்திரம், காமகோடி, யாகம், தருமம்

இவை போன்ற சொற்கள் இவை மட்டுமல்ல, பல துறைகளிலும் மேற்கண்டவாறு எண்ணிறந்த சொற்கள் தமிழில் கலக்குமாறு செய்யப்பட்டன. விரிவஞ்சி இத்துடன் விடுகிறோம்.

எனவே, வரும் காலப் புதிய இளைய தலைமுறைத் தமிழ்ப் பெருமக்கள் தங்களது செய்தித் தாட்களிலும், கிழமை, திங்கள் போன்ற பருவ ஏடுகளிலும், கூடுமானவரை வடசொற்களை நீக்கி, தனித் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி எழுதுவது தமிழன்னைக்கு அவர்கள் காட்டும் நன்றியாகும்.

இந்தக் கட்டுரைப் பட்டியிலில் வந்துள்ள சொற்களை நீக்கி எழுதும் பயிற்சியைச் செய்தியாளர்கள் பெற்றால், அறிவு சுழற்சி வேகத்தில் மேலும் எண்ணற்ற வடசொற்களை நீக்கி

எழுதும் பழக்க வழக்கம் தானே வந்து சேரும். இது பயிற்சி முறையே.

இதழியல் கலை வளர்க்கும் இளைய தலைமுறையினர், இனியாவது வட சொல்லற்ற, தனித் தமிழ் சொற்களுற்றக் கட்டுரைகளை எழுதிட வேண்டும் என்பதே எமது வேட்கை. அதற்கான சொல்லாய்வுதான் மேலே உள்ள மறைமலை யடிகளார் ஆய்வு உருளுச் சொற்கள். இவற்றை நீக்கி எழுதினாலே போதும் 'தனித்தமிழ்' வேட்கை தானே உந்தி வரும்.

- "மறைமலையடிகள் வரலாறு" எனும் ஆய்வு நூலிலிருந்து)

# 38

# வள்ளலார் இலக்கண நுட்பம் ஆசிரியர் குழுவுக்கும் தேவை!

## (தமிழ் எண் இலக்கணப் பயிற்சிக் கட்டுரை)

வள்ளலார் இயற்றியுள்ள பாடல்களிலும், உரை நடைப் பகுதியிலும் உள்ள சிற்சிலக் கருத்துக்கள் எளிதில் புரியத் தக்கவையாக இல்லை. இக்காரணமாகச் சிலர் முரண்பாடான கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். இதற்கு முடிவு காண்பது நன்று. பார்க்குமிடத்து அத்தகையக் கருத்துகளில் சில உண்மை புலப்படும். ஒவ்வொருவரும் தமிழ் எண் இலக்கண அறிவு பெற இதுபோன்ற கட்டுரையைப் படிப்பது சிறந்த அனுபவமாகத் திகழும்.

எடுத்துக்காட்டு :

'உபதேசம்' என்ற தலைப்பிலுள்ள வள்ளலாருடைய கருத்துக்கள் பலவற்றில் ஒன்று 'தொல்காப்பியத்தில் ''தொண்ணூறு'', ''தொள்ளாயிரம்'' என்ற இரு தொடர்கள். இந்த இரண்டுக்கும் அவரால் கூறப்பட்ட இலக்கணம் இது.

இந்த இரு தொடர்களுக்கும் தொல்காப்பியத்தில் வகுக்கப்பட்ட இலக்கணம் ''முழுவதும் குற்றமே'' என்று வள்ளலார் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியம் இயற்றப்பட்ட காலத்தில் நடைமுறையில் இருந்த வடமொழி இலக்கண நூல் 'ஐந்திரம்' என்பதாகும்

எனவும், 'பாணினியம்' என்ற இலக்கண நூல் தொல்காப்பியத் திற்குப் பிறகு எழுதப்பட்டதாக இருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

தொல்காப்பியம் மிகப் பழந்தமிழ் இலக்கண நூல். தமிழ்மொழிக்கு இலக்கணத்தை கூறுவதோடு மட்டும் இராமல், தமிழ் மக்கள் வாழ்க்கைக்குத் தொடர்புள்ள எல்லாவற்றிற்கும் அது இலக்கணம் கூறுகின்றது. இப்படிப்பட்ட ஒரு நூல் உலக எந்த மொழியிலும் இல்லை என்பது மொழியாய்வு நூலார் முடிவு.

இத்தகைய ஒரு சிறந்த நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ள இரண்டு சொற்றொடர்களின் இலக்கண முறைக்கு வள்ளல் பெருமானைப் போன்ற தத்துவஞானி குறை கூறும்போது, மக்களுக்கு வியப்புண்டாகின்றது.

தொல்காப்பியத்திலுள்ள பல சூத்திரங்களைப் பல இடங்களில் வள்ளல் பெருமான் தாம் எழுதிய நூற்களில் மேற்கோளாக ஆட்சி செய்துள்ளார்.

எடுத்துக்காட்டாக, "ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்திச் சிறப்புப் பாயிரத்தில்" தொல்காப்பியச் செய்யுளிலிருந்து,

"பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
யொத்த நாலெழுத் தோற்ற லங்கடைவே"

- தொல்காப்பியம் செய்யுளியல் - 38.

என்ற ஒரு சூத்திரத்தை வள்ளலார் மேற்கோளாக ஆண்டுள்ளார்.

தொண்டை மண்டலச் சதகம் பற்றித் தாம் எழுதியுள்ள உரை நடைப் பகுதியில்,

"பனையு மறையு மாவிரைக் கிளவியு
நினையும் காலை யம்மொடு சிவணு
மையினிறுதி யரைவந்து கெடுமே
மெய்யவ ணொழிய வெண்மனார் புலவர்"

- தொல்காப்பியம் எழுத்திகாரம் :
உயிர் மயங்கியல் - 81.

என்று தொல்காப்பியச் சூத்திரத்தை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

இத்தகைய ஒரு மதிப்பைத் தொல்காப்பியம் இலக்கண நூல்மீது கொண்டிருந்த வள்ளல் பெருமான், 'தொண்ணூறு,' 'தொள்ளாயிரம்' என்ற சொற்றொடர்களுக்கு தொல் காப்பியத்தில் உள்ள இலக்கணத்துள் எப்படித் தவறு கண்டார் என்பதைப் பார்ப்போம்.

ஒன்பது என்னும் சொல்லும், பஃது (பத்து) என்னும் சொல்லும் சேர்ந்து வரும் முறையில் (9x10) தொண்ணூறு என்று மாறுவதைத் தொல்காப்பியச் சூத்திரம் கூறுகிறது.

"ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை யொற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி ஆய்த பகரங் கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகர மாகும்"

- தொல் : எழுத். 45

ஒன்பது, பஃது என்னும் சொற்கள் ஒன்றாகச் சேரும்போது, 'த்' என்னும் மெய்யெழுத்துத் தோன்ற, அதன்மீது 'ஒ' என்னும் உயிரெழுத்து அமைகிறது.

'ஒ' என்னும் எழுத்து இருந்த இடத்தில், அவ்வகையில் 'தொ' என்னும் உயிர்மெய் எழுத்து ஏற்படுகின்றது.

பின்னர், 'ன்' என்னும் மெய் எழுத்து ண்' என ஆவதுடன், அது இரட்டிக்கிறது.

எனவே, 'ண்'ண், என்னும் இரண்டு எழுத்துக்கள் தோன்றுகின்றன. இப்போது, 'தொண்ண்' என்ற மூன்று எழுத்துக்கள் கிடைக்கின்றன.

இதன் பிறகு, 'ஊ' என்னும் உயிர் எழுத்து தோன்று கிறது. இதனால், 'தொண்ணூ' என்பது ஏற்படுகிறது. அதே சமயத்தில் வேறு மாறுபாடுகளும் ஏற்படுகின்றன.

நிலைமொழியிலுள்ள ப,ஃ எழுத்துக்கள் மறைய, எஞ்சிய எழுத்து 'து' என்பதாகும். இதிலுள்ள 'உ' என்னும்

உயிர் எழுத்து மட்டும் நின்று, 'த்' என்னும் மெய் எழுத்து 'ற்' என்னும் மெய்யெழுத்தாய் மாறிய பின்னர், அதற்கேற்ப 'ற்' என்பதன் மீது 'உ' எழுத்து அமைந்து 'று' என ஆகிறது. இவ் வகையில் தொண்ணூறு என்னும் சொற்றொடர் ஏற்படுகிறது.

இனி, 'தொள்ளாயிரம்' என்பதற்குத் தொல்காப்பியம் சூத்திரம் என்ன கூறுகின்றது என்பதைப் பார்ப்போம்.

'ஒன்பான் முதனிலை முந்து கிளர்ந்தற்றே
முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகாரம் மெய்கெட
ஊ ஆ வாகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகர மொற்றும்''

- தொல் : சொல் : 463

'ஒன்பது, 'நூறு' என்னும் இந்த இரு சொற்களும் சேர்ந்து எவ்வாறு தொள்ளாயிரம் என மாறுகின்றன என்ற விவரத்தை இந்தச் சூத்திரம் கூறுகிறது.

முன் சூத்திரத்தில் 445-வது எழுத்ததிகார சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளபடி 'த்' என்னும் மெய் எழுத்து 'ஒ' என்னும் உயிர் எழுத்துடன் சேர்ந்து 'தொ' என அமைகிறது.

பின்னர் அடுத்துள்ள, 'ன்' என்னும் எழுத்து 'ள்' என மாறுவதுடன் இரட்டிக்கிறது. இப்போது 'தொள்ள்' என்ற அமைப்பு ஏற்படுகிறது. பின்னர் வருமொழி 'நூறு' என்பதிலுள்ள முதலெழுத்து 'நூ' என்பது.

இதில் 'ந்', 'ஊ' என்னும் இரண்டெழுத்துக்கள் அடங்கி யுள்ளன. இவற்றில் 'ந்' என்னும் மெய் எழுத்து மறைந்து விடு கிறது. எஞ்சியுள்ளது 'ஊ' என்னும் உயிர் எழுத்தாகும். இது 'ஆ' என மாறுகிறது.

பின்னர் 'இ', 'ர' என்னும் இரண்டு எழுத்துகள் தோன்றுகின்றன. ஈற்றில் உள்ள எழுத்தும் கெடுகிறது.

எனவே, நிலைமொழியும் வருமொழியும் 'தொள்ள' x ஆ இ, ர, ம் என மாறுகின்றன. வருமொழியில் அடுத்தடுத்து வரும் ஆ, இ என்னும் எழுத்துகள் இடையே ய்' என்னும் உடம்படு

மெய் வருகிறது. இந்த வகையில் 'தொள்ளாயிரம்' என்னும் சொற்றொடர் அமைகின்றது.

ஆனால், நச்சினார்கினியர் உரையுடன் கூடிய தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு அடிக்குறிப்பு எழுதியுள்ள புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள், தொல் காப்பியத்திலுள்ள இந்த இரண்டு நூற்பாக்களின் முடிவு, 'எவ்வகையிலும் பொருந்தாது' என்கிறார்.

திரு. பாவாணரது கொள்கை வள்ளல் பெருமான் எடுத்துக் காட்டிய கருத்திற்கு ஆதாரமாக அமைந்துள்ளது.

ஒன்பது என இப்போது நாம் கூறி வரும் எண், பண்டைக் காலத்தில் 'தொண்டு' என வழங்கி வந்ததாகவும், ஆனால், அது தொல்காப்பியர் காலத்தே வழக்காறற்று விட்டதாகவும், அவர் காலத்திற்கு முன் '9' என்பது தொண்டு எனவும், 90 என்பது தொண்பது எனவும், 900 என்பது தொண்ணூறு எனவும், 9000 என்பது தொள்ளாயிரம் எனவும் வழங்கி வந்ததாகவும், தொண்டு என்ற சொல் மறைந்து விடவே, அதற்கு தொண்பது என்பதையும், 90 என்னும் எண்ணுக்குத் தொண்ணூறு என்பதையும், 900 என்பதற்குத் தொள்ளாயிரம் என்பதையும், மக்கள் பயன்படுத்தத் தொடங்கினர் எனவும் பாவாணர் கூறுகின்றார்.

ஆனால், பத்திலிருந்து ஒன்று குறைந்த காரணமாக, ஒன்பது என்னும் சொல் அமைந்ததாகச் சொல்லப்படும் கருத்தை பாவாணர் ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு அவர் கூறும் காரணமும் உள்ளது.

பத்தில் ஒன்று குறைந்தது ஒன்பது என்றால், அதே முறை தொண்ணூறு தொள்ளாயிரம் என்னும் சொற்றொடர்களுக்கும் பொருந்த வேண்டும். ஆனால், இந்த முறை இந்த சொற்றொடர்களுக்குப் பொருந்துவதில்லை. ஆதலால் அவர்

தொண்டு + பத்து தொண்பது எனவும்,
தொண்டு + நூறு தொண்ணூறு எனவும்
தொண்டு + ஆயிரம் தொள்ளாயிரம்

எனவும் கொள்வது முறை எனக் கூறுகிறார்.

இது வள்ளலார் ஆய்வு

''தொண்ணூறு'', ''தொள்ளாயிரம்'' என்னும் சொற்றொடர்களில், 'தொல்' என்பது அமைந்துள்ளதாக வள்ளல் பெருமான் எண்ணுகிறார்.

''தொல் - நூறு = தொண்ணூறு, தொல் + ஆயிரம் = தொள்ளாயிரம்'' எனவும், 'தொல்' என்பது ஒன்று குறையத் தொக்கியது எனவும், 'தொண்மை, தொல் எனப் பிரிந்தது.

வழக்கத்தில் தொள்ளாயிரம், தொண்ணூறு என மருவியது எனவும், 'பத்திடத்திற்கு குறைந்த முன் ஆயிரம் என்றும், ஒன்று குறைந்த பத்தென்றும் ஒருவாறு கொள்க' என்று வள்ளலார் கூறுகின்றார்.

இப்போது வள்ளலார் எண்ணத்தைச் சிந்திப்போம். ஒன்று குறைந்த பத்து ஒன்பது ஆகிறது. இங்கும் தொல் என்பதை வ்ரவழைத்துக் கொள்ளலாம். தொல் + பத்து = தொன்பது என மாறிய பின், ஒன்பது என மாறலாம். தெலுங்கு மொழியில் ஒன்பது என்பதைத் 'தொம்மிதி' என இன்றும் கூறுகிறார்கள்.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் கூறுவது போல, தொண்டு + நூறு என்னும் சொற்கள் இணையும்போது, தொண்டு என்னும் சொல்லிலுள்ள டுகரம் கெடுகிறது. அப்போது தொண்+நூறு, தொண்ணூறு என மாறலாம். ஆனால், இதே விதி, 'தொள்ளாயிரம்' எனும் தொடருக்குப் பொருந்துவதில்லை.

தொண்டு + ஆயிரம் என்னும் சொற்கள் இணையுமிடத்து, டு என்னும் எழுத்து கெடுமிடத்து, தொண்+ஆயிரம் = தொண்ணாயிரம் என ஆக வேண்டும். இப்போதும் எட்டு+ஆயிரம் என்னும் சொற்கள் புணர்ந்தவிடத்து எண்ணாயிரம் எனக் கொள்கிறோம். இது போன்றே தொண்ணாயிரம் எனவும் கூறி வந்திருக்கலாம். ஆனால், இவ்வாறு கூறுதல் வழக்கமில்லை. இந்த நிலையில், வள்ளலார் கூறுவதில் உண்மை என்ன என்று சிந்திப்போம்.

வள்ளலார் கூறும் முறை கழித்தல் திட்டத்தில் அமைந்துள்ளது. தொல் என்பது அந்த அந்த எண்ணுக்கேற்ப, ஓரெண் குறைந்துள்ளது என்பதைக் குறிக்கும் சொல்.

பத்து என்பதன் மூன், அதில் அமைந்துள்ள ஒரு பாகம் குறைந்துள்ள எண்ணைக் காட்ட, அதன் முன் தொல் என்றும் அமைக்கப்பட்டது எனக் காட்டுகிறார்.

தொல் + பத்து = தொன்பது. இதுவே, பின் ஒன்பது என மாறிற்று எனலாம். தொல் + நூறு என்பதில் நூறு என்னும் எண்ணிலிருந்து அதன் பத்தில் ஒரு பாகம் குறைந்தது தொண்ணூறு ஆகும். இது போன்றே தொல்+ஆயிரம் என்பதில் ஆயிரம் என்னும் எண்ணிலிருந்து அதன் பத்தில் ஒரு பாகம் குறைந்தது தொள்ளாயிரம் எனவும் வள்ளல் பெருமான் எண்ணினார்.

இவர் கூறுவதில், தற்போது புதிததாக வந்துள்ள தசமப் புள்ளி முறையும் (Decimal System) ஒரு வகையில் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

தொல் + நூறு என்னும் சொற்கள் நன்னூல் 1-237-ல் கூறுவதற்கேற்ற இலக்கண முறைப்படி, தொண்ணூறு என ஆக வேண்டும். இதே போலவே தொல் + ஆயிரம் நன்னூல் 1-205 இலக்கண முறைப்படி தொல்லாயிரம் என ஆக வேண்டும். ஆனால், 'ல' கரத்திற்குப் பதிலாக 'ள' கரம் மேற்கொள்ளப் படுவது எளிது. வடிவத்தில் வேறுபாடு இருந்தாலும், இந்த இரண்டின் ஒலி வேறுபாட்டைக் கற்றோர் அன்றி-மற்றோர் சுலபமாகப் புரிந்துக் கொள்ள இயலாது.

எனவே, தொல் என்பது தொள் என மாறி, தொள் + நூறு தொண்ணூறு எனவும், தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம் எனவும் மாறி இருக்கலாம். இந்தக் கருத்து சுலபமாக இருக்கிறது. ஆதலால், பள்ளிச் சிறுவர்கள் இந்த எளிய முறையைப் புரிந்துக் கொள்ள சிரமம் இராது என்பது வள்ளல் பெருமான் முடிவு ஆகும்.

தொல் என்பது, ஒன்று அல்லது பத்தில் ஒரு பாகம் குறைந்தது என்ற கொள்கைக்கு, வேறு சான்று ஏதாவது இருக்கிறதா என்று காண்போம்.

"ஒன்றூனமான பத்து ஒன்பது : அஃது அக்காலத்துச் சொல் என்கிறார் மயிலை நாதர் என்ற நன்னூல் உரையாளர்.

திருநாவுக்கரசர் எனப்படும் அப்பர் பெருமான் பாடியத் 'தனிக்குறுந்தொகை', என்பதின் ஒன்பதாவது பாடலில் :

'ஒன்ப தொன்பது யானை யொளிகளி
றொன்ப தொன்பது பல்கள்ஞ் சூழவே
ஒன்ப தாமவை தீத்தொழி லின்னுரை
ஒன்ப தொத்துநின் றென்னு ளொடுங்குமோ'

என்ற பாடலில், நான்காவது அடியிலுள்ள 'ஒன்பதொத்து நின்றென்னுளொடுங்குமே' என்னும் வாக்கியம், "என்னுடைய உரைகள் எவ்வளவு விரிந்து அமைந்தாலும், முடிவில் என் ஆணவ நிலையில் என் உள்ளத்தே ஓடுங்கும்" என்னும் பொருளைக் கொண்டது என்று திருத்தொண்டர் புராண உரையாசிரியர் சி.கே. சுப்பிரமணிய முதலியார் பின்வருமாறு கூறுகிறார்.

என் பேச்சுக்கள் முதலிய எல்லாம் எவ்வளவு விரிந்து சூழினும், முடிவில் 'நான்' என்ற அகங்கார நிலையினவாய், என்னையே சுற்றி என்னகத்தே அடங்கும். அது ஒன்பது என்னும் எண்ணினைப் போலவே

இது எப்படி என்றால், ஒன்பதை எதனால், எத்தனை முறை பெருக்கினாலும், பெருக்கி வந்த எண்ணில் உள்ள எண்களைக் கூட்டினால் ஒன்பதே வரும் என்பதைப் போல.

9 x 2 = 18 = 8 + 1 = 9    9 x 3 = 27 = 2 + 7 = 9

9 x 4 = 36 = 6 + 3 = 9    9 x 5 = 45 = 4 +5 = 9

9 x 6 = 54 = 5 + 4 = 9    9 x 7 = 63 = 6 + 3 = 9

9 x 8 = 72 = 7 + 2 = 9    9 x 9 = 81 = 8 + 1 = 9

9 x 144 = 1926 = 1 + 2 + 9 + 6 = 18 = 1 + 8 = 9

ஒன்பது என்ற எண் ஒன்று, இரண்டு போன்ற மற்ற எண்களைப் போலத் தனக்கென்று ஒரு தனிப் பெயர் இல்லாமல், பின்வரும் பத்து என்பதில் ஒன்று குறைந்தால் எதுவோ, அது என்று தெரிந்து கொள்ளுமாறு பெயர் கொண்டிருத்தல், பின்வரும் பாசமாகிய உலகமும், முன்நிற்கும்

பதியும் அல்லாதது என்றறியப்பட்டும் தனித்து நிற்காமல், பதியினையோ அன்றிப் பாசத்தையோ சார்ந்து நிற்பதும் ஆன நிலையின் உள்ள உயிரை ஒத்திருக்கின்றது என்பதும், கடிகார யந்திரங்களிலும், ஒன்பதைக் குறிக்க IX எண், (X-ல்குறைக்க என்றது பொருள்பட) குறியீடு கொள்வதும், பிறவும் இங்கு சிந்திக்கத் தக்கதாகச் சிறக்கின்றதல்லவா?

இங்கே சிவக்கவிமணி அவர்கள் சுட்டிக் காட்டியுள்ள IX என்னும் எண்முறை ரோமன் எண் முறை வகையைச் சார்ந்தது.

எனவே, வள்ளல் பெருமான் இங்கே தொல்காப்பிய சொற்றொடர்கள் இரண்டுக்கு எடுத்துக் கூறிய கருத்துகளுக்கு மயிலை நாதர், சிவக்கவிமணி என்ற இரண்டு பேரறிஞர்கள் ஆய்ந்த உண்மை அரணாக உள்ளது. இந்த இலக்கண ஆய்வு நுட்பம் எழுத்தாளர்களுக்கும் வேண்டும். அப்போதுதான் தமிழ்மொழி அருமையை உணர முடியும்.

இனி, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து என்ற எண்களில் தமிழ்ப் பெயர்கள் ஏன் 'உ' கரத்தில் முடிந்திருக்கிறது என்று வள்ளல் பெருமானே கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்குக் காரணம் உண்டு என பெருமானே குறிப்பாகத் தெரிவித்துள்ளாரேயன்றி, இதைப்பற்றி அவர் இவ்விடத்தில் கூறவில்லை.

ஆனால், 'ஓம்' என்னும் பிரணவத்தில் அகரமாகிய நாதமும், மகரமாகிய பரவிந்தும் அடங்கியுள்ளன என்று வள்ளலார் கூறியுள்ளார்.

'ஓ' என்னும் எழுத்திலுள்ள அகரத்தைப் பற்றி வள்ளலார் வேறோரிடத்தில் விளக்கியுள்ளார். உகரம் காத்தல் தொழிலைக் காட்டும் எனவும் சொல்லப்பட்டிருக்கிறது.

உகரம் இனிய வகையில் உயிரை இறைவனிடம் அழைத்துச் சென்றவிடத்து தன் நிலையிலிருந்து ஒருபடி தாழ்ந்தாலும், அது தாழ்த்தப்படும் என்பதை உலகுக்கு உணர்த்த ஒன்பது என்னும் சொல் அமைந்துள்ளது எனவும் கொள்ளலாம்.

எனவே, பத்திரிகை ஆசிரியர் குழுவில் திறம் வாய்ந்த ஓர் இலக்கண வித்தகரை நியமித்துக் கொள்வது பத்திரிகைக்கும் நற்பெயரை நடமாட விடும்.

ஏனென்றால், இலக்கியம், இலக்கணம், கலை வித்தகம், சிறந்த கவிதை ஆற்றல், திறனாய்வாண்மை திறம், அறிவியல் அற்புதங்கள் அறிந்த தெளிவு, புறநானூற்று வீர விளையாடல் களை விளக்கி எழுதும் விந்தை ஆய்வு, அனைத்தும் ஒரு பத்திரிகை நடத்தும் குழுவில் இருந்தால் அது சகலகலா வல்லமை பலம் பெற்ற இதழ் என்றும் 'இந்து, தினமணி'போல புகழ்க் கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டே இருக்குமல்லவா?

# வாழ்க்கைச் சுருக்கம்



55 ஆண்டு காலப் பத்திரிகையாளர்

இயற்பெயர்: அ.நா. வாசுதேவன்
புனைப்பெயர் : என். வி. கலைமணி
சொந்த ஊர் : வடார்க்காடு மாவட்டம்,
வந்தவாசி வட்டம், அமுடூர் சிற்றூர்.
பிறப்பு: 30 திசம்பர் 1932ஆம் ஆண்டு
தந்தை பெயர்: அ. கு. நாராயணசாமி, காவல் துறை (ஓய்வு)
வாழ்க்கை துணைநலம்: புலவர். T. உமாதேவி பி.லிட்.,
ஆதம்பாக்கம் அரசு நடுநிலைப்பள்ளி, பெண்பாற் புலவர்
மக்கட்பேறுகள்: வா. மலர்விழி, வா. அறிஞர் அண்ணா,
வா. பொற்கொடி, வா. திருக்குறளார்
பெயரர்கள்: க. கணேஷ் கார்த்திக், க. அனிதா
வே. மகேஷ், வே. ஜனனி
பணி: 1950 ஆம் ஆண்டு முதல்
2005 ஆம் ஆண்டு இன்று வரை பத்திரிகையாளர்
கல்வி: புலவர், எம். ஏ (வரலாறு)

சாதனைகள்: அரசியல், வரலாறு, அறிவியல், இலக்கியம், தமிழாய்வு, நாடகம் சம்பந்தப்பட்ட 127 நூல்கள் எழுதியவை. "சாம்ராட் அசோகன்" வரலாற்று நாடகம் 30 நகர்களில் நடிகர் ஹெரான் இராமசாமி நடித்திட கதை-வசனம் எழுதியது. "இலட்சியராணி" என்ற நாடகம் கலைவாணர் NSK தலைமையில் சென்னை, ஒற்றைவாடை கலையரங்கில் 6.4.1952 அன்றும், விழுப்புரம் நகரில் அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் தலைமையில் திருக்குறளார். வீ. முனிசாமி எம். பி., அவர்கள் 1952, சனவரி மாதம் 29, 30 ஆகிய இரு நாட்கள் நடத்தியது. 1952 ஆம் ஆண்டு மத்திய தொழிலாளர் துறை, அஞ்சல் துறை அமைச்சர் ஜெகஜீவன்ராம் சென்னை வந்தபோது ஐ.என்.ஏ திடல் என்று அன்று அழைக்கப்பட்ட இன்றைய காங்கிரஸ் தலைமை அலுவலகத் திடலுக்குள் தன்னந்தனியாக நின்று கருப்புக்கொடியை அவரிடம் கொடுத்து கைதாகி 2 வாரம் சிறை சென்றது. மற்றும் பல சாதனைகள் உண்டு.
விரிவஞ்சி நிறுத்துகிறோம்.

அன்பன்

புலவர். என். வி. கலைமணி. எம்.ஏ.,